# பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்

## நூல் தொகுப்பு :

### தொகுதி 5




டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர்:

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு

## தொகுதி 5



**டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்**

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம்: டிசம்பர் 6, 1956

''... இந்தியாவிலுள்ள தேசியவாதியும், தேசபக்தனும் தங்கள் சொந்த சகோதர மக்கள் சாதாரண மனிதர்களைவிடக் கீழாக நடத்தப்படுவதைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய மனிதத் தன்மை இக்கொடுமைக்கு எதிராகக் கொதித்தெழவில்லை. ஆணும் பெண்ணும் யாவராயிருப்பினும், அவர்க்கு மனித உரிமைகளை மறுக்க முடியாது என்பதை அவர்கள் அறிந்துள்ள போதிலும், செயல் முறையில் அதனை உணர்ந்து நடக்க வேண்டும் என்கிற குடியுரிமையுணர்வு அவர்களிடம் இல்லை. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அனைவரும் பொது ஊழியத் துறையிலிருந்து விலக்கப்படுவதை அவர்கள் காணவே செய்கின்றனர். ஆனால், அது அவர்களுடைய நீதியுணர்வையும் நேர்மையுணர்வையும் தூண்டாமலிருப்பதுதான் வியப்புக்குரியது. மனிதனையும் சமூகத்தையும் பீடித்துள்ள நூற்றுக்கணக்கான கொடுமைகள் அவர்களுக்கு நன்கு தெரிந்தனவே. ஆனால், அவை எதுவும் அவர்களுக்கு அருவருப்பைத் தருவதாக இல்லை. தேசபக்தர்களுடைய ஒரே கூச்சல் அவர்களுக்கும் அவருடைய வகுப்பினர்க்கும் மேலும் மேலும் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதே. அத்தகைய ஒரு தேசபக்தக் கூட்டத்தை நான் சார்ந்தில்லாமலிருப்பது எனக்கு மகிழ்ச்சியே தருகிறது. நான் ஜனநாயகத்தைப் பின்பற்றுபவன்; தனிநாயகம் எந்த உருவில் வந்தாலும் அதை அழித்தொழிக்க வேண்டும் என்ற கூட்டத்தைச் சேர்ந்தவன். நம்முடைய நோக்கம், அரசியல், பொருளாதாரம், சமுதாயம் என்னும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நடைமுறையில் மனிதன் ஒருவனே. அவனுக்குரிய மதிப்பும் ஒரே மாதிரியானதே என்பதாகும். பிரதிநிதித்துவ அரசு இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு கருவியாக இருப்பதாலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் அதற்கு இவ்வளவு சிறப்புத் தருகிறார்கள். அந்தச் 'சிறப்புக் காரணமாகவே உங்கள் அறிவிப்பும் அந்நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்...''

— டாக்டர் அம்பேத்கர் —
முதன்மைக் கூட்டத்தொடரில்

This Volume V in Tamil forms the third part of the English Edition Volume 2: **Dr. Babasaheb Ambedkar — Writings and Speeches** Published by the Education Department, Government of Maharashtra, 1982

முதற்பதிப்பு: மார்ச், 1994
சைத்ரா, 1916

© உரிமைப் பதிவு

**விலை ரூ. 40/-**
**நூலகப் பதிப்பு: ரூ. 100/-**

**வெளியீட்டாளர்:**

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம், இந்திய அரசு,
புது டில்லி.

**விற்பனை நிலையம்:**

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
25, அசோகா சாலை,
புது டில்லி-110 001.

---

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்,
சென்னை-600 014.
தொலைபேசி: 832441

# ஆலோசனைக் குழு

**மாண்புமிகு திரு. சீதாராம் கேசரி,**
நலத்துறை அமைச்சர்
இந்திய அரசு

**மாண்புமிகு திரு. கே. வி. தங்கபாலு,**
இணை அமைச்சர், நலத்துறை
இந்திய அரசு

**திரு. மாத்தா பிரஸாத்,** இ.ஆ.ப.,
செயலாளர், நல அமைச்சகம்

**திரு. கங்காதாஸ்,** இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
நல அமைச்சகம்,
மற்றும் உறுப்பினர் — செயலாளர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

**தலைமைப் பதிப்பாளர்:**

**பத்மஸ்ரீ டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி,** பிஎச்.டி., டி.லிட்.,

**நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்):**

**டாக்டர் எஸ். பெருமாள்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

**ஆங்கிலத் தொகுப்பாளர்:**

**திரு. வஸந்த் மூன்**

பம்பாய்

**தமிழ் நூல் பதிப்பாளர்:**

**டாக்டர் எஸ். பெருமாள்**

**மொழிபெயர்ப்பாளர்கள்:**

**திரு. இரா. கிருஸ்துதாஸ் காந்தி**
**திரு. பரஞ்ஜோதி**
**திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)**
**திரு. ஞா. மாணிக்கவாசகன்**
**திரு. எ. எஸ். மூர்த்தி**
**திரு. ஐ. இசக்கி**
**திரு. டாக்டர் கோ. தங்கவேலு**

**ஒப்புநோக்கியோர்:**

**திரு. சு. நவநீதகிருட்டிணன்**

**பிழைதிருத்த உதவி:**

**திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)**
**திரு. அ. ரஞ்சித்**

# அணிந்துரை

பாரத் ரத்னா டாக்டர் பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் அவர்கள் நம் நாட்டு அரசியமைப்புச் சட்டத் தந்தை மட்டுமல்லர்; மாபெரும் சமூக அறிவியல் அறிஞராகவும் ஆழ்ந்த சிந்தனையாளராகவும் விளங்கியவர். இந்தியத் தத்துவத்தில் மலிந்திருந்த பிற்போக்குப் பழமைக் கருத்துக்களை எதிர்த்தவர். சுரண்டலுக்காளான உழைப்பாளர்களுக்கும் தலீத் மக்களுக்கும் இரட்சகராக அவர் தோன்றினார். அவரது நூல்கள் நம் நாட்டு மொழிகளில் இல்லாததால் அவ்வுருடைய சிந்தனைகள் பொது மக்களுக்கு எட்டாமற்போயின.

நலவாழ்வுத் துறையைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுதிகளை இந்தியிலும் தமிழ் உட்பட இந்திய மொழிகள் பிறவற்றிலும் மொழி பெயர்த்து வெளியிட முடிவெடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பாபாசாகேப் அவர்களுடைய சென்ற ஆண்டின் பரிநிர்வாணமடைந்த நாளில் அவரது நூல் தொகுப்பின் இரண்டாவது தொகுதி இந்தியிலும் தமிழிலும் வெளிவந்து நாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது, இந்தியிலும் தமிழிலும் அவருடைய நூல் தொகுப்பின் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது தொகுதிகளையும் பஞ்சாபி மொழியில் முதல் தொகுதியையும் அளிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்

தலைமைப் பதிப்பாளர் டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி அவர்கள், பதிப்பாளர்க் குழு உறுப்பினர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்கியோர் முதலியவர்களின் ஒத்துழைப்புடன் இந்த மொழிபெயர்ப்புத் திட்டத்தை விரைவில் நிறைவு செய்வார்கள் எனவும், பாபா சாகேப் அவர்களின் செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் சமுதாயத்திற்குப் புதியதொரு வழியைக் காட்டுவார்கள் எனவும் நம்புகின்றேன்.

**சீதாராம் கேசரி**
நலவாழ்வுத் துறை அமைச்சர்
இந்திய அரசு

புது டில்லி
மார்ச் 5, 1994

# வாழ்த்துரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் இந்து சமுதாயத்தின் அடக்குமுறையையும் ஒடுக்கு முறையையும் தீவிரமாக எதிர்த்து நின்றதோடு பல்வேறு துறைகளில் ஆற்றலும் புலமையும் வாய்ந்தவராகவும் விளங்கினார்.

அரசியல் மாமேதையாகவும் தேசியத் தலைவராகவும் திகழ்ந்த அவர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்னும் அரிய செல்வத்தினை நமக்கு வழங்கிச் சென் றுள்ளார். கல்வியறிவில்லாமல் முன்னேற்றம் பெறுவது இயலாதென உறுதியான கருத்தினைக் கொண்டிருந்த அவர், பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவித் தலித் மக்கள் கல்விப்பேற்றினைப் பெறுவதற்கு வழிவகுத் தார்.

தமது வாழ்நாள் முழுவதும் சுரண்டப்பட்ட மக்களின் விடுதலைக்காக அயர்வின்றி போராடியவர். இதன் காரணமாகச் சமூக, பொருளாதார அநீதிகளிலிருந்து மனிதகுலத்தை மீட்பதற்குப் பாடுபட்டவர் என்று அனைத் துலகிலும் பாராட்டுப் பெற்றவர்.

அவர்தம் கருத்துக்களைப் பரப்பும் பொருட்டு டாக்டர் அம்பேத்கர் பௌண்டேஷன், அவரது சொற்பொழிவு களையும் நூல்களையும், இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் வெளிக்கொணர்வதை அறிந்து பெரு மகிழ்வடைகின்றேன்.

இந்தச் சீரிய பணி வெற்றி பெற எனது நல்வாழ்த் துக்கள்.

புதுடில்லி
4.4.1994.

**கே. வி. தங்கபாலு**
இணை அமைச்சர்
நலத்துறை
இந்திய அரசு

# பதிப்புரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வெளியீட்டுப் பணி பலவகைச் சிரமங்களுக்கிடையிலும் விரைவாக நிறைவேறி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் பேச்சும் எழுத்தும் அடங்கிய தொகுதிகளை ஆங்கிலத்தில் திரு. வஸந்த் மூன் அவர்கள் தொகுத்தளித்துள்ள பொருள் வரிசை நிறையிலேயே இந்தியிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுகின்றோம்; எனினும் வாசகர்களின் வசதியைக் கருதி ஆங்கிலத் தொகுதிகள் சிறிய அளவில் பல பகுதிகளாக வெளி வருகின்றன. மொழிபெயர்ப்பும் அதனிலும் ஒப்பு நோக்கும், பதிப்புப் பணியும் கடினமானவை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்துத் தொகுதிகளையும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்னும் திட்டம் நிறைவேற்றுவதற்குக் கடினமாவது என்ற போதிலும் காலவரையறையைக் கருத்தில் கொண்டு விரைந்து செயற்படுகின்றோம். ஆற்றல்மிக்க நமது மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், பதிப்பாளர்கள் ஆகியோரின் துணைக்கொண்டு திட்டமிட்டவாறு இந்தப் பணியை நிறைவு செய்ய உறுதிபூண்டுள்ளோம்.

இந்த மொழிபெயர்ப்பு நூல்களை இலக்கியப் படைப்புகளாகக் கருதாமல், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் தத்துவங்களையும் சிந்தனைகளையும் நன்கு அறிந்து கொள்ள உதவும் எளிய மொழிபெயர்ப்பு நூல்களாகக் கருத வேண்டுகிறோம்.

படிப்போரின் வசதியைக் கருதி ஆங்கிலத்திலுள்ள இரண்டாம் தொகுதி; மொழிபெயர்ப்பில் — பம்பாய்ச் சட்டமன்றத்தில் டாக்டர் அம்பேத்கர், சைமன் குழுவினரோடு டாக்டர் அம்பேத்கர், வட்ட மேசை மாநாடுகளில் டாக்டர் அம்பேத்கர் என மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்ட்டுள்ளன.

முந்தைய தொகுதிகள் மக்களிடையே பெற்ற வரவேற்பு இந்தத் தொகுதிகளுக்கும் கிடைக்குமென நம்புகின்றோம்.

புது டில்லி
மார்ச்

**டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி**
தலைமைப் பதிப்பாளர்

# பொருளடக்கம்


பக்கம்

அணிந்துரை

வாழ்த்துரை

பதிப்புரை

**1. மாநாட்டின் முதன்மைக் கூட்டத்தில்**
ஐந்தாம் அமர்வு ... 20.11.1930 ... 2

**2. வட்டமேசை மாநாடு**
துணைக்குழு I-இல் இடைக்கால அறிக்கை மீது கருத்துக்கள் ... ... 13

**3. துணைக்குழு II-இல் (மாநில அரசமைப்பு)**
முதல் அமர்வு ... 4.12.1930 ... 17
மூன்றாவது அமர்வு ... 8.12.1930 ... 23
நான்காவது அமர்வு ... 9.12.1930 ... 23
ஐந்தாவது அமர்வு ... 15.12.1930 ... 35
இரண்டாவது துணைக்குழுவின் (மாநில அரசியலமைப்பு) அறிக்கை மீதான கருத்துரைகள் ... 1 .12.1930 ... 39

**4. துணைக்குழு III-இல் (சிறுபான்மையோர்)**
இரண்டாம் அமர்வு ... 31.12.1930 ... 40
ஐந்தாம் அமர்வு ... 14.1.1930 ... 50
ஆறாவது அமர்வு ... 16.1.1931 ... 50
பின்னிணைப்பு 1 ... ... ... 68
பின்னிணைப்பு 2 ... ... ... 82

**5. துணைக்குழு எண் VI-இல் (வாக்குரிமை)**
இரண்டாம் அமர்வு ... 22.12.1930 ... 86
மூன்றாவது அமர்வு ... 30.12.1930 ... 105
நான்காவது அமர்வு ... 1.1.1931 ... 110
வட்டமேசை மாநாட்டுக் குழு
துணைக்குழு VI சமர்ப்பித்த அறிக்கையின் சுருக்கம் (வாக்குரிமை) ... 16.1.1931 ... 118

**6. வட்டமேசை மாநாட்டின் குழு**
துணைக்குழு VII அறிக்கை பற்றி கருத்துக்கள் (பாதுகாப்பு) ... 16.1.1931 ... 121

**7. துணைக்குழு எண் VIII (பணிகள்)**
இரண்டாவது அமர்வு ... 7.1.1931 ... 124

| | | | |
|---|---|---|---|
| மூன்றாவது அமர்வு | ... | 8.1.1931 | ... 130 |
| நான்காவது அமர்வு | ... | 31.1.1931 | ... 140 |
| ஐந்தாவது அமர்வு | ... | 12.1.1931 | ... 143 |
| ஆறாவது அமர்வு | ... | 13.1.1931 | ... 145 |
| 8. முதன்மைக் கூட்டத்தொடரில் (பொது மேலாய்வு) | | | |
| எட்டாவது அமர்வு | ... | 19.1.1931 | ... 150 |
| 9. கூட்டாட்சி அமைப்புக் குழுவில் | | | |
| இருபத்து மூன்றாவது அமர்வு | ... | 16.9.1931 | ... 156 |
| இருபத்தைந்தாவது அமர்வு | ... | 18.9.1931 | ... 175 |
| இருபத்தாறாவது அமர்வு | ... | 21.9.1931 | ... 180 |
| இருபத்தெட்டாவது அமர்வு | ... | 23.9.1931 | ... 192 |
| முப்பதாவது அமர்வு | ... | 25.9.1931 | ... 196 |
| முப்பத்தி நான்காவது அமர்வு | ... | 14.10.1931 | ... 197 |
| முப்பத்தைந்தாவது அமர்வு | ... | 15.10.1931 | ... 205 |
| முப்பத்தெட்டாவது அமர்வு | ... | 22.10.1931 | ... 215 |
| நாற்பத்து நான்காவது அமர்வு | ... | 2.11.1931 | ... 234 |
| நாற்பத்தைந்தாவது அமர்வு | ... | 4.11.1931 | ... 237 |
| நாற்பத்தாறாவது அமர்வு | ... | 16.11.1931 | ... 238 |
| 10. சிறுபான்மையோர் குழுவில் | | | |
| ஏழாவது அமர்வு | ... | 28.9.1931 | ... 240 |
| எட்டாவது அமர்வு | ... | 1.10.1931 | ... 243 |
| ஒன்பதாவது அமர்வு | ... | 8.10.1931 | ... 251 |
| பின்னிணைப்பு 1 | | | |
| சிறுபான்மை வகுப்பினரின் கோரிக்கைகள் | ... | ... | ... 258 |
| பின்னிணைப்பு 2 | | | |
| டாக்டர் அம்பேத்கரும் ராவ் பஹதூர் ஆர். ஸ்ரீநிவாசனும் அளித்த துணைக் கோரிக்கை அறிக்கை | ... | ... | ... 264 |
| 11. இந்திய அரசியல் சட்டத்திருத்தக் குழு முன்னிலையில் பெறப்பட்ட சாட்சியம்... | | ... | ... 271 |
| பிழைதிருத்தம் | ... | ... | ... 453 |
| சிறப்புப் பெயரகராதி | ... | ... | ... 455 |

# வட்டமேசை மாநாடுகளில்
# டாக்டர் அம்பேத்கர்

# 1

# மாநாட்டின் முதன்மைக் கூட்டத்தில்

## ஐந்தாம் அமர்வு—நவம்பர் 20, 1930

### ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கு அரசியல் ஆதிக்க உரிமை அளிக்க வேண்டிய அவசியம்

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: தலைவர் அவர்களே, ஒடுக்கப் பட்ட மக்களின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டுள்ள நானும் என் தோழர் இராவ் பகதூர் சீனிவாசன் அவர்களும் அரசிய லமைப்புச் சட்டச் சீர்திருத்தம் பற்றி அந்த மக்களின் கருத்துகளைத் தெரிவிக்கும் முக்கிய நோக்கத்தோடு இந்த மாநாட்டில் பேச முற்படுகிறோம். நான் உங்கள்முன் தெரிவிப்பவை 43,000,000 மக்களின் அல்லது பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள மொத்த மக்கள் தொகையில் ஐந்திலொரு பகுதியினரான மக்களின் கருத்தாகும். ஒடுக்கப்பட்டோர் எனப்படுவோர் தனித்ததொரு வகுப்பின ராவர். அவர்கள் முஸ்லீம்களோடு சேர்த்து எண்ணப்படத் தக்கவர்களல்லர்; வேறுபட்டவர்கள். அவர்கள் இந்துக்களென இணைத்துப் பேசப்பட்டாலும் எந்த வகையிலும் இந்துச் சமுதாயக் கட்டுக்கோப்பிற்குள் இடம்பெற்றவர்களல்லர். அவர்கள் தனித்த தொரு வாழ்க்கை முறையைக் கொண்டிருப்பதோடு, இந்திய நாட்டிலுள்ள இதர சமூக மக்கள் பெற்றுள்ள வாழ்க்கை நிலையி லிருந்தும் பெரிதும் வேறுபட்ட நச்சுத் தன்மையான நிலையில் வைக்கப்பட்டுள்ளவர்கள். இந்தியாவில் தாழ்வான, கீழ்நிலை யிலுள்ள சமூகத்தினர் சிலர் உள்ளனர். ஆனால் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் நிலைமை இதனினும் முற்றிலும் மாறுபட்டது. அடிமைக்கும், கொத்தடிமைக்கும் இடைப்பட்டதொரு நிலை யிலேயே இந்த மக்கள் உள்ளனர். இந்த வேறுபாட்டுடன் இழிவாழ் வினராக இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்று கொள்ளலாம். அடிமையும், கொத்தடிமையும் கூட பிறரோடு கலந்து பழக முடியும். அந்த உரிமையும் கிடையாது. தீண்டாமையின் காரண மாக இவர்கள் பிறரோடு கலந்துறவாட முடியாத படி விதிக்கப் பட்டுள்ள தடையும், திணிக்கப்பட்ட அடிமை நிலையும், பொது வாழ்வில் வாய்ப்பு வசதிகளைப் பிறரைப் போலச் சமமாக அனுப விக்க இயலாமல் செய்திருக்கின்றன. நடைமுறையில் கட்டாயமாக அனைத்துச் சமவாய்ப்புகளும் அவர்களுக்கு மறுக்கப்பட்டு, அத னால் அவர்கள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைக்

* வட்டமேசை மாநாட்டுச் செயல்முறைகள் (முதல் கூட்டம்) இந்திய அரசு வெளியீடு, மத்திய வெளியீட்டுப் பிரிவு, கல்கத்தா, 1931, பக். 123-29.

குடியுரிமையும் கூட கிடைக்கப் பெறாத படுமோசமான நிலையில் உள்ளனர். இங்கிலாந்து அல்லது பிரான்ஸ் நாட்டு மக்கள் தொகைக்குக் குறையாத அளவினராக உள்ள அவர்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் தமக்குரிய வாய்ப்பு வசதிகளைப் பெருமளவில் இழந்தவர்களாக உள்ளனர். இந்தச் சமுதாய மக்களின் கருத்து, இந்தியாவின் அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்குப் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன். அந்த மக்களின் கருத்தினை மாநாட்டின் தொடக்கத்திலேயே புலப்படுத்திட நான் பெரிதும் ஆவலுடையவனாக உள்ளேன்.

நான் சொல்ல வேண்டிய கருத்தினை இயன்ற அளவில் சுருக்கமாக எடுத்துரைக்க முயல்வேன். இந்தியாவில் தற்போதுள்ள அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சிக்குப் பதிலாக விரைவில், மக்களின், மக்களால், மக்களுக்காக நடைபெறத்தக்க மக்களாட்சி அமைய வேண்டும் என்பதே நான் சொல்ல விரும்பும் சுருக்கமான கருத்தாகும். ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் இந்தக் கூற்று சிலருக்கு வியப்பை அளிக்கலாம். ஒடுக்கப்பட்டோருக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே உள்ள பிணைப்புத் தனித்தன்மை வாய்ந்தது. வைதீக இந்துக்கள் நெடுங்காலமாக இழைத்து வந்த கொடுமைகள், அடக்குமுறைகள் ஆகியவற்றிலிருந்து விடுவித்தவர்கள் பிரிட்டிஷார் என்பதால் அவர்களை வரவேற்றனர். அவர்கள் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர் ஆகியோரைப் போர்க்களத்தில் எதிர்த்து நின்று வெற்றி பெற்று இந்தியப் பேரரசை நிறுவுவதற்குப் பிரிட்டிஷாருக்கு உதவியுள்ளனர். பிரிட்டிஷார் இதனால் ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாவலர்களாயினர். இத்தகைய நெருங்கிய உறவு அவர்களுக்கிடையே நிலவும்போது, இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சி குறித்து ஒடுக்கப்பட்டோரிடம் ஏற்பட்டுள்ள மனமாற்றம் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். ஆனால் இந்த மனமாற்றத்திற்குரிய காரணங்களை விரிவாக ஆராய வேண்டிய அவசியமில்லை. நாங்கள் எங்கள் எதிர்கால நலம் இந்தியாவின் மற்றைய பெரும்பான்மைச் சமூகத்தாரின் நலத்தோடு சார்ந்தது என்பதனால் இந்த முடிவுக்கு வரவில்லை. நான் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கும் இந்தக் குறிப்பிட்ட சிறுபான்மை வகுப்பாருக்கும் மற்றைய பெரும்பான்மை வகுப்பாருக்குமிடையே அன்புத் தொடர்பு ஏதுமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, எங்களுடைய முடிவு சுதந்திரமானதொரு முடிவு. தற்போதுள்ள அரசை நாங்கள் எங்கள் சொந்த சூழ்நிலைகளைக் கொண்டு மதிப்பிட்டுப் பார்த்து, ஒரு நல்ல அரசாங்கத்திற்கு இருக்க வேண்டிய மிக முக்கிய அடிப்படைக் கூறுகள் அதனிடம் முழுமையாக இல்லாமல் இருப்பதை அறிந்திருக்கின்றோம். பிரிட்டிஷாரின் வருகைக்கு முற்பட்ட இந்திய சமுதாயத்தில் நாங்கள் அனுபவித்ததைத் தற்போதைய நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நாங்கள் முன்னேறியிருக்கின்றோம் என்று சொல்வதைவிட முன்னேறியதாகக் கருதிக் காலம் கடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதையே காண்கிறோம்.

பிரிட்டிஷாருக்கு முந்திய காலத்தில் தீண்டாமையின் காரணமாக வெறுக்கத்தக்க நிலையில் இருந்தோம். அதனைப் போக்குவதற்குப் பிரிட்டிஷ் அரசு எந்தவகையிலாவது முயற்சி புரிந்ததா? பிரிட்டிஷார் வருகைக்குமுன் நாங்கள் கோயிலுக்குள் நுழைய முடியாத நிலை இருந்தது; இப்போதாவது நாங்கள் போக முடியுமா? நாங்கள் காவல்துறையில் நுழைய முடியாமலிருந்தது; பிரிட்டிஷ் அரசாங்கம் காவல்துறைப் பணியில் எங்களைச் சேர்த்துக் கொள்கிறதா? நாங்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டதில்லை. அந்தத் துறையில் இப்போது நாங்கள் சேர வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறதா? இந்தக் கேள்விகள் எதற்கும் 'ஆம்' என்ற விடை எதுவும் கூற முடியாது. இவ்வளவு நீண்ட காலமாக எங்களை ஆண்டு வந்துள்ள பிரிட்டிஷ் ஆட்சி சில நன்மைகளைச் செய்திருக்கின்றது; அதனை மகிழ்வுடன் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் எங்கள் நிலையில் நிச்சயமாக அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. எங்களைப் பொறுத்தவரையில் பிரிட்டிஷ் அரசு, இந்தியாவுக்கு வந்தபோது இந்த சமுதாய அமைப்பை அப்படியே ஏற்றுக் கொண்டதோடு, மாறுமாடு ஏதுவுமின்றி அதனைப் பாதுகாத்தும் வந்துள்ளது. புதிய மேல் சட்டையைத் தைப்பதற்குப் பழைய சட்டையை மாதிரியாகப் பெற்ற சீனத் தையற்காரன் ஒருவன் புதியதையும், பழையதைப் போன்றே கிழிசல் ஒட்டு, ஓட்டைகளோடு தைத்துக் கொடுத்தது போன்றது இது. எங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் திறந்த புண்ணாகவே இருந்து வருகின்றன. பிரிட்டிஷ் அரசு அமைந்து 150 ஆண்டுகள் கழிந்ததாயினும் அவற்றைச் சரிபடுத்தவில்லை. பிரிட்டிஷார் எங்களைப் புறக்கணித்தார்கள் என்றோ அவர்களுக்கு எங்கள் மீது பரிவு இல்லை என்றோ நாங்கள் குற்றம் சாட்டவில்லை. பிரிட்டிஷார் எங்கள் சிக்கல்களைத் தீர்ப்பதற்குச் செயல்திறமையற்றவர்களாக இருப்பதை நாங்கள் காண்கிறோம். அவர்கள் புறக்கணிப்பு மட்டுமே செய்து இருந்தால் அது வழக்கமானதாக இருந்திருக்கும்; இவ்வளவு ஆழமான விளைவுகளை அது விளைவித்திருக்காது. சிக்கல்களைக் கூர்ந்து நோக்கும் போது அவர்கள் எங்களைப் பொறுத்தவரைப் புறக்கணித்து நடந்து கொண்டுள்ளது மட்டுமின்றி, எங்கள் சிக்கல்களையும் சரியான முறையில் கவனித்துத் தீர்ப்பதற்கு இயலாதவர்கள் என்றே தோன்றுகிறது. பிரிட்டிஷ் அரசு இரண்டு முக்கியக் கட்டுப்பாட்டு வரையறைகளால் துன்பப்படுவதை ஒடுக்கப்பட்டோர் காண்கின்றனர். முதலாவது இந்த ஆட்சியாளர்கள் தங்களின் குணப் போக்குகள், நோக்கங்கள், ஈடுபாடுகளால் நேரும் உள்முகக் கட்டுப்பாடு, இவைகளால் எங்களுக்கு நேர்ந்துள்ள துயரங்கள், கொடுமைகளை இவர்கள் ஒழித்துக் கட்ட முடியாதவர்களாக உள்ளனர் என்பதல்ல; அவை தங்கள் சொந்த நலன்களைப் பாதிப்பவை என்பதாலும், தங்கள் நோக்கமாக அவற்றைக் கொள்ளாத குணத்தாலும் அவ்வாறு செய்யாமல் இருந்துள்ளனர். இரண்டாவது, பெரும்பான்மையினராக உள்ள

சமூகத்தாரின் எதிர்ப்புக்கு ஆளாக நேருமே என்ற மரணபயம் வெளிக்கட்டுப்பாடாக உள்ளது. இந்தியச் சமுதாயத்தின் உயி ராதாரத்தையே அரித்துவரும் சமுதாயக் கேடுகளையும், பன்னெடுங் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை வதைத்து வதங்கச் செய்துவரும் கொடுமைகளையும் அழித்தாக வேண்டும் என்ற நோக்கம் இந்திய அரசுக்கு இல்லாமலில்லை. நிலவுடைமையாளர் கள் மக்களைக் கசக்கிப் பிழிகிறார்கள் என்பதும், பணக்கார முதலாளிகள் நியாயமான கூலியையும், நேரிய வேலைவாய்ப் பினையும் தொழிலாளர்களுக்குத் தருவதில்லை என்பதும் இந்திய அரசுக்குத் தெரிந்த போதிலும் இந்தக் கொடுமைகளை ஒழிக்க அது தனது ஒரு விரலையாவது அசைக்கத் துணிந்து முன்வர வில்லை என்பது வேதனை தருவதாகும். இந்த நிலை ஏன்? இந்தத் தீமைகளை நீக்குவதற்குரிய சட்டபூர்வமான அதிகாரம் அதனிடம் இல்லை என்பதனாலா? இல்லை. இந்திய அரசு அவ்வாறு செய் யாததற்கு, இந்திய சமூக, பொருளாதார வாழ்க்கை முறையை வகுத்துக் கட்டிக் காத்துவரும் விதிமுறைகளில் தலையிட்டுத் திருத்தத் தொடங்கினால் எதிர்ப்பு உருவாகிவிடுமே என்ற பயமே காரணமாகும். இத்தகையதோர் அரசாங்கத்தால் யாருக்கு என்ன நன்மை? இந்த இருவகை நெருக்கடிகளுக்கு இடையில் செயலற்றுக் கிடக்கும் ஓர் அரசு மக்களுக்கு நல்வாழ்வை எப்படி கொடுக்க முடியும்? நாட்டின் சீரிய நலனுக்கே ஒருமுகமாக முதலிடம் அளித்துச் செயல்படுவோர் அதிகாரப் பொறுப்பில் இருக்கும் அரசாங்கமே நமக்கு வேண்டும். பணிவு என்பது எங்கு முடிந்து, எதிர்ப்பு என்பது எங்கு தொடங்கும் என்பதை அறிந்ததும், சமூக நீதியும் சூழ்திறமும் உடனடியாகத் தேவை என்பதை உணர்ந்து நாட்டின் சமூக, பொருளாதார வாழ்க்கைக் கோட்பாடுகளை மாற்றியமைப்பதற்குத் தயங்காததுமான ஓர் அரசு நமக்கு வேண் டும். இத்தகையதோர் அரும்பணியைப் பிரிட்டிஷ் அரசால் என்றைக்கும் செய்ய இயலாது. மக்களின், மக்களுக்காக, மக்க ளால் நடத்தப்படும் ஓர் ஆட்சியினால் மட்டுமே இதை நிறை வேற்றிக் காட்ட முடியும்.

ஒடுக்கப்பட்ட வகுப்பினர் எழுப்பிய சில கேள்விகளுக்குரிய விடைகளும் இவையே. எனவே ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தவிர்க்க முடியாததொரு முடிவுக்கு வர வேண்டியவர்களாக உள்ளனர். அதாவது இந்திய அரசாங்கத்தை நடத்தி வரும் அதிகார வர்க்கத் தினர் எவ்வளவுதான் நல்ல நோக்கம் உடையவர்களாக இருந்த போதிலும் எங்களுடைய குறிப்பிடத்தக்க குறைகளைப் போக்கி, மாற்றத்தை உண்டாக்கக் கூடிய அளவுக்கு அதிகாரமற்றவர் களாகவே இருப்பார்கள் என்பதுதான் அந்த முடிவு. அரசியல் அதிகாரம் எங்கள் கைகளுக்கு வந்தால் தவிர இவர்களால் மட்டு மல்ல பிறர் எவராலும் கூட எங்கள் குறைகளைத் தீர்க்க முடி யாது. பிரிட்டிஷ் அரசு இன்றிருக்கும் நிலையிலேயே தொடர்ந்து இருக்குமானால் இத்தகைய அரசியல் அதிகாரத்தில் எங்களுக்குரிய

பங்கு கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஒரு சுதந்திர அரசியலமைப்பிலே தான் அரசியல் அதிகாரம் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. அது இல்லாமல், எங்கள் மக்களுக்கு ஒரு விடிவுகாலத்தை நாங்கள் உண்டாக்க முடியாது.

இன்னுமொரு விஷயத்தைத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அது இதுதான். ஒடுக்கப்பட்ட மக்களின் கருத்தைத் தங்கள்முன் வைத்தபோது குடியேற்ற நாட்டுத் தகுதி (Dominion Status) என்ற சொற்றொடரை நான் கையாள வில்லை. இந்தச் சொற்றொடரை நான் கையாளாததற்குக் காரணம், அந்தத் தொடரின் முழுமையான உள்ளுறை விளைவுகளை நான் அறியாததாலோ அல்லது ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்தியா வுக்குக் குடியேற்ற நாட்டுத் தகுதி அளிப்பதை எதிர்ப்பதாகப் பொருள்படும் என்பதனாலோ அல்ல. அந்தச் சொற்றொடரை நான் கையாளாததற்கு முக்கிய காரணம் அது ஒடுக்கப்பட்ட வகுப் பாரின் மனப்போக்கை முழுமையாக வெளிப்படுத்தக் கூடியதாக இல்லை என்பதுதான். போதிய பாதுகாப்புகளோடு கூடிய குடியேற்ற நாட்டுத் தகுதி ஆட்சியை ஆதரித்த போதிலும், ஒரு கேள்வியை அவர்கள் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறார்கள். அந்தக் கேள்வி இதுதான்: குடியேற்ற நாட்டுத் தகுதி பெற்ற இந்திய அரசு எவ்வாறு இயங்கப் போகிறது? அரசியல் அதிகாரம் அப்போது யாரிடம் நிலை பெற்றிருக்கும்? அதன் மையக்களம் எங்கு இருக்கும்? ஒடுக்கப்பட்ட வகுப்பார் அந்த ஆட்சி அதிகாரத் தில் பங்கு பெறுவார்களா? இவையே முக்கியமாக அவர்கள் ஆர்வம் காட்டும் கேள்விகள். புதிய அரசியலமைப்புக்கான அரசுச் சக்கரம் தனித்தன்மையுடையதாக அமைந்தாலொழிய அரசியல் அதிகாரத்தில் தங்களுக்கு ஒரு துண்டு துணுக்குக் கூடக் கிடைக்காது என்று ஒடுக்கப் பட்ட வகுப்பினர் கருதுகின்றனர். அத்தகைய அரசுச் சக்கரத்தை உருவாக்கும் போது இந்திய சமுதாய வாழ்வில் சில மறுக்க இயலாத உண்மைகளைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடக் கூடாது.

இந்திய சமுதாயம் என்பது ஏறுமுகமாக அமைந்த மதிப்பும், இறங்கு முகமாக அமைந்த வெறுப்பும் கொண்ட சாதிமுறை அமைப்பைக் கொண்டுள்ளது. மக்களாட்சி அரசாங்கத்திற்கு இன்றியமையாததாக உள்ள சமத்துவம், சகோதரநேயம் ஆகிய உணர்வுகள் வளர்வதற்கு இந்தச் சமுதாய அமைப்பு முறையில் இடமே கிடையாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய சமுதாயத்தில் அறிவாற்றல் மிக்க கூட்டத்தினர் முக்கிய பங்கு பெற்றுள்ள போதிலும், அவர்கள் உயர்வகுப்பிலிருந்தே வந்துள்ளனர். இந்திய நாட்டு மக்களின் சார்பாகப் பேசும் இந்தக் கற்றறிந்த கூட்டத்தார் அரசியல் இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியிருக்கின்ற போதிலும், தமது குறுகிய சாதிப்பித்தையோ, தனிமைப்படுத்திக் கொள்ளும் போக்கையோ உதறித் தள்ளியவர் கள் அல்லர்.

வேறு வகையில் கூறுவதானால் அரசு சக்கரம் இந்தியச் சமுதாயத்தின் இந்தப் போக்கையும் மனநிலையையும் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டும் என ஒடுக்கப்பட்ட வகுப்பினர் வலியுறுத்திக் கூற விரும்புகின்றனர் என்பதாகும். இவ்வாறு அமையாவிட்டால் நீங்கள் உருவாக்கவிருக்கும் அரசியலமைப்புச் சட்டம் எத்தனை சமச்சீர்மையுடையதாக இருந்த போதிலும் குறை யுள்ளதாகவும் இந்திய சமுதாயத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாத தாகவும் போய் விடும்.

என் பேச்சை முடிக்குமுன் ஒரு செய்தியை வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். ஒடுக்கப்பட்ட மக்களின் சிக்கல் ஒரு சமூகச் சிக்கல்; அதற்குரிய தீர்வு அரசியலில் இல்லை; வேறு இடத்தில் உள்ளது என அடிக்கடி கூறப்படுகிறது. இந்தக் கருத்தை வன்மை யாக மறுக்கின்றோம். அரசியல் ஆதிக்க உரிமை கிடைத்தாலன்றி ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் சிக்கல் தீராது. இது உண்மையாயின் இதற்கு மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்பதுதான் என் எண்ணம்—ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் சிக்கல் முதன்மையாக ஓர் அரசியல் சிக்கலே அன்றிச் சமூகச் சிக்கல் அன்று; அது அவ்வாறு தான் கருதப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் அதிகாரம் பிரிட்டிஷாரிடமிருந்து பொருளாதாரம், சமூகம், சமயம் ஆகியவற்றால் எங்களை அடக்கி ஆதிக்கம் செலுத்துவோர் கைகளுக்கு மாறிச் செல்கிறது என்பதை அறி வோம். 'சுயராஜ்யம்' என்ற கருத்தினை கேட்கும்போதெல்லாம் எங்களுக்கு இழைக்கப்பட்டு வந்துள்ள கொடுமைகள், அடக்கு முறைகள், அநீதிகள் ஆகியவை எங்கள் நினைவுக்கு வந்து 'சுயராஜ்ய' ஆட்சியில் அவை மீண்டும் தலைதூக்கும் என்ற பயம் ஏற்படுகின்ற போதிலும் அந்தச் 'சுயராஜ்யம்' கிடைப்பதற்கும், நாங்கள் தடையாக இருக்க விரும்பவில்லை—அரசியல் ஆதிக்கப் பதவிகளில் எங்கள் நாட்டு மக்களோடு நாங்களும் எங்கள் சமுதாய மக்களின் விகிதத்திற்குத் தக்கவாறு அமர்த்தப்படுவோம் என்னும் நம்பிக்கையில் தற்போது நிலவும் தவிர்க்க முடியாத இடர்ப்பாடுகளை ஏற்கத் தயாராக இருக்கின்றோம். எங்கள் சிக்கல்கள் காலப் போக்கில் தீர்ந்து விடும் என்ற நிலையில் விடப் படக் கூடாது என்ற ஒரு நிபந்தனையுடன் 'சுயராஜ்யம்' அளிப் பதற்கு உடன்படுகின்றோம்.

ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் சிக்கல்கள் காலப் போக்கில் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து எந்த மாற்றத்தை யும் காணாதவர்களாக உள்ளனர். இந்திய நாட்டில் மக்கள் பிரதி நிதித்துவ ஆட்சி முறையை விரிவுபடுத்த பிரிட்டிஷ் அரசு நட வடிக்கை எடுத்த ஒவ்வொரு கட்டத்திலும் ஒடுக்கப்பட்ட மக்கள் திட்டமிட்ட வகையில் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் களுக்கு அரசியல் அதிகார உரிமை அளிப்பது பற்றி எவரும் சற்றேனும் சிந்தித்ததில்லை. இந்த நிலையை இனிமேலும் நாங்கள்

பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்பதனை அழுத்தம் திருத்தமாகக் கூறுவேன். எங்கள் சிக்கலை பொது அரசியல் சிக்கலாகக் கருதித் தீர்க்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் அமைய விருக்கும் அட்சியாளர்களின் நல்லெண்ணத்திற்கும் நிலையில்லாத அனுதாப உணர்வுக்கும் அதனை விட்டுவிடக் கூடாது. இதனை நாங்கள் வலியுறுத்திக் கூறுவதற்கான காரணத்தை அனைவரும் அறிவீர்கள். ஒன்றை உடைமையாகப் பெற்றிருப்பவன் எதையும் பெற்றிராதவனை விட வலிமையுடையவனாகவே இருப்பான். ஆனால் அதிகார ஆதிக்கம் பெற்றிருப்போர் அதைப் பெறாதவர் களுக்கு எதையும் விட்டுக் கொடுக்க இசைய மாட்டார்கள் என்பது எவரும் அறிந்ததே. எனவே எங்கள் சமூகச் சிக்கல் காலப் போக்கில் எளிதாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்று நம்ப முடியாது. இன்றைக்கு எங்கள் ஆதரவைப் பெற்று அதிகாரபீடத்தையும் கௌரவத்தையும் அடைபவர்கள், ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற பின்பு எங்கள் சமூகச் சிக்கலை எளிதாகத் தீர்ப்பதனால் அவர் களுக்கு அதனால் ஆதாயம் எதுவும் ஏற்படப் போவதில்லை, இழப்பே ஏற்படும். அந்தச் சூழ்நிலையில் எங்கள் சிக்கலைத் தீர்க்கவில்லை என்பதற்காக அவர்களைப் பதவியிலிருந்து இறக்கு வதற்கு இன்னொரு புரட்சியை நாங்கள் நடத்த வேண்டியதாகி விடும். மிகவும் நம்பிக்கைக்குரிய ஒரு பாதுகாப்பை நம்பி அழிந்து போவதைவிட மிகவும் ஐயத்திற்குரிய அச்சங்களை எழுப்பி வசவு களைப் பெறுவதையே நாங்கள் விரும்புகிறோம். எனவே, எங்கள் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய உறுதிமொழி, எங்களுக்கும் ஒரு பிடிப்பு இருக்கும் வகையில் இந்திய ஆட்சியை இயக்கவல்ல அரசிய லமைப்பு முறைகளிலேயே இடம்பெற வேண்டும் என வலியுறுத்த விழைகிறோம். இந்திய ஆட்சியமைப்பை நடத்துவதற்குக் கட்டு பாடற்ற அதிகாரம் பெற்றுவிடக் கூடியவர்களான எங்கள் நலன் களுக்கு எதிரானவர்களின் விருப்பத்திற்குரிய முறையில் சிக்கலுக் குத் தீர்வு காண விட்டுவிட முடியாது.

ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் பாதுகாப்புக்கும் உரிமைகளைக் காப்பதற்கும் அமையவிருக்கும் அரசியலமைப்பில் இடம் பெற வேண்டிய ஏற்பாடுகள் யாவை என்பதனை தக்க நேரத்தில் இந்த மாநாட்டின் முன் நான் வைப்பேன். இப்போதைக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஒரு பொறுப்பான ஆட்சியையே நாங்கள் கேட்கிறோம்; வெறும் எசமானர்கள் மாற்றமாக அமைந்த அரசாங்கத்தை அல்ல என்பதுதான். நீங்கள் உருவாக்கப்போகும் நிர்வாக அமைப்பு முழுமையான பொறுப்பு மிக்கதாக அமைய வேண்டுமானால் அமைய இருக்கும் சட்டமன்றம் உண்மையில் முழுமையான பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.

தலைவர் அவர்களே, இவ்வளவு வெளிப்படையாக நான் பேச நேர்ந்ததற்கு வருந்துகிறேன். இப்படிப் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கு நண்பர்களே இருந்த

தில்லை. இந்தியாவை ஆளும் பிரிட்டிஷ் அரசு அங்குத் தான் தொடர்ந்து இருப்பதற்காக அவர்களை ஒரு கருவியாகப் பயன் படுத்தி வந்திருக்கிறது. இந்துக்கள் அவர்களிடம் உறவு கொண் டாடுவது அவர்களின் உரிமைகளை மறுத்துப் பறித்துக் கொள் வதற்காகவே ஒழிய வேறெதற்காகவும் இல்லை. இவர்கள் தனிமைப் படுத்திய நிலையில் வாழ்கிறார்கள் என்பதை முஸ்லீம்கள் மறுப் பதற்குக் காரணம் தங்களைப் போலவே இன்னொரு கூட்டத்தார் இருப்பதை ஏற்றுக் கொண்டால் தாங்கள் அனுபவித்துவரும் தனிச் சலுகைகளை இழக்கநேருமோ என்ற அச்சத்தினால்தான். அரசின ரால் புறக்கணிக்கப்பட்டு, இந்துக்களால் ஒடுக்கப்பட்டு, முஸ்லீம் களால் அலட்சியப்படுத்தப்பட்டுச் சொல்லொணாத் துயரத்தில் ஆதரவற்றவர்களாக உழலும் இவர்களுக்கு இணையாக வேறு எவரையும் காட்ட இயலாது. எனவேதான் அவர்களின் நிலையை எடுத்துரைக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த மாநாட்டில் விவாதத்திற்குரிய இன்னொரு சிக்கல் மிகவும் முக்கியமானது. ஆனால் அது பொதுவிவாதத்தின்போது ஆராயப்பட்டால் போதும் என முடிவு செய்யப்பட்டிருப்பது வருந்துதற்குரியது. ஒரு தனிக் கூட்டத்தில் விவாதிக்கத்தக்க முக்கியமான அந்தச் சிக்கலை மேம்போக்காகக் குறிப்பிட்டுவிட்டுப் போவது எவ்வகையிலும் நியாயமானதாகாது. ஒடுக்கப்பட்ட வகுப் பாரைப் பொறுத்தவரையில் ஆழ்ந்த கவனத்திற்குரிய அந்தச் சிக்கலை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகவும் கருது கின்றனர். பெரும்பான்மையோரை உறுப்பினர்களாகக் கொண்ட மாநில அரசுகள் சிறுபான்மையோரைக் கொடுமைப்படுத்தும் போது பலமான கடிவாளமாகச் செயல்பட்டு திருத்துவதற்குரிய மத்திய அரசு தேவை எனச் சிறுபான்மையோர் என்ற வகையில் எதிர்பார்க்கிறோம். இந்திய தேசிய வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஓர் இந்தியன் என்ற வகையில் இந்தியாவுக்கு ஒருமைப் பாட்டு வடிவிலான அரசு தேவை என உறுதியாக நம்புபவன் என்பதையும், இதனைச் சீர்குலைக்கும் சிந்தனை எதுவும் எனக்கு மகிழ்ச்சி அளிக்காதவை என்பதையும் தெளிவாகக் கூறுகின்றேன். இந்திய நாடு சரியாக உருவாவதற்கு ஒருமைப்பாட்டு அரசமைப்பே பெரிதும் உதவக் கூடியது. ஒருங்கிணைந்த ஓர் அரசமைப்பின் விளைவாக நாட்டில் ஏற்படத் தொடங்கியுள்ள ஒருமைப்பாட் டுணர்வு இன்னும் முழுமையடையவில்லை. முழுமையாக வளர்ச்சி யடையாத இந்தத் தொடக்க நிலையில் அதனை உருவாக்கக் கூடிய ஆற்றல் மிக்கத் தூண்டுதலைப் பின்வாங்கிக் கொள்வது வெறுக்கத் தக்கது. எனினும் நம்முன் வைக்கப்பட்டுள்ள இந்த வினா அறி வாராய்ச்சிக்குரிய நிலையிலேயே உள்ளது. கூட்டாட்சி வடிவ அரசமைப்பில் உள்ளூர்த் தன்னாட்சியும் ஒருமைப்பாட்டிற்கு முரண்படாமல் ஒருங்கிணைந்து செல்வதற்கு வகை ஏற்பட்டால் மத்தியக் கூட்டாட்சி அரசமைப்பு முறையை ஏற்கத் தயங்க மாட் டேன்.

ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதி என்ற வகையில் அவர்கள் சார்பில் சொல்ல வேண்டியது அனைத்தையும் சொல்லி இருக்கின்றேன். இனி ஓர் இந்தியன் என்ற வகையில் நம் முன்னே இருக்கும் நிலையை எப்படிச் சந்திப்பது என்பது குறித்துப் பொதுவாக ஓரிரு வார்த்தைகள் சொல்ல விழைகின்றேன். நாட்டில் நடைபெற்றுவரும் இயக்கத்தை நான் அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருப்பவனன்று என்ற போதிலும், தற்போதுள்ள சூழ்நிலையின் கடுமையைப் பற்றிப் போதுமான அளவு ஏற்கனவே பேசப்பட்டுள்ளதால் மேற்கொண்டு நான் எதுவும் சொல்லப் போவதில்லை. எனக்குள்ள கவலையெல்லாம், நாம் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்குச் சரியான போக்கில் போகின்றோமா என்பது தான். சிக்கலுக்குரிய தீர்வைப் பொறுத்தவரையில் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கொண்டுள்ள கருத்தைச் சார்ந்தே உள்ளது. நிலைமையை நீங்கள் சமரச முறையில் சமாளிக்கப் போகிறீர்களா அல்லது உறுதியான நடவடிக்கை எடுப்பதன் மூலம் சமாளிக்கப் போகிறீர்களா என்று மட்டுமே அவர்களைக் கேட்கிறேன். ஏனென்றால் எப்படி முடிவெடுத்தாலும் அதற்கான பொறுப்பு முழுவதும் உங்களையே சார்ந்ததாகும். கெடுபிடியைப் பயன்படுத்தியோ, சிறையில் அடைத்தோ காரியத்தைச் சாதித்துவிடலாம் என்று நீங்கள் நினைத்தால் அரசியல் தத்துவ மாமேதை எட்மண்டு பர்க் புகன்ற மறக்கமுடியாதச் சொற்களை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் போரிட்டுக் கொண்டிருந்த போது எழுந்த சிக்கலைக் குறித்து பிரிட்டிஷ் நாட்டுக்கு அவர் கூறியது இது:

> ''படைவலிமையின் அடக்குமுறையால் ஏற்படும் விளைவு தற்காலிகமானது. சில சமயங்களில் அது பயன் தரலாம்; ஆனால் மீண்டும் அது கையாளப்பட வேண்டிய ஒன்றாகி விடும். அதனால் முழுமையாக வெற்றி கொள்ள வேண்டிய ஒரு நாட்டை ஆளுவது முடியாததாகிவிடும். படைவலிமையைக் கைக்கொள்வதை எதிர்ப்பதற்கு இன்னொரு காரணம் அதன் நிச்சயமின்மையாகும். படைவலிமையின் விளைவாக எப்போதும் அச்ச உணர்வை உண்டாக்க முடியாது; படைக் கலங்கள் மட்டுமே எப்போதும் வெற்றியைத் தந்துவிடாது. நீ வெற்றியடையவில்லை என்றால் உன்னிடம் வளமையான திறமை இல்லை என்பதுதான் பொருள்; சமரசம் தோல்வியுற்றால் படைவலிமை மட்டுமே மிஞ்சும். படைவலிமை தோல்வியுற்றால் மேற்கொண்டு சமரசத்திற்கு இடமில்லை. சில சமயங்களில் அதிகாரமும் ஆதிக்கமும் அன்பு மூலம் பெறப்படுகின்றன. ஆனால் அவற்றை தோற்கடிக்கப்பட்ட வன்முறையால் வறுமையுற்று, பிச்சைப் பொருளாகப் பெற முடியாது. எந்த இலட்சியத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டாயோ அதனாலேயே உன் இலட்சியங்களை அழித்துக் கொள்கிறாய் என்பது படைவலிமையைப் பயன்படுத்து

வதற்கு எதிராகக் கூறத்தக்கது. எதை அடைவதற்கு நீ போரிட்டாயோ—அதாவது மக்களின் நம்பிக்கையைப் பெற—அதைச் சிதறாமல் சேதமுறாமல், மூழ்காமல், வீணாகாமல், போட்டியில் அழியாமல் முழுமையாக நீ பெறமுடியாமற் போகும்.''

இந்த அறிவுரையின் மதிப்பும் பயனும் எத்தகையது என்பது நீங்கள் யாவரும் அறிந்ததுதான். அதற்கு நீங்கள் செவிமடுக்காமல் போனதன் விளைவாக மாபெரும் அமெரிக்க கண்டத்தை இழந்தீர்கள். இப்போதாவது அதனை நீங்கள் உணர்ந்தால் அது உங்கள் நெடுங்கால நலனுக்கும் தற்போது உங்களிடமுள்ள குடியேற்ற நாடுகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் பேருதவி புரியும். உங்களில் சமரசக் கொள்கையைப் பின்பற்ற விரும்புவோருக்கு நான் ஒன்று கூற ஆசைப்படுகின்றேன். குடியேற்ற காட்டுத் தகுதி, (Dominion Status) பற்றி ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்கு இங்கு வந்துள்ள பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், குடியேற்ற நாட்டுத் தகுதியுள்ள ஆட்சியதிகாரம் வழங்குவது அந்த விவாதத்தின் வெற்றியை பொறுத்திருக்கிறது என்றும் ஒரு எண்ணம் நிலவுவதாகத் தோன்றுகிறது. உயிர்த்துடிப்புள்ள இந்தச் சிக்கலுக்குத் தருக்கவாதத் திறமையினால் தீர்வுகண்டு விட முடியும் என்று கருதுவதைவிடப் பெருந்தவறு வேறெதுவும் இருக்க முடியாது என்பதனை நாவன்மை மிக்கவர்களுக்கு உரிய மரியாதை அளித்து நான் தெரிவித்துக் கொள்கிறேன். தருக்கக்கலையுடனோ தருக்கவாதிகளுடனோ எனக்கு வெறுப்போ, பகையோ இல்லை. ஆனால் அவர்கள் மேற்கொள்ளப்போகும் ஊகங்களுக்கான முற்கோள்களை விழிப்புடன் தெரிந்தெடுத்துக் கொள்ளாமல் போவார்களானால் அதனால் அழிவுதான் விளையும் என்று எச்சரிக்கிறேன். நீங்கள் உங்கள் தருக்க அறிவின் முடிவுகளை ஏற்றுக் கொள்வீர்களோ அல்லது பேரறிஞர் ஜான்ஸன் பெர்க்கிலி என்னும் தருக்க நூலாசிரியர் வகுத்திருந்த முரண்பட்டான தருக்கச் சூத்திரங்களை மிதித்துத் துவைத்தது போல எதிர்ப்பீர்களோ தெரியாது; அது உங்கள் மனபோக்கைப் பொறுத்தது. ஆனால் இந்திய நாட்டில் தற்போது நிலவும் மனப்போக்கைச் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையில் பெரும்பாலான மக்களுக்குப் பிடித்தமில்லாத அரசியலமைப்பு பயன்தராது. நீங்களாக ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து அதை இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ளும் காலம் போய்விட்டது; மீண்டும் அது திரும்பப் போவதில்லை. நீங்கள் உருவாக்கும் அரசியலமைப்பு ஒழுங்காக இயங்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதை உருவாக்குவதற்குத் தருக்கவாதத் திறமையை விட மக்களின் ஒப்புதலே 'கட்டளைக் கல்லாக' இருக்க வேண்டும்.

# 2

# வட்ட மேசை மாநாடு

## * துணைக்குழு I-ன் இடைக்கால அறிக்கை மீது கருத்துக்கள் (கூட்டாட்சி அமைப்பு)—டிசம்பர் 16, 1930

*****டாக்டர் அம்பேத்கர்:*** இதற்கு முன்னர், கூட்டம் ஒத்தி வைப்பதற்கு முன்பு எனது நண்பர் திரு. ஜோஷி தெரிவித்த கருத்தினை எழுப்ப நான் விரும்புகிறேன். இத்துணைக் குழுவின் தலைவர் என்ற முறையில் மேலவைத் தலைவர் (Lord Chancellor), இத்தகைய குறிப்பிட்ட விஷயங்கள் பற்றி தங்களுக்குள்ள எவ்விதக் கருத்துக்களையும் கூறலாம் என்று சில பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்கள். நான் உட்பட சில பிரதிநிதிகள் துணைக் குழு வின் தலைவருக்கு ஒரு கடிதத்தினைச் சமர்ப்பித்தோம். அந்தக் கடிதம் துணைக்குழுவின் ஆய்வுக்கு வைக்கப்பட வேண்டுமென எங்களது விருப்பத்தைத் தெரிவித்து இருந்தோம். அறிக்கையில் அக்கடிதம் பற்றிய தகவல் எதையும் நான் காண முடியவில்லை. அக்கடிதம் துணைக்குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படவில்லை, ஆனால், பிரதம மந்திரி என்ற முறையில் தங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகப் சாங்கே பிரபு எனக்குத் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் பற்றி நடவடிக்கை மேற்கொள்ள இது முற்றிலும் சரியான வழி என்று நான் கருதவில்லை. துணைக் குழுவின் ஆய்வுக்காக அக்கடிதம் துணைக்குழுவின் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. கூட்டாட்சி பற்றி நாங்கள் கொண்டுள்ள, எங்களின் திட்டவட்டமான சில கருத்துக்களை அக்கடிதம் தெளிவாக்கி இருந்தது. நான் இவ்வாறு விளக்கம் கூறக் கடமைப் பட்டுள்ளேன். ஏனெனில், என்னைப் பொறுத்தவரை இப்போது வரையப்பட்டுள்ள அறிக்கை (எங்களது) கடிதத்தில் விளக்கப் பட்டுள்ள கொள்கைகளுக்கு பெரிதும் வேறுபட்டதாக இருக்கிறது. இப்பிரச்சினை குறித்துப் பின்னால் ஒரு கட்டத்தில் நாங்கள் விவாதிக்க வேண்டும் என நான் கருதுகிறேன். இதுபற்றி மேலும், பேரவைத்தலைவர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித் துள்ளார்கள் என நான் அறிய விரும்புகிறேன்.

---

* வட்ட மேசை மாநாட்டின் நடவடிக்கைகள் — பக்கங்கள்: 193-95.

** டாக்டர் அம்பேத்கர் துணைக்குழு உறுப்பினரல்ல. இருப்பினும் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டின் கூட்டாட்சி அமைப்புக் குழுவில் ஒரு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

*லார்டு சாங்கே:* டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இப்பிரச்சினையை எழுப்பியுள்ளதற்கு அவர்களுக்கு நான் மிகுந்த கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் நானே இப்பிரச்சினையை எழுப்பி இருக்க வேண்டும். தொடக்கத்திலேயே நான் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். சில வார்த்தைகள் கூற எனக்கு இது வாய்ப்பளித்துள்ளது... இது முழுமையான வடிவம் அல்ல... விரைவில் உங்களுக்கு முழுமையான வடிவம் அளிக்கப்படும். அத்துடன், டாக்டர் அம்பேத்கர் அவர்களே. உங்களின் உதவியையும் நாடுவேன்... இப்போது கடிதம் பற்றி; டாக்டர் அம்பேத்கர் அவர்களே, நீங்கள் பெருந்தன்மையுடன் கடிதத்தை எனக்கு அனுப்பினீர்கள். மிகவும் கவனமாக நான் ஆய்வு செய்தேன். எண் 6-வது* தலைப்புக்கு வரும் போது இது பற்றி விவாதிப்பது இன்றியமையாததாகும்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் சொல்ல வேண்டுமானால், தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம் குழுவின் முன் ஆய்வுக்கு அந்தக் கடிதத்தை வைப்பீர்களா என்பதுதான். எந்தக் கூட்டத்தில் அவ்வாறு செய்வீர்கள் என்பதை உங்கள் முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

*சாங்கே:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, ஒரு நிமிடம். அதைக் காட்டிலும் மிக அதிகமாகவே செய்யப் போகிறேன். குழுவின் முன் உங்கள் கடிதத்தை வைப்பதோடு, குழுவின் கவனத்திற்கு அந்தக் கடிதத்தை நானே கொண்டு வருவேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். அது எனக்குத் திருப்தியே.

*சாங்கே:* ஒரு நிமிடம். நான் இன்னும் பேச்சை முடித்துவிடவில்லை. என்னைப் போல் உங்களுக்கு வயது ஆகிற போது, நீங்கள் இவ்வளவு அவசரமாக இருக்க மாட்டீர்கள். நானே இப்பணியினைச் செய்வதற்குப் பதிலாக, கடிதம் அளித்த அந்தப் பெரியவரை நானே அழைத்து வந்து, இப்பணியினைச் செய்யச் சொல்லுவேன். நானே இதனைச் செய்வதென்றால், உங்களைப் போன்று அவ்வாறு சிறப்பாகச் செய்ய முடியாது. இருப்பினும், நான் இதைச் செய்வேன். கடிதத்தின் ஒரு சின்ன வார்த்தை கூட விடுபடக் கூடாது. இன்னும் இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் நேரம் வரவில்லை. ஏனெனில், நாம் எண் 6-ஆம் தலைப்பினை எடுத்துக் கொள்ளும் முக்கியமான நேரத்தில் இது ஆய்வு செய்யப்பட வேண்டும்.

---

* தலைப்பு எண் 6: கூட்டாட்சி அமைப்பு, அதிகாரம், தனிமை, பொறுப்புகள் பற்றி விவரிக்கிறது.

## கவர்னர்-ஜெனரல் அவர்களின் சிறப்பு அதிகாரம் பற்றிக் கூறும் அறிக்கை 7-ன் பத்தி 16-வது மீது கருத்துக்கள்

******டாக்டர் அம்பேத்கர்*: மக்களின் எந்தப் பிரிவினரின் நல னுக்கும் கெடுதல் நேரிடுவதைத் தடுக்க தலைமை ஆளுநர் (Governor-Generel) அவர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டுமென்பதை, நீங்கள் நடவடிக்கைகளைத் தொடங்கு முன், நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கனடா நாட்டின் அரசியலமைப்பின் 93-வது பிரிவில் கண்டுள்ள அதே வடிவில், அந்த அதிகாரம் அரசிய லமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

*லெப்டினென்ட் கர்னல் கித்னே*: டாக்டர் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அத்தகைய விஷயங்களில் கவர்னர்-ஜெனரல் அவர்களுக்குள்ள தனி அதிகாரங்கள் பற்றி எனக்கு டாக்டர் அம்பேத்காருடன் முழு உடன்பாடு உண்டு. இது பற்றி அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தைக்கும் எனது ஆதரவை அளிக் கிறேன்.

★ ★ ★ ★ ★

***தலைவர்*: பத்தி 34. கர்னல் கித்னே அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*லெப். கர்னல் கித்னே*: இப்பத்தி பற்றி எனக்கு ஒரு கருத்து உண்டு.பத்தி 29 வது உடன் இணைத்து அவ்வாறு அபிப்பிராயம் தெரிவிக்கிறேன். மேல் சபையில் பல்வேறு வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதைக் கணக்கிடுவதற்கு மக்கள் தொகை விகிதாச்சாரத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று பத்தி 29-ல் கூறப்பட்டிருக்கும்போது, இந்தப் பத்தி 34-ல் சாத்தியமானால் (Possibly) என்ற வார்த்தையை நீங்கள் உபயோகித்து இருக்கிறீர் கள். அது சிறுபான்மையினரும் குறிப்பிட்ட இனத்தவரும் மேல் சபையில் ஓர் இடம்கூடப் பெற முடியாதபடி முற்றிலும் தடை செய்கிறது. இந்த பத்தியிலிருந்து 'சாத்தியமானால்' என்ற வார்த்தையை நீக்கி விட ஆலோசனை கூறுகிறேன். மேலும் கீழ்ச் சபையில் நிச்சயமாக என்று (அடுத்து) வரும் இதர வார்த்தைகளும் நீக்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட பத்தியைப் பின்வருமாறு வாசிக்க வேண்டும்:

---

* வட்டமேசை மாநாட்டின் செயல்முறைகள், பக்கம் 261.

** வட்டமேசை மாநாட்டின் செயல்முறைகள், பக்கங்கள் 278-279.

''இரண்டு சபைகளிலும் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அது (பிரதிநிதித்துவம்) எவ்வளவு குறைந்த எண்ணிக்கையாக இருப்பினும் வழிவகை செய்யப்பட வேண்டும்.''

எல்லாச் சிறுபான்மை வகுப்பினரும் மேல் சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அது எவ்வளவு சிறிய எண்ணிக்கையாக இருப்பினும் உரிமையுடையவராவார்கள் என நான் கருதுகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* **கர்னல் கித்னே கூறியதில் எனக்கு உடன்பாடு உண்டு. (கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் சிறப்பு வகுப்பினருக்கும் மன்னருக்கும் உள்ள பிரிதிநிதித்துவம் பற்றிப் பத்தி 34 கூறியுள்ளது).**

# 3

# துணைக்குழு 2—ல் (மாநில அரசமைப்பு)

## முதல் அமர்வு—டிசம்பர் 4, 1930

*டாக்டர் அம்பேத்கர்: என்னுடைய கருத்துகளைப் பின்வருமாறு மூன்று தலைப்புகளில் வகுத்துரைக்கின்றேன்: (1) மாநிலங்களின் தன்னாட்சி (Autonomy) (2) மாநிலங்களின் பொறுப்புகள் (3) மாகாண அரசுப் பணிகள். மாநிலத் தன்னாட்சி, மாநில ஆட்சிப் பணிகள் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகின்றேன். மாநிலத் தன்னாட்சியைப் பற்றிக் குறிப்பிடும் போது மாநில நிர்வாகம், மாநிலச் சட்டமன்றம் ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவு பற்றிய வரையறையைத் தெளிவாக்க வேண்டியதாகிறது. மாநில அரசுகள் இயன்றவரையில் தன்னாட்சியுள்ளவையாகச் செயல்பட அனுமதிப்பதற்குரிய காலக்கட்டம் வந்துவிட்டதென்றும், தற்போதுள்ளவாறு மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து இவை விடுபட்டுச் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்றும் கருதுவோரின் கூற்று பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். ஆனால் பொதுவாக இந்திய நாட்டின் நலன்களையும், குறிப்பாக உழைக்கும் வகுப்பாரின் நலன்களையும், இந்த மாநாட்டிற்கு என்னை அனுப்பியிருக்கும் வகுப்பாரின் நோக்கங்களையும் கருத்தில் கொண்டு மாநிலங்களுக்குத் தன்னாட்சி அதிகாரத்தை அளிப்பதற்குரிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு முன் அதன் தன்னாட்சித் தன்மையைக் கட்டுப்படுத்தக் கூடிய சில உண்மைகளைக் கருத்தில் நாம் கொள்ள வேண்டும் எனக் கருதுகின்றேன்.

மாநிலங்களைத் தன்னாட்சித் தன்மையுள்ளவையாக அமைக்குங்கால் அவை அவ்வாறு அமைந்த போதிலும் அகில இந்தியத் தன்மையுள்ளதாக—தேசிய ஒருமைப்பாட்டிற்கு முரண்படாததாக இருக்க வேண்டும். மாநிலங்களுக்குத் தன்னாட்சி அதிகாரங்கள் அளிக்கப்பட்ட போதிலும், அந்த அதிகாரங்களைச் செயல்படுத்தும் ஆட்சிப் பொறுப்பில் மத்திய அரசுக்கும் பங்கிருக்க வேண்டும்.

---

* துணைக்குழு 2-இன் செயல்முறைகள் (மாநில அரசமைப்பு), இந்திய அரசு, மத்திய வெளியீட்டுத் துறையின் கிளை, கல்கத்தா, 1931, பக். 18-22.

இந்தக் குழு ஆராய அளிக்கப்படவிருக்கும் பொருள்கள் பின்வருமாறு:

1) ''மாநிலச் சட்டப்பேரவையின் அதிகாரங்கள்

2) ''மாநில சட்டப் பேரவையின் அதிகாரங்கள், தன்மைகள், அரசமைப்பு.

எடுத்துக்காட்டிற்காகத் தொழிலாளர் பற்றிய சட்டங்கள், விவசாயம், விவசாயக் குத்தகைதாரர்கள் சம்பந்தபட்ட சட்டங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் இந்தச் சட்டங்கள் மாநிலத்தைச் சார்ந்த பொருளாகக் கொள்ளப்பட வேண்டியதே என்றாலும், அத்தகைய குறுகிய வட்டத்திற்குள் வைத்தே சட்டம் இயற்ற வேண்டியது என நான் கருதவில்லை. அவை அகில இந்தியத் தன்மையில்லாதது, மாநிலத்திற்குரியது என்றாகி விடாது. மாநிலங்களின் தன்னாட்சியில் தலையிடுவதாக இருந்த போதிலும் இத்தன்மையுள்ள பொருள்கள் மத்திய அரசின் ஆட்சி வரம்பிற்குட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, மாநிலங்களுக்கு இயன்றவரை முழுத் தன்னாட்சி அளிக்கும் நோக்கத்தோடு அமையவிருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாநில, மத்திய அரசுகளுக்கிடையே அதிகாரங்களை ஒதுக்கீடு செய்யும்போது, வரையறை செய்யப்படாமல் விடப்படும் அதிகாரங்கள் மத்திய அரசின் பொறுப்பில் விடப்பட வேண்டும். தேசிய உணர்வை விட மாநில, உள்ளூர் பற்றிய குறுகிய பற்று ஓங்கியிருப்பதோடு, பிரிவினைப் போக்கும் வளர்ந்துவரும் இந்திய நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், மாநிலங்களுக்குத் தன்னாட்சியை அளித்து மத்தியில் கூட்டாட்சியை அமைக்க நாம் முயலும் போது, வலிமையும் ஒருமைப்பாட்டுணர்வும் கொண்ட இந்தியாவை அமைக்க வேண்டிய சிக்கலும் நமக்கு உள்ளது. மேலும் கூறுவதானால், மத்திய அரசுக்கென்று சில அதிகாரங்களை ஒதுக்கி வைத்துக் கொள்வதால் மாநிலங்களின் தன்னாட்சி பாதிக்கப்படும் என நான் கருதவில்லை. கனடாவைப் பற்றிப் பிரிவிக் கவுன்சிலின் (Privy Council) சட்டக் குழு அளித்துள்ள விளக்கத்தின்படி இவ்வாறு அதிகாரங்களை ஒதுக்கீடு செய்வது புறக்கணிப்புத் தன்மை ஆகாது. மாநிலங்களுக்கு வரையறுத்து அளிக்கப்படாத துறைகளில் நெருக்கடி நேரங்களில் நடைமுறைக்கு வரும் அதிகாரங்கள் உண்மையில் மாநிலத் தன்னாட்சியைப் பாதிக்கப்படக் கூடியது என்று நான் கருதவில்லை.

அடுத்து, மாநிலத் தன்னாட்சி பற்றி நாம் யோசிக்கும் வேளையில் சிறுபான்மை வகுப்பினர், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் ஆகியோர் நலன்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத் தக்க வகையில் மாநிலங்களின் தன்னாட்சி அமையும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமையவிருக்கும் இந்தியாவில் எனக்குத் தோன்றும் சூழ்நிலையின்படி, சில மாநிலங்களில் சில வகுப்பார் பெரும்பான்மையோராக இருப்பார்கள். ஆனால் அதே வேளையில் எல்லா மாநிலங்களிலும் என்னைச் சார்ந்தவர்களான ஒடுக்கப்பட்ட மக்கள் சிறுபான்மையினராகவே இருப்பார்கள். இந்த மக்களின் நலன்களைப்

புறக்கணிக்கும் போதும், நிர்வாக ஒழுங்கீனம் ஏற்படும் போதும், மேல்முறையீடு செய்வதற்கு உரிமை எதுவும் இல்லாத போதும் ஏழை எளியவர்களான இந்த மக்கள்மீது எவ்வித கட்டுப்பாடும், தடையும், வரையறையும் இல்லாத வகையில் ஆதிக்க அதிகாரம் செலுத்துவதற்குப் பெரும்பான்மையோரைக் கொண்ட மாநிலங்களை எவ்வாறு அனுமதிப்போம் என்பதுதான் விளங்கவில்லை. எனவே, மாநிலப் பெரும்பான்மை மக்கள், சிறுபான்மையோருக்குத் தொல்லை கொடுத்து இக்கட்டான சூழ்நிலையில் அவர்களை வைக்கும்போது தலையிட்டுப் பாதுகாப்பதற்குரிய அதிகாரமன்றம் ஒன்று மாநிலத் தன்னாட்சிக்கு அப்பால் இருக்க வேண்டும். வருங்கால இந்தியாவில் மாநிலங்களின் தன்னாட்சியை எவ்வாறேனும் வரையறைக்குள் வைக்க வேண்டிய மூன்று பொருள்கள் இவை எனக் கருதுகின்றேன்.

மாநில அரசுகளின் பொறுப்புகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்வி எழும்போது, மாநிலங்களில் எத்தகைய சட்ட மன்றங்களை அமைக்கப் போகிறீர்கள் என்பதைச் சார்ந்தே மாநிலச் சட்ட மன்றங்களின் பொறுப்பு பற்றிய கேள்வி அடங்கியுள்ளது என்பேன். மாநிலங்களில் நீங்கள் அமைக்கக் கருதும் சட்டமன்றங்கள், அந்தந்த மாநிலத்தின் அனைத்து மக்களையும் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாக இருக்கும். பார்வையாளர்கள் பார்வையிடுவதற்காக அரும்பொருள் காட்சியகங்களில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு காட்சிப் பொருள் மாதிரியாக வைக்கப்பட்டிருப்பது போன்று ஒவ்வொரு வகுப்பாருக்கும் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருக்குமானால், தங்களுடைய எதிர்கால நலன்களுக்கு ஆபத்து நேரப்போகிறது என்ற பயத்தில் சிறுபான்மையோரும் பிற வகுப்பினரும் தங்களுடைய செல்வாக்கை நிலைநாட்டக் கூடியவர்களாக இருப்பார்களானால், அத்தகையதொரு சட்டமன்றத்திற்கு மாநிலப் பொறுப்பினை முழுமையாக அறிமுகப்படுத்துவது என்ற கொள்கையை ஏற்பதில் கேடு எதுவும் நேராது. இது எனது முதலாவது கருத்து.

அனைத்து வகுப்பாருக்கும் முழுமையாகவும் போதுமான அளவிலும் சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவம் இருக்கும் என்பதனை ஒரு நிபந்தனையாக ஆக்கினால் தற்போது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தலைப்புகளை (Subjects) மக்களின் கட்டுப்பாட்டுக்கு மாற்றுவதற்கு நான் மறுப்பு தெரிவிக்க மாட்டேன்.

மாநில ஆட்சிப் பொறுப்பு கூட்டுத் தன்மையதாக இருக்க வேண்டுமா அல்லது தனித்ததாக இருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு எவ்விதத் தயக்கமுமின்றி அது கூட்டுத் தன்மையதாகத்தான் இருக்க வேண்டும் என்பேன். நான் மேலவை உறுப்பினராக இருந்து மாநிலங்களில் அமைச்சகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பார்த்திருக்கிறேன். அங்கு நான் பெற்ற அனுபவம் பெரும் வருத்தப்படக் கூடியது. அந்த அனுபவத்தைக்

கொண்டு அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ மேலவை உறுப்பினர்களாக இருந்தவர்கள், அமைச்சகங்கள் தாம் மேற்கொண்ட கொள்கைகளில் முழுமையான அல்லது ஒருமித்த கருத்துடையவையாக இல்லாமல் ஒருவகையில் கட்டுப்பாடில்லாத கூட்டுக் குழு போலவே செயல்படுவதைப் பார்த்திருப்பார்கள் என நம்புகின்றேன். அமைச்சகங்கள், அமைச்சர்களின் பணிகளில் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருந்து செயல்பட விருப்பம் இல்லாமல் தனித்தனி கலந்தாய்வுகள் இருந்தன. இதன் விளைவு என்ன? அமைச்சரவை ஒட்டு மொத்தமாகக் கூடி விவரங்களை முன்வைத்து விவாதித்து முடிவெடுத்த கொள்கைகளை மேலவையின் பார்வைக்கு வைத்த நிகழ்ச்சியே நடந்ததில்லை என்பதுதான் அந்த விளைவு. எதுவும் தொடர்பு இல்லாமல் அவை விட்டு விட்டுச் செயல் பட்டன. இந்தப் போக்கில் எதிர்காலத்தில் குளறுபடிகள் நடந்திட நமது பொறுப்பு இருக்கக் கூடாதெனக் கருதுகின்றேன்.

அடுத்ததாக, அமைச்சரவையில் சாதி அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிப்பது பற்றிய பிரச்சினைக்கு வருவோம். அமைச்சரவையில் வகுப்புவாரியான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று கூறப்படும் யோசனை எனக்கு ஏற்புடையதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் நடைமுறை உண்மைகளை நான் புறக்கணிப்பதாகவோ மறந்ததாகவோ ஆகாது. சொல்லப் போனால், அமைச்சரவையில் சிறுபான்மை வகுப்பினர் இடம் பெறவில்லையாயின், அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பாதிக்கும் அவர்களைப் பற்றிய நிர்வாக விஷயங்கள், தமது சொந்த சாதியாரின் நலன்கள் பற்றிய உணர்வுகளே ஓங்கிய நிலையிலுள்ள அமைச்சர்களின் கொள்கைகளால் பாதிக்கப்படக் கூடிய வாய்ப்புள்ளது என்பதை நன்கு உணர்ந்துள்ளேன்; இது என் மனதில் வேரூன்றியுள்ளது. இந்தத் தீங்கினை முறியடிப்பதற்கு ஏற்ற வகைகளை நாம் செய்ய வேண்டும். அரசியலமைப்பு மூலமும் சட்டப்படியும் சிறுபான்மையோருக்கு வேண்டிய பாதுகாப்புகள் அரசியலமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற வேண்டும். அப்போது சிறுபான்மையோர் நலன்கள் காப்பாற்றப்பட வழியேற்படுவதோடு, பெரும்பான்மை வகுப்பாரின் ஆதிக்கத்திலுள்ள அமைச்சரவையால் நமக்கு ஆபத்து விளையும் என்று பயப்படுவதும் இல்லாமல் போகும். அதன் பிறகு, சாதி அடிப்படையில் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு இடமிருக்காது.

முதலமைச்சர் யாராக இருந்த போதிலும் தன்னுடைய அமைச்சரவையில் முக்கியமான அனைத்துச் சிறுபான்மை வகுப்பாருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் அல்லது அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கும்படிச் செய்ய வேண்டும் என்று நான் விரும்பிய போதிலும், அமைச்சர் பதவி என்பது மிகவும் பொறுப்பு வாய்ந்தது என்பதை நாம்

மறப்பதற்கில்லை. ஓர் அமைச்சரின் பணி சிறுபான்மையோர் நலன்களைக் கவனித்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல; மாநிலம் முழுவதற்குமான நலன்களையும் பாதுகாப்பையும் கண்காணிக்க அவர் கடமைப்பட்டிருக்கிறார். இதற்கேற்ற தகுதியும் திறமையும் அவருக்கிருக்க வேண்டும்; வெறும் சாதிக் கண்ணோட்டத்தில் மட்டும் இதைப் பார்த்தல் கூடாது. இப்படித்தான் இந்தப் பிரச்சினையை நான் பார்க்கிறேன். எனவே, பெரும்பான்மை வகுப்பாரைச் சார்ந்த அமைச்சர்கள் சிறுபான்மை வகுப்பாரின் நலன்களைப் புறக்கணிக்காதவாறும், அவர்களுக்குப் பாதகமான செயலைச் செய்ய முடியாதவாறும் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலமாக ஒடுக்கப்பட்டோர் மற்றும் பிற்பட்டோர் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

அடுத்து, மாநில ஆளுநர், அவரது அமைச்சரவை ஆகியோருக்கு இடையே நிலவ வேண்டிய உறவு நிலையைப் பார்க்கும் போது, ஒன்று தெளிவாகப் புலப்படும். அதாவது முழுப் பொறுப்பாட்சியையும், கூட்டுப் பொறுப்பையும் கொண்ட அரசுக்கு வடிவம் கொடுக்கின்ற எந்த அரசியலமைப்புச் சட்டமும், நாட்டின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடும் அதிகாரத்தை ஆளுநருக்கு அளிக்க முடியாது.. கூட்டுப் பொறுப்பு, பொறுப்பாட்சி அரசு முறைக்கு இது நேர்மாறானது. அமைச்சரவை அன்றாட நிர்வாகத்தைக் கூட்டுப் பொறுப்பு அடிப்படையில் நடத்திச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

நெருக்கடி நிலை அதிகாரங்கள் ஆளுநர் பொறுப்பில் விடப்பட வேண்டும் என்று கூறப்படுவது பற்றிப் பார்ப்போம். இவ்வாறு சொல்லப்படுவதன் பொருள் என்ன என்று தெளிவாக நான் புரிந்து கொள்ள முடியாத நிலையில் உள்ளேன். அதாவது ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஏற்படும்போது ஆளுநர் சுலபமாக அமைச்சரவையைக் கலைத்து விட வேண்டும் என்பது இதன் பொருளா, அல்லது அதற்கு தொடர்பேதும் இல்லாமல் அமைச்சரவை எதிர்ப்பதையும் பொருட்படுத்தாமல் ஏதாவது சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் பிறப்பிக்க வேண்டும், சூழ்நிலையைச் சமாளிப்பதற்குத் தேவையானது என அவர் கருதும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பொருளா? என்பது தெரியவில்லை. நாட்டின் பொது நலனுக்கு உகந்த வகையில் செயல்படவில்லை என்று கருதும்போது அமைச்சரவையைக் கலைப்பதற்கு வரையறையற்ற, ஐயத்திற்கு இடமில்லாத, தன் விருப்பப்படியான அதிகாரம் ஆளுநருக்கு இருக்க வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அமைச்சரவை ஒன்று இல்லாமல் செயல்படுவதற்கு ஆளுநரை அனுமதிக்கும் ஒரு மாநிலத்தில் பொறுப்புள்ள அரசு என்பது எப்படி இருக்க முடியும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஒரு குறிப்பிட்ட நெருக்கடி நிலையில் ஒத்தியங்கும் ஒரு அமைச்சரவையை

ஆளுநர் பெற்றிருக்க வேண்டும் என்பது வேறு; ஒரு நெருக்கடி நேரும்போது மாநில ஆளுநர் அமைச்சரவையையே சுலபமாகப் புறக் கணிக்க வேண்டும் என்பது வேறு. இதனை நான் அறிந்து கொள்ள இயலாததால், இதனை வேறுபடுத்தித் தெளிவாக்க வேண்டும்.

ஆட்சிப் பணிகள் (Services) பற்றி ஒன்றைத் தெளிவாக்க விரும்புகின்றேன். மாநில அளவில் ஆட்சிப் பணிகளை ஒழுங்கு படுத்தும் அதிகாரம் அந்தந்த மாநிலங்களைச் சார்ந்ததாகவே இருக்க வேண்டும் என்பதையும், தாங்கள் விரும்பியவாறு ஆட்சிப் பணிகளை தத்தம் வருவாய்க்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு இந்தியமயமாக்கும் முழு உரிமை மாநில தன்னாட்சிக்கு உரியது என்பதையும் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் சுட்டிக் காட்ட விரும்புவதெல்லாம் இதுதான்: இந்தியர்கள் சாதி; வகுப்புணர்வு கொண்டவர்கள் என்பதை மறவேன். இந்தியர் கள் அனைவரும் தங்கள் பொறுப்பில் விடப்படும் ஆட்சிப் பணி களைத் தம் சாதி, வகுப்பு கண்ணோட்டத்துடன் பார்க்காமல் செயல்படும் நாள்வரும் என்று நாம் நம்புவோமாக. இது ஒரு நம்பிக்கைதான்; உண்மையல்ல. சட்டத்தை நடைமுறைப்படுத்து வதில் அவர்கள் ஒரு சாதியாருக்கும் மற்றொரு சாதியாருக்கும், ஒரு வகுப்பாருக்கும் இன்னொரு வகுப்பாருக்குமிடையே தம் மனம் போனபடி வேறுபாடு காட்டக் கூடியவர்கள் என்பதுதான் உண்மை. இது மறுக்க முடியாதது; இக்காரணத்தாலேயே நான் பெரிதும் இன்னல் அடைந்துள்ளேன். வருங்கால இந்திய அரசிய லமைப்பைப் பொறுத்தவரை என் அச்சமெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்கள் இன்றைக்கு உள்ள நிலையில், அவர்களிடையே கல்வி பரவலாக இல்லாத நிலையில், எடுத்துக்காட்டாகப் பம்பாய் மாநிலத்தில் ஒருவர் கூட அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர் இல்லை என்ற நிலையில்...

ஒரு உறுப்பினர்: ஒருவர் இருக்கிறார்.

டாக்டர் அம்பேத்கர்: ஆம், ஒருவர் இருக்கிறார். விதியை (rule) நியாயம் என்று காட்டுவதற்கு விலக்காக அவர் இருக் கிறார். அவரை அந்தப் பணியில் அமர்த்துவதற்கு எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா? பணியாளர்களை இப்படி இந்திய மயமாக்குவது எவ்வளவு கொடுமையில் போய்முடியும் என்று பயப்படுகின்றேன். எனவே என்னைப் பொறுத்த வரையில் இன்னும் கொஞ்ச காலத்திற்கு ஆட்சிப் பணிகளில் ஐரோப்பிய பணியாளர்களை வைத்திருப்பது இன்றியமையாதது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

நம்முடைய நலன்களைக் கருதிப் பார்க்கும்போது ஆட்சிப் பணியாளர்களை இந்திய மயமாக்குவதில் சிலர் விரும்புவது போல அவசரப்படாமல் படிப்படியாக இருக்க வேண்டும் என்பேன்.

நம்முடைய நோக்கில் நான் தெரிவிக்க விரும்பும் பொதுவான கருத்துக்கள் இவையே.

## மூன்றாவது அமர்வு—டிசம்பர் 8, 1930

*டாக்டர் அம்பேத்கர்:* நான் ஒரு கருத்து தெரிவிக்கலாமா? இப்போது நாம் விவாதித்துக் கொண்டு இருக்கும் பல்வேறு தலைப்புப் பொருள்களுடன் இணைத்து, மிக முக்கியமானதாக உள்ள இரண்டாவது சபைகள் பற்றி முறையாகவும், போதுமான அளவிற்கும் விவாதிக்க முடியாதென எனக்குத் தோன்றுகிறது. இப்பொருள் பற்றி விவாதிக்க, ஒரு நாள் தனியாக ஒதுக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயமாகும். சிறுபான்மை யினருக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் அல்லது இனங்கள் 1 மற்றும் 2-ல் கூறப்பட்டுள்ள இதர விஷயங்களுக்கும் இரண்டாவது சபை கள் பற்றி விவாதிப்பதற்குமிடையே எவ்விதமான தொடர்பும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இது ஒரு முக்கியமான விஷயம் என்று எனக்குத் தோன்றுகிறது. இப்பட்டியலில் ''சட்ட மன்ற அமைப்பு'' குறித்து நிகழ்ச்சி நிரல்பட்டியலில் எதையும் நான் காணமுடியவில்லை; 'சட்டமன்ற அமைப்பு' (Composition of Legislature) என்ற தலைப்பு ஒன்றைச் சேர்த்துக் கொள்வதா யிருந்தால், இப்பொருள் பற்றி முழுமையாக விவாதிக்கத் தகுந்த வாய்ப்புத் தரப்பட வேண்டும்.

*தலைவர்:* முழுமையான இப்பொருளை எப்படி நீங்கள் தனித்துப் பிரித்துக் கூறுகளாக்க முடியும்?

*டாக்டர் அம்பேத்கர்:* ''சிறுபான்மையினர்'' என்னும் விஷயத் திலிருந்து இரண்டாவது சபைகள் என்னும் விஷயத்தைத் தனியாக நிச்சயமாக பிரிக்கலாம்.

*தலைவர்:* முற்றிலுமாக அல்ல; இரண்டாவது சபை இருக்கப் போகிறதோ, இல்லையோ; இவ்விஷயம் இங்கு விவாதத்திற்கு வரும் இதர பொருள்களை அனேகமாக பாதிக்கின்றது—அதாவது நிர்வாகக் குழுவுக்கு எதிராக ஆளுநரின் அதிகாரங்கள், சட்ட மன்றத்தின் அதிகாரங்கள், இப்படி பல. இப்போது மேலும் நாம் தொடர்ந்து போவது நல்லது என நினைக்கிறேன். இறுதியில் விவாதம் போதுமானதாக இல்லை எனத் தெரிந்தால், இப் பொருள் பற்றி மட்டும் மேலும் ஒரு விவாதம் நடத்த நாம் ஏற்பாடு செய்ய முயற்சி செய்யலாம்.

## நான்காவது அமர்வு — டிசம்பர் 9, 1930

**டாக்டர் அம்பேத்கர்:* அப்படி இருக்கலாம். ஆனால், தற் சமயம் இவ்விரண்டு வகுப்பினர் பற்றி எடுத்துக் கொள்கிறேன்.

---

* துணைக்குழு எண் II (மாநில அரசியலமைப்பு) நடவடிக்கைகள். பக். 95-102.

ஏனெனில், அவர்கள் முக்கியத்துவம் உள்ள வகுப்பினர். அந்தக் கருத்தின் அடிப்படையில் அமையும் வாதம் எங்களுக்கு எப் போதும் சட்டம் ஒழுங்குத் துறையினை மாற்றிக் கொடுப்பதற்கு உறுதுணை புரியும் விதமாக இருக்குமென எனக்குத் தெரிய வில்லை. எனவே, ஒத்துக் கொள்ளக் கூடாத அல்லது தேர்ந் தெடுத்துக் கொள்ளக் கூடாத வாதமாக அது இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும், இந்து அல்லது முஸ்லீம் ஒருவர் சட்டம் ஒழுங்குத்துறை பொறுப்பினை ஏற்று இருந்தாலும், அவர் சார்ந்துள்ள அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தின் விருப்புக்கு அவர் பலியாகிவிடுவார் என்று மார்க்ஸ் பிரபு யூகிப்பதை நான் அறி வேன். நான் சமர்ப்பிப்பது இதுதான். இந்தியாவில் அரசியல் கட்சிகள், பொருளாதாரம் அல்லது அரசியல் அடிப்படையி லன்றி, மத அடிப்படையில் பிரிக்கப்படும் வகையில் அவைகளின் எதிர்காலம் அமையும் என்று யூகிக்கலாம். நான் நிலைமையை ஆராயும்போது, இந்தியாவின் வருங்கால அரசியலமைப்பின் நிர்வாகக் குழுவை மதமும் இனப்பாகுபாடுகளும் குறைந்த அள வில் பிரிக்கும். ஒரு இந்து அமைச்சர் சார்ந்த கட்சியிலும், அவரது தொண்டர்களிலும் பெரும்பாலான முஸ்லீம்கள் இருப்ப தையும், ஒரு முஸ்லீம் அமைச்சரின் குழுவில் இந்துக்கள் பெரு மளவில் இருப்பதையும் நாம் காணலாம். அவ்வாறு நடக்கு மானால்—அது நடக்கும் என்பது அனேகமாக உறுதியாகிவிட்டது என எண்ணுகிறேன்—சட்டம் ஒழுங்குத் துறையை, நிர்வாகம் செய்யும் ஒரு இந்து அமைச்சர், தான் பதவியிலிருக்கத் துணை புரியும் குழுவின் ஒரு பிரிவினரது உணர்வுகளைப் புண்படுத்து கின்ற வகையில் சட்டம் ஒழுங்கினை எப்படி நிர்வாகம் செய்ய முடியுமென என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, இந்தக் குறிப்பிட்ட அம்சம் பற்றி ஏற்படும் அச்சத்திற்கு அனேக மாக ஆதாரமில்லை.

இரண்டாவது விஷயம் அனேகமாக ஒத்துக் கொள்ளப்பட்ட தாகும். நான் கூறுவது இதுதான்: நிர்வாகக் குழு ஐக்கியப்பட்ட தாக இருப்பதாக மட்டுமல்லாமல், ஐக்கியப்பட்ட நிர்வாகக் குழு கூட்டுப் பொறுப்புள்ளதாகவும் இருக்க வேண்டும்; பொறுப்புகள் பிரிக்கப்பட்டதாக அல்ல. இந்த முடிவுகளை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால், இங்கு நடந்த விவாதத்தின் போது எழுந்த கருத்து வேறுபாடுகள் பெரும்பாலும் நிர்வாகக் குழு அமைப்பு பற்றியதாகும்; நிர்வாகக் குழு அமைப்பு சம்பந்தமாக, நாம் பரிசீலனை செய்வதற்கு மூன்று வேறுபட்ட கேள்விகள் எழுவதாக எனக்குத் தெரிகிறது. முதலாவது கேள்வி: செயலாக்கக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் இடம்பெற வேண் டுமா? அல்லது அலுவலர்கள், அலுவலில் சாராதவர்களும் மற்றும் சட்டமன்றத்திற்கு வெளியே உள்ளவர்களும் இடம் பெற வழி உண்டா? இரண்டாவது கேள்வி: சிறுபான்மை வகுப்பினர் இதில்

உறுப்பினர்களாக இருக்கலாமா? மூன்றாவது கேள்வி: கவர்ன ருக்கு அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் உண்டா? அல்லது அவர் (கவர்னர்) முதலமைச்சரை நியமிப்பார்; தனது அமைச்சரவை நண்பர்களை தேர்ந்தெடுக்கும் விஷயத்தை முதலமைச்சருக்கு விட்டு விடுவாரா?

இப்போது, இவ்வகை மூன்று கேள்விகளுக்கும் எனது பதில் ஆம் என்பதுதான். என்னைப் பொறுத்தவரை, அமைச் சரவையில் இடம் பெறுபவர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மடடும் தான் என்று ஏன் கடுமையாக வரையறை செய்து, கட்டுப்படுத்த வேண்டும் என்பது தெரியவில்லை. சட்டமன்றத்தில் பிரதிநிதித் துவம் பெற்ற எல்லா வகுப்பினருக்கும் முடிந்த அளவு செய லாக்கக் குழுவில் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு வகை செய்யும் சில நிபந்தனைகள் ஏன் இருக்கக் கூடாது என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மூன்றாவதாக தனது அமைச்ச ரவையை அமைப்பதில் கவர்னருக்குள்ள அதிகாரம் பற்றி— அமைச்சரவையை அமைப்பது அவருக்குள்ள தனிச் சிறப்புரிமை என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அமைச்சர் களைத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கு விருப்புரிமை அளிக்க வேண்டும். ஆனால் இம் மூன்று கேள்விகளுக்கும் நான் அளிக் கும் பதில் ஆம் என்று உறுதிப்படுத்துவதுதான் என்று நான் கூறும்போது—அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான் செயலாக்கக் குழுவில் உறுப்பினராகலாம் என்பது அவசியமல்ல; அமைச்சரவையில் பல்வேறு வகுப்பினர் பிரதிநிதித்துவம் பெறு வதற்குச் சில வழி வகைகள் இருக்க வேண்டும்; தனது அமைச்ச ரவையை அமைப்பதற்கு கவர்னர் அவர்களுக்குப் போதுமான விருப்புரிமை இருக்க வேண்டும்; நான் இவைகளை ஏற்றுக் கொள்ளும் போது, ஒரு தலையாய நிபந்தனைக்குட்பட்டு, இவை களை நான் கூறுகிறேன் எனத் தெரிவித்துக் கொள்கிறேன். நிர்வாகக் குழுவுக்கு கூட்டுப் பொறுப்புக் கொள்கை ஒரு கடமை யாக்கப்பட்டால், அந்நிய அம்சம் ஒன்று அமைச்சரவைக்குள் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக நிர்வாகக் குழுவுக்கு கூட்டுப் பொறுப்பு கொள்கை ஒரு கடமை யாக்கப்பட்டால், அந்நிய அம்சம் ஒன்று அமைச்சரவைக்குள் புகுத்தப்பட்டிருப்பினும், இப்போது அச்சப்படுவது போல், அது ஒரு கவலை தரும் காரணக் கூறாக இருக்காது என எண்ணு கிறேன். உதாரணமாக, சட்டப் பேரவையில் உறுப்பினர் அல்லாத ஒருவர் புதிதாக அமைச்சரவையில் சேர்ந்து, அமைச்சரவையுடன் கூட்டுப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டால், ஏன் அதை அனு மதிக்கக் கூடாது என்பதற்கான காரணம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒரு அமைச்சரவை மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அந்த அமைச்சரவை பதவி விலகும் போது அதிகாரம் சார்ந்த உறுப்பினர் அல்லது சட்ட மன்றத்தின் உறுப்பினரல்லாதவர் விலகாது இருப்பார்; அமைச்ச

ரவையின் இதர உறுப்பினர்கள் (அமைச்சர்) பதவி இழக்க வேண்டும். புதிய அமைச்சரவை அமைக்கப்படும்போது, அவர் (அலுவல்க உறுப்பினர்) மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப்படுவார். அவர் தொடர்ந்து கவுன்சிலில் இருப்பார். இத்தகைய நிலை உருவாகலாம் என்று சொல்லப்பட்டது. எல்லா வகையிலும் அது கொஞ்சம் தவறான கருத்து என்று எனக்குத் தெரிகிறது; ஏனெனில், சட்டமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவையில் இடம் பெறுபவர்கள் அவரை (அலுவலர் உறுப்பினர்) தங்களுடன் இணைத்துச் செல்லவும், அவருடைய நடவடிக்கைகளுக்கு பொறுப்பேற்கவும் அவர்களின் ஆலோசனையை அவர் ஏற்றுக் கொள்ளவும் தயாராக உள்ளனர். உதாரணமாக, பிரதம மந்திரி வெளியிலே இருந்து ஒருவரை தனது அமைச்சரவைக்குள் பத்திரமாகச் சேர்த்துக் கொள்ள முடியுமென்றால், அதே நேரத்தில் சட்டமன்றத்தின் நம்பிக்கையையும் பெற்றவராக இருக்க முடியுமென்றால், ஒரு முதலமைச்சருக்கு அளிக்கப்பட்ட அந்த உரிமையை வைத்துக் கொள்ள ஏன் தடுக்க வேண்டுமென எனக்குத் தெரியவில்லை.

அதே மாதிரி, உதாரணமாக தனது அமைச்சரவையில் பல்வேறு சிறுபான்மை வகுப்பினர்க்கு பிரதிநிதித்துவமளிக்க கவர்னர் அதிகாரம் பெற்றிருப்பது சாத்தியமானால், அத்துடன் அமைச்சரவையில் யார் இடம்பெற்றாலும், அவர் கூட்டுப்பொறுப்பினை இதர அமைச்சர்களுடன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது முற்றிலும் தெளிவாக்கப்பட்டால், இவ்வகையான ஏற்பாட்டை அனுமதிப்பதில் தீங்கு ஏதும் இல்லையென நான் பணிவுடன் கூறிக் கொள்கிறேன். எனவே, கவர்னர் தனது அமைச்சரவையை, அவர் விரும்பும் வகையில் அமைக்கும் அதிகாரத்தை அவர் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான் வலியுறுத்தப்பட வேண்டிய கருத்தாகும். அமைச்சரவை செயல்படும் போது, தனக்குள்ள கொள்கையினை மீறக்கூடாது—அதாவது கூட்டுப் பொறுப்பு அடிப்படையில் அது செயல்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருக்க வேண்டும்.

இப்போது அடுத்து நான் விவாதிப்பது இத்தகைய பயனை எவ்வாறு சிறப்பாக அடைய முடியும்; ஒரு பொறுப்புள்ள ஐக்கியமான நிர்வாகக் குழுவினை எப்படி அமைப்பது என்பதாகும். நமக்கு இரண்டு வழிகள் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அரசியலமைப்பிலேயே சட்டத்தினால் நிர்வாகக் குழுவின் தன்மையினை விளக்கி விடுவது ஒரு வழி; நிர்வாகக் குழுவை அமைப்பதை மரபு முறைக்கு விட்டுவிடுவது மற்றொரு வழியாகும். உங்கள் அனைவருக்கும் தெரியும் இவ்விரு வழிகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா டொமினியன் (தன்னாட்சி அரசு) களில் ஐக்கியத் தன்மையுள்ள பொறுப்பான அரசாங்கம் முற்றிலும்

மரபுகள் சார்ந்தது என நாம் அனைவரும் அறிவோம். கனடாவின் சட்டத்தில் அல்லது தென் ஆப்பிரிக்கச் சட்டங்களில் அல்லது ஆஸ்திரேலியச சட்டங்களில் "பொறுப்பாட்சி அரசாங்கம்" என்ற வார்த்தைகள் இடம்பெறவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். கனடா நாட்டின் சட்டத்தில் இது குறிப்பிடக் கூட வில்லை என்பது எனக்குப் பெரும் வியப்பாக இருந்தது; கவர்ன ருக்கு ஆலோசனை கூறும் அமைச்சர்கள் சட்ட மன்றத்தின் உறுப் பினர்களாக இருக்க வேண்டும்; உண்மையில் அவர்கள் அவ்வாறு தான் (உறுப்பினர்களாய்) உள்ளனர். ஆனால், அயர்லாந்து, மால்டா, ரொடிஷ்யா நாடுகளின் அரசியலமைப்புகளில் இப் பொருள் மரபுகளுக்கு விடப்படவில்லை; ஒரு வகையில் இது சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். அயர்லாந்தில் பிரதம அமைச்சர் அரசியலமைப்புச் சட்டத்தினால் உருவாக்கப்படுகிறார்; கூட்டுப் பொறுப்பும் சட்டத்தில் விளக்கப் பட்டுள்ளது.

எனவே, இரண்டில் ஒன்றை நமது விருப்புக்கேற்ப தேர்ந் தெடுத்துக் கொள்ள வேண்டியதுள்ளது என நான் நினைக்கிறேன்; அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது, இரண்டு யோசனைகளை வழி காட்டிக் கொள்ள வேண்டுமென நான் விழைகிறேன். ஒரு விஷயம் மரபுக்கு விட்டுவிடப்படும் போது, அந்த மரப் தவறான வழியில் செயலாற்றிருக்கச் சாத்தியமுண்டு; அது துஷ்பிரயோகம் பண்ணப்பட்டு இருக்கலாம்; அவ்வாறு துஷ்பிரயோகம் செய்த தற்கு தண்டனைகள் யெதுவுமில்லாதும் இருந்திருக்கலாம். இந்தியா போன்ற ஒரு நாட்டில் மரபுக்கு விஷயங்களை விட்டுவிடுவதால் ஏற்படும் ஆபத்து மிகப் பெரியது என்று தோன்றுகிறது. ஏனெ னில், அரசியலமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கும் கட்சிகள் இந்தியாவில் இல்லை. மேலும், தங்களுடைய பதவிகளை அமைச்சரவையில் த்க்க வைத்துக் கொள்வதில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசியலமைப்பு முறையாகச் செயல்படுகிறதா என்பதில் குறைந்த ஆர்வமுள்ள அமைச்சர்கள்தான் நமக்குக் கிடைப்பார்கள். மற்றொரு வகை யில் எங்கெங்கு விஷயங்களை சட்டம் வரையறுத்து விளக்கியிருக் கிறதோ, அந்தத் துறைகளில் எல்லாவித விருப்புரிமைகளை சட்டம் மூலம் நீக்கிவிட்டு, அவசியமாக விருப்புரிமையை முற்றி லும் கவர்னருக்கு அளிக்க வேண்டும். இனம், சாதித் தடைகள் நிறைந்த இந்தியா போன்ற ஒரு நாட்டில், அரசியல் தளம் கட்டுப் பாடற்ற ஒரு கடலாகும்; எனவே, கவர்னரிடம் போதுமான விருப் புரிமை (Discretion) இருக்கும் வகையில், செயல்முறையினை வகுத்திட வேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. எனவே, எனது திடமான ஆலோசனை இதுதான்: நிர்வாகக் குழுவின் கூட்டுப் பொறுப்பு, சட்டத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டும்; மற்றவை அனைத்தையும், கவர்னரின் விருப்புரிமைக்கு விட்டுவிட வேண் டும்; அவ்வாறு செய்வதால் இரண்டு நிபந்தனைகளையும் நாம்

நிறைவு செய்ததாகும்; எவ்வித பொறுப்பு இருந்தாலும், அது கூட்டுப் பொறுப்பாக இருக்க நாம் வகை செய்ததாகும்; அதே நேரத்தில், அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் பெற வேண்டிய வகுப்பினர் பிரதிநிதித்துவம் பெறும் வகையில் நிர்வாகக் குழு அமைவது பாதிக்கப்படக் கூடாது; அல்லது அவரது அமைச்சரவையில் அதிகார சார்பற்ற ஒருவர் சேர்க்கப்படும் அவசியத்தைப் பிரதம மந்திரி உணரும்போது, அதாவது நான் கூறுவது வெளியிலிருந்து ஒருவர் இடம்பெறுவது நிறைவேற்றப்படுகிறது. அவ்வாறு நாம் செய்தால், சட்டம் வற்புறுத்தினால், நிர்வாகக் குழு கூட்டுப் பொறுப்புள்ள ஒரு கூட்டுச் செயலாக்கக் குழுவாக இருக்கும். துஷ்பிரயோகப்படுத்தப்படுமென்ற அச்சமின்றி, கவர்னரின் விருப்பத்திற்கு இதர விஷயங்களை விட்டு விடலாமென நான் கருதுகிறேன்.

இப்போது பரிசீலனைக்காக நான் எடுத்துக் கொள்ளும் பொருள் கவர்னருக்கும், அவரது நிர்வாகக் குழுவுக்குமுள்ள அதிகாரங்கள். தற்போது கவர்னருக்கும், அமைச்சரவைக்குமுள்ள உறவுப் பற்றி பிரிவு 52-ன் உட்பிரிவு 3-ல் விளக்கப்பட்டுள்ளது என்பது நமக்குத் தெரியும். மாற்றப்பட்டுள்ள எல்லா விஷயங்களிலும் மற்றும் இப்போது மாற்றப்படும் எல்லா விஷயங்களிலும், எதுவும் ஒதுக்கி வைக்கப்படவில்லை (Reserved) — கவர்னர் தனது அமைச்சர்களின் ஆலோசனையின் பேரில் செயல்படுவார் என்று அந்தப் பிரிவு கூறுகிறது; தனது அமைச்சர்கள் அளிக்கும் ஆலோசனையிலிருந்து மாற்று அபிப்பிராயப்படுவதற்குப் போதுமான காரணமிருந்தால், அதற்கேற்ப அவர் நடவடிக்கை எடுக்கலாம்; மற்றபடி அமைச்சரின் ஆலோசனைப்படிதான் என்றும் மேலும் அப்பிரிவு ஒரு நிபந்தனைச் சேர்க்கிறது. அந்தப் பிரிவை உருவாக்கியவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்துகிறேன்— அதனை அவர்கள் பொறுப்புள்ள அரசினை வழங்கும் நல்லெண்ணத்துடன் அவ்வாறு அமைத்தார்கள்; இருப்பினும், தற்போதுள்ளபடி, பொறுப்புள்ள அரசிற்கு குதர்க்கமான அர்த்தம் தருகிறது; பொறுப்புள்ள அரசு என்பது வசதிக்கேற்ற பொருளாக இப்பிரிவு மாற்றுகிறது. அதாவது கவர்னருக்குப் பிடித்தமானதாக இருக்கும்போது ஒரு விஷயத்தை ஏற்றுக் கொண்டு, நிறைவேற்றுதல் ஆகும். ஆனால், நாம் உண்மையில் வேண்டுவது பொறுப்புள்ள அரசாங்கம், கடமைப் பொறுப்புள்ள அரசாங்கமாக இருக்க வேண்டுமென்பதுதான். கவர்னர் எந்தத் துறையிலும் எடுக்கும் நடவடிக்கைக்குச் சபையின் நம்பிக்கையினைப் பெற்றுள்ள அமைச்சரவையின் ஆதரவு இருந்தால் அதுவே பொறுப்பாட்சி அரசாங்கம் என்பதற்கு பொருளாகும். அது அடிப்படையான ஒரு கருத்து; அதனை நாம் அலட்சியம் செய்ய முடியாது. கவர்னர் எப்போதும் தனது அமைச்சரவையின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென அர்த்தமல்ல; அமைச்சரவையை அவர் கலைத்துவிடவும் செய்யலாம்; அவர்களின் (அமைச்சரவை

யின்) ஆலோசனை அவரைக் கட்டுப்படுத்தாது என்றும் சொல்லலாம்; ஆனால், கவர்னர் தனது அமைச்சரவையின் கருத்திற்கு மாறுபட விரும்பினால், தனது சுய முயற்சியின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது அவரது கடமையல்ல; ஆனால், இவருடைய நடவடிக்கையை ஆதரிக்கும் இதர அமைச்சர்களை அடையாளம் கண்டு கொள்ளவேண்டும். அவ்வாறு அவர் செய்வதால், அதன் பொருள் இதுதான்: எல்லாக் கால கட்டத்திலும் கவர்னர் நடவடிக்கை எடுக்கும் போது, சபையின் நம்பிக்கையினைப் பெற்றுள்ள அமைச்சர்களின் கருத்திற்கேற்ப அவர் நடவடிக்கை எடுக்கிறார். எனவே, சட்டத்தில் இதற்கு மாறாக வகை செய்யப் பட்டு இருந்தாலொழிய, அமைச்சர்களின் ஆலோசனையின் பேரில் செய்யப்படும் காரியங்கள்—இவை பற்றி சற்று விரிவாகப் பின்னர் கூறுகிறேன்—நடைபெறலாம் என்னும் கருத்தினைத் தெளிவுபடுத்தும் வகையில் 52-வது பிரிவு திருத்தப்பட வேண்டுமென்பது எனது பணிவான வேண்டுகோள்.

சில விஷயங்களில் கவர்னர் அவர்களுக்குத் தலைமை அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். அத்தகைய அதிகாரங்கள் காரணமாக அவரது அமைச்சர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை; சுதந்திரமாகச் செயல்பட உரிமை உண்டு. இத்தகைய அதிகாரங்களை வழங்குவது அவசியமாகும் என்பதை நான் ஒத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். சைமன் கமிஷன் அறிக்கை தொகுதி 2, பக்கம் 36-ல் உள்ள பத்தி 50-ல் அத்தகைய விஷயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. முதலாவதாக, மாநிலத்தின் பாதுகாப்பையும், அமைதியையும் பாதுகாக்க அவருக்கு (கவர்னர்) எதனையும் ரத்துச் செய்யும் அதிகாரங்கள் வேண்டும். இரண்டாவதாக, இதர மக்கள் பிரிவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சமுதாயத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் பிரிவுகளுக்கு ஏற்படும் இடர் பாடுகளைத் தடுக்க அவருக்கு எதையும் ரத்துச் செய்யும் அதிகாரங்கள் வேண்டும்; கடைசியாக, முழு நிர்வாகக் குழுவின் பொறுப்போடு, சில விஷயங்களில் கவர்னர் தனக்கெனச் சிறப்புப் பொறுப்புகளை மேற்கொண்டு இருக்கிறார் என்றும் அது குறிப்பிடுகிறது. இத்தகைய விஷயங்களிலும் (கவர்னருக்கு) ரத்துச் செய்யும் அதிகாரங்கள் இருக்க வேண்டுமென அப்பிரிவு கூறுகிறது.

இவ்வினங்கள் குறித்து முதலாவதாக நான் பணிவோடு கூறுவது: மாநிலத்தின் சமாதானம், அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதுகாக்க தனது அமைச்சர்களின் முடிவை நிராகரிக்கும் அதிகாரத்தை கவர்னர் அவர்களுக்குக் கொடுத்தால், மாநில அரசாங்கத்தின் பெரும்பகுதி அதிகாரத்தை நீங்கள் எடுத்துக் கொள்வதாக எனக்குத் தோன்றுகிறது. பார்க்கப்போனால், நாம் முயற்சி செய்வதெல்லாம் மாநிலத்தின் சமாதானம், பாதுகாப்பு, அமைதி உள்பட எல்லா விஷயங்களிலும் கவர்னர்

அவர்கள், தனது அமைச்சர்களின் ஆலோசனையைப் பின்பற்றியே மாநிலங்களை ஆட்சி செய்ய வேண்டுமென்பதுதான்; அவர்களின் ஆலோசனைக்கு எதிராக செயல்பட கவர்னர் அவர்களுக்கு அதிகாரங்களை நீங்கள் ஒதுக்கித் தந்தால், பொறுப்புள்ள அரசாங் கத்தின் அதிகாரங்களை பெரிய அளவில் செல்லத் தகாதவை களாக நீங்கள் ஆக்குகிறீர்கள் என எனக்குத் தோன்றுகிறது. எனவே முழு நிர்வாக முறையினையும் அரித்துத் தின்று விடும் இந்தப் பெரிய சூத்திரம் வலுவிழந்த வகையில் விவரிக்கப்பட சில வழிவகைகளைக் காண வேண்டும். அவ்வாறு செய்யாமல் இவ் வகையிலான விஷயத்தில் கவர்னர் அவர்களுக்கு எதையும் ரத்து செய்யும் அதிகாரங்களை வழங்குவதை நான் விரும்பவில்லை.

இரண்டாவது கேள்வி பற்றி: அதாவது இதர மக்கள் பிரிவு களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சமுதாயத்தின் ஒரு பிரிவு மக்களுக்கு குந்தகம் ஏற்படுவது குறித்து எனது கருத்து இதுதான்: தனியாக உள்ள பிரச்சினை இது. இருப்பினும், எந்த ஒரு குறிப் பிட்ட சமுதாயத்தின் நலன்களைப் பாதிக்கும் விஷயங்கள் சட்டத் தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்பதுதான் எனது விருப்பம். கவர்னர் அவர்களுக்குகந்த, சொந்த விருப்பத்திற்கு விட்டு விடக் கூடாது. இந்த நல்ல காரணத்தின் அடிப்படையில் தான் இதை நான் சொல்லுகிறேன். சட்டமன்றத்தில் பெரும் பான்மையினரின் ஆதரவு பெற்றுள்ள அமைச்சரவையுடன் தொடர்ந்து நல்லுறவு கொள்ள வேண்டியுள்ளது. அமைச்சரவைக்கு உடன்பாடு இல்லாத காரியங்களில் எக்காலத்திலும் கவர்னர் செயல்படக் கூடாது; பெருமளவிற்கு நட்பு உணர்வு இருதரப் பிலும் நிலவ வேண்டும். தான் முக்கியமெனக் கருதாத ஒரு சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் பொருட்டு, சபையின் பெரும் பான்மையினரின் ஆதரவு பெற்ற ஒரு அமைச்சரவையுடன் எப் போதும் சச்சரவு செய்து கொள்ளுமளவிற்குக் குறுகிய உள்ளம் படைத்தவராக கவர்னர் இருப்பார் என நான் எண்ணவில்லை. எனினும், அப்பிரிவில், சொல்லப்பட்ட ஆலோசனையை நான் ஒத்துக் கொள்கிறேன். அப்பிரிவில் கூறப்பட்டதைக் காட்டிலும் மிகவும் உறுதியான முறையில் சிறுபான்மையினர் நலன் பாது காக்கப்பட வேண்டுமென்பதையே நான் விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை இப்பிரிவை நீக்கிவிடவே விரும்புகிறேன்.

இதர பொருள்கள் 3, 4 மற்றும் 5 பற்றிக் கூறும் போது, இத்தகைய விஷயங்களில் கவர்னர் அவர்களுக்குத் தேவையான அதிகாரங்கள் இருக்க வேண்டும்; ஏனெனில் இத்தகைய விஷயங் களை நிர்வாகம் செய்வதில் கவ்ர்னர் தன் சொந்த முறையில் பொறுப்பேற்கிறார்.

அடுத்த படியாக ஆளுநரின் அதிகாரமும் சட்ட மன்றத்தின் அதிகாரமும் என்னும் பொருள் பற்றி எனது கருத்துக்களை மூன்று தலைப்புகளின் கீழ் பிரித்துக் கொள்வேன். முதலாவதாக

வரவு செலவு (பட்ஜெட்) சட்டம்; இரண்டாவதாக, இதர சாதாரண துறைகள் பற்றிய சட்டம், மூன்றாவதாக அவசரச் சட்டம். ஒதுக்கப்பட்ட பொருள்கள் பற்றிச் சான்றளிக்கும் அதிகாரம் ஆளுநர் அவர்களுக்கு உண்டு; அரசின்மை (anarchy) ஒழிக்கப்படும் போது, அதுவும் கட்டாயம் மறைந்துவிடும். இரண்டாவது, மாநிலத்தின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும் ஆகும் செலவினை அங்கீகரிக்க ஆளுநர் அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. அமைதி, சமாதானம் பற்றிய விஷயங்களைத் தீர்த்து வைக்கும் பொறுப்பினை, பொறுப்பாட்சி அமைச்சரவையிடம் கொடுத்துவிடப் போகிறீர்கள். எனவே, மாநிலத்தின் பாதுகாப்பு, அமைதி சம்பந்தப்பட்ட செலவினத்தை அங்கீகரிக்கும் அதிகாரம், கவர்னர் அவர்கள் வைத்திருக்கக் கூடாது என்று கருதுகிறேன். அடுத்து; இரண்டு வகையான மசோதாக்களுக்குச் சான்றளிக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு. சபையில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு மசோதா விவாதிக்கக் கூடாது எனச் சான்றளிக்கலாம்; சாதாரணமாகச் சட்டமன்றம் ஒரு மசோதாவை நிறைவேற்ற விரும்பாவிட்டாலும், மாநிலத்தின் பாதுகாப்பு, அமைதியைப் பாதுகாப்பதற்கு ஒரு மசோதா நிறைவேற வேண்டுமெனக் கூறி, அதற்குச் சான்றளிக்கும் அதிகாரமும் ஆளுநருக்கு உண்டு. இவ்விரு அதிகாரங்களும் நீக்கப்பட்ட வேண்டுமென நான் விரும்புகிறேன். எதிர்கால அரசியலமைப்பில் அவை தேவையில்லை.

முன் அனுமதி வழங்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு. சபையில் விவாதிக்கப்படுவதற்கு முன்பே சில விஷயங்களுக்கு ஆளுநர் அனுமதி வழங்குவார். எனது பார்வையில், இந்த அதிகாரமும் நீக்கப்பட வேண்டும்.

*சர் அகமது சையது கான் :* பாரபட்சமான சட்டமா?

*டாக்டர் அம்பேத்கர் :* சட்டம் அதனை விவரிக்க வேண்டும். அதனை ஆளுநர் அவர்களுக்கு விட்டு விட விரும்பவில்லை. தடை உரிமை அதிகாரம் இருக்க வேண்டும். கீழ்ச்சபை தேவையில்லை எனக் கருதும் மாநிலங்களில் கீழ்ச்சபை இருக்காத காரணத்தால், ஆளுநர் அவர்களுக்கு தடை உரிமை அதிகாரம் இருப்பது மிகவும் அவசியமாகும். மறு பரிசீலனை செய்யுமாறு ஒரு மசோதாவைச் சபைக்குத் திருப்பி அனுப்புகின்ற அதிகாரமும் இப்போது ஆளுநருக்கு உண்டு. இது ஒரு முக்கியமான பயனுள்ள அதிகாரம். பல தன்னாட்சி உரிமை குடியேற்ற நாடுகளின் அரசியலமைப்பில், இந்த அதிகாரம் உள்ளது. இதனை அவர் (ஆளுநர்) வைத்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். கவர்னர்-ஜெனரல் அவர்களின் பரிசீலனைக்காக ஒரு மசோதாவை நிறுத்தி வைக்கும் அதிகாரமும் ஆளுநர் அவர்களுக்குண்டு. அவர் அவ்வாறு செயல்படும் விஷயங்கள் யாவை என்பது பற்றியும் சட்டம் விளக்கம் கூறி இருக்கிறது. மாநில அரசாங்கங்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்குமுள்ள உறவுகள் பற்றி நாம் பரிசீலனை செய்யும் போது, இந்த

விஷயத்தை மிகவும் பொறுமையுடன் பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால் இது குறித்து கருத்துக் கூற ஆசைப்படுகிறேன். மாநில அரசியலமைப்பிற்கு மாற்றப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள், மத்திய அரசாங்கத்தின் தலையீடு கூடுமான வரையில் இல்லாதவாறு, மாநில அரசு சுதந்திரமாகச் செயல்படும் வகையில், மாநில அரசியலமைப்பினை உருவாக்கிட நாம் முயற்சி செய்ய வேண்டும். மசோதாக்களை நிறுத்தி வைத்துக் கொண்டு, சட்டம் இயற்றும் முறையிலோ அல்லது நிர்வாக முறையிலோ மத்திய அரசாங்கம் இடையறாத வகையில் தடையீடு செய்வதற்கு இடமளிக்காத ஒரு அரசியலமைப்பினை நாம் அமைக்க வேண்டும்.

சட்டம் ஒழுங்கினைப் பாதுகாத்தல், சிறுபான்மையினர் நலம் ஆகிய விஷயங்கள் பற்றி நான் ஏற்கனவே கூறியுள்ளேன்; சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய விஷயம் மாற்றப்பட வேண்டும். ஆனால், நான் சொல்லுவதற்கு என்ன மதிப்பு இருப்பினும், நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில், சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்படும் நேரத்தில் அமைச்சரவையின் ஆலோசனை பெறாமலே காவல் துறை அதிகாரிகளை நியமிக்கவும், மாற்றவும், ஆளுநர் அவர்கள் இறுதியாக ஆணையிட அவருக்கு அதிகாரம் வேண்டும் என்று நான் கருத்துத் தெரிவிக்கிறேன். அது மிகவும் தேவை; இன்றியமையாததாகும் என்பது எனது கருத்து.

*சர் கவாஸ்ஜி ஜெஹாங்கீர்:* நெருக்கடி காலத்தில் மட்டுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம்; ஆனால், வேறு விஷயங்களில் அல்ல.

*திரு. பால்:* சாதாரண காலங்களில் அல்ல. கலவரம் உண்மையிலே நடந்து கொண்டு இருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட அல்லது மற்றொரு சமுதாயத்தினர் நலனுக்கேற்ப அதிகாரிகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்படாமல் இருப்பதற்கு, ஆளுநர் அவர்கள் பாரபட்சமற்ற அதிகாரிக்கு, இறுதி ஆணை அளிக்கும் அதிகாரம் மிகவும் அவசியம் வேண்டும். சட்டம் மற்றும் ஒழுங்கு நிர்வாகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அது அவருக்குப் போதுமான அதிகாரம் அளிக்கிறது.

சிறுபான்மையினர் பற்றிய கேள்வி குறித்து (இங்கு) பேசிய சிலர், மேல்சபை (Second Chamber) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்குமெனக் கூறினர். மேல் சபைக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குமுள்ள உறவு பற்றிய நிலை குறித்து, நான் கவனமாகப் பரிசீலனை செய்யவில்லை என்று என்னுடைய நண்பர் மிஸ்டர் ஜூட் குறை கூறினார். நான் இது பற்றி மிகவும் கவனமாகப் பரிசீலித்து இருக்கிறேன் என்று எனது நண்பருக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். சிறுபான்மையினருக்கு மேல் சபைகள் பாதுகாப்பளிப்பதற்குப் பதிலாக, உண்மையிலேயே அவர்களின் கழுத்தில்

கட்டப்பட்ட மைல்கற்களாக இருக்கும் என்ற கருத்தினைக் கொண்டுள்ள எனது நண்பர் திரு. பால் அவர்களுடன் எனக்கு முழு உடன்பாடு உண்டு.

இதற்கு முன்னர் ஒரு பொருள் பற்றி நான் பேசவில்லை. இப்போது அது பற்றி சுருக்கமாக இப்போது குறிப்பிட விரும்புகிறேன். அதாவது ஆளுநர் அவர்களுக்கும் அவருடைய அமைச்சரவைக்குமுள்ள உறவு பற்றிய விஷயம். உரிமையின் அடிப்படையில் அவர் (கவர்னர் அவர்கள்) அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கலாமா? அல்லது தலைமை தாங்கக் கூடாதா? இங்கு (இங்கிலாந்து) நாட்டில் அமைச்சரவைக் கூட்டங்களில் அரசர் கலந்து கொள்வதில்லை. இந்த முறை அங்கு தேவையா? அப்படியானால், அமைச்சரவை எடுத்த முடிவுகள், தீர்மானங்கள் பற்றிக் கவர்னர் அவர்களுக்குத் தெரியப்படுத்தும் தகவல் தொடர்பு முறை என்ன? இது பற்றி அக்கேள்வி எழுகிறதா என்பது எனக்குத் தெரியாது. அப்படி கேள்வி எழாத பட்சத்தில், அது பற்றி விவாதித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

*தலைவர் :* பொதுவாக, இக்கேள்வி முழுவதும் பற்றி நாம் விவாதித்து இருக்கிறோம். எனவே, நீங்கள் தொடர்ந்து பேச விரும்பினால், எனக்கு ஆட்சேபனை இல்லை.

*டாக்டர் அம்பேத்கர் :* அது தொடர்பாக ஒன்றைக் கூற நான் விரும்புகிறேன். ஒரு ஐ.சி.எஸ். அதிகாரி அந்தஸ்தில் அமைச்சரவை செயலாளராக நியமிக்கலாமென சைமன் கமிஷன் ஆலோசனை கூறியது. ஆளுநர் அவர்களுக்கு அமைச்சரவையின் தொடர்பு அதிகாரியாக அவர் செயல்படுவார். இந்த நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள வழக்கத்தின் அடிப்படையில், இந்த ஆலோசனையைத் தெரிவிப்பதாக கமிஷன் கூறுகிறது. அதாவது, அமைச்சரவை தற்போது ஒரு செயலாளரை வைத்துள்ளது. ஆனால் முன்பு இப்பதவி இல்லை. இருப்பினும், நான் அமைச்சரவை ஒரு செயலாளரை வைத்திருக்க வேண்டுமெனக் கூறுவது ஒரு விஷயம்; அமைச்சர்களையும் மீறி, செயலாளர் ஆளுநர் அவர்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளலாம் என்று கூறுவது மற்றொரு விஷயம். அனேகமாக ஒரு செயலாளரை நியமிக்கும் பழக்கம் இந்த நாட்டில் நடைமுறையிலுள்ளது. இந்த நாட்டில் அமைச்சர்களுக்குத் தெரியாமல் பிரதம மந்திரிக்குத் தெரியாமல் அமைச்சரவை செயலாளர் நேரிடையாக மாட்சிமை மிகு அரசருடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு எந்த அமைச்சரவையும் அல்லது பிரதம மந்திரியும் இணக்கம் தெரிவிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. அது சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாகும். இங்கிலாந்தின் அமைச்சரவை தனது வரலாற்றில் ஒரு மாட்சிமைமிகு அரசரின் பக்கத்திலிருப்பவர்கள் அமைச்சரவையின் குணங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனத் தனது வரலாற்றில் அமைச்சரவை வலியுறுத்தி வந்துள்ளது

என்பதை நாம் அறிவோம். மகராணியைச் சந்திக்கும் சபையின் பெண் உறுப்பினர்கள் (Ladies of the Chamber) கூட பிரதம மந்திரியாலும், அமைச்சரவையாலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற வழக்கம் ஏற்படும் வரை இம்முறை நடைமுறைக்கு வந்துள்ளதை நாம் அறிவோம். ஆலோசனையாக கூறப்பட்ட இக்கூற்று, அனேகமாக முடியாத விஷயமாக எனக்குத் தெரிகிறது. கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் செயல்படும் எந்த அமைச்சரவையும், ஒரு அமைச்சரவை செயலாளர் அதனுடன் இணைக்கப்படுவதற்கு இசைவு தரும் என நாம் நினைக்கவில்லை.

வேறு வகையில், பார்த்தால், அமைச்சரவை தனது கொள்கையினை விவாதித்துக் கொண்டிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் அதிகாரத்தை ஆளுநர் அவர்களுக்குத் தந்தால், அவ்வாறு ஆளுநர் அவர்களுக்குத் தந்தால், அவ்வாறு ஆளுநர் செய்வது செயல்படுத்தக் கூடியதா என்பது குறித்து எனக்கு சந்தேகமாக உள்ளது. ஏனெனில், அமைச்சரவை தனது முடிவுகளை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவிக்கலாம்; தெரிவிக்க வேண்டும். அத்தகைய முடிவுகளை மேற்கொள்வதற்கான காரணங்கள் என்ன என்பதை கவர்னர் அவர்களுக்கு வெளிப்படுத்திட அமைச்சரவை இணங்கும் என்று நான் நினைக்கவில்லை. காரணங்கள் மிகவும் குறிப்பிடப்பட்டவைகளாகவும், வெளிப்படையாகக் கூற முடியாதவைகளாகவும் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட முடிவுக்கு அமைச்சரவை ஏன் வந்தது என்பதற்கான காரணங்களை ஆளுநர் அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்க மிக்கக் கவனத்துடன் பாதுகாக்கும். அமைச்சரவை செய்ததை மாறும் பிரம்மாண்டமான அதிகாரம் ஆளுநர் அவர்களின் கையில் உள்ளது என்பதுதான் அதற்கான விளக்கம். அவர் சபையைக் கலைத்துவிடுமாறு அமைச்சரவை கூறும் ஆலோசனை ஏற்க வேண்டியதில்லை. சட்டத்தில் இதனைச் சேர்ப்பதற்குப் பதிலாக அதிகார ஆவணம் மூலம் செய்யலாம். ஆளுநர் அவர்கள் விரும்பினால் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அது வகை செய்யும்; ஆனால், அவர் கலந்து கொள்வது கடமையாகக் கருதப்பட மாட்டாது. வேறு வகையில், அமைச்சரவை தனது கூட்டத்தில் செய்த எல்லா பரிந்துரைகளையும் ஆளுநர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அமைச்சரவையின் கடமை எனச் செய்ய வேண்டும். இவ்விஷயம் பற்றி நான் சொல்ல விரும்புவது இதுதான்.

★ ★ ★ ★ ★

*டாக்டர் அம்பேத்கர்:* மேல்சபை முதலாவது அமைக்கப்படக் கூடாது; அதனை ஒழித்துவிடுவதை ஒருவகைப் பெரும்பான்மை ஆதரவுபெற்ற அரசியலமைப்பு தீர்மானத்திற்கு விட்டுவிட வேண்டும் என்ற கூற்று குறித்து ஒன்று சொல்ல விரும்புகிறோம். நாம் கூறும் யோசனை இதுதான்; சில மாநிலங்களில் விருப்புரிமைக்கு இந்த விஷயம் விடப்பட வேண்டிய சூழ்நிலை நிலவினால், மேல்சபை வேண்டுமென்று கோரி முதலாவதாக மாநிலச் சட்டமன்றம்

தனது விருப்பத்தை ஒரு தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும். அதற்குப் பின்னர், மேல்சபை அமைக்கப்பட வேண்டும். மாநில சட்டமன்றத்தின் மீது முதலில் இது திணிக்கப்படக் கூடாது.

## ஐந்தாம் அமர்வு—டிசம்பர் 15, 1930

*டாக்டர் அம்பேத்கர்: கோமகனரர் (Marquess) அவர்கள் கொண்டுவந்த சட்டத் திருத்தம் குறித்து ஓரிரு குறிப்புரை களைக் கூற விரும்புகிறேன். அவர் இந்த நிலையை மேற்கொண் டது முற்றிலும் தருக்க ரீதியானது எனத் தோன்றுகின்றது. இந்த அறிக்கையில் சில உரிமைகளை அளிக்க இருக்கின்றோம். சட்ட மேலவைகளில் சிறுபான்மையோர் நியமனம் மூலம் பிரதிநிதித் துவம் பெறலாம். அதே வேளையில் அனைத்துச் சிறுபான்மை யோருக்கும் பிறவகை நலக் குழுவினருக்கும் தமது அமைச்சரவை யில் பிரதிநிதித்துவம் இருக்குமாறு பார்த்துக் கொள்வது ஆளு நரின் கடமைப்பொறுப்பாக இருக்கும் வகையில் சட்டப்படி வழி வகைகள் செய்ய இருக்கின்றோம். அமைச்சரவை அமைக்கும் போது சில முக்கிய பிரிவினருக்குப் பிரதிநிதித்துவம் இருக்குமாறு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள ஆளுநருக்கு உரிமை இருக் கும் வகையில் வழி வகுத்தாலொழிய நாம் முற்றிலும் அறிவுக் கொவ்வாத நிலைமையையே தோற்றுவிக்கின்றோம் என எனக்குத் தோன்றுகின்றது. ஒன்று நீங்கள் சட்ட மேலவைகளில் நியமனத் திற்கே இடமில்லை என்றும் எத்தகைய குழுவினராக இருந்த போதிலும் அவர்களின் முக்கியத்துவம் பற்றிக் கவலையில்லாமல் தேர்தல் மூலமே வெற்றி பெற்று சட்ட மேலவையில் இடம்பெற வேண்டும் என்று வழிவகை செய்ய வேண்டும் அல்லது நியமனம் இருக்குமென்றால், அவ்வாறு நியமனம் பெற்ற உறுப்பினர் கூட்டுப் பொறுப்பு அடிப்படையில் சக அமைச்சர்கள் அவரோடு இணைந்து செயல்படுவதற்கு உடன்படுவார்களானால் அமைச் சரவையில் இடம்பெற உரிமை பெற்றிருக்க வேண்டும். இந்த இரண்டில் ஏதாவதொன்றினைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

அடுத்து இந்த வரிசையில் அமர்ந்துள்ள நண்பர்கள், ஒரு நியமன உறுப்பினர் அமைச்சரவையில் இடம்பெறலாம் என்றோ அல்லது குறைந்தபட்சம் அப்படி இடம்பெறுவதற்குத் தடை இருக்க லாகாது என்றோ கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டோ மானால் அது மக்கள் பிரதிநிதித்துவப் பொறுப்பு நெறிமுறைக்கு எதிரானது எனத் தெரிவித்திருக்கிறார்கள். இதனை உண்மை யாகவே நான் புரிந்து கொள்ள இயலவில்லை. மக்கள் பிரதி நிதித்துவ பொறுப்பு நெறிக்கு எதிரானது என்று கூறும் இந்தப் பொது மக்கள் நியமன உறுப்பினர்களின் வாக்குகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளனர். அறிக்கையை உள்ளவாறே ஏற்றுக் கொள்கிறேன். மேலும் எத்தகைய திருத்தங்கள் வரும்

* அதே, பக்கம் 156-57.

என்று நானறியேன். இப்போது உள்ளவாறே இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டோமானால், அதன்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களும் சட்ட மேலவைகளில் இடம்பெற்றிருப்பார்கள். அவர்கள் அளிக்கும் வாக்குகள் முறைகேடானது என்பதுதான் இந்தப் பெருமக்களின் நிலையா? வாக்களிப்பின் மூலம் தேர்ந் தெடுக்கப்பட்டு வந்துள்ள அவையின் உறுப்பினர்கள் அமைச் சரவையை அமைக்கும் போது சட்ட மேலவையிலுள்ள நியமன உறுப்பினர்களின் வாக்குகளைப் பெறுவது செல்லத்தக்கதானால், அத்தகைய வாக்குகள் ஒரு அரசாங்கத்தின் கொள்கைக்கு நியாய மாகவே ஏற்றதானால் அந்த நிலையில் நியமனம் செய்யப்பட்ட பிரிவைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் அமைச்சரவையில் இடம்பெற முடியாது என்பது எப்படி என எனக்குத் தோன்றவில்லை. உண்மையாகவே இதனை நான் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நியமன உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்றுத் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்திக் கொள்வது மட்டும் சரி என்றால் நியமன உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம்பெறுவதற்கு மட்டும் ஏன் எதிர்ப்பு இருக்க வேண்டும் என்பதுதான் எனக்கு விளங்க வில்லை என்கின்றேன். எனவேதான் பெருந்தகை கோமகனார் அவர்கள் மேற்கொண்ட நிலை முற்றிலும் சரியானது என்றேன். பெருந்தகை கோமகனார் அவர்கள் தம் திருத்தத்தில் தெரிவித் துள்ளவாறு வழிவகைகள் செய்வது அல்லது சட்ட மேலவைகளில் நியமன உறுப்பினர்களே இருக்கக் கூடாது என்று பின்னர் திருத் தம் கொண்டுவர இருப்பதாக என் நண்பர்கள் தெரிவிக்கும் முன் மொழிவு ஆகிய இரண்டில் ஒன்றை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம் எனத் தோன்றுகிறது. என்னைப் பொறுத்த வரையில் நியமன உறுப்பினர்கள் என்ற அடையாளம் இல்லாத வகையில் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களையே கொண்டதாகச் சட்ட மேலவை இருக்க வேண்டும் என் கிறேன். இந்த நோக்கில் பெருந்தகை (கோமகனார்) கொண்டு வந்துள்ள திருத்தத்திற்கு நான் சாதகமாக இல்லை. ஆனால் இந்தக் குழுவிலோ அல்லது பின்னர் ஏதாவதொரு கட்டத்திலோ நியமனங்கள் செய்ய நேர்ந்தால் அப்போது நான் பெருந்தகை கோமகனார் கொண்டு வந்த திருத்தத்தையே ஆதரிக்க நேரும்.

*திவான் பகதூர் இராமச்சந்திர ராவ் :* இப்போது நான் கேட்ட இந்தப் பேச்சு எனக்கு வியப்பளிக்கிறது என்பதைத் தெரிவிக் கின்றேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* இருக்கலாம்; எப்படியும் ஏதாவதொரு வழியைத்தான் நாம் மேற்கொள்ள முடியும்.

*திவான் பகதூர் இராமச்சந்திர ராவ் :* தற்போதுள்ள முறைப்படியும் நியமன உறுப்பினர்கள் அமைச்சர்களாக முடி யாது என்பதனை நன்கு அறிந்திருக்கின்றார். அந்தந்தச் சட்ட மன்றங்களில் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களாக இருந்தாலொழிய

ஆறு மாதங்களுக்கு மேல் எவரும் அமைச்சர் பொறுப்பில் இருக்க முடியாது என்று பிரிவு 52 தெளிவாகக் கூறுகிறது.

*டாக்டர் அம்பேத்கர் :* அது விரைவாக மாறி வருகிறது.

★ ★ ★ ★ ★

## சட்ட மன்றங்களில் உறுப்பினர்கள் விரும்பித் தேர்ந்தெடுத்து இணைத்துக் கொள்வதற்கு எதிர்ப்பு

* *டாக்டர் அம்பேத்கர் :* இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்க நேருமோ என அஞ்சுகின்றேன். முதலாவதாக, பம்பாயில் நாம் வைத்துக் கொண்டிருந்தது போல உறுப்பினர்கள் கூடித் தேர்ந் தெடுத்து ஒரு உறுப்பினரை இணைத்துக் கொள்ளும் அனுபவம் ஊக்கமூட்டுவதாக இல்லை. கடைந்தெடுத்த மோசடியாகவே அது வளர்ந்தது; அதில் இடம் பெற்ற இலஞ்சம் ஊழல் ஆகியவை பம்பாய்ச் சட்டமன்றத்திற்கான அமைப்பில் இத்தகையதொரு விதியைச் சேர்க்கக் கூடாது என்ற நிலைக்கு என்னை ஆக்கி யுள்ளது.

இதற்கு இன்னொரு எதிர்ப்புரையும் கூறலாம். பல்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு தக்க எண்ணிக்கையில் உறுப்பினராகாத நிலையில் இந்த முறை யில் மற்ற வகுப்பினரின் தயவு இல்லாமல் பிரதிநிதிகளை அனுப்பக் கோரும்போது, இப்படி உறுப்பினர் கூடித் தேர்ந் தெடுத்து ஒரு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வது பயன்தராமல் போகும். ஏனென்றால் வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் தத்தமக்கு வேண்டியவர்களை இணைத்துக் கொள்ள முடியும் போது, பெரும்பான்மையோரின் கைப்பாவைகளாகவும் அடி வருடிகளாகவும் இருப்பவர்களையே, இவ்வாறு இணைத்துக் கொள்வதென்று ஆகிவிடும். பிரதிநிதித்துவம் இல்லாமல் போவதை விட இது மோசமானதாகும். இதன் காரணமாகவே இந்தத் திருத் தத்தை நான் எதிர்க்கின்றேன். வருங்கால மாநிலச் சட்ட மன்றங் களை அமைப்பதற்கான விதிமுறைகளில் நியமன உறுப்பினர்களே இருக்க வேண்டியதில்லை என்று இந்தத் துணைக்குழு பரிந் துரைக்க வேண்டுமென நான் தெரிவிக்கின்றேன்.

*திவான் பகதூர் இராமச்சந்திர ராவ் :* நிச்சயமாக, இது பெரி தும் மேலானது.

*டாக்டர் அம்பேத்கர் :* இந்த விஷயத்தில் இதுதான் என் சொந் தக் கருத்து. இணைத்துக் கொள்வதற்கு நான் நிச்சயமாக எதிர்ப்பு தெரிவிக்கின்றேன்.

*திவான் பகதூர் இராமச்சந்திர ராவ் :* சட்டமன்றம் முழுக்க முழுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையே கொண்

* இரண்டாம் துணைக்குழுவின் (மாநில அரசியலமைப்பு) செயல்முறைகள், ப. 194.

டிருக்க வேண்டும் என்னும் அறிவிப்பு அறிக்கையில், இடம்பெற வேண்டும் என்பதற்கு உடன்படுகின்றேன். அத்தகைய கருத்தினை துணைக்குழு தெரிவிக்காவிட்டால் இங்குள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் விருப்பம், இணைத்து கொள்ளுவது மறைய வேண்டும் என்று இருந்த போதிலும் அவ்வாறான நியமனங்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும். ஓர் அறிவிப்பு இதற்காக அறிக்கையில் இடம்பெற்றாக வேண்டும். இவ்வாறான நியமனங் களின் தீங்குகள் தொடர்ந்து இருந்து வருவதை நாமனைவரும் அறிந்திருக்கிறோம். கூடிய விரைவில் அந்த வழக்கம் மறைந்தாக வேண்டும் என விரும்புகின்றோம். இந்தச் சூழ்நிலையில் திருத்தத் திற்கு ஆதரவளிக்க நான் தயாராக இல்லை. என் நண்பர் டாக்டர் அம்பேத்கர் முன் மொழிவதையே நான் ஆதரிக்கிறேன்.

*தலைவர் :* அந்த முன்மொழிவு என்ன? அதைப் பற்றி ஒரு சொல்லும் இங்கு இல்லையே.

*டாக்டர் அம்பேத்கர்:* இனிமேல் மாநிலங்களின் சட்ட மேலவை கள் முற்றிலும் வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களையே கொண்டிருக்க வேண்டும் என்பது துணைக் குழு வின் கருத்து என்று சொல்ல வேண்டும்.

*தலைவர் :* அவ்வாறானால் அது முழுமையாக இன்னொரு திருத்தமாகும்; அதனைத் திருத்தமாகக் கொண்டுவர விரும்பினால் நீங்கள் எழுதி அனுப்ப வேண்டும்.

★ ★ ★ ★ ★

* *தலைவர் :* இந்தக் கருத்துக் குறித்த உங்களின் முடிவை ஏற்கிறேன்.

*ராஜா ரவீந்திர நாத் :* சர் ஏ. பி. பத்ரோ அவர்களை நான் ஆதரிக்கிறேன். தேர்தல் மூலமாக அல்லாத நலக் குழுக்களின் பிரதிநிதிகளை மட்டுமே நியமனம் செய்வதற்கு இந்த அதிகாரத்தை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

*டாக்டர் ஷாபாஹத் அகமத் கான் :* ஆம்.

*ராஜா ரவீந்திர நாத் :* டாக்டர் அம்பேத்கர் அவர்களைச் சார்ந்தவர்களான சில வகுப்பினரைப் போன்றுள்ளவர்களுக்குத் தேர்தல் நடத்துவது முடியாத நிலையிலுள்ள சில மாநிலங்களும் இருக்கக் கூடும்.

*டாக்டர் அம்பேத்கர் :* என்னுடைய சமுதாய மக்களுக்கு வாக் குரிமைக்கு இடமளிக்காத ஓர் அரசியலமைப்பை நான் ஏற்க மாட்டேன்.

*ராஜா ரவீந்திர நாத் :* டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சார்ந் திருக்கின்ற வகுப்பாருக்கு வாக்குரிமை அளிப்பதாக இருந்தால்

வேறு வித்தியாசமான அடிப்படையில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

*தலைவர் :* அறிக்கையின் துணை விதி (இ)-யில் குறித்துள்ள வாறு ஏற்றுக் கொள்வதற்குத் துணைக் குழுவில் பெரும்பாலோர் ஆதரவாக இருப்பதாகத் தோன்றுகின்றது.

# மாநாடு முழுமைக்குமான குழு

## * இரண்டாவது துணைக்குழுவின் (மாநில அரசியலமைப்பு) அறிக்கை மீதான கருத்துரைகள் — டிசம்பர் 16, 1930

மாநிலங்களில் இரண்டாவது அவை ஏற்படுத்துவதை திரு. சிந்தாமணி எதிர்த்தார். அவ்வாறு ஏற்படுத்துவது ஆடம்பர வீண்செலவாகுமென்றும், மக்களுக்குப் பயன்படக் கூடிய அமைப்பாக அது இருக்காதென்றும் அவர் கூறினார். சைமன் குழுவின் கணிப்புப்படி ஐக்கிய மாநிலச் சட்டமன்றத்தில் தம் மக்கள் தொகைக்கு அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்டுள்ள சிறிய அளவிலானதொரு வகுப்பாரே இந்த இரண்டாவது அவை தேவை என்றனர். எனவே, எந்தச் சூழ்நிலையிலும், எந்தக் காலத்திலும் மத்திய மாநிலத்தில் மட்டுமல்ல இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது அவை அவசியமும் இல்லை, விரும்பத்தக்கதுமாகாது என்றார். இதைக் குறிப்பிட்டு டாக்டர் அம்பேத்கர், ''திரு. சிந்தாமணி கூறியவற்றை நான் முழுமையாக ஆதரிக்கிறேன்'' என்றார்.

*தலைவர்:* பத்தி 5(ஆ) பற்றிய விவாதம் தற்போது நடக்கிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* சட்டமன்றத்தின் இன்னொரு பகுதி நியமன உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கக் கூடும் என்று கூறும். அறிக்கையின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டு 'தேர்ந்தெடுத்த' (மாநிலச் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்) என்னும் சொல்லை நீக்க வேண்டுமென்று துணைக்குழுவில் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

*தலைவர்:* 'சாதாரணமாக' (''சாதாரணமாக அமைச்சர்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'') என்று பயன்படுத்தியுள்ள சொல் இந்தக் கருத்தை உள்ளடக்கியுள்ளது என்று கருதுகின்றேன். அசாதாரணமான நடவடிக்கைக்கான அவசிய மிருக்கிறது என்பதையே இது காட்டுகின்றது.

---

* வ. மே. மா. செயல்முறைகள், ப. 314.

# 4

# மூன்றாம் துணைக் குழுவின் (சிறுபான்மையோர்)

## இரண்டாம் அமர்வு — 31 டிசம்பர், 1930

* *டாக்டர் அம்பேத்கர்* : தலைவர் அவர்களே! தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலையை எடுத்துரைக்கும் பெரியதொரு பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது மிகப் பெரியதொரு பொறுப்பு என்பதை ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றேன். ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலைப் பற்றி அரசியல் ரீதியாக ஆராயப்படுவது இதுதான் முதல்முறை என நான் நினைக்கிறேன். இந்தியாவின் அரசியல் முன்னேற்றம் குறித்து இந்திய அரசாங்கம் வைத்து வருகின்ற ஒவ்வொரு தஸ்தாவேஜிகளிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் நிலை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த பதிவு குறிப்பேடுகளில் அவர்கள் நிலை பற்றி குறிப்பிடப் பட்டுள்ளதேயொழிய் அவர்களை எதிர்நோக்கியுள்ள இடர்களை எவ்வாறு களைந்தெறிவது என்பது பற்றி எங்கும் குறிப்பிடப்பட வில்லை. இப்பிரச்சினை அதோடு நின்றுவிட்டது. மேலும், ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலையை — 430 லட்சம் மக்கள் தொகை கொண்ட ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலையை — இந்தியாவில் உள்ள எந்த வகுப்பினரும் அனுபவிக்காத இடர் களை, இன்னல்களைப் பன்னெடுங்காலமாகப் பொறுமையுடன் சகித்து வருகின்ற ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் குறைகளை எடுத் துரைக்க பல உறுப்பினர்கள் கொண்ட இக்குழுவில் நாங்கள் இருவர் மட்டுமே இருக்கிறோம் என்பதை நினைக்கையில் எங்க ளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பு எவ்வளவு பெரியது, மகத்தானது என்பது புரியும். எனவே, இந்த விஷயத்தை ஒழுங் கான முறையில் விளக்க எனக்கு அதிக நேரம் கொடுக்கப்படும் என்றே எண்ணினேன். ஆயினும், ஆரம்பக் கூட்டத்தில் நடந்தது போலவே இங்கும் நடக்கலாம் என எதிர்பார்த்து, நானும் எனது நண்பர் ராவ்பகதூர் ஸ்ரீநிவாசனும், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்தியாவின் வருங்கால அரசியலமைப்பில் எத்தகைய அரசியல் பாதுகாப்புகளை எதிர்பார்க்கின்றனர் என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாக விளக்கும் குறிப்பு ஒன்றை எ்ழுத்து மூலமாக இம்

* மூன்றாம் துணைக் குழுவின் (சிறுபான்மையோர்) செயல் முறைகள், இந்திய அரசின் மத்திய வெளியீடுப் பிரிவு, கல்கத்தா, 1931 பக். 73-80. இந்தத் துணைக் குழுவின் ஆலோசனைக்கு அளிக்கப்பட்ட பொருள் பின்வருமாறு : ''சிறுபான்மையோர் மற்றும் சிறப்பு விருப்பக் குழுவினரின் மனம் ஒப்பிய முழு ஒத்துழைப்பைப் பெறுவதற் காக உருவாக்க வேண்டிய ஏற்பாடுகள்''

மாநாட்டில் சமர்ப்பிப்பது விரும்பத்தக்கது என்று கருதினோம். இத்தகைய குறிப்பு ஒன்று இக்குழுவின் உறுப்பினர்களிடையே சுற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது.* உறுப்பினர் எல்லோருக்கும் அது கிடைத்திருக்கும் என்று நம்புகிறோம். எனவே அதிக நேரம் கொடுக்குமாறு தலைவர் அவர்களைக் கேட்காமல் நாங்கள் சமர்ப் பித்துள்ள குறிப்பில் கண்டுள்ள விஷயங்களை விளக்கி வலி யுறுத்தவே நான் விரும்புகிறேன்.

முதற்கண் நான் குறிப்பிட விரும்புவது இதுதான். இந்தியா வில் பல்வேறு சிறுபான்மை வகுப்பினர் உள்ளனர் என்பது உண்மைதான். ஆனால் எல்லா சிறுபான்மை வகுப்பினரும் ஒரே நிலையில் இல்லை; அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபாடு உடையவர்கள். சமுதாயத்தில் பெரும்பான்மை வகுப்பினருக்குக் கிடைக்கும் சலுகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஒவ்வொரு சிறுபான்மை வகுப்பினரும் ஒவ்வொரு நிலையில் உள்ளனர். உதாரணமாக பார்ஸி வகுப்பாரை எடுத்துக் கொள்வோம். இவர் கள் மிகவும் சிறிய சிறுபான்மை வகுப்பினர். ஆனால் சமுதாயத் தில் இந்த வகுப்பினர் மற்ற வகுப்பினரைவிட நல்ல நிலையில் முன்னணியில் உள்ளனர்.

இந்தியாவில், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் சமுதாயத் தினருக்கு அடுத்தபடியாக வரும் சமுதாயத்தினராவர். ஆனால் சராசரி மனிதனின் வாழ்க்கை நிலையை விட அவர்களது நிலை மிகவும் கீழ்த்தரமாக உள்ளது.

சிறுபான்மை வகுப்பினரின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து சமுதாயத்தில் அவர்களுக்குள்ள உரிமைகளையும் அரசியலில் அவர்களுக்குள்ள உரிமைகளையும் எடுத்துப் பார்த்தீர்களானால் சிறுபான்மையோராக இருப்பதனாலேயே அவர்களின் உரிமை கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பதும், அதற்கு மாறாக அவர்கள் சமுதாயத்திலும் அரசியலிலும் எல்லா உரிமை களையும் அனுபவித்து வருகின்றனர் என்பதும் தெரியவரும். ஆனால் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். சில விஷயங்களில் அவர்களுக்கு உரிமையே கிடையாது. மற்றும் சில விஷயங்களில், அவர்களுக்குள்ள உரிமை களை அனுபவிக்கப் பெரும்பான்மை வகுப்பினர் தடையாக உள்ளனர்.

இக்குழுவின் முன் நான் எடுத்துரைக்க முனைவது இதுதான். உரிமைக்காகச் சொல்ல வேண்டுமானால் சிறுபான்மையினர் அனைவரும் ஒரே கப்பலில் பயணம் செய்பவர்களைப் போன்ற வர்களே என்று வைத்துக் கொண்டால், எல்லோரும் ஒரு கப்ப லில் ஒரே மாதிரி வகுப்பில் பயணம் செய்பவர்களாக இல்லாமல்

* இவர்கள் அளித்த மகஜர் பின்னிணைப்பு — 1-ல் தரப்பட்டுள்ளது.

அவர்களில் சிலர் 'அ' வகுப்பிலும், சிலர் 'ஆ' வகுப்பிலும் இப்படியே வெவ்வேறு வகுப்புகளில் பயணம் செய்பவர்களாக உள்ளனர். ஒடுக்கப்பட்டவர்களும் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லப்பட்டாலும் அந்தக் கப்பலில் பயணம் செய்யும் பிறரைப் போல 'அ' அல்லது 'ஆ' என்ற வகுப்புகளில் பயணம் செய்பவராக இல்லாமல் கப்பலின் அடித் தளத்தில் சரக்குகள் சேமித்து வைக்கும் பள்ளத்தில் உள்ளனர். எடுத்துக்காட்டு அளவில் ஒடுக்கப்பட்டோரும் பிற சிறுபான்மை வகுப்பினரைப் போன்றே உள்ளனர் என்பதை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து நான் பேச வந்த பொருளுக்கு வருகிறேன்.

இந்தியாவின் வருங்கால அரசியலமைப்பில் பெரும்பான்மை யோர் ஆட்சி ஏற்பட்டால், அது நிச்சயம் சாதி இந்துக்களின் ஆட்சியாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த சாதி இந்துக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு நியாயம், நீதி, சமத்துவம், மனசாட்சி எல்லாம் பலியிடப்படும். சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் சிறுபான்மை வகுப்பினரின் நலன் புறக்கணிக்கப் படும்; அவர்களது குடி உரிமைகள் காற்றிலே பறக்க விடப்படும் என்பதில் ஐயமில்லை. ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் மற்ற சிறு பான்மை வகுப்பினரும் அஞ்சுவது இதுதான்.

இக்கண்ணோட்டத்துடன் பார்க்கையில், சிறுபான்மை வகுப் பினருக்கு சட்டப் பேரவைகளிலும் நிர்வாக அமைப்பிலும் நாட் டின் பொதுப்பணிகளிலும் தக்க பிரதிநிதித்துவம் தரப்பட வேண் டும்; பெரும்பான்மை வகுப்பினர் ஒரு சமுதாயத்திற்கும் மற்றொரு சமுதாயத்தினருக்கும் வேறுபாடு காண்பிக்கும் வகையில் மத்திய, மாநில சட்டப் பேரவைகள் சட்டங்களை இயற்றுவதற்குத் தடை செய்யும் வண்ணம் அவர்களது அதிகாரங்களுக்கு வரையறை விதிக்கப்பட வேண்டும். இந்தச் சூழ்நிலையில் இத்தகைய வேறு பாடு காட்டப்படும் அபாயம் எல்லா சிறுபான்மை வகுப்பினருக் கும் இருக்கிறது. எனவே, இந்தக் கோரிக்கை அளிப்பதில் ஒடுக்கப் பட்ட வகுப்பினரும் மற்ற சிறுபான்மை வகுப்பினருடன் சேர்ந்து கொள்கின்றனர்.

இந்தியாவில் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கும் மற்ற சிறுபான்மை வகுப்பினருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? சமுதாயத்தில் அவர்களின் நிலைமை என்ன? என்பதைக் கூறுவேன். தற்போ துள்ள சூழ்நிலையில் இந்தியாவில் மற்ற சிறுபான்மை வகுப்பினர் சமுதாயத்தில் சட்டரீதியாக அனுபவிக்கும் சில உரிமைகள் கூட தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மறுக்கப்பட்டுள்ளன. எனக்கு அதிக நேரம் இல்லாததனால், ஒன்றிரண்டு உதாரணங்களுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

போலீஸ் அல்லது இராணுவ வேலையை எடுத்துக் கொள் வோம். இந்தியக் குடிமகன் எவருக்கும் அவரது சாதி, சமய, நிற

வேறுபாடு காரணமாக பொதுப்பணியில் நியமனம் மறுக்கப்படக் கூடாது என்பது இந்திய அரசாங்கச் சட்டம். இதன்படி ஒடுக்கப் பட்ட வகுப்பினரில் தகுதி உள்ளவர் ஒவ்வொருவரும், அந்த நியமனம் குறித்து நிச்சயிக்கப்பட்டுள்ள தேர்வில் தேறும் தகுதி யுள்ள ஒவ்வொருவரும் அந்தந்த அரசுப்பணியில் நியமனம் பெற வேண்டும். ஆனால் உண்மை நிலை என்ன? ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் போலீஸ் வேலைக்கு மனுச் செய்தால், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் எவரையும் அவர் தீண்டத்தகாதவர் என்ற காரணத்தினால் போலீஸ் வேலைக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்று மூஞ்சியிலடித்தாற் போல் அரசாங்க நிர்வாக அதிகாரிகள் கூறுகின்றனர். இராணுவத்திலும் இதே நிலைதான். 1892-ஆம் ஆண்டு வரையில் சென்னை, பம்பாய் மாநிலங்களின் இராணுவத்தில் முழுக்க முழுக்க ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இருந்த னர். இந்திய வரலாறு கண்ட பெரும் போர்கள் அனைத்திலும் பம்பாய், சென்னை மாநில இராணுவங்களில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரே இடம்பெற்று உதவினர். ஆயினும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இராணுவத்தில் நியமனம் செய்யப்படக் கூடாது என்று 1892-ஆம் ஆண்டில் விதி ஒன்று இயற்றப்பட்டது. இன்றைக்குக் கூட இது குறித்துச் சட்ட மேலவையில் கேள்வி எழுப்பப்பட்டால், தீண்டாமை காரணமாக ஒடுக்கப்புட்ட வகுப் பினர் இந்த வேலைகளுக்கு நியமிக்கப்பட முடியாத துயர நிலை யில் இருப்பதாகப் பதில் கிடைக்கின்றது.

இத்தீண்டாமை பழக்கம் அனுசரிக்கப்பட வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டிருந்தால் எவ்வளவு கண்டிப்பாக இப்பழக்கம் செயலில் வருமோ அந்த அளவுக்கு தீண்டாமைப் பழக்கம் உறுதி யாகப் பின்பற்றப்படுகின்றது. இதன் விளைவாக எல்லா குடி மக்களுக்கும் அவரவர் தகுதி அடிப்படையில் அரசாங்க சேவையில் நியமனம் பெற உரிமை உண்டு என்கிற இந்திய அரசாங்கச் சட்டத் தின் விதிமுறை செயலற்றுக் கிடக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப்படும் அநீதிகளை அடுக்கிக் கொண்டே போக முடியும். அவர்கள் பிரயாணம் செய்யும் பொழுது வழியில் உள்ள தங்கும் விடுதிகளில் அவர்கள் தங்க அனுமதிக்கப்படுவதில்லை. பஸ்களில் அவர்களுக்கு இடம் அளிப்பதில்லை. அவர்கள் நிதி கொடுத்து உருவான பொதுப் பள்ளிகளில் அவர்கள் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கப்படு வதில்லை. உள்ளூரில் கிணறு வெட்டப்படுவதற்காக அவர்களும் வரி செலுத்தி, வெட்டப்பட்ட பொதுக் கிணறுகளிலிருந்து நீர் எடுக்க அவர்களுக்கு உரிமை கிடையாது. சட்டத்தினால் விதிக்கப் பட்ட ஒரு தண்டனையைப் போல குடியுரிமையை மறுக்கும் இந்த இன்னல்கள் சமுதாயத்தில் அவர்களுக்குக் கண்டிப்பாக இழைக்கப் பட்டு வருகின்றன. மற்ற சிறுபான்மையோருக்கும் ஒடுக்கப் பட்டோருக்கும் நிலவும் வேறுபாடு இதுதான்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் இரண்டாவது அநீதி மிகவும் கொடுமையானதாகும் என்பது எனது கருத்து. உலகின் வேறு எந்த நாட்டிலும் கண்டிராத அளவுக்கு சமுதாயத்தில் அவர்கள் துன்புறுத்தப்படுகின்றனர். பம்பாய் அரசாங்கம் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நிலையை ஆராய 1928-ல் துணைக்குழு ஒன்றை அமைத்தது. அத் துணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து ஒரு சிறு பகுதியை இச்சந்தர்ப்பத்தில் வாசித்துக் காட்ட விரும்புகிறேன். சட்டம் அனுமதிக்கும் உரிமைகளை, ஒடுக்கப்பட்ட வகுப்பினர் மற்ற குடிமக்களைப் போலச் சரிநிகர்ச் சமானமாக அனுபவித்து வருகின்றனரா, அவர்களது உரிமைகளுக்குத் தடைகள் ஏதேனும் இருக்கின்றனவா என்று ஆராய இக்குழு முற்பட்டது.

மேற்படி குழு கூறியதாவது:

"பொது வாய்ப்பு வசதிகள் அனைத்தையும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரும் அனுபவிக்க வேண்டும் என்னும் உயரிய நோக்குடன் நாம் பல்வேறு முறைகளைச் சிபாரிசு செய்துள்ளோம். எனினும் இன்னும் வெகுகாலத்துக்கு அவர்கள் அந்த உரிமைகளை அடையத் தடைகள் பல இருக்கும். சாதி இந்துக்கள் பகிரங்கமாகவே அவர்களை அடித்துத் துன்புறுத்துவார்களோ என்ற பயம் முதல் தடை. ஒவ்வொரு கிராமத்திலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் மிகச் சிறுபான்மையினராகவும் சாதி இந்துக்களே பெரும்பான்மையினராகவும் உள்ளனர். ஒடுக்கப்பட்ட வகுப்பினர்கள் தங்கள் உரிமைகளைப் பறித்துக் கொண்டு விடுவார்கள் என்று சாதி இந்துக்கள் கற்பனை செய்து கொண்டு எப்பாடுபட்டாவது தங்கள் உரிமைகளையும் சமுதாயத்தில் தங்களுக்குள்ள கௌரவத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள முற்படுகின்றனர். ஒடுக்கப்பட்ட வகுப்பினரைப் பகிரங்கமாக அடித்துத் துன்புறுத்தினால் சட்டத்தின் பிடிக்குள் அகப்பட்டுத் தண்டிக்கப்படுவோம் என்ற அச்சம் அவர்களுக்கு இருப்பதால் நல்ல வேளையாக இத்தகைய நிகழ்ச்சிகள் அபூர்வமாகத்தான் நடைபெறுகின்றன.

ஒடுக்கப்பட்ட வகுப்பினர் பொருளாதாரத்தில் இன்று மிகவும் பின்தங்கியுள்ளனர். இம்மாநிலத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் அவர்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் இல்லை. சிலர் சாதி இந்துக்களின் நிலங்களில் குத்தகைதாரர்களாகப் பிழைக்கின்றனர். இவர்களுக்குக் குத்தகைக்கு விடுவதோ மறுப்பதோ சாதி இந்துக்களின் விருப்பத்தைப் பொறுத்ததாகும். அதற்குச் சட்ட திட்டம் எதுவும் கிடையாது. மற்றும் சிலர் சாதி இந்துக்களால் பண்ணைக் கூலிகளாக வேலைக்கமர்த்தப்படுகின்றனர். எஞ்சியவர் கிராம ஊழியராகப் பணிபுரிந்து சாதி இந்துக்கள் அவர்களுக்குக் கொடுக்கும் உணவை அல்லது தானியத்தைக் கொண்டு உயிர் வாழ்கின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமை

களைக் கோர முயன்றதால் அவர்களைத் தங்கள் நிலங்களி லிருந்து வெளியேற்றியுள்ளனர். கிராம ஊழியர்கள் என்ற முறையில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தை நிறுத்தி விடுகின்றனர். பொதுச் சாலைகளில் கூட ஒடுக்கப் பட்ட வகுப்பினர் வரக்கூடாது, கிராம வணிகர்கள் வாழ்க் கைக்கு இன்றியமையாத பொருள்களை அவர்களுக்கு விற்கக் கூடாது என்று கூட அவர்கள் தடைசெய்துள்ளனர். அற்ப மான சிறு காரணங்களை வைத்துக் கொண்டுகூட, இத்தகைய சமுதாய புறக்கணிப்பு முறையை சாதி இந்துக்கள் பயன் படுத்தியுள்ளனர் என்பதற்கு சான்றுகள் உள்ளன. ஒடுக்கப் பட்ட வகுப்பினர் பொதுக் கிணறுகளைப் பயன்படுத்தியதின் காரணமாகவே அநேகமாக இத்தகைய சமுதாயப் புறக்கணிப்புத் தண்டனைக்குள்ளாகின்றனர். ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவன் பூணூல் அணிந்து கொண்டான் என்பதற் காக, ஒரு துண்டு நிலம் வாங்கினான் என்பதற்காக, நல்ல ஆடை அணிகளை அணிந்ததற்க்க பொதுசாலை வழியே மணமகனை குதிரை மீது ஊர்வலமாக அழைத்துச் சென்றதற் காக அவர்கள் இத்தகைய கடுமையான புறக்கணிப்புக்கு ஆளாவது சர்வ சாதாரணமாக நடக்கிறது.''

சமுதாயப் புறக்கணிப்பை விட கொடியதொரு ஆயுதம் இருக்க முடியாதென்றே கருதுகிறேன். இந்த ஆயுதம் தாழ்த்தப் பட்ட வகுப்பினரை அடக்கி ஆள்வதற்கென்றே கண்டு பிடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. இந்த ஆயுதத்திற்கு முன் பலாத்காரம் மிகச் சாதாரணமானதொரு ஆயுதமாகும். இதன் விளைவுகள் பயங்கரமானவை. சமுதா யத்தில் மக்கள் தங்களுக்குள் பழகுவது அவரவர் விருப்பமே என்ற கொள்கையையொட்டி சமுதாயப் புறக்கணிப்பு முறை சட்ட சம்மதமாகிறது. இது பலாத்காரத்தை விட பயங்கர மானது. ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பேச்சு சுதந்திரத்தையும் அவர்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளையும் நாம் கொடுப் பதாக உத்தரவாதம் அளிப்போமானால்; பெரும்பான்மை யினரின் இந்தக் கொடுமையை நாம் கண்டிப்பாக அடக்கித் தான் ஆக வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.''

புதிய சட்டப் பேரவையில் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டாலும் அவர்கள் எப் பொழுதும் சிறுபான்மையினராகவே இருப்பர். எனவே, சாதி இந்துக்களுக்கு ஒடுக்கப்பட்ட வகுப்பினர்பால் உள்ள வெறுப்பு மனப்பான்மையைக் கருத்தில் கொண்டு, ஒடுக்கப்பட்ட வகுப் பினர் நலன் கவனிக்காமல் விட்டுவிடக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது; அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கு இடர் விளைவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படக் கூடும். மற்ற

சிறுபான்மை வகுப்பாரை விட ஒடுக்கப்பட்ட மக்கள் பயப்படுவதற்கு இதுதான் காரணம்.

இந்த சூழ்நிலைகளிலிருந்து ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு அடியிற்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும். முதலாவதாக அனைத்துப் பொது நிகழ்ச்சிகளுக்கும் ''தீண்டாமை'' பழக்கம், சட்ட சம்மதமற்றது என்று அரசியலமைப்பில் விதிமுறை சேர்க்கப்பட வேண்டும். சமுதாயத்தின் இந்த அநீதியிலிருந்து எங்களுக்கு விடுதலை கிடைத்த பிறகே அரசியலமைப்பில் நாங்கள் பங்குகொள்ள முடியும். இரண்டாவதாக எங்களுக்கு இதுவரையில் இழைக்கப்பட்டு வந்துள்ள அநீதிகள், கொடுமைகள் நான் முன்பு என் உரையில் குறிப்பிட்ட ''சமுதாயப் புறக்கணிப்பு'' முறையும் ஆகிய அனைத்தும் சட்ட விரோதமாக்கப்பட வேண்டும். பர்மாவில் இப்பொழுது செயலில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் சில பகுதிகளை இது குறித்து நாங்கள் சமர்ப்பித்துள்ள குறிப்பில் சேர்த்துள்ளோம். இதைப் பற்றி தற்போது விரிவாக விளக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன். ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் கொடுமைகளையும் தடுப்பதற்கு அரசாங்க நிர்வாகம், அதிகாரிகளுக்குள்ள பொறுப்பு பற்றிய ஷரத்து கண்டிப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும். இந்திய அரசாங்கச் சட்டத்தின் 110, 111-வது பிரிவுகளின் கீழ் தற்போது இந்தப் பொறுப்பு உண்மையானதாக இல்லை. எங்கள் நலன் புறக்கணிக்கப்பட்டால் அல்லது எங்கள் நலனுக்கு விரோதமாக நடவடிக்கை எடுக்கப் பட்டால், மத்திய அரசுக்கு மேல்முறையீடு செய்துகொள்ள எங்களுக்கு உரிமை வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால், அரசாங்க உள் விவகாரச் செயலாளருக்கும் எங்கள் நலனைப் பேண இந்திய அரசாங்கத்தில் அமைய இருக்கும் தனித்துறைக்கும் மேல் முறையீடு செய்துகொள்ள எங்களுக்கு உரிமை வேண்டும்.

ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்கு பொதுவாக வேண்டிய பாதுகாப்பும் கோரிக்கையும் இதுதான். அவர்களுக்கு முக்கியமாக சட்டப்பேரவையில் அளிக்கப்பட வேண்டிய உரிய பிரதிநிதித்துவம் பற்றி ஒரு சிலவற்றைக் கூறுவேன். இப் பிரதிநிதித்துவம் தேர்தல் முறையின் மூலம்தான் கொடுக்கப்பட வேண்டும். எங்கள் பிரதிநிதிகளை நாங்கள் தேர்ந்தெடுக்க விரும்புகிறோமேயன்றி அவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. அரசாங்க நியமன முறை விரும்பத்தகாத விளைவுகளையே அளித்துள்ளது. இதுவரையில் காணாத அளவுக்கு இந்த நியமனமுறை தவறாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மேலும், இந்த நியமன முறையினால் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, அவர்களுக்குப் பாதுகாப்பாக அமைய வேண்டிய, சுதந்தரமான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. என்வே, எந்தச் சூழ்நிலையிலும் அரசாங்க நியமனமுறை மூலம் (by nomination) பிரதி நிதித்துவம் பெறுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

கூட்டுத் தொகுதி அல்லது தனித்தொகுதி என்ற பிரச்சினையில் எங்கள் நிலைமை இதுதான். ஒடுக்கப்பட்டோர் தங்கள் சமுதாய அமைப்புக்கான மாற்றங்களை ஏற்றுக் கொள்ளச் சிறிது அவகாசம் விரும்புகிறார்கள். அந்தக் கால இடைவெளிக்குப் பின்னர் வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை என்பதை எங்களுக்குக் கொடுத்தால், நாங்கள் கூட்டுத் தொகுதியையும் அதற்குள் அடங்கிய ஒதுக்கப்பட்ட இருக்கைகளையும் (Seats) ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்னும் உரிமையை எங்களுக்கு நீங்கள் கொடுக்கவில்லையென்றால் எங்கள் பிரதிநிதித்துவத்தைப் பெற தனித் தொகுதி முறையை நாங்கள் கேட்க வேண்டி இருக்கும். இது எங்களுடைய நிலைமை.

எத்தனை இருக்கைகள் (Seats) ஒதுக்குவது என்ற விவாதத்தில், இவ்வளவுதான் என்று நாங்கள் திட்டவட்டமாக கூறுவதற்கில்லை. ஆனால், எந்தவிதமான அலட்சிய பாவத்தையும் ஏற்றத் தாழ்வினையும் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்பதை மட்டும் உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறோம். ஒரு சார்ப்பற்ற முறையில் யாவரும் நடத்தப்பட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்திச் சொல்கிறோம். என்னுடைய கருத்துப்படி, இந்த பிரச்சினைகள் எல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. மற்ற சிறுபான்மை சமூகத்தினர்க்கு எவ்வளவு இடங்கள் தரப் படுகின்றன என்பதைக் கணக்கிட்டு, அந்தக் கணக்கில் உள்ளடங்கி இருக்கிறது இப்பிரச்சினை. இதை முன்னிட்டு என்னுடைய இரண்டு கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்: ஒடுக்கப் பட்டோராகிய நாங்கள், எங்களுக்கும் இந்துக்களுக்குமிடையே முழுப் பிரிவினை வேண்டும் என்று கோருகிறோம். இதுதான் முதலாவதாகச் செய்யப்பட வேண்டியது. அரசியல் காரணங்களுக்காக நாங்கள் இந்துக்கள் என்று அழைக்கப்படுகின்றோமே தவிர, சமுதாயத்திலே இந்துக்கள் அவர்களுடைய சகோதரர்களாக எங்களை கருதுவதில்லை. எங்களுடைய எண்ணிக்கையாலும், எங்களுடைய ஒட்டுரிமை பலத்தாலும் கிடைத்த அரசியல் பலன்களை அவரவர்கள் தங்கள் நலனுக்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள்; ஆனால், அதற்குக் கைமாறாக நாங்கள் பெற்றது ஒன்றுமில்லை! அவர்கள் இந்துக்கள் என்று அழைக்கப்படாத மற்ற சமூகத்தினரை நடத்துவதைவிட மிக மோசமான நிலையில் எங்களை இந்த இந்துக்கள் நடத்துவதைத்தான் கண்டிக்கிறோம். ஆகவே, இந்தப் பிரிவினையே முதலாவதாக செய்யப்பட வேண்டியதாகும்.

இரண்டாவது, முக்கியத்துவச் சலுகையைப் (Weightage) பற்றியதாகும். வெளிப்படையாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்த முறை கேலிக்கூத்தாக அமைந்திருக்கிறது என்றே சொல்லுவேன். முக்கியத்துவமும் தனிச் சலுகையும் தரப்படுவதை எதிர்ப்பவனல்ல

நான். ஒவ்வொரு சிறுபான்மை சமூகத்தினரும் அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்தின் அடிப்படையில் தான் எல்லா காரியங்களுக்கும் கணக்கிடப்படுவார்கள் என்ற கோட்பாட்டை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஒரு சிறுபான்மையினர் சமூகம் மிகவும் சிறியதாக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மக்கள்தொகை விகிதத்தின்படி அந்த பிரதிநிதித்துவம் மிகவும் சொற்பமாக இருக்கும். இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம் அச் சமூகத்திற்கு எவ்வகையிலாவது பாதுகாப்பை அளிக்க முடியுமா? எதற்கும் பிரயோசனப்படாத பிரதிநிதித்துவமே அது. ஆகையினால், நீங்கள் போதுமான அளவுக்கும் உண்மையாகவும் ஒரு சிறுபான்மை சமூகத்திற்குப் பாதுகாப்பளிக்க விரும்பினால், சில சூழ்நிலைகளில் அச்சமூகத்திற்கு முக்கியத்துவமும் சலுகையும் கொடுத்துத்தான் தீர வேண்டும். இப்படி முக்கியத்துவம் கொடுத்து சலுகை தரும் முறை ஒரேமாதிரியாகவும் புத்திசாலித்தனமாகவும் இருக்க வேண்டும். சிறுபான்மையாகவுள்ள மக்கள், எண்ணிக்கையில் குறைவாகவும், சமுதாயத்தில் அடிமட்டத்திலும், மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது கல்வி நிலையில் பிற்பட்டும், மற்ற சமுதாயத்தினரோடு சமமாக நிற்குமளவிற்குப் பொருளாதார பலமில்லாமலும் இருக்கும்போது அதற்கு ஈடு செய்யும் வகையில் அவர்களுக்கு முக்கியத்துவமும் சலுகையும் தருதல் வேண்டும் என்பதே எங்களுடைய கருத்தாகும்.

*ஓர் உறுப்பினர்:* சரியாகச் சொன்னீர்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஊழியம் புரிந்ததற்காகவோ, அல்லது சாம்ராஜ்யத்துக்குச் சேவை செய்ததற்காகவோ அல்லது ராஜபக்தியுடன் நடந்து கொண்டதற்காகவோ, அல்லது அரசியலில் முக்கியத்துவம் பெற்றதாலோ, இப்படிப்பட்டச் சலுகை (Weightage) அளிக்கப்படுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த முறையை நாம் பின்பற்றினால் மீள முடியாத கஷ்டமான சூழ்நிலையில் சிக்கித் தவிப்போம் என நான் எண்ணுகிறேன்.

மத்திய சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்டோர் பங்கேற்கும் பிரச்சினையைப் பற்றி பார்ப்போம். வயது வந்தோர் எல்லாம் மத்திய சட்டமன்றத்துக்கான தேர்தலில் வாக்களிப்பதாக இருந்தால், தாழ்த்தப்பட்டோர் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கட்டாயம் கேட்பார்கள். மற்ற சிறுபான்மை சமூகத்தினர்க்கு ஒதுக்கப்படும் இருக்கைகளைப் (Seats) பொறுத்து இவர்களுடைய கோரிக்கையும் இருக்கும்.

ஆனால், உங்களுடைய தேர்தல் முறை உயர்ந்த அளவிலே, அல்லது மிக உயர்ந்த அளவிலே, அதாவது சொத்து உள்ளவர்களுக்கு மட்டும் வாக்குரிமை என்ற அடிப்படையிலே இருக்குமானால், ஒடுக்கப்பட்ட மக்கள் பெரும்பாலும் வாக்குரிமை

அற்றவர்களாகி விடுவார்கள். இந்தச் சூழ்நிலையில் ஏற்படு மானால், மாநில சட்ட மன்றங்களிலும், நகரசபைகளிலும், ஜில்லா போர்டுகளிலும், பஞ்சாயத்துக்களிலும் அங்கம் வகிக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குள்ளாகவே ஒரு தேர்தல் அமைப்பை நிறுவனம் செய்து கொண்டு அதன் மூலமாக மத்திய சட்டசபைக்கான தங்கள் பிரதிநிதிகளை மறைமுக தேர்தல் முறை யிலே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள் என்பதனை இங்கே கூறிக் கொள்ள விரும்புகின்றேன். ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்த வரை என் கூற்று இதுதான்.

சொல்லவேண்டியதெல்லாம் நான் சொல்லியாகி விட்டாலும் முடிவாக ஒன்று கூறியாக வேண்டும். இப்போதுள்ள நிலையில் சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் என்பதே முக்கியமானதொன் றாகும். பெரும்பான்மை வகுப்பார் கேட்கும் டொமினியன் அந்தஸ்துள்ள ஆட்சி என்பதன் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு அனைத்துச் சிறுபான்மை வகுப்பாரும் தங்க ளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அவர்கள் விரும்பி னாலும் சரி அல்லது மக்களால், மக்களுக்காக, மக்களின் அரசாங் கம் என்று நாம் விரும்புவது போன்ற அரசு அமைய வேண்டு மானாலும் சரி சிறுபான்மை வகுப்பாரின் அனைத்துப் பயத்தை யும் பெரும்பான்மை வகுப்பார் போக்குவதற்கு முன்வர வேண் டும் என்பேன். இல்லாவிட்டால் டொமினியன் அந்தஸ்து என்னும் சுயாட்சி அரசைக் கேட்பதன் மூலம் ஏற்படக்கூடிய கேடுகளை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை ஒளிவு மறைவின்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஐந்தாவது அமர்வு — ஜனவரி 14, 1931

* தலைவர்: இந்த யோசனை நம் முன்னாலுள்ள நகல் அறிக்கையை ஆராய்ந்து அதனை ஏற்க முடியாத ஒரு நிலையை நமக்கு ஏற்பட்டு விட்டது; சந்தர்ப்பச் சூழ்நிலைமை முழுவதையுமே அது மாற்றிவிட்டதே இதற்குக் காரணம். நீங்கள் உடன்பட்டால் துணைக்குழுவை இப்பொழுது ஒத்திவைக்கலாம்; அதேபோல் நீங்கள் ஒப்புக்கொண்டால், இந்த விஷயத்தில் உங்களில் தனி ஆர்வம் கொண்டவர்கள் மீண்டும் என் தலைமையில் கூடலாம்; இதில் டாக்டர் அம்பேத்காரையும் நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர்: உங்களுக்கு நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

---

* துணைக்குழு III-ன் (சிறுபான்மையினர்) நடவடிக்கைகள், பக்கங்கள் 127-128.

*தலைவர்:* ஓ, நல்லது, அவரையும் நாம் சேர்த்துக் கொள் வோம். நாம் ஒன்றாகக் கூடிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டால் எப்படி உடன்பாடு ஏற்படாதபடி போய்விடும் என்று பார்ப்போம்.

*சர் பி. சி. மிட்டர்:* இந்த விவாதங்களில் நானும் பங்கு கொள்ள விரும்புகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* நம்மிடம் தெரிவிக்கப்பட்ட பல்வேறு யோசனைகளையும் விகிதாசாரங்களையும் இப்போது கேட்டோம். இவற்றை எல்லாம் கூட்டிப் பார்த்தால் 100 சதவிகிதத்தைத் தாண்டிவிடுகிறது. அதுமட்டுமல்ல, பஞ்சாபிலும் வங்காளத்திலும் இன்னும் இதர இடங்களிலும் உள்ள இதர பல வகுப்பினர்களை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறிவிட்டோம். இந்தியர்கள், முஸ்லீம்கள், இந்துக்கள் முதலியோர் 49 சதவிகிதம், 20 சத விகிதம் என்றெல்லாம் தங்களுக்குப் பங்கு போட்டுக் கொண் டால் ஏனைய மக்களுக்கு என்ன மிஞ்சும்? அவர்களைக் கணக்கி லெடுத்துக் கொள்வதா, இல்லையா? திரு. பிரதம மந்திரி அவர் களே, இது மிகவும் சிக்கலான பிரச்சினை.

*லெப். கர்னல் கித்னே:* இங்கு எனது தாழ்மையான குரலை எழுப்ப விரும்புகிறேன் — அது மிக மெல்லிய குரல், சற்று முன்னர் டாக்டர் அம்பேத்கர் கூறியதை நான் ஆதரிக்கிறேன். அரசியல் என்னும் 1 ரூபாயை எடுத்து அதில் 15 அணா 9 பைசாவை பெரும்பான்மையினருக்கும் வெறும் 3 பைசாவை இதர சிறு பான்மையினர்களுக்கும் தர மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இந்தப் பங்கீடு குறித்து மிகச் சிறுபான்மையினரும் தங்கள் கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

*தலைவர்:* நீங்கள் கூறுவது நியாயமானதே, நாம் ஒரு சிறு குழுவாக அமைந்து இது பற்றி இன்னும் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று விரும்புகிறேன்.

*திரு. ஃபுட்:* எந்தக் குறிப்புகளும் எடுக்கப்படாமல்?

*தலைவர்:* நீங்கள் அனுமதித்தால் கூட்டத்திற்கு நானே தலைமை வகிக்கிறேன்; சர் முகமது ஷாபி தெரிவித்த மிகவும் நம்பிக்கை ஊட்டும் யோசனையால் ஏற்பட்டுள்ள நிலைமையை மேம்படுத்த நாம் என்ன செய்ய முடியும் என்பதை ஆலோசிப் போம்.

## ஆறாவது அமர்வு—ஜனவரி 16, 1931

*தலைவர்: ''பல்வேறு பிரிவு வகுப்பினர்களின் மத, கலாசார வாழ்வினைப் பாதுகாக்கின்ற அடிப்படை உரிமைகள் வழங்குதல், அரசியலமைப்பில் பிரகடனப்படுத்துவதைச் சேர்த்தல் மற்றும் இன வேறுபாடின்றித் தனிநபர் ஒவ்வொருவருக்கும் பெறுவது மற்றும் பல; ''சுதந்திரமாக உபயோகித்தல்'' போன்ற பல.

*ராஜா நரேந்திரநாத்:* ''சுதந்திரமாக உபயோகித்தல்'' என்று நாம் சொல்ல நான் முன்மொழிகிறேன்.

*தலைவர்:* ''அவருடைய அல்லது அவளுடைய பொருளாதார, சமூக குடிமை உரிமைகளை.''

*ராஜா நரேந்திரநாத்:* ''அவருடைய அல்லது அவளுடைய'' என்பதை நாம் விரும்புகிறோம் என்று நான் நினைக்கவில்லை.

''குடிமக்கள் சுதந்திரமாக, சமத்துவமாக பொருளாதர்ர சமூக, குடிமை உரிமைகளை உபயோகித்தல்'' என்று ஏன் நாம் சொல்லக் கூடாது. அதனை நான் வலியுறுத்தவில்லை.

*தலைவர்:* ''சமத்துவம்'' என்பதில் பொருள் உண்டு. மற்றவை முக்கியமானது என நான் கருதவில்லை.

*ராஜா நரேந்திரநாத்:* ''சுதந்திரமாக, சமத்துவமாக உபயோகித்தல் என்று நாம் சொல்ல வேண்டுமென ஆலோசனை கூறுகிறேன்.

*தலைவர்:* உண்மையிலே, டாக்டர் அம்பேத்கரிடமிருந்து ஒரு கேள்வி வந்துள்ளது.

''*ராஜா நரேந்திரநாத்:* சமத்துவம் என்ற வார்த்தை டாக்டர் அம்பேத்கர் உரையில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

*சர் எம். ஷபி:* ''சுதந்திரமான'' என்ற வார்த்தையில் அது அடங்கும் என நான் கருதுகிறேன்.

டாக்டர் ஷபஹத் அகமத் கான்: இப்போதுள்ளவாறே அது இருக்கலாம் என நான் நினைக்கிறேன்.

*தலைவர்:* ''தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும்... சுதந்திரமாக உபயோகிக்கப் பெறுவது'' என்று இது குறிப்பிடுகிறது. சமத்துவமாக உபயோகித்தலைப் பெற முடியாது. ஏனெனில் சமத்துவம் என்பது உரிமைகளை உபயோகிப்பவரின் குணத்தைப் பற்றியதாகும்.

*ராஜா நரேந்திரநாத்:* உரிமைகளில் சமத்துவம், சம உரிமை, இதைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

---

* துணைக்குழு நடவடிக்கைகள் எண் III (சிறுபான்மையினர்) பக்கங்கள் 129-31.

*திரு சிந்தாமணி:* சமத்துவம் என்ற வார்த்தையின் தகுதியுடைமையை நாள் காணவில்லை.

*ராஜா நரேந்திரநாத்:* டாக்டர் அம்பேத்கரின் வரைவில் இது உபயோகிக்கப்பட்டுள்ளது.

*தலைவர்:* தனிநபர் ஒவ்வொருவரும் தன் உரிமைகளை உபயோகிக்க பெற்றுத்தரலாம். ஆனால் தனிநபர் ஒருவர் சமத்துவ முறையில் அதை உபயோகிக்காவிட்டால் அது அவரின் பொறுப்பு, அரசாங்கத்தினுடையதல்ல.

*ராஜா நரேந்திரநாத்:* மிகச் சரியானது.

*தலைவர்:* ''அவருடைய'' அல்லது ''அவளுடைய'' என்ற வார்த்தைகள் வரலாம் என நினைக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* பத்தியில் இறுதியில் வரும் ''உரிமைகள்'' என்ற வார்த்தைக்குப் பின்னர் ''பாகுபாடின்றி'' என்ற வார்த்தையைச் சேர்த்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

*தலைவர்:* ஏற்கெனவே சொல்லுகிறது ''இனம், ஜாதி, மதம் அல்லது பால் வித்தியாசமின்றி,'' எனக் கூறப்பட்டுள்ளது.

*டாக்டர் அம்பேத்கர் :* ''தீண்டாமை'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம். அங்கே தாங்கள் சேர்த்து இருக்கிறீர்களே?

*தலைவர் :* .... ''தீண்டாமை'' ஏற்கனவே இனம் மற்றும் சாதி (சேர்க்கப்பட்டு) உள்ளதே.

*டாக்டர் மூன்ஜி :* அது சரியாக இருப்பதாக நான் நினைக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* விஷயத்தைத் தெளிவாக்குவதற்கு அந்த வார்த்தையைச் சேர்க்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

*தலைவர் :* இதில் பயன்படுத்திய வார்த்தைகளைப் பார்த்து மக்கள் சிரிக்கின்ற வகையில் ஒரு ஆவணத்தை நாம் தயாரிக்கக் கூடாது.

*டாக்டர் அம்பேத்கர் :* சாதிக்கும், தீண்டாமைக்குமுள்ள வேறுபாட்டை நாம் காண வேண்டும். ஒரு சாதியைச் சேர்ந்த பல மக்கள் தீண்டாமையால் இன்னல்படுவதில்லை.

*ராஜா நரேந்திரநாத் :* முஸ்லீம் மக்களிடையேயும் சாதிகள் உண்டு.

*திவான் பஹதூர் இராமச்சந்திர ராவ் :* தீண்டத்தகாத மக்கள் மத்தியிலும் சாதிகள் உண்டு. ''சாதி'' என்பது, பரந்த பொருள் உள்ள சொல்லாகும்.

*மிஸ்டர் ஃபுட் :* முழுப்பொருள் உள்ள ஒரு மாற்று வார்த்தைச் சொல்லப்பட்டாலொழிய இத்தருணத்தில் மாற்று வார்த்தை பயன்படுத்துவது ஒரு வகையில் காலதாமதமானதாகும் என நினைக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* ''தீண்டாமை அல்லது வேறுவகை காரணமாகச் சமூக, குடிமை உரிமைகள்'' என்று கூற நான் விரும்புகிறேன்.

*தலைவர் :* தீண்டாமை அனுசரிப்பது என்பது சமூக உரிமை களை மீறுவதாகும். தெளிவுள்ள ஒரு வார்த்தையினை கூறுவதற் குப் பதிலாக, வார்த்தைகளை அடுக்கி கொண்டே போனால், உண்மையில் பிரத்தியேகமான ஒரு போக்கினை அது உண்டு பண்ணுகிறது. பொதுவான ஒரு கொள்கையைத் தனிப்பட்ட முறையில் பயன்படுத்துவது குறுகிய நிலைக்குக் கொண்டு செல் லும். நீங்கள் பொதுக் கொள்கையினை வலுவானதாக வைத்துக் கொண்டால், அதன் பயன் சம்பந்தப்பட்டவரை ஒரு குறிப்பிட்ட குறையினை மேற்கோள் காட்டுவதற்காகப் பயன்படுத்துவதை விட அது உங்களுக்கு பாதுகாப்பானதாகும்.

*டாக்டர் அம்பேத்கர் :* அது உண்மைதான். எவ்வாறு பொருள் கொள்ளப்படுகிறது என்ற கேள்வியும் எழுகிறது என்பதையும் நான் உறுதியாகக் கூறுகிறேன். தீண்டாமை காரணமாக எவ்வித மான குறைபாடுகளையும் திணிக்கக் கூடாது என்று துணைக்குழு கருதியது என்பதை இந்த அறிக்கையினைச் செயலாக்குபவர்கள் யாராக இருந்தாலும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதே நான் விரும்புவது.

*தலைவர் :* இது போன்ற விஷயத்தில், ஏதாவது சந்தேகமிருந் தால், குழுவின் கருத்தினை அறிந்து, முடிவு செய்வேன். டாக்டர் அம்பேத்கர் அவர்களே, இன்னும் உங்களது நிலையிலிருந்து பிடி தளராமல் இருக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர் :* அவ்வாறு நான் இருக்க வேண்டி யது குறித்து வருந்துகிறேன். எனது மாற்று அபிப்பிராயததை குறித்துக் கொள்ளுங்கள். இது இன்னும் தெளிவாக்கப்பட வேண்டுமென விரும்புகிறேன்.

*தலைவர் :* ''வித்தியாசம்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'பாரபட்சம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதால், ''இனம், சாதி பற்றி பாரபட்சமின்றி'' இவ்வாறு பல என்று அதை வாசிக்கலாம். இது ஒரு ஆலோசனை யாகச் சொல்லப்பட்டுள்ளது.

*டாக்டர் அம்பேத்கர் :* அது சரியாக இருக்கும். இறுதியில் ''பாரபட்சமின்றி'' என்று இருக்க வேண்டுமெனக் கூறுகிறேன்.

*தலைவர் :* சரி, அந்த மாற்றத்தைத் தயவு செய்து அறிமுகம் செய்வீர்களா? அதனால், பாரபட்சம் என்னும் சொல் இருக்காது.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்;

*தலைவர் :* அது ஒரு நல்ல திருத்தம். மற்றது மட்டமானதாக இருந்திருக்கக் கூடும்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் அம்பேத்கர் :* ஐயா, நான் புரிந்து கொண்டவரை, இக்குழுவிடம் பல்வேறு வகுப்பினர் அளித்த கோரிக்கைகளை பத்தி 3 சுருக்கிக் கூறுகிறது.

*தலைவர் :* ஆம்.

*டாக்டர் அம்பேத்கர் :* இதர சிறுபான்மையினரின் நிலையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை வேறுபட்டு இருப்பதன் காரணமாக, தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பாகத் தங்களின் நலன் கருதிக் கேட்டுள்ள இதர கோரிக்கைகளும் சேர்க்கப்பட வேண்டும் என்று யோசனை கூறுகிறேன். இம்மாநாட்டினால் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக அவை சேர்க்கப்பட வேண்டுமென நான் சொல்லவில்லை. ஆனால், முழுமை பெற்றதாக இருப்பதற்கு இக்கோரிக்கைகளையும் இணைக்க வேண்டும். எனவே, ''உரிமைகள்'' என்ற வார்த்தைக்குப் பின், இந்தப் பத்தியுடன் பின்வரும் பத்தியினைச் சேர்க்க வேண்டுமெனக் கருத்துத் தெரிவிக்கிறேன்: ''தீண்டாமை, அது தொடர்புள்ள தடைகளும் சட்டத்தின் மூலம் ஒழிக்கப்படவேண்டுமென தாழ்த்தப்பட்ட மக்கள் மேலும் வலியுறுத்தினர். அவர்களுக்குள்ள உரிமைகளைச் சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் அனுபவிக்க அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும். மேலும், அவர்களது பாதுகாப்பிற்கு குந்தகம் விளைந்தாலோ அல்லது அலட்சியம் ஏற்பட்டாலோ கவர்னர் ஜெனரலுக்கு மேல்முறையீடு செய்யும் அதிகாரமும் வேண்டுமெனக் கோருகின்றனர்.''

*தலைவர் :* ஆனால், இந்த ஆலோசனைகளைச் செயல்படுத்துவது சம்பந்தப்பட்டவரை, தயாரிக்கப்படவுள்ள செயற்குறிப்புகளில் விவரமாக குறிப்பு வடிவம் பெறும்.

*டாக்டர் :* அதனை நான் முற்றிலும் புரிந்து கொள்ள முடிகிறது.

*தலைவர் :* கொஞ்சம் சட்டமாக்குவதாகவும், கொஞ்சம் நிர்வாகம் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும்.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆனால் நான் சொல்ல விரும்புவது இதுதான். குழுவிடம் பல்வேறு உறுப்பினர்களும், தாழ்த்தப்பட்டோரும், இதர வகுப்பினருக்குத் தேவையானதைத் தவிர, தங்களுக்கே தனிப்பட்ட முறையில் அளிக்கப்பட்டக் கோரிக்கைகளை இந்தப் பத்திச் சுருக்கிக் கூறுகிறபடியால், இது முழுமை பெறுவதற்கு இதனைச் சேர்க்க வேண்டும்.

*தலைவர் :* ''பாரபட்சமின்றி'' மற்றும் இவ்வாறு சில என்று கூறுகிறது.

*டாக்டர் அம்பேத்கர் :* மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களே! நீங்கள் மன்னிப்பீர்களென நம்புகிறேன். அரசியலமைப்புச் சட்டம் எந்த மனிதனுக்கும் பாரபட்சம் காட்டப்பட மாட்டாது என்று சொல்லுவதும் ஒன்று, மற்றும் ஒவ்வொரு மனிதனும்

சுதந்திரமாக அனுபவிக்க உத்திரவாதமளிக்கப்படும் என்றும், இவ்வாறு பல என்று கூறுவது. ஆனால், சொல்லப்போனால், உண்மைகளுக்கு எதிரியாக நாம் உள்ளோம் என்பதையும் அரசிய லமைப்பால் நமக்களிக்கப்பட்ட உரிமைகளை அனுபவிக்க மக்கள் நம்மை அனுமதிக்க மாட்டார்கள் என்பதையும் நான் அறிவேன். நான் உயிருடன் இருப்பது எப்படி எனக்கு உறுதியாகத் தெரி யுமோ, அது போல் அது பற்றி உறுதியாக நான் அறிவேன். காகிதத்தில் மட்டும் அளிக்கும் உத்திரவாதத்தை நான் விரும்ப வில்லை. சமுதாயம் முழுவதும் எங்களுக்கு எதிராக இருக்கும். எங்களுக்களிக்கப்பட்டதில் பத்தில் ஒரு பங்கினைக் கூட நாங்கள் எக்காலத்திலும் நிச்சயமாக அனுபவிக்க முடியாது. ஒவ்வொரு வகுப்பினருக்கும் உள்ளது போல் எங்களுக்கும் குறிப்பிட்ட உரிமைகள் வழங்கப்படும் என்று அரசியல் அமைப்பு பிரகடனப் படுத்துவதோடு, அத்தகைய உரிமைகளைப் பயன்படுத்தும் போது எங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான வழிவகைகளை அரசிய லமைப்பு அளிக்கும் என்பதையும் பிரகடனப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய ஆவல்.

*தலைவர்:* விஷயம் என்னவென்றால், உதாரணமாக, ஒரு சட்டமன்றம் உங்களுடைய வசதிக்கேற்ற சட்டத்தை நிறைவேற்றா விட்டால், அரசியலமைப்பு குலைந்து விட்டது என்று அர்த்தமா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை. நான் கூறும் கருத்து இதுதான். நான் சுற்றில் விட்டுள்ள கோரிக்கை மனுவில் எங்களது உரிமை களைப் பயன்படுத்தும்போது இக்குழு, அது அவ்வாறு செய் வதற்கு அது தகுந்த முறை என்று ஒத்துக் கொள்ளாதிருக்கலாம். அதனைச் செய்வதற்கு இதர வழிவகைகள் இருப்பதாக குழு ஆலோசனை கூறலாம். இத்தகைய இதர வழிமுறைகளைப் பரிசீலனை செய்வதற்கு நான் திறந்த மனத்துடன் இருக்கிறேன்; முற்றிலும் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புவது இதுதான்: தாழ்த்தப்பட்ட மக்கள் இதர வகுப்பினருடன் சம அந்தஸ்தோடு வைக்கப்பட்டுள்ளனர் என்று சாதாரணமாகப் பிரகடனப்படுத்துவதோடு, அவர்கள் திருப்தி யடையவில்லை என்று தாழ்த்தப்பட்டோர் கருத்துத் தெரிவித்தார் கள் என்பதையும், அத்தகைய உரிமைகளை அரசியல் அமைப்பு வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்தினார்கள் என்பதையும் இந்த வரைவு அறிவிக்கவேண்டும். இதற்கு அதிகமாக நான் எதை யும் கேட்கவில்லை. அதாவது, அறிக்கை என்ற வகையிலும் கூட முழுமை பெற வேண்டும். நான் சமர்ப்பித்துள்ள கோரிக்கை மனுவில், அதற்காக நான் சில நடைமுறைகளைப் பரிந்துரை செய்துள்ளேன் என்பதை நீங்கள் காணமுடியும்.

*மிஸ்டர் ஃபுட்:* டாக்டர் அம்பேத்கரிடம் எனக்கு அனுதாபம் உண்டு. உங்களுடைய கருத்தினைக் கூறும் அறிக்கையினை வைக்க ஆரம்பித்தால், அது ஒரு முழுமையானதாக இருக்க வேண்டிய

திருக்கும் என்பதுதான் நான் காணும் ஒரே சிரமம். எழுப்பப்பட்ட கோரிக்கைகள் ஏற்கனவே குறிப்புகளில் உள்ளன. பத்தி 16 இறுதியில், இங்கு மீண்டும் கூறப்பட்ட, அனுதாபத்துடன் நிறை வேற்றப்பட்டவை உள்ளது. நீங்கள் ஒரு கோரிக்கையை முன் வைக்க விரும்பினால், அனேகமாகக் கோரிக்கை மனுவில் (மெமோ ரண்டம்) அது முற்றிலும் குறிப்பிடப்படாது இருக்கும் இடையூறு இருக்கலாமென எனக்குத் தோன்றுகிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* பத்தி 16-ஐப் பொறுத்தவரை, கடைசி இரண்டு வரிகள் தாழ்த்தப்பட்டோர் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவர்களுக்கு (தாழ்த்தப்பட்டோர்) ஒதுக்கப்படும் இடங்கள் பற்றித் தான் கூறுகின்றன என்பதைக் கூற விரும்புகிறேன். அது முற்றி லும் வேறு விஷயமாகும். நான் கூறிக் கொள்வது இதுதான். அரசியலமைப்பு சில உரிமைகளை வழங்கலாம்; ஆனால் இந்தியா விலுள்ள மக்களில் 99 சதவீதத்தினர் நான் அந்த உரிமைகளை உபயோகிப்பதை அனுமதிக்கப் போவதில்லை. எனது உரிமை களை யாரும் மீறி நடந்தால் அவருக்குச் சில தண்டனைகளை அளிக்க அரசியலமைப்பு வகை செய்தாலொழிய, அந்தக் காகித உரிமைகளால் எனக்கு என்ன உபயோகம்? நான் சொல்லுவது இதுதான். எனது கருத்தை இக்கூட்டம் ஏற்றுக் கொள்ள வேண்டு மென நான் வலியுறுத்த மாட்டேன். தாழ்த்தப்பட்டோர் சார்பாக இத்துணைக் குழுவிடம் நான் சொல்லியுள்ள கருத்துக்களை உள்ளடக்கிடும் வகையில் அரசியலமைப்பு முழுமையாக்கப்பட வேண்டுமென்பதுதான் நான் விரும்புவதாகும்.

*தலைவர்:* உங்களது கருத்துக்கு எங்களுக்கு எல்லா அனுதாப மும் உண்டு. அதனை ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், அடிப்படை உரிமைகளைப் பிரகடனப்படுத்தும் பத்தி ஒன்றினை அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்ப்பதற்கும், அத்த கைய அடிப்படை உரிமைகளை நிறைவேற்றும் சட்டங்களை வரைவு செய்வதற்கும் உள்ள வித்தியாசம் உண்மையான ஒன்றாகும். உறுதிமொழியினை அமல் செய்யவிருக்கும் சட்டத் தின் விவரங்களை அரசியலமைப்பு பிரகடனத்தில் நீங்கள் புகுத்த முடியாது. உங்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கின்ற போது முழு விவரங்களின்றி, உரிமைகள் அரசியலமைப்பில் பிரகடனப் படுத்தப்படும் போது நீங்கள் உங்களது மக்களின் பிரதிநிதி என்ற முறையில், சட்டமன்றத்தில் இதர மக்களுடன் ஒத்துழைக்கும் போது, அரசியலமைப்பிலுள்ள உரிமைப் பிரகடனத்தை நிறை வேற்றுகின்ற, நீங்கள் நினைக்கின்ற சட்டத்தைக் கொண்டு வர வேண்டியதுதான் நீங்கள் செய்ய வேண்டிய காரியமாகும். ஏனென்றால், அரசியலமைப்பில் எதனையும் அதிகமாக விவரங் கள் அளிக்கும் முறையில் புகுத்தினால், அந்த விஷயத்தில் அரசிய லமைப்பு (உறுதிமொழி) நிறைவேற்றப்படாவிட்டால், அரசிய லமைப்புச் சட்டம் அமுலாக்கப்படவே இல்லை என்பதாகும். எனவே, நீங்கள் அவ்வாறு எப்போதும் செய்ய முடியாது.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் சமர்ப்பிப்பது இதுதான். இந்த அடிப்படை உரிமைகள் பிரகடனத்தால் எவ்விதப் பயனுமில்லை என்பதை நான் முற்றிலும் உங்களுடன் ஒத்துக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்தவரை இதற்கு நான் முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஏனெனில் ஒரு தனி நபருக்கு அவருடைய உரிமைகளை பிரகடனப்படுத்துவது அவ்வளவு முக்கியமானதல்ல. அத்தகைய உரிமைகளை அமுலாக்குவதற்காக அவருக்குப் பரிகாரம் இருக்க வேண்டும். அதுதான் பிரகடனத்திலுள்ள உரிமைகளுக்குப் பயனுள்ள உத்தரவாதமாகும். எனவே, எனக்கு தவறு இழைக்கப்படும் போது நான் பரிகாரம் ஒன்றினைப் பெறும் வகையில் அரசியலமைப்பு எனக்கு ஒரு வகை வழி முறையை அளிக்க வேண்டும் என்பதை நான் கூற விரும்புகிறேன். ''தீண்டாமை'' இல்லை என்றும், இவ்வாறு பரவலாகக் கூறுவதில் எவ்விதப் பயனுமில்லை.

*தலைவர்:* உண்மையிலே, இக்கருத்து நமது உள்ளங்களில் தெளிவாக உள்ளது. எனவே மீண்டும் இதனை வலியுறுத்த வேண்டியதில்லை. ஆனால், டாக்டர் அம்பேத்கர் சொல்லுவது என்னவெனில் சட்டத்தால் அமலாக்கப்பட்டாலொழிய, அரசியலமைப்பில் பிரகடனப்படுத்துவது தனக்கு எவ்வித நன்மையும் பயக்காது என்பதுதான். அது அவ்வாறு உள்ளது. சட்டத்தால் அமலாக்கும் பொருட்டு, தண்டனைகளையும், குற்றங்களையும் கூறும் சட்டத்தை உருவாக்கவேண்டும்—முதலில் குற்றங்கள், பின்னர் தண்டனைகள். இத்தகைய குற்றங்களை நீங்கள் உருவாக்க முடியாது. ரீடிங் பிரபு அவர்கள் கையில் நான் இருக்கிறேன் என்று—பத்திரமாக அல்ல—நினைக்கிறேன். அவர் ஒரு வழக்கறிஞர்—நான் அப்படியல்ல—உங்களுடைய அரசியலமைப்பிற்கு ஒரு பொதுவான அறிமுக உட்பிரிவை வரைவு செய்யும் போது, நீங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் கோரும் உரிமைகளை விட அதிகமான உரிமைகளை வழங்கும் ஒரு குற்றத்தினை அப்பிரிவின் மூலம் நீங்கள் உருவாக்க முடியாது. அரசியலமைப்பின் கீழ் உங்களுக்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. என்ன நிலைமை என்பது பற்றி எனக்கு நிச்சயமாக தெரியவில்லை. உதாரணமாக இப்பிரகடனத்தை மீறியதற்காக உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட நபர் ஒருவர் துன்புறுத்தப்பட்டால், நீதி கோரி நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாதா?

*லார்டு ரீடிங்:* உண்மையில், அதற்காக அவருக்குச் சில பரிகாரம் நீங்கள் கொடுக்க வேண்டும். அதை நீங்கள் ஒரு சிறிய குற்றமாகக் கருத வேண்டும்.

*தலைவர்:* அவ்வாறு அரசியலமைப்பில் செய்ய முடியுமா?

*லார்டு ரீடிங்:* இல்லை. அவ்வாறு செய்ய முடியுமென நான் நினைக்கவில்லை; மன்னிக்கவும்; டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அதனை வலியுறுத்துவார் என்று நான் நினைக்கவில்லை. அதை

நான் புரிந்து கொண்டவரை, அவர் இக்கோரிக்கையை முன் வைத்தார் என்றும், ''சுதந்திரமாகப் பயன்படுத்துதல்'' இன்னும் பலவற்றைப் பிரகடனப்படுத்துவதினால் மட்டும் அவர் திருப்தி யடையவில்லை என்றும் ஒரு திட்டவட்டமான அறிக்கையை நாம் அளிக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். இத்தகைய உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக அவருக்குப் பாதுகாப்பு கிடைத்தாலொழிய, அது (பிரகடனம்) அவருக்கு எவ்வகையிலும் பயனுள்ளதாக இல்லை என்ற உண்மையைத் தெரிவிக்க சிறப்பு கவன ஈர்ப்பு செய்துள்ளார் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென அவர் விரும்புகின்றார். அவர் அத்துடன் நிறுத்திக் கொண்டுள்ளார். இதன் பின்னர் தீர்வு என்ன என்பதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர்: அதுவே என்னுடைய விளக்க்மாகும்.

### அறிக்கையின் 4-வது பத்தி பற்றிய விவாதம்

டாக்டர் அம்பேத்கர்: பத்தி 4-ல் கண்ட இரண்டாவது துணைப் பத்திக்கு ஒரு திருத்தம் கொண்டு வர விரும்புகிறேன். ''ஒரு குறுகிய ஆரம்ப காலம் தவிர'' என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட வேண்டுமென விரும்புகிறேன். ''மேலும், ஒரு குறுகிய ஆரம்ப காலம் தவிரத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஏற்புடையதாகும்'' என்று இப்போது இவ்வாறு படிக்கலாம்.

தலைவர்: வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்படின் நீங்கள் அதை ஏற்றுக் கொண்டீர்களென நினைக்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர்: வயது வந்தோருக்கு வாக்குரிமை இருக் கிறதோ, இல்லையோ பத்தாண்டுகளுக்கு எங்களுக்குத் தனித் தொகுதிகள் வேண்டுமென்று நான் கூறினேன்.

தலைவர்: ''மற்றும் ஒரு மாற்று காலத்திற்குப் பின்னர் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஏற்புடையதாக இருக்கும்'' — இது சரியா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம்.

தலைவர்: அது மிகவும் சரியாக உள்ளது என்று ஒத்துக் கொள்கிறீர்களா?

திரு. சிந்தாமணி: ''வாக்குரிமை, வயது வந்தோர் வாக்குரி மையை அடிப்படையாகக் கொண்டது'' என்ற நிபந்தனையை நீக்கி விடவேண்டுமா?

திரு. சிந்தாமணி: ''வாக்குரிமை, வயது வந்தோர் வாக் குரிமையை அடிப்படையாகக் கொண்டது'' என்ற நிபந்தனையை நீக்கிவிட வேண்டுமா?

தலைவர்: இல்லை; நிகழ்த்தப்பட்ட உரைகளை நாம் மாற்ற முடியாது. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சொன்னது என்ன

வென்றால் நான் தப்பிதமாகச் சொன்னால் அவர் என்னைத் திருத்தலாம்—வயது வந்தோர் வாக்குரிமை இல்லாத பட்சத்தில், தனித் தொகுதிகள் அவர்கள் கேட்பார்கள்; ஆனால், வயது வந்தோர் வாக்குரிமை இருந்தால், ஒரு மாற்று, காலத்திற்குப் பின்னர் அந்தக் (தனித்தொகுதி) கோரிக்கையை விட்டு விடு வார்கள். இவ்விதம் சரியாக இருப்பதை மாற்றுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

### அறிக்கையின் 12-வது பத்தி மீது விவாதம்

*டாக்டர் அம்பேத்கர்:* 12-வது பத்தி ஆரம்பத்தில் பின் வரும் வார்த்தைகளைச் சேர்க்க வேண்டுமென விரும்புகிறேன்: ''சிறுபான்மையினரும் மற்றும் தாழ்த்தப்பட்டோரும் தங்களது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலன்றி இந்தியாவிற்கான எந்தத் தன்னாட்சி அரசியலமைப்பினையும் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்று தங்களது உறுதிப்பாட்டில் திடமாக இருக்கின்றனர்.'' பின்னர் நீங்கள் இம்மாதிரி படிக்கலாம்: ''பரிந் துரைகளுக்குப் பொதுவான சம்மதம் இருந்தது'' மற்றும் இவ்வாறு பல. என்னைப் பொறுத்தவரையில், புதிய அரசியலமைப்பில் நாங்கள் பாதுகாக்கப்படுகிறோம் என்று எங்களுக்கு உறுதிமொழி யளிக்கப்பட்டாலன்றி, பொறுப்பாட்சி கொள்கை சம்பந்தப்பட்ட எந்த அரசியலமைப்பிற்கும் எங்களது சம்மதத்தைத் தர முடியாது என்பதை இக்குழுவின் கூட்டத்தில் பேசிய நேரத்தில் நான் தெளிவாக்கியிருக்கிறேன் என எண்ணுகிறேன். இக்கருத்தில் உடன் பாடு கொள்ள இதர வகுப்பு மக்கள் விரும்பாவிட்டால், தாழ்த்தப் பட்ட இன மக்களின் சார்பில் நான் கொடுக்கும் எனது சொந்த அறிக்கையாகும்.

*லெப்டினெட் கர்னல் கிட்னே:* இந்த அறிக்கையில் எனக்கு உடன்பாடு உள்ளது.

*தலைவர்:* உண்மையில், இந்த அறிக்கை கற்பனையானதாக இல்லை, பிரதிநிதித்துவ முறையில் அளிக்கப்பட்டுள்ளது; ஒரு தனி நபர் அறிக்கையாக மட்டுமல்ல. அத்துடன், அது இவ் வறிக்கையில் சேர்க்கப்பட்டால், அதனுடைய விளைவு என்ன என்பதை நீங்கள் காண முடியும், உங்களில் ஒரு சிலர் சொல்லு வீர்கள்: ''எங்களுடைய உரிமைக் கோரிக்கைகள் திருப்தியாக நிறைவேறவில்லை''. இக்குழுவின் தீர்ப்பல்ல, இது, செய்யப் படுவது திருப்தி தருகிறது என்று ஒவ்வொருவரும் கூறினாலன்றி, செய்யப்படும் (ஒவ்வொன்றிற்கும்) தடைக்கற்களை இது போடு கிறது. சந்தேகமில்லாமல் குழுவிற்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையினை ஏற்றுக் கொள்ளுவதும், மாநாட்டிற்கு குழு அனுப்புகின்ற அறிக்கையில் பதிவு செய்வதற்கு அவசியமாகும் வகையில் இதனை மாற்றி அமைப்பதும் விவேகமானதாகுமா என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்

படும் ஒரு பொருள் என்ற அடிப்படையில், எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை.

*லார்டு ரீடிங் :* இந்த குறிப்பிட்ட பத்தியில் இதனுடைய பங்கு என்ன என்பதைக் காணுவது சற்று சிரமமானதாகும். இது நிர்வாகக் குழு (Executive) பற்றி விவரிக்கிறது. புதிய அரசியலமைப்பு பற்றிக் கூறப்பட்ட ஒரே ஒரு குறிப்பு அது செயல்படும் முறை பற்றியதுதான்.

*டாக்டர் அம்பேத்கர் :* எனது நிலை தெளிவாக உள்ளது. என்னைப் பொறுத்தவரை நான் ஒரு அறிக்கையை மட்டும் சாதாரணமாக அளிக்கவில்லை. சில கோரிக்கைகளை நான் எழுப்பினேன் என்று மட்டும் சபை நடவடிக்கை அறிக்கையில் பதிவானதை நான் விரும்பவில்லை. இது பற்றி என்னுடைய உள்ளக் கிடக்கை உணர்வுகளை இந்த அறிக்கை பதிவு செய்ய வேண்டுமெனவும் விரும்புகிறேன். ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது மறுக்கப்படவோ நான் சாதாரணமாக இந்த அறிக்கையினை அளிக்கவில்லை. இக்கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவது இது ஏற்றுக் கொள்ளப்படும் நிபந்தனையின் அடிப்படையில்தான் என்று மட்டுமே நான் சொன்னேன்.

*லார்டு ரீடிங் :* இப்பத்தியில் இது எவ்வாறு வரக்கூடும் என்று எனக்குத் தெரியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர் :* எந்த இடத்திலும் இது வரலாம். பொது ஒப்பந்தங்கள் பற்றி இது விவரிப்பதால், இச்சில வரிகள் இப்பத்தியில் மேல் தகுந்தவாறு வரலாம் என்று நான் நினைத்தேன். இது தகுந்ததா இல்லை என்று நீங்கள் கருதினால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

*தலைவர் :* இது இந்த இடத்தில் வருமென நான் நினைக்கவில்லை. எவ்வாறு அதை இங்கே இணைக்க முடியும்? மீண்டும் அதை எழுப்பலாம். உண்மையில் சொல்லப்போனால், காமன்சு சபையின் (House of Commons)) மசோதாவில் காணும் ஒரு பிரிவு என்றுதான் சொல்லுகிறோம்; பிரிவு 16-க்குத் திருத்தம் என்று சொல்லுவதில்லை. ஒரு புதிய உட்பிரிவு 1.2-க்குத் திருத்தம் அல்ல.

*டாக்டர் அம்பேத்கர் :* மூன்றாவது வரியில் இவ்வாறு இதைப் படிக்க வேண்டும்: ‘‘மாநில நிர்வாகக் குழுக்களில் முக்கியமான சிறுபான்மை வகுப்பினர்கள், அதாவது, இந்துக்கள், முகமதியர்கள் மற்றும் சீக்கியர்கள், பிரதிநிதித்துவம் பெறுவது மிக முக்கியமான, நடைமுறை முக்கியத்துவம் பெற்ற ஒரு விஷயமாகும் என்று .......’’ என்னுடைய திருத்தம் இது தான்: ‘‘முக்கிய்மான’’ என்ற வார்த்தையை நாம் எடுத்துவிட வேண்டும். ஏனெனில், சிறுபான்மையினர்களிடையே எவ்வித பாரபட்சமும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. ஆனால் எந்த சிறுபான்மையினரின்

பெயரையும் குறிப்பிடக் கூடாது, மேலும் அவ்வாறு செய்தால், எல்லாச் சிறுபான்மையினரின் பெயர்களையும் குறிப்பிட வேண்டும்.

*டாக்டர் மூன்ஜி :* அதைத்தான் நானும் சொல்ல வந்தேன்.

*தலைவர்:* இங்குக் குறிப்பிடப்பட்ட அறிக்கையில் இவ்வார்த்தைகள் உள்ளதால், அவைகள் (இங்கு) கூறப்பட்டன என்பதுதான் உண்மையில் காரணமாகும். திருத்தம் என்ன? நீங்கள் ஏற்றுக் கொள்ளாத எதையும் இங்கே சேர்க்கப் போவதில்லை. ''மாநில நிர்வாகக் குழுவில் (Provincial Executive) சிறுபான்மை வகுப்பினர் பிரதிநிதித்துவம் என்று.''

*டாக்டர் அம்பேத்கர் :* அத்துடன் நிறுத்திக் கொள்ளலாம். ''இந்துக்கள், முகமதியர்கள் மற்றும் சீக்கியர்கள்'' என்பதை நீக்கி விடவும்.

*தலைவர் :* அது என்ன பொருள்படுகிறது என்பதைப் பார்ப்போம். பின்னர் இவ்வாறு இதைப் படிக்கலாம் : ''வெற்றிகரமாகச் செயல்பட மாநில நிர்வாகக் குழுக்களில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் மிகப் பெரிய நடைமுறை முக்கியத்துவமான ஒரு விஷயமாகும் என்று.'' இன்னும் இவ்வாறு பல.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்;

*தலைவர் :* ஒவ்வொரு சிறுபான்மையினரும், அது 8, 9, 10 அல்லது 12-ஆக இருப்பின், நிர்வாகக் குழுவில் (Executive) ஒரு பிரதிநிதி பெற்றிருக்க வேண்டுமென்பது பொருள்.

*டாக்டர் அம்பேத்கர் :* இல்லை; அப்படியெனில் நான் இதனை சேர்ப்பேன்: ''முடிந்த அளவில் ஆளுநர் (கவர்னர்) தீர்ப்புரிமைக்கு விட்டு விடுதல்.'' எந்த ஒரு வகுப்பினரும் குறிப்பாகக் குறிப்பிடப் படுவதை நான் விரும்பவில்லை.

*லார்டு ரீடிங் :* நிச்சயமாக இது என்ன கூறுகிறது என்று நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டும். ''துணைக்குழு எண்—II பரிந்துரை பற்றி பொதுவான சம்மதம் இருந்தது (மாநில அரசியல் அமைப்பு)''. பின்னர், இதை மேற்கோள் காட்டுகிறது.

*டாக்டர் அம்பேத்கர் :* அப்படி செய்யலாகாது.

*டாக்டர் மூன்ஜி :* என்னுடைய கருத்து சிறியதுதான். ஆனால், அது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கருத்திற்கு ஒத்ததாக அனேகமாக இருக்கும். அதே மாதிரியான வரிகளில் உள்ளன. ''முக்கியமான சிறுபான்மை வகுப்பினர், அதாவது முகமதியர்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.'' இது எனது சிறிய திருத்தம்.

*லார்டு ரீடிங் :* அப்படியானால், இதர வகுப்பினர்களையும் குறிப்பிட வேண்டும்.

*டாக்டர் மூன்ஜி:* என்னுடைய கருத்து சிறியதுதான். ஆனால், அது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கருத்திற்கு ஒத்ததாக அனேகமாக இருக்கும் அதே மாதிரியான வரிகளில் உள்ளன. ''முக்கியமான சிறுபான்மை வகுப்பினர், அதாவது முகமதியர்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்'' இது எனது சிறிய திருத்தம்.

*லார்டு ரீடிங்:* அப்படியானால், இதர வகுப்பினர்களையும் குறிப்பிட வேண்டும்.

*சர் ஏ.பி. பத்ரோ:* தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்துக்கள் இல்லையா? தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை நீக்கிவிடுவார்களா? அவர்கள் (தாழ்த்தப்பட்ட இனத்தினர்) இந்துக்கள் அல்ல என்று கூறப்படும் கருத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் உண்டு என்று நான் மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தென் இந்தியாவிற்குப் போய், அவர்கள் இந்துக்கள் அல்ல என்று சொன்னால், பின்னர் டாக்டர் அம்பேத்கரின் நிலை தென் இந்தியாவில் என்னவாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* அது பற்றி இங்கு நாம் விவாதிக்க வில்லை.

*சர் ஏ.பி. பத்ரோ:* எனவே, பிரதிநிதித்துவம் என்பது உண்மைக்கும் அனுபவங்களுக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும்.

*தலைவர்:* இங்குக் குறிப்பிடப்பட்ட அறிக்கையை மேற்கோள் காட்டினேன். ''இந்துக்கள், மகமதியர்கள் மற்றும் இதர வகுப் பினர்.'' இவை உதாரணத்திற்காக கூறப்பட்டன என்று எனக்கு தெரிவிக்கப்பட்டது. அறிக்கையில் இந்த வார்த்தைகள் இல்லை.

*சர் முகமது ஷாபி:* அதைத்தான் நான் சொல்லப் போகிறேன்.

*தலைவர்:* சற்று, ஒரு நிமிடம். ''மாநில நிர்வாகக் குழுக்களில் முக்கியமான சிறுபான்மை வகுப்பினர்கள் பிரதிநிதித்துவம் என்று'' வருவதை ''முக்கியம்'' என்ற வார்த்தை குறிப்பிடுகிறது. எனவே, ''முக்கியம்'' என்பது இருக்கவேண்டும்.

*உறுப்பினர்கள்:* ஆம்.

*தலைவர்:* ஆனால், ''இந்துக்கள், முகமதியர்கள் மற்றும் சீக்கியர்கள்'' நீக்கப்பட வேண்டும். அவை அங்கு இருக்கத் தேவை இல்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* இதிலிருந்து தொடர்ந்து பேசு வதற்கு முன், ''புதிய அரசியலமைப்பு செயல்படுதல் மற்றும் கூட்டாட்சி நிர்வாகக் குழுவில் (Federal Executive) முகமதியர்கள் அதே காரணங்களின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது'' என்ற வார்த்தை

களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். ''முக்கியமான சிறுபான்மையினர்'' என்ற வார்த்தைகளை ''முகமதியர்கள்'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாகப் பயன்படுத்த வேண்டும். ஆரம்பத்திலிருந்தே நாம் சொல்லுவதற்கேற்ப இது அமையும்.

*தலைவர் :* ஆம்; ''அதே காரணங்களால் இதுவும் ஒத்துக் கொள்ளப்பட்டது.''

*டாக்டர் அம்பேத்கர் :* ''கூட்டாட்சி நிர்வாகக் குழுவிலும் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.''

*தலைவர் :* ''கூட்டாட்சி நிர்வாகக் குழுவில் முக்கியமான சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்''. சிறு பிரிவுகளாக உள்ள சிறுபான்மையினர் சார்பில், அவர்களுக்காக தனியாகவோ அல்லது கூட்டாகவோ மாநில மற்றும் கூட்டாட்சி நிர்வாகக் குழுக்களில் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது; அல்லது ஒவ்வொரு அமைச்சரவையிலும் தனியாகப் பொறுப்பேற்றுள்ள ஒரு அமைச்சர் இருக்க வேண்டுமென்றும்'' மற்றும் இவ்வாறு சில. இதுதான் கோரிக்கையாக முன் வைக்கப்பட்டது.

*லார்டு ரீடிங் :* ஆம்.

*தலைவர் :* அதிகாரபூர்வமாக வைக்கப்பட்டது.

★ ★ ★ ★ ★

**தலைவர் :* முறையாக நடவடிக்கைகளில் பதிவு செய்வதற்கு 'முகமதியர்கள்' என்ற வார்த்தையை உபயோகிப்பது முற்றிலும் சரியாக உள்ளது.

*சர் முகமது ஷபி :* கூட்டாட்சி என்பது சிறப்பான அடிப்படையிலுள்ளது.

*தலைவர் :* ''முகமதியர்கள்'' (என்ற வார்த்தை) இடம் பெறுகிறது.

திரு. ஜோஷி: ஆம்; அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* அப்படியெனில், ''முகமதியர்கள்'' என்ற வார்த்தையுடன் ''மற்றும் இதர முக்கிய சிறுபான்மையினர்'' என்பதையும் சேர்க்க வேண்டும்.

*தலைவர் :* இல்லை; அவ்வாறு செய்ய முடியாது. அதுதான் கோரிக்கை.

*டாக்டர் அம்பேத்கர் :* அவ்வாறு எனக்காகச் சொல்லக் கூடாதா? என்னைப் பொறுத்த வரையில், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சார்பாகவும் நான் பேசுகிறேன்.

---

* துணைக்குழு III-ன் (சிறுபான்மையினர்) நடவடிக்கைகள் பக். 144-46.

*திரு. ஜோஷி :* அது ஒத்துக்கொள்ளப்படவில்லை. நீங்கள் அந்தக் கோரிக்கையை எழுப்பவில்லை.

*டாக்டர் அம்பேத்கர் :* நான் அதனை எழுப்பினேனா இல்லையா என்பது கேள்வியல்ல.

*தலைவர் :* இப்போது நாம் கூட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். பதினோரு மணிக்கு இரண்டு நிமிடங்களே உள்ளன.

*டாக்டர் மூன்ஜி :* ''ஒத்துக் கொள்ளப்பட்டது'' என்ற வார்த்தைக்குப் பதிலாக, ''அதே காரணங்களினாலும் அது கோரப்பட்டது'' என்று நாம் சொல்ல வேண்டுமெனக் கேட்கிறேன்.

*சர் முகமது ஷபி :* இல்லை, இல்லை; அது ஒத்துக் கொள்ளப்பட்டது. இது உண்மை.

*டாக்டர் மூன்ஜி :* கூட்டாட்சி அமைப்புக் குழுவில் என்ன நடந்தது என எனக்குத் தெரியாது.

*சர் முகமது ஷபி :* நடவடிக்கை குறிப்பு கூறுகிறது.

*டாக்டர் மூன்ஜி :* ஆனால், இப்போது நான் இங்கே இக்கருத்தினை ஒத்துக்கொள்ளவில்லை.

*சர் ஏ.பி. பத்ரோ :* அது ஏற்றுக் கொள்ளப்பட்டது; அடுத்த பத்தியிலுள்ளது.

*டாக்டர் மூன்ஜி :* ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

*தலைவர் :* முகமதியர்கள் அங்கீகரிக்கப்பட்ட வேண்டுமென்ற அறிக்கை வைக்கப்பட்டது; நடவடிக்கை குறிப்பின்படி, அது ஒத்துக் கொள்ளப்பட்டது. அது இப்போதுதான் நடவடிக்கை குறிப்புகளிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது.

*திரு. ஜோஷி :* இக்குழுவின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்தா மேற்கோள் காட்டப்பட்டது?

*லெப் கர்னல் கித்னே :* இவ்விஷயம் குழு கூட்டத் தொடர் கூட்டம் நடைபெற்றபோது நான் தெளிவான அறிவிப்பு ஒன்றை அளித்தேன். நான் அளித்த அறிவிப்பின் பொருள் இதுதான்; பெரும்பான்மை வகுப்பினர் சிலவற்றைக் கோருவது அவர்களுக்கு நல்லதுதான்; ஆனால் சிறுபான்மையினர் ஒரு வகை பிரதிநிதித்துவம் கோரினர்.

*தலைவர் :* அது குறிப்பிலுள்ளது.

*லெப். கர்னல் கித்னே :* அது ஒரு மாற்று வழியே.

*தலைவர் :* இல்லை; அது, அப்படி அல்ல. இவ்வாக்கியம் மாற்றுவழி ஒன்றைச் சொல்லுகிறது. ஆனால், சிறுபான்மையினருக்கு நேரடியாகவோ, அல்லது அப்படிப் கிடைக்காவிட்டால், அதாவது பின்னால் அது முடியாவிட்டால்.... பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென கோரப்பட்டது எனக் கூறுகிறது.

*லெப். கர்னல் கித்னே:* அதைத்தான் நாங்கள் விரும்பு கிறோம்.

*ராவ் பஹதூர் பன்னீர்செல்வம்:* ''இது முடியாவிட்டால்'' என்பதற்குப் பதில் ''இது முடியாது என்று கண்டு கொள்ளப் படும் பட்சத்தில்'' என்பதைச் சேர்க்கலாம்.

*தலைவர்:* ஆம்; ''இது முடியாவிட்டால்'' என்பதற்குப் பதி லாக ''இது முடியாது என்று கண்டுகொள்ளப்படும் பட்சத்தில்'' என்று இருக்கலாம். அதற்குப் பதிலாக ''இது முடியாது என்று கண்டுகொள்ளப்படும்'' என்பதை ஏன் சேர்க்கக் கூடாது என்பதற் குக் காரணம் எதுவுமில்லை.

*லார்டு ரீடிங்:* என்ன வித்தியாசம் இருக்கிறது? மாற்றிக் கொள்ளக்கூடிய சொற்றொடர்கள் பற்றிப் பேசிக் காலத்தைச் செலவிடுகிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

*சர்தார் உஜ்ஜல் சிங்:* வேறு வகுப்பினர் யாருக்காவது கூட்டாட்சிச் செயலாக்கக் குழுவில் இடம் பெற வகை செய்யவும், ''முக்கியமான சிறுபான்மையினர்'' என்ற வார்த்தைகளை இடை யில் இணைக்கவும் ஏதாவது ஒரு வகையில் ஒருவித ஏற்பாடு செய்யலாம்; கட்டாயமாக அல்ல; ஆனால், ஏதாவதொரு ஏற்பாடு அங்கு இருக்க வேண்டும்.

*தலைவர்:* உங்கள் தகவலுக்காக உண்மை நிலையினைச் சொல்லவா? கூட்டாட்சி செயலாக்கக் குழுவில் ஒவ்வொரு சிறுபான்மையினருக்கும் இடம் கொடுக்க முடியாது.

*டாக்டர் அம்பேத்கர்:* என்னுடைய கருத்தைத் தெளிவாக்க விரும்புகிறேன். மாநில அரசியலமைப்பில் நாம் என்ன செய்திருக் கிறோம் என்றால், கவர்னர் (ஆளுநர்) அவ்வாறு செய்ய (சிறு பான்மையினருக்கு இட ஒதுக்கீடு) முயற்சி செய்ய வேண்டுமென்ற கடமையினை அவர் மீது சுமத்தியுள்ளோம். அவரைக் கட்டுப் படுத்தவில்லை; ஆனால் அவரது முயற்சியில் இதர முக்கியமான சிறுபான்மை / வகுப்பினரிடமிருந்தும் தேர்ந்தெடுக்க அவருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். அரசியலமைப்பில் கட்டுண்டவர் அல்லர். நாம் என்ன செய்துள்ளோமென்றால் அவர் மீது ஒரு கடமையைச் சுமத்தியுள்ளோம். தேர்வு செய்வதற் காகவல்ல; சாதாரணமாக முயற்சி செய்வதற்கான கடமையைச் சுமத்தியுள்ளோம். உண்மையில், அவரைக் கட்டாயப்படுத்த வில்லை. ''முகமதியர்கள்'' என்ற வார்த்தைகளுக்குப் பின்னர் ''இதர முக்கியமான சிறுபான்மை வகுப்பினர்கள்'' என்பது வர வேண்டும்.

*தலைவர்:* இல்லை; அந்தக் கருத்தை நாம் நிறைவேற்றியுள் ளோம். இப்போது நாம் இரண்டாவது குறிப்பை விவாதிக் கிறோம்.

*சர் ஏ. பி. பத்ரோ :* 13-வது பத்தியினைப் பார்ப்போம்.

*டாக்டர் அம்பேத்கர் :* பத்தி 12-வதுக்கு நான் 'கூறிய மாறு பட்ட கருத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

*சர்தார் உஜ்ஜல்சிங் :* ''முகமதியர்கள்'' என்ற வார்த்தைக்குப் பின்னர், ''இதர முக்கியமான சிறுபான்மையினர்கள்'' என்பதைச் சேர்க்க வேண்டும்.

*லெட் கர்னல் கித்னே :* இதர சிறுபான்மையினருக்கு ஏன் கதவு மூடப்பட வேண்டும்?

*தலைவர் :* நான் உண்மையில் தீர்ப்புக் கூற வேண்டும். நான் ஏற்கனவே சொன்னது போல், இதர சிறுபான்மையினருக்கு (வழி) மூடப்படவில்லை. இப்போதைய வார்த்தைகள் மீதான திருத்தங்களைக் குறித்து வீவாதிக்க வேண்டுமென நான் முற்றிலும் விரும்புகிறேன்; ஆனால் நீங்கள் தப்பிதமான பிரச்சினைகளை எழுப்பக் கூடாது. இதர சிறுபான்மையினருக்கும் கூட பிரதிநிதித் துவம் வேண்டுமென்ற கோரிக்கையினை இது எழுப்புகிறது; ஆனால், இது முடியவில்லை என்று தெரிந்தால்—மாற்று வகை சொல்லப்பட்டுள்ளது—ஒரு அமைச்சர் இருக்க வேண்டும். இங்கு எழுப்பப்பட்ட கோரிக்கைக்குத் தெளிவான பதிவு இதுதான், பத்தி 12 ஏற்றுக் கொள்ளப்பட்டது.

*டாக்டர் அம்பேத்கர் :* எங்களுடைய மாற்றுக் கருத்துப் பதிவாக வேண்டும்.

*தலைவர் :* சரி.

(துணைக்குழு எண். III *(சிறுபான்மையினர்)* இறுதியாக ஒப்புக்கொள்ளப்பட்டபடி பத்தி 12)

*12. புதிய அரசியலமைப்பு வெற்றிகரமாகச் செயல்பட மாகாண நிர்வாகக் குழுக்களில் முக்கியமான சிறுபான்மை வகுப் பினர் பிரதிநிதித்துவம் பெறுவது நடைமுறை முக்கியத்துவமுள்ள ஒரு விஷயமென்று துணைக்குழு எண். II (மாகாண அரசிய லமைப்பு) செய்துள்ள பரிந்துரை ஒத்துக் கொள்ளப்பட்டது; மேலும், அதே காரணங்களின் அடிப்படையில் முகமதியர்களுக் குக் கூட்டாட்சி நிர்வாகக் குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது. மாகாண மற்றும் கூட்டாட்சி நிர்வாகக் குழுக்களில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டாகவோ மிகச் சிறிய சிறுபான்மையினர் சார்பில், பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப் பட்டுள்ளது. அல்லது இது சாத்தியமல்ல என்று தெரிந்தால், ஒவ்வொரு அமைச்சரவையிலும் சிறுபான்மையினர் நலத்தினைப் பாதுகாக்கும் கடமை உணர்வுள்ள அமைச்சர் ஒருவர் இருக்க வேண்டுமென்றும் (கோரிக்கை முன்வைக்கப்படுகிறது).*

*(டாக்டர் அம்பேத்கர் மற்றும் சர்தார் உஜ்ஜல் சிங் வரி—6ல் ''முகமதியர்கள்'' என்ற வார்த்தைக்குப்பின் ''மற்றும் இதர முக்கியமான சிறுபான்மையினர்'' என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்வார்கள்)

★ ★ ★ ★ ★

## அறிக்கையின் 18-வது பத்தி மீது விவாதம்

** தலைவர் : பத்தி 17 நீக்கப்படுகிறது. அதனால் 18-வது பத்தி, 17-வது பத்தியாக மாறுகிறது. வட்டமேஜை மாநாட்டின் முன்பு இந்த அறிக்கை வைக்கப்பட வேண்டுமென முன்மொழியப் படுகிறது. ஏற்போர் ஆம் என்க; மறுப்போர் இல்லை என்க; இது நிறைவேற்றப்படுகிறது. வட்டமேஜை மாநாட்டின் முன்பு இது வைக்கப்படும்.

டாக்டர் அம்பேத்கர் : ஐயா, என்னுடைய திருத்தம் ஒன்று உள்ளது.

தலைவர் : மன்னிக்கவும்; இது முடியாது; மன்னிக்கவும்.

டாக்டர் அம்பேத்கர் : பத்தி 16-க்குப் பின்னர் இத்திருத்தத்தை ஒரு தனிப்பத்தியாகச் சேர்க்க விரும்புகிறேன்.

தலைவர்: இறுதிப் பத்தியாக வைத்துக் கொள்ளலாமா?

டாக்டர் அம்பேத்கர் : சரி;

தலைவர் : அப்படியானால், இது முன்னுரிமை பெற்ற பத்தியாகிவிடும்.

டாக்டர் அம்பேத்கர் : எனது திருத்தம் இதுதான்; சிறுபான்மையினர் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ''தங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழிய இந்தியாவிற்கான சுயாட்சி அரசு அரசியலமைப்பிற்கு ஒப்புதல் அளிக்க மாட்டார்கள் என்பதில் நிச்சயமாக உறுதியுடன் இருக்கிறார்கள் என்று''

தலைவர் : உண்மை நிலைத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது; மேலும் இக்கருத்து பொறுப்பான முறையில் கூறப்பட்டுள்ளது; இது ஒரு தனிப்பட்ட நபரின் கருத்தல்ல.

டாக்டர் அம்பேத்கர் : இது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென விரும்புகிறேன்.

திரு. ஜோஷி : இந்த அறிக்கைபடி, தொழிலாளர் ஒரு சிறுபான்மையினர் என்று கருதப்பட மாட்டார்கள் என எண்ணுகிறேன்.

---

* விவாதத்திற்குப் பின் துணைக்குழு III ஏற்றுக் கொண்ட பத்தி 12.

** துணைக்குழு III (சிறுபான்மையினர்) நடவடிக்கைகள், ப. 153.

*தலைவர்:* அதை நான் நிராகரித்துவிட முடியாது.

*டாக்டர் அம்பேத்கர்:* ''அவர்களின் கோரிக்கைகள் ஒரு நியாயமான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய'' என்னும் வார்த்தைகளை நான் ஒத்துக் கொள்வேன்.

*தலைவர்:* (அவ்வாறு கூறுவது) அதனை அர்த்தமற்றதாக்கி விடுகிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* அல்லது ''அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் ஒத்துக்கொள்ளப்பட்டன.''

*திரு. ஜாஃபருல்லா கான்:* நியாயமான முறையில் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவர்கள் மகிழ்ச்சியடைவார்களென யாராவது நினைக்கிறீர்களா?

*மிஸ்டர் ஃபுட்:* இது ஒரு கோரிக்கையினைப் பதிவு செய்தல் தான்.

*தலைவர்:* இது ஒரு கோரிக்கையினைப் பதிவு செய்தல்தான். அந்தப் பத்தி, 18-வது பத்தியெனப் புதிய பத்தியாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

பின்னிணைப்பு — 1

# வருங்காலத் தன்னாட்சி இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் அரசியல் காப்புரிமைக்கான ஒரு திட்டம்

## * மூன்றாம் துணைக்குழுவின் — (சிறுபான்மையோர்) அறிக்கைக்குப் பின்னிணைப்பு

(டாக்டர் பீம்ராவ் ஆர். அம்பேத்கரும் இராவ் பகதூர் ஆர். ஸ்ரீனிவாசனும் அளித்தது)

தன்னாட்சிப் பெற்ற இந்தியாவில் பெரும்பான்மையினர் ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களை உட்படுத்திக் கொள்ள சம்மதிப்பதற்கான நிபந்தனைகள் :

### நிபந்தனை எண் : 1

ஒத்த குடியுரிமை

தற்போதுள்ள நிலையில் பரம்பரை அடிமைத்தனத்தில் வாழும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தங்களைப் பெரும்பான்மையினரின் ஆளுகைக்கு உட்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிக்க இயலாது. பெரும்பான்மையோர் ஆட்சி அமைக்கப்படுவதற்கு முன் தீண்டாமை வழக்கத்திலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்பது செயல் வடிவம் பெற்றதொரு உண்மையாக வேண்டும். அந்த ஆட்சியைப் பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு விடக் கூடாது. நாட்டின் மற்ற குடிமக்களுக்குரிய பொதுவான குடியுரிமைகளுக்குச் சமமாக அனைத்துக் குடியுரிமைகளையும் அனுபவிக்கும் அளவுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் சுதந்திரக் குடிமக்களாக்கப்பட வேண்டும்.

(அ) தீண்டாமையை ஒழிப்பதற்கும் சம குடியுரிமையை உருவாக்குவதற்கும் பின்வரும் அடிப்படை உரிமை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக இடம்பெற வேண்டும்.

அடிப்படை உரிமை

அமெரிக்க அரசியல் சட்டத் திருத்தம் XIV மற்றும் அயர்லாந்து அரசாங்கச் சட்டம், 1920, 10 மற்றும் 11, பெரும்பகுதி 5, பகுதி-67. பிரிவு 5(2)

''இந்திய நாட்டின் அனைத்துக் குடிமக்களும் சட்டத்தின் முன் சமமானவர்கள்; அனைவரும் சமக் குடியுரிமைகளைப் பெற்றுள்ளார்கள். நடைமுறையிலுள்ள சட்டம், ஒழுங்கு முறை, ஆணை, வழக்காறு அல்லது சட்டத்தின் பொருள் விளக்கம் ஆகிய எதன் பெயராலும் இழைக்கப்படும் தண்டனையோ,

* மூன்றாம் துணைக்குழுவின் (சிறுபான்மையோர்) செயல்முறைகள், பக். 168-76.

தீங்கோ, குறைபாடோ அல்லது தீண்டாமையின் காரணமாக நாட்டின் எந்தக் குடிமகன் மீதாகிலும் காட்டப்படும் பாகுபாடோ இந்த அரசியல் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து இந்தியா வில் எவ்வித விளைவினையும் ஏற்படுத்தும் தன்மையை இழக் கிறது.''

(ஆ) 1919-ஆம் ஆண்டைய இந்திய அரசாங்கச் சட்டத்தின் 110 மற்றும் 111-வது பிரிகளின்படி நிர் வாக அதிகாரிகள் தற்போது அனுபவித்து வரும் காப்புரிமைகளும், விலக்குரிமை களும் ஒழிக்கப்படவும், ஓர் ஐரோப்பிய பிரிட்டிஷ் குடிமகன் விஷயத்தில் இவர்கள் எத்தகைய நடவடிக்கை எடுப்பார்களோ அவ்வாறே எடுக்கப்பட வேண்டிய பொறுப்பு நீட்டிக்கப்பட வேண்டும்.

**இது அனைத்து அரசிய லமைப்புச் சட்டங்களிலும் உள்ளது. பேராசிரியர் கீத் அவர்களின் கருத்துரை.... பகுதி 207, பக்கம் 56.**

### நிபந்தனை எண் : 2

### ஒத்த உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவித்தல்

ஒத்த உரிமைகளை அறிவிக்கும் பிரகடனத்தை மட்டும் பெற் றிருப்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பயனளிப்பதாகாது. ஒடுக்கப் பட்ட மக்கள் தமது ஒத்தக் குடியுரிமையைச் செயல்வடிவில் அனுபவிக்க முயலும் போது, வைதீகக் கூட்டத்தாரின் கடும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிய நிலைவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆதலால், இந்த உரிமைகளின் பிரகடனங்கள் வெறும் பெயரளவு வாசகங்களாக இல்லாமல், நடைமுறை வாழ்வின் உண்மைக் கூறுகளாக இருக்க வேண்டுமாயின் ஒடுக்கப் பட்ட மக்கள் துய்க்கும் அத்தகைய உரிமைகளில் தலையிட்டுத் தொல்லை கொடுப்போர் உடல்வலி மற்றும் அபராதத்தின் மூலம் தண்டிக்கப்பட்டுத் தாங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஒடுக்கப்பட்ட மக்கள் விரும்புகிறார்கள்.

(அ) ஆதலால், குற்றங்கள், செயல்முறைகள், தண்டனை ஆகியவற்றுடன் சம்பந்தபட்ட 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் 11-ஆம் பகுதியுடன் பின்வரும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும் என்னும் திட்டத்தினை ஒடுக்கப்பட்ட மக்கள் முன் வைக்கின்றனர்

(1) குடியுரிமை மீறும் செயற்குற்றம்

(அ) சட்டப்படி அனைத்து வகுப்பினருக்கும் மறுக்கப்படும் சலுகைகளைத் தவிர, முந்தைய தீண்டாமை நிலைமையைப் பொருட்படுத்தாமல், இட வசதிகள், அனுகூலங்கள், வாய்ப்பு வசதி கள் ஆகியவற்றையும் பொதுமக்களின் உபயோகத்திற்காக அளிக்கப்பட அல்லது உரிமையாக்கப்பட்ட பயணியர் விடுதிகள்,

**நிறைந்த அளவில் உள்ள அமெரிக்கச் சட்டங்கள், ஏப்ரல் 9, 1866-ல் மற்றும் மார்ச் 1, 1875-ல் நீக்கிரோக்களின் விடு தலைக்குப்பின் அவர்களின்**

**நலன் கருதி நிறைவேற்றப் பட்ட சிவில் உரிமைப் பாதுகாப்புச் சட்டங்கள்**

கல்வி நிலையங்கள், சாலைகள், தெருக்கள், வழிகள், குளங்கள், கிணறுகள், மற்ற நீர்நிலைகள், அரசின் நீர், நில, வான்வழிப் போக்குவரத்துகள், திரையரங்குகள் மற்றும் பொது மக்களுக்கான பொழுதுபோக்குமிடம், விடுமுறைப் போக்கிடம், கழிப்பிடம் முதலியவற்றை முழுமையாக அனுபவிக்கும் சிறப் புரிமைகளை எவருக்கேனும் மறுப்பவர் யாராக இருப்பினும் அவர், ஐந்தாண்டுகள் காலம் வரையில் நீடிக்கத் தக்க சிறைத் தண்டனைக்கும் அதன் மேலும் அபராதத்திற்கும் உள்ளாவார்.

(ஆ) ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய உரிமைகளை அமைதி யாக அனுபவிப்பதற்கு வைதீகர்களான தனி நபர்கள் தொல்லை தருவது மட்டுமே தடையாக இருப்பதில்லை. சமூகப் புறக்கணிப்பு (Social Boycott) மிகச் சாதாரணமாக நிலவிவரும் மற்றொரு தடை யாகும். ஒடுக்கப்பட்டமக்கள் செய்ய முனைகின்ற எந்தச் செயலும் வைதீகர் மனத்திற்கு உகந்ததாக இல்லாமற் போனால் அத்தகைய செயலை முறியடிப்பதற்கு அவர்கள் பயன்படுத்தும் கொடிய வல்லமை வாய்ந்த ஆயுதம் தான் சமூகப் புறக்கணிப்பு என்பதாகும். ''ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் கல்வி, பொருளாதார, சமூக வாழ்க்கை நிலைகளை விசாரித் தறியவும். அவர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளைப் பரிந்துரை செய்யவும்'' 1928-ல் பம்பாய் அரசாங்கத்தால் நிய மிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில், 'சமூகப் புறக்கணிப்பு' எவ்வாறு செயல்படுகிறது என்பதும், அது எந்தெந்த காலகட்டங் களில் செயல்படுத்தப்படுகிறது என்பதும் நன்கு விளக்கப் பட்டுள்ளது.

### ஒடுக்கப்பட்ட வகுப்பாரும் சமூகப் புறக்கணிப்பும்

''102. இலாபகரமான அனைத்துப் பொது காரியங்களிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களின் பொது உபயோகத்திற்குரிய வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமைகளைப் பெறு வதற்காக நாங்கள் பலவகையான பரிகாரங்களைப் பரிந்துரை செய்திருந்த போதிலும், ஒடுக்கப்பட்ட மக்கள் அவற்றைப் பயன் படுத்திக் கொள்ளும் போது பல்வேறு இன்னல்களைப் பல காலத்திற்கு அவர் எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கும் என அஞ்சுகிறோம். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக வைதீக வகுப் பார் புரியக் கூடிய வெளிப்படையான வன்முறைதான் முதலாவது இடையூறு. எல்லாக் கிராமங்களிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பதும் இதற்கு மாறாக மிகப் பெரும்பான்மையினராக உள்ள உயர்வகுப்பினர், தாங்கள் அனுபவித்துவரும் சுக போகங்களையும், கௌரவத்தையும் ஒடுக்கப் பட்ட வகுப்பார் கைப்பற்றிக் கொள்ளக் கூடிய வாய்ப்புகளை எல்லா வகைகளிலும் முயன்று முறியடித்துக் காத்துக் கொள்ளத்

துடிப்பாக உள்ளனர். காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற அச்சமே இந்த வன்முறைகளை ஒரு கட்டுக்குள் வைத்திருக்கிறது.

இரண்டாவது இன்னல் ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார நிலையினால் எழுவதாகும். மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் ஒடுக்கப்பட்டோர் பொருளாதாரச் சுதந்திரமின்றி உள்ளனர். சிலர் தாமாக முன்வந்து உயர்வகுப்பாரின் நிலங்களைக் குத்தகைதாரர்களாகப் பயிர் செய்கின்றனர். சிலர் உயர் வகுப்பாரின் பண்ணைக் கூலிகளாக உழைத்து வாழ்கின்றனர். எஞ்சியுள்ளோர் கிராமச் சேவகர்களாக ஊழியம் செய்து, உயர் வகுப்பினர் அளிக்கும் உணவு அல்லது தானியம் முதலியவற்றைப் பெற்றுப் பிழைப்பு நடத்துகிறார்கள். ஒடுக்கப்பட்டோர் துணிந்து தங்கள் உரிமைகளைத் துய்க்க முயலும்போது, அந்தக் கிராமங்களின் உயர்வகுப்பினர் தங்களுடைய பணபலத்தை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தித் தங்கள் நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றியும், அவர்களை வேலையிலிருந்து நீக்கியும், கிராம ஊழியம் செய்ததற்கான ஊதியத்தைக் கொடுக்க மறுத்தும் வந்திருக்கின்ற எண்ணற்ற நிகழ்ச்சிகளைக் கேட்டிருக்கின்றோம். ஒடுக்கப்பட்ட மக்கள் பொதுவழிப் பாதைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்குப் 'பனியா' எனப்படும் கிராம வணிகர்கள் அந்த மக்களுக்கு விற்பனை செய்வதை நிறுத்தும் நோக்கத்துடன் இந்தச் 'சமூகப் புறக்கணிப்பு' அடிக்கடி பெருமளவில் திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுகிறது. சாட்சியங்களை வைத்து நோக்கும் போது, ஒடுக்கப்பட்டோருக்கு எதிராகச் 'சமூகப் புறக்கணிப்'பை வெளிப்படையாக அறிவிப்பதற்குச் சிறு காரணங்கள்கூடப் போதுமானவை. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் பொதுக் கிணற்றைப் பயன்படுத்தும்போதெல்லாம் இந்தப் 'புறக்கணிப்பு' உடனுக்குடன் அறிவிக்கப்படுகிறது. ஒடுக்கப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் பூணூல் அணிந்தார் என்பதற்காக, ஒரு துண்டு நிலத்தை வாங்கியதற்காக, நல்ல ஆடை அணிகலன்களைப் புனைந்து கொண்டதற்காக, பொது வீதியில் மணமகனைக் குதிரைமீது அமரவைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்றதற்காகச் சமூகப் புறக்கணிப்பு சர்வ சாதாரணமாக நடந்திருக்கிறது.

ஒடுக்கப்பட்ட வகுப்பினரை நசுக்குவதற்கு இதைவிடக் கொடிய ஆயுதம் வேறெதுவும் கண்டுபிடித்திருக்க முடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. சமூகப் புறக்கணிப்பிற்கு முன் வெளிப்படையாக நடத்தப்படும் வன்முறை (Open Violence) என்பது ஒளிமங்கி இடம் தெரியாமல் போகக் கூடியது. ஏனெனில், சமூகப் புறக்கணிப்பு மிகப் பரந்த அளவில் உயிருக்குத் தீங்கு செய்யும் விளைவுகளை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. இது பிறருடன் தொடர்பு கொள்ளும் சுதந்திரக் கொள்கையைச் சார்ந்து, சட்டப்படிச் செல்லத்தக்கதாக இருப்பதால் மிகவும்

அபாயகரமானது. ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் மேம்பாட்டிற்காகப் பேச்சு மற்றும் செயல் சுதந்திரத்திற்கு நாம் உத்திரவாதம் அளிக்க வேண்டுமாயின் பெரும்பான்மையோரின் கொடுங்கோன்மையை உறுதியான கரம் கொண்டு அடக்க வேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.''

தங்களின் உரிமைகளுக்கும், உரிமைப் பேறுகளுக்கும் ஏற்படும் இத்தகைய தொல்லைகளைக் களைவதற்குச் சமூகப் புறக்கணிப்பினைச் சட்டத்தால் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாக்க வேண்டும் என்று ஒடுக்கப்பட்ட மக்கள் விரும்புகிறார்கள். எனவே, குற்றங்கள், நடைமுறைத் தண்டனைகள் ஆகியவற்றுடன் தொடர்புள்ள 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 11-வது பகுதியுடன் பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள்.

### 1. சமூகப் புறக்கணிப்புக் குற்றம்—பொருள் வரையறை

**இதுவும் மற்றும் கீழ்க் காணும் சட்டக் காப்பு வாசகங்களும் வழக்கின் தேவைக்கேற்ப ஒரு சில மாறுதல்களுடன் 1922-ஆம் ஆண்டு பர்மா சமூகப் புறக்கணிப்பு எதிர்ப்புச் சட்டத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.**

(அ) வீட்டை அல்லது நிலத்தை வாடகைக்கு விடவோ, உபயோகித்துக் கொள்ளவோ அல்லது இடத்தைக் கைக்கொள்ளவோ, அல்லது யாருடனாவது தொடர்பு கொள்ளவோ, வாடகைக்குப் பணியாற்றவோ அல்லது பிறருடன் வியாபாரம் செய்யவோ அல்லது அவருக்கு ஏதேனும் ஊழியம் கொள்ளவோ மறுத்திடுவோரும் அல்லது பொதுவான வணிகத் தொடர்பான நடவடிக்கைகளில் ஒப்பந்த விதிமுறைகளின்படிச் செய்யப்பட வேண்டிய எந்தக் காரியத்தையும் செய்ய மறுத்திடுவோரும், அல்லது

(ஆ) அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டு, அடிப்படை உரிமை அல்லது குடிமை உரிமைகளுடன் முரண்படாத, சமுதாயத்தில் சாதாரணமாக நிலவி வரும் வழக்காறுகளுக்கு மதிப்பளித்து ஆனால் மற்றவரின் சமூக, தொழில் மற்றும் வியாபாரத் தொடர்புகளிலிருந்து விலகி நிற்கிறாரோ அவரும், அல்லது

(இ) ஒருவர் சட்டப்பூர்வமான உரிமைகளைப் பயன் கொள்ளும்போது எவ்வகையிலேனும் அவரைக் காயப்படுத்துவோரும், கோபமூட்டுவோரும் அல்லது அவர் சட்டப்பூர்வமான உரிமைகளை அனுபவிப்பதற்குத் தலையிட்டுத் தடுப்பவரும் பிறரைச் சமூகப் புறக்கணிப்பு செய்ததாகக் கருதப்படுவார்.

## 2. சமூகப் புறக்கணிப்புக் குற்றத்திற்கான தண்டனை

சட்டப்படி செய்யத் தகுந்த எந்த ஒரு செயலையும் செய்த, அல்லது சட்டப்படியாகச் செய்யக்கூடாத எந்தச் செயலையும் செய்யத் தவறிய எவரையேனும் சமூகப் புறக்கணிப்பு செய்திடும், அல்லது சட்டப்படிச் செய்யக்கூடாத செயலை உள்நோக்குடன் எவரையேனும் செய்விக்கவோ, அல்லது சட்டப்படிச் செய்யத் தகுந்த எந்தச் செயலையும் ஒருவர் செய்யத் தவறுவதற்குக் காரண மாயிருக்கும் அல்லது அவ்வாறு செய்பவரின் உடல், உள்ளம், கீர்த்தி அல்லது சொத்து ஆகியவற்றிற்கோ அல்லது அவரின் வியாபாரத்திற்கோ அல்லது பிழைப்பிற்கோ கேடு வளைவிப் போர் யாராயிருப்பினும் அவரை அல்லது அத்தகையவரையோ அல்லது அவரது நலனில் அக்கறை கொண்டிருப்பவரையோ புறக்கணிப்புச் செய்ததாகக் கருதப்பட்டு ஏழாண்டுகள்வரை நீடிக் கும் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டினை யும் சேர்த்து அனுபவிக்கத்தக்க வகையில் தண்டிக்கப்படுவார்.

ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர், தூண்டுதல் பேரிலோ அல்லது மற்றொருவருடன் கூட்டாகச் சேர்ந்தோ அல்லது ஒரு சதியை நிறைவேற்றிடும் விதத்திலோ அல்லது ஓர் ஒப்பந்தத்தின் படியோ அல்லது மற்றவருடன் இணைந்து புறக்கணிப்புச் செய்யும் விதத்திலோ குற்றம் செய்யவில்லை என்பதாக நீதிமன்றம் திருப்தி யடைந்தால், அவர் இப்பிரிவின்கீழ்க் குற்றம் புரிந்தவராகக் கருதப் பட மாட்டார்.

## 3. சமூகப் புறக்கணிப்புச் செய்யத் தூண்டுதலுக்கு அல்லது ஆதரிப்பதற்கான தண்டனை

எந்த ஒரு தனிநபரையும் அல்லது வகுப்பாரையும், நபர் களையும் சமூகப்புறக்கணிப்புச் செய்வதற்காக,

அ) ஒரு திட்டத்தை வெளிப்படையாகத் தயாரித்திடும் அல்லது வெளியிடும், சுற்றறிக்கையாகப் பரப்பிடும் அல்லது,

ஆ) உள்நோக்கத்துடனோ அல்லது தான் செய்யப்போகும் செயலின் விளைவுகளைத் தெளிவாக அறிந்தோ அறிவிப்பு, வதந்தி அல்லது அறிக்கை செய்திடும் அல்லது வெளியிடும் அல்லது சுற்றறிக்கையாகப் பரப்பிடும் அல்லது

இ) வேறெந்த விதத்திலேனும் புறக்கணிப்பினைத் தூண்டிடும் அல்லது அதற்கு ஆதரவு தெரிவித்திடும் யாராயிருப்பினும் ஐந்தாண்டுகள் வரையில் நீடிக்கும் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டினையும் சேர்த்து அனுப்விக்கத் தக்கவாறு தண்டிக்கப்படுவார்.

*விளக்கம்:—* மேலே கூறப்பட்ட விதத்திலான எந்தச் செயலினா லாவது பாதிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்படும் நிலையில்

உள்ளவர் இதில் பெயர் மூலம் அல்லது வகுப்பின்மூலம் குறிப் பிடப்படவில்லையெனினும் அவர் செயல்படுமுறையின் வாயி லாக அல்லது சில குறிப்பிட்ட முறையில் செயல்படுவதினின்று விலகி யிருப்பதின் வாயிலாக, இந்தப் பிரிவின்கீழ் ஒரு குற்றம் புரிந்ததாகக் கருதப்படும்.

### 4. சமூகப்புறக்கணிப்புச் செய்வதாகப் பயமுறுத்தலுக்கான தண்டனை

சட்டப்படியாகச் செய்யத் தகுந்த எந்த ஒரு செயலையும் செய்த, அல்லது சட்டப்படியாகச் செய்யக்கூடாத எந்தச் செயலை யும் செய்யத் தவறிய எவரையும் சமூகப்புறக்கணிப்புச் செய்வதாகப் பயமுறுத்தும் அல்லது சட்டப்படிச் செய்யக்கூடாத செயலை உள்நோக்கத்துடன் எவரையேனும் செய்விக்கவோ அல்லது சட்டப்படிச் செய்யத்தகுந்த எந்தச் செயலையும் ஒருவர் செய்யத் தவறுவதற்கோ காரணமாயிருக்கும் எவரையும், ஒரு நபரையோ அல்லது அந்த நபரின் நலனில் அக்கறை கொண்டுள்ள பிற ரையோ புறக்கணிப்பு செய்வதாகப் பயமுறுத்துபவரையும் ஐந் தாண்டுகள் நீடிக்கும் காலவரைக்கும் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவை இரண்டு தண்டனைகளையும் சேர்த்து அனுபவிக்கத் தக்கவாறு தண்டிக்கப்படுவார்.

*விதி விலக்கு:—*

அ) உண்மையான தொழிலாளர் தகராறுக்குத் துணை புரிவ தாகச் செய்யப்படும் எந்தச் செயலும்

ஆ) சாதாரணமாக வணிகப் போட்டியின் காரணமாகச் செய்யப்படும் எந்தச் செயலும் புறக்கணிப்பு ஆகாது.

*பின் குறிப்பு:—* இக்குற்றங்கள் அனைத்தும் தெரிந்து செய்யப் பட்ட — ஆதலின் நடவடிக்கை எடுக்கத்தக்க (Cognizable Offences) குற்றங்கள் ஆகும்.

### நிபந்தனை எண்: 3

*உயர்வு தாழ்வு வேறுபாட்டிற்கு எதிரான பாதுகாப்பு*

ஒடுக்கப்பட்ட வகுப்பினர் வருங்காலத்தில் சட்ட அல்லது நிர்வாக ஆணையின் வாயிலாகத் தங்களுக்கு உயர்வு தாழ்வு வேறுபாடு காட்டப்படும் என்று பெரிதும் பயப்படுகின்றனர். ஆதலின் சட்டமன்றமோ அல்லது அரசு நிர்வாகமோ ஒடுக்கப் பட்ட வகுப்பாருக்கு எதிரான நச்சுத்தன்மை வாய்ந்த பாகு பாட்டினைச் செய்ய முடியாத அளவுக்குச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டாலொழிய அவர்கள் பெரும்பான்மை வகுப்பாரின் ஆட்சியின்கீழ்த் தங்களை உட்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிக்க மாட்டார்கள்.

ஆதலின்,

''இந்திய அரசின் எல்லைக்குப்பட்ட எல்லா நிலப்பகுதி களிலும் திண்டாமையின் கடந்தகால நிலை எவ்வாறிருந்தபோதி லும், நாட்டின் எந்தக் குடிகளின் உரிமைகளையும் மீறிடும் வண்ணம் சட்டம் இயற்றிடவோ அல்லது ஆணை, சட்டவிதி அல்லது ஒழுங்குமுறைச் சட்டம் பிறப்பிக்கவோ இந்தியாவில் உள்ள எந்தச் சட்டமன்றத்திற்கும் அல்லது நிர்வாகத் துறைக்கும் தகுதி கிடையாது,

எனவும்

1) ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும், நிறைவேற்றவும், வழக்காடவும், கட்சிக்காரரர்களாயிருந்து சாட்சியம் சொல்ல வும், மெய்யாகவோ, தனக்குரிய சொத்தினை வழிவழியாக அனுபவிக்கவும், வாங்கவும், குத்தகைக்கு விடவும், விற்கவும், தன்வசம் வைத்திருக்கவும் உரிமை மாற்றம் செய்வதற்குமான உரிமைகள்,

2) சிவில் மற்றும் இராணுவப் பணிகளில் சேர்வதற்கும், நாட்டின் அனைத்து வகுப்பைச் சார்ந்த குடிமக்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் போதுமான அளவில் கொடுக்கப்பட வேண்டும் என்னும் வகையிலான நிபந்தனைகளுக்கும் எல்லை வரையறைகளுக்கும் உட்பட்டு, அனைத்துக் கல்வி நிறுவனங் களிலும் சேர்வதற்கும் உரிமைகள்,

3) அனைத்து இனத்தவர், வகுப்பினர், சாதியினர், வருணத்தார் அல்லது சமயத்தைச் சேர்ந்த அனைத்துக் குடிமக்களுக்கும் சமமாகப் பொருந்துகின்ற நிபந்தனைகள் மற்றும் எல்லை வரையறைகளுக்கு உட்பட்டு இடவசதிகள்; அனுகூலங்கள், வாய்ப்பு வசதிகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை முழுமையாகவும் சமமாகவும் அனுபவிக்கும் தகுதியும், பயணியர் விடுதிகள், நதிகள், ஓடைகள், கிணறு கள், குளங்கள், சாலைகள், தெருக்கள், வழிகள், அரசின் நில, நீர்மற்றும் வான்வழிப் போக்குவரத்துகள், திரையரங்கு கள் மற்றும் விடுமுறைப் போக்கிடங்கள், பொழுதுபோக் கிடங்கள் ஆகியவற்றின் மீதான சிறப்புரிமைகள்.

4) பொதுமக்களுக்காக அல்லது ஒரே வித நம்பிக்கைக் கொண்டவர்களுக்காக அல்லது ஒரே சமயத்தைப் பின்பற்றுப வர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட சமய அல்லது அறக் கட்டளை நிறுவனங்களின் உதவிகளை எவ்வித வேறுபாடு மின்றிப் பங்கிட்டுக் கொள்வதற்கான தகுதியும் திறமையும் உள்ளவர்களாகக் கருதப்படும் உரிமைகள்,

5) தீண்டாமை நிலைமை முன்பு எவ்வாறு இருந்த போதி லும் அதனைப் பொருட்படுத்தாது மற்ற குடிமக்கள் அனுப விப்பது போலவே உடலுக்கும், உடமைகளுக்குமான பாது

காப்பினை அனைத்துச் சட்டங்களின், நடவடிக்கைகளின் முழுமையானதும் சமமானதுமான உதவிகளுக்கு ஒத்த உரிமை கொண்டாடவும், மற்ற குடிகளைப் போலவே சட்டப்படி தண்டனை, உடல்வலிகள் மற்றும் அபராதங்களுக்கும் கட்டுப் படுவதைத் தவிர வேறு எவருக்கும் கட்டுப்படாத உரிமைகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சட்ட முறையிலான காப்பு வாசகமாக இடம்பெற வேண்டும் என்று முன் மொழியப்படுகின்றது.

## நிபந்தனை எண்: 4

### *சட்டமன்றங்களில் போதுமான பிரதிநிதித்துவம்*

ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைக் காப்பதற்காக சட்ட மன்ற மற்றும் நிர்வாகத்துறை செயலின்மீது செல்வாக்குச் செலுத்து வதற்கு அவர்களுக்குப் போதுமான அரசியல் அதிகாரம் வழங்கப் பட வேண்டும். ஆதலின் கீழ்க்காணும் காப்புவாசகங்கள் தேர்தல் சட்டத்தில் இடம் பெறச் செய்ய வேண்டும்:

1) நாட்டின் மாநில மற்றும் மத்திய சட்டமன்றங்களில் போதிய பிரதிநிதித்துவத்திற்கான உரிமை

2) அவர்களின் சொந்த வகுப்பாரைத் தங்களின் பிரிதி நிதிகளாக, அ) வயதுவந்தோர் வாக்குரிமை மூலமாகவும் ஆ) முதல் பத்து ஆண்டு காலத்திற்குத் தனிவாக்காளர் தொகுதி (Separate electorate) மூலமாகவும், இட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகுதிகள் மூலமாகவும் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட வேண்டும். அதன் பின்னர் கூட்டு வாக்காளர் தொகுதி முறை வயதுவந்தோர் வாக் குரிமையுடன் சேர்ந்து வந்தாலொழிய, அத்தகைய கூட்டு வாக்காளர் தொகுதிமுறை ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் விருப்பத்திற்கு மாறாக அவர்கள்மீது திணிக்கப்பட மாட்டாது என்பது தெளிவாக்கப்படுகிறது.

*பின் குறிப்பு:—* பிற வகுப்பாருக்கு அளிக்கப்பட இருக்கும் பிரதிநிதித்துவத்தின் அளவு தெரியும்வரை ஒடுக்கப்பட்ட வகுப் பாருக்கு அளிக்கப்படும் போதுமான பிரதிநிதித்துவத்தின் அளவு வரையறுத்து உரைக்க இயலாது. ஆயின், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தங்களுக்கு அனுமதிக்கப்படுவதைக் காட்டிலும் மற்ற எந்த வகுப் பாருக்கு அதிக அளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இந்த வகையில் தங்களுக்குப் பாதகமான நிலை அமைவதை அவர்கள் ஏற்றிக் கொள்ள மாட்டார்கள். மாநிலங்களில் பிற வகுப்பாருக்கு அளிக்கப்ப்ட இருக்கும் பிரதி நிதித்துவ அளவு எப்படி இருந்தபோதிலும் பம்பாய், சென்னை மாநிலங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பினங் அவர்களின் மக்கள்தொகை விகிதத்திற்கு ஏற்றவாறு பிரதிநிதித்துவம் பெற வேண்டும்.

## நிபந்தனை எண்: 5

### அரசுப் பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம்

அரசுப்பணிகளைத் தங்களின் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலமாகவும் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விருப்புரிமையைத் (discretion) தவறாகப் பயன்படுத்துவதன் மூலமாகவும் நீதிக்கும், நேர்மைக்கும், நல்மனச் சான்றுக்கும் சற்றேறும் இடமளிக்காமல் ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்குப் பாதகமாகவும் உயர்சாதி இந்துக் களுக்குச் சாதகமாகவும் செயல்படும் உயர்சாதி அதிகாரிகளின் கைகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் எல்லையற்ற அளவில் துன்புற்றிருக்கிறார்கள். அரசுப்பணிகளில் சாதி இந்துக்களின் ஏகபோக உரிமையை ஒழிப்பதன் மூலமாகவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளிட்ட அனைத்து வகுப்பாருக்கும் உரிய பங்கினைப் பெறும் வகையில் பணியமர்த்தும் செயலைச் சீராக்குவதன் மூல மாகவும் இத்தகைய தீர்குகள் தவிர்க்கப்பட முடியும். இந்த நோக்கத் திற்காக கீழ்க்காணும் திட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியாகச் சட்டப்பூர்வமாக இயற்றப்பட வேண்டும் என்று ஒடுக்கப்பட்ட மக்கள் விரும்புகிறார்கள்.

1) அரசுப்பணிக்கு ஆள் எடுப்பது மற்றும் அரசுப் பணி களை முறைப்படுத்துதல் ஆகிய பொறுப்பினை ஏற்றிக் கொள்ளவும், இந்தியா முழுமைக்கும், இந்தியாவின் ஒவ் வொரு மாநிலத்திலும் அரசுப்பணியாளர் தேர்வாணையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

2) சட்டமன்றத்தினரால் கொண்டு வரப்படும் தீர்மானத்தி னாலன்றி அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழுவின் உறுப் பினர் நீக்கப்படக் கூடாது. பணி ஓய்வுக்குப்பின் அரசின்கீழ் எந்த ஒரு பதவிக்கு அவர் நியமிக்கப்படக் கூடாது.

3) நிர்ணயிக்கப்பட்ட தகுதித்திறன் சோதனைகளுக்கு உட்பட்டு—(அ) அனைத்து வகுப்பாரும் தங்களுக்குரிய போது மான பிரதிநிதித்துவம் பெற்றிடும் வகையில் பணியமர்த்தம் செய்வதும் (ஆ) பல்வேறு வகுப்பாரின் தற்போதைய பிரதி நிதித்துவ அளவுக்கு ஏற்ப எந்த ஒரு குறிப்பிட்ட பணியிலும் அவ்வப்போது வேலையில் முன்னுரிமை வழங்கச் சீர் செய்வ தும் அரசுப்பணியாளர் தேர்வாணயத்தின் கடமையாகும்.

## நிபந்தனை எண்: 6

### ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பாதகமான காழ்ப்பு நடவடிக்கைக்கு அல்லது அவர்தம் நலன்களின் புறக்கணிப்பிற்கு எதிரான குறைவுகளைத் தீர்த்தல்

வருங்காலத்தில் அமையவிருக்கும் பெரும்பான்மையோரின் ஆட்சி வைதீகக் கூட்டத்தாரின் ஆட்சியாக அமையும் என்பதால்

அத்தகைய பெரும்பான்மையோர் ஆட்சி தங்களிடம் அனுதாப உணர்வுடன் நடந்து கொள்ளாது என்றும், தங்களின் நலன் களுக்குப் பாதகமான நிலைமைகள் உருவாகும் என்றும், தங்களின் இன்றியமையாத் தேவைகள் புறக்கணிக்கப்படும் என்றும் ஒடுக்கப் பட்ட வகுப்பினர் அஞ்சுகிறார்கள்; இதை அலட்சியப்படுத்த முடியாது. எவ்வளவுதான போதுமான அளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டாலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அனைத்துச் சட்ட மன்றங்களிலும் சிறுபான்மையினராகவே இருப்பார்கள் என்ப தால் இதற்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகக் குறைகள் களையப்படும் வழிமுறைகளைப் பெற்றிருக்க வேண்டும் என ஒடுக்கப்பட்ட வகுப்பினர் நினைக்கிறார்கள். ஆதலின் கீழ்க்காணும் காப்பு வாசகம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற வேண்டும் என்று முன்மொழியப்பட்டுள்ளது:

''(1) ஒவ்வொரு மாநிலத்திலும் மாநிலத்திற்காகவும் இந்தியா

பிரிட்டிஷ் வட அமெரிக்க சட்டம், 1867, பிரிவு-93.

வில் இந்தியாவிற்காகவும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் கல்வி, சுகாதாரம், அரசசுப் பணிகளில் பணியமர்த்தப் பெறுதல் மற்றும் அவர்கள் சமூக, அரசியல் முன்னேற்றத்திற்காகவும், அவர் களுக்குப் பாதகமான எந்தச் செயலையும் செய்யாதிருக்கவும் போதுமான முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டியது சட்ட மன்றம், நிர்வாகத்துறை அல்லது சட்டத்தினால் அமைக்கப் படும் அதிகாரம் பெற்ற பொறுப்பாண்மைக் குழுவின் (authority) கடமையும் கடப்பாடும் ஆகும்.

''(2) எந்த மாநிலத்திலும் அல்லது இந்தியாவின் எந்த இடத்திலாயினும் சரி இந்தப் பிரிவின் காப்பு வாசகங்கள் மீறப்படும்போது மாநில அதிகாரம் பெற்றவரின் செயல் அல்லது தீர்ப்பினால் பாதிப்பு ஏற்பட்டால் ஆளுநர் தலை வருக்கும் (Governor-General in Council), மத்திய அரசு அதி காரத்திலுள்ளவரின் செயல் அல்லது தீர்ப்பினால் பாதிப்பு ஏற்பட்டால் அரசாங்கச் செயலாளருக்கும் (Secretary of State) மேல் முறையீடு செய்லாம்.

3) மாநிலத்தில் அதிகாரப் பொறுப்பில் உள்ளவர்கள் அல்லது மத்திய அரசில் அதிகாரப் பொறுப்பில் உள்ளவர் கள் இப்பிரிவில் உள்ள காப்புவாசகங்களைச் செம்மையாக நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை யென்று ஆளுநர்-தலைவரோ (Governor-General in Council) அரசுச் செயலாளரோ (Secretary of State) கருதினால் ஒவ் வொரு வழக்கின் தன்மையைப் பொறுத்தமட்டில் தங்களின் கவனத்தை ஈர்க்கும் மேல்முறையீட்டை விசாரிப்பவராகச் செயல்படும் ஆளுநர்-தலைவர் அல்லது அரசுச் செயலாளர், சரி என்று தாம் கருதும் காலவரைக்கு இப்பிரிவின் காப்பு

வாசகங்களையும், இப்பிரிவின் கீழான எந்தத் தீர்ப்புகளையும் செம்மையாக நிறைவேற்றுவதற்காகவும் உரிய மேல்முறையீட்டில் எதிராகச் சம்பந்தப்பட்டுள்ள அதிகாரப் பொறுப்பில் உள்ளவரைக் கட்டுப்படுத்துவதற்காகவும், குறைகளைக் களைவதற்காகவும் வரையறைகளை வரையறுக்கலாம்.''

## நிபந்தனை எண்: 7

## *தனித்துறையின் மூலம் கவனித்துப் பேணுதல்*

ஒடுக்கப்பட்ட வகுப்பினர், தகுதி சமத்துவம் (equality of status) அல்லது நடத்துமுறை சமத்துவம் (equality of treatment) பெறுவதை அனுமதிக்காத வைதீகக் கூட்டத்தாரின் விடாப்பிடியான, தீர்மானிக்கப்பட்ட எதிர்ப்புதான் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் ஆதரவற்ற, மகிழ்ச்சியற்ற, சத்தற்ற வாழ்க்கை நிலைக்குக் காரணமாகும். அவர்கள் வறுமையில் வாடுபவர்கள் அல்லது நிலம்ற்ற கூலிகள் எனப்படும் இரு கூற்றுகளும் உண்மையை வெளிப்படுத்தும் கூற்றுக்களேயாயினும், அவர்கதம் பொருளாதார அவல நிலையை எடுத்துரைப்பதற்குப் போதுமானதன்று. ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் வறுமைக்குக் காரணம் மிகப்பரந்த அளவில் இழைக்கப்படும் சமூகக் கொடுமைகளே என்பதும் அதன் விளைவாக அன்றாட பிழைப்புக்கான வேலைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுதான் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் நிலைமையினை மற்ற சாதாரண சாதி தொழிலாளியினின்று வேறுபடுத்திக்காட்டும் உண்மையுமாகும். இந்த இரு சாராருக்குமிடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்படுவதற்கான மூல காரணமும் ஆகும். ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு எதிராக நடத்தப்படும் கொடுமைகள், அடக்குமுறைகள் பலவகைப்பட்டவை என்பதையும், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தங்களைக் காத்துக் கொள்ளும் வலிமையற்றவர்கள் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இது சம்பந்தமானதும், இந்தியா முழுவதும் சர்வசாதாரணமாக திகழ்ந்திடுவதுமான செய்திகள், எண்: 723, 5.11.1892 நாளிட்ட சென்னை அரசாங்கத்தின் வருவாய்வாரிய செயல்முறைகளில் சுருக்கங்களில் (Abstracts of proceedings of the Board of Revenue of the Government of Madras dated 5th November, 1882, No. 723) நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பின்வரும் ஒருபகுதி தரப்பட்டுள்ளது:

''134. இதுவரையில் கோடிட்டுக் காட்டப்பட்ட பல்வேறு அடக்குமுறைகளை மேலோட்டமாகவாகிலும் குறிப்பிட வேண்டும். பறையர்கள் கீழ்ப்படியாமைக்காக அவர்களின் எஜமானர்கள்,

அ) கிராம நீதிமன்றங்களில் அல்லது குற்றவியல் நீதிமன்றங்களில் பொய்வழக்குகள் கொடுப்பர்.

ஆ) அவர்களுடைய கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் மேய்ப்பதைத் தடுக்கும் நோக்கத்துடனும், அவர்கள்

கோயிலுக்குச் செல்லும் வழியைத் தடுக்கவும், சேரியைச் சுற்றியுள்ள தரிசு நிலங்களை அரசாங்கத்திடம் மனுக்கள் கொடுத்து உயர்சாதியார் தம் வசப்படுத்திக் கொள்வர்.

இ) தங்களுக்குக் கீழ்படிய மறுக்கும் ஆதிதிராவிடர்களைத் தண்டிப்பதற்கு அவர்களின் எசமானர்கள், அரசாங்கப் பதிவேடுகளில் மிராசுதாரர்களின் பெயர்களில் சேரி நிலங்களை மோசடியாகப்பதிவு செய்து கொள்வர்.

ஈ) குடிசைகளை இடித்துத் தரைமட்டமாக்கி, புழக்கடை (கொல்லைப்புறம்) விளைச்சலை அழித்திடுவர்

உ) காலங்காலமாக அனுபவத்தில் இருந்துவரும் குத்தகை நிலங்களில்கூட, அனுபோக உரிமையை மறுப்பர்

ஊ) ஆதிதிராவிடர்களின் பயிர்களை வலுக்கட்டாயமாக வெட்டிச்சாய்த்திடுவர்; எதிர்த்தால் திருடியதாகவும், கலகம் செய்ததாகவும் குற்றங்களைச் சுமத்திடுவர்.

எ) பொய்யான தகவல்களை நிரப்பி நம்பவைத்து கையெழுத்திட வைத்துக் கொண்டு பின்னர் அவர்களின் வாழ்வை அழித்திடுவர்

ஏ) அவர்தம் வயல்களில் நிறைந்திருக்கும நீரை வெளியேற்றி வற்றச் செய்தும் தண்ணீர் பாயவிடாமலும் செய்வர்

ஐ) நிலச்சுவான்தாரர்கள் கட்டவேண்டிய வருவாய்வரி பாக்கிகளுக்காகச் சட்டப்படியான அறிவிப்பு (Legal Notice) ஏதுமின்றி, அவர்களுக்குக் கீழ் குத்தகைதாரர்களாக உள்ள இவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வர்''

''135. இத்தகைய குறைகளைக் களைவதற்குப் பொதுவியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் (சிவில் மற்றும் கிரிமினல் கோர்ட்டுகள்) உள்ளனவே என்று கூறப்படலாம்; உண்மைதான். கிராமப்புற ஏழை, எளியவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குத் துணிவும் தைரியமும் வேண்டும். சட்ட அறிவைப் பயன்படுத்திக் கொள்ளவும், வழக்காடுவதற்கான செலவுகளைச் சமாளிக்கவும் பணம் வேண்டும்; வழக்கின் போதும் மேல்முறையீடுகளின் போதும் அன்றாட வயிற்றுப் பிழைப்புக்கு வசதி, வழிவகைகள் வேண்டும். மேலும் பெரும்பாலான வழக்குகள் மேல்கோட்பாடுகளில் கீழ்க்கோட்டுகளின் தீர்ப்பைச் சார்ந்தே முடிவு செய்யப்படுகின்றன. இந்த நீதிமன்றங்கள் ஊழல் பேர்வழிகளும், மற்றும் பொதுவாகவே இதர கார்ணங்களுக்காகத் தாம் சார்ந்துள்ள பணக்கார, நிலபுலன் பெற்றுள்ள வகுப்பாருக்கு அனுதாபம் காட்டுபவர்களுமான அலுவலர்களால் தலைமை தாங்கப்பட்டுச் செயல்படுகின்றன.

''136. அரசு அலுவலகங்களில் உயர்சாதியினர் பெற்றுள்ள செல்வாக்குகளை எடுத்துரைப்பது எளிதானதன்று. அந்தச் செல்

வாக்கு உள்ளூர் அதிகாரிகளிடம் மிக அதிகம். ஐரோப்பியர் களிடம்கூட அதிக செல்வாக்குப் பெற்றுள்ளனர். மேல்மட்டத்தி லிருந்து கீழ்மட்டம் வரையிலான அனைத்து அலுவலகங்களிலும் அவர்களுக்கு வேண்டியவர்கள், பிரதிநிதிகள் நிரம்பியுள்ளனர். எந்தத்திட்டமும் அவர்களின் நலன்களைப் பாதிப்பதாக இருப்ப தில்லை. அப்படி ஏதாவது இருந்தாலும் அதைப் போக்குவதற்குத் தொடக்கம் முதல் இறுதிவரை அளவற்ற செல்வாக்கினை அவர் கள் கொணர முடியும்.

இந்தச் சூழ்நிலைகளை நோக்கும்போது, ஒடுக்கப்பட்ட வகுப் பாரின் முன்னேற்றத்திற்கான கடமை, அரசாங்கத்தின் அனைத் துச் செயல்களிலும் முதன்மையானதாக இருந்தாலொழிய அரசின் சார்பில் ஒரு உறுதியான கொள்கையாலும், தீர்மானிக்கப்பட்ட (determined) முயற்சியாலும் சமவாய்ப்புத் தத்துவம் செயல்வடிவ மாக்கப்பட்டாலன்றி ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் முன்னேற்றம் என்பது வெறும் நன்னோக்க நம்பிக்கையாக மட்டுமே இருந்து விடும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்த நோக்கம் செயல்வடிவாக ஈடேற வேண்டுமாயின் அந்த மக்களின் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு நிரந்தரமாக ஒரு துறையை ஏற்படுத்தி நடத்த வேண்டும் என்று சட்டப்படியான கடப்பாட்டினை (Obligation) இந்திய அரசின்மீது அரசியலமைப்புச் சட்டம் சுமத்த வேண்டும் என்றும், அதற்கேற்றவாறு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கீழ்க்காணும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும் என்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் விரும்புகிறார்கள்:

''1. இந்தஅரசியலமைப்புச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் அதே வேளையில் அதன் ஒரு அங்கமாக ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் நலன்களைக் கவனிப்பதற்காக வும், அவர்களது நல்வாழ்வின் முன்னேற்றத்திற்காகவும் அரசாங்கத்தில் ஓர் அமைச்சரின் பொறுப்பிலான துறை ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

''2. மத்திய சட்டமன்றத்தின் நன்னம்பிக்கையைப் பெற் றுள்ள வரையில் அந்த அமைச்சர் தம் பதவியில் இருப்பார்.

''3. அந்த அமைச்சர் தமக்குச் சட்டத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள அதிகாரங்களையும்,. பணிகளையும் செயலாற்றும்போது இந்தியா முழுவதும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நலன்களுக் குச் சாதகமானவைகளைச் செய்திடவும், அவர்களுக்கு எதி ரான சமூகக் கொடுமைகள், அநீதிகள் அடக்குமுறை ஆகிய வற்றைத் தடுத்திடும் விதத்திலான நடவடிக்கைகளுக்கு விரும்பத்தக்கதான முன்னேற்பாடுகளைச் செய்திடவும், அவற்றைச் சீரிய முறையில் நிறைவேற்றிடவும், ஒருங்கிணைக்க வும், அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளக் கடமைப் பட்டவராகிறார்.

''4. அ) கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிற்காக இயற்றப் படக் கூடிய விதிமுறைகளின் விளைவாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்படக்கூடிய நலன்களைக் கவனிக்கத்தக்க அதிகாரங்கள் அல்லது கடமைப் பொறுப்புகள் அனைத்தையுமோ அல்லது ஒரு சிலவற்றையோ இந்த அமைச்சருக்கு மாற்றுவதற்கும்

ஆ) அமைச்சரின் அதிகார எல்லையின் கீழும் அவரது ஒத்துழைப்புடனும் செயலாற்றத்தக்க விதத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலவாழ்வுக்கான தனித்துறைகளை அமைப்பதற்கும் ஆளுநர்-தலைவர் (Governor-General) சட்டப்படியான அதிகாரம் பெற்றவராவார்.

### நிபந்தனை எண்: 8

அரசு நடவடிக்கைகளின் மீது நமது செல்வாக்கு வலிமையைச் செலுத்துவதற்கு ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சட்டமன்றப் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டியது அவசியமாக இருப்பது போலவே அரசின் பொதுவான கொள்கையினை வகுப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பிருக்க வேண்டும் என்பது விரும்பத்தக்கது. அமைச்சரவையில் அவர்கள் இடம் பெற்றால்தான் இதை அவர்கள் சாதிக்க முடியும். ஆகவே, இதர சிறுபான்மையினருக்கு அளிக்கப்படுவது போலவே, அமைச்சரவையில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்னும் அவர்களுடைய தார்மிக உரிமை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். இந்த நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு ஒடுக்கப்பட்ட வகுப்பினர், ''அமைச்சரவையில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு ஆளுநர் மற்றும் ஆளுநர்-தலைவர் ஏற்றவகை செய்யவேண்டும் என்கிற கடப்பாடு அரசு அறிவுரைப்பத்திரத்தில் (Instrument of Instructions) இடம் பெற வேண்டும்'' என முன்மொழிகிறார்கள்.

### பின்னிணைப்பு 2

## மூன்றாம் துணைக் குழுவின் (சிறுபான்மையினர்) அறிக்கை

*ஒடுக்கப்பட்ட வகுப்பார் நலன்குறித்து 19.1.1931 அன்று பொதுமாநாட்டின் குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையின் சில பகுதிகள்*

3. இனம், மதம், சாதி, ஆண் பெண் ஆகிய வேறுபாடு எதுவும் பாராட்டாமல் தனிமனிதரின் அனைவரின் பொருளாதார, சமூக மற்றும் வரி சிவில் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவும்

பல்வேறு வகுப்பாரின் சமய, பண்பாட்டு வாழ்க்கை முறைக்குப் பாதுகாப்பளித்தல் பற்றிய அடிப்படை உரிமைகளுக்கு உத்திர வாதமளித்து ஒரு பிரகடனத்தை அரசியல் சாசனத்தில் இணைக்க வேண்டும் என்பது துணைக் குழுவிற்கு அளிக்கப்பட்ட முக்கிய பிரேரணைகளுள் ஒன்றாகும். (டாக்டர் அம்பேத்கர் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அவற்றிற்கு நிவாரணம் கோரும் உரிமை உட்பட அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்து வதற்கு அரசியலமைப்புச் சட்ட அங்கீகாரம் அளிக்க வேண்டிய அவசியத்தை நினைவூட்டினார்.)

4. பொதுப்படையாக அங்கீககரிக்கப்பட்ட ஜனநாயக நெறி முறைகளுக்கு இணக்கமான வகையில் சுதந்திரமான கூட்டு வாக்காளர் தொகுதி முறையைப் பொதுவாக ஏற்றுக் கொண்ட போதிலும், ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட இடைவெளிக் காலத்திற்குப்பின் வயதுவந்தோர் வாக்கெடுப்பின்மூலம் கருத்தறிந்து மாற்றிக் கொள்ளப்பட்ட போதிலும் இந்திய நாட்டில் தற்போது உள்ள பல்வேறு வகுப் பாரின் எண்ணிக்கையையும் அதன்காரணமாக அந்த வகுப் பாரிடையே நிலவும் சமத்துவமில்லாத பொருளாதார, சமூக, அரசியல் நிலைகளில் ஏற்படும் விளைவுகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்த முறையினால் சிறுபான்மையோர் மொத்தத்தில் தங்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் பெற முடியாத ஆபத்து இருப்பதால் இந்த முறையினால் வகுப்புப் பாதுகாப்பு இருக்காது என்பதாலும்.

5. வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காகவும், நிர்ணயிக்கப் பட்ட இடவிகிதாச்சாரங்களுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் உரிமைக் கோரிக்கைகள் பல்வேறு வகுப் பினரால் முன் வைக்கப்பட்டன. ஒரு சிறுபான்மை வகுப்பாருக்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை எந்தச் சூழ்நிலையிலும் அந்த வகுப்பாரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்குக் குறை வாக இருக்கக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. இதை நிறை வேற்றுவதற்குரிய முறைகள் முக்கியமாக மூன்று வகையாவன: *(1)* நியமனம் (Nomination) *(2)* ஒதுக்கப்பட்ட இடங்களோடு கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி (Joint electorates with reserved seats) *(3)* தனி வாக்காளர் தொகுதி (Separate Electorates).

8. அனைவரும் ஏற்றுக் கொண்ட ஒரே ஒரு கோரிக்கை தனித்தொகுதி (Separate electorate) தேர்தல்முறைதான் என்ற கருத் தினை நடைபெற்ற விவாதம் தெளிவாக்கியது. இந்த முறைக்கு எதிராக எழுந்த பொதுவான ஆட்சேபம், இந்தியாவில் முன்பு நடைபெற்ற விவாதத்தை ஒட்டியிருந்தது. மத்திய அரசிலும் மாநில அரசுகளிலும் அளிக்கப்பட வேண்டிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அளவு என்ன, சட்டமன்ற இடங்கள் அனைத்தும் அல்லது நடைமுறையில் அனைத்தையுமே இவ்வாறு

வகுப்புவாரியாகப் பகிர்ந்தளிக்க நேர்ந்தால் சுதந்திரமான ஒரு அரசியல் கருத்திற்கோ அல்லது உண்மையான அரசியல் கட்சிகள் வளர்வதற்கோ வாய்ப்பில்லாமல் போகும் என்பதும், தேர்தலுக்காக ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்து மக்கள் தொகுதியிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி வகுப்பினராகக் கருதப்பட வேண்டும் என்று அந்த வகுப்பாரின் பிரதிநிதிகள் கோரியதன் விளைவாக எழுந்த கடும் சிக்கலும் தீர்வுகாண முடியாததாகிறது.

**12.** மாநில நிர்வாகத்துறையில் முக்கியமான சிறுபான்மை வகுப்பினர் அங்கம் வகிக்கவேண்டும் என்ற கருத்து புதிய அரசியல் நிர்ணய சட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கான மாபெரும் அனுபவமுறையிலான சிறப்பாகும் என்கின்ற துணைக் குழுவின் பரிந்துரை எண்: 2 க்குப் (மாநில அரசியலமைப்பு) பொதுவான கருத்தொற்றுமை நிலவியது. இதே அடிப்படையில் முகமதியர்கள் மத்திய கூட்டாட்சி அரசின் நிர்வாகத்தில் (டாக்டர் அம்பேத்கர், இந்த 'முகம்மதியர்' என்ற வார்த்தைக்குப்பின் இதர முக்கியமான சிறுபான்மை வகுப்பினர் என்று சேர்ப்பார்) அங்கம் வகிக்க வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. மிகச்சிறிய அளவு தொகையினரான சிறுபான்மையோர் சார்பில், தனியாகவோ கூட்டாகவோ பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் அல்லது அவ்வாறு செய்ய முடியாத பட்சத்தில் ஒவ்வொரு அமைச்சரவையிலும் சிறுபான்மையோரின் நலன்களைக் காத்திடும் சிறப்பும் பொறுப்பினைக் கொண்ட ஓர் அமைச்சர் இருக்க வேண்டும் என்னும் உரிமைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

**13.** நிர்வாகத்தைப் பொறுத்த அளவில், மாநில மற்றும் மத்திய அரசுப் பணிகளுக்கு ஆளெடுக்கும் பணி அரசுப்பணியாளர் தேர்வாணயங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அந்த அரசுப்பணியாளர் தேர்வாணையங்களுக்குப் பணியாளர்களின் திறமையைக் கருத்தில் கொள்கின்ற அதே நேரத்தில் பல்வேறு வகுப்பாரின் உரிமைக் கோரிக்கைகளுக்கு இடமளித்து அவர்கள் அரசுப் பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம் பெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற அறிவுறுத்தலும் இடப்பட வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

**16.** பிரிட்டிஷ் அரசாங்கம் எந்தவொரு ஒப்பந்த வாய்ப்பினையும் கருத்தில் கொண்டு சிறுபான்மை இனத்தினர் மீது ஒரு தேர்தல் கொள்கையைத் திணிக்க முடியாது என்பதும், அப்படித் திணிக்க முயன்றால் அவ்வினங்களின் எதிர்ப்பினால் ஏதோ ஒரு வடிவத்தில் அச்செயல் தோற்கடிக்கப்படும் என்பதும் மிகத் தெளிவாக்கப்பட்டது. ஆதலின் ஒரு ஒப்பந்தம் ஏற்படாத நிலையில், தனி வாக்காளர் தொகுதிகள்—அவைகளில் குறைபாடுகள், சிரமங்கள் இருப்பினும்—புதிய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் கீழான தேர்தல் ஏற்பாடுகளுக்கு அவை அடிப்படையாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாயிற்று. இதிலிருந்து

விகிதாச்சார கேள்வி எழும். இச்சூழ்நிலைகளில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் உரிமைக் கோரிக்கைகள் போதிய அளவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

18. சிறுபான்மை வகுப்பாரும் ஒடுக்கப்பட்ட வகுப்பாரும் தங்களின் கோரிக்கைகள் நியாயமான அளவில் ஏற்கப்பட்டாலொழிய இந்தியாவிற்கான சுயாட்சி அரசியலமைப்புச் சட்டத்திற்கு உடன்பாடு அளிக்க மாட்டார்கள் என்று திட்டவட்ட துணிந்துரைத்தனர்.

# 5

# துணைக்குழு எண் VI (வாக்குரிமை)

## இரண்டாம் அமர்வு—டிசம்பர் 22, 1930

* டாக்டர் அம்பேத்கர்: இந்த வட்ட மேசை மாநாடு இரண்டு முக்கியமான வினாக்களை மட்டுமே பரிசீலனை செய்யப் போவதாக எனக்குத் தோன்றுகிறது. இந்தியா பொறுப்பாட்சி அரசாங்கத் தைப் பெற்றாக வேண்டுமா என்பது ஒரு வினா; அப்படி யானால், அந்த அரசாங்கம் எந்த மக்களுக்குப் பொறுப்புடைய தாக இருக்க வேண்டும் என்பது இரண்டாவது வினா.

முழுமையான கூட்டத்தொடரில் நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி அமைப்புமுறை அரசாங்கம் வேண்டும் என்ற கோரிக்கையை ஒரே குரலாக எழுப் பினோம். மற்றும் அதே முழுமையான கூட்டத்தொடரில் ஒடுக்கப் பட்ட வகுப்பினர் சார்பாகப் பேசிய நானும் என் எதிரே அமர்ந் திருக்கிற என் நண்பர்களுடன் சேர்ந்து இந்தியாவிற்குப் பொறுப் புள்ள அரசாங்கம் என்றே கோரிக்கை விடுத்தேன். நான், அவ்வாறு கோரிய போது, இந்த வட்டமேசை மாநாட்டிற்குத் தங்கள் நாட்டின் பிரதிநிதியாக வந்திருக்கும் இந்திய மக்கள், இந்தியா விற்குப் பொறுப்புள்ள அரசாங்கம் வேண்டும் என்று கோரிக்கை செய்வதில் ஒன்றுபட்டிருந்தார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், அந்த அரசாங்கம் யாருக்குப் பொறுப்பாக இருந்தாக வேண்டும் என்ற கருத்திலும் ஒன்றுபட்டிருந்தார்கள் என்ற எண்ணத்தில் இருந்தேன்.

நான், தவறாக வழிநடத்தப்பட்டுள்ளேன் என்பதைச் சொல் வதற்காக (இப்போது) வருந்துகிறேன். ஆனால், இப்போது டொமினியன் அந்தஸ்துக் கோரிக்கைக்காக நமது மக்களில் சிலர் என்னை விரும்பினாலும் அவர்களுடன் பிறரும் சேர்ந்து கொண்ட போதிலும் கூட, டொமினியன் அந்தஸ்தின்படி அமைக்கப்படும் அரசாங்கமானது இந்தியா முழுவதிலுமுள்ள மக்கள் அனைவருக் கும் பொறுப்பாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையில் அவர் கள் நம்முடன் இணைந்து நிற்க மாட்டார்கள். இதில் பிளவுபட்ட கருத்து இருக்கும் என்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை.

மேலும், நாம் எடுக்கும் நிலையினைக் காப்பதற்காக நான் நின்றாக வேண்டும்.

இப்பொழுது, ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சார்பாகப் பேசுகிற நான், எந்த மக்களுக்காக பேசுகிறேனோ அந்த மக்கள் அந்தப் பொறுப்புள்ள அரசாங்கத்திலோ அல்லது டொமினியன் அந்தஸ்திலோ இடமளிக்கப்படுவார்கள் என்று நான் உறுதியாக நம்பினாலன்றி, அதற்கு என்னால் மனப்பூர்வமாக இசைவளிக்க முடியாது. இந்தக் கருத்தை இங்குள்ள என் நண்பர்கள் அனைவருக்கும் நான் தெளிவுபடுத்தியாக வேண்டும். வயதுவந்தோர் வாக்குரிமைக்கான கருத்துருவிற்கு எனது நண்பர்கள் சிலரால் மறுப்பு எழுப்பப்பட்டிருக்கிறது என்பதால், அதற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட வாதங்கள் குறித்து விவாதிக்கக் கருதுகிறேன். இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்மாதிரியை அதாவது வயதுவந்தோர் வாக்குரிமையானது படிப்படியாக மட்டுமே எட்டப்பட வேண்டும் என்பதை நாம் பின்பற்ற வேண்டும் என்பது, கொண்டுவரப்பட்ட வாதங்களில் ஒன்று. 1832 முதல் 1918 வரை இந்த நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட படிநிலைகளை நாம் பின்பற்ற வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்த நாட்டின், வாக்குரிமை அரசியல் வரலாற்றின் மீது தங்கள் முடிவினை எடுக்கும் எவருக்கும் 1832-இல் இருந்து தொடங்கி, ஆங்கில மக்கள் தம் மக்களுக்கு வாக்குரிமையளிக்கும் முறையில் அம்மக்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை வகுத்தமைத்துக் கொள்வதில் சில தத்துவ முறையிலான தொடர் நடவடிக்கை இருந்துவந்தது என்று நினைக்கத் தோன்றும், அதாவது அவர்கள் 1832-இல் வரம்புக்குட்பட்ட எண்ணிக்கையிலான மக்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்க வேண்டும் என்றும், அவ்வாறில்லையெனில் அது தத்துவமுறைப்படி தவறு என்றும்; அதாவது அடுத்த நடவடிக்கையை 1866-இல் அல்ல, 1867-இல் மட்டுமே எடுக்க வேண்டும் என்றும், அவர்கள் அடுத்த நடவடிக்கையை 1867-இல் அல்ல 1884-இல் எடுக்க வேண்டும் என்றும் முடிவு செய்து விட்டார்கள். அந்த வாதத்தைப் பயன்படுத்துபவர்கள், அந்த உண்மையின் பின்னர் அறிவுத்திறம் வாய்ந்த நம்பிக்கை எதுவும் இருக்கிறது என்று நம்புவார்களா என்பது எனக்குத் தெரிவில்லை. ஆனால், இந்த ஆதாரச் செய்தியின் மீது தங்கள் வாதங்களை அமைக்கிற என்னுடைய நண்பர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புவதெல்லாம், நீங்கள், இங்கிலாந்து நாட்டில் அரசியல் வரலாற்றினைப் படிப்பீர்களானால், இங்கிலாந்து மக்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தபடிநிலைகளைத் தீர்மானித்த முறையில் அறிவார்ந்த நம்பிக்கை எதுவும் இல்லை என்பதோடு மட்டுமல்லாமல் இந்த நாட்டில் வாக்குரிமை பற்றிய பிரச்சினை என்பது கட்சி அரசியல் தொடர்பானதொரு பொருளாக மட்டுமே இருந்த வந்தது என்பதை நீங்கள் காணலாம்; அதாவது ஒவ்வொரு கட்சியும், வாக்குரிமையை நீட்டிக்க முயற்சி செய்தது, ஏனென்றால் அது அரசியல் ஆதாயம்

தேடும் ஏமாற்று வார்த்தையாக இருந்து அந்தக் கட்சியின் செல் வாக்கினைப் பெருக்கும் என்றும் அதிகரிக்கும் என்றும் எண்ணி யது. அந்த வாதத்தைப் பயன்படுத்தும் என் நண்பருக்கு ஒரு வேளை, அது செய்தியாக இருக்கலாம், நமது பாதையில் கடக்க முடியாததொரு தடங்கல்களை அமைக்க வேண்டும் என்ற உணர் வில் அவருக்கு மனமுறைவு ஏற்படும் வகையில் அதனை எப் போதும் பயன்படுத்துகிறார் என்றே நான் சொல்லியாக வேண் டும். இங்கிலாந்து மக்களுக்கு வாக்குரிமை வழங்குவதில் எடுக்கப் பட்ட மிகப்பெரிய நடவடிக்கையில் ஒன்று, முற்போக்காளர் களாலோ அல்லது தீவிரவாதிகளினாலோ எடுக்கப்பட்டது அல்ல. பழைமை வாதிகளின் அரசாங்கத்திலேயே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிந்து நாம் மகிழ்ந்து கொள்ளலாம்.

நான் இரண்டாவதாக, சுட்டிக் காட்ட விரும்புவ்து இதுதான். இந்த நாட்டில் வாக்குரிமை என்பது வரம்புக்குட்பட்டது என்ப தால் அந்த வாக்குரிமையின்படி அமைக்கப்பட்ட அரசு நல்ல தொரு அரசாகுமா? அல்லது மக்களின் நல்வாழ்வினையும் பொது மக்களின் செல்வச் செழிப்பினயையும் நோக்கமாகக் கொண்ட தொரு அரசு நல்லதொரு அரசாகுமா என்பதில், அவர் உண்மை யில் நமக்கெல்லாம் எதனை உணர்த்த முயல்கிறார்? அந்த ஆதாரத் தில் இருந்து அவர் வெளிப்படுத்த விரும்பிச் சுட்டுவது இது தானோ? வாக்குரிமை வரம்புக்குட்பட்டிருக்கிறது; எனவே இங்கு எந்த விதப் பிரச்சினையுமில்லை; மக்கள் எல்லோரும் இந்த நாட்டில் மனமகிழ்ச்சியோடு இருக்கிறார்களா? உறுதியாக அது வன்று செய்தி. என் நண்பர் ஷஃபட்ஸ்பர்ரி வாழ்க்கையினையும் இங்கிலாந்தின் சமூக, அரசியல் வரலாற்றினையும் சற்று, சிரமம் பாராமல் படித்துப் பார்ப்பாரானால், சீர்திருத்தம் பெறாத நாடாளுமன்றம் எவருக்கும் நலம்தரும் நற்பேறாக அமைவதில்லை என்பதை அவர் உறுதியாக அறிய முடியும்.

மூன்றாவதாக, இந்திய மக்களுக்கு வயதுவந்தோர் வாக்குரிமை வழங்கக் கூடாது; ஏனென்றால் அவர்கள் அதற்குத் தகுதியற்றவர் கள் என்று என் நண்பர் உண்மையாகவே சொல்வாரானால், மேலும் என்ன சொல்கிறாரோ அதில் உண்மையாகவே அவர் நம்பிக்கையுடையவராக இருப்பாரானால், அவருக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புவதெல்லாம், அவர் இந்தியாவிற்குத் திரும்பிச் செல்வதே. அதற்கு மாற்று வழியாக இருக்க வேண்டுமே தவிர, நிச்சயமாக, டொமினியன் அந்தஸ்தை அல்லது பொறுப்புள்ள அரசாங்கத்திற்கான கோரிக்கையை எழுப்பக் கூடாது. இந்திய மக்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்குத் தகுதியற்றவர்கள்; அவர்கள் அரசாங்கத்தின் பொறுப்புகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத் தகுதியற்றவர்கள் என்று இந்த வழக்கினை எந்த நற்பண்பாளர் முன் வைக்கிறாரோ அவரது கருத்து இதுவாக இருக்குமானால், அப்போது அவர் எவருடைய பெயரால் அந்தப்

பொறுப்புள்ள அரசாங்கத்தைக் கேட்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை. இது இந்த வகுப்பினருக்காகவா? அவருக்காகவா? அல்லது அது யாருக்காக? பொறுப்புள்ள அரசாங்கத்திற்கு ஆதர வாகவும் டொமினியன் அந்தஸ்துக்கு ஆதரவாகவும் நான் புரிந்து கொண்ட வகையில் ஒரே வாதமானது, அரசாங்கப் பொறுப்பு களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள இந்திய மக்கள் தகுதி யானவர்கள் என்ற அத்தகைய வாதம் எதனின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்ற ஊகமே ஆகும். அந்தப் பொறுப் பினைக் கையாள்வதற்கு இந்திய மக்கள் தகுதியுள்ளவர்கள் என்று என் நண்பர் நம்பவில்லை என்றால், அதற்கு ஒரே ஒரு முடிவு தான் உண்டு; அதாவது இந்தியமக்கள் டொமினியன் அந்தஸ்தைப் பெற முடியாது; பொறுப்பினையும் பெற முடியாது. வயது வந்தோர் வாக்குரிமை என்பது ஒரு குறிக்கோள் நிலையாக இருந்த போதிலும், தற்போது அதனைச் செயல்முறைக்குக் கொண்டுவர முடியாது. ஏனென்றால், நமக்கு அதனைச் செயற்படுத்துவதற் கான அமைப்புமுறை இல்லை என்பது இரண்டாவது வாதமாகக் கொண்டுவரப்பட்டது. இப்போது எனக்கு அந்த வாதத்தின் மீது அனுதாபம் ஏற்படுகிறது, ஆனால், அந்தக் கருத்தின் மீது எதிர்த் தரப்பிற்குச் சிறப்பான முக்கியத்துவம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாம் முதலில் வாக்குரிமை என்பதன் உண்மையான பொருள் எது என்பதைப் புரிந்து கொள்வோம். வாக்குரிமை என்பது, நிச்சயமாக வாக்குப் பெட்டியைப் பொறுத் தது; வாக்குச் சாவடிகளைப் பொறுத்தது மற்றும் அங்கு வாக்குப் பதிவு அலுவலர்களை அமர்த்துவதைப் பொறுத்தது மட்டும் என்பது பொருளல்ல; வாக்குரிமை என்பது அதைவிட மேலான உயர் முக்கியம் வாய்ந்தது என்று பொருள்படும். இப்பொழுது, நான் புரிந்து கொண்ட வகையில் வாக்குச் சீட்டும் வாக்குரிமை யும் சுயபாதுகாப்பிற்கான உரிமையே அல்லாமல் வேறெதுவு மில்லை; அது, மக்களின் உயிர், உரிமை மற்றும் உடைமையாகிய சொத்தினைப் பாதிக்கும் சட்டங்களை இயற்றுவதற்கு ஏராளமான அதிகாரங்களைக் கொண்டதாக அமையும் சட்டமன்றத்தை நீங்கள் உருவாக்குவீர்கள் என்று உணர்த்துகிறது. நிச்சயமாக, நிலைமை அதுவாக இருக்குமானால், உங்கள் வாழ்க்கையின் அந்த மிக முக்கியமான பொருட்கூறுகளைப் பாதிக்கும் அதிகாரங்களை உங்கள் சட்டமன்றம், பெறவிருக்குமானால், அப்போது அந்த சட்டமன்றத்திற்கு உட்படப்போகிற தனிநபர் ஒவ்வொருவரும், அவரது உரிமையில், உயிரில் மற்றும் உடைமையாகிய சொத்தில் தலையிட்டுத் தாக்குகிற சூழ்நிலைகளை உருவாக்கும் சட்டங்களுக்கு எதிராகத் தன்னைக் காத்துக் கொள்வதற்கான அதிகாரத்தை உடையவர்களாக இருந்தாக வேண்டும். இது வெறும் வாக்குப் பெட்டியைப் பற்றியதன்று, இது வெறும் வாக்குச் சாவடிகளை மட்டுமே பொறுத்ததல்ல.

நான் இதை வேறு விதமாகச் சொல்கிறேன். நான் வாக்குரிமை என்ன என்பதை அறிந்திருப்பேனேயானால், சமுதாயத்தில் இணைந்துவாழும் வாழ்க்கையோடு ஒருவன் தன்னையும் சேர்த்தழைத்துச் செல்வதற்கான வரைய்றைகளை ஒழுங்குபத்துவதற்கான உரிமை ஒன்றாக அது இருக்க வேண்டும் என்று நான் அறிந்து கொள்கிறேன்; அதுவே வாக்குரிமையின் சாரமாக அமையும். நீங்கள் ஒருவருக்கு வாக்குரிமை கொடுக்கிற போது, அவருக்குச் சமுதாயத்தில் மற்றவர்களுடன் எந்த வரையறைகளின் பேரில் நட்புறவுடன் வாழ முடியுமோ அவற்றை ஒழுங்கமைத்து வகுப்பதற்கான அதிகாரத்தை அவருக்குக் கொடுக்கிறீர்கள் என்பதை நீங்கள் உணர்த்திக் காட்டுகிறீர்கள். இப்பொழுது, வாக்கு என்பதற்கு அதுவே பொருளாக இருக்குமானால், ஒன்றிணைந்த வாழ்க்கையின் வரையறைகளை வகுத்தமைக்கும் அதிகாரத்தைத் மேட்டுக்குடி மக்களுக்கும் மேதாவிகள் என்று அழைக்கப்படுவர்களுக்கும் அல்லது சொத்துடைமைப் பிரிவினருக்கும் சொந்தமாக்கி வழங்குவதும், கீழ்த்தரப்பு மக்களை அவர்தம் தயவின் கீழ்த் தவிக்க விட்டு விடுவதும், நிச்சயமாக உங்களால் செய்வதற்கு முடியாதவை. அவர்களும் கூட, இணைந்துவாழும் வாழ்க்கைக்கு வரைய்றைகளை வகுத்துக் கொள்வதற்கான அதிகாரத்தைப் பெறுதல் வேண்டும். அமைப்பு எதனையும் கொண்டிருப்பதானால், முதலாளி ஒருவர், தொழிலாளியுடன் இணைந்து வாழும் வாழ்க்கைக்கான வரையறைகளின் மீது எவ்வாறு வாழவேண்டும் என்பதற்குக் கட்டளையிடும் அதிகாரத்தை உடையவராக இருப்பதைப் போன்றே, தொழிலாளரும், அவரது முதலாளித்துவ எஜமானுடன் எந்த வரையறைகளின் மீது வாழ வேண்டுமோ அந்த வரையறைகளை வகுத்துக் கொள்வதற்கான அதிகாரத்தைப் பெற்றிருப்பதற்கு உரிமை கொண்டவராக இருக்கிறார். இது ஒரு பக்கப் பேரமாக இருக்க முடியாது; இது ஒரு பக்கப் பேரமாக இருக்கவும் கூடாது. வாக்குரிமை என்ற சொல்லை அதன் சரியான பொருளின் வழி புரிந்துகொள்வீர்களானால், வாக்குரிமை என்பது நாட்டிலுள்ள தனிநபர் ஒவ்வொருவரிடத்திலும் உள்ளார்ந்து கலந்திருக்கின்ற உரிமை ஒன்றாக உங்களுக்குத் தோன்றும், மேலும், வாக்குரிமை என்பது அதனைப் புரிந்து கொள்ளும் திறமை வாய்ந்த ஒவ்வொரு ஆணின் அல்லது பெண்ணின் உள்ளார்ந்த உரிமை என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்களானால், அப்போது, உங்கள் நிர்வாக வசதிகளின் மீது சார்ந்திருக்கும் மக்களிடையே நீங்காமலிருக்கும் உரிமையினை நீங்கள் நிச்சயமாக உணர முடியும். எனது நண்பர் அதே வாதத்தை எடுத்துரைக்கும் போது, நமக்கு வாக்குச்சாவடிகளும் வாக்குப் பதிவு அலுவலர்களும் இல்லை என்ற காரணத்தினால், நாம் வயதுவந்தோருக்கான வாக்குரிமையைப் பெறுவதே கூடாது என்று தெரிவித்தார். நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புவதெல்லாம், மற்றொருவரால் தீங்கிழைக்கப்பட்ட இவர், நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றால்

நிச்சயம் வெற்றி பெறும் வாய்ப்பினை உடையதொரு வழக்கினை இவர் பெற்றிருந்த போதிலும், உயர்நீதிமன்றத்தில் நமக்குப் போதிய நீதிபதிகள் இல்லை என்ற காரணத்தினால் அவருக்கு நல்ல தீர்ப்பு வழங்கப்பட மாட்டாது என்று எவரேனும் அவருக் குத் தெரிவிப்பார்களானால், அப்போது அவரது நிலைமை எப்படி இருக்கும்? அவர் அந்த நிலைமையை எப்படி விரும்புவார்; விரும்பி வரவேற்பார்; வாக்குரிமை என்பது உள்ளார்ந்ததொரு உரிமையாக இருக்கும் பட்சத்தில், அந்த வாக்குரிமைக்குச் செயல் வடிவம் கொடுப்பதில் நிர்வாகச் சிக்கல்கள் எவையும் இருக்கு மானால், அப்போது, அந்த வாக்குரிமையைத் தடுப்பது தீர்வாக அமையாது; ஆனால், அந்த வாக்குரிமையைச் செலுத்துவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொரு ஆணுக்கு அல்லது பெண்ணுக்கு அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குத் தேவைப்படும் சாதன முறையினை வழங்கி வகை செய்வதே அதற்குச் சரியான தீர்வாக இருக்க முடியும்.

வாக்குரிமையைச் செயல்படுத்துவதில் சிக்கல்கள் என்பன வாக, நம் முன்னே வைக்கப்பட்டுள்ளவை எல்லாம் இரண்டு அடிப்படைகளில் இருந்து எழுவதாக எனக்குத் தென்படு கிறது. இந்தியாவிலுள்ள தேர்தல் தொகுதிகள் மிகவும் பரந்து பட்டது என்று நமக்குச் சொல்லப்பட்டது. நாம் சைமன் குழுவின் அறிக்கையின் வழி பார்க்கிற போது, அக்கூற்று அறிவுக்குப் பொருந்தாத கட்டுக்கதையாக இருக்கிறது. அவை இன்று இருப் பதைப் போல தற்போதிருக்கும் தேர்தல் தொகுதிகளில் வாக்காளர் களின் எண்ணிக்கையை நீங்கள் அதிகரிப்பீர்களானால் தேர்தல் எந்திரம் முழுவதும் உடைபட்டுவிடும் என்று இங்கே கூறப்பட்டது. இந்த மாநாட்டில் நான் பணிவோடு தெரிவிப்பது இதுதான். இந்த இடர்ப்பாடு சந்தேகமற்ற வகையில் எளிமையாக எதிர்க்கொள்ளப் பட்டு அகற்றப்பட்டு விடும். இந்தச் சிக்கல் இந்த வழியில் எதிர்க் கொள்ளப்பட முடியும் என்று நான் கருதுகிறேன்; அதாவது இந்தச் சிக்கல் இன்றைய நாளில் இருக்கின்ற உங்கள் சட்டமன்றங் களின் கூட்டமைப்பின் மற்றும் உறுப்பினர் எண்ணிக்கையின் காரணத்தினால் மட்டுமே பெருமளவில் எழுவதாக நான் அறி கிறேன். அந்தக் கட்டமைப்பானது மிகவும் குறுகியது. இன்றைக்கு உங்களிடம் இருக்கும் பெருமளவிலான தேர்தல் தொகுதிகளி னால் செய்வதற்கு ஏதுமில்லை. மாநிலங்களின் சட்டமன்ற உறுப் பினர்களின் தற்போதிருக்கும் எண்ணிக்கையானது, அதற்குரிய நோக்குநிலையில் இருந்து பார்க்கின்ற பொழுது கேலியாகத் தோன்றுகிறது. அந்த எண்ணிக்கையை ஒரு கணப்பொழுது நம் மனக்கண் முன்னே கொண்டு வருவோம். ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, சென்னை, வங்காளம் மற்றும் ஐக்கிய மாநிலங்கள் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ பிரான்சு, கிரேட் பிரிட் டன் மற்றும் இத்தாலியின் அதே மக்கள் தொகையைக் கொண் டிருக்கின்றன. சென்னை மாநிலச் சட்டமன்றம் 132 உறுப்பினர்

களைக் கொண்டிருக்கிறது; வங்காள மாநிலச் சட்ட மன்றத்தில் 140 உறுப்பினர்கள் இருக்கின்றனர்; ஐக்கிய மாநிலச் சட்ட மன்றம் 123 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக, பிரான்சு, அதன் கீழ்ச்சபையில் 626 உறுப் பினர்களைக் கொண்டிருக்கிறது; இங்கிலாந்து கிட்டதட்ட 600 உறுப்பினர்களையும், இத்தாலி 560 உறுப்பினர்களையும் கொண் டிருக்கின்றன. ஆனால், அதற்கு மாறாக, மக்கள் தொகையில் இணையாகவோ அல்லது சற்றே கூடவோ குறைவாகவோ இருக் கின்ற பம்பாய் மற்றும் பஞ்சாப்பினை எடுத்துக் கொள்ளுங்கள்; பம்பாய் 114 உறுப்பினர்களையும் பஞ்சாப் 94 உறுப்பினர்களை மட்டுமே பெற்றுள்ளன. பம்பாய் மற்றும் பஞ்சாப் மக்கள் தொகையில் ஸ்பெயின் நாட்டுக்கு இணையாகவோ அல்லது சற்றே கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கும் ஸ்பெயின் நாட்டுக் கீழ்ச்சபையை எடுத்துக் கொண்டால் அதில் 417 உறுப் பினர்கள் இருப்பதைக் காணலாம். அந்த எண்ணிக்கை தற்போது இல்லை என்பது எனக்குத் தெரியும். அது வேறு செய்தி. அது கட்டமைப்பு பற்றிய விஷயம். பிரான்சில் அது மிகப்பெரிய அளவிலான எண்ணிக்கையில் இருந்து வருகிறது. பிறகு, மத்திய மாநிலத்தை எடுத்துக் கொள்வோமானால் அது தன் சட்டமன்றத் தில் 73 உறுப்பினர்களை மட்டுமே பெற்றிருக்க, மத்திய மாநிலத் தின் மக்கள் தொகைக்குச் சமமான மக்கள் தொகையைக் கொண் டுள்ள யூகோஸ்லாவியா நாடோ 313 உறுப்பினர்களைக் கொண் டுள்ளது. போர்ச்சுக்கல் நாட்டு மக்கள் தொகைக்குச் சமமான மக்கள் தொகைகளை உடைய அஸ்ஸாம் 53 உறுப்பினர்களுடன் இருக்கிறது, போர்ச்சுக்கல் நாடோ 146 உறுப்பினர்களைப் பெற் றிருக்கிறது.

இப்பொழுது, மக்களின் மிகப்பெரிய ஒட்டுமொத்தக் கூட்டுத் தொகையை, 140 உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தாண் டாத சட்டமன்றங்களோடு இணைத்து வைத்துப் பார்ப்பீர்களா னால், அப்போது நீங்கள் மிகப்பெரிய அளவிலான தேர்தல் தொகுதிகளைப் பெற வேண்டும் என்று முடிவிற்குக் கட்டுப்பட்டு, உடன்படுவீர்கள். சட்டமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப் பதற்கு ஏன் அஞ்சுகிறீர்கள்? என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் பயப்படவில்லை என்கிற பட்சத்தில், பிற நாடுகளில் இருப்பதைப் பின்பற்றுவீர்களானால், வாக்காளர் தொகுதியின் பரப்பெல்லையை உங்களால் எளிமையாகக் குறைத் துச் சுருக்கிக் கொள்ள முடியும். அதன் மூலமாக வயது வந்தோ ருக்கு வாக்குரிமை வழங்குவதில் இருந்து வருவதாகச் சொல்லப் படுகிற சிக்கலான இடர்ப்பாடுகளில் ஒன்று நீக்கப்பட்டு விடும்.

பின்னர், மற்றொரு இடர்ப்பாடு என்று எடுத்துக்காட்டப்பட்டுச் சொல்லப்பட்டது, நம்மிடையே போதிய வாக்குப்பதிவு அலுவலர் கள் இல்லை என்பதாகும். இப்பொழுது அந்தச் சிக்கல் கவலைப்

படத்தக்க அளவிலானதொன்றாக என் மனதிற்குத் தோன்ற வில்லை. இந்தியாவிலுள்ள கல்லூரி மாணவர்கள் அனைவரையும் தேர்தல் துறைகளின் பணிக்கு அழைத்துக் கொள்ள முடியு மானால், அந்தச் சிக்கல் மிக எளிதாகத் தீர்க்கப்பட்டுவிடும். எதிர்ப்புறத்தில் இருக்கும் என் நண்பர்களில் சிலர் இதைக் கண்டு இருக்கிறார்கள். எனக்கு ஏனென்று புரியவில்லை. உண்மை யிலேயே கல்லூரி மாணவர்களும் பள்ளிக்கூடப் பையன்களும் கூட மக்கள் தொகைக் கணக்கெடுக்கும் துறையில் மக்கள் தொகை யைக் கணக்கிடுவதற்கு உதவுவதை நான் அறிவேன். ஒரு தேர்வுக் காக, அதே முறை வாக்குப்பதிவு நாளன்றும் கையாளப்படு மானால், அனைத்துக் கல்லூரி மாணவர்களும் இது விஷயத்தில் உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்களானால், அவர்கள், தேர்தல் துறையின் மீட்புதவிக்கு வருவார்கள் என்பதில் எனக்கு ஒரு சிறிதும் சந்தேகம் இல்லை. அப்போது இதைப் போன்ற நேரங்களில் நமக்குத் தேவைப்படும் வாக்குப்பதிவு அலுவலர்களை விட அதிகப்படியான அலுவலர்கள் நமக்குக் கிடைத்துவிடுவார் கள்.

எனவே, இப்போதுள்ள சிக்கலான சூழ்நிலை என்பது கடக்க முடியாத ஒன்று அன்று என்று நான் கருதுகிறேன். இந்தக் காரணத்தின் அடிப்படையில் வயது வந்தோருக்கான வாக் குரிமையை ஏற்க மறுக்கும் என் எதிரணி நண்பர்களுக்கு நான் இதனைச் சுட்டிக் காட்டுகிறேன். அவர்களின் நிலையானது பிறர் செயல்களில் தலையிடுவதாக எனக்குத் தோன்றுகிறது. பிரிட்டிஷ் தூதுக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சிக்கல் ஒன்றை எழுப்பி இந்தியாவில், பல சிக்கல்கள் உள்ளன என்று சொல்லியுள்ளார். அதனால் இந்திய டொமினியன் அந்தஸ்தையோ அல்லது பொறுப் பான அரசாங்கத்தையோ பெறவே கூடாது என்று சொல் கிறார்கள். எனக்கு எதிரே அமர்ந்திருக்கும் பெருமக்கள், ஆங்கிலே யரை இச்சிக்கல்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விடமாட்டார்கள்; ஆனால் அவர்கள் ''எங்கள் உரிமைக் கோரிக் கைகளை முறியடிப்பதற்காக நீங்கள் சிக்கல்களுக்கு ஏன் முட்டுக் கொடுத்து நிறுத்துகிறீர்கள்; இந்தச் சிக்கல்கள் எல்லாம் உறுதி யாகத் தீர்க்கப்படக் கூடியவை'' என்று அவருக்குச் சொல்வார் கள். இதேப் பிரிவில் இருக்கும் நாங்களும் அதைப் போன்றே இந்தச் சிக்கலைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயம் தேடிக் கொள்வதற்கு உங்களையும் அனுமதிப்பதற்குத் தயாராக இல்லை. நமது கைகளில் அதிகாரங்களைப் பெறுவதற்கு இவைகளே இடர்ப்பாடுகளாக இருக்குமானால், அத்தகைய இடர்மிகுந்த சிக்கல் களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று நாங்கள் சொல் கிறோம். ஆனால், சூழ்நிலையினைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆதாயம் அடைவதற்கு உங்களை நாங்கள் ஒருபோதும் அனு மதிக்கப் போவதில்லை.

இதுவரையில் நான், வயதுவந்தோர் வாக்குரிமைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட விவாதங்களின் மீது எனது வாதங் களை எடுத்து வைத்திருக்கிறேன். இப்பொழுது, வயதுவந்தோர் வாக்குரிமைக்கு ஆதரவாக இருக்குமென நான் நினைக்கின்ற ஒன்றிரண்டு விவாதக் கருத்துக்களையும் உங்கள் முன் கொண்டு வருகிறேன். அவை எனது கருத்துப்படி ஏறக்குறைய தீர்வான முடிவுகள்தான். இந்தியாவிலுள்ள அனைத்துச் சாதியினருக்கும் சமூகத்தினருக்கும் சமமான பிரதிநிதித்துவத்தை வழங்கக் கூடிய முறையாக இருக்கிற, வயதுவந்தோர் வாக்குரிமை இல்லாத பிற வாக்குரிமை முறை எதனையும் இந்தியாவில் பெற முடியாது. இந்தியாவிற்கு அந்தப் பயனை விளைவிக்கக் கூடிய பிற முறை எதனையும் வகுத்துக் கொள்வது என்பது உங்களால் இயலாது. இப்போது நிலவிவரும் சூழ்நிலைகளை உதாரணத்திற்காக எடுத் துக் கொள்ளுங்கள். வங்காளத்திலும் பஞ்சாபிலும் முகமதியர்கள் மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். பம்பாயின் பகுதியாக இருக்கிற சிந்துவிலும் கூட முகமதியர்கள் பெரும்பான்மையர்கள்தான். இப்போது இந்த மாநிலங்களில் இருக்கின்ற முகமதிய சமூகத்தினரின் நிலைமை என்ன? நான் முகமதிய நண்பர்களின் மனநிலையை அறிந்து கொள்வதற்கான தொரு கருத்துரையாக இதனை இங்கு குறிப்பிடுகிறேன். அவர்கள் இதிலிருந்து வேறுவிதமான நிலையினைக் கூட எடுத்துக் கொள்ள லாம். நான் ஒரு தேர்வுக்காக இதனை எடுத்துரைக்கிறேன். இன்று நமக்கிருக்கும் வாக்குரிமை முறையின்படி இந்த மாதிலங்களில் இருக்கும் முகமதியர்களின் நிலை என்ன? சிந்து மாநிலத்தின் மக்கள்தொகையில் முகமதியர்கள் 70 விழுக்காட்டளவில் இருக் கிறார்கள்; அவ்வாறு இருந்தும் என்ன பயன்? என் கணிப்புத் தவறில்லை எனில், அவர்களில் வாக்களிப்போரின் எண்ணிக்கை 49 விழுக்காடு மட்டுமே ஆகும். மீண்டும், வ்ங்காளம் மற்றும் பஞ்சாபை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கே பெருந்தொகையாக இருக்கிற முகமதியர்கள், அவ்வாறு இருந்தும் வாக்காளர் பட்டிய லிலே சிறுபான்மையினராகத் தானே இருக்கிறார்கள். திரும்பவும், தாழ்த்தப்பட்டப் பிரிவினரை எடுத்துக் கொள்ளுங்கள். நிலவிவரும் வாக்குரிமை முறையில் வாக்காளர் தொகுதியில் எங்குமே அவர் களுக்கு இடமளிக்கப்படவில்லையே. இந்தவிதமான வாக்குரிமை முறையை வைத்திருப்பது மிகவும் வெட்கப்படுவதற்கும் வேதனைப் படுவதற்கும் உரிய ஒன்றாகவே நான் நினைக்கிறேன். நீங்கள் ஒன்றை நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தியச் சமுதாயம் மிகப் பெரிய எண்ணிக்கையிலான சாதிகளையும் சமயக் கோட்பாடு களையும் உள்ளடக்கியுள்ளது; அந்தச் சாதிகளும் சமயக் கோட் பாடுகளும் நேரான செங்குத்துகள் என்று அழைக்கத்தக்க வகை யில் ஒன்றுக்கொன்று தொடர்புடையன; எனவே நீங்கள் இந்த மொத்தத்தையும் குறிப்பிட்டதொரு புள்ளியில் வெட்டித் தள்ளு வீர்களானால், அதன் ஒரு பகுதி சமமானதொரு விகிதத்தில்

அனைத்துச் சமூகத்தினருக்குமான பிரதிநிதித்துவமாக இருப்பதை நீங்கள் அறியலாம். மற்றொரு வகையில் நான் இதை இவ்வாறு அமைக்கிறேன்; அவை ஒன்றின்மீது ஒன்று வைத்து காய்தளத்தில் இணையாக வைக்கப்பட்டுள்ள மரக்கட்டை வரிசைகளின் அமைப்பைப் போன்றதொரு முறையில் தொடர்புடையதாக இருக்குமாயின், குறிப்பிட்டதொரு இடத்தில் வெட்டும் பொழுது, ஒன்று அல்லது இரண்டு சமுதாயத்தினரின் பிரதிநிதித்துவத்தை மட்டுமே நீங்கள் பெற முடியும். மற்றவை எல்லாம் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும். ஒருசில சாதிகளும் சமுதாய மக்கள் கூட்டங்களுமே பெரும்பகுதியாக இருக்கக் கூடிய இந்திய அரசாங்க அரசியல் முறையை உருவாக்கிட நீங்கள் நிச்சயமாக விரும்ப மாட்டீர்கள். மேலும், இந்தியாவில், ஒரு தென்அமெரிக்காவை—எங்கே ஒருசில மக்களுக்கே வாக்குரிமை; மற்றவர்களுக்கு அது இல்லை என்ற நிலையிருக்கும்—அந்தவொரு தென் அமெரிக்காவினை உருவாக்கிட நீங்கள் நிச்சயமாக விரும்பமாட்டீர்கள். நீங்கள், ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் தனது விதியைத் தானே அமைத்துக் கொள்ளும் வகையில் வாக்குரிமை கொடுக்க வேண்டும் என்பதில், ஒவ்வொரு மனிதனுக்கும அரசியல் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்பதில் விருப்பமுடையவராக இருப்பீர்களானால், அப்போது, இந்தியாவில் வயதுவந்தோர் வாக்குரிமையைத் தவிர வேறு விதமான எந்த அமைப்பு முறையையும் நீங்கள் பெறுவதற்கு இயலாது என்பதை நான் இங்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது, நான் இங்கு மற்றுமொரு உதாரணத்தைத் தருகிறேன். நான் பெண்களின் வாக்குரிமைக்கு எதிரானவன் அல்ல என்பதால், நமது சக பெண் உறுப்பினர் திருமதி சுப்பராயன் அவர்கள் இந்த விஷயத்தில் எங்களுக்கு ஆதரவாக நின்றதற்காக அவர்களுக்கு நான் மிகவும் நன்றிக்கடன் பட்டவனாக இருக்கிறேன். அவரது கருத்தினை நான் முழுமனதார ஆதரிக்கிறேன். வாக்குரிமையைப் பெருக்குவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளில் ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக்காட்ட முற்படுகிறேன். இங்குப் படித்தவருக்கு மட்டுமே வாக்குரிமை இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதனை நான் மயக்கமூட்டும் கற்பனை வாக்குரிமை என்று அழைப்பதற்குக் கருதவில்லை. ஆனால், அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல விழைகிறேன். அதன் விளைவு இதுவாகத்தான் இருக்கும். அதாவது சில சமுதாய மக்கள்தான் தங்கள் வாக்குகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கிக் கொள்வார்கள். ஆனால் மற்ற பிரிவு மக்களோ இப்போது எங்கே இருக்கிறார்களோ அங்கேயே நிற்பார்கள். இந்தியாவில் கல்வி ஒருசீராகப் பரவியிருக்கவில்லை. சில சமுதாயத்தினர் தங்கள் முந்தைய வாக்களிப்போர் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கும், மற்ற பிரிவு மக்கள் அவர்கள்

இருக்கும் நிலையிலேயே இருப்பதற்கும் ஏற்றவகையில் அது அமைந்திருக்கிறது. நீங்கள் நிச்சயமாக அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு விரும்பமாட்டீர்கள்.

எனவே நான் பணிவோடு தெரிவிப்பது என்னவெனில், இந்த மாநாடும், இங்கு மேசையைச் சுற்றி சுற்றி அமர்ந்திருக்கிற உறுப்பினர்களும் தாங்கள் சார்ந்திருக்கும் சாதியினருக்கு உண்மையாக நடந்து கொள்வார்களேயானால், இந்தியா பொறுப்புள்ள அரசாங்கத்தைப் பெற்றாக வேண்டும் என்றும் அந்த அரசாங்கம் மக்களுக்குப் பொறுப்புள்ளதாக இருக்க வேண்டும் என்றும் நம்புங்கள். அதற்கு வயதுவந்தோர் வாக்குரிமை முறையைத் தவிர வேறு எந்தவித மாற்றுவழியும் இல்லை என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மேலுமொரு நோக்கக் காரணத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது, இது குறித்து மிகவும் முடிவானதொரு நோக்கக் காரணமாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. கூட்டு மற்றும் தனித்தனியான வாக்காளர் தொகுதிகள் ஒன்றுக்கொன்று மோதுகின்ற எதிர்நிலைப் பிரச்சினையாகும். நாம் அனைவருக்கும் தெரிந்த வகையில், அது ஓயாமல் தொல்லைதரும் பிரச்சினையாகவே இருக்கிறது. இது மிகவும் இக்கட்டான பிரச்சினையாகவும் எனக்குத் தோன்றுகிறது. கூட்டு மற்றும் தனித்தனி வாக்காளர் தொகுதிகளின் மோதுகின்ற பிரச்சினையும் வாக்குரிமைப் பிரச்சினையும் ஒன்றுக்கொன்று விடுவித்துக் கொள்ள முடியாமல் இணைக்கப்பட்டிருக்கும் பிரச்சினை என்று நான் கருதுவதையேனும் இந்த மாநாட்டில் சுட்டிக் காட்ட முயல்கிறேன். சிறுபான்மையினர் வகுக்கும் வயதுவந்தோருக்கான வாக்குரிமை இருந்தால் அன்றி, நீங்கள், கூட்டு வாக்காளர் தொகுதியில் சேர்ந்து கொள்ளுமாறு இந்தியாவிலுள்ள சிறுபான்மையினர் எவரிடமும் கேட்டுக் கொள்ள முடியாது; இந்தியாவிலுள்ள சிறுபான்மையினர் எவரையும் கட்டாயப்படுத்தவும் முடியாது; மற்றும் இந்தியாவிலுள்ள சிறுபான்மையினர் எவரிடமிருந்தும் அதற்கான இசைவினைப் பெறவும் முடியாது. நான், எனக்குரிய சமுதாய அதிகாரங்களுக்கு ஒத்த அளவிலான வாக்குத் தொகுதி அதிகாரத்தை என்னால் தேர்தல் நேரத்தில் செலுத்த முடியும் என்பதில் நான் உறுதியாக இருந்தாலன்றி, எந்தவிதப் பெரும்பான்மை அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்கும் அதிகாரத்திற்கும் என்னை நானே ஆட்படுத்திக் கொள்ளப் போவதில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒவ்வோர் ஆணும் ஒவ்வொரு பெண்ணும் வாக்கினைப் பயன்படுத்தி இந்த நாட்டின் பெருந்தொகையான மக்களின் பிரதிநிதியாக இருக்கப் போகிற வேட்பாளரின் முடிவைத் தீர்மானிக்கும் திறமையைப் பெற்றிருக்கிறார்கள் என்று நான் அறிந்து கொண்டால் அன்றி, நான் உறுதியாகக் கூட்டு வாக்காளர் தொகுதிக்குச் சம்மதிக்கப் போவதில்லை உறுதியாகச் சம்மதிக்கப் போவதில்லை. நான் சிறுபான்மையினர் நிலைக்கு என்னை ஆட்படுத்திக்கொள்ளப் போவதில்லை. எந்த ஒரு பெரும்பான்மையினரும் எனது

வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை. அது நடக்காது; அது நடக்கவே நடக்காது. எந்தச் சூழ்நிலையிலும் இல்லை. நான் எனது சிறுபான்மையினர் விஷயத்தில் எது உண்மை என்று நினைக்கிறேனோ அதுவே முகமதியர்கள் விஷயத்திலும் உண்மையாக இருக்கக் கூடும். நான் மற்றொரு குழுவில் சொல்ல வேண்டியதாக இருப்பதை இங்குச் சொல்ல விரும்பவில்லை. ஆனாலும், இந்தக் கருத்து மிகவும் தொடர்புடையதாக இருப்பதால் என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. வங்காளத்திலோ அல்லது பஞ்சாபிலோ இருக்கும் முகமதியர்களுக்கு வாக்காளர் பட்டியலில் பெரும்பான்மை இடம் கொடுத்தாலன்றி அவர்களைக் கூட்டு வாக்காளர் தொகுதியில் சேர்ந்து கொள்வதற்கு ஒத்துக்கொள்ளச் செய்வது நியாயமானதாக இருக்காது. அவர்களை வாக்காளர் அதிகார முறையில் சிறுபான்மையினராக ஆக்கியபின்பு ''எங்களோடு வாருங்கள். கூட்டுத் தேர்தல் தொகுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறிய பின்பு நீங்கள் முகமதியர்களுக்கு வாக்குரிமையை இல்லை என்று மறுக்க முடியாது. இது விஷயத்தின் தீர்மானமான முடிவுகளுக்கு நேரு குழுவினாலும் இந்திய மத்தியக் குழுவின் மூன்று உறுப்பினர்களாலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது.

நான், இதனை முடிப்பதற்கு முன்னர், எங்களுக்கு வயது வந்தோர் வாக்குரிமையை வழங்காமல் இருக்கும் எனது நண்பர்களுக்கு ஒன்றிரண்டு குறிப்புக்களை எடுத்துக்காட்ட முற்படுகிறேன். இந்தப் பிரச்சினையின் மீது முழுவதுமாகச் சார்ந்திராமல், இந்தியாவிற்குப் பொறுப்புள்ள அரசாங்கம் வழங்கப்படும். பிரச்சினை குறித்து, நான் எனது உரையின் தொடக்கத்திலேயே மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டேன். இருந்த போதிலும் 80 அல்லது 90 பேரைக் கொண்ட ஒரு மாநாட்டில் நானும் எனது நண்பருமாக இருவர் மட்டுமே 40 மில்லியன் மக்களின் பிரதிநிதியாக நிற்கிறோம்.

*திவான் பகதூர் ராமச்சந்திர ராவ் :* டாக்டர் அம்பேத்கர் அவர்கள் லார்டு ஜெட் லாண்ட்டின் செயல் திட்டத்தை ஏற்றுக் கொள்கிறாரா?

*டாக்டர் அம்பேத்கர் :* அக்கொள்கையினை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் நான் எடுத்துரைத்த பொருளின் மீது நூற்றுக் கணக்கில் கடிதங்களும் தந்திகளும் வந்த வண்ணம் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இது ஒரு நெருக்கடியான நிலைமை.

*சர். பி. சி. மிட்டர் :* மத்தியச் சட்ட மன்றம் என்ன ஆனது? வயதுவந்தோர் வாக்குரிமை வேண்டும் என்கிறாரா? எந்த அளவிலான சட்டமன்றம் வேண்டும் என்று அவர் விரும்புகிறார்?

*டாக்டர் அம்பேத்கர் :* அது பின்னர் முடிவெடுக்கப்பட வேண்டிய பிரச்சினை. மத்தியச் சட்டமன்றம் 500 உறுப்பினர்கள் கொண்டதாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

*சர். பி. சி. மிட்டர் :* வயது வந்தோர் வாக்குரிமையுடன் கூடிய தாக அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்.

*சர் கவாஸ்ஜி ஜெஹாங்கீர் :* இந்த யோசனைகள் அனைத்தும், வாக்குரிமை என்பது சட்ட மன்றங்களின் பிரதிநிதித்துவத்திற்கு அடித்தளமாக இருப்பது என்று எனது உணர்வில் இருந்து உருவெடுப்பதை, நான் உயரிய மரியாதையைப் பேகத்திற்குச் செலுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். இது எல்லா நாடுகளிலும் இவ்வாறே காணப்படுகிறது.

ஆனால், நாம் சமூகத்திற்கென்று முக்கியத்துவம் கொடுக்கும் கொள்கையை அறிமுகப்படுத்தியிருக்கிற இடத்து, அந்தக் கொள்கை வலிமையுள்ளதாக அமையாது.

*கலோனல் கித்னே :* நான், இப்பொழுது திடமானதொரு யோசனையைத் தெரிவிக்கப் போகிறேன்; எனது திண்ணமான யோசனை இதுதான்: அதாவது ஜெட்லண்டு பிரபுவால் யோசனை தெரிவிக்கப்பட்ட செயல்திட்டத்தைக் கையாள்வதில் நாம் நேரடித் தேர்தலுக்கும் மறைமுக தேர்தலுக்கும் நாடிச் செல்ல வேண்டியுள்ளது. நேரடியான தேர்தலைப் பொறுத்தவரை, வாக்களிக்கும் தகுதியை மேலும் விரிவுபடுத்த வேண்டியதில்லை என்றும், தற்போதிருக்கும் வாக்களிக்கும் தகுதி அப்படியே தொடர்ந்து இருந்து வர வேண்டும் என்றும் நான் கருதுகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* கூடாது.

*கலோனல் கித்னே :* அது சரி.

*சர் கவாஸ்ஜி ஜெஹாங்கீர் :* அது நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம் ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளுக்காகவும் ஒரு சில எண்ணிக்கையிலான அதன் பிரதிநிதிகளைச் சட்டமன்றத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மக்கள் தொகையில் பெரும்பாலானோர் நேரடி வாக்கின்றி இருப்பார்கள். மேலும் அந்த மக்கள் தொகை முழுவதற்கும் வாக்களிக்கும் தகுதியை விரிவுபடுத்துதல் வேண்டும். அது வயதுவந்தோர் எண்ணிக்கையில் 25 சதவீதம் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். அவர்கள் தங்கள் பிரதிநிதிகளை மறைமுகத் தேர்தல் முறையின்படி கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் இருந்து அனுப்பிவைத்தல் வேண்டும். எனக்கு இந்த இரண்டிற்கும் எந்த வேறுபாடும் தெரியவில்லை. அது தொழிற்சாலைத் தொழிலாளரையும், அத்துடன் கூடவே விவசாயத் தொழிலாளரையும் புதியதாகக் கொண்டுவந்து புகுத்திவிடும்.

*டாக்டர் அம்பேத்கர் :* அதைப்போன்ற எதனையும் அது புதியதாகக் கொண்டுவந்து புகுத்திவிடாது.

★ ★ ★ ★ ★

*டாக்டர் அம்பேத்கர் :* இன்று காலை நான் வாக்குரிமைத்

தகுதி குறித்து என்ன சொல்ல வேண்டி உள்ளது என்று நினைத்தேனோ அதனைத் தெரிவித்தேன். ஆனால், நான் இன்று காலையில் உரைத்தவற்றிற்குக் கேடு இல்லாமல், வாக்களிக்கும் தகுதியை நீட்டித்தல் தொடர்பாக இந்தக் குழுவின் முன்னே கொண்டுவரப்பட்ட யோசனைகளை நான் ஆராய்ந்து பார்க்க விழைகிறேன். வயதுவந்தோர் வாக்குரிமைதான் குறிக்கோள் என்பதை இந்தக் குழு ஒத்துக் கொண்டிருக்கிறது என்று நான் உணர்கிறேன். நம்மில் சிலர் அது உடனடியாக நடைமுறைக்கும் கொண்டுவரப்படுதல் வேண்டும் என்றும், மற்ற நமது நண்பர்கள் அது படிப்படியாகவே கைக்கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். எனவே, நாம், இரண்டு திடமான யோசனைகளை நமக்கு முன்னர் வைத்துள்ளோம். ஒன்று, தவணை முறையினைப் பயன்படுத்தி, படிப்படியான செயல் திட்டத்தின் மூலமாக வாக்குரிமையை அதிகரித்து அதாவது, ஒருசில ஆண்டுகளின் இடைவெளிக்குள் தற்போதிருக்கும் வாக்காளர் பட்டியலில் 25 சதவீதத்தைச் சேர்த்தல். நமது உயர்குடி நண்பர் ஜட்லாண்டின் பிரபு தெரிவித்த யோசனையானது வயது வந்தோர் வாக்குரிமை என்னும் குறிக்கோளை மெய்யாக்கும் விளைவினை ஏற்படுத்த இருப்பதாக அமைகிறது.

இப்பொழுது, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், நான் சொன்னபடி, கலப்பில்லாத, செறிவு குன்றாத வயதுவந்தோர் வாக்குரிமையே வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருந்த போதிலும் உயர்குடிப் பிரபுவின் யோசனைகளில் எனக்குத் தனிப்பற்று இருப்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. இரண்டில் ஒன்றை விரும்பித் தேர்ந்தெடுக்க வேண்டியதாக இருக்குமேயானால், ஒரு பிரிவு மக்களுக்கு மட்டுமே ஒருவிதமான வாக்குரிமை வழங்கி, பெருவாரியான மக்களுக்கான சுய அரசாங்கத்திற்குப் பின்னர் காலம் வரட்டும் என்று இப்பொழுது தள்ளிப் போடுகிற முறையைவிட நான் வயதுவந்தோர் வாக்குரிமைக்கு உடனடியாக அடித்தளம் அமைக்கிற முறையினைத்தான் பெறுவதற்கு நிச்சயமாக விரும்புவேன். ஆனால், இதைச் சொல்லிய நான், அந்த யோசனைக்கு முழு மனதான ஆதரவினை என்னால் அளிக்க முடியாது. ஏனென்றால் அதில் ஒரு சில சிக்கல்கள் இருப்பதாகக் காண்கிறேன். ஆனால், நம்மில் சிலர் உணர்வதைப் போன்று அந்தச் சிக்கல்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதற்கு உயர்குடிப் பிரபு பெரும்பாலும் உதவ முன்வருவார் என்று நான் நினைக்கின்ற காரணத்தினால், நான் ஒன்றிரண்டு குறிப்புரைகளை உங்கள் முன் வைக்கக் கருதுகிறேன். ஒரு விஷயம் எனக்குத் தெரிகிறது. அதாவது குழுவினர் மூலமான மறைமுகத் தேர்தல் முறை மேற்கொள்ளப்படுமானால், ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்த முறையின்படிப் பெரும்பாலும் பயனடைய மாட்டார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. நான் ஒவ்வொரு கிராமத்திலும் சிறுசிறு எண்ணிக்கையில் இந்தியா முழுவதிலும் சிதறிக் கிடக்கிறார்களே அவர்கள் மீது சமூக மற்றும் பொருளாதார ஆதிக்கத்தைச்

செலுத்திவரும் கிராம மக்களின் வலிமைமிக்க அதிகாரக் குழுக்களில் அவர்களது வாழ்க்கை, எல்லாப் பக்கங்களிலும் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது என்கிற காரணத்திற்காக இதைச் சொல்கிறேன்; ஒடுக்கப்பட்ட மக்கள், இந்த மறைமுகத் தேர்தல் முறை அவர்களாலும் பயன்படுத்தப்படுவதற்கு வரும்பொழுது, முதல்நிலை அல்லது தொடக்கநிலைத் தேர்தலின் போது அவர்கள் தங்கள் வாக்குரிமையை செலுத்துகையில் அவர்களது பிரதிநிதி களாக இல்லாதிருக்கும் மக்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுவார்கள். இது நடக்க கூடியது; நடப்பதற்குப் பெரும்பாலும் வாய்ப்பிருக்கிறது. அதுவே என் உள்ளத்தில் உறுதி யாக உள்ள அச்சம் ஆகும்.

மற்றொரு செய்தி, தவணைமுறையின் மூலமாக வாக்குரிமையை நீட்டிக்கும் படிப்படியான முறைக்குப் பதிலாக இந்த முறை கையாளப்பட வேண்டுமானால், சொத்துரிமை பிரிவினரோடு அல்லது மற்ற பிற பிரிவினரோடு மட்டும் ஏன் இதனைக் கட்டுப் படுத்திச் சிறைப்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன். வயதுவந்தோர் வாக்குரிமையானது இந்த முறைக்கு அடித்தளமாக அமைய வேண்டும் என்ற விதத்திலான முறையை நாம் ஏன் நீட்டிக்கக் கூடாது என்று எனக்குப் புலப்படவில்லை.

*ஓர் உறுப்பினர்:* அது தான் உள்நோக்கம்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் இதைக்கேட்டு மகிழ்கிறேன். தனித் தனித் தேர்தல் தொகுதிகள் இதில் குழப்பத்தை உண்டாக்கி விடும் என்ற சிக்கல்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது பற்றி நான் அவ்வாறு நினைக்கவில்லை. ஏனென்றால், மறைமுகத் தேர்தல் முறையிலும் தங்களுக்கென்று தனியாகப் பதிவேடுகள் வேண்டு மென விரும்பும் சமுதாய மக்களுக்கு நீங்கள் இன்னும் தனியான பதிவேடுகளைப் பராமரிக்கிறோம். இந்த விஷயத்தில் சிக்கல் எதனையும் இது உருவாக்கிவிடும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால், இந்தக் கோட்பாடு உண்மையிலேயே நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதை நாம் அறிந்தாலன்றி, அது பற்றிய விவரங்கள் அனைத்தும் நமக்குத் தெரிந்தாலன்றி நாம் இந்தக் கோட்பாட்டிற்கு நான் சொல்கிற படி ஒரு கூற்றுக்குக் கூட நமது ஆதரவினைத் தர முடியாது. ஆகையால் எனது திட மான யோசனை இதுதான். அதாவது, இதே முறையினை நிறை வேற்றும் பணியில் இதன் பின்னர் ஈடுபடவிருக்கின்ற வாக் குரிமைக் குழுவிடம் முழுமையான செய்தி மற்றும் தகவல்களுடன் நாம் இதனை மிகச் சிறந்த முறையில் திறம்படப் பரிந்துரை செய் வதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் சிறியதொரு துணைக்குழு ஒன்றை இந்தக் குழு அமைத்திட வேண்டும். அதன் செப்பமற்ற வடிவத்திற்கு, இதே வாசத்தைப் பயன்படுத்துவதற்கு உயர்குடிப் பிரபு என்னை மன்னிப்பாராயின், இங்குப் பேசுகிற எங்களில் எவருக்கும் இதே கோட்பாட்டிற்கு ஆதரவினை அளிப்பது

என்பது மிதமிஞ்சிய செயலாகும்; என்னைப் பொறுத்தவரை யிலும் இது எந்த விதத்திலும் கடினமான காரியமாக இருக்கும்.

★ ★ ★ ★ ★

*திரு. பாசு :* ஆனால், எப்போதும் உச்ச அளவானதொரு எண்களைக் கொடுப்பது தேவையானதாக இருக்குமா, ஏனெனில் வாக்குரிமைக் குழு இருக்கும்; அக்குழு முழுமையாக அதனைப் பரிசீலித்திட வேண்டும். குறைந்த அளவிலான எண்களை வைத்துக் கொள்ள வேண்டுமென நான் நினைக்கிறேன். இதுதான் இப் போது தேவை. உச்ச அளவான எண்களைப் பொறுத்தவரை அவர்கள்தான் அதை முடிவு செய்ய வேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர் :* உங்கள் சுருக்கவுரையின் முதற்பத்தி குறித்து என்து குறிப்புரையைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். அந்தப் பத்தியில், நிர்வாகம் மற்றும் சாதனங்களின் சலுகைகள் மூலமாக வாக்குரிமையின் நீட்டிப்புக் கட்டுப்படுத்தப் பட வேண்டும் என்ற கமிட்டியின் கருத்தினை உங்கள் பத்தியில் நீங்கள் எடுத்துரைத்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது ஒன்றுதான் நாங்கள் இருக்க வேண்டும் என்று நினைத்தக் கட்டுப்பாடு ஆகும்.

*சர். சி. செதல்வாட் :* அது வெறும் நிர்வாகம் மட்டுமல்ல; அத்துடன் பிற சலுகைகளும் உள்ளன.

*திருமதி சுப்பராயன் :* நடைமுறைப்படுத்தத்தக்கது என்றால் என்ன?

*டாக்டர் அம்பேத்கர் :* நடைமுறை என்பது இயந்திரம், சாத னம். தற்போதிருக்கும் அரசு எந்திரத்தைக் கொண்டு 50% மக்கள் தொகைக்கு வாக்குரிமை வழங்குவது நடைமுறையில் கொண்டுவர முடியுமா என்பதைக் குழு கண்டறிய வேண்டும்.

*திரு. ஜாஃபருல்லா கான்:* மொத்த மக்கள் தொகையில் 50% என்றா கூறுகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்.

*திரு. ஜாஃபருல்லா கான் :* அது உலகின் மொத்த முழு வயது வந்தோர் வாக்குரிமை எண்ணிக்கையை விடச் சற்று அதிகமாக இருக்கக் கூடும்.

*தலைவர் :* நாம் அதிகபட்ச வரம்பிலான அளவைத் தவிர்க்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. மொத்தப் பொரு ளும் நடைமுறைப்படுத்தத் தக்கது என்றும், விரும்பியேற்கத் தக்கது என்றும் வல்லுநர் குழு தெரிவிக்கும் முடிவைப் பொறுத்து அமை யும்; எனவே நாம் உச்சவரம்பினைத் தற்போது எடுத்துக் கொள் ளத் தேவையில்லை. உச்சவரம்பினை நாம் தவிர்த்து விடுவோம். எவரேனும், நான் அதனைத் திரும்பவும் படித்துக்காட்ட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

*திரு. கே. டி. பால் :* நீங்கள் 25 சதவீதத்தைத் தவிர்க்கின்ற பட்சத்தில், அது எங்கள் கூற்றை வலுவிழக்கச் செய்துவிடும்.

*தலைவர் :* வலுவிழக்கச் செய்யாது.

*திரு. சிந்தாமணி :* எப்போதும் இது போன்ற விஷயங்களில் குறைந்தபட்ச அளவென்று உரைக்கப்படுவது அது உண்மையில் நடைமுறைக்கு வருகிறபோது அதிகபட்ச அளவினை எட்டிவிடுகிறது. நமது அறிக்கையில் 10 சதவீதம் என்று நாம் ஒரு எண்ணைச் சுட்டிக் காட்டுவோமானால், அவர்கள் அதிகபட்சமாக 10 சதவீதத்தை வழங்குவார்களேயானால் நாம் அதிலே தன்னிறைவு அடைந்துவிட்டோம் என்பதை, இதற்கென அமைக்கப்படும் நிதிக் குழுத் தெரிவிப்பதாக அமைந்துவிடும். நம்மில் அந்த எண்ணை 25 சதவீதம் என்று குறிப்பிட்டு இருப்பவர்கள் எவரும், தற்போதிருக்கும் நிலைமைக்கும் வயதுவந்தோர் வாக்குரிமைக்கும் இடையிலே திருப்தியற்றதொரு சமரசமாகவே அவ்வாறு செய்துள்ளார்கள். என் ஒருவனுக்காக அதனை வெளியில் எடுத்து விடுவீர்களானால் நாம் மகிழ்ச்சியடையப் போவதில்லை.

*மிஸ்டர் ஃபுட் :* திரு. சிந்தாமணி குறிப்பிட்டது வயதுவந்தோர் எண்ணிக்கையில் 25 சதவீதமா?

*திரு. சிந்தாமணி :* மொத்த மக்கள்தொகையில்.

*மிஸ்டர் ஃபுட் :* தங்கள் மன்னிப்பைக் கோருகிறேன்.

*திரு. ஜோஷி :* அந்த யோசனை ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று என்று அந்த அறிக்கையில் நீங்கள் எழுதிக் கொள்ளக் கூடாது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அதனை ஏற்றுக் கொள்ளாதவர்களில் நானும் ஒருவன். மேலும் முழு அளவிலான மாநாட்டில் வயதுவந்தோர் வாக்குரிமைப் பிரச்சினையை மறுபடியும் ஆரம்பிக்கும் உரிமை எனக்கு உண்டு என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* எனது நிலைமையும் கூட அதுவே.

*திரு. ஜோஷி :* இதனை அறிக்கையில் குறித்துக் கொள்ளுதல் வேண்டும்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் அம்பேத்கர் :* அது செயற்படத் தொடங்கும் என்று நமக்குத் தெரியுமேயானால் அது இரண்டாவது சிறந்த நன்மையாக இருக்கும். (எல்லோருக்கும் வயதுவந்தோர் வாக்குரிமை).

*தலைவர்:* அதற்குட்பட்டு, குழு எஞ்சியிருக்கும் மற்றவற்றை ஏற்றுக் கொள்கிறதா?

---

* துணைக்குழு எண் VI வாக்குரிமை நடவடிக்கைக் குறிப்புகள் பக். 76-78.

*சர். சி. ஜஹாங்கீர் :* எங்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் உண்மைகள் அனைத்தும் நாங்கள் அறிந்தாலன்றி, 25 சதவீதம் என்ற அந்த எண்ணை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

*தலைவர் :* வாக்குரிமை வல்லுநர்குழு ஒன்று அமைக்கப்படும் என்று நாங்கள் யோசனைத் தெரிவித்துள்ளோம்.

*சர். சி. பி. மிட்டர் :* உண்மைகள் அனைத்தையும் முழுமையாக அறிவதற்கு முன்னால், எங்களை நாங்களே சிக்கவைத்துக் கொள்வது சரியாக இருக்காது.

*தலைவர் :* வாக்குரிமை வல்லுநர் குழுவிடம் எங்களுக்குரிய பணியை ஒப்படைப்பது எங்களுக்குச் சரியானதல்ல. நாங்களே, சில பரிந்துரைகளைச் செய்தாக வேண்டும் என்ற பரிதாப நிலையில் இருக்கிறோம். மேலும், எங்கள் பணியை இவர்தான் எடுத்து நடத்த வேண்டும் என்று வெறும் பரிந்துரையை மட்டும் செய்வதற்கு எங்களால் இயலாது.

*சர். பி. சி. மிட்டர்:* நான் என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை மட்டும் தெரிவிக்கிறேன். எவ்வளவு அதிகமாக அதிகரிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக அதிகரிக்கப்பட' வேண்டும் என்று நான் வாக்குரிமைக் குழுவிற்கு, கருத்துத் தெரிவிக்கிறேன். மேலும் 10 அல்லது 20 அல்லது 50 சதவீதமாக இருப்பதை நான் ஏற்க மறுக்காமல், இருந்திருக்கக் கூடும். எனக்கு முன்னரே இந்த விவரங்கள் அனைத்தும் தெரியுமானால் அதன்மீது கருத்தொன்றினை அமைத்திருக்கலாம்.

*தலைவர் :* சர். பிரொவாஷ் அவர்களே, அதிகபட்சம் குறைந்த பட்சம் ஆகிய இரண்டுக்கான பரிந்துரை எதுவும் முழுவதுமாக வாக்குரிமைக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு இருப்பதை ஏதுவாக்கும் வகையில் நீங்கள் விரும்புகிற வண்ணம் தகுதி எதனையும் விதிக்க விரும்புகிறீர்களா? அந்தக் குழுவிற்கு நாம் வழிகாட்டு நெறிகள் சிலவற்றை வழங்கியாக வேண்டும் என்று நான் உணர்கிறேன். எனினும், நான் இப்பொழுது மிகவும் நெருங்கி வந்துவிட்டோம். மேலும், இதுபற்றித் தங்களுடன் பின்னர் பேசுவேன்.

*திரு. சிந்தாமணி :* நான் எடுத்துரைக்கவிருக்கும் கருத்தினை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், வெவ்வேறு சமுதாயத்தின் மக்கள்தொகையில் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதே விகிதாச்சாரப் படியான வாக்காளர்களை உறுதிசெய்யும் வகையில் அத்தகைய தகுதிகளை வகுத்தமைப்பதற்கு வாக்குரிமைக்குழுக் கேட்டுக் கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு முக்கியமான செயற்குறிப்பும் கூட நம்முன்னே இருக்கிறது. இது சைமன் குழுவினால் முன்மொழியப் பட்டது. மேலும் இது பல்வேறு உள்ளூர் அரசாங்கங்களாலும் ஆதரிக்கப்பட்டுள்ளது. அதனைப் புதியதென்று கருத முடியுமா?

வாக்குரிமைக் குழு அது இயலாது என்று கருதினால் அதனை ஏற்க மறுத்துவிட முடியும்.

*தலைவர் :* இது "வாக்குரிமைக்கான பொதுவான அடிப் படை" என்னும் அடுத்தத் தலைப்பின்கீழ் வருகிறது என்று நினைக்கிறேன். (i) வாக்குரிமைக்கான தகுதிகள் ஒரே பகுதியில் வாழும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமா? "ஒரே பகுதியில்" என்னும் சொற்களின் மீது உங்கள் கவனத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். தற்போது பெண்களுக்கான வாக்குரிமை அல்லது அதைப் போன்ற பொருள் எது குறித்தும் விவாதிக்கும் புதுப்பணியில் எங்களைப் புகுத்தி விடாதீர்கள்.

*சர். பி. சி. மிட்டர் :* சிறப்புக் கூறுகளும் வகுப்புவாதக் கூறு களும் சிறுபான்மையினர் குழுவின்கீழ் வருவதாக, நீங்கள் கூட்டத்தை நடத்திச் சென்றதில் இருந்து நான் நினைத்தேன்.

*தலைவர் :* அதனைப் பற்றி மிகவும் விளக்கமாகப் பின்னர் நாம் நாளைக்கு அறிந்து கொள்ளலாம். தற்சமயம், நாம் வாக்குரிமைக் கான பொதுவான அடிப்படைத் தகுதியினைப் பற்றியும் அனைத் துப்பிரிவு மக்களுக்கும் தகுதிகள் ஒரேமாதிரியாக இருக்க வேண்டுமா என்பது பற்றியும் விவாதிக்கலாம்.

*திவான் பகதூர் இராமச்சந்திர ராவ் :* நீங்கள், பிரதம அமைச்ச ரிடம் பேச இருப்பதாகத் தெரிவித்தீர்கள். இந்த விஷயம் எங்கள் குழுவின் செயற்பாட்டு எல்லைக்குள் வந்துள்ளதா அல்லது பிற குழுவின் செயல் எல்லைக்குள் வந்துள்ளதா என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர் :* நான், செயற்குறிப்பொன்றை இங்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்தக் குழுவின் ஒருசில உறுப் பினர்கள் வயதுவந்தோர் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்க வேண்டும் என்பது தற்போதைக்கு இயலாது அல்லது நடை முறைப்படுத்த முடியாதது என்று சுட்டிக்காட்டிப் பேசியிருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வயதுவந்தோர் வாக் குரிமையினை எந்த விலை கொடுத்தேனும் பெற்றுவிடுவது இயலும் என்று நான் நினைக்கிறேன். எந்தக் காரணத்திற்கு அனைத்துச் சமுதாயத்தினருக்கும் ஒரே மாதிரியான வாக்குரிமை கொடுக்கவேண்டும்— உண்மையில், சொல்வதென்றால் நடை முறை வாழ்க்கையில், சமமான வாழ்க்கை நிலையை அடைய வேண்டும் என்பதற்காக நாம் வேறுபாடான வழிமுறைகளைக் கையாள வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று நான் நினைக் கிறேன். பணம் படைத்த பிரிவினரையும் ஏழை எளியோரையும் ஒன்றாக நடத்தும் விஷயத்தில், எடுத்துக்காட்டிற்காக, நாம் பிந்தியவர்களுக்கு நலம் பயக்கும் வகையில், ஒருசில தனியான சட்ட நடவடிக்கைகளைச் செய்து வருகிறோம். பணம் படைத்த

பிரிவினருக்கு ஏழை மக்களை விட அதிகமான வரி விதிக்கிறோம். அதற்குக் காரணமாக இருப்பது, வரிசெலுத்துவதற்கான தகுதியும் ஆற்றலும் நடைமுறையில் உணரப்பட்டது என்பதுதான். அதே சலுகை, இங்கே தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அனைத்துப் பிரிவு மக்களும் வாக்காளர் பட்டியலில் சமமான அளவில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும் என்பது குழுவினுடைய நோக்கமாக இருக்குமாயின், அந்த நோக்கத்திற்காக, வெவ்வேறு பிரிவு மக்களை வெவ்வேறு விதமாக நடத்துவது என்ற வழிமுறையே கைக்கொள்ளத்தக்க ஒன்றாக இருக்குமாயின், ஒரு பிரிவு மக்கள் மற்ற பிரிவு மக்களைவிட வேறுவிதமாக நடத்தப்படக் கூடாது என்பதற்காகக் காரணம் ஏதும் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை. எடுத்துக் காட்டிற்காக, பிற சமூக பிரிவினருக்கு அல்லாமல், வயதுவந்தோருக்கான வாக்குரிமை தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்; பிற சமூக மக்களுக்கு ஜெட்லாண்ட் பிரபு தெரிவித்திருக்கும் யோசனையின்படியான வேறு முறையொன்று பயன்படுத்தப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது, தாழ்த்தப்பட்ட மக்களின் தனித்ததொரு அலாதியான நிலைமையினைக் கவனத்தில் கொண்டும், அவர்களுக்குப் பிற வாக்குரிமை முறை எதுவும் வாக்களிக்கும் உரிமையினைத் தந்துவிட முடியாது என்பதுடன், வாக்களிக்கும் உரிமையில்லாமல், இன்றைய நேரத்தில், சட்டமன்றத் தேர்தலில் நிற்கும் வேட்பாளர் எவராலும் அவர்களுக்கென்று அறிவிக்கப்பட்டுள்ள தனியிடத்தைப் பெற்றுத் தந்திட முடியாது என்பதையும் சேர்த்துக் கவனத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, அது நடப்பியலில் எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்திவிடாது; மேலும் அந்த மாகாணத்திலுள்ள தேர்தல் சாதனத்தின் மீது பெரியதொரு தாக்கம் எதனையும் அது உண்டாக்கி விடாது என்றே எனக்குத் தோன்றுகிறது. இக்குழு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இம்முறை பயன்படுத்தப்படுவதை அங்கீகரிக்குமானால், பெரியதொரு தீமை எதனையும் அது செய்துவிட்டதாகக் கருதப்படாது.

## மூன்றாவது அமர்வு—டிசம்பர், 30, 1930

* *தலைவர் :* இப்போது நாம் கல்வித்தகுதி பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கின்றோம். நாம் மேற்கொண்ட இரண்டாவது முடிவு இதுதான் என நான் நினைவூட்டுகிறேன் : ''எத்துறையிலும் வாக்குரிமைத் தகுதி எல்லா வகுப்பினருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென நாம் பரிந்துரை செய்கிறோம். ஆனால், தனது உத்தேசத் திட்டங்களை உருவாக்கும்போது, வாக்குரிமை நிபுணர் குழு, ஒவ்வொரு வகுப்பினரும், அவ்வகுப்பு மக்கள்

* துணைக்குழு VI (வாக்குரிமை) கூட்ட நடவடிக்கைகள் பக். 94.

தொகைக்கு ஏற்ப, வாக்குரிமை பலத்தை முடிந்தவரை அளிக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையினை வழங்க வேண்டுவதைக் கருத்தில் கொள்ள வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். மேலும், இத்தகைய பலனைப் பெற, நடைமுறைக்கு ஏற்றவரை அவர்கள் வாக்குரிமை பெற்றிட இக்குழு திட்டமிட வேண்டும்.'' அது ஒருவகையில் தவறில்லாது இருப்பதற்கான ஒரு ஆலோசனையாக உள்ளது என நினைக்கிறேன். ஆனால், அதே நேரத்தில், 'அவர்கள் வாக்குரிமைப் பெற்றிட இக்குழு திட்டமிட வேண்டும்.'' உள்ள ஒரே வழி, நாம் அவர்களுக்கு அளிக்கும் ஓரளவு சலுகை தான்; அது தெளிவாக உள்ளது. எனவே, கல்வித்தகுதிகள் இன்னும் இவை போன்றவைகள் குறித்துப் பரிசீலனை செய்யும் போது, இவைகளைக் கருத்தில் கொள்வதற்கு, வாக்குரிமை குழுவிற்கு நீங்கள் அதிகாரம் அளித்தாலொழிய, அவர்கள் செயலாக்குவதை விஸ்தரிப்பு செய்யாது, தடைவிதிக்கிறீர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர்:* நீங்கள் படித்துக் காட்டிய, துணைக் குழு எடுத்துள்ளதாக நீங்கள் கூறியுள்ள முடிவு பற்றி நான் ஒரு கேள்வி கேட்கலாமென ஆசைப்படுகிறேன். பல்வேறு வகுப்பினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கேற்ப அவைகளின் வாக்குரிமைப் பலம் அமையும் என்ற நிலையினை எய்த, பல்வேறு சாதிகளுக்குப் பல்வகை வாக்குரிமை வழங்குவதை ஆலோசனை செய்ய வாக்குரிமை குழுவிற்குச் சுதந்திரம் உண்டு என அந்த முடிவு குறிப்பிடுகிறதா?

*தலைவர்:* அது அப்படித்தான் என்று நான் நினைக்கவில்லை. வாக்குரிமை குழுவிற்கு நாம் வழிகாட்ட வேண்டும். அவர்கள் விவரங்களை நிறைவு செய்வார்கள். இப்போதைய நிலையில் பார்த்தால், நாம் கட்டட நிபுணர்கள், கட்டடம் கட்டுபவர்களாகவும், அவர்கள் கொத்தனார்களாகவும் உள்ளனர்.

*டாக்டர் அம்பேத்கர்:* அது எனக்கு புரிகிறது. பல்வேறு வகுப்பினரும் பல்வகை வாக்குரிமை கிடைக்க பெறும்போது, சமநிலை ஏற்பட, வாக்குரிமை குழுவிற்கு, அந்த முடிவு சுதந்திரம் அளிக்கிறதா என்பதைத் தான் அறிந்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

*தலைவர்:* இல்லை. எந்தத் துறையிலும் எல்லா வகுப்பினருக்கும் வாக்குரிமை பெறும் தகுதி ஒரே மாதிரியாகத் தான் இருக்க வேண்டுமென நாம் பரிந்துரை செய்கிறோம் என்று முதல் வாக்கியம் கூறுகிறது. கல்வித்தகுதி பற்றிய நமது விவாதத்தை இப்போது மேற்கொள்வோம்.

★ ★ ★ ★ ★

** திரு. ஜாதவ் :* பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், ஏற்பாட்டை மீறவும் வாக்குரிமையைக் குறைக்கவும் எந்தச் சட்டமன்றத்திற்கும் அதிகாரம் உண்டா?

*தலைவர் :* அவைகளின் அதிகாரம், விரிவாக்கம் செய்யும் அதிகாரமாகத் தான் இருக்குமேயொழிய, குறைத்துவிடும் அதிகார மாக இருக்காது.

*டாக்டர் அம்பேத்கர் :* இதுவரை நாம் எடுத்துள்ள முடிவுக்கு குந்தகம் விளையாதவாறு, இப்பொருள் பற்றி நான் ஒரு வார்த்தை கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தானாகவே விரிவாக்கப்படும் ஒரு விதச் சட்டம் வேண்டுமென்ற திரு. ஜோஷி அவர்களின் ஒரு ஆலோசனையும், சட்டமன்றங்களின் இஷ்டத்திற்கு இந்த விஷ யத்தை விட்டுவிட வேண்டுமென்ற முக்கியமானதாக உள்ள மற்றொரு ஆலோசனையும் மாற்று ஏற்பாடுகளாகக் கூறப்பட் டுள்ளன. இவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சைமன் கமிஷன் செய்துள்ள பரிந்துரைகள் மேலானவையாகவும், உடன் ஏற்புடையதாகவும் உள்ளன என்பது என் கருத்திற்கும், பார்வைக் கும் தெரிகிறது.

வாக்குரிமை வழங்கும் திட்டத்தை நிறைவேற்றியதால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் ஏற்பட்ட பயன் என்ன என்பதை ஆய்வு செய்வதற்கு ஒரு அதிகார அமைப்பினை ஏற்படுத்தினால், மிக்வும் நன்மையுடையதாக இருக்கும். மாநிலங்களிடையே (ராஜ தானிகள்) உள்ள வித்தியாசங்கள் என்ன என்பதை அந்த அமைப்பு காண முடியும். வாக்குரிமை மாற்றப்படுமானால், தேர்தல்களை நடத்துவதற்குத் தயாராக இருக்கும் பொருட்டு, பத்து ஆண்டுகள் முடிவில் செயல்பட்டுக் கொண்டு இருக்கும் செயல்முறை சாதனம் யாது என்பதை அந்த அமைப்பு கண்டுகொள்ள முடியும்; மேலும், நாம் இன்று அறிமுகம் செய்து கொண்டு இருக்கும் குறைந்தஅளவு வாக்குரிமையின் காரணமாக அமர்த்தப்படும் சாதி உணர்வுள்ள வர்களைக் காட்டிலும், அந்த அதிகார அமைப்புப் பாரபட்சமற்ற முறையில், பெரும்பான்மையாக உள்ள சாதாரண மக்களின் உரிமைகள் குறித்து நிர்வாகம் செய்யும். இக்காரணங்களால் சைமன் கமிஷனின் பரிந்துரைகள், மாற்று ஆலோசனைகளைக் காட்டிலும் மேலானவை என்று எனக்குத் தோன்றுகிறது.

*சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர் :* அதை அதிகார அமைப்பை அமைப்பது யார்?

*டாக்டர் அம்பேத்கர் :* ஒரு அரசுப் பணியாளர் தேர்வு ஆணை யம் இருக்க வேண்டுமென இந்திய அரசாங்கச் சட்டத்தில் ஆலோ சனை கூறப்பட்டது போல், ஒரு குழுவை நியமிக்கப்படவேண்டு மென்ற ஆலோசனையும் கூறப்படலாம்.

---

* துணைக்குழு எண் : 6 (வாக்குரிமை) கூட்ட நடவடிக்கைகள். பக். 138-139.

*சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர் :* மத்திய அரசாங்கத்தினராலா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்.

*தலைவர் :* இப்பொருள் பற்றி ஒரு அறிக்கையினைத் தயாரிக்க எனக்குப் போதுமான அளவு விஷயம் இப்போது தெரிகின்றது என்று நான் நினைக்கிறேன். ஆனால் உங்களது கருத்து என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும். ஏதாவது வாக்குரிமை நிபுணர் குழு அல்லது ஏதாவது மற்றொரு குழு சொல்ல வேண்டுமானால், அதாவது 15 ஆண்டுகளுக்குப் பின்னர் நியமிக்கப் பட வேண்டுமென்று இப்போதே இங்கு நாம் பரிந்துரை செய்ய வேண்டுமென்பது அல்ல; அத்துடன், ஒரு மாநிலம் (இராஜ தானி) வேறு மாநிலத்தைக் காட்டிலும் பெரிய மனதுடன் வாக்குரிமையை விரிவாக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதால், இவ்விஷயம் முழுவதும் தொடர்பின்றிப் போகக் கூடும், பிற்காலத்தில் இப் பொருள் பற்றிக் கவனம் செலுத்தி நடைமுறையாக்கி, சரி செய்து கொள்ளுவதற்கு ஒரு அமைப்பினை உருவாக்கும் சாத்தியக்கூறு பற்றி நாம் சிந்திக்க வேண்டுமா? அல்லது ராஜதானிகளுக்கு இப்பொருளை விட்டுவிடலாம் என்று கூறி, நாமே திருப்தி அடைந்து கொள்ளலாமா? அல்லது டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறுகின்ற குழுவினை அமைக்கும் கருத்தினைப் பின்பற்றலாமா? அது உருவாக வேண்டுமென்றோ அல்லது எப்போது அது உருவாகும் என்றோ நாம் கூறத்தேவை இல்லை; ஆனால், அது அமைக்கப்படும் போது செயல்பட வேண்டும்.

*திரு. பாசு :* மத்திய அரசாங்கம் ஒரு குழுவினை அமைக்க விரும்பும் காலகட்டத்தில்.

*தலைவர் :* அது எவ்வாறு அமைக்கப்பட வேண்டுமென நாம் சொல்லமாட்டோம். ஆனால், அத்தகைய அமைப்பை நியமிக்கும் சாத்தியக்கூறு பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

*திவான் பகதூர் ராமச்சந்திர ராவ்:* இந்திய அரசாங்கம் அத்தகைய அமைப்பினை ஏற்படுத்தலாம். அதனை பாராளு மன்றம் ஏற்படுத்த வேண்டுமென்பதல்ல.

*டாக்டர் அம்பேத்கர் :* அது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது?

*திவான் பகதூர் ராமச்சந்திர ராவ் :* இத்தகைய விஷயங்களில் நாம் அதிகச் சுதந்திரம் கொடுக்கிறோம். பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டினை நீக்கிட நான் விரும்புகிறேன். உத்தேசத் திட்டம் என்ன என்பதை அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்குப் பின்னர் ராஜதானிகளில் இவ்விஷயம் குறித்துப் பரிசீலனை செய்ய இந்திய அரசாங்கத்திற்குத் தகுதி உள்ளது என்று நீங்கள் கூறினால், எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை, ஆனால், பத்தாண்டுகளில் பாராளுமன்றமே இப்பிரச்சினை குறித்து மீண்டும் பரிசீலனை செய்யும் என்றால், அதனை நான்

முற்றிலும் ஆட்சேபிக்கிறேன். ஒரு குழு நியமிக்கப்படுவதால் வாக்குரிமை விரிவாக்கப்படும் என்றால், எனக்கு எவ்வித் ஆட்சே பனையும் இல்லை. இந்திய அரசாங்கத்திற்கு முழுமையான அதி காரம் இருப்பதையும், சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் அல்லது சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்னர் தேவைப்பட்டால் அந்த அதிகாரத்தை தன் விருப்பம் போல் (இந்திய அரசாங்கம்) உப யோகிப்பதையும் நான் விரும்புகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* இக்குழு பாராளுமன்றத்தாலோ அல்லது இந்திய அரசாங்கத்தாலோ நியமிக்கப்பட்டால், அது இத்துணைக் குழுவின் பணிகள் மீது எவ்வாறு தொடர்புள்ளது?

*திவான் பகதூர் ராமச்சந்திர ராவ் :* பாராளுமன்றத்திலிருந்து இந்தியாவுக்கு அதிகார மாற்றம் பரிவர்த்தனை செய்து கொண்டு இருக்கின்றோம். ஏனெனில் 1919-ஆம் ஆண்டில் பாராளுமன்றக் குழு முன்பு இந்தக் கேள்வி வந்த போது, நானும், என்னுடன் சேர்ந்து பலரும்; இது மாதிரி அதிகார மாற்ற பரிவர்த்தனைக் கேள்விகள், இந்தியாவிலுள்ள அதிகார அமைப்புகளுக்கு மாற வேண்டுமென வாதிட்டோம். மேலும், அத்தகைய ஒரு நடவடிக்கை எடுக்கப்படாததால், வாக்குரிமைப் பற்றி அதிகரித்துள்ள குற்றச் சாட்டுக்கள் நம் முன் பிரச்சினைகளாகச் சேர்ந்துள்ளன: அவை இப்போது ஆராயப்படுகின்றன : பாராளுமன்றத்தின் அனுமதி தேவைப்படுவதால் அவற்றை ஆராய முடிய்வில்லை. எனவே சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் வாக்குரிமை பற்றிய இவ்விஷயம் முழுவதையும் தன் விருப்பம் போல் ஆராய, அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, இது பற்றி எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் இந்திய அரசாங்கத்திற்கு முழுமையாக அதி காரத்தை மாற்றுவதாக இருக்க வேண்டும் என்று நான் ஆலோ சனை கூறுகிறேன். உண்மையிலேயே நான் சற்று அழுத்தமாக வலியுறுத்திக் கூற விரும்பும் முக்கிய விஷயம் இது தான்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் அம்பேத்கர் :* துணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும் சில பிரேரணைகள் மீது மாற்றுக் கருத்துக்கள் கொண்ட அறிக்கை ஒன்றினைப் பதிவாக்க வேண்டுமென்பது இப்போது குறைந்தது எனக்கும் மற்றும் என்னுடைய சில நண்பர்களுக்கும் தெளிவாகி யுள்ளது. தங்களின் அறிக்கையுடன், தாங்கள் அன்புடன் இணைத் துக் கொள்ளும் பொருட்டுப் பல்வேறு கருத்துக்கள் மீதான மாற்றுக் கருத்துக் குறிப்பினை தங்களிடம் சமர்ப்பிக்க எங்களுக்கு அனுமதி உண்டா? அல்லது வேறு சில வழியில் எங்களுக்கு அனுமதி அளிப்பீர்களா?

---

* துணைக்குழு எண் VI (வாக்குரிமை) நடவடிக்கைகள், பக். 147-48.

*தலைவர்:* எந்த துணைக்குழுவும் சிறுபான்மையினரின் அறிக்கைகளை இன்று வரை இணைத்துக் கொண்டதாக நான் நினைக்கவில்லை, துணைக்குழுவின் அறிக்கை ஒரு முழுமையான ஒரே அறிக்கையாகத்தான் இருந்து வந்திருக்கிறது. ஆனால், தனது முன்னுரையில் சில உறுப்பினர்கள் மாற்றுக் கருத்து அளித்துள்ளதாகத்—தேவைப்பட்டால் அத்தகைய உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு—கூறப்ப ட்டுள்ளது.

*டாக்டர் அம்பேத்கர்:* அத்தகைய செயல்முறையில் நான் காணும் ஒரு பிரதி அனுகூலத்தை, தங்களின் அனுமதியுடன் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். எங்களது மாற்றுக் கருத்தினைப் பதிவு செய்ய எங்களை அனுமதிக்காவிட்டால், எங்களுடைய ஆலோசனைகளை முழுமையாக முன் வைப்பதற்கு நீங்கள் எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்பதாகும். எங்களை அனுமதித்தால் அவைகளை (ஆலோசனைகளை) அவ்வாறு முன் வைக்க முடியும். எங்களுக்கு எதிர்மாறானச் சுதந்திரம் தரப்பட்டது. நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லுவதற்கு அனுமதிக்கும் எதிர்மறை அனுமதி தான் தரப் பட்டது; அவ்வளவு தான்.

*தலைவர்:* நாங்கள் உங்கள் விருப்பத்தை ஏற்க முடியுமா என்று எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. உங்களது ஆட்சேபனையை நீங்கள் முழுமையாகத் தெளிவுபடுத்தி இருக்கிறீர்கள். நீங்கள் உண்மையில் விரும்புவது, வயது வந்தோர்க்கு வாக்குரிமை. நமது துணைக்குழு உறுப்பினர்கள் சிலர்—பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது—இதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்று குறிப்பிடும் வாக்கியம் ஒன்று உள்ளது என்று நினைக்கிறேன்; ஏனெனில் வயது வந்தோர்க்கு வாக்குரிமை முறை ஒன்று தான் திருப்தி தரக்கூடியது என்று அவர்கள் கருதினார்கள். அது இந்த கருத்தைத் தெரிவிக்கிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பது அறிக்கையினைப் பொறுத்துள்ளது.

*தலைவர்:* இடர்ப்பாடு எழும்வரை இதை நாம் விட்டுவிடலாம், உங்களது கருத்தினை ஏற்க முடியுமா என்று பின்னர் பார்ப்போம். எங்களால் முடியும் என நான் நினைக்கிறேன்.

## நான்காவது அமர்வு—ஜனவரி 1, 1931

### * அறிக்கை வரைவு—பொருள் 4

4. வாக்குரிமை விரிவாக்கம் வயது வந்தோர் வாக்குரிமை தான் இறுதியாக அடைய வேண்டிய இலக்கு, என்று பொதுவாக

* துணைக்குழு நடவடிக்கைகள் எண் VI பக். 149-50.

ஏற்றுக் கொண்டிருக்கும்போது, வாக்குரிமை அடித்தளம் விரிவாக்கப்படவேண்டும் என்றும், பெரும்பான்மையின மக்களுக்கு வாக்குரிமை தேவை என்றும் ஒத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய சூழ்நிலையில், இது எந்த அளவுக்கு நடைமுறைக்கு உகந்தது என்பது குறித்துச் சில கருத்து வேறுபாடுகள் இருந்தன. வாக்குரிமையை உயர்த்துவது குறித்துச் சரியாக நிர்ணயம் செய்யப் போதுமான விவரங்கள் துணைக்குழுவிடம் இல்லை என்றும் தெளிவாக உணரப்பட்டது. மக்கள் தொகையில் பத்து சதவீதம் வரை வாக்காளர் எண்ணிக்கை அத்தகைய உயர்வால் அதிகரிக்க வேண்டுமென்று அரசியல் சட்டக்குழு ஆலோசனை கூறியது. வயது வந்த மக்கள் தொகையில் இருபத்தைந்து சதவீதம் வரை அத்தகைய அதிகரிப்பு உடனடியாகச் சாத்தியமாகும் என்று நமது உறுப்பினர்களில் சிலர் நினைத்தார்கள்.

''மொத்த மக்கள் தொகையில் பத்து சதவீதத்திற்கும் குறையாமலும்—உண்மையிலேயே அதிக எண்ணிக்கைதான்—ஆனால் மொத்தமக்கள் தொகையில் இருபத்தைந்து சதவீதத்திற்கும் மிகாமலும்—முழுமையான ஆய்வு மூலம் இயலும் என்றும், விரும்பத்தக்கது என்றும் தெரிந்தால், வாக்காளர் எண்ணிக்கையை உடனடியாக உயர்த்த வேண்டுமென்ற அறிவுரைகளுடன் வாக்குரிமைக் குழு ஒன்றை நியமிக்கவேண்டுமென்று நாம் பரிந்துரை செய்கிறோம்.

(வாக்காளர்) எண்ணிக்கை உயர்வதற்கு வகை செய்வதுடன் ராஜதானியில் நடைபெறும் தேர்தல்களில் நேரடியாகத் தகுதி பெற்ற வாக்காளர்கள் என்ற முறையில், அதே தொகுதிகளிலோ அல்லது அவர்களுக்காக உருவாக்கப்படவுள்ள தனித் தொகுதிகளிலோ வாக்களிக்க உரிமையுள்ள ஒரு பிரதிநிதியை ஒவ்வொரு தொடக்கத் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுப்பதற்காக நேரடியாக வாக்களிக்கத் தகுதியில்லாத வயது வந்த அனைவரும் சுமார் 20 நபர்கள் கொண்ட தொடக்கத் தொகுதிகளாகப் பிரிக்கப்படும் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த ஆலோசிக்க வேண்டும் என்றும் நாம் பரிந்துரை செய்கிறோம்.

(திரு. ஜோஷி, திரு. சிவராவ், டாக்டர் அம்பேத்கர், மற்றும் திரு. ஸ்ரீநிவாசன் ஆகியோர் இந்த மதிப்பிட்டத் திட்டங்களை 'இரண்டாவது மிகச் சிறந்தது' என்று கருதுகின்றனர். மேலும், உடனடியாக வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிப்பது இயலும் என்றும், விரும்பத்தக்கது என்றும் நினைக்கின்றனர்.)

சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர், சர். பி. சி. மிட்டர் மற்றும் திரு. பாசு ஆகியோர் குறித்து நாம் கூறும் அதிகபட்ச அல்லது குறைந்த பட்ச ஆலோசனையை ஏற்கவில்லை. ஆனால் வாக்குரிமைக் குழுவின் தீர்ப்புரிமை முற்றிலும் சுதந்திரமானதாக இருக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்துள்ளனர்.)

### * அறிக்கை வரைவின் 4 வது பொருள் மீது விவாதம்

*டாக்டர் அம்பேத்கர்:* 4 வது பத்திக்கு ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டுவர எண்ணுகிறேன். அதாவது இரண்டாவது பிரிவில் 2 வது வரியில் ''சாத்தியமாகும்'' என்ற வார்த்தைக்குப் பின்னர் 'தற்போதைய சூழ்நிலையில் இருக்கக்கூடிய தேர்தல் நடத்தும் அமைப்புடன் என்ற வார்த்தைகளைச் சேர்க்கவேண்டும். ''தற்போதைய சூழ்நிலையிலுள்ள தேர்தல் நடத்தும் அமைப்பை வைத்துக் கொண்டு, எந்த அளவுக்கு இது சாத்தியமாகும் என்று சில கருத்து வேறுபாடும் இருந்தது'' என்று இதனை வாசிக்க வேண்டும்.

*பல உறுப்பினர்கள்:* இதர காரணங்களும் உண்டு.

*டாக்டர் அம்பேத்கர்:* அதுதான் எனது திருத்தம். குழுவின் உணர்வுகளை அறிந்து கொள்ளும் சிறந்த நீதிபதி என்ற முறையில் இவ்விஷயத்தைத் தலைவரிடம் விட்டுவிடுகிறேன். ஆனால் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பது அடுத்துவரும் எதிர்காலத்தின் நடைமுறை அரசியல் என்று கருதி, எதிர்த்தவர்களில் பெரும் பான்மையினர் கருதினர். ஒவ்வொருவரும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டால் இந்தியாவில் தற்போதுள்ள தேர்தல் நடத்தும் இயந்திரம், சூழ்நிலைக்கு ஈடு கொடுக்க இயலாது என்ற காரணத்தின் அடிப்படையில் எதிர்த்தவர்களில் பெரும்பான்மையினர் அவ்வாறு செய்தனர்.

*தலைவர்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, இவ்விஷயத்தை மதிப்பிட அதுதான் ஒரு முழுக் காரணம் என்று நான் கூட நினைக்கவில்லை. பல காரணங்களில் அதுவும் ஒன்று. குழுவின் கருத்தைப் பதிவு செய்யும்போது அதுதான் ஒரே காரணமென்று வரையறுத்துக் கொள்ள முடியும் என்று நான் கருதவில்லை. உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால், தகவல் தொடர்பு சிரமங்கள், போக்குவரத்து வசதிகள் இல்லாதது, மற்றும் இது போன்று பல மிகவும் வலியுறுத்திக் கூறப்பட்டன.

*டாக்டர் அம்பேத்கர்:* அறிக்கையில் இதனைத் தெளிவுபடக் கூறவேண்டுமென்பதுதான் நான் விரும்புவது.

*திரு. ஜோஷி:* நடைமுறையில் தேர்தல் நடத்துவதில் ஏற்படும் கஷ்டங்கள் போன்ற வார்த்தைகளை நீங்கள் கூறலாம்.

*சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர்:* இதர ஆட்சேபணைகளும் உள்ளன.

*திரு. ஜோஷி:* பொதுவான பெரும்பான்மையினர் பற்றி நாம் பேசுகிறோம்; கொள்கை அடிப்படையில் வாக்களிக்க விரும்பாத மக்கள் பற்றியல்ல.

---

* துணைக்குழு நடவடிக்கைகள் எண் 6 (வாக்குரிமை) பக். 152-54.

*தலைவர்:* முன்னர் என்ன கூறப்பட்டுள்ளதோ அவை விளக்க மளிக்கிறது என நான் நினைக்கிறேன். சொல்லப்போனால், நீங்களும், திரு. ஜோஷியும் இறுதியில் இக்குறிப்பின் கீழ் வரப் போகிறீர்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* அது எனக்கு தெளிவாகத் தெரிகிறது. இலட்சியம் எங்களது நோக்கு; இருப்பினும், இருப்பதிலேயே இரண்டாவது சிறந்ததை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய துள்ளது. ஆனால், அது உகந்ததாகவும் நல்லதாகவும் முடிந்தவரை ஆக்கப்பட வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். வாக்குரிமைக் குழு எனது கருத்தை ஆய்வு செய்யும் வகையில், என்னுடைய கருத்து மிகத் தெளிவாக்கப்பட வேண்டுமென நான் விரும்புகிறேன்.

*தலைவர்:* குழுவின் பெரும்பான்மையினர் கருத்திற்கு ஒத்த தாக அது இருக்குமென்று நான் நினைக்கவில்லை. நிபந்தனை களை அடிப்படையாகக் கொண்டு வார்த்தைகள் இருக்கக்கூடாது என்று குழுவின் பெரும்பான்மையினர் அனேகமாக எண்ணு கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். சரி.

இப்போது, ''மொத்த மக்கள் தொகையில் பத்து சதவீதத் திற்கும் குறையாமலும், உண்மையிலேயே அதுவே அதிக எண் ணிக்கைதான்—ஆனால் மொத்த மக்கள் தொகையில் இருபத் தைந்து சதவீதத்திற்கும் மிகாமலும்—முழுப்பரிசீலனையின் மூலம் சாத்தியம் என்றும், விரும்பத்தக்கது என்றும் தெரிந்தால், வாக் காளர் எண்ணிக்கையை உடனடியாக உயர்த்த வேண்டுமென்ற அறிவுரைகளுடன், வாக்குரிமைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டு மென்று நாம் பரிந்துரை செய்கிறோம்'' என்று அடுத்து வரும் வாக்கியம் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* நான் பக்கம் 3ல் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன். ''ஆனால் இல்லை'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக ''மற்றும் பதிலாக வைக்கப்பட்டாலும்'' என்ற வார்த்தை களைச் சேர்க்கவேண்டுமென விரும்புகிறேன்.

*தலைவர்:* உடனடியாக இருபத்தைந்து சதவீதம் உயர்த்துவது, கொஞ்சம் அதனைத் துன்புறுத்துவதாக இருக்கிறது என்று நம்மில் பலர் நினைத்தனர்: அவ்வாறு நினைத்தவர்களில் நானும் ஒருவன். மேலும் அதனைத் துன்புறுத்துவதற்கு நாம் கேட்டுக் கொள்ளப் படுவது சரியானது என்று நான் நினைக்கவில்லை. மேலும், டாக்டர் அம்பேத்கர் அவர்களே, உங்களுக்குத் தனி இட ஒதுக்கீடு (ரிசர்வேஷன்) உள்ளது.

*டாக்டர் அம்பேத்கர்:* ''மேலும் விரும்பத்தக்கதாக'' என்ற வார்த்தைகளை நீக்க வேண்டும் என்பது எனது இரண்டாவது திருத்தம். எந்த அளவு உயர்வு விரும்பத்தக்கதோ இல்லையோ, இந்த விஷயத்தை உண்மையிலேயே இக்குழுதான் முடிவு செய்ய வேண்டும். வாக்குரிமை நிபுணர் குழு இதனை முடிவு செய்ய

முடியாது. நாம் எடுக்கின்ற முடிவுகள் செயலாக்கப்படுவதற்கான வழிவகைக்களை உருவாக்கத்தான் அந்தக் குழு நியமிக்கப் படவுள்ளது. எவ்வளவு உயர்வு விரும்பத்தக்கது என்பதைப் புதிதாக உருவாக்கப்படும் வாக்குரிமைக்குழுவின் முடிவுக்கு உறுதியாக விட்டு விட முடியாது. அந்தக் கருத்தின் அடிப்படையில் இந்த வார்த்தைகளை நீக்கிவிடுவது தேவையாகும்.

*தலைவர்:* சாத்தியமானது எது, மற்றும் விரும்பத்தக்கது எது என்பதைப் பிரித்து விடுவது கஷ்டமானது ''சாத்தியமானது'' என்ற வார்த்தை நீட்டுப் போக்குள்ளது. அதனை அடைவது மிகவும் கஷ்டமானதாக இருக்கலாம் அல்லது ஒப்பிட்டுப் பார்க்கையில் எளிதாக அடைந்து விடக் கூடியதாகவும், இருக்கலாம். ஆனால் அதை அடைந்து விடவும் முடியும். ஆகையால், இது சாத்தியமானது என்று நீங்கள் கூறலாம். விரும்பத்தக்கது என்பதை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, எந்த அளவுக்கு இது சாத்தியமானது என்பதையும், நீங்கள் உள்ளத்திலிருந்து மறைத்து விட முடியாது. ஓரளவுக்கு இவ்விரண்டும் இணைந்தே வர வேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர்:* மக்கள் தொகையில் இருபத்தைந்து சதவீத உயர்வுக்கு வாக்குரிமையை விரிவாக்குவது விரும்பத்தக்கது என்பதை நாம் முடிவு செய்துள்ளோம் என்பது எங்களது அபிப்பிராயம்.

*தலைவர்:* 'சாத்தியமானது' போன்ற நீக்குப் போக்குள்ள வார்த்தைகளை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். அதுதான் கஷ்டமானது என்று நான் உணர்கிறேன். இவ்விரு வார்த்தைகளும் முற்றிலும் வேறுபட்டவை எனப் பிரித்துவிடமுடியாது. சாத்தியமானதாக உள்ளதும் விரும்பத்தக்கதும் தொடர்புடையதாக இருக்க வேண்டும். நீங்கள் நீட்டுப் போக்குள்ள ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறீர்கள். இரண்டு வார்த்தைகளையும் உபயோகிப்பதுதான் விவேகமானது என நான் நினைக்கிறேன். வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பதுதான் இலட்சியம், அதனை எய்த எதிர்நோக்குகிறோம் என்று தொடக்கத்திலேயே கூறி, நமது கருத்து என்ன என்பதை குறிப்பால் தெளிவாக்கியுள்ளோம்.

★ ★ ★ ★ ★

* *தலைவர்:* வரி, வரியாக இப்பொருள் பற்றி விவாதிப்பது நல்லது. ''இந்த அதிகரிப்புக்கு வகை செய்வதுடன், வாக்களிக்க உரிமையில்லாத வயது வந்தோர் அனைவரும், சுமார் 20 நபர்கள் கொண்ட தொடக்கக் குழுக்களாகப் பிரிக்கப்படும் முறையினை அறிமுகப்படுத்தக் குழு பரிசீலன்னை செய்ய வேண்டும் என்று நாங்கள் பரிந்துரை செய்கிறோம்'' ''பின்னர் அல்லது தகுந்த

* துணைக்குழு எண் VI நடவடிக்கைகள் (வாக்குரிமை) பக்கம் 159.

வேறு சில முறையினை'' என்பதைச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தை அவர்கள் கொண்டு வந்தால் யாராவது குறுக்கிடுவார்களா?

''மாநிலங்களில் நடைபெறும் தேர்தல்களில் நேரடியாக தகுதி பெற்ற வாக்காளர்களாக அதே தொகுதிகளில் அல்லது அவர்களுக்காக உருவாக்கப்படும் தனித் தொகுதிகளில் வாக்களிக்க உரிமை உள்ள ஒவ்வொரு பிரிவிலும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக''

''(திரு. ஜோஷி, திரு. சிவராவ், டாக்டர் அம்பேத்கர் மற்றும் திரு. ஸ்ரீநிவாசன் ஆகியோர் இந்தத் திருத்தங்கள் 'இருப்பதிலேயே இரண்டாவது சிறந்தது' என்று கருதுகின்றனர். மேலும், உடனடியாக வயது வந்தோருக்கு வாக்குரிமையளிப்பது சாத்தியமானது என்றும் விரும்பத்தக்கது என்றும் நினைக்கின்றனர்)'' இதுபற்றி ஆட்சேபனை ஏதாவது உள்ளதா?

*டாக்டர் அம்பேத்கர்:* திரு. கே. டி. பால் அவர்களும் கூட எங்களைப் போலவே எண்ணம் உள்ளவர் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

*தலைவர்:* இது கவனத்தில் கொள்ளப்படும்.

*திரு. ஜோஷி:* ''இருப்பதிலேயே இரண்டாவது சிறந்தது'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக ''முற்றிலும் போதுமானது அல்ல'' எனும் வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ளலாம் என நான் முன் மொழிகிறேன்.

*தலைவர்:* உண்மையில் இது உறுப்பினர்களைப் பொறுத்த விஷயமாகும், இது ''இரண்டாவது மிகச் சிறந்தது'' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக ''முற்றிலும் போதுமானது அல்ல'' என்ற வார்த்தைகளை நீங்கள் விரும்பினால், இது உண்மையில் நீங்கள் முடிவு செய்ய வேண்டியதாகும். எனவே இதை இவ்வாறு வாசிக்க வேண்டும் ''திரு. ஜோஷி, திரு. சிவராவ், திரு. டாக்டர் அம்பேத்கர், திரு. ஸ்ரீநிவாசன் மற்றும் கே. டி. பால் ஆகியோர் இந்தக் கருத்துக்கள் முற்றிலும் போதுமானதாக இல்லை என்றும், உடனடியாக வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கும் திட்டம் சாத்தியமானதாகவும், விரும்பத்தக்கதாகவும் உள்ளது.''

*திரு. ஜாதவ்:* என்னுடைய பெயரையும் இப்பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

*தலைவர்:* இது கவனத்தில் கொள்ளப்படும். இப்போது இது (வாக்கியம்) இவ்வாறு இருக்கும்: சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர், பி. சி. மிட்டர் மற்றும் திரு. பாசு ஆகியோர் நாம் கூறியுள்ள அதிக பட்சம் அல்லது குறைந்தபட்சம் என்ற (வார்த்தைகளை) ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் வாக்குரிமைக் குழுவின் விருப்புரிமை

முழுச் சுதந்திரம் உடையதாக இருக்க வேண்டுமென விரும்பு கிறார்கள்.'' அவர்கள் என்ன வேண்டுமென விரும்புகிறார்களென் பதைப் பற்றி அவர்களே முடிவு சொல்ல வேண்டும் என்பது தெளிவாக உள்ளது.

★ ★ ★ ★ ★

* *தலைவர்:* அவர்களுக்குத் தனித்தொகுதி (சிறுபான்மையின ருக்கு தரப்பட்டிருக்கிறதோ அல்லது இட ஒதுக்கீட்டுடன் கூட்டுத் தொகுதி தரப்பட்டிருக்கிறதோ இல்லையோ, வாக்காளர்களின் எண்ணிக்கையால் அன்றி அவர்களுக்குள்ள பிரதிநிதிகளால், சிறுபான்மை வகுப்பினருக்குப் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. இதுவே அவர்களுக்குள்ள முக்கியமான பாதுகாப்பு.

''ஒவ்வொரு வகுப்பினர்'' என்ற வார்த்தைகளைப் பயன் படுத்துவதற்குப் பதிலாக ஒரு முடிவுக்கு வரும் முயற்சியாக இவ்வாறு சொல்லலாமா? — இதைத் திரு. சிந்தாமணி என்னிடம் கூறினார் — ''பெரும்பான்மை சமூகத்தினருக்கு அவர்களின் மக்கள் தொகைக்கேற்ப, விகிதாசாரத்தில் வாக்குரிமை பலத்தைப் பெரிதும் முடிந்த அளவுக்கு அளிக்கும் இலட்சியத்தை வாக்குரிமை கமிஷன் கருத்தில் கொள்ள வேண்டுமென நாம் விரும்புகிறோம்'' மற்றும் இதுபோல. அது சரியாக இருக்குமென்று நான் நினைக் கிறேன்.

*சர் சி. ஜெஹாங்கீர்:* இரண்டு பெரும்பான்மை வகுப்பினர்.

*தலைவர்:* இரண்டு பெரும்பான்மை வகுப்பினர்களோடு மட்டும் கட்டுப்படுத்திக் கொள்வதை அவர் விரும்பவில்லை என்பது அவரது கருத்து. பெரும்பான்மை வகுப்பினர்கள் குறித்து அவர் பரிந்துரைக்கிறார் என்பதை இவ்வாறு கூறுகிறார். சிறு பான்மைச் சமூகத்தினர் பரிந்துரை செய்யப்படுவதற்கான பொருளே அல்ல. அந்த வகையில் நீங்கள் அவருக்குப் பதில் கூற முடியாதா?

*சர் சி. ஜெஹாங்கீர்:* இது மிகவும் ஆபத்தானது. நீங்கள் தனித் தொகுதி பற்றிப் பேசுகிறீர்கள், தனித்தொகுதி இப்போது இல்லை. இப்போது, அதை நாம் விரும்பவும் இல்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* தற்போதுள்ள அதிகமான வாக்காளர் எண்ணிக்கையின் அனுகூலத்தைத் தொடர்ந்து நீடிப்பதற்காக, பெரும்பான்மையான மக்களுக்கு வர்க்குரிமை விரிவு படுத்தக் கூடாது என்பதுதான் இதன் பொருள்: அதாவது, இதற்கு என்ன பொருள் என்றால், சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர் அவர்கள் தன் னுடைய மக்களின் தற்போதைய விகிதாச்சாரத்தை, வாக்காளர் தொகுதி எண்ணிக்கை அளவிற்குப் பாதுகாத்துக் கொள்ள

---

* துணைக்குழு VI நடவடிக்கைகள் (வாக்குரிமை) பக்கங்கள் 171-72.

வேண்டும் என்பதற்காக, நாட்டிலுள்ள இதர மக்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படக் கூடாது என்பதுதான்.

*சர் சி. ஜெஹாங்கீர்:* சிறிய சமூகத்தினர் பாதுகாக்கப்படக் கூடாது என்பதுதான் நான் கூறுவது.

*டாக்டர் அம்பேத்கர்:* வாக்குரிமையைக் குறைப்பதால், உங்கள் நிலை ஆபத்துக்குள்ளாகும். இதர வாக்காளர்களுக்கு விகிதாச் சாரப்படி வழங்கப்பட்டால் உங்கள் நிலை கீழே இறங்கும் என்று நீங்கள் உணர்ந்தால், தனித் தொகுதி கேட்பதிலோ அல்லது பெரும்பான்மையினரை நம்பி இருப்பதிலோதான் உங்களுக்குப் பாதுகாப்பு உண்டு. ஆனால், ''நாங்கள் கீழே வீசி எறியப்படு வோம்—நாங்கள் மூழ்கி விடுவோம்; எனவே, இதர வகுப்பின ருக்கு (வாக்குரிமை) அளிக்கப்படக் கூடாது'' என்று நீங்கள் கூற முடியாது. அதைத்தான் இது குறிப்பிடுகிறதேயன்றி வேறு ஒன்று மல்ல.

*சர் சி. ஜெஹாங்கீர்:* நான் அவ்வாறு சொல்லவில்லை.

*தலைவர்:* நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பது எனது கவலையாகும். வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பது ஒரு இல்ட்சியம் என்பதை நாம் ஒத்துக் கொண்டு இருக்கின்றோம் என்பதை நீங்கள் விரும்பினால் மனதில் கொள்ளவேண்டிய தாகும். அறிக்கையின் அப்பகுதியினை நிறைவேற்றியுள்ளோம். ''குறைந்தது பெரும்பான்மை வகுப்பாருக்கு, கிட்டத்தட்ட முடிந்த அளவு'' என்ற வார்த்தைகளைச் சேர்க்க ஆலோசனை கூறி யுள்ளேன்.

''ஒவ்வொரு வகுப்பினருக்கும் முடிந்த வரை கொடு'' என்ற வார்த்தைகள் இப்போதுள்ளவாறு இருக்கும் என்பதை முதலில் குழுவின் முடிவுக்கு வைக்கிறேன். யார் மறுப்பது?

*சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர்*, கர்னல் கித்னே, மற்றும் சர்தார் உஜ்ஜல் சிங் ஆகியோர் பின் பகுதியினை ஏற்றுக் கொள்ள வில்லை என்பது கவனத்தில் கொள்ளப்படும்.

*டாக்டர் அம்பேத்கர்:* இதனை வாக்குரிமைக்குழுவின் முன் வைக்க நீங்கள் விரும்பினால், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் வயது வந்தோர் வாக்குரிமைக் கொள்கை பொருந்தும் என்பது எங்களது கருத்து என்பதை இன்னும் எடுத்துரைக்க விரும்பு கிறோம்.

*தலைவர்:* அது ஏற்கனவே முடிந்த விஷயமாகும்.

*மிஸ்டர் ஃபுட்:* இல்லையேல், ஒவ்வொரு பத்திக்கும் ஒரு பிற்சேர்க்கை நீங்கள் சேர்க்கலாம்.

*தலைவர்:* ஒவ்வொரு முறையும் அவ்வாறு நாம் செய்ய முடியாது.

*திரு. ஜாதவ்:* பிராமணர், பிராமணரல்லாதவர் மற்றும் பம்பாயிலுள்ள வேறு பல வகுப்பினர்கள், தாழ்த்தப்பட்டோர் எல்லாம் சேர்க்கப்படவேண்டும்.

*தலைவர்:* இப்போது இதைப்பற்றி பேச முடியாது. (பத்தி 13 பற்றி, தனது மாறுபட்டக் கருத்தைப் பதிவு செய்ய டாக்டர் அம்பேத்கர் வற்புறுத்துகிறார்).

★ ★ ★ ★ ★

* *மிஸ்டர் ஃபுட்:* இதில் ஒரே ஒரு கருத்துத்தான் உள்ளது. வயது வந்தோருக்கு வாக்குரிமை வேண்டுமென்பதின் அடிப்படையில் பொதுவாக மறுப்பு இருப்பதால் ஒவ்வொரு பத்திக்கும் பின்னர் ஒரு குறிப்புத் தேவையில்லை. திரு. ஜோஷி மற்றும் அவரது நண்பர்கள் எழுப்பிய ஆட்சேபணைகளை உள்ளடக்கிய ஒரு பொதுக்குறிப்பு இறுதியில் இருக்க வேண்டாமா?

*தலைவர்:* அது சிறந்த ஆலோசனை என்று கருதுகிறேன். உங்களது கருத்தினை நான் முற்றிலும் புரிந்து கொண்டுள்ளேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* அதை உங்களது முடிவுக்கு விட்டு விடுகிறேன்.

*தலைவர்:* நான் சொல்லவேண்டுமானால், உதாரணமாக நீங்கள் பெண்கள் வாக்குரிமையை ஆட்சேபிப்பதாகத் தெரிந்தால், அனேகமாக தவறான கருத்தோடு கொஞ்சம் நீங்கள் இருப்பதாகத் தோற்றும்.

*டாக்டர் அம்பேத்கர்:* அவ்வாறு செய்வதற்கு எங்களுக்கு நல்ல காரணமுண்டு. எங்கள் உள்ளங்களில் நாங்கள் (பெண்கள் வாக்குரிமைக்காக) தயாராக உள்ளோம். அக்காரணத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் எத்தகைய ஆட்சேபங்களுக்கும் பதிலளிக்கத் தயாராக உள்ளோம். தத்துவ ரீதியாகப் பெண்கள் குறித்து எங்களுக்கு மறுப்பு இல்லை.

*திரு ஜாதவ்:* உயர்ந்த பட்சமாக உள்ள 25 சதவீதத்தைப் பெண்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு செய்தால், வாக்குரிமையை எவ்வகையிலும் குறைக்கும் அவசியமில்லை.

## வட்டமேசை மாநாட்டுக்குழு

### ** துணைக்குழு VI சமர்ப்பித்த அறிக்கையின் சுருக்கம் (வாக்குரிமை) — ஜன்வரி 16, 1931

*(டாக்டர் அம்பேத்கரின் யோசனைகள் சம்பந்தப்பட்ட பத்திகளில் சில)*

துணைக்குழு பரிந்துரைத்தது:

* துணைக்குழு IV-ன் நடவடிக்கைகள் (வாக்குரிமை) பக். 175-176.

** மேற்படி, பக். 175-76.

*பத்தி 4: (1)* ஒரு வாக்குரிமை நிபுணர் கமிஷன் அமைக்கப்பட வேண்டும்; வாக்காளர் தொகுதிகளை உடனடியாக அதிகரித்து மொத்த மக்கள் தொகையில் 10 சதவீதத்தினருக்குக் குறையாமல் வாக்குரிமை அளிக்க கமிஷன் ஏற்பாடு செய்ய வேண்டும்; இன்னும் சொல்லப்போனால் முழு அளவில் ஓர் ஆய்வு நடத்தி, இதைவிட அதிக எண்ணிக்கை உள்ள வாக்காளர்களுக்கு— மக்கள் தொகையில் 25 சதவீதத்தினருக்கு மேற்படாத வாக்காளர்களுக்கு— வாக்குரிமை அளிக்க இயலுமானால், அது விரும்பத்தக்கதானால் அவ்வாறே செய்யும்படிக் கமிஷன் பணிக்கப்பட வேண்டும்.

*(2)* இவ்வாறு வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் கூட இன்னொரு திட்டத்தைப் பற்றியும் கமிஷன் ஆராய வேண்டும். இந்தத் திட்டத்தின்படி, நேரடியாக வாக்களிக்க உரிமை இல்லாத வயதுவந்தோர் அனைவரும் ஒவ்வொன்றும் சுமார் 20 பேர்களைக் கொண்ட பல ஆரம்பக் குழுக்களிலோ அல்லது வேறு ஏதேனும் தகுந்த முறையிலோ இணைக்கப்படுவர்; இந்த ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுவார்; நேரடியாக வாக்களிக்க உரிமையுள்ள வாக்காளர்கள் வாக்களிக்கும் தொகுதிகளிலோ அல்லது அவர்களுக்கென்று உருவாக்கப்படும் தனித் தொகுதிகளிலோ மாநிலத் தேர்தல்களில் வாக்களிக்க அவர் உரிமை பெறுவார்.

(திரு. ஜோஷி, திரு. சிவராவ், டாக்டர் அம்பேத்கர், திரு. ஸ்ரீநிவாசன், திரு. கே. டி. பால், திரு. ஜாதவ் ஆகியோர் இந்த யோசனைகள் போதுமானவை அல்ல என்று கருதினர்; உடனடியாக வயதுவந்தோர் வாக்குரிமையை அமல் செய்வதுதான் நடைமுறைச் சாத்தியமானதும் விரும்பத் தக்கதும் என்று வலியுறுத்தினர்.)

*பத்தி 7:* வாக்குரிமை பெறுவதற்குக் கல்வியைக் கூடுதலான தகுதியாக நிர்ணயிக்க, ஒரு தகுந்த கல்வித் தகுதி பற்றிய அளவு முறையினை உருவாக்கும் சாத்தியக்கூற்றை வாக்குரிமைக் குழு பரிசீலனை செய்ய வேண்டுமென்று துணைக்குழு கருதுகிறது.

*பத்தி 8:* தற்போதுள்ள இராணுவப்பணித் தகுதியை நிறுத்தி வைத்துக் கொள்ளலாம் என்றும், பிராந்தியப் படை, துணைப் படைப்பணியிலுள்ளளோருக்கு இத்தகுதியினை விரிவாக்கம் செய்வது குறித்தும் வாக்குரிமைக்குழு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் துணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

*பத்தி 9:* பெண்களுக்குச் சிறப்புத் தகுதிகள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும், சட்டமுறைக் குழு (Statutory Commission) செய்த பரிந்துரை மற்றும் சட்ட முறைக்குழு அறிக்கையில் கண்டுள்ள வயது வரம்பு இருபத்தைந்திலிருந்து இருபத்து ஒன்றாகக் குறைக்கப்பட வேண்டுமெனத் துணைக்குழு கூறியுள்ள ஆலோசனையும், கிடைக்கக் கூடிய எல்லாச் சாட்சியத்தின் (Evidence)

அடிப்படையில், இப்பிரச்சினையில் வாக்குரிமை கமிஷன் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் துணைக்குழு ஒத்துக் கொண்டது. (திரு. ஜோஷி, திரு. சிவராவ், டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் பத்திகள் 7, 8,9-ல் கண்ட கருத்துக்களுக்கு மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளனர்).

13. வாக்குரிமை தானாக விரிவாக்கப்பட வகை செய்யும் திட்டம் எதையும் வகுப்பதை அறிவுறுத்துவது சரியல்ல என துணைக்குழு கருதியது. புதிய அரசியல் சட்ட அமைப்பு நடைமுறைக்கு வந்த பத்தாண்டுகளுக்குப் பின்னர், மாநிலச் சட்ட மன்றங்கள் ஒவ்வொன்றும் தங்கள் இச்சைப்படி வாக்குரிமையை விரிவாக்கும் உரிமையை அவைகளுக்கு விட்டுவிடுவது விரும்பத் தக்கது என்று கருதப்பட்டது. (திரு. ஜோஷி, திரு. சிவராவ், டாக்டர் அம்பேத்கர் மற்றும் திரு. ஸ்ரீநிவாசன் ஆகியோர் வாக்குரிமை தானாக விரிவாக்கப்படும் முறை ஏற்பாடு செய்யப்படுவது விரும்பத்தக்கது என்று கருதினர்)

*(விவாதத்தில் டாக்டர் அம்பேத்கர் கலந்து கொள்ளவில்லை. துணைக்குழு அறிக்கை எண். 6 (வாக்குரிமை) மீது மாநாட்டுக் குழு விவாதத்தில் (16 ஜனவரி, 1931) திரு. என். எம். ஜோஷி அவர்கள் கூறிய கருத்துக்கள்.)*

*திரு. ஜோஷி:* பத்தி 9 பற்றி ஒரு கருத்தினை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். திரு. ஜோஷி, திரு. சிவராவ், டாக்டர் அம்பேத்கர் மற்றும் திரு. ஸ்ரீநிவாசன் ஆகியோர் பத்திகள் 7, 8 மற்றும் 9-ல் கூறப்பட்டக் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர் என்று கூறப்பட்டது. பெண்களுக்காக ஒரு வகைத் தகுதியை உருவாக்குவதற்குப் பெண்கள் உரிமை கொண்டாடுவதை. நாங்கள் எதிர்க்கவில்லை என நான் கூறுவதைக் கவனிக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக, மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கைக்கு ஒரு வரம்பினைக் குழு நிர்ணயித்ததின் காரணமாக, குழுவின் நடவடிக்கையின் போது நாங்கள் மேற்கண்ட மனப்போக்கினைக் கொள்ள வேண்டியிருந்தது. இத்தகைய சூழ்நிலைகளில் வாக்குரிமை பெறாதவர்களின் நலத்தின் பாதுகாப்பு எங்களது கடமையாயிற்று. ஏனெனில், வாக்குரிமை பெற்றவர்களின் மனைவிகளுக்கும் வாக்குரிமையளிக்க வேண்டுமென்ற கொள்கையினை நாம் ஏற்றுக் கொண்டால், வாக்குரிமையற்றோருக்கு வாக்குரிமையளிக்காத வரம்பு உயர்ந்து விடும். நாங்கள் தள்ளப்பட்டுள்ள சிரமமான, ஒரு தனி வேறுபட்ட நிலையில், ஏற்கனவே வாக்குரிமை பெற்றவர்களின் மனைவிகளுக்கு வாக்குரிமை தரக் கூடாது என்ற மனப்பாங்கினை மேற்கொண்டுள்ளோம். அவ்வாறு அவர்களுக்கு வாக்குரிமை தருவதால், வாக்குரிமையற்றோர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. பெண் என்ற பால் இன வேற்றுமையினை நீக்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

*தலைவர்:* பத்தி 9 பதிவு செய்யப்பட்டது.

# 6

# வட்டமேசை மாநாட்டின் குழு

## துணைக் குழு VII அறிக்கை பற்றி கருத்துக்கள் (பாதுகாப்பு) — ஜனவரி 16, 1931)

***டாக்டர் அம்பேத்கர்:** திறமையும், தேவையான தகுதிகளும் பெற்றிருப்பதற்கு ஏற்ப, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உட்பட, மாட்சிமைமிகு அரசரின் குடிமக்கள் அனைவரும் இந்திய இராணு வத்தில் சேர்க்கப்பட உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு திருத்தத்தை, இந்த அறிக்கையின் பத்தி 4-ல் கண்ட (2) வது பிரிவுக்குப் பிரேரணை செய்ய நான் விரும்பு கிறேன். இந்த விஷயம் நடவடிக்கைக் குறிப்பில் பதிவாக வேண்டும் என்பது மட்டும் எனது விருப்பமல்ல; இவ்விஷயத்தில், இச் சபையின் உணர்வுகள் பிரதிபலிக்கின்ற வயில் இதை ஒரு உறுதியான திருத்தமாகக் கொண்டுவர நான் விரும்புகிறேன். எனது திருத்தம் ஒரு சாதாரணமானதுதான், இராணுவம் பணி யில் மாட்சிமைமிகு அரசரின் குடிமக்களின் பல்வேறு சாதிகளுக் கிடையே உள்ள பாரபட்சங்களை இத்திருத்தம் அகற்றுவதற்கு முயற்சி செய்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் தனி உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இந்தத் திருத் தத்தை முக்கியமாகப் பிரரேபிக்கிறேன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவ்வாறு செய்யும்போது, இக்குழு எவ்விதச் சலுகையும் காட்ட வேண்டுமென நான் கேட்கவில்லை. சாதி, நிறம், மதம் அடிப்படையில் மாட்சிமைமிகு அரசரின் குடிமக்கள் எவரும் அரசுப் பணியில் சேருவதற்குத் தடை செய்யப்படமாட்டார் என இந்திய அரசாங்கச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை நடைமுறையில் உள்ளது என நாங்கள் உணர்ந்து கொள்ள வகை செய்ய, இக்குழுவினை நான் கேட்டுக் கொள்கிறேன். எனவே, அவ்வாறு செய்யும்போது, தனிச் சலுகை எதுவும் வேண்டுமென நான் கேட்கவில்லை என நினைக்கிறேன்.

ஐயா, அரசுப்ணிகள் குழு ஏற்றுக் கொண்ட முறைகள் அடிப் படையில் இத்திருத்தம் உள்ளது என்பதை உங்களுக்குக் குறிப் பிட்டுக் கூற விரும்புகிறேன். இக் குழுவினால் அமைக்கப்பட்ட அரசுப்பணிகள் குழுவின் அறிக்கையினை நீங்கள் பார்த்தால், நாட்டின் அரசுப் பணிகளில் மாட்சிமைமிகு அரசரின் குடிமக்கள் அனைவரும் நியாயமான, போதுமான வாய்ப்புப் பெற்று இருக்க

* வட்டமேஜை மாநாட்டின் நடவடிக்கைகள் (முதலாவது கூட்டத்தொடர்) பக். 379-80.

வேண்டும் என்பதற்கு இக்குழு முக்கியமான முயற்சி செய்தது என்றும், அரசுப்பணிகளில் சேருவதற்குத் தடை செய்யப்படுவதை நீக்குவதற்கு மோட்சிமை தங்கிய அரசரின் குடிமக்கள் உரிமைகள் காக்கப்பட சில அடிப்படை உரிமைகளை அக்குழு விளக்குகிறது மட்டுமல்லாது, ஆங்கிலோ-இந்தியர்கள், தாழ்த்தப்பட்டோர் போன்ற சில குறிப்பிட்ட இனத்தவர்களைக் குறிப்பிட்டுக் கூறி, சற்று விதிகக்கும் மீறி முன்வந்து சிறப்புப் பரிந்துரைகளை அளிக்க முன்வந்தது என்பதும் தங்களுக்குத் தெரியவரும்.

ஐயா, ஆனால், இத்திருத்தம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக மட்டுமல்ல. மாட்சிமைமிகு அரசரின் அனைத்து குடி மக்கள் சாதியினர் நலனுக்கும்தான் என்பதைப் பணிவுடன் தெரி வித்துக் கொள்கிறேன். ஐயா, நாட்டின் எந்த அரசுப் பணியிலும் இந்தியாவிலுள்ள எந்தச் சமுதாயத்தினரும் ஏகபோகமாக அனுப வித்துக் கொள்ள அனுமதிப்பது ஒரு பெரிய பொது ஆபத்தாகு மென்று நான் நினைக்கிறேன். வசதியான நிலையிலுள்ள இத் தகைய குறிப்பிட்ட வகுப்பினர் ஒரு உயர்வு மனப்பான்மை யினைத் தூண்டி விடுவது மட்டுமல்லாது, சில குறிப்பிட்ட வகுப் பினர், வழங்கப்படுகிற பாதுகாப்பினையே மக்கள் சார்ந்திருக்கச் செய்து, அவர்களின் நலத்திற்குப் பங்கமும் விளைவிக்குமென்ற காரணத்தினால், ஒரு பொது ஆபத்து என்று கூறுகிறேன். எனவே, இந்தியாவிற்கு நாம் ஒரு புதிய அரசியலமைப்பினை வரைவு செய்யும்போது மாட்சிமை தங்கிய அரசரின் ஒவ்வொரு குடிமகனும் தனது தகுதியின் காரணமாக நாட்டின் அரசுப்பணி யில் தன் தகுதிக்கேற்றவாறு பங்கு பெறும் ஒரு முறையினை அமைப்புத் துவங்க வேண்டுமென நான் சமர்ப்பித்துக் கொள் கிறேன். ஐயா, நான் இவ்வாறு சொல்லுவதென்றால், எனது திருத்தப் பிரேரணை இந்தப் பத்தியிலேயே விளக்கப்பட்டுள்ள கொள்கையின் தர்க்க ரீதியான பின் விளைவுதான் என்பதாகும். ஏனெனில், பிரிவு 4-ன் உட்பிரிவு 1-யை நீங்கள் பார்த்தால் இது (பின்வருமாறு) தெரியும்.

> ''இந்தியாவில் புதிய அரசியல் அமைப்பால் அமையும் அரசாங்கத்திற்கு, இந்தியாவின் பாதுகாப்பு இந்திய மக்களின் பொறுப்பாகப் பெருமளவுக்கு இருக்க வேண்டும்; பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்பு அல்ல என்று துணைக் குழு கருதுகிறது''.

ஐயா, இந்தியாவின் பாதுகாப்புப் பெருமளவுக்கு அனைத்து இந்திய மக்களின் பொறுப்பாகும் என்று கூறும் அந்த வாக்கியத் திற்கு அர்த்தம் எதுவும் இருக்கவேண்டுமானால், அது (இந்தியப் பாதுகாப்பு) அனைத்துத்தர இந்திய மக்களின் பொறுப்பாக இருக்க வேண்டுமேயன்றி, எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பினர் பொறுப்பல்ல.

எனவே, நான் கொண்டு வரும் திருத்தத்தை இச்சபை ஏற்க வேண்டுமென பணிந்து வேண்டுகிறேன்.

*டாக்டர் மூன்ஜி:* எல்லா வகுப்பினரும் அரசுப்பணிக்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்ற டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கோரிக்கை குறித்து அவருடன் எனக்கு முழு உடன்பாடு உண்டு; ஆனால், திறமையின் தரம் என்ற நபந்தனைக்குட்பட்டு பாது காக்கப்பட வேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர்:* அதுதான் எனது திருத்தம். திறமையோடு ஒத்ததாக அது இருக்கவேண்டும்.

*சர் தேஷ்பஹதூர் சர்ப்ரு:* டாக்டர் அம்பேத்கர் அவர்களின் கருத்துக்கு எனக்கும் உடன்பாடு உண்டு.

*திரு பாசு:* தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். எக்குழுவிலும் உறுப்பினராவது பற்றிப் பகுதி 5 (4)-ல் அரசுப் பணிக் குழுத் துறையின் விவரத்தின் ஒரு பகுதி, அரசின் எந்தப் பணியிலும் பதவி உயர்வோ அல்லது பதவி நீக்குதலோ சாதி, மதம், இனம் அடிப்படையில் இருக்கக் கூடாது எனக்கூறுகிறது. இத் திருத்தம் அப்பகுதி கூறியதையே கூறுகிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* நமது பரிசீலனையில் இராணுவம் பற்றிய விவகாரம் இல்லை.

*திரு தாமஸ்:* தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்திற்குத் தேவை எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. இப்பத்தி வேண்டுமென்றே சேர்க்கப்பட்டிருக்கிறது. ''இந்தியாவில் புதிய அரசியல் அமைப்பு வளர்ச்சி பெறுகிறபோது இந்தியாவின் பாதுகாப்பு இந்திய மக்களின் பொறுப்பாகப் பெருமளவுக்கு இருக்க வேண்டும்; பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்பல்ல என துணைக்குழு கருதுகிறது.'' இந்தியாவின் பாதுகாப்பு இந்தியாவி லுள்ள எந்த வகுப்பினரின் தனிப் பொறுப்பாக இருக்கவேண்டு மென்று அது சொல்லவில்லை. அதனைக் குறிப்பிடும் வகையில் வேண்டுமென்றே அப்பத்தி எழுதப்பட்டிருக்கிறது. அத்துடன் ''இந்திய மயமாக்குதல்'' (Indianisation) என்ற வார்த்தையும் பொருந்தும்.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம்; ஆனால் அரசுப்பணியில் எல்லா வகுப்பினரும் சேருவதற்கு வாய்ப்பில்லாமலேயே இந்தியமய மாக்குதல் இருக்கும் என்று நான் பொருள் கொள்கிறேன். இந்திய மயமாக்குதல் என்பது இப்போதும் ஒரு சில வகுப்பினரின் ஏக போக உரிமை என்றுதான் பொருள்படுகிறது.

*தலைவர்:* இதுதான் தற்போதைய நிலை. இது கவனத்தில் கொள்ளப்படும்.

## 7

# துணைக்குழு எண் VIII (பணிகள்)

## இரண்டாவது அமர்வு — ஜனவரி 7, 1931

* *டாக்டர் அம்பேத்கர்:* இந்தத் துணைக் குழு, இந்தியமய மாக்குகிற இந்தச் செயல்முறையில், எதிர்காலத்தில் சிவில் (Civil) பணிகளில் இருக்கிற இந்தியர்களுக்கும், ஐரோப்பியர் களுக்கும் இடையே சம்பளம், ஓய்வூதியம் மற்றும் பிற சிறப்புச் சலுகைகளில் வேறுபாடு எதுவும் கொண்டிருக்க வேண்டுமா என்ற ஒரு கருத்தைப் பரிசீலனை செய்வது தேவையானது என்று நான் கருதுகிறேன். இந்தக் கருத்தினை, இந்தத் துணைக்குழு கண்டிப்பாகப் பரிசீலனை செய்தே ஆகவேண்டும் என்பது இன்றி யமையாதது என்று நான் நினைக்கிறேன். எனவே நான் ''இந்திய ஆற்றலும் ஐரோப்பிய ஆற்றலும் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் பிற சிறப்புச் சலுகைகள் விஷயத்தில் இணையாகவே வைத்து எண்ணப்பட வேண்டும்'' என்ற பத்தியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

*தலைவர்:* நாங்கள் அதை நினைவில் வைத்துக் கொள்வோம்.

பிறகு ''(4) புதிய அரசியலமைப்பின்படி அனைத்திந்தியப் பணிகளுக்கு ஆளெடுப்பதற்கு ஆளெடுக்கும் அதிகாரியாக யார் இருப்பது?

*சர் சிமன் லால் செதல்வாட்:* நீங்கள் கட்டுப்பாட்டையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது ஆளெடுப்பது யார்? அவர்களைக் கட்டுப்படுத்துவது யார்? என்பதையும் சேர்த் துக் கொள்ள வேண்டும்.

*தலைவர்:* தற்போதைக்கு அதனை விட்டு வைப்போம்.

பிறகு ''(5) இந்திய மருத்துவப் பணியின் பொதுப்பிரிவு (Civil Branch) அமைப்பது தொடர்பான பரிந்துரைகள்.'' இது மிகவும் பெரிய அளவிலானது. நாம் விரும்புகிற பரிந்துரைகளை இங்குத் தெரிவிக்கலாம்.

பிறகு ''(6) எதிர்காலத்தில் ஆளெடுக்கப்படுபவர்கள் பொருத்த மானவர்களாக இருப்பதைக் கவர்வதற்கும் அதனைத் தொடர்ந்து நிறுத்தி வைத்துக் கொள்வதற்கும் தேவைப்படும் நிபந்தனைகள் என்ன என்பது பற்றிய கேள்வியை, தொழில்நுட்பக் குழு அல்லது

---

* துணைக்குழு எண் VIII (பணிகள்) நடவடிக்கைகள், இந்திய அரசாங்கம். மத்திய வெளியீட்டுப்பிரிவு. கல்கத்தா, 1931. பக்.44-46.

*லார்டு ஜெட்லாண்டு:* சர் சிமன்லால் செதல்வாட் விவாதிக்க விரும்பிய வினா 4 ஆவது இனத்தில் வருகிறது. கட்டுப்பாட்டு அதிகாரமானது பணிக்கு ஆளெடுக்கும் அதிகார அமைப்பிடம் தான் இருக்கிறது.

*தலைவர்:* ''மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரம் குறித்துப் பொது வான பரிந்துரைகள் என்ன'' என்பதை 4 ஆவது இனத்துடன் நாம் சேர்த்துக் கொள்ளலாம். ஒன்று மற்றொன்றுடன் பின் தொடர் பயனை உடையது என்ற லார்டு ஜெட்லாண்டின் கருத்தினை நான் ஏற்றுக் கொள்கிறேன். கட்டுப்பாட்டுப் அதி காரம், பணியில் அமர்த்துகிற அதிகார அமைப்பிற்குச் செல்கிறது. எனவே டாக்டர் அம்பேத்கரின் கருத்தினை ஏற்றுக் கொள்ளும் வகையில் 6 ஆவது இனத்தில் ''மற்றும் அவ்வாறு, அத்தகைய குழுக்களை வழிநடத்திச் செல்வதற்குத் திட்டவட்டமான பரிந் துரைகள் எவையும் வழங்கப்பட வேண்டுமா என்பது?''

★ ★ ★ ★ ★

* *தலைவர்:* நாம் இப்போது 3வது இனத்திற்கு வருவோம். பின்வரும் பணிகள் எதற்கும் அனைத்திந்திய அளவில் பணி யமர்த்தும் முறை தொடர்ந்து இருந்துவர வேண்டுமா, (அ) இந்திய ஆட்சி (Civil) பணி, (ஆ) இந்திய காவல்துறைப் பணி, (இ) இந்திய வனத்துறைப் பணி, (ஈ) இந்திய பொறியியல் பணியில் நீர்ப் பாசனப் பிரிவு.'' (அ) விற்கும், (ஆ) விற்கும் ''ஆம்'' என்பதும், (இ) விற்கும் ''இல்லை'' என்பதும் குழுவின் கருத்தாக இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டேன் என்பதைத் தெரிவிக்க நான் இங்கு நிறுத்துகிறேன். நான் (அ) விற்கும் (ஆ) விற்கும் ''ஆம்'' என்பதே பதிலாக எடுத்துக் கொள்ளலாம்

*திரு. சிவராவ்:* அனைத்துப் பணிகளும் மாநிலங்களிடம் விடப்படுதல் வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்தப் பணிகள் அனைத்தும் அனைத்திந்திய அளவில் இருப்பது திருப்தி கரமாகச் செயலாற்றுவதற்கு இயலும் என்று நான் கருதவில்லை. மேலும், அதே நேரத்தில் அந்தப் பணிகளுக்கும் அமைச்சகத்திற்கும் உரியதொரு நல்லுறவு அமைவதை உறுதிசெய்தல் வேண்டும்.

*திரு. பாசு:* இந்திய பொதுப்பணிகளுக்கு (Civil) ஒரு பொதுப் பணியாக ஆளெடுக்கப்படுகிறது. பின்பு அது இரண்டாகவும் மூன்றாகவும் பிரிக்கப்படுகிறது. பொதுப்பணியில் ஒரு கால அளவிற்குப் பிறகு, எடுத்துக்காட்டாக, சில பணியாளர்கள், சுங்கவரித் துறைக்குச் செல்கிறார்கள்; சிலர் நீதித் துறையைத் தேர்ந்தெடுத்து நீதிபதிகள் ஆகிறார்கள், மற்றவர்கள் ஆட்சித்துறை மற்றும் வருவாய்த்துறைகளில் அப்படியே இருந்து வருகிறார்கள்.

---

* துணைக்குழு எண்ண VIII (பணிகளின்) நடவடிக்கைகள் பக். 54-58.

தொடக்கத்தில் இருந்தே நாம் பெற்றிருக்கவேண்டிய அத்தகைய தனித்தன்மை வர்ய்ந்ததாக இல்லாத ஒரு பணியை நாம் கொண் டிருக்கப் போகிறமா? என்னுடைய பொதுவான குறிப்புரையில், நான் குறிப்பிட்டது போல் ஐ. சி. எஸ் (I.C.S.) என்னும் பெயரில் ஒரு பணியை வைத்திருப்பதற்குப் பதிலாக புதிய அரசியலமைப் பில் அந்தப் பணிகளின் வகைகளைப் புத்துருவாக்கி ஒழுங் கமைத்தல் தேவையான ஒன்றாக இருக்கக்கூடும். ஐ. சி. எஸ். இதற்கு முன்னர் நன்கு பணியாற்றி வந்திருக்கிறது ஆனால், அது சிறிது காலமாகவே, குறிப்பிட்டதொரு அளவுக்குத் தற்காலத்திற்குப் பொருந்திவராத ஒன்றாக இருக்கிறது. இன்றைய நாளின் தேவை களுக்குப் பொருந்திவராத தன்மையில் இருக்கும் பெயர்களையும் நிலைமைகளையும் நாம் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமா என்பது தான் பிரச்சினை.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்தப் பிரச்சினைக்கு ஒன்றிற்கு மேற் பட்ட நிலைகளில் இருந்து சிந்திக்கப்பட வேண்டும். எல்லாவற் றிற்கும் முதலாக, அது மாநிலங்களின் தன்னாட்சி (Provincial autonomy) பற்றிய நோக்கம். நாம் மாநிலங்களுக்கு இயன்றளவில், பெருமளவில் மாநிலத் தன்னாட்சி (சுயாட்சி) வழங்குவதற்குக் கருதியுள்ள வகையில் அரசியலமைப்பினை வகுத்து வருகிறோம். மேலும் மாநிலம் எதுவும், அந்தப் பகுதியில் செயலாற்றப் போகிற சிவில் பணியாளர்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான அதி காரத்தை அது பெற்றிருக்கவில்லை என்றால், அந்த மாநிலம் தன் னாட்சியை உடையது என்று கருத முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது. மற்றொரு முக்கியமான நோக்காக இருப்பது நிதி. நாம் அனைத்திந்தியப் பணிகள் என்று வைத்திருக்கும்போது, நிர்ண யிக்கப்பட்ட சம்பள விகிதம் இருக்கிறது. சம்பளம், பணியூதியங்கள் மற்றும்' பிற சிறப்புச் சலுகைகள் விகிதத்தின் பேரில் பல்வேறு மாநிலங்களில் கிடைக்கக் கூடியதாக இருப்பது சில மாநிலங்களில் அரிதாக இருக்கிறது. பம்பாயில் அல்லது வங்காளத்தில் அதிகப்படி யான செலவுடையதாக இல்லாத சிவில்பணிகள் அஸ்ஸாம், சந்து, வடமேற்கு எல்லைப்புற மாநிலம், பஞ்சாப் முதலிய சிறிய மற்றும் வறிய மாநிலங்களுக்கு அது அதிகப்படியான செலவினமாக இருக் கும். மேலும் இந்த மாநிலங்கள் அனைத்திந்திய பணிகள் வழங்கக் கூடியவற்றை விடச் சற்று குறைந்த திறனுடைய பணிகளின் வாயி லாகத் தங்களை நிறைவு செய்து கொள்ளலாம். நிதிநிலைமை, அவற்றின் கட்டுப்பாட்டில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, அவை அவற்றின் நோக்கத்திற்கான போதிய அளவில் கிடைக்கத்தக்கதாக இருக்கிற அறிவுக்கும், திறமைக்கும் மதிப்பளித்து ஏற்றுக் கொள்ள லாம். இறுதியாக, தனித்தன்மை வள்ர்ச்சி குறித்து திரு. பாசு அவர்களின் கருத்துடன் உடன்படுகிறேன். ஐ. சி. எஸ். போன்ற தேர்வுகளில் பெறும் தேர்ச்சி அதனைத் தேறியவருக்குத் தனித் தன்மை வாய்ந்த ஒருசில துறைகளில் பணியாற்றுவதற்கான தகுதி யையும் திறமையையும் எவ்வாறு வழங்கமுடியும் என்பதை என் னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கணிதப்பாடத்தைச் சிறப்புப்

பாடமாகக் கொண்டு ஐ. சி. எஸ். தேர்வில் தேர்ச்சிபெற்ற ஒருவர் இந்திய விவசாயத்துறையிலோ அல்லது இந்திய நாணயச் செலாவணித்துறையிலோ பணியிலமர்த்தப்படலாம். அத்தேர்வுகளில் கலந்துகொள்பவர்களின் வெறும் கல்வித்தரத்தை மட்டுமே உறுதி செய்வதாக அமையாத பணியொன்றை நாம் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு அல்லாமல், ஒரு சில தனித்தன்மை உடையோருக்கும் கூட அதனை அனுமதிக்க வேண்டும். (மேலும்) அனைத்திந்திய அளவில் அமைந்திருக்கும் இப்பணிகளைத் தற்போது முடிவுக்குக் கொண்டுவருதல் வேண்டும் என்பதும் மாநிலங்கள் இப்பணி தொடர்பான தங்கள் தேவைகளைத் தாங்களே வழிவகைசெய்து, தேவைகளுக்கேற்ப நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதும் என்னுடைய கருத்தாகும்.

*சர் எ. டி. பத்ரோ:* டாக்டர் அம்பேத்கர் அவர்களால் எழுப்பப்பட்ட மறுப்புரை மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

★ ★ ★ ★ ★

* *தலைவர்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களின் குறிப்புரைகளின் மீது திரு. பாசு அவர்கள் தெரிவித்த கருத்துகள் தெளிவாக ஆராயப்படுதல் வேண்டும். இந்திய சிவில் சர்வீஸ் (ஐ. சி. எஸ்.) பணிகளுக்குத் தகுந்த நபர்களை நியமிப்பதற்குப் பரிந்துரைக்கும் போது, ஐ. சி. எஸ். பணியை மிக முழுமையானதென்றோ அல்லது இதே அடிப்படையில் அது தொடர்ந்து பராமரிக்கப்படக் கூடியதென்றோ நாம் கருதவில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். அதனைச் செம்மைப்படுத்துவதற்கும் மறுசீரமைப்பதற்கும் தேவையான அனைத்தையும் நாம் செய்ய வேண்டும். இத்தகைய அனைத்திந்திய பணித்துறையை அகற்றிவிட்டு, அதற்குப்பதில் மாகாணப் பணித்துறையை உருவாக்க வேண்டும் என்பது டாக்டர் அம்பேத்கர் போன்றோரின் கருத்தாகும்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் என்னுடைய நிலையைத் தெளிவாக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான், இந்தப் பணியில் ஐரோப்பியர்களும் இடம்பெற வேண்டும் என்பதில் இந்தக் குழுவின் உள்ள மற்ற உறுப்பினர்கள் கருத்துடன் ஒத்துச் செல்கிறேன். ஆனால், அந்தப்பணியை மாநிலங்களுக்குரியதாக ஆக்கினால் அந்த ஆளெடுக்கும் முறை, பணியில் சேருபவர்கள் இல்லாமல், அதாவது வளமின்றி வறண்டு விடும் என்று பெருமகனார் பிரபு ஜெட்லாண்டு அவர்கள் சொன்னால் அவரது கருத்துடன் நான் உடன்படுவதற்கு இல்லை.

★ ★ ★ ★ ★

* துணைக்குழு எண். VIII (பணிகள்) இன் நடவடிக்கைகள் பக்கம். 57-58.

* *தலைவர்:* யோசனையானது, நாம் 1939 என்றோ அல்லது நீங்கள் விரும்புகிற மற்றொரு தேதியையோ நிர்ணயித்தல் வேண்டும். தேதியில் மந்திரம் ஏதும் இல்லை. நாம் ஒரு தேதியைக் குறித்து நிர்ணயிக்க வேண்டும்; அதன்பின்னர் இந்திய அரசாங்கத்திற்கு அதனைப் பரிசீலிக்க விட்டுவிட வேண்டும். எல்லோரும் இதில் இணைந்துசெல்ல வேண்டும் என்பதற்காக இதனை உங்கள் முன் வைக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* உங்கள் பரிந்துரைகள் இந்திய சிவில் பணிகளுக்கும் காவல்துறைப் பணிகளுக்கும் மட்டுமே பொருந்துதல் வேண்டும் என்பதே என் கருத்து

*தலைவர்:* நான் அதனை ஒத்துக் கொள்கிறேன். அதனைத் தெளிவு படுத்துவேன்.

## 3 வது அமர்வு — 1931, ஜனவரி, 8

** *டாக்டர் அம்பேத்கர்:* ஐயா, எதிர்கால இந்திய அரசாங்கத்திற்கு வழிகாட்டு நெறிகளை வழங்குவதற்காகக் குழு (Committee) ஒன்று அமைக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து எனக்கு வன்மையான கருத்தொன்றும் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள வேண்டும். ஆனால், இரண்டு விஷயங்கள் குறித்து மிக உறுதியான கருத்தினைக் கொண்டிருக்கிறேன். முதலாவது, அனைத்துத் துறைகளுக்குமான பணியாளர்களுக்குப் பொதுவானதொரு இந்திய சிவில்பணியினை வைத்திருப்பதற்குப் பதிலாக, இதன் பின்னர், இப்போது இருப்பதைவிடத் திறமையை இன்னும் அதிகமாகப் பெறுவதற்காக, தனித்தன்மை வாய்ந்த பணிகளுக்காகச் சிலவழிமுறைகளை வகுப்பதற்கு நேரம் வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நான் இந்திய பொதுப் பணிகளின் திறமையைப்பற்றி எதுவும் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் அது திறமைமிக்க இந்திய ஆட்சிப்பணி (Indian Civil Service) என்பது பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்ட ஒன்று என்பது என் எண்ணம். இருந்தபோதிலும், ஒருசில தொழில் நுட்பத்துறையில் அல்லது, வேறுவகையில் தனித்தன்மையிலான துறைகளில் கடமைகளை ஆற்றிவருவதற்கு சிவில்புணியில் ஒருவர் பெறுகிற இவ்விதப் பயிற்சிப் போதுமானதாக இல்லை என்பதையே நான் வலியுறுத்துகிறேன். எனவே, அதன் விளைவாக, இந்திய சிவில்பணியில் உயர்ந்ததொரு திறமையை நாம் பெறுவதற்காக இந்தப்பணியில் சில மறுசீரமைப்புக்களைச் செய்ய வேண்டியது தேவையாக இருக்கிறது. அதுவே, நான் உறுதியாக நம்புகிற ஒருசெய்தி. நான் உற்றுதியாக நம்புகிற இரண்டாவது

* பக்கம். 85

** பக்கம் 91-93.

கருத்து இதுதான். அதாவது, இந்தியப் பொதுப்பணி இந்திய மயமாக்கப்படுதல் வேண்டும் என்பதையும், நாம் இதுவரையிலும் நினைத்து இருந்ததைக் காட்டிலும் இன்னும் கூடுதலாகவும், விரைவாகவும் இந்திய மயமாக்கப்பட வேண்டும் என்பதையும் அனைவரும் ஒத்துக் கொண்டுள்ளோம். இந்தியாவில் வரி செலுத்துவோரின் கருத்தினையும் மனதில் கொண்டு இப்பிரச்சினை யைப் பார்க்கும்போது இந்த இந்தியமயமாக்கம் என்பது பணியில் இருக்கிற அலுவலர்களை மட்டும் மாற்றுவதைக்காட்டிலும் வரி செலுத்தும் இந்திய மக்களின் சுமையினைக் குறைப்பதாகவும் இருப்பது மிகவும் அவசியமாகும் என்பது எனது பணிவான கருத்தாகும். இந்திய சிவில் பணியில் இருக்கும் இந்தியர்களின் பணியூதியம், சம்பளம், மற்றும் ஓய்வூதியம் மற்றும் பிற சிறப்புச் சலுகைகள், இந்தியப் பொதுப்பணியில் இருக்கும் ஐரோப்பியர் களுக்கு வழங்கப்படுவதை ஒப்பிடுகையில் சில வேறுபாடுகள் இருக்க வேண்டும். இது தொடர்பாக, நான் இலங்கை அரசிய லமைப்புக்காக அமைக்கப்பட்ட டோனோக்மோர் குழு (Donoughmore Commission) செய்திருக்கும் பரிந்துரைகளை இந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதன் பக்கம் 133-இல் ''இலங்கை அரசாங்கம் அதன்பின்னர் சம்பளக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்; மேலும் அந்தச் சம்பளக் குழு தொடர்பாக, இலங்கை சிவில்பணியில் இருக்கிற ஐரோப்பி யர்களுக்கும் இலங்கை சிவில்பணியில் இருக்கிற இலங்கையைத் தாயகமாக்கிக்கொண்ட மக்களுக்கும் இடையே பணியூதியத்தில் திட்டவட்டமானதொரு வேறுபாடு இருக்க வேண்டும்'' என்று அவர்கள் பரிந்துரைக்கிறார்கள். அவர்கள் அதனை நியாயப் படுத்துவது இவ்வாறுதான்: அதாவது, ''தேர்வுக்கான நற்கூறு களின் அடிப்படையின் பேரில் பார்க்கும் போது, பொதுப்பணி யாளர்களாக இருக்கும் இந்த வகையான மக்களுக்குப் பணியூதியம் வழங்குவதில் பொறுத்தமான நியாயம் எதுவும் இல்லை என்பது தெளிவு. ஒரு பிரிவு மக்கள் கூட்டத்தினர், அவர்கள் பிறந்த மிதமான தட்பவெப்பநிலைகொண்ட நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டு, அவர்களது இல்லங்களுக்கு ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால், அனல் பதிக்கும் வெப்பமிக்க நாட்டில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்; தங்கள் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதற்கு இயலாதிருப்பதாலும் அவர்கள் தங்கள் உடல் நலத்திற்காகவும் அவ்வப்போது இடைவெளிகளில் விடுப் பில் செல்ல வேண்டியதாக இருக்கிறது. இந்த நாட்டில் யார் பணியாற்ற வேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுகிறார்களோ, அவர்கள் இரண்டு குடித்தனங்களைப் பேணி வரவேண்டியதில் இருக்கும் துன்பங்கள் அனைத்தையும் எதிர்கொள்வதற்கு உள் ளாகிறார்கள். அதுமட்டுமல்ல; அவர்களது உடல்நலத்திற்கான இடமும், குடும்ப உறவுகளைத் தியாகம் செய்ய வேண்டியதுள்ளது. அது மட்டுமல்ல கணிசமான அளவில் வாழ்க்கைத் தரத்தினைப்

பாதுகாக்க வேண்டியதுள்ளது. இப்பணியின் மரபுகளையும் அவர்களது சொந்த சமூக மரபுகளையும் 125 ஆண்டுகளுக்கும் அதிகமாக ஒரு பேரரசின் பிரதிநிதியாகப் பேணிக்காக்க வேண்டியதுள்ளது. ஒரு பக்கம், அவர்களுக்கு அருகருகே, இந்த நாட்டினைத் தங்களுக்குச் சொந்த நாடாகக் கொண்ட மக்கள், தங்கள் இல்லங்களில் இருந்த வண்ணம், தட்பவெப்ப இடர்ப்பாடுகள் எதற்கும் ஆளாகாமல், அவர்களுடன் பணியாற்றும் ஐரோப்பியர்களுக்குச் சுமத்தப்பட்டுள்ள நிதிச் சுமையின் ஒரு பகுதியுடன் மட்டுமே அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்; பணியாற்றி வருகிறார்கள்: முதலில் கூறப்பட்ட பொதுப் பணியாளர்களுக்கு அவர்கள் செயல்புரிகையில் ஏற்படுகிற தனிப்பட்ட இனங்களுக்கும் தியாகங்களுக்கும் அவற்றை ஈடுகட்டும் வகையில், அவர்கள்ால் செய்யப்பட்ட பணியின் உண்மையான அளவினை விடக் கூடுதலாகவே தேவையான சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும். முந்தியவர்களுக்குச் செலுத்தப்படும் தேவையான சம்பளசரியீடு பிந்தியவர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும் என்பதில் தர்க்கரீதியான நியாயம் எதுவும் இல்லை'' என்று நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்துப் பதிவுகள் அதற்குச் சமமான ஆற்றலுடன் இந்தியச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தி வருவதாக நான் கருதுகிறேன். இந்திய சிவில் பணியை வெவ்வேறு விதமாகப் பிரிக்கின்ற தேவை மற்றும் இந்திய சிவில் பணியில் இருக்கிற இரு பிரிவு மக்களுக்குமிடையே பணியூதியத்தில் இருக்க வேண்டிய வேறுபாட்டிற்கான தேவை, என்று நான் இந்தக் குழுவின் முன் எடுத்துவைக்கும் இந்த இரண்டு கருத்துக்களையும் இந்தத் துணைக்குழு ஏற்றுக் கொள்ளுமாயின், அதன்பின்பு, இந்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசாங்கத்திற்கு அறிவுரை செய்வதற்காகச் சிலரை அமர்த்த வேண்டியிருப்பது தேவையான பின்தொடர் விளைவாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்தக் காரணங்களுக்காக நான் இந்த யோசனையை ஆதரிக்கிறேன். புதிய அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்பு, தலைப்பு 6 இன் கீழ்ப் பரிந்துரைக்கப்பட்டவரான அத்தகைய குழுவை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் அதிகாரம் அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*தலைவர்:* நமக்குச் சுட்டப்பட்டுள்ளவற்றின் வரையீடுகள், புதிய அரசியலமைப்பிற்கான பணிகளோடு தொடர்புடையன. என்பதை இந்தத் துணைக்குழுவின் வழிகாட்டுதலுக்காக நான் இங்குச் சொல்லலாம் என்று கருதுகிறேன். சம்பளம் குறித்து மிக நீண்ட நேரம் விவாதிக்கமுடியாது என்பது வெளிப்படை அல்லவா? தற்போதும் அவர்களின் சம்பளத்தில், ஆசியாவை உறைவிடமாகக் கொள்ளாதவர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் என்பதன் அடிப்படையில் வேறுபாடு இருக்கிறது. உங்கள் அனைவருக்கும் இது தெரியும் என்று நான் நம்புகிறேன். ஆசியாவை உறைவிடமாகக் கொள்ளாதவர்கள் என்று அழைக்கப்

படுகிறவர்கள், கூடுதலாகப் பெறுகிற £300 என்பது வேறுபாடாக இருக்கிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* அது கருத்தினைத் தொட்டதாக நான் கருதவில்லை. ஐரோப்பியர்களின் சம்பளம் கூடுதலாக அளிப்பதன் வாயிலாக நீங்கள் வேறுபாட்டை உருவாக்க வேண்டும். இந்தியர்களுக்கு நிவாரணம் எதுவும் அதில் இல்லை.

*சர் ஏ. பி. பத்ரோ:* தலைப்பு 6இன் கீழ்க் காணப்பட்ட வினாக்களுக்கு உடன்பாடாக டாக்டர் அம்பேத்கர் தெரிவித்த காரணங்கள், எனக்குப் பதிலளிக்கும் தேவையை உண்டாக்கிவிட்டது என்று நான் நினைக்கிறேன். அவர், இந்தியமயமாக்கம் குறித்த பொருள் தொடர்பாகத் தனது வாதத்தினை மிக உறுதியாக எடுத்துரைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். பொருத்தமானவர்கள் தேர்வுசெய்யப்படுவதை ஊக்குவிப்பதற்குத் தேவைப்படலாகும் சூழ்நிலைகள் எவை? என்று அந்தக் குறிப்புச் சொல்கிறது. இது மிகவும் முக்கியமான ஒன்று. குழு, தற்போதிருக்கும் நிபந்தனைகள் சிறந்தவர்களை ஈர்ப்பதற்கு ஏதுவாக மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் மாற்றப்படுதல் வேண்டும் என்று நினைக்குமானால், அப்போது அந்தப் பொருள் குறித்த கூற்றினை, அக்குழு பரிசீலனை செய்யும். மேலும் அதனால் குழு ஒன்றை அமைப்பது தேவையான ஒன்றாக இருக்கும், எதிர்கால இந்திய அரசாங்கம், அந்தப் பொருட்பாட்டினைக் கவனித்துக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டது அதன் மற்றொரு இயல்பாகும். மேலும், அப்போது எழக்கூடிய சூழ்நிலைகளுக்கு ஏற்றவரிசையில் தேவைப்படக்கூடியவற்றைப் பரிசீலனை செய்கையில், இருந்துவரும் அமைப்புமுறையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கும் வகையில் அமைச்சர்கள் எல்லாவற்றையும் செய்வார்கள்; அதாவது இந்தியாவின் எதிர்கால அரசாங்கம் அடிப்படையிலேயே மாற்றப்பட்டுவிடும் என்றவொரு கருத்து இருப்பதை நினைத்து நான் அஞ்சுகிறேன். நாம் அதனை எவ்வளவுக்கு விரைவில் மறக்கிறமோ நமக்கு அவ்வளவுக்கு நல்லது. மேலும் நாம் இந்தப் பணியின் நிபந்தனைகள் பற்றிய நமது கருத்தோட்டத்தில் மிகவும் சரியாக இருப்போம்.

அதன்பின்னர், மத்திய அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்டதொரு பொறுப்பு மட்டுமே இருந்துவரும் என்பதை நாம் அறிவோம்; அமைச்சர்களின் பொறுப்புக் கட்டுப்படுத்தப்பட்டுவிடும்; எனவே நாம் கடந்த கால அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, எதிர்கால இந்திய அரசாங்கம், வெறுங்கையோடு விட்டுவிடப்படாமல் இருப்பதற்காகச் சில வழிகாட்டு நெறிமுறைகளை அதற்கு அளிக்கப்படுதல் வேண்டும். இது கூட்ட நடவடிக்கையைக் குறித்த ஒன்று, நான் 6வது இனத்தின் இரண்டு பகுதிகளுக்கும் எனது உடன்பாடான பதிலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★ ★ ★

** டாக்டர் அம்பேத்கர்:* நீங்கள் அறிமுகப்படுத்த முயலும் எழுத்துவடிவிலான அடிப்படை உரிமைகள் பற்றிய பிரச்சினையில் எழுந்துவரும் சிக்கல் ஒன்றினை எடுத்துக் காட்டுகிறேன். அந்தக் கருத்து இதுதான். நீங்கள், சொற்கள் எவ்வாறிருப்பினும், உரிய மற்றும் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கும் வகையில் பணிகளுக்கு ஆளெடுப்பதற்கான பணிப்புரை ஒன்றை பொதுப் பணிகளுக்கு நீங்கள் இடுகிறீர்கள் அதன் பொருள் இதுதான்: அதாவது குழு, வேறுவகையில் பணிகளுக்குள் வரமுடியாத சமூக இனத்திற்கு அந்தச் சமூகத்தின் இடஒதுக்கீட்டை நிறைவு செய்வதற்காகப் பல்வேறு சமூக இனங்களுக்கு இடையே தேர்ந்தெடுக்கப்படும் உரிமையுடையதாக இருக்கும். அதன் பொருள், அக்குழு (அதன் உறுப்பினர்கள்), இதுவரையில் பொதுப்பணிக்கு ஆளெடுக்கப்பட்டிருக்காத பிற சமூக இனங்களின் நியாயமானதும் போதுமானதுமான பிரதிநிதித்துவக் கோரிக்கையை ஏற்றுச் சரி செய்வதன் பொருட்டுப் பிற சமூக உறுப்பினர்களை நீக்குவதாக இருத்தல் வேண்டும் என்பதாகும். மேலும் நீங்கள், ஒவ்வொரு சமூகத்தின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அடிப்படை உரிமையை வைத்துக் கொண்டு பார்ப்பீர்களானால், அது அரசுப்பணிகள் தேர்வாணைக் குழுவிற்குச் சிக்கலை உருவாக்கும்; குழப்பத்தை உண்டாக்கிவிடும், ஏனென்றால், இந்த விதமான அடிப்படை உரிமையைப் பெற்றுள்ள ஒருவன், நீங்கள் வேறுசில சமுதாயத்தின் வேறுசில உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதன் வாயிலாக எனக்குக் குந்தகம் விளைவித்து விட்டீர்கள்'' என்று கூறலாம். இதுவே நான் கருதும் சிக்கலாம்.

*சர் சிமன்லால் செதல்வாட்:* அடிப்படை உரிமைகள் பற்றிய இந்த விளக்கமான பேச்சு, சமயம், சாதி அல்லது சமயப்பிரிவினங்களின் காரணமாகத் தகுதியின்மை எதுவும் இருத்தல் கூடாது'' என்று இந்திய அரசாங்கத்தைத் தனது முடியாட்சியின் கீழ்க் கொண்டுவந்தபோது, விக்டோரியா பேரரசியார் வெளியிட்ட பேரறிக்கையில் விளம்பப்பட்டதுதான் இங்குத் திருப்பிக் கூறப்பட்டது என்று எனக்குத் தோன்றுகிறது. இது அப்போது வெளியிடப்பட்ட பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

*ராஜா நரேந்திர நாத்:* அது நடைமுறைச் சிக்கலைத் தீர்ப்பதாக இல்லையே.

*தலைவர்:* அடிப்படை உரிமை முன்னரே இருக்கின்றதென்பதால், அடிப்படை உரிமைகள் அனைத்தையும் திரும்பச் சொல்வது தேவையாகுமா? சர் சிமன்லால் அவர்கள் முன்மொழிந்துள்ள அந்த இரண்டு கருத்துக்களையும் நம்து அறிக்கையில் ஏற்றுக் கொண்

* துணைக்குழு எண் VIII (பணிகள்) இன் கூட்ட நடவடிக்கைகள். பக் 111-13.

டிருப்போமானால் மற்றும் அடிப்படை உரிமைகள் குறித்து பிரகடனத்தில் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால், இந்தத் துணைக் குழு மனநிறைவு கொண்டதாக ஆகிவிடுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* அரசுப்பணியாளர்த் தேர்வுக்குழு, ஆட்களைத் தேர்வுசெய்தல் தொடர்பாக உள்ளூர் அரசாங்கத்தினால் முழுவதுமாகத் திரிந்துபோவதற்கு எதிராக நின்று காப்பாற்ற வேண்டியது மட்டும் நமது கடமையாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசுப் பணியைாளர் தேர்வுக்குழு அதன் அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிராக நாம் காத்து நிற்பதும் நமக்குரிய செயலாகவே எனக்குத் தோன்றுகிறது. நான் இந்தக் கருத்தின் மீது ஒருவாறு உறுதியாக இருக்கிறேன். அரசுப் பணியாளர் குழு என்பது மிகக் குறைந்த பணியாளர்களைக் கொண்டிருப்பதற்கு உட்பட்டது: எனவே நாம், அரசுப் பணியாளர்த் தேர்வுக்குழுவானது இந்த நாட்டில் இருக்கும் பல்வேறு சமூகத்தினருக்கும் சார்பாக இருப்பதற்கு வகை செய்ய முடியாது. அரசுப்பணியாளர்த் தேர்வாணைக்குழு ஒருசில சமூகப் பிரிவினரின் மூலமாக மட்டுமே அமைக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. மேலும், மனித இயல்பு அவ்வாறிருப்பதால் அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழுத் தன் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி விடுமோ என்று எண்ணி அஞ்சுகிறேன்.

*திரு. மோடி:* அதற்குத் தீர்வு தான் என்ன?

*டாக்டர் அம்பேத்கர்:* அதற்கு ஒரே தீர்வு, சட்டமன்றப் பேரவை அரசுப்பணியாளர் தேர்வினைக் குழுவின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து அதனை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் உடையதாக இருப்பதே ஆகும், எடுத்துக் காட்டிற்காக—

*சர் சிமன்லால் செதல்வாட்:* அது முழுத்திட்டத்தையும் தோற்கடித்து விடும்.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்த வழிமுறை விரும்பத்தக்கதாக இல்லை என்றால், இதன் மீது வேறுசில வழிமுறைகளும் வேறு சில முறைகளும் தெரிவிக்கப்படுமானால் நான் அவற்றை வரவேற்பேன். ஆனால், தன்னுடைய சமூக இனத்தின் மீது மட்டும் அக்கறை கொண்டும் மற்றவர்களின் மீது அக்கறை இல்லாமலும் அமையக்கூடிய அத்தகைய அரசுப்பணியாளர்த் தேர்வுக் குழுவினைப் பெறுவது என்பது பயன்தராத ஒன்று என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

★ ★ ★ ★ ★

*சர் சிமன்லால் செதல்வாட்:* அரசுப் பணியாளர்த் தேர்வுக் குழு, பல்வேறு சமூக இனத்திற்கும் நியாயமானதொரு பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று வகுத்ததன் மீது, ஆளுநருக்கு

அதிகாரம் வழங்கப்படுதல் வேண்டும். அவர் தமக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரத்தைக் கொண்டு அத்தகைய நியாயமானதொரு பிரதிநிதித்துவம் கைவரப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர்: அப்படியானால், 2 ஆவது கூறில், ஆளுநரால் வழங்கப்படக் கூடிய அதிகார அறிவுரைகளுக்கு உட்பட்டு அது இருக்க வேண்டும் என்று உரிமை செய்யப்படுதல் வேண்டும்.

சர் சிமன்லால் செதல்வாட்: அது ஆளுநருக்கு அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுப்பதாக இருக்கும். நீங்கள் விரும்புவதெல் லாம், பல்வேறு சமூக இனங்களுக்குமான நியாயமானதொரு பிரதிநிதித்துவத்தைப் பெற வேண்டும்; அரசுப்பணியாளர்த் தேர்வுக்குழு அத்தகைய பிரதிநிதித்துவத்தை வழங்க நாங்கள் வகை செய்திருப்பதில் இருந்து அந்த நியாயமான பிரதிநிதித்துவம் உண்மையில் உறுதியுடன் பெறப்பட்டிருப்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

திரு. ஜாஃபருல்லா கான்: ஆளுநர் அதனை எவ்வாறு கண் காணிப்பார்?

தலைவர்: ஓர் இடைநிலை வழியாக அமைகிற வகையில் மேஜர் ஸ்டான்லி இந்த யோசனைத் தெரிவித்திருக்கிறார். அவர் பின்வரும் சொற்கள் தரும் பொருளினை ஒத்துச் செல்லுமாறு தனது யோசனையைத் தெரிவிக்கிறார்; 2 ஆவது கூறின் இறுதி யில் அதனைப் புகுத்திக் கொள்ளலாம்: ''அரசுப் பணியாளர்த் தேர்வுக் குழுவின் இந்தப் பகுதியின் கடமையானது, மாநில அரசுப்பணியாளர்த் தேர்வுக்குழுவினைப் பொறுத்த வரையில் ஆளுநரின் அவ்வப்போதைய கண்காணிப்புக்கும், மத்திய அரசுப் பணியாளர்த் தேர்வுக் குழுவினைப் பொறுத்தவரையில் தலைமை ஆளுநரின் அவ்வப்போதைய கண்காணிப்புக்கும் உட்பட்டு இருத் தல் வேண்டும்; விரும்பிய பலனை எய்துவதற்கு அவசியமான ஆணைகளைப் பிறப்பிக்க இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

டாக்டர் அம்பேத்கர்: ஆம்.

சர் சமன்லால் செதல்வாட்: அதுவே சரி. நான் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக உள்ளேன்.

★ ★ ★ ★ ★

திரு. சிவராவ்: அரசுப் பணியாளர்த் தேர்வுக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது பதவிகாலத்தில் நன்னடத்தை உள்ளவராக இருந்தால் மட்டும் பதவி வகிக்கலாம். மேலும் அரசுப் பணியாளர்த் தேர்வுக்குழுவின் தலைவரும் பிற உறுப் பினர்களும் மத்தியச் சட்டமன்றத்தில் தலைமை ஆளுநரால் உரை நிகழ்த்தப்படுவதன் பேரில் அல்லாமலும், மற்றும் மாநிலத்தின்

அரசுப் பணியாளர்த் தேர்வுக் குழுவினைப் பொறுத்த வரையில், தொடர்புடைய மாகாணத்தின் ஆளுநரால் அந்த மாநிலச் சட்ட மன்றத்தில் உரை நிகழ்த்துவதன் பேரில் அல்லாமலும் அவர்களது பதவியில் இருந்து நீக்கப்படுதல் ஆகாது.

*தலைவர்:* திரு. ராவ் அவர்கள் புதிய கூறு ஒன்றைத் தெரிவித்து அதனை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். மொழி பற்றிய பிரச்சினையில் நாம் சிக்கிக் கொள்வதில்லை. அதன் சாராம்சம் என்னவென்றால், ஒரு புதிய பிரிவைச் சேர்க்க வேண்டும். அதன்படி, நன்னடத்தை உள்ளவராக இருந்தால் மட்டும் அப் பதவியில் இருக்கலாம். அரசுப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந் தெடுக்கும் தேர்வாணைக் குழுவின் சாதாரண உறுப்பினர் அல்லது ஆணைக்குழுவின் தலைவரைப் பதவி நிச்சயம் செய்ய வேண்டு மானால், சட்டமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்களுக்கு அல்லது கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய முடியும்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் அதனை ஆதரிக்கிறேன்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் அம்பேத்கர்:* திரு. சிவ ராவ் அவர்களால் எடுக்கப் பட்ட கருத்துநிலை, அதாவது அரசுப் பணியாளர்த் தேர்வுக்குழு உறுப்பினர்களை நீக்குதல் குறித்த விஷயமானது ஆளுநரிடமோ அல்லது தலைமை ஆளுநரிடமோ மட்டுமே முழுவதுமாக அடைந்து இருக்க வேண்டும். சட்டமன்றத்தில் பெரும்பான்மையினரால் தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் காரணமாக மட்டுமே அவர்கள் நீக்கப்படுவதற்கு இட்டுச் செல்வது ஆகாது. ஆனால் ஆளுநரோ அல்லது தலைமை ஆளுநரோ அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்துப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

*ராஜா நரேந்திர நாத்:* பணியமர்வுகள் குறித்துச் சட்டமன்றம் தலையிடுவதை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* நீதிபதிகளில் ஊழல் செய்பவர்களும் இருக்கக் கூடும் என்பதைப் போல ஒரு மனிதனும் ஊழல் புரியும் ஒழுக்கங்கெட்டவனாக இருக்கக் கூடும்; அதற்குத் தீர்வு ஒரு போதும் இருக்கக் கூடாதா என்ன? அத்தகைய ஆட்களை நீக்கு வதற்கு வழி எதுவும் தான் இல்லையா? அமைச்சர்கள் ஊழலான வர்களாக இருக்கக் கூடும் என்று நாம் உணர்கின்ற போது அவர் களிடமிருந்து மானியம் வழங்கும் உரிமையை நாம் நீக்குகிறோம். அரசுப் பணியாளர்த் தேர்வுக்குழு ஊழல்ாக இருக்கக் கூடுமானால், அதன் உறுப்பினர் களில் எவரையும் நீக்குவதற்கு நமக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்னும் பட்சத்தில், அப்போது நிலைமை என்ன?

*திரு. ஷாஃபத் அகமது கான்:* டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அரசுப்பணியாளர்த் தேர்வுக் குழுவின் உறுப்பினர் ஒருவரை ஆளுநரால் நீக்க முடியும் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அது அவ்வாறு இருப்பின், சட்டமன்றப் பேருரையினால் ஏற்படப் போகும் பயன் என்ன? ஆட்சித்துறை விவகாரங்களில் தலையிடுகிற சட்டமன்றத்தைப் பெற்றிருப்பது மிகவும் ஆபத்தானது. சட்டமன்றத்திற்கென கருத்தின்றி வகுக்கப்படுகிற பணிகள் முற்றிலுமாக ஆட்சித்துறையின் பணிகளில் இருந்து தனியே பிரித்து வைக்கப்படுதல் வேண்டும். மேலும் இதுபோன்ற விவகாரங்கள் குறித்த இரண்டு பணிகளையும் ஒன்றாக நாம் கலந்துவிடுவோமானால், ஆயிரக்கணக்கில் பணியமர்வுகள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டு விடக்கூடுமிடத்து நாம், இடையூறுகளைத் தாமாகவே வரவேற்பதுடன் இதுகுறித்து அரசுப் பணியாளர்த் தேர்வுக் குழுவின் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தையும் பயனற்றதாகவும் முற்றிலும் வீணானதாகவும் செய்தவர்களாவோம் என்று நான் நினைக்கிறேன்.

*தலைவர்:* இது துணைக்குழுவின் விருப்பத்திற்கு இணங்க இருக்கக் கூடுமா?—இப்போது செய்யப்பட்ட திறனாய்வு நம்பத் தகுந்தது என்று நான் நினைக்கிறேன்—அதாவது அரசுப்பணியாளர்த் தேர்வுக்குழுவின் உறுப்பினர் அவருடைய நன்னடத்தையின் போது அவரது பதவியை வகிக்கிறார்; மேலும், அவர் ஆளுநராலோ அல்லது தலைமை ஆளுநராலோ நீக்கப்படக் கூடியவர் என்று அமைகிற வகையில் கூறு ஒன்றினைச் சேர்க்கலாம். (ஏற்றுக் கொள்ளப்பட்டது)

*சர் பிரொவாஷ் சந்தர் மிட்டர்:* இதற்கென்றே தனித்தச் சட்டம் எதுவும் புதிதாகக் கொண்டுவரப்படாத வரையிலும், நான் திருப்தி அடைகிறேன்.

*தலைவர்:* அந்தக் கூடுதலான திருத்தம் துணைக்குழுவின் விருப்பத்திற்கு இணங்க இருக்கும் அல்லவா? (ஒத்துக் கொள்ளப் பட்டது) நாம் அதனை அறிக்கை நிலையில் பரிசீலிக்கலாம்; நாம் தற்போது அதனைத் தற்காலிகமாகப் பரிசீலனை செய்கிறோம்.

நாம் தற்போது கர்னல் கித்னேயின் கருத்தினைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம்.

*டாக்டர் அம்பேத்கர்:* கர்னல் கித்னேயின் கருத்துரைக்குச் செல்ல முற்படும் முன்னர், அதன் வரைவு முதலில் படித்துக் காட்டப்பட்ட போது, பணியாளர்த் தேர்வுக் குழுவின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய குழுவொன்றின் உறுப்பினராக இருப்பது நீங்கிப்போன பின்னர் பேரரசின் கீழ்ப் பணிபுரிவதற்குத் தகுதியடையவர்களாக இருக்கமாட்டார்கள்' என்று அதன் கூறு ஒன்றில் குறிப்பிடப்பட்டது படித்துக் காட்டப்பட்டது.

*தலைவர்:* தற்போது நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புவது உங்கள் கருத்து என்ன என்பதுதான். எனவே நீங்கள் மாநில

நிர்வாகத்தின் கீழ் வைக்கப்பட வேண்டும் என்ற சொற்களை நீக்கி விடுங்கள். ''ஒரு போதும் அனைத்திந்திய அளவிலான ஆளெடுத் தல் முறையாக இருக்காது'' என்னும் சொற்களுக்குப் பதிலாகப் புகுத்திக் கொள்ளுங்கள்.''

''மற்றும் இந்த இரண்டு பணிகள் குறித்துச் சிறப்பான பரிந்துரை எதனையும் செய்வது தேவையென நான் நினைக்க வில்லை.''

''அனைத்திந்திய அளவிலான பணிகளுக்கு ஆளெடுப்ப தானது, இந்திய சிவில் பணி மற்றும் இந்திய காவல்துறைக்கு (திரு. சிவராவ் அவர்கள் மறுப்பு அறிவிக்கிறார்) தொடர்ந்து நீடித்து வருதல் வேண்டும்''

மற்றும் அவர் ஒருவர் மட்டுமா அல்லது அவருடன் வேறு எவரும் இருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* அந்த இரண்டு பணிகளும் ஐரோப்பியர் களுக்கு இருப்பது நீங்கலாக எஞ்சியிருக்கும் மற்றவை மாநில மயமாக்கப்படுதல் வேண்டும் என்பது எனது தீர்மானம் ஆகும்.

*தலைவர்:* அது தனியாக அமைக்கப்படுதல் வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ''திரு. சிவராவ் அவர்கள் இந்த முடிவில் இருந்து விலகி நிற்கிறார். மேலும் அனைத்துப் பணிகளும் மாநில மயமாக்கப்படுதல் (மாநிலத்திடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்) என்றும் விரும்புகிறார்.'' ''நீதித்துறை அலுவலர்களுக்கு ஆளெடுப் பது இனிமேலும் இந்திய சிவில் பணிகளில் இருந்து எடுக்கப் படுதல் கூடாது என்பது சில உறுப்பினர்களின் கருத்து'' என் பதை இங்கு யோசனையாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் அம்பேத்கர்:* அந்த இரண்டு வகைப் பணிகளுமே மாநிலப் பணியாக இருப்பதை நான் ஆதரிக்கிறேன். ஆனால், அந்த இரண்டு பணிகளிலும் ஐரோப்பியர்களுக்குச் சாதகமான விலக்களிப்பு ஒன்றைக் கொண்டுவரத் தயாராக இருக்கிறேன்.

*திரு. ஜாஃபருல்லா கான்:* நான் டாக்டர் அம்பேத்கருடன் உடன்படுகிறேன்.

*சர்தார் சம்பூரண் சிங்:* நானும் அந்தக் கருத்தினை ஆதரிக் கிறேன்.

*தலைவர்:* நன்றி. அது நிச்சயமாக அறிக்யையில் இடம்பெறும்.

*டாக்டர் அம்பேத்கர்:* 2 வது பக்கத்திலுள்ள பத்தியின் தொடக்கத்தில் ''அத்தகைய அரசாங்கம், அது கோருமானால்,

சந்தேகம் இல்லை'' என்று அவ்வாறு தொடர்ந்து வருவதில், நீங்கள் பொதுப்பணித் துறைகள் முதலியவற்றை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் திருத்தி அமைத்தல் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். இன்று காலையில் நடந்த விவாதங்களைக் கருத்தில் கொண்டு, ஊதியத்தினை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினையும் சேர்த்துக் கொள்ளப்படுமா என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?

*தலைவர்:* அச்சொற்களுக்குள்ளேயே அது வருவதாக நான் நினைக்கிறேன்.

## 4 வது அமர்வு — ஜனவரி 31, 1931

* *ஜெட்லாண்டு பிரபு:* இல்லை. உள்ளூர் ஆட்சி அதிகார வரம்பினை நீங்கள் திரும்பப் பெற முடியாது. ஏனென்றால் உள்ளூர் ஆட்சி அதன் அலுவலர்களைவிட மேலானதாக இருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும். ஆனால், நடைமுறையில் தொடர்ந்து அது பின்பற்றப்படத்தக்கதாய் வகுக்கப்பட வேண்டும். இக் குழுவின் முன்னர் நான் எடுத்துரைக்க விரும்பியவற்றை இது தன்னுள் அடக்குகிறது என்று நினைக்கிறேன். 1861 ஆம் ஆண்டுக் காவல்துறைச் சட்டத்தின்படி காவல்துறைத் தலைவரிடம் தற்போதுள்ள அதிகாரங்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை உறுதிசெய்துகொள்வதே முக்கியமான கருத்தாகும். மேலும், மாநிலத்தில் காவல்துறை மன்றம் (Police Council) ஒன்று அமைக்கப்படுதல் போன்று வேறு சில யோசனைகளையும் இந்தத் துணைக்குழுவின் முன் பரிசீலனைக்காக எடுத்துரைக்க இருக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* என்னை அனுமதிப்பீர்களானால், தகவலுக்காகக் கேள்வி ஒன்றை எழுப்ப விரும்புகிறேன். காவல்துறைத் தலைவரின் (Inspector General) தகுதியினைச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று பெருமகனார் மார்க்கஸ் விழைகிறாரா? அல்லது அந்த அதிகார நிலை, காவல்துறைச் சட்டத்தின்படி தற்போதுள்ளதுபோல் அப்படியே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரா? அலுவலர்களுக்குச் சட்டப்படியான ஒரு சில உரிமைகளும் கடமைப்பொறுப்புகளும் இருப்பதைப்போன்று, காவல்துறை அலுவலர்களும் சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறாரா?

*லார்டு ஜெட்லண்டு:* ஆம்;

*சர் பிரொவாஷ் சந்தர் மிட்டர்:* நாடாளுமன்றச் சட்டத்தின் மூலமாகவா?

---

* துணைக்குழு எண் VIII (பணிகள்) ப. 181-82.

*லார்டு ஜெட்லண்டு:* அதுதான் சரி. தற்போது காவல்துறைத் தலைவர் இந்த அதிகாரங்களைக் காவல்துறை எனும் சட்டத்தினால் பெற்றிருக்கிறார்.

*டாக்டர் அம்பேத்கர்:* காவல்துறைச் சட்டத்தைப் பொறுத்தவரை அது வேறான விஷயம். அது உள்ளூர்ச் சட்டமன்றத்தினால் கொண்டுவரப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டதாகும். காவல் துறைத் தலைவரின் அதிகார நிலை சில கடமைகளைப் புரிந்து வரும் அலுவலர் ஒருவரது, அமைச்சர் அல்லது உள்ளூர் அரசாங் கத்தின் தலையீட்டுக்கு ஆளாகாமல் இருக்கிற அலுவலர் ஒருவரது நிலையோடு ஒப்பிட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று விரும்பு கிறீர்களா?

*லார்டு ஜெட்லண்டு:* அதன் விளைவு அதுதான். அதுவே என் கருத்து. தற்போது காவல்துறைத் தலைரிடம் உள்ள அதிகாரங்கள் தக்கவைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும் என்றும் நினைக் கிறேன்.

*சர் கவாஸ்ஜி ஜஹாங்கீர்:* எந்த அதிகாரத்தின்படி? காவல் துறைச் சட்டத்தினாலா அல்லது இந்திய அரசாங்கச் சட்டத்தி னாலா?

*சர் சிமன்லால் செதல்வாட்:* இந்தச் சட்டத்தின் வகைகள் (ஷரத்துக்கள்) உள்ளூர்ச் சட்டமன்றத்தின் அல்லது சட்டமன்றம் ஒன்றின் வாக்கெடுப்பின் மூலம் மாற்றம் செய்யப்படுவதற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

*லார்டு ஜெட்லண்டு:* ஆம்; அது கூட்டாட்சி அரசாங்கத்தின் சட்டமாக இருத்தல் வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

*திரு. ஜாஃபருல்லா கான்:* இந்தச் சட்டம் தலைமை ஆளுநரின் (Governor General) இசைவுடன் அல்லாமல், மாநில அரசாங்கம் ஒன்றினால் நீக்கப்படவோ, திருத்தப்படவோ அல்லது மாற்றம் செய்யப்படவோ முடியாதிருக்கிற சட்டங்களின் பட்டியலில் ஒன்றாக இதைச் சேர்த்து, காவல்துறைச் சட்டத்துடன் இது வைக்கப்படலாம்.

*டாக்டர் அம்பேத்கர்:* அது இன்றைய நிலைமையாக இருக்கக் கூடும்; ஏனென்றால் அந்தச் சட்டம் மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றி திருத்தம் செய்வதற்கு முடியாது.

★ ★ ★ ★ ★

* *திரு. ஜாஃபருல்லா கான்:* எதையேனும் நான் சேர்க்கக் கூடுமானால், அது இதுதான். துணைக்குழுக்களாகிய எண் Iம் IIம் இவற்றினால் அமைக்கப்பட்டக் கூட்டாட்சி அமைப்பு துணைக் குழு, கூட்டுத் துணை குழு ஆகிய இரண்டும் முக்கியத்துவமில்லாத

* துணைக்குழு எண் VIII (பணிகள்) ப. 186-88

பெருவாரியான எண்ணிக்கையிலான சட்டங்களைப் பிரிவு 80(3) (h) இன் கீழ் உள்ள அந்தப் பட்டியலில் கொண்டுவர வேண்டுமென்று யோசனை தெரிவித்துள்ளதை, இக் குழுவின் உறுப்பினர்களுக்கு ஒருவேளை தெரிந்திருக்கவில்லையோ என்பது போல் தெரிகிறது. மேலும், நாம் காவல்துறைச் சட்டத்தை அந்தப் பட்டியலின் கீழ்க் கொண்டுவந்தோமானால், அது எந்தவிதக கோட்பாடுகளையும் மீறுவதாக ஆகாது.

*டாக்டர் அம்பேத்கர்:* அவர்களுடன் பொதுவாக எனக்கு உடன்பாடு உண்டு. காவல்துறைச் சட்டம் முறைப்படி கொண்டு வரப்படாமல் இருப்பதற்குக் காரணம் இதுதான். அந்தச் சட்டம் ஒதுக்கப்பட்ட சட்டம்; ஏனென்றால், இதனை ஆராயுமிடத்து இந்திய அரசாங்கம்தான் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறையின் மீது முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கிறது; மேலும் சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை மாற்றத்திற்கு உள்ளாகிற போது, ஒட்டுமொத்தத்தில் நிலைமை வேறாக இருக்கும். தற்போதுள்ள பாதுகாப்புகள் தொடர்ந்து நீடித்து இருக்க வேண்டிய அவசியத்தை பரிசீலனை செய்வது அவசியம் என நான் நினைக்கிறேன். நான், தனிப்பட்ட முறையில், காவல்துறைச் சட்டம் பட்டியலில் சேர்க்கப் பட வேண்டும் என்ற கருத்தை ஆதரிக்கிறேன். அதற்குத் தற்போது கவர்னர்-ஜெனரல் அல்லது இந்திய அரசாங்கத்தின் முந்தைய ஒப்புதல் தேவைப்படுவதாக இருக்கிறது.

காவல்துறை, சட்டம் மற்றும் ஒழுங்குத் துறை பிரச்சினை குறித்து நான் மற்றுமொரு கருத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். அந்தக் கருத்து மாநில அரசியலமைப்புத் துணைக் குழுவிலும் என்னால் எழுப்பப்பட்டது. அந்தப் பிரச்சினை, எதிர்கால மாநில அரசாங்கங்களின் பொறுப்பின் பார்வையில் இருந்து பரிசீலனை செய்யப்பட்டதுதான். இந்தக் கருத்து மாநிலங்களில் இருக்கும் பல்வேறு சிறுபான்மையினரின் நோக்கெல்லையில் இருந்தும், சமூகக் கலவர நிகழ்ச்சிகளில் எழக்கூடிய அவசரக் காலங்களிலும் அத்தகைய பிற அவசர நிலைகளிலும் பரிசீலிக்கப் படுதல் வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு இனக் கலவரம் நடைபெறுகிறபோது, பல்வேறு மாநிலங்களில் இருக்கும் சிறுபான்மையினர்கள் எந்த இனத்தைச் சேர்ந்த எந்த அலுவலர் அந்தக் குறிப்பிட்ட பகுதியில் சட்டம் மற்றும் ஒழுங்கினை நிர்வகிக்கப்போகிறார் என்று அறிந்து கொள்வது உண்மையிலேயே அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. காவல்துறை அதிகாரிகள் அனைவரும் ஒருசார்புடையவர்கள் என்பதற்காகவும் ஒரு இனத்திற்கோ அல்லது மற்றொன்றுக்கோ சலுகை காட்டுகிறார்கள் என்பதற்காகவும் குற்றம் சாட்டப் பட்டு வருகிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்தக் குற்றச்சாட்டில் போதிய அடிப்படை நியாயம் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் அந்தக் குறிப்பிட்ட பகுதிகளில் சட்டத்தையும்

ஒழுங்கையும் செயற்படுத்துகிற அதிகாரிகள் ஓரவஞ்சனை காட்டு கிறார்கள் என்பதற்கு நிகழ்சிகள் சான்றுகளாக உள்ளன. காவல் துறை அதிகாரிகளைப் பணியிட மாற்றம் செய்வது அவசர நிலைகளிலேனும், அமைச்சர்களிடம் இருக்கக்கூடாது என்பது சிறுபான்மையினர் பாதுகாப்பு நலனுக்கு மிகவும் அவசியமான ஒன்று என்று நான் நினைக்கிறேன். அந்த மாநிலத்தின் பெரும் பான்மையான இனத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடிய அமைச்சர் ஒருவர், அவர் சேர்ந்திருக்கிற அந்தக் குறிப்பிட்ட இனத்திற்கு ஆதரவாக இல்லாத காவல்துறை அதிகாரியைக் குறிப்பிட்ட நிகழ்ச்சி காரணமாக மாற்றிவிடக் கூடும்.

*திரு. ஜாஃபருல்லா கான்:* சாதாரணமாக காவல்துறைத் தலைவர் அதனைச் செய்கிறார்.

*டாக்டர் அம்பேத்கர்:* காவல்துறை அதிகாரிகளின் மாறுதல் காரணமாகப் பெரியதொரு குழப்பமே பம்பாய் மாநிலத்தில் உருவாக்கப்பட்டது என்பதை நான் அறிவேன். அந்த இடமாற்றம் காவல்துறை ஆய்வாளரால் செய்யப்பட்டதா அல்லது பொறுப்பி லிருந்த அதிகாரியினால் செய்யப்பட்டதா என்பது எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், எதிர்கால இந்தியாவின் அரசியலமைப்பில் இதற்குத் தேவையான வகை செய்வது மிகப் பெரியதொரு பாதுகாப்பாக இருக்கும் என்று நான் நினைக் கிறேன். என்னுடைய திட்டவட்டமான கருத்து இதுதான். அதாவது இனக் கலவரமோ அல்லது குழப்பமோ ஏற்படுகிற இடத்தில், அவசர நிலைமையில் பல்வேறு உள்ளூர் பகுதிகளில் காவல்துறை அமைச்சர்களின் அதிகாரங்களை விட ஆளுநர்களுக்கு மேலான அதிகாரங்கள் இருத்தல் வேண்டும் என்பதுதான்.

## 5 வது அமர்வு — ஜனவரி 12, 1931

* *தலைவர்:* டாக்டர் அம்பேத்கர், திரு. ஜாஃபருல்லா கான், சர்தார் சம்பூரண் சிங் ஆகியோர் இந்திய ஆட்சிப் (சமூக) பொதுப்பணிகளில், ஐரோப்பியர்கள் இருப்பது நீங்கலாக, அந்தப் பணிக்கு அனைத்திந்திய அளவில் ஆளெடுப்பதற்கு ஆதரவு நல்காதவர்களாக இருக்கிறார்கள். நீதித்துறை அலுவலர்களுக்கு ஆளெடுப்பது இனிமேலும் இந்திய பொதுப்பணியில் (Civil) இருந்து செய்யப்படக் கூடாது என்று சில உறுப்பினர்கள் கருது கிறார்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்திய காவல்துறைப் பணிகளுக்கும் கூட.

* துணைக்குழு எண் VIII (பணிகள்) நடவடிக்கைகள் ப. 198.

*தலைவர்:* நீங்கள் ''இந்தியச் சிவில்பணிகளுக்கும் இந்தியக் காவல்துறைப் பணிகளுக்கும்'' என்று அமைத்திட விரும்புகிறீர்கள் அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம்.

*தலைவர்:* அது திரு. ஜாஃபருல்லா கான் அவர்களுக்கும் பொருந்துகிறது அல்லவா?

*திரு. ஜாஃபருல்லா கான்:* ஆம்.

*தலைவர்:* சர்தார் சம்பூரண் சிங்குக்கும் சேர்த்துத் தானே?

*சர்தார் சம்பூரண் சிங்:* அதுவே சரி.

*தலைவர்:* நான் உங்கள் கருத்துக்களை மட்டுமே பதிவு செய்ய எண்ணுகிறேன். எனவே, ''மற்றும் இந்தியக் காவல்துறைப் பணிகள்'' என்ற சொற்களை அமைக்கிறேன்.

## 6 வது அமர்வு, ஜனவரி 13, 1931

* *டாக்டர் அம்பேத்கர்:* ''பொதுப்பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பணியமர்த்துதல் குறித்துத் தாராளமான கொள்கையைக் கடைபிடிக்கப்படுதல் வேண்டும் என்று துணைக்குழு விரும்புகிறது. மேலும் அது அவர்கள் எந்தெந்தத் துறைகளில் இருந்து தற்போது விலக்கப்பட்டிருக்கிறார்களோ அந்தக் காவல் மற்றும் இராணுவத்துறைகளுக்கு ஆளெடுப்பதும் அவர்களுக்கும் உரியதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பாகப் பரிந்துரை செய்கிறது'' என்று அமைந்த புதிய பத்தி ஒன்றை 4. ஆம் உட்பத்திக்கு பின்னர் சேர்க்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

*திரு. சிந்தாமணி:* அவர்கள் எந்த விதியினாலேனும் விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது வெறும் நடைமுறையினாலா?

*டாக்டர் அம்பேத்கர்:* விதிகளின் மூலமாகத்தான். காவல் துறைப் பணியாளர் தேர்வுக்குழு தாழ்த்தப்பட்ட மக்கள் தகுதியில்லாதவர்கள் என்று வெளிப்படையாகவே வகுத்துள்ளது.

*திரு. சிந்தாமணி:* தாழ்த்தப்பட்ட மக்களைக் காவல் அல்லது இராணுவம் என்ற குறிப்பிட்ட துறைகளில் பணியமர்வு செய்யப் படுதலால் இருந்து விலக்குவதற்கு விதிகள் எவையும் இருக்குமானால், அவை இந்த நாட்டிற்கு நன்மை பயக்கும் விதிகளாக இருக்க முடியாது. சில மாநிலங்களில் அதைப் போன்ற விதிகள் இருக்கக் கூடும். ஆனால் அனைத்து மாநிலங்களிலும் அல்ல.

*டாக்டர் அம்பேத்கர்:* குழு விரும்பினால், என்னுடைய கருத்துரையை பின்வருமாறு முடித்துக் கொள்கிறேன்: ''மற்றும், இதன்பின்னர் தாழ்த்தப்பட்ட மக்களின் தீண்டாமையைக் காரணங் காட்டி அவர்கள் பொதுப்பணிக்கான துறைகள் எதிலிருந்தும்

விலக்கி வைக்கப்படுதல் கூடாது என்று குறிப்பாகப் பரிந்துரைக் கிறது.''

*ராஜா நரேந்திர நாத்:* கூறு (5) (a) அதனை நிச்சயமாக உள்ளடக்குகிறது.

*சர் காவாஸ்ஜி ஜெஹாங்கீர்:* அந்த இன மக்களைப் பணியில் அமர்த்துவது நடைமுறையில் இயலாத காரணத்தினாலேயே அவர்கள் விலக்கிவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதுதான் நிலைமை. இங்கே அதற்கான விவரங்களை விவாதிப்பது நல்லதல்ல. தாழ்த்தப் பட்ட வகுப்பாருக்காகத் தனியானதொரு காவல்துறைப் பிரிவினை நாம் பெற்றிருந்தோமானால் அதனை எதிர்க்கிற அத்தகைய பிரிவைச் சார்ந்த மக்களுள் காவலர்களாகப் பணியாற்றுபவர் களுக்கு அது இன்னும் இடையூறாக இருக்கக் கூடும். இந்த மிகப் பெரிய குறைபாடுடைய நிலைமையை எப்படி நீக்குவது என்பது தெளிவாகத் தெரியவில்லை. நான் கருத்து எதனையும் தெரிவிக்க இயலாது. இதுவரை என்ன செய்யப்பட்டிருக்கிறதோ அதனை டாக்டர் அம்பேத்கர் ஏற்றுக்கொள்வார் என்று நான் நினைக்கும் படி வேண்டா வெறுப்புடன்தான் செயல்பட்டிருக்கிறது. அது வேண்டாத ஒன்றாக இருந்த போதிலும், டாக்டர் அம்பேத்கர் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறாரோ அதனை அவர் வெளிப்படுத்துவதில் எனக்கு எந்தவித மறுப்பும் இல்லை. இதே கருத்தினை நாங்கள் நூற்றுக்கணக்கான வாய்ப்பு களில் எடுத்துக் கூறியிருக்கிறோம்; ஆனால் அவற்றிலிருந்து எந்தப் பயனும் இதுவரை விளையவில்லை. என்னென்ன ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன அவற்றின் வழிகளெல்லாம் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை டாக்டர் அம்பேத்கர் நன்கறிவார். இருந்த போதிலும், நான், அவர் கருதுகிறவாறு அத்தகைய பத்தி ஒன்று சேர்க்கப்படுவதை ஆதரிக்கிறேன். நாம் தொல்லைகளை மேற்கொண்டு அது நடை முறைக்கு ஒத்துவராத கருத்துரை என்பதை அறியலாம். ஆனால் முன்னொரு சந்தர்ப்பத்தில் நீங்கள் குறிப்பிட்டிருக்கிறவாறு நாம் ஒரு குறிக்கோளினை எதிர்நோக்கும் போது, எப்போதும் தருக்க ரீதியாக இருத்தல் கூடாது.

*டாக்டர் அம்பேத்கர்:* காவல், இராணுவம் ஆகிய இரண்டும் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதில் ஆவலுடன் இருக்கிறேன். கிறேன். ஏனென்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தத் துறைகளுக்கு மிகவும் பொருத்தமுடையவர்களாக இருப்பார்கள்.

*தலைவர்:* அந்தக் கருத்து பத்தி 5(a) மற்றும் (b)க்குள் வந்து விட்டது.

*டாக்டர் அம்பேத்கர்:* இதே முறையில் ஆங்கிலோ-இந்திய சமூகமும் கூடச் சேர்க்கப்பட்டுள்ளது. கூறு (4)க்குப் பின் அமையு மாறு பின்வரும் புதிய கூறினை (Clause) முன்மொழிகிறேன்.

''பொதுப்பணிகளில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பணியமர்த்துதல் குறித்துத் தாராளமான கொள்கை கடைபிடிக்கப்படுதல் வேண்டும் என்று துணைக்குழு விரும்புகிறது. அது, மேலும், தற்போது அவர்கள் எந்தெந்தத் துறைகளில் இருந்து விலக்கப்பட்டிருக்கிறார்களோ அந்தக் காவல் மற்றும் இராணுவத் துறைக்கு ஆளெடுப்பது அவர்களுக்கும் உரியதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பாகப் பரிந்துரை செய்கிறது.''

*ராஜா நரேந்திர நாத்:* நானொரு யோசனை தெரிவிக்க இருக்கிறேன்: அதாவது, அதனை இவ்வாறு சேர்த்தல் வேண்டும்: ''சமயம், சாதி அல்லது பாலினம் எவையும் இந்த நாட்டின் பணிகள் எதிலும் ஆள் எவரும் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு எந்த முறையிலும் தகுதிக்குறைபாடாக இருக்கக் கூடாது அல்லது அவருக்குக் கெடுதலாக அமையக் கூடாது.'' நான் இதனைச் சிறப்பானதொரு பரிந்துரை என்பேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* அது பின்னர் வரும்.

*திரு. பாசு:* அம்பேத்கர் அவர்களின் விருப்பம் எந்தத் தகுதிக் குறைபாட்டினால் துன்புறுகிறதோ அந்தக் குறைபாட்டினை நீக்குவதற்காக அவரோடு ஒத்து நிற்கிறேன். மாநிலத்திலும் அதன் நிர்வாக விதிகளில் தகுதிகள் தடைகள் எதுவும் வகுக்கப்பட்டிருக்குமானால், அத்தகைய விதிகள் உடனே நீக்கப்பட வேண்டும். ஆனால், அவர் இந்த விவரத்தை எடுத்துவைத்த விதம்தான் பொதுவாக மிகவும் எல்லோரையும் பாதிக்கிற வகையில் அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக, என்னுடைய மாநிலத்தில், மிகப் பெரும் எண்ணிக்கையிலான பதவிகள் தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்களால் நிரப்பப்பபட்டுள்ளது. இந்த விஷயம் என்னுடைய மாநில்த்தைப் பெரிதும் பாதிப்பதாக இல்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* ''அவர்கள் தற்போது எங்கே விலக்கப் பட்டிருக்கிறார்களோ அங்கே'' என்று சில குறிப்பிட்ட வார்த்தைகளை புகுத்துவதற்கு நான் தயாராக உள்ளேன்.

*ராஜா நரேந்திரநாத்:* காவல்துறைப் பணியமர்வுகளில் இருந்து அவர்களைத் தடுத்துநிறுத்துகிற விதி எதுவும் இல்லை. ஆனால் நடைமுறையில் அவர்கள் பணியமர்த்தப்படுவதில்லை. ஒருமுறை, மன்றத்தின் உறுப்பினர் ஒருவரால் இந்த மக்கள் ஏன் காவல் துறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும், தற்போதிருக்கும் இந்திய அரசாங்கச் சட்டத்தின் 96 ஆம் பிரிவினை மீறுவதாக இது இல்லையா என்று வினா எழுப்பப்பட்ட போது தரப்பட்ட பதில் திருப்தியளிக்குமாறு அமையவில்லை. நான் தெரிவித்திருக்கிற சொற்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட உதவுபவை என்று நினைக்கிறேன். அது பொதுவான விருப்பத்தின் வெளிப்பாடும், பொதுவான பரிந்துரையுமாகும். ஆனால் பொதுவான உணர்ச்சிப்பாங்கின் வெளிப்பாடு, நான் புகுத்த வேண்டு

மென்று தெரிவித்திருக்கும் சொற்களைவிட வலிமையானதாக இருக்காது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*மேஜர் ஸ்டான்வே:* இராணுவப் பணிகள் குறித்த திட்டவட்ட மான குறிப்பானது நிச்சயமாக இந்தக் குழுவின் செயற்பாட் டெல்லைக்கு அப்பாற்பட்டது.

*திரு. மோடி:* இராணுவத் தேவைப்பாடுகள் நினைவில் வைத்துக் கொள்ளப்படும் என்பதை நாம் பரிந்துரை செய்திருக் கிறோம்.

*தலைவர்:* ''மற்றும், குறிப்பாக, அனைத்துப் பணிகளுக்கும் ஆளெடுப்பதானது அவர்களுக்கு உரியதாக இருத்தல் வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது என்று நீங்கள் இதனைச் சொல்லி யிருப்பீர்களானால் ஒரு சிறிதே கருத்து வேறுபாடுடையதையே சொல்லியுள்ளீர்கள் என்று நினைக்கிறேன்.

*திரு. மோடி:* ஆம். அவர்கள் எதிலிருந்து தற்போது விலக்கப் பட்டிருக்கிறார்களோ அதிலிருந்து.

*தலைவர்:* அது, கருத்துவேறுபாட்டினைத் தோற்றுவிக்கும் என்பதால் நான் அதனைச் சொல்லுதல் கூடாது. நீங்கள் சொல்ல விரும்புவதெல்லாம் அனைத்துப் பணிகளுக்கு ஆளெடுப்பது அவர்களுக்கும் உரியதாக இருத்தல் வேண்டும் என்பதுதானே.

*லெஃப்டினென்ட் கலோனல் கித்னே:* அத்தகைய பணியமர்வு எதற்கும் தகுதிக்கேடு எதுவும் இருக்கக்கூடாது.

*தலைவர்:* நான் ஒன்றைச் சுட்டிக் காட்டலாமா? நாம் இந்த அறிக்கையைப் படிப்பதற்குப் புரியும் வண்ணம் அமைக்க வேண் டும் என்ற பட்சத்தில், ஒரே காரணத்தை உள்ளடக்கியிருக்கிற இரண்டு பத்திகளை அடுத்தடுத்து அமைப்போமானால் அதனைச் சிறிதே அலங்கோலமானதாக ஆக்கிவிடக்கூடும். அதனால் மேலும், நாம் அந்தச் சொற்களை வைத்துக் கொள்ள வேண்டுமானால், அவை 5-ஆம் கூறுக்குப் பின்னர் வந்தமையட்டும் என்று நான் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு எடுத்துச் சொல்வேன். நாம், நமது பொதுவான பரிந்துரைகளை 5-ஆம் கூறில் வைப்போம். மேலும், 5-ஆம் கூறின் கடைசியில் ''இந்தப் பரிந்துரையைச் செய்கையில்'' என்பதைச் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அதாவது, 5-ஆம் கூறிலுள்ள பரிந்துரையினது—''துணைக்குழு தாழ்த்தப்பட்ட மக்களின் நேர்வினைக் குறிப்பாகக் கவனத்தில் கொண்டுள்ளது. அவர்கள் விரும்புகிற,'' மற்றும் தொடர்ந்து வருவதை (என்று வருவதாக இருக்கும்).

*டாக்டர் அம்பேத்கர்:* மிகவும் நன்று.

*தலைவர்:* உங்களுக்குப் பிரச்சினை இல்லை எனில், முதலில் 5-ஆம் கூறினை விவாதிப்போம். மேலும் அதைப் போன்ற இன்னும் சிலவற்றை நாம் சேர்த்தாக வேண்டுமா என்பதையும்

காண்போம். எவருக்கேனும் 5-ஆம் கூறின், அது வரையப்பட்டவாறு அதன் மீது தெரிவிக்கக் கருத்துரைகள் எவையும் இருக்கின்றனர்வா?

*ராஜா நரேந்திரநாத்:* அதைத்தான் நான் சொன்னேன். ''தகுதியின்மை'' என்பதற்குப் பின்னர் ''அல்லது எந்த வழியிலும் கெடுதல் ஏற்படக் கூடாது'' என்பதைச் சேர்க்கவேண்டும் என்று நான் யோசனை கூறினேன்.

*தலைவர்:* நான் அதனைப் பின்னர் தெரிவிக்கிறேன். நாம் இப்போது விவாதக்கருத்தினை எடுத்துக் கொள்வோம். நாம் அதற்குப் பின்னர் வருவோம்.

5-ஆம் கூறு நிறைவேற்றப்பட்டதன் பின்னர் நாம், இந்தச் சொற்கள் சேர்க்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் கருத்துத் தெரிவிக்கிறார். அவை பின்வருமாறு. ''உட்குழு இதனால் பரிந்துரைக்கையில், தாழ்த்தப்பட்ட மக்களின் தேர்வினைக் குறிப்பாகக் கவனத்தில் கொண்டிருந்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுப் பணியில் பணியமர்த்தப்படும்போது, தாராளமான கொள்கை கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் காவல்துறை உள்ளடங்கலான அனைத்துப் பணிகளுக்கு ஆளெடுக்கப்படுவதும் அவர்களுக்கு உரியதாக இருக்க வேண்டும் என்றும் அது குறிப்பாகப் பரிந்துரைக்கிறது.'' இதுவே டாக்டர் அம்பேத்கரால் முன்மொழியப்பட்ட திருத்தம்; 5-ஆம் கூறின் முடிவில் சேர்க்கப்பட வேண்டியது.

அதற்கு ஆதாரவாக இருப்பவர்களும் மாறுபட்ட கருத்துடையவர்களும் அவற்றைத் தெரிவிக்கலாம். இது பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுகிறது.

# 8

# முதன்மைக் கூட்டத்தொடரில் (பொது மேலாய்வு)

## எட்டாம் அமர்வு — 19, ஜனவரி 1931

## வருங்கால இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புகளுக்காக வரையறுத்த, உறுதியான சட்டக்காப்பு வாசகங்கள் இடம் பெறக் கோரிக்கை

* *டாக்டர் அம்பேத்கர்:* பிரதமர் அவர்களே, ஒரு சமூகத்தினுடைய அரசியல் வாழ்வை உருவாக்க முயலுகையில் எழக் கூடிய இரண்டு இன்றியமையாத கேள்விகளை இந்த வட்டமேசை மாநாடு கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவற்றில் ஒன்று பொறுப்பான அரசமைப்பு; மற்றொன்று பிரதிநிதித்துவ அரசமைப்பு.

மாநிலங்களில் பொறுப்பான அரசமைப்பு ஏற்பட வேண்டும் என்பது பற்றி நான் அதிகமாகச் சொல்வதற்கு ஏதுமில்லை. இவ்வகையில் அரசியலமைப்புக் குழுவின் அறிக்கையை என் மாறுபாடுகளுடன் ஏற்றுக் கொண்டு ஆதரிக்கிறேன். ஆயின், மத்திய அரசில் அமைய வேண்டிய பொறுப்பான அரசமைப்பு குறித்து நான் வேறுபாடான கருத்தே கொண்டிருக்கிறேன். தற்போது நடைமுறையிலுள்ள அதிகார வர்க்க ஆட்சி முறையில் மாற்றம் உண்டாக்க வேண்டும் என்பதை கூட்டாட்சி முறை அமைப்பு பற்றிய துணைக்குழு கருத்தில் கொள்ளவில்லை என்று சொல்வது முறையாகாது. அதே வேளையில் இந்த மாற்றம் கானல் நீரே தவிர செறிவானதன்று என்றும், இந்த மாற்றம் குறித்த பொறுப்பும் போலியானதே தவிர மெய்யானது அன்று என்றும் நான் கருதுகின்றேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்காமல் மறைப்பதும் நேர்மையாகாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள், செடிக்குத் தாம் விதை விதைத்திருப்பதாகவும், இனிச் செடியைப் பேணி வளர்க்க வேண்டியது நமது கடமை எனவும் கூறினார்கள். இந்த முக்கியமான மாநாட்டினைக் கூட்டுவதற்கு அவர் ஏற்றுள்ள பங்கு பெரிது என்பதை நாம் உணர்ந்திருப்பதால் நாம் உண்மையாகவே மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு மிக நன்றியுடையவர்களாக

---

* வட்ட மேசை மாநாட்டு நடவடிக்கைகள் (1930-31), முதல் கூட்டத்தொடர், பக். 438-41.

உள்ளோம். என்னைப் பொறுத்தவரை நான் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டவன் என்ற போதிலும் அவர் வைத்துள்ள செடி அவர் கூறியது போலத் தழைத்து வளரும் செடி நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில் அவர் விதைத்த விதையோ மலட்டு தானிய வகையிலிருந்து எடுத்தது, அதை அவர் விதைத்துள்ள நிலம் களர் நிலமாகும்.

இந்தியக் கூட்டாட்சியின் எதிர்கால அரசியலமைப்புக் குறித்த என் மனக் கோள்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு ஓர் அறிக்கையாக* அளித்திருக்கிறேன். அவர் தலைமை வகித்த குழு அந்த அறிக்கையை ஆய்ந்து பார்த்ததா என எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் அந்தக் குழுவின் அறிக்கையில் என் அறிக்கையைப் பற்றி எதுவும் குறிப்பு இல்லை. என் அறிக்கையில் நான் தெரிவித்திருக்கும் மனக் கோள்களையே நான் பற்றி நிற்பதால், என் கருத்துகளிலிருந்து பெருமளவில் மாறுபட்டிருக்கும் ஓர் அரசியலமைப்புக்கு நான் என் ஏற்பை அளிக்க இயலாது. உண்மையில் தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டத்தையும் குழு தயாரித்துள்ள கலப்பு அரசியலமைப்புச் சட்டத்தையும் என் முன் வைத்து இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்படிச் சொன்னால் நான் தற்போது வழக்கிலுள்ள முறையையே தேர்ந்தெடுப்பேன். ஆயின், குழுவின் அறிக்கையில் அடங்கியுள்ள அரசியலமைப்புச் சட்டம், இந்த மாநாட்டின் நண்பராக, வழிகாட்டியாக, சிந்தனையாளராக விளங்கும் சர் தேஷ் பகதூர் சாப்ரூ அவர்களுக்குத் திருப்தி அளிப்பதாகவும், இந்திய நாட்டு இளைஞர்களின் பிரதிநிதி எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் திரு. ஜெயகர் அவர்களுக்கு ஏற்புடையதாகவும், இந்திய நாட்டுப் பிராமணரல்லாதார் சார்பாகத் தாம் பேசுவதாகக் கூறிக் கொள்ளும் சர் ஏ. பி. பத்ரோ அவர்களை மகிழ்விப்பதாகவும் இருக்குமானால் அதனை நான் எதிர்ப்பதாக இல்லை. எனவே என்னுடைய நிலை இந்த அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்பதாகவும் இல்லை; அதற்குத் தடையாக இருப்பதாகவும் இல்லை; ஆகவே அது நிறைவடைய வேண்டும் என வாழ்த்துவோரிடம் நான் அதனை ஒப்படைத்துவிட விரும்புகின்றேன்.

மேற்கூறிய போக்கே எனக்கு ஏற்றதாக இருப்பதற்குக் காரணம், வருங்கால இந்தியாவில் அமையவிருக்கும் ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் எதனையும் என் சமூக மக்கள் எனக்கு அளிக்கவில்லை என்பதனாலேயே ஆகும். பொறுப்புள்ள ஆட்சி அமைவதை நான் எதிர்க்காத போதிலும் அத்தகைய அரசமைப்பு உண்மையான பிரதிநிதித்துவ

* மாண்புமிகு மேலவைத் தலைவர் கூட்டாட்சி அமைப்பு பற்றிய துணைக்குழு எண். 1-ன் தலைவராக இருந்தார். டாக்டர் அம்பேத்கர் அக்குழுவின் உறுப்பினராக இருக்கவில்லை. இங்குக் குறிப்பிட்டுள்ள அறிக்கையை அந்தக் குழு ஆய்ந்ததாகத் தெரியவில்லை.

ஆட்சியாக இருக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் நான் என் சமூகத்தாரின் முழு அதிகாரத்தையும் பெற்றிருக்கின்றேன். பிரதிநிதித்துவ ஆட்சி அமைவதற்கு இந்த மாநாடு புரிந்துள்ள சாதனைகளைப் பார்க்கும் போது எனக்கு ஏமாற்றமே ஏற்படுகின்றது. வாக்களிக்கும் உரிமையும், சட்ட மன்றங்களில் அனைத்து வகுப்பாருக்கும் பிரதிநிதித்துவமும் உண்மையான பிரதிநிதித்துவ ஆட்சி அமைப்பினைத் தாங்கி நிற்கவல்ல இரு தூண்களாகும். நேரு அவர்களின் தலைமையில் அமைந்த குழு, வயது வந்தோர் வாக்குரிமையை இந்திய அரசியலமைப்பில் சேர்த்ததும், அரசியலமைப்பில் அவ்வாறு சேர்க்கப்பட்ட பகுதி இந்திய நாட்டு அரசியல் கட்சிகள் அனைத்தினுடைய் ஒப்புதலைப் பெற்றுள்ளதையும் அனைவரும் அறிவர். நான் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்தபோது 'வாக்குரிமை' என்ற பிரச்சினையைப் பொறுத்தவரை கருத்து வேறுபாட்டுச் சண்டை ஏற்கனவே தீர்ந்துவிட்டது என்ற எண்ணத்தோடேயே வந்தேன். ஆனால், வாக்குரிமைக் குழு கூட்டங்களில் என்னுடைய மயக்கம் முற்றிலுமாகத் தெளிந்தது. நேரு அறிக்கையில் கையெழுத்திட்டோர் யாவரும் ஒருவித மனத் தயக்கத்துடனேயே கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்ற உண்மை எனக்குப் பேரதிசயத்தைக் கொடுத்தது. மாகாண சட்ட மன்றங்களுக்குப் பொதுமக்களில் 25 சதவீதத்தினர் வாக்களிக்கலாம் என்ற விதிக்கு உடன்பாடு தெரிவிக்க இந்தியத் தாராளவாதிகளை வழிக்குக் கொண்டு வருவதே மெத்தவும் கடினமாக இருந்தது. மத்திய சட்டமன்றத்துக்குரிய வாக்குரிமை எத்தனை பேருக்கு வழங்கப்படும் என்பதை இப்போது கூறுவதற்கில்லை. ஆனால், மத்தியச் சட்டமன்றம் மாகாணச் சட்டமன்றங்களைவிட பெரும் அளவு மக்கள் பிரதிநிதித்துவம் பெற்றுவிளங்கும் என்று நான் நம்ப முடியவில்லை. எனினும், மிகவும் வரம்புக்குட்பட்ட வாக்குரிமையைக் கொண்ட எதிர்கால இந்திய அரசமைப்பு பல வகுப்பினர் ஆட்சிநடத்தும் மக்கள் அரசமைப்பாகவே இருக்கும் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

பெரும்பான்மை, சிறுபான்மைச் சமூகங்களுக்கிடையே சட்ட மன்ற இருக்கைகளைப் பிரித்தளிப்பதில் முட்டுக்கட்டை ஏற்பட்டிருப்பதை நாம் யாவரும் அறிவோம். முற்காலத்தில் செய்யப்பட்ட குறும்பின் விளைவே இம்முட்டுக்கட்டை என்பது என் கருத்து. பிரிட்டிஷ் அதிகாரிகள் அன்று நியாயத்தை கடைப்பிடித்து, யாருக்கும் சலுகை புரியாமல் எல்லோரையும் ஒரே மாதிரியாக நடத்தியிருந்தால், இந்தப் பிரச்சினை இன்று தீர்க்க முடியாத அளவுக்குக் கடினமானதாகியிராது. பிரிட்டிஷ் அரசு தன்னுடைய அரசியல் சுயநல நோக்கத்திற்கேற்ப, வேறுபட்ட பல சமூகங்களுக்கு வேறுபட்ட பல மதிப்புகளைக் கொடுத்தது; பல சமூகங்களுக்கு அது அரசியல் அதிகாரத்தை வாரி வழங்கியிருக்கிறது; ஆனால், நியாயமாகச் சேரவேண்டிய அளவுக்கூட ஒடுக்கப்பட்ட சமூகத்தாருக்கு அது எதுவும் தரவில்லை. இவ்வகையில்

மிகவும் பாதிக்கப்பட்ட சமூகம் ஒடுக்கப்பட்ட சமூகமே என்பதில் ஐயம் ஒன்றுமில்லை. இந்த மாநாடு பழைய குறைகளையெல்லாம் சரிபடுத்தி, முன்பு தவறாகச் செய்யப்பட்ட காரியங்களை அடியோடு கைவிட வழி செய்யும் என்று நம்புகிறேன். ஒடுக்கப்பட்ட வகுப்பாருக்குச் சட்டமன்ற இருக்கைகளுக்கான நியாயமான பங்கு கிடைக்க ஒழுங்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஆனால் அத்தகையதொரு நிலைமை இதுவரை உருவாகவே இல்லை. மற்றச் சிறுபான்மைச் சமூகத்தினரது கோரிக்கைகள் ஏற்கனவே ஒப்புக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு வேண்டியதெல்லாம் புதிய அரசின் விரிந்த அமைப்புக்கும் பரந்த வாய்ப்புக்குமேற்பத் தங்களுக்கு உரிய இடங்கள் கிடைக்க வேண்டும் என்பதே. அதற்காக அவர்கள் பல மாற்றங்களையும் திருத்தங்களையும் இங்குக் கொண்டு வர விரும்புவதாகத் தெரிகிறது. மாற்றங்களும் திருத்தங்களும் எத்தகையனவாக இருப்பினும் தன்னாட்சிக்காக ஏற்கனவே போடப்பட்டுள்ள கடைகாலை யாரும் குலைக்கப் போவதில்லை. ஒடுக்கப்பட்டோரின் நிலை இதற்கு முற்றிலும் வேறானது. அவர்களின் கோரிக்கைகள் இப்போது தான் எழுப்பப்பட்டிருக்கின்றன. அந்தக் கோரிக்கைகள் கவனிப்புக்கு இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; கோரிக்கையாளர்கள் எத்தனைபேர் இங்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதும் தெரியவில்லை. ஒடுக்கப்பட்டோரின் இத்தகைய நிலையை நோக்கும் போது நியாயமான பிரதிநிதித்துவத்துக்கான அவர்களுடைய கோரிக்கைகள் மேலும் மேலும் ஒடுக்கப்படும் என்றே என் மனத்துக்குப்படுகிறது. அப்போதுதான் பாதுகாப்புக்காக அல்லாமல் பதவிக்காகவே ஓயாமல் போராடும் மற்றச் சமூகத்தாரைப் பிரிட்டிஷ் அரசு திருப்திப்படுத்த முடியும்.

இச்சூழ்நிலையில், என்னுடைய நிலையை நான் முழுவதுமாகத் தெளிவுபடுத்த வேண்டியவனாக இருக்கிறேன். இந்தியாவின் எதிர்கால அரசியலமைப்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உரிமைகள் இன்னவை என்று வகுக்கப்படாததால், மாட்சிமை தங்கிய மன்னர் அரசு, இந்திய அரசுக்குத் தன்னாட்சிப் பொறுப்பை ஒப்படைக்குமுன், இந்தியச் சமூகங்கள் யாவும் ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளுக்கும் நலன்களுக்குமான தக்க பாதுகாப்புக்கு இணங்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். தற்போது உள்ள சூழ்நிலையின் கடுமையை வலியுறுத்துவதன் மூலமும், அதனை உங்கள் பார்வைக்கே கொணர்வதன் மூலமும் நான் ஒன்று கூற விழைகிறேன். எங்கள் நிலைமை நன்கு தெளிவாக்கப்பட்டாலொழிய, நீங்கள் வெளியிட இருக்கும் எந்த அறிவிப்பும் எங்களுக்கு உடன்பாடாக முடியாது. அது மட்டுமல்லாது இந்த மாநாட்டின் மேற்கொண்ட எதிலும் நாங்கள் ஈடுபடுவதும் கடினமாகிவிடும்; இதிலிருந்து அடியோடு விலகிக் கொள்ளும் நிலைமைக்கும் நாங்கள் உள்ளாகக் கூடும். இதனைச் செய்யுமாறு நான் தங்களைக் கேட்டுக் கொள்ளும்

போது, தாங்கள் எனக்கு அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும் என்கிற அளவில்தான் அதனை நான் வற்புறுத்து கிறேன்; அதற்கு மேற்பட்ட எதனையும் அன்று. பிரிட்டிஷ் பாராளு மன்றமும், அதன் சார்பாகப் பேசுவோரும் தாங்கள்தாம் ஒடுக்கப் பட்ட மக்களின் பாதுகாவலர்கள் என்று இதுவரை சொல்லி வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லிவந்த இவ்வாக்கியம், மக்கள் தங்களிடையேயுள்ள உறவை இதப்படுத்திக் கொள்ளச் சொல்லப்பட்ட நாகரிகத்தால் விளைந்த வழக்கமான பொய் என்று நான் கூறமாட்டேன். எனவே, மன்னரின் அரசு எத னுடையவும், குறிப்பாகத் தொழிற்கட்சியினுடையவுமான நீங்காக் கடமை எங்கள் நம்பிக்கையைக் காப்பாற்றுவதேயாகும். பிரதம மந்திரி அவர்களுக்கு நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்வது இதுதான் : எங்களுடைய நலனில் ஒரு சிறிதும் அக்கறை இல்லாத வர்களிடத்திலும், எங்களுடைய நலிவிலும் அழிவிலுமே தங்கள் செழுமையும் பெருமையும் அடங்கியிருக்கின்றன என்று கருதுபவர் களிடத்திலும் எங்கள் எதிர்காலத்தை ஒப்படைத்துச் செல்வீர் களாயின், அது மேன்மை தங்கிய மன்னரின் அரசு எங்களுக்கு இழைத்த மாபெரும் நம்பிக்கைத் துரோகமாகிவிடும்.

இத்தகைய கடுமையான வார்த்தையைக் கையாளுவதால், நான் ஒரு வகுப்புவெறியன் என்று இந்திய தேசியவாதிகளும் தேச பக்தர்களும் கூறலாம். அதற்காக நான் பயப்படவில்லை. இந்திய தேசம் ஒரு விசித்திரமான தேசம்; அத்தேசத்தின் பக்தர்களும் ஒரு விசித்திரமான மக்களே யாவர். இந்தியாவிலுள்ள தேசியவாதியும் தேசபக்தனும் தங்கள் சொந்த சகோதர மக்கள் சாதாரண மனிதர் களை விடக் கீழாக நடத்தப்படுவதைக் கண்கூடாக்ப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய மனிதத்தன்மை இக்கொடு மைக்கு எதிராகக் கொதித்தெழவில்லை. ஆணும் பெண்ணும் யாவராயிருப்பினும், அவர்க்கு மனித உரிமைகளை மறுக்க முடியாது என்பதை அவர்கள் அறிந்துள்ள போதிலும், செயல் முறையில் அதனை உணர்ந்து நடக்க வேண்டும் என்கிற குடி யுரிமையுணர்வு அவர்களிடம் இல்லை. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அனைவரும் பொது ஊழியத்துறையிலிருந்து விலக்கப்படுவதை அவர்கள் காணவே செய்கின்றனர். ஆனால், அது அவர்களுடைய நீதியுணர்வையும் நேர்மையுணர்வையும் தூண்டாம லிருப்பதுதான் வியப்புக்குரியது. மனிதனையும் சமூகத்தையும் பீடித்துள்ள நூற் றுக்கணக்கான கொடுமைகள் அவர்களுக்கு நன்கு தெரிந்தனவே. ஆனால், அவை எதுவும் அவர்களுக்கு அரு வெறுப்பை தருவதாக இல்லை. தேசபக்தர்களுடைய ஒரே கூச்சல் அவர்களுக்கும் அவ ருடைய வகுப்பினர்க்கும் மேலும் மேலும் அதிகாரம்கிடைக்க வேண்டும் என்பதே. அத்தகைய ஒரு தேசபக்தக் கூட்டத்தை நான் சார்ந்தில்லாமலிருப்பது எனக்கு மகிழ்ச்சியே தருகிறது. நான் ஜனநாயகத்தைப் பின்பற்றுபவன்; தனிநாயகம் எந்த உருவில் வந்தாலும் அதை அழித்தொழிக்க வேண்டும் என்ற கூட்டத்தைச்

வேண்டும் என்ற கூட்டத்தைச் சேர்ந்தவன். நம்முடைய நோக்கம், அரசியல், பொருளாதாரம், சமுதாயம் என்னும் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நடைமுறையில் மனிதன் ஒருவனே, அவனுக்குரிய மதிப்பும் ஒரே மாதிரியானதே என்பதாகும். பிரதிநிதித்துவ அரசு இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு கருவியாக இருப்பதாலேயே ஒடுக்கப்பட்ட மக்கள் அதற்கு இவ்வளவு சிறப்புத் தருகிறார்கள். அந்தச் சிறப்புக் காரணமாகவே உங்கள் அறிவிப்பும் அந்நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்களிடம் எங்களுக்குப் பரிவு உண்டு என்று நீங்கள் கூறலாம். அதற்கு என்னுடைய பதில், இன்னலுக்குள்ளான மக்களுக்கு அதற்கும் மேற்பட்ட உறுதிவாய்ந்த வரையறுக்கப்பட்ட உறுதிமொழி வேண்டும் என்பதே. தேவையில்லாமல் அளவுக்கதிகமான பயத்தை நான் கொண்டிருக்கின்றேன் என்று நீங்கள் என்னை இகழலாம்; ஒரு பாதுகாப்பைப் பெரிதும் நம்பி அழிந்து போவதைவிடக் கவலை நிறைந்த பயத்தை வளர்த்துக் கொண்டிருப்பதற்காக இகழ்ச்சி அடைவது மேலானது என்பதே என் பதில்.

# 9

# கூட்டாட்சி அமைப்புக் குழுவில்

## இருபத்து மூன்றாவது அமர்வு—செப்டம்பர் 16, 1931

### தலைப்பு: 2

*(கூட்டாட்சிச் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான வினாக்கள்)*

*டாக்டர் அம்பேத்கர் :* கனம் மேலவைத் தலைவர் அவர்களே! நான் இக்கூட்டாட்சிக் குழுவின் உறுப்பினரான பின்பு, பேசும் என் முதல் பேச்சு இதுவேயாகும். என்னைப் போலவே, ஒவ்வொரு புதிய உறுப்பினரும் தாமே முன்வந்து தனக்குக் கிடைத்துள்ள இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி, இக்குழு சமாளிக்க வேண்டிய சிக்கல்களுக்குப் பொதுவாக அவரவர் கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்துள்ளீர்கள். தலைவரவர்கள் கூட்டாட்சி அமைப்பை உருவாக்க இக்குழுவிலாற்றிய பணி பங்குகளைப் போற்றிப் புகழ்ந்து பேசி, உறுப்பினர்கள் அமர்ந்துள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும், தாம் பிரதிநிதித்துவம் ஏற்றுள்ள சமுதாயத்தின் பாதுகாப்புக்காக அல்லது அவரவர் அக்கறைக் கொண்டுள்ள கருத்துக்களுக்காக மத்திய அரசு மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களைப் பற்றிப் பேசவும் உரிமையளித்துள்ளீர்கள்.

மேலவைத் தலைவர் அவர்களே!

எனக்கு முன் பேசியவர்களையே பின் தொடர்ந்து, இது தொடர்பான செய்திகளையே நானும் பேச மாட்டேன். இதனை வைத்துக் கொண்டு இந்த விஷயத்தில் எனக்கு அக்கறை இல்லை, உணர்ச்சியில்லை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. மாறாக, இது பற்றிய எனது உள்ளுணர்வுகள் மிக மிக ஆழமானவை. ஆனாலும், அதையே வலியுறுத்தி நான் பேசப்போவதில்லை. காரணம், இத்தகையவைகளைப் பற்றிப் பேசுவதே இக்குழுவின் அடிப்படை நோக்கமாகுமென்று, இன்று காலையிலேயே நீங்கள் கூறி விட்டீர்கள். அந்த உறுதிமொழியைப் பின்பற்றி நடக்க வேண்டுமென்பதற்காகவே, நானும் இவைப் பற்றி ஆழமாகப் பேசப் போவதில்லை.

இத்தகைய எனது சுருக்கமான அறிமுக உரையோடு நிறுத்திக் கொண்டு, இனிப் பேசப்போகும் ''*தலைப்பு 2*'' பற்றிய கருத்துக்களைக் கூற நான் முற்படுகிறேன். அவ்வாறு கூற முற்படும் போது உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கண்டுள்ள வரிசைப்படி நான், அத்தனைத் துணைத் தலைப்புகள் பற்றியும் பேச மாட்டேன்; அல்லது அதிலுள்ள ஒவ்வொரு பொருள் பற்றியும் நான் கொள்ளும் உணர்வுகளைக் கூறமாட்டேன்; அதில்

குறிப்பிட்டுள்ள துணைத் தலைப்புகளில் எனக்கு அக்கறையுள்ள சிலவற்றிற்கு மட்டுமே நான், எனது முடிவான கருத்துக்களைத் தொட்டுக் காட்டிச் செல்வேன். அதுவும் எத்தகைய கருத்துக்கள் பயன்படுமோ, அத்தகைய கருத்துக்களை மட்டுமே கூறுவேன்.

முதலாவதாக, 'கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் கட்டமைப்பு' என்னும் பொருள் பற்றி நான் பேச முற்படுகிறேன். நான் பேச முற்படும் முன் எனது நிலையைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதாவது எதிர்கால இந்தியாவில் அமையப்போகும் கூட்டாட்சி ஒரு சபையைக் கொண்டு இயங்குமா அல்லது இரு சபைகளைக் கொண்டு இயங்குமா என்ற வினாவுக்குத் தெளிவான விடை காண வேண்டும். மிகவும் வெளிப்படையாகக் கூறவேண்டு மானால் இரு சபைகள் முறையில் நான் எப்பொழுதும் நம்பிக்கைக் கொண்டவனல்லன். மேல் சபையால் பயனுண்டு என்பதையும் நான் எப்பொழுதுமே ஒப்புக் கொண்டதில்லை. இதுவே எனது கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டைப் பலர் ஒப்புக் கொள்ளாம லிருக்கலாம். இந்த மாநாட்டில் அத்தகைய கோட்பாட்டையுடை வர்களைக் கொண்டு, மேல்சபை தேவையற்றதென்று கூறி அவர் களை ஒப்புக் கொள்ள செய்வதென்பதும் முடியாத காரிய மாகும்.

இரண்டாவதாக, இரண்டு சபைகளுக்குமிடையேயுள்ள உறவு முறைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டு, மேலவையின் நச்சுப் பற்கள் தக்க பாதுகாப்புகளுடன் பிடுங்கப்படுமானால் இந்தியாவில் ஒரு மக்களாட்சி அரசாங்கத்தை அமைப்பது சுலபமானதும் பாதுகாப் பானதுமாகும். இந்தச் சூழலில் இந்தியாவில் அமைக்கப்படும் கூட்டாட்சியில் இரு சபைகளிருப்பதைப் பற்றி நான் எத்தகைய மறுப்பையும் கூற முற்பட மாட்டேன்.

இவ்வாறு, எனது முடிவைக் கூறிய பிறகு, இந்தியக் கூட்டாட் சிச் சட்ட மன்றத்தில் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்கள் எவ்வாறு பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டுமென்ற வினாவிற்கு விடை காண வேண்டும். அவ்வாறு காண முற்படும்போது, நமக்கு எழும் முதல் வினா என்னவென்றால் மாநிலப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக் கும் போது, அவர்களை நேர்முக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந் தெடுப்பதா அல்லது மறைமுக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந் தெடுப்பதா என்பதேயாகும்.

கீழ்ச்சபைக்குத் தேர்தல் யென்றால் அது நேர்முகத் தேர்தலே யென்பதை நான் அறிவேன். இது பற்றி வேறு கருத்து இருக்க முடியாது. சைமன் ஆணைக்குழுவின் பரிந்துரையை நான் மறந்து விட வில்லை. கீழ்ச்சபைக்கு அமைந்த நேர்முகத் தேர்தல் முறைக் குப் பதிலாக மறைமுகத் தேர்தல் முறையே சிறந்ததென அவ் வாணைக்குழு பரிந்துரைத்தது. அவ்வாறு அக்குழுவினர் கூறிய தற்கு அவர்கள் சுட்டிக்காட்டிய காரணமென்னவென்றால், ஆழ்ந்து பார்க்கும் போது, நேரடித் தேர்தலுக்கும், மறைமுகத் தேர்தலுக்கும்

எத்தகைய வேறுபாடுமில்லையென்பதேயாகும். மேலும் சொல்ல வேண்டுமானால் நேர்முகத் தேர்தலுக்கு ஒருபடி மேலானதே மறை முகத் தேர்தலென்பது அக்குழுவினரின் கருத்தாகும். விவாத முறைக்கு வேண்டுமானால் அவர்களின் வர்தம் சரியெனப் படுமே யொழிய மனோநிலைப்படிப் பார்க்கும் போது நேர்முகத் தேர்த லுக்கும், மறைமுகத் தேர்தலுக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. இந்த நாட்டிற்கு ஒரு நல்லாட்சி அமைய வேண்டுமானால் இந் நாட்டு மக்களின் உள்ளங்கைகளிலேயே அத்தகைய நல்லாட்சியை அமைப்பதென்பது தங்களின் கரங்களில் தானுள்ளதென்பதை மனமார உணர்ந்து, அந்த உணர்ச்சி உந்துதலுடன் அவர்கள் செயல்பட வேண்டுமென்பதே எனது மனமுவந்த கருத்தாகும்.

ஒரு நல்லாட்சியை அமைப்பதும், அமைக்காமல் போவதும் தாங்களே என்பதை இந்தியர்கள் உணர்ந்து கொள்ளாதவரை, ஒரு பொறுப்புள்ள ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்தாகும். என்னுடைய கருத்து சரி யானதே என்பதை ஒப்புக் கொள்வோமேயானால், அடுத்து நாம் கவனிக்க வேண்டியது மக்களுக்கும் அரசுக்குமிடையே நேரடி உறவு முறை ஏற்படுத்தும் ஒருவித தேர்தல் முறையை நாம் கண்டாக வேண்டும். அத்தகைய தேர்தலால் அமைக்கப்பெறும் ஆட்சி நாட் டிற்கும், மக்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்க வேண்டும். அது இல்லாமல் கண்மூடித்தனமாக மத்திய ஆட்சிக்கும், மக்களுக்கு மிடையே நடத்தப்படும் மறைமுகத் தேர்தல் முறை தேவையில்லை என்று கருதுகிறேன். எனவேதான் நான் கூட்டாட்சி முறையில் கீழ்ச்சபைக்கு நடக்கும் மறைமுகத் தேர்தல் முறையை எத்தகைய சூழலிலும் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்றேன். அதாவது கீழ்ச்சபைக்கு நேரடித் தேர்தல் வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும்.

கூட்டாட்சி முறையில் அமைந்துள்ள மேல் சட்ட சபையின் கட்டமைப்புக்குக் கூட்டாட்சிக் கட்டமைப்புத் துணைக்குழு பரிந் துரைத்த வழிமுறைகளை நான் வரவேற்கிறேன். அவற்றின்படி மாநிலங்களிலுள்ள மேலவைகளுக்கு மறைமுகத் தேர்வு செய்யும் முறை ஏற்கத்தக்கதே; ஏனெனில் இந்த நடைமுறைப்படி தனி வாக்காளர் தேர்வுமுறை வகுப்புவாரியாக பிரிக்கப்பட்டுள்ள தொகுதிகளில் விகிதாச்சாரப்படி நடைபெறும். பல்வேறு சூழ்நிலை களால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தொகுதிகளில் இத்தகைய தேர்தல்கள் நடப்பது அந்தந்த வகுப்பாருக்கு நற்பயன் கிடைக்கு மென்றே கருதுகிறேன். ஆனாலும் சட்டமன்றத்தில் குறிப்பிட்ட இன மக்களின் பிரதிநிதிகள் ஆதிக்கம் கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. அதிலுள்ள பிரதிநிதிகள் பல்வேறுவிதமான மக்களின் பிரதிநிதிகளாக அமைவார்களேயானால் பரந்த நோக்கத் தைக் கொண்டு செயல்படுபவர்களாக இருப்பார்கள். ஆயினும் தனித்த பிரிவுகளின் நலன்களை அவர்களால் புறக்கணிக்க

முடியாது. இதனால் சாதி அடிப்படையில் கொடுக்கப்படும் விகிதாச்சார பிரதிநிதித்துவத்திற்கு நான் மறுப்புச் சொல்ல வில்லை. ஆனாலும் நான் மேலே கூறியபடி அதனை வரவேற் கிறேன். இந்தியாவிலுள்ள பல்வேறு சிறுபான்மையினர் தங்களின் நலனைக் காக்க வேண்டி ஒவ்வொரு அவையிலும் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை இக் குழு மனதில் கொள்ள வேண்டும்; அவர்கள் தங்களுக்கு ஏதோ ஒரு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று மட்டும் நினைக்காமல் தங்களின் மக்கள் தொகைக்கேற்ப குறைந்தபட்ச பிரதிநிதித்துவ மாவது கிடைக்க வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்டுள்ள னர். விகிதாசாரப்படிக் கிடைக்குமென்றாலும் அவர்கள் எதிர் பார்க்குமளவிற்கு அவர்களின் பிரதிநிதிகள் பங்கேற்று செயல்பட முடியுமா என்பதே எனக்கு எழும் அச்சமாகும். ஆகவே கூட்டாட்சி கட்டமைப்பு துணைக்குழுவில் இந்தப் பரிந்துரைக்கு மேலாக மற்றொரு பாதுகாப்பு உரையையும் சேர்க்கலாம். ஆஸ்திரியன் அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 35-ல் உள்ளதைப் போல எனது இந்தப் பரிந்துரை அமையலாம்.

ஆஸ்திரிய அரசியல் சட்டம் 35-வது பிரிவில் அரசியல் ஆட்சி களின் விகிதாசாரப்படி பிரதிநிதித்துவம் கொடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நாம் அமைக்கப் போகும் அரசியல் சட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கலாமென அமைத்துக் கொள்ளலாம். ஆஸ்திரிய அரசியலமைப்புச் சட்டத் தின் 35-வது பிரிவு கீழ்க்கண்டவாறு கூறுகிறது :

> ''மாநிலச் சட்டமன்றங்களால் மத்திய கூட்டாட்சி மன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களும் அவர்களுக்குப் பதிலாக அமர்த்தப்படுபவர்களும் குறிப்பிட்ட கால அளவுக் குப் பதவி வகிக்கலாம். அவர்கள் விகிதாசாரப்படி மத்திய கூட்டாட்சி மன்றத்தில் அங்கம் வகிப்பார்கள். மாநிலச் சட்ட மன்றங்களில் பெருவாரியாகவுள்ள உறுப்பினர்களின் விகிதா சாரத்திற்கேற்பவே கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு உறுப் பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவ்வாறு தேர்ந் தெடுக்கப்படும் பொழுது ஒரு மாநிலத்தில் பெருவாரியாக வுள்ள கட்சியின் பிரதிநிதிகளே அதிகமாக அங்கம் வகிப் பார்கள். ஆனாலும் அடுத்த பெருவாரியாகவுள்ள கட்சிக்கும் ஒரு பிரதிநிதித்துவம் தரவேண்டும். அந்நிலையில் இருவேறு கட்சிகள் இரண்டாவது இடத்தில் நிற்குமானால் அக்கட்சி களில் எந்த ஒரு கட்சி, சென்ற தேர்தலில் அதிக வாக்கு களைப் பெற்றதோ அந்தக் கட்சியின் பிரதிநிதி ஒருவரைக் கூட்டாட்சி சட்டமன்றத்திற்கு அனுப்பலாம். சில சந்தர்ப்பங் களில் பல்வேறு கட்சிகள் ஒரே எண்ணிக்கையிலான வாக்கு களைப் பெற்றிருந்தால் அவற்றில் ஒன்றைக் குலுக்கல் முறை யில் தேர்ந்தெடுத்து அதன் பிரதிநிதியை கூட்டாட்சிச் சட்ட மன்றத்திற்கு அனுப்பலாம்''. இந்த முறையை அப்படியே

> நாம் வகுக்கப்போகும் இந்தியக் கூட்டாட்சி முறை அரசிய லமைப்புச் சட்டத்தில் பொருத்தலாமென நான் சொல்ல வரவில்லை. விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக, ஓரளவு எல்லோ ருக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் எனும் எனது கோட்பாட்டையே நமது சட்டத்திலும் புகுத்தலாம் என்று கூற விழைகிறேன்.

கூட்டாட்சிச் சட்டமன்றத்தில், பிரிட்டிஷ் இந்திய மாநிலங் களுக்கு எவ்வாறு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பது பற்றி இதுவரை கூறினேன். அடுத்துத் தனியரசுகள் எவ்வாறு கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் பங்கேற்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூற விழைகிறேன். அவ்வாறு கூறும் போது இரண்டு கருத்துக்களை நாம் ஆராய வேண்டியுள்ளது. முதலாவதாக, நாம், ஒவ்வொரு சமஸ்தானமும் தனித்தனியாக அங்கம் வகிப்பதா, அல்லது சில சமஸ்தானங்கள் ஒன்று சேர்ந்து கூட்டமைப்பாக அங்கம் வகிப்பதா என்பதாகும். இரண்டாவதாக, அவ்வாறு அங்கம் வகிக்கும் சமஸ்தானங்களின் பிரிதிநிதிகளைத் தேர்ந் தெடுக்க வேண்டுமா, அல்லது நேரடியாக நியமனம் செய்ய வேண்டுமா என்பதாகும்.

தனித்தனியாக பங்கேற்பது என்பது பற்றிய முடிவை அந்தந்த சமஸ்தானங்களுக்கே விட்டுவிடலாமென கூட்டாட்சி அமைப்புக் கட்டமைப்புக்குழு பரிந்துரைத்துள்ளது. அக்குழுவினரின் கருத்தை நான் மதிக்கின்றேன். இருப்பினும் அக்கருத்திலிருந்து நான் சிறிது மாறுபடுகிறேன். இது தனியரசுகள் முடிவு செய்யும் விஷயமல்ல. கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்தை வரையறுக்கும் கூட்டாட்சி அமைப்புக் குழுதான் அரசியலமைப்புச் சட்டத்தில் எந்தெந்த சமஸ்தானப் பிரிவுகள் அங்கம் வகிக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும். சமஸ்தானங்களின் முடிவிற்கே இதனை விடுவதால் ஏற்படும் விளைவுகளைக் காண்போம். எல்லாத் தனி யரசுகளும் கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் அங்கம் வகிப்பதாக வைத்துக் கொள்வோம். அதன் விளைவு என்னவாகும்? இந்தியா வின் கூட்டமைப்புச் சட்டமன்றத்தில் பெருமளவிற்குத் தாங்க முடியாத உறுப்பினர் தொகை அதிகமாகக் காணப்படும். பிற நாட்டுடன் இதனை ஒப்பிட்டுப் பார்த்தால் இது நன்கு புரியும். ஜெர்மானியப் பேரரசின் சட்டமன்றத்தில் மாநிலங்களின் பிரதி நிதிகளாக இருப்பவர்கள் 25; ஆஸ்திரேலியாவில் 5; ஆஸ்திரியா வில் 8; கனடாவில் 4; சுவிட்சர்லாந்தில் 22; அமெரிக்காவில் அதிகபட்ச எண்ணிக்கை 48 என்பதாகும். இந்தியாவிலுள்ள அனைத்துச் சமஸ்தானங்களும் உறுப்பினர்களாக வேண்டுமென் றால் ஏறத்தாழ 570 பேர் நமது கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் இடம்பெறுவார்கள். இது மிகப்பெரிய எண்ணிக்கையாகும். மாறாகச் சில சமஸ்தானங்களை விட்டுவிடுவதால் இந்த எண் ணிக்கைக் குறையலாம். ஆனால், இந்திய மண்ணின் ஒவ்வொரு

அங்குலத்திலும் வசிக்கும் மக்களின் நன்மைக்காகவே, மக்களாட்சி முறை ஏற்பட வேண்டுமென்று நமக்கு நாமே வைத்துக் கொண்ட குறிக்கோளின் அடிப்படை என்னவாகும்? விடுபட்டுத் தனித்து நிற்கும் சமஸ்தானங்களின்கதி என்ன? இந்தச் சிக்கலை நாம் இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பெருமதிப்பிற்குரிய மேலவைத் தலைவர் அவர்களே! இந்தியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கப் போகும் சமஸ்தானங்களின் அதிக எண்ணிக்கைக்கு அஞ்சி நான் இந்த வினாவை எழுப்பிய தாக எண்ண வேண்டாம். என் மனதிலே இருக்கும் உலைச்சல் இதுதான்: எதிர்கால இந்தியக் கூட்டாட்சியில் உறுப்பினராகும் ஒவ்வொரு தனியரசும் சிறியவை, பெரியவை என்ற ஏற்றத்தாழ்வு இன்றிச் சமமாக ஏற்றுக் கொள்ளப்படுமா, நவீனமயங்களை செயல்படுத்தும் பொழுது அவற்றை ஏற்கும் திறனை அம்மாநிலங் கள் பெற்றுள்ளனவா, ஏற்கும் வலிமையற்றதெனக் கருதப்படும் மாநிலங்களையும் கூட்டாட்சி ஒரே அந்தஸ்துள்ளதாகச் சேர்த்துக் கொள்ளுமா என்பதே என் மனதை அலைக்களிக்கும் சிந்தனை யாகும். இந்திய சமஸ்தானங்களைப் பற்றி நாம் விவாதிக்கும் பொழுது அவை ஒவ்வொன்றிலும் நிலவும் பலதரப்பட்ட கருத்துக் களையும் பல்வெறு சூழ்நிலைகளையும் நாம் நன்றாக அறிந்திருக்க வில்லை என்பது தெளிவாகின்றது. கனம் தலைவர் அவர்களே! தங்களின் அனுமதியின் பெயரில் டி. பி. குண்டப்பா என்பவரால் எழுதப்பட்ட ''இந்திய அரசியலமைப்பில் சமஸ்தானங்களும் அவற்றின் மக்களும்'' என்பது பற்றிய அந்நூலிலிருந்து ஒரு சிறு பகுதியை மட்டும் படித்துக்காட்ட விரும்புகிறேன். அந்நூலாசிரியர் ஒரு பட்டியலையும் கொடுத்திருக்கிறார். அப்பட்டியலையும் படித்துக்காட்டி இக்குழுவுக்கு நான் சிரமம் கொடுக்க விரும்ப வில்லை.

மேற்கூறிய பட்டியலிலிருந்து 1000 சதுர மைல்களுக்கு உட்பட்டு 454 சமஸ்தானங்களும்; 1,00,000 மக்கள் தொகைக்குட்பட்டு 452 சமஸ்தானங்களும்; ஒரு லட்சம் ரூபாய் வருமானத்திற்குட்பட்டு 374 சமஸ்தானங்களும் இருப் பது புலப்படுகிறது. 10,94,300 சதுர மைல் பரப்பும், ஏறத் தாழ 222 மில்லியன் மக்கள் தொகையும் கொண்ட பிரிட் டிஷ் இந்தியா 273 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கில் ஒரு சராசரி பிரிட்டிஷ் இந்திய மாவட்டம் 4000 சதுரமைல் பரப்பும் 8,00,000 மக்கள் தொகையும் கொண்டதாகவும் உள்ளது. இந்த யோசனையை நாம் ஏற்போமேயானால் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு சமஸ்தானமாகக் கருத வேண்டி வருமல்லவா? இது எவ்வளவு நகைப்பிற்குரிய செய்தியாகும் ஆனால் நடைமுறையிலுள்ள 562 சமஸ்தானங்களில் 30 சமஸ்தானங்கள்தான் ஓரளவு மாவட்டங்கள் போன்ற பரப்பளவு உள்ளதாக இருக்கின்றன. அவற்றின் மக்கள்

தொகையும், வளமும் மாவட்ட அளவிலேயே உள்ளன. இன்னும் சில தனியரசுகளில் இத்தகைய பரப்பளவும் மக்கள் தொகையும் மிகமிகக் குறைந்தே காணப்படுகின்றன. இவற்றை யெல்லாம் மேம்படுத்துவதென்பது இயலாத, இரங்கத்தக்க செயலாகும். 15 சமஸ்தானங்களின் பரப்பளவு ஒரு சதுர மைலுக்கும் குறைவாக உள்ளது; 27 சமஸ்தானங்கள் சரியாக ஒரு சதுர மைல் பரப்பே உள்ளன; சூரத்திலுள்ள 14 சமஸ்தானங்கள் 1925-ம் ஆண்டின் கணக்கின்படி ஆண் டிற்கு 3000 ரூபாய்க்கு மேல் வருவாய் வருவதில்லை. இவற்றில் 3 சமஸ்தானங்களில் 100-க்கும் குறைந்த மக்களே வாழ்கிறார்கள். 5 சமஸ்தானங்களில் ரூ. 100-க்கும் குறைந்த வருவாய் கிடைக்கிறது. மொத்தத்தில் சுதேச சமஸ்தானங் களில், மிகவும் சிறிய சமஸ்தானம் ஒன்றிற்கு ஆண்டு ஒன் றுக்கு ரூ. 20 மட்டுமே வருவாயாகக் கிடைக்கிறதென்று இந் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா :* இதிலிருந்து இந்திய சமஸ்தானங்கள் இறையாண்மை கொண்ட மாநிலங்களா அல்லது வெறும் மாநிலங்களா என்பதில் கருத்துக் குழப்பம் இருக்கிறது என்று நான் நேற்று சொன்னது உறுதிப்படுகிறதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர் :* இல்லை. அப்படி ஒன்றும் இல்லை.

*மேன்மைதங்கிய பிக்கானீர் மகாராஜா :* இதைப் போலவே சர் மிர்ஸா என்பவர் மற்றொரு இந்திய சமஸ்தானத்தைப் பற்றி கூறியிருக்கும் கருத்துக்களை கூறப்போனால் அதிலும் இத்தகைய குறைபாடுகளே மிகுதியாகக் காணப்படும் என்பதை எண்ணி அதைக் கூறிட அஞ்சுகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* இருக்கலாம். சகல மரியாதைக்கும் உரிய பிக்கானீர் மகாராஜாவிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்; ''சமஸ்தானம்'' என்ற சொல்லுக்கு அவர் கூறும் விளக்கமென்ன? அவர் கூறும் பொருளுக்கேற்றபடியுள்ள சமஸ்தானங்களை மட்டுமே இந்தியக் கூட்டாட்சிக்குள் அனுமதிப்பதென்றால் அதற்கு ஒத்து வராத பிற சமஸ்தானங்களின் கதியென்ன? அவற்றை என்ன செய்வதென்று கூறுவாரா?

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா :* காலப் போக்கில் அவை தக்கபடி கையாளப்படும்.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்தக் கூட்டாட்சி அமைப்புக் குழு, சமஸ் தானங்கள் கேட்பதையெல்லாம் கண்மூடித்தனமாய்க் கொடுக்க இயலாது.

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா :* சமஸ்தானங்களும் கூட்டாட்சி அமைப்புக் குழுவும் கூறுவதையெல்லாம் கண்மூடித் தனமாய் ஒப்புக் கொள்ள முடியாது. நாங்களும் எழுதாக் காசோலையில் கையொப்பமிட முடியாது. இருதரப்பாரும் ஒருவர்

மற்றவருக்குள்ள கஷ்டங்களை புரிந்து கொண்டு அவற்றைப் போக்கச் செயல்பட வேண்டும்.

*குழுத்தலைவர் :* டாக்டர் அம்பேத்கர் அவர்களே! இச்சிக் கலைத் தீர்க்க நீங்கள்தான் எனக்குத் துணைபுரிய வேண்டும். ஒரு நூலிலிருந்து மிகவும் சுவையான ஒரு பகுதியைப் படித்துக் காட்டி னீர்கள். அதனை மிக மிக அக்கறையுடன் நானும் கேட்டுணர்ந் தேன். ஆனாலும் எந்தப் பகுதியின் கருத்திலிருந்து நீங்கள் கொண் டுள்ள முடிவுகள் இவையென்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* இது மிகவும் சிக்கலான நேரம் என்று தான் என்னால் கூற முடியும்.

ஒரு சமஸ்தானம் எத்தன்மைதாயினும், அது இந்தியக் கூட்டாட்சி யில் சேரத் தகுதியுடையதேயென நீங்கள் ஒப்புக் கொண்ட பிறகு, நிச்சயம் அது இந்தியக் கூட்டாட்சியில் சேர்த்துக் கொள்ளப்படும். பிறகு அது எப்பொழுதும் தனித்தியங்கும் சுதந்திரம் பெற்றதாகி விடுகிறது.

*மேன்மைதங்கிய பிக்கானீர் மகாராஜா :* இப்போது அதற்கு அந்த உரிமை உண்டு.

*டாக்டர் அம்பேத்கர் :* அஃது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கருணையினால் வந்தது; இத்தகைய நிலையை என்னால் சிந்தித்துப் பார்க்கவும் ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சமஸ்தானங்களைப் பொறுத்தவரையில் அவற்றின் விஷயங்களை அப்படியே ஒப்புக் கொள்ளவோ, முழுமையாக மறுத்து விடவோ என்னால் முடிவ தில்லை. இன்றைய புதிய நாகரிகத்தில் வேண்டிய பொரு ளாதாரப் பின்னணி இருந்தால்தான் அதிகார வர்க்கம் செல்வாக் குடன் ஆளமுடியும். அஃதில்லாமல் இந்திய சமஸ்தான அரசர் பெயரளவில் ''அரசர்'' என்கின்ற பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே தனது சமஸ்தானம் ஒரு தனி மாநிலமாக அமைய வேண்டும் என்று கோருவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

*மேன்மைதங்கிய பிக்கானீர் மகாராஜா :* அவர்கள் ''பட்டத் தரசர்'' என அழைக்கப்படுவதில்லை.

*டாக்டர் அம்பேத்கர் :* இந்தியக் கூட்டாட்சியில் பொறுப் பாண்மை ஏற்கும் ஒரு மாநிலத்திற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமெனும் விதிகளை வகுக்க வேண்டும்.

*குழுத் தலைவர் :* நீங்கள் சொல்வது மிகவும் ஏற்புடையதாக உள்ளது. எத்தகைய தகுதிகள் இருக்க வேண்டுமென்பதை எங்க ளுக்கு எடுத்துக் கூறித் தாங்கள் உதவி செய்ய முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர் :* இதற்கு ஒரு குறிப்பிட்ட பரப்பளவையும், குறிப்பிட்ட வருவாயையும் அளவு கோலாகக் கொள்ளலாம். அது

எவ்வளவு பரப்பளவு, எவ்வளவு வருவாய் என்று என்னால் திடீரென்று வரையறுத்துக் கூற முடியவில்லை. ஒரு சமஸ்தானத்தை ஆளும் மன்னர் தனது சமஸ்தானம் தனி மாநிலமாக நின்று, இந்தியக் கூட்டமைப்பில் பங்கு கொள்ள வேண்டுமென விரும்பினால், தனது நாட்டின் வளத்தைக் கொண்டு தன் மக்களுக்கு நவநாகரிக வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியும் என்று அம்மன்னர் முதலில் உறுதியளிக்க வேண்டும். இதுவே நான் எடுக்கும் முடிவாகும்.

*சர் மெக்கன்ஜி தாதாபாய்:* என் அருமை நண்பரின் கூற்றிலிருந்து குறைந்த வருவாயும், குறுநிலப் பரப்பும் கொண்ட எந்தவொரு சமஸ்தானமும் இந்தியக் கூட்டாட்சியில் சேரத் தகுதியற்றது எனப் பொருள் கொள்ளலாமா?

*டாக்டர் அம்பேத்கர்:* சமஸ்தானங்கள் இந்தியக் கூட்டாட்சியில் பிரதிநிதித்துவம் பெறுவது எப்படி என்பது பற்றிய வினாவிற்கு விடை காண முனைவோம். இந்தியக் கூட்டாட்சி மன்றத்திற்குச் சமஸ்தானங்கள் தங்களின் பிரதிநிதிகளை அனுப்ப விரும்பிய பிறகுதான் பிரதிநிதித்துவம் எப்படி அமைய வேண்டும் என்ற வினா எழுகிறது. இந்திய சமஸ்தான மன்னர்களை நான் மிகவும் மதிக்கிறேன். ஆனால் அவர்கள் கூறுவதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. அவர்களுடைய பிரதிநிதிகள் கட்டாயமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களாவார்கள் (நியமனம் செய்யப்படுபவராக இருக்கக் கூடாது).

மேலவைத் தலைவர் அவர்களே! என் அறிவுக்கு எட்டிய வரையில் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குச் சமஸ்தான அரசுகள் நியமன முறைப்படி உறுப்பினர்களை அனுப்புவது என்பது வேறு எந்த அரசியலமைப்பிலும் கிடையாது என்பதையும் கூறிக் கொள்கிறேன். ஒரு நாட்டில் உள்ள கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் மேல் அவைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும் பணியை மாநில அரசாங்கமே செய்கிறது. ஆனால் மேல் அவைக்கு நியமனம் செய்யும் போது அரசாங்கம் தவிர்த்த வேறு எவரும் செய்ய மாட்டார்கள். இவ்வாறு மாநில அரசால் நியமனம் செய்யப்பட்டு மேலவையில் உறுப்பாண்மை ஏற்பது என்பது வேறு. சமஸ்தானங்கள் கூட்டாட்சி உறுப்பாண்மை ஏற்பது என்பது வேறு. இவை இரண்டும் எனது அனுமானத்தின்படி ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகும். பண்டைய ஜெர்மானியப் பேரரசில் மட்டும் மாநில அரசுகள் "பண்டர்ஸ்ராட்" என்ற பேரவைக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பலாம் என்ற கோட்பாடு அந்நாட்டு அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டிருந்தது. இத்தகைய கோட்பாட்டை இந்திய சமஸ்தான அரசர்களும் பின்பற்ற வேண்டுமென்றே விரும்புவார்கள். ஆனால் இந்த பண்டைய ஜெர்மானிய சட்டப்பிரிவின் முழு விளைவுகளும் என்ன என்பது நமது சமஸ்தான மன்னர்களுக்குத் தெரிந்திருக்குமோ இல்லையோ

என்பது எனக்குத் தெரியாது. பண்ட்ராஸ்ட் அவையின் உறுப்பினர்கள் அடங்கிய ஜெர்மானிய சிற்றரசர்களின் பிரதிநிதிகள் அந்தந்தச் சமஸ்தானங்களின் தூதுவர்களாவே கருதப்பட்டனர். அவர்களுடைய கருத்துக்களையும், கட்டளைகளையும் ப்ண்டர்ஸ் ராட் சபையார் ஏற்றுக் கொண்டாலும் எல்லாத் தகுதிகளையும் அதிகாரங்களையும் கொண்டதாய் அச்சபையே விளங்கியது. அத்தோடு சமஸ்தான சிற்றரசர்களின் பட்டத்து விவகாரங்களிலும் தலையிடும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. ஏனெனில் ஒரு சிற்றரசன் அவனுடைய சமஸ்தானத்தின் சட்டப்பூர்வமான தலைவன் என ஒப்புக் கொள்ளப்பட்ட பின்புதான் பண்டர்ஸ்ராட் அவனது பிரதிநிதித்துவத்தை ஏற்றுக் கொண்டது. இத்தகைய முன் உதாரணத்தைத் தற்போது நமது சமஸ்தான மன்னர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

*கர்னல் ஹக்சர் அவர்கள் :* ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

*டாக்டர் அம்பேத்கர் :* பண்டர்ஸ்ராட் பெற்றிருந்த உரிமைகளை இந்தியாவில் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு அளிக்க அவர்கள் முன் வருவார்களா? என்பதே என் ஐயப்பாடாகும். ஆனால் மேலவைத் தலைவர் அவர்களே, இக் கேள்வியை முன் உதாரணங்கள் வைத்தோ அல்லது ஒப்பு நோக்கியோ விவாதிக்க விரும்பவில்லை. முற்றிலும் வேறான அளவுகோல் கொண்டு வேறுவிதமான அடிப்படையிலிருந்து நான் இதனை ஆராய விரும்புகின்றேன். நாம் இந்தியாவிற்கென்று ஒரு பொறுப்புள்ள இந்திய அரசியல் சட்டத்தை வகுக்கப் போகிறோம் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. இதற்கிடையில் நாம் பல்வேறுவிதமான செய்திகளைப் பற்றிப் பேசினாலும் இந்தக் குழுவின் முக்கிய முயற்சி இந்தியாவிற்கென ஒரு அரசியல் சட்டத்தை அமைப்பதே ஆகும். இதன் அடிப்படையில் இந்தப் பொறுப்புபார்ந்த நடைமுறைக்கு எவ்வித நெகிழ்வும் அல்லது இலக்கும் தரும் எத்தகைய சலுகைகளும் இங்குத் தரப்படக் கூடாது; திட்டங்கள் எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு பார்க்கும் பொழுது தங்களின் பிரதிநிதிகளை நியமனம் செய்ய வேண்டும் என்ற சமஸ்தான மன்னர்களின் கோரிக்கைகளை நீங்கள் ஏற்கலாகாது.

*கர்னல் ஹக்சர் :* எந்தச் சபைக்கு நியமனம் செய்யக் கூடாது?

*டாக்டர் அம்பேத்கர் :* எந்தச் சபைக்குமே நியமனம் செய்யக் கூடாது, ஏனென்றால் கூட்டாட்சிச் சட்டமன்றக் கட்டமைப்புத் துணைக் குழுவின் அறிக்கையை நான் படிக்கும் பொழுது சமஸ்தான மன்னர்கள் அனைவருமே சட்டமன்றத்திற்குள் வரவும் கூட்டாட்சி அரசுத் துறைகளில் புகவும் விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்பதையும், அவர்கள் கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதில் எத்தகைய இலாபமும் இல்லையென்று கருதுவதால் அரசுத் துறைகளில் அங்கம் வகித்தால்

இலாபம்* அடையலாம் என்று கருதுவதாலுமே இந்நாட்டில் அரசுத் துறைகளில் பங்கேற்க முற்படுகிறார்கள். இக் கருத்தினை நாம் மனதில் கொண்டு ஆராய்கின்றபோது கூட்டாட்சி தட்டமைப்பு துணைக் குழு கூறியுள்ள மக்களுக்குப் பொறுப்புள்ள ஒரு மத்திய சட்ட மன்றம் இருக்க வேண்டும். அது செய்கின்ற, எத்தகைய செயலுக்கும் ஒட்டுமொத்தமாக அதன் உறுப்பினர்கள் எல்லோருமே பொறுப்பேற்க வேண்டும் என்பதாகும். பிரிட்டிஷ் இந்தியாவில் பிரதிநிதிகள் யாவரும் தேர்தல் மூலம் வெற்றிபெற்றுக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்திற்குள் புகுவதும் சமஸ்தான மன்னர்களின் பிரதிநிதிகள் கூட நியமன முறையில் கூட்டாட்சிச் சட்ட மன்றத்திற்குள் புகுவதும் இருவேறு பாதைகளாகும். சமஸ்தான மன்னர்களின் பிரதிநிதிகளை நியமனம் செய்யும்போது அவ்வாறு நியமனம் செய்பவர்களின் கட்டளைப்படிதான் அவர்கள் செயல்பட வேண்டும். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநிலங்களிலிருந்து கூட்டாட்சி மன்றத்திற்குச் செல்பவர்கள் மக்களின் பிரதிநிதிகளாகவே செயல்படுவார்கள். இவ்வாறு இரு பாதைகளிலிருந்தும் செல்லும் பிரதிநிதிகளின் கடமைகளும் உரிமைகளும் ஒரேவிதமாக இல்லாமல் வேறுபடுவதைக் காண்கிறோம். இதனால் இவர்களால் எதிர்கால இந்தியாவை ஒருமுகமாய் உருவாக்க முடியாது. இவர்களால் அமைக்கப்படும் அரசும் ஒரு பொறுப்புள்ள அரசாய் இருக்காது.

சமஸ்தானங்களிலிருந்து மன்னர்களின் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டுக் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குச் செல்கின்றபோது அவர்களுக்குப் பொறுப்புள்ள அரசாங்கத்தை அமைக்கும். உரிமையும் இல்லாமல் போய்விடுகிறது.

*சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* நேற்று நியமனம் செய்யப்பட்ட அலுவலர் குழுவினை தாக்கிப் பேசினார். அதற்கு ஒரேகாரணம் அவர்கள் பொறுப்புள்ள உறுப்பினர்களாகக் கருதப்பட்டாமையே ஆகும். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும் அரசு அலுவலர்களைச் சட்ட மன்றத்தினருக்கு பொறுப்பாளி ஆவார் எனக் கூறுகின்றனர். இதனால்தான் சாப்ரூ அவர்கள் அலுவலர் குழுவினரைச் சட்ட மன்றத்தில் ஆதரிக்காமல் விட்டுவிடுகின்றார். இந்த இடத்தில் நான் ஒரு வினாவை எழுப்ப விரும்புகிறேன் நியமனம் செய்யப்படுவோர் அதிகாரிகள் அணிக்குச் சாதகமாகப் பேச மாட்டார்கள் என்பது என்ன உறுதி எனக் கேட்டால் அது உறுதியில்லை என வெளிப்படையாகவே கூறுவேன். ஏனெனில் சமஸ்தான மன்னர்கள் தங்களுடைய சமஸ்தானங்களை ''மேதகு மன்னர் ஆட்சி'' என்ற முறையில்தான் ஆண்டு வருகிறார்கள். இம்முறைப்படி மேதகு மன்னர் ஆட்சி முறைக்கு முக்கிய நியமனங்கள் செய்வது குறித்து அவர்களுக்கு அறிவுரை கூறும் அதிகாரம் பிரிட்டிஷ் அரசுக்கே உண்டு.

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா:* இது ஓரிரு விஷயங்களில்தான்; எல்லாவற்றிற்கும் அல்ல.

*டாக்டர் அம்பேத்கர் :* ‘பட்லர்’ குழுவின் அறிக்கையிலிருந்து தான் இவ்வாறு என்னால் சொல்ல முடிந்தது.

*கர்னல் ஹக்சர் :* அவ்வாறாச் சொல்லியிருக்கிறார்கள்?

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா :* அவ்வாறாக் கூறினார் கள்? அவ்வாறு கூறியிருந்தால் அது தவறான கருத்தாகும். வேறு எதற்கோ இதைக் கூறியிருக்கலாம்.

*டாக்டர் அம்பேத்கர் :* நான் சரியாகக் கூறியிருப்பதாகவே நினைக்கிறேன். அதை அவ்வாறுதான் புரிந்து கொண்டிருக்கிறேன். நாம் அமைக்கப் போகும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மேலாண்மை அதிகாரம் என்பது ஒதுக்கப்பட்ட துறைகளுக்கே உரியதாகும். ஒருக்கால் இப்பொழுது அரசியல் துறை மேலாண்மை அதிகாரத்தைப் பெற்றுள்ளதால் சமஸ்தான மன்னர்களுக்குக் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை நியமனம் செய் யும்போது தகுந்தபடி அறிவுரை கூறும் அதிகாரம் பெற்றுள்ள தெனலாம். அப்படியானால் அதன் விளைவு என்னவாகும்.

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா :* அது அப்படி இருக் காது இருக்கவும் கூடாது. அப்படி இருந்தால் சமஸ்தானங்கள் எதுவும் அதை ஒப்புக் கொள்ளாது.

*டாக்டர் அம்பேத்கர் :* நான் சொல்லப் போவது இதுதான். ஒருக்கால் அரசியல் துறை சமஸ்தான மன்னர்கள் தங்களுடைய பிரதிநிதிகளைக் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு நியமனம் செய்து அனுப்புவது ஒரு முக்கியமான பணி எனக் கருதினால் அப் பொழுது அந்த அரசியல் துறை தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்திச் சுதேச மன்னர்களுக்கு அறிவுறுத்துமானால் என்ன நிகழும்? இதனை என்னால் சரிவரக் கணிக்க முடியவில்லை, நியாயம் கூறவும் முடியவில்லை. அவ்வாறு நியமனம் செய்து வருகின்ற சுதேச மன்னர்களின் பிரதிநிதிகள் அலுவலக அணியைப் போலவே வேறொரு இடத்திலிருந்து செயல்படுவார்கள்.

*கர்னல் ஹக்சர் :* அது அவ்வாறு நடக்காது.

*டாக்டர் அம்பேத்கர் :* கனம் தலைவர் அவர்களே! இந்த இடத் தில் நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்...

*சர் மெக்கன்ஜி தாதாபாய் :* ஆனால் இந்தச் சிக்கலுக்குத் தாங்கள் வழிவகை கூறவில்லையே.

*டாக்டர் அம்பேத்கர் :* இந்தச் சிக்கலைத் தீர்க்க ஒரே வழி தேர்தல் முறைதான் (நியமன முறையல்ல).

*கர்னல் ஹக்சர் :* டாக்டர் அம்பேத்கர் அவர்களே சற்று முன்பு நீங்கள் பட்லர் குழுவின் அறிக்கையைப் பற்றி ஏதோ குறிப்பிட் டீர்களே.

*டாக்டர் அம்பேத்கர் :* அதைப் பற்றிப் பின்பு கூறுகிறேன்.

*கர்னல் ஹக்சர்:* இதை நான் ஏன் கேட்கிறேன் என்றால் குறிப்பிடத்தக்க மாநிலங்களுக்கான நியமனங்களைச் செய்வது அரசியல் துறைதான் என அவ்வறிக்கைக் கூறுவதாக நீங்கள் சொல்கிறீர்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* கர்னல் ஹக்சர் அவர்களே, நமது விவாதம் திசைமாறிப் போக வேண்டாம். மேலாண்மை அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை என்றால் வேறு பல செல்வாக்குகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

*கர்னல் ஹக்சர்:* உங்கள் நிலையிலிருந்து நீங்கள் விலகுகிறீர்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை. நான் அவ்வாறு விலகிச் செல்லவில்லை நான் உங்களுக்கு மேற்கோள் காட்டுகிறேன்.

கனம் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்த ஒரு கருத்தை மீண்டும் இங்கே வலியுறுத்த விழைகிறேன். இந்தியா முழுமைக்குமாக ஒரு கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கவே நாம் ஆங்கு முயன்று கொண்டிருக்கிறோம். ஆனால் ஒற்றையாட்சி முறை, கூட்டாட்சியாக மாற்றும் ஒரு நடவடிக்கைக்காக மட்டும் இங்கு நாம் அமர்ந்திருக்கவில்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன்.

*தலைவர்:* எந்த ஆட்சியாக இருந்தால் என்ன; அது நல்லாட்சியாக இருந்தால் போதும் என்றே சில மக்கள் கூறுவார்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம்; ஆனாலும் நாமெல்லாம் ஒரு நல்லாட்சியை அமைப்பதோடு அது பொறுப்புள்ள அரசாங்கமாக இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறோம் என நான் கருதுகிறேன். ஆகையினால் ஒருசிலவற்றை விட்டுக் கொடுத்தேனும் அத்தகைய கூட்டாட்சி முறையைக் கொண்டு வருவதை நான் ஒப்புக் கொள்கிறேன். அத்தகைய சலுகைகளுக்கோ சமாதானத்திற்கோ நான் ஆளாகமாட்டேன் எனக் கூறியுள்ளேன். நாம் உருவாக்கப் போவதெல்லாம் கூட்டாட்சி முறையில் அமைப்பு உருவமேயாகும். அத்தகைய ஆட்சி முறையில் பொறுப்பாண்மை இல்லையென்றால் அஃதொரு உயிரற்ற உடலாகவே கருதப்படும். நான் வெளிப்படையாகவே பேசுகிறேன். ஏன் இந்த சுதேச மன்னர்கள் தேர்தல் முறையை எதிர்க்கிறார்கள் என்பதை உண்மையிலேயே என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பண்டைய ஜெர்மானியப் பேரரசில் இருந்த கூட்டாட்சி முறையில் ஒவ்வொரு மாநில அரசும் உறுப்பாண்மை ஏற்றிருந்தது. ஆனால் அவ்வாட்சியில் கீழ்ச்சபையில் ''ரேயிஸ்டாக்'' மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே இடம் பெற்றிருந்தார்கள். ஜெர்மனியில் இருந்த சிற்றரசு மாநிலங்கள் (சமஸ்தானங்கள்) தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். அத்தொகுதிகளிலிருந்துதான் மக்கள் பிரதிநிதிகள்

தேர்ந்தெடுக்கப்பட்டு கீழ்ச்சபையாகிய ''ரேயிஸ்டாக்'' குக்கு அனுப்பப் பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திலும் ஆட்சி புரிய அரசாங்கம் இருந்திருக்க வேண்டும். அத்தகைய ஆட்சி முறையைத் தான் நாம் இங்கு அமைக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. நான் சொல்வதெல்லாம் சமஸ்தானங்கள் ஒவ்வொன்றும் பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும். அந்தந்தத் தொகுதிகளில் உள்ள மக்கள் சமஸ்தான பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் களே கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் இடம்பெற வேண்டும். அவர்கள் சுதேச மன்னர்களின் விஷயங்களை மட்டுமோ அல்லது சமஸ்தானங்களின் விஷயங்களை மட்டுமோ இங்கு விவாதிக் காமல் இந்தியா முழுவதிலும் உள்ள பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் தங்களுடைய நோக்கத் திற்காகவே பாடுபடும் சுதேச மன்னர்களின் பிரதிநிதிகளின் நோக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

*சர் மெக்கன்ஜி தாதாபாய்:* இது சிறிய சமஸ்தானங்களுக்கும் பொருந்துமோ?

*டாக்டர் அம்பேத்கர்:* கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு நடத்தப் படும் தேர்தலினால் சுதேச மன்னர்களின் சமஸ்தானங்களுக்கும் ஆட்சிக்கும் எத்தகைய தொந்தரவும் வரக் கூடாது என்பதையே நான் வலியுறுத்திக் கூறினேன். அவர்கள் இதனை ஏற்றுக் கொள் வார்களேயானால் கீழ்ச்சபையில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பது பற்றிப் பிரச்சினையை நாம் ஆராயலாம். அதற்கு முடிவு காண்பது மிகவும் சுலபமாகும். மேல்சபைக்கு அவர்களின் பிரதிநிதிகளை அனுப்புவது என்ற பிரச்சினையும் உண்மை யிலேயே தீர்க்கப்படாமல் இருக்கும் ஒன்றாகும். அதுவும் தீர்க்கப் பட்டுவிட்டால் அவர்களைப் பற்றிய எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்தபாடாகும். மேல்சபைக்கு அவர்களின் பிரதிநிதிகளை அனுப் பும் போது நியமன முறையைக் கையாளக் கூடாது. தேர்ந்தெடுத்துத் தான் அனுப்ப வேண்டும். இதற்கு வேறு இரு வழிமுறைகளையும் கையாளலாம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வழிமுறை என்னவென்றால் நார்வேதியின் திட்டமாகும். அத் திட்டப்படி நாம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் சபையை அமைக்க வேண்டும். அச்சபையிலிருந்து மேலவைக்கு உறுப் பினர்களை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். இம் முறையால் சமஸ்தானங்களிலிருந்து நேரடியாக மேலவைக்குப் பிரதிநிதிகளை நியமனம் செய்யும் முறை தவிர்க்கப்படுகிறது. அல்லது இந்த, என்து யோசனை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் வேறொரு வழிமுறையையும் நான் கூறலாம் என நினைக்கிறேன். சமஸ்தான மன்னர்கள் தங்களின் பிரதிநிதிகளின் பட்டியலைக் கொடுக்கலாம். அந்தப் பட்டியலில் உள்ளவர்களிலிருந்து கூட் டாட்சிச் சட்டமன்றத்திற்கு வேண்டிய பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளலாம்.

*மேன்மை தங்கிய பிக்கானீர் மகாராஜா :* அவ்வாறாயின் அவர்களைத் தேர்ந்தெடுப்பவர் யார்?

*டாக்டர் அம்பேத்கர் :* கீழ்ச்சபையினர்தான் அவர்களைத் தேர்ந் தெடுக்க வேண்டும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய கருத்தை நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். மேலே கூறிய எந்த வழியிலும் சமஸ்தானங்களிலிருந்து பிரதிநிதி களை அனுப்பும்போது நியமன முறை கட்டாயம் இருக்க கூடாது என்பதே எனது கருத்தாகும். கனம் மேலவைத் தலைவர் அவர் களே, இப்பொழுது நான் வேறொரு தலைப்பின் செய்தியை விவாதிக்க போகிறேன். அதாவது தனிப்பட்ட முறையில் அக்கறை காட்ட வேண்டிய செய்தியைப் பற்றி விவாதிக்க விரும்புகிறேன்.

*குழுத் தலைவர் :* கூறுபாடு எண் 5-ல் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்ட வேண்டிய தனித் தொகுதிகள் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே நீங்கள் அதைப் பற்றிப் பேசலாம்.

*டாக்டர் அம்பேத்கர் :* ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களைத் தனிப் பட்ட முறையில் அக்கறை காட்டப்பட வேண்டியவர்கள் என்ற கூறுபாட்டின் கீழ் நான் பேச விரும்பவில்லை என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒடுக்கப்பட்ட இனத்தவர்கள் அரசியல் அடிப்படையில் முஸ்லீம்களைப் போல வும் அல்லது கிறிஸ்தவர்களைப் போலவும் தனிப்பட்ட இனத்தவர் களாகவே கொள்ளப்படுதல் வேண்டும். அவர்களுக்கு மாநில சட்டமன்றங்களில் உள்ள மேல் அவைகளிலும், மத்தியில் உள்ள மேல் அவை, கீழ் அவை ஆகிய இரு சபைகளிலும் இவர்களுக்குக் கட்டாயமாகப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்.

*குழுத் தலைவர் :* அதே உரிமை வேண்டுமென்று நீங்கள் கூறும்போது மற்றவர்களைப் போலவே அதே எண்ணிக்கை யிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கருது கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர் :* இல்லை, அந்த அளவில் எண்ணிக்கை யில் இருக்க வேண்டுமென நான் கூறவில்லை. அத்தகைய கொள்கையின் அடிப்படையில் இதனைப் பொதுவாகக் கையாள வேண்டும்.

*குழுத் தலைவர் :* அதையேதான் சொல்லியிருக்கிறீர்கள், மிக்க நன்றி.

*டாக்டர் அம்பேத்கர் :* இப்பொழுது நான் நமக்குத் தொடர் புடைய வேறொரு செய்தியைப் பற்றிக் கூற விரும்புகிறேன். அது பற்றிப் பேசவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அஃதாவது தொழில், வாணிபம் நிலக்கிழார்கள் மற்றும் பல்கலைக் கழகங்கள் பற்றியதாகும்.

*டாக்டர் ஸஃபாத் அகமத்கான் :* பல்கலைக்கழகங்களுக்கா?

*டாக்டர் அம்பேத்கர் :* இல்லை. பல்கலைக்கழகங்களுக்கு கிடையாது. இந்தத் தனிப் பிரிவினரின் பிரதிநிதித்துவத்திற்கு என்னால் இசைவளிக்க முடியாது. முதலாவதாக நிலக்கிழார்களுக்கு ஏன் பிரதிநிதித்துவம் தேவை என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு நிலக்கிழார் பொதுத் தொகுதியில் நின்று மக்களுடைய வாக்குகளைப் பெறுவதில் அவருக்கென்ன இடையூறுகளும் இயலாமைகளும் உள்ளன என்பது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வாறு பொதுத் தேர்தலில் நின்று மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவதை எதுவும் தடுக்கவில்லை. பிறநாடுகளில் எடுத்துக்காட்டாக இங்கிலாந்திலும், மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் இத்தகைய 'தனிப் பிரதிநிதித்துவம்' இல்லை. தொழில், வாணிபம் இவற்றில் ஈடுபட்டுள்ளோரும், நிலக்கிழாரும் பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது அந்நாடுகளில் உள்ள தேர்தல் முறையாகும். அவர்களுக்கென்றே தனிப்பட்ட முறையில் அங்கு எந்தச் சலுகையும் கிடையாது. அதே முறையை இந்தியாவிலும் கையாளலாம் என்று நான் நினைக்கிறேன். மற்றபடி பிற இனங்களுக்குத் தனிப்பட்ட முறையில் கொடுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளையும் நான் எதிர்க்கிறேன். ஏனென்றால் அத் தொகுதிகள் யாவும் மிக மிகச் சிறியவையாகவும் உள்ளன. இவற்றில் போட்டியிடுபவர்கள் எத்தகைய சிரமும் இன்றி வெற்றிபெற வாய்ப்புள்ளது. அத் தொகுதியில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே உள்ளதால் மற்ற தொகுதிகளை நோக்கும் பொழுது அத்தொகுதிகளில் எத்தகைய சிரமமும் ஏற்படுவதில்லை. மிகச் சுலபமாக மேலவைக்குள் புகுந்துவிடும் அவர்களுக்கு எந்தெந்த இனங்களுக்கு வாக்களிக்க வேண்டுமென்ற தெளிவு இல்லாமல் எதற்கெடுத்தாலும் வாக்களிக்கும் பண்பாடே உள்ளது. இத்தகைய குறைபாட்டினை நான் பம்பாய் மேலவையில் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். அங்குத் தொழில், வாணிபம் ஆகிய இனங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்களெல்லாம் பழமையை விரும்பும் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவே அந்தத் தொகுதியின் பிரதிநிதித்துவத்தை அவர்களே ஏகபோகமாக அனுமதித்து வருகிறார்கள்.

*திரு. ஜெயகர் :* அரசியல் ரீதியாகவா?

*டாக்டர் அம்பேத்கர்:* சமூகத்தில்தான். இத்தகையோர் ஒதுக்கப்படும் தொகுதிகளைத் தாங்கள் பைக்குள்ளே போட்டுக்கொண்டு, மிக எளிதாக மேலவை உறுப்பினராகிவிடுகின்றனர். இவ்வாறு நியமனமுறையில் மேலவைக்கு வரும் இவர்கள், முற்போக்கு முறைகளைக் கொண்டுவரும்போது, பிற்போக்குச் சக்திகளின் கரங்களை வலுப்படுத்துகின்றனர். இதனால் சுதந்திரம், முன்னேற்றம் எனும் கோட்பாடுகள் இவர்களால் முடிவுகட்டப்

படுகின்றன. எனவேதான், இட ஒதுக்கீட்டு முறையை நான் எதிர்க்கிறேன். தொழிலாளர், வணிகர் நிலக்கிழார் தொடர்பான மசோதாக்களைச் சட்டமன்றத்தில் கொண்டுவரும்போது, அதனால் அவர்களின் நலம் பாதிக்கப்படும் என அவர்கள் எண்ணினால், அவர்களின் பாதுகாப்புக்கான வழிமுறைகளை, மேலவையிலோ அல்லது கீழவையிலோ அவர்கள் கூறலாம். இத்தகைய கருத்து நிலைமையை வேண்டுமானால் அவர்களுக்குத் தரலாமேயொழிய அவர்கள் உறுப்பினராகும் உரிமையை வழங்குவதும், மசோதா மீது வாக்களிக்கும் உரிமையை வழங்குவதும் தேவையற்றதாகும். இத்தகைய விவாதம் நடக்கும்போது, சட்டமன்றத்திற்குள் வந்து விவாதங்களைக் காதுக்குளிரக் கேட்கலாம்.

அடுத்து, தொழிலாளர்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இது பற்றி நான் பேசுவதைத் தொழிற் சங்கத் தலைவர் என் அருமை நண்பர் ஜோஷி என் கருத்துக்களை ஏற்பாரோ, ஏற்கமாட்டார்களோ தெரியவில்லை. மகாத்மா காந்தியாரின் ஒத்துழைப்புடன் 'வயது வந்தோருக்கு வாக்குரிமை' என்ற நமது இலக்கு இந்த மாநாட்டிலேயே முற்றுப் பெறுமானால், அதனை உடனடியாக நாம் நடைமுறைக்குக்கொண்டுவந்து விடலாமென்பது என் சொந்தக் கருத்தாகும். அப்படி, 'வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமையுண்டு என்பது நடைமுறைக்கு வரும்போது, தொழிலாளருக்கெனத் தனிப்பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டியது அவசியமில்லையென்றாகிவிடும். ஆனால், மிகப் பெரிய அளவிலான தொழிலாளர் வர்க்கத்திற்கெனத் தனிப் பிரதிநிதித்துவம் நாம் அளிக்காமல் போனால் அவர்களைச் சட்ட மன்றத்திற்கு, 'வெளியே' நிறுத்துவோமானால் அவர்களால் அரசாங்கத்தையும், அதன் செல்வாக்குகளையும் கட்டுப்படுத்தி, தங்களுக்கு வேண்டிய நன்மைகளையும், முன்னேற்றங்களையும் பெற முடியாது. அதன்பிறகு, தொழிலாளர்களுக்கெனத் தனிப் பிரதிநிதித்துவமளிக்கக் கூடிய கூறுபாடுகளைச் செய்வது அவசியமாகிறது. பல்வேறுபட்ட தொழிலாளர் சங்கங்களுக்கு அங்கிகாரமளித்து, அவற்றைத் தேர்தல் குழுபோல் ஒன்றிணைத்த பின்தான் இம்முறை வெற்றிபெறும். அத்தகைய சங்கங்களின் குழுமம் தங்களுக்குப் பிரதிநிதிகளைப் பெற்றாக வேண்டுமென்ற நோக்கத்தோடு இவ்வாறு ஒன்றுபடவேண்டும்.

அடுத்து, 'நியமன உறுப்பினர்' என்ற தலைப்பின் கீழ்ப் பேச முற்படுகிறேன். இந்த நியமன உறுப்பினர்கள் கூட்டாட்சிச் சட்ட மன்றத்தில் ஒரு அணியாக அமர்ந்துகொண்டு, அரசுத் துறைகள் தொடர்பான வாதங்களுக்குச் சார்ந்து பேசவே உள்ளனர் என நம்புகிறேன். மாநிலச் சட்டமன்றங்களில் நிலவும் இரட்டை ஆட்சியில் அரசுக்கென ஒதுக்கப்பட்ட துறைகளைச் சார்ந்து பேசியே செயல்படுகின்றனர். நான் வெளிப்படையாகவே சொல்லி விடுகிறேன்: இந்த நியமன அணி அலுவலர்களைக் காணும்போது

எனக்கு எரிச்சலாகவே இருக்கிறது. மாண்டேகு-செம்ஸ்போர்டு அரசியல் சீர்திருத்தச் சட்டத்தின்படி (1919) தான் மாநில அரசாங்கங்கள் மக்களுக்குப் பொறுப்பேற்று நடக்கும் முறை ஏற்பட்டது. அதனை முழுவதுமாக அழித்தொழிப்பதற்காகவே இந்த நியமன முறையில் வரும் அலுவலர் அணி வந்தது. இந்த நியமனமுறைதான் எல்லாவற்றையும் நெறி பிறழச் செய்து விட்டது! இந்த நியமன அணியினர்தான் மாநிலங்களில் அரசு சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை எதிர்த்து வெற்றிப் பெறச் செய்கின்றனர். இந்த அணிதான் எல்லாவிதமான அணிக ளோடும், மக்களோடும் கூட்டணி சேர்ந்து கொள்ளுகிறது. அவ் வாறு, சேரும் அணிகளும் மக்களும் இவ்வணிக்கு உதவும் என்பதற் காக அல்ல, எவை தங்களுக்குச் சிறு லாபம் கிடைக்குமென்றாலும் தங்களைத் தாங்களே விற்க முற்படுகிறதோ அத்தகைய அணிகளே இத்துடன் கூட்டுச் சேருகின்றன. இதனால்தான், நான் தொடக்கத் தில் கூறியதைப்போலவே, இந்த நியமன உறுப்பினர்களான அலுவலர் அணியை மிக மிக வலுவாக எதிர்க்கிறேன்.

அடுத்து நான் கூறப்போவது என்னவென்றால், நியமன உறுப்பினர்களான அலுவலர் அணி முடியாட்சித்துறைகளுக்காக சார்ந்து பேச வேண்டுமென்பதற்காகவே ஏற்பட்டதென்பதையும் நான் தேவையற்றதெனக் கருதுகிறேன். மாநில ஆட்சியில் உள்ள 'ஒது'க்கப்பட்ட துறைகளைச் சார்ந்து பேசவும், பாதுகாக்கவும் பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

பிரிவு 72-டியின் படி இந்த ஒதுக்கப்பட்ட துறைகள் ஒருவரின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன. அவரை அவருடைய பதவியி லிருந்து யாரும் நீக்கிவிட முடியாது; அவருக்குச் சட்டமன்றம் சம்பளம் கொடுக்கவில்லை;

இரண்டாவதாக, ஒதுக்கப்பட்டத் துறைகளுக்குச் செலவிடப் படும் செலவினங்கள் தேவைதானா, அவற்றின் பாதுகாப்புக்கு எவ்வளவு தேவை போன்றவற்றை ஒதுக்கீடு செய்வதைக் கூட்ட வும், குறைக்கவுமான அதிகாரத்தை ஆளுநர் பெற்றிருக்கிறார்;

மூன்றாவதாக, ஒதுக்கப்பட்டத் துறைகளின் திறமையை நிலைப் படுத்த கொண்டுவரப்பெறும் மசோதாக்களைப் பரிசீலித்து ஒப்பு தல் அளிப்பவர் ஆளுநரே;

கடைசியாக, ஒரு மசோதாவைக் கொண்டுவந்து, சட்டமன்றம் பெரும்வாரியான வாக்குகளால் அதனை நிறைவேற்றினாலும், ஆளுநருக்கு அஃது தேவையற்றதெனப்பட்டால் அம்மசோதாவைத் தனது வெட்டுப்பேராணையால் நிறைவேறாமல் செய்யும் அதி காரம் அவருக்குண்டு. கனம் தலைவர் அவர்களே! நான் சொல்லப் போகும் கருத்து இதுதான். நான் கூறினேன் பதவியிலிருந்து சட்ட மன்றத்தில் நீக்க முடியாத, சட்டமன்றத்தால் சம்பளம் பெறாத ஒருவரின் பொறுப்பில் ஒதுக்கப்பட்ட இனங்களிலிருக்கின்றன; அவர் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்புடையவர் என்றும்,

ஆளுநர் அவற்றின் பாதுகாப்புக்காகச் செலவினங்களையும், மசோதாக்களையும் பரிசீலித்து அளிப்பவரென்றும் கூறி, இவையே, ஒதுக்கப்பட்டத் துறைகளைப் பாதுகாக்கப் போதுமானவை என்றும் கூறினேன். இதுவே, குடியரசுத் துறைகளைக் காத்து, மற்றத் துறைகளோடு ஒன்றி நிற்கப் போதுமான பாதுகாப்பாகும் என்பதே எனது மனமார்ந்த கருத்தாகும்.

*சர் தேஜ்பகதூர் சாப்ரு:* நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வியைக் கேட்கலாமா? ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பற்றி நீங்கள் யோசனைக் கூறினீர்களே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் இருக்க வேண்டுமென்று நான் யோசனைக் கூறமாட்டேன். அது பற்றிப் பிறகு பேசுகிறேன். நான் என்ன சொல்கிறேனென்றால் நியமன அலுவலர்கள் அணிக்குப் பதிலாக இத்தகைய வேறு முறைகளும் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது என்பதுதான். அதுதான் என் வாதமாகும். அரசாங்கம் குடியரசு துறைகளைப் பாதுகாக்க, ஏராளமான சட்டமன்ற, அதிகார வழிமுறைகள் இருக்கும்போது மேல் சட்ட சபையில் இத்தகைய (நியமன) அலுவலர் அணி தேவையற்றது என்பதையே நான் மீண்டும் பணிந்துரைத்துப் படைக்கின்றேன்.

இரண்டாவதாக, நான் சொல்வது இதுதான் — நியமனம் செய்யப்பட்ட அலுவலர் அணியினர் இருப்பதால் நீங்கள் வேடதாரிகளாகி நடக்கும் உண்மை நிகழ்ச்சிகளையும் மறைத்து விடுகிறீர்கள். இந்த நியமனம் செய்யப்பட்ட அலுவலர் அணி இல்லாவிட்டால் பல முயற்சிகள் சட்டமன்றத்தில் கைவிடப்பட்டிருக்கும்; தனது தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆளுநரும் தன்னிச்சை போல் பலவற்றை நிறைவேற்றியிருப்பார்; ஆனால், நியமனம் செய்யப்பட்ட அலுவலர் அணி சபையிலிருப்பதால், அங்கு எடுக்கப்படும் முடிவுகள் யாவும் பெருவாரியான வாக்குகளின் பேரிலேயே எடுப்பதாக வெளியுலகுக்குத் தோன்றும்; உண்மை என்னவென்றால் அதனுள்ளேயிருக்கின்ற சிறுபான்மை உறுப்பினர்களே அலுவலர் அணியுடன் சேர்ந்து முடிவு எடுக்கின்றனர். எனவேதான், எதிர்கால இந்திய அரசியல் சட்டத்தில் இத்தகைய நியமன உறுப்பினர் அலுவலர் அணி தேவையற்றதென்று பணிந்துரைக்கிறேன்.

கடைசியாக நான் குறிப்பிட வேண்டியது 'உறுதி மொழியெடுத்தல்' என்ற பொருள் பற்றியதாகும். என்னுடைய சொந்த கருத்துப்படி இப்பொருள் பற்றிப் பேசுவதென்பது மிகப்பெரிய செய்தியாகும். இது பற்றிப் பேசுவதென்பது இந்தியாவுக்கு வேண்டிய 'பொதுக் குடியுரிமை' என்பது பற்றிய மிக விரிந்த பொருள் பற்றிப் பேசப்படுவதாகும். எனக்களிக்கப்பட்டுள்ள இந்தக் குறுகிய நேரத்தில் இப்பொருள் பற்றிய முழுக் கருத்தையும் என்னால் பேசமுடியுமென்று நான் நம்பமுடியாது. 'பொதுக் குடி

யுரிமை' இல்லையென்றால் (இந்தியாவில்) உண்மையான கூட்டாட்சி இருக்கமுடியாது; அதனால், நான் இது பற்றிப்பேசுவதற்கு என்றே தனியாக வேறொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தால் விரிவாகப் பேச முடியுமென்றும், அத்தகைய சந்தர்ப்பத்தை எனக்கு ஒதுக்கித் தரும்படியும் வேண்டுகிறேன். ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தில் 'பொது குடியுரிமை' இல்லாதபோது அதனைக் கூட்டாட்சி அரசியல் சட்டம் என அழைப்பது பொய்மையானக் கூற்றேயாகும். போதிய நேரமின்மையால், இப்பொருள் பற்றி மேலும் விளக்கமாகக் கூறமுடியவில்லையெனக் கூறி, இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

## இருபத்தைந்தாவது அமர்வு—செப்டம்பர் 18, 1931

### தலைப்பு: 2

*(கூட்டாட்சிச் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பானவை)*

* *டாக்டர் அம்பேத்கர்:* திரு. காந்தியாரிடம் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன் கூட்டாட்சிச் சட்டமன்றம் அல்லது கூட்டாட்சி நிர்வாகம் பற்றிக் காங்கிரசு இதுவரை ஒருபோதும் நினைத்துப் பார்த்ததேயில்லை. இந்தியக் கூட்டாட்சி, பிரிட்டிஷ் பேரரசுடன் இணைந்திருக்கவேண்டுமா அல்லது சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமா என்ற வினாவை மட்டுமே காங்கிரசு கேட்டு நின்றது. அதனடிப்படையில் நேற்று திரு. காந்தியார் கூறியது அவருடைய சொந்த கருத்தாக இருக்கலாமெனக் கருதுகிறேன். அல்லது அவர் அதனைக் காங்கிரசின் கருத்துதான், அதையே நான் பிரதிபலித்தேன் என்றாராயென்பது எனக்கு விளங்கவில்லை.

இரண்டாவதாக அவரிடம் மற்றொரு கேள்வியையும் கேட்ட விரும்புகிறேன். இதுவரையில் காங்கிரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மக்களுக்குத் தெரிந்திருக்கும்போது எனக்குத் தெரிந்தவரை இதுபற்றிக் காங்கிரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லையே! காங்கிரசு, இதுபற்றித் தனக்குள்ளேயே இரகசியமாகப் பேசிக்கொண்டதோ? இதனால்தான் இந்தக் கேள்வியை நான் கேட்க வேண்டியுள்ளது. நேர்முகத் தேர்தல் பற்றி நான் பேசும்போது, அவர் (காந்தி) நேற்று அதை ஒப்புக் கொண்டாரெனக் கருதுகிறேன். இதனைத் திருமதி அன்னிபெசன்ட் அம்மையார் தன்னுடைய தன்னாட்சி மசோதாவில் சேர்க்கவில்லையே!

* கூட்டாட்சிக் கட்டமைப்புக் குழு மற்றும் சிறுபான்மையினர் குழு. தொகுதி 1. பக்கம் 175.

கூட்டாட்சிச் சட்டமன்றம் அமைக்கும் முறையைக் காங்கிரசு நிச்சய மாக நிராகரிக்கவில்லையே!

★ ★ ★ ★ ★

## II

* *கனம் மேலவைத் தலைவர்:* டாக்டர் அம்பேத்கர் மற்றொரு கருத்தை மிக வலுவாக வலியுறுத்தியுள்ளார். இதைச் சில உறுப் பினர்களும் வரவேற்பார்களென்பதால் நானும் அது பற்றிக் கூற விரும்புகிறேன். மாநிலங்களுக்கென ஒதுக்கப்படும் துறைகளுக்குத் தனியே வாக்கெடுப்பு நடக்க வேண்டுமென்ற கோட்பாட்டின்படி, வாக்கெடுப்பு நடக்காதெனத் தெரிந்தால், நடைமுறையிலுள்ள நியமனம் செய்யப்பட்ட அலுவலர் அணியைப் போன்ற ஒரு புதிய அணியை உருவாக்கலாம். அத்தகைய அணியை அமைப்பதில் அரசியல் துறை பெரும்பங்கு ஏற்கலாமெனவும் யோசனைக் கூறப் பட்டது. ஐயா! அரசியல் துறையில் பங்கேற்றுள்ளோர் அரசு ஊழியர்களேயாவர். அவர்கள் உள்ளுணர்வோடும், நேர்மை யோடும், இந்தியாவிலும், வெளி நாடுகளிலுமுள்ள மற்ற அரசு ஊழியர்களைப் போலவே பணியாற்றுவர்களென்பதை நான் தயக்கமின்றிக் கூறுவேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* பொறுப்புள்ள அரசாங்கம் வேண்டு மென ஏன் விரும்புகிறீர்?

★ ★ ★ ★ ★

## IV

** *டாக்டர் அம்பேத்கர்:* சர் சாமுவேல் ஹோருக்கும் அதே கனிவை நீங்கள் காட்டலாமே? மக்கள் நிறுவனங்களைப் பிரிட்டிஷ் இந்தியாவில் நிறுவுவதில் மெத்தனமாகச் செயல்பட அவரை அனுமதித்திருக்கலாமே? அவரும் உங்களுக்கு நன்றியுடையவராய் இருந்திருப்பாரே?

*தலைவர்:* சர் சாமுவேல் ஹோரின் நன்றியுடைமையைப்பற்றி இப்போது பேச வேண்டுவதில்லை என நினைக்கிறேன். இது இக்குழுவின் கருத்தாய்விற்கு வைக்கப்பட்ட பொருளல்ல.

*பண்டித எம். எம். மாளவியா:* நானென்ன சொன்னேன் என்பதை என் நண்பர் டாக்டர் அம்பேத்கர் மறந்துவிடுகிறார். சுதேச சமஸ்தானங்களில் பிரதிநிதித்துவம் உடனடியாகப் புகுத்தப் பட வேண்டும் என்னும் என் விருப்பத்தை இருமுறை வலியுறுத்தி யுள்ளேன். அந்த விருப்பத்தை ஈடேற்றுவதில் எனது நண்பர்

---

* மேற்படி நூல். பக்கம் 184-85.

** மேற்படி நூல். பக்கம் 192-195.

டாக்டர் அம்பேத்கருக்கு நான் இளைத்தவனன்று, ஆனால் எனது விருப்பத்திற்கும் அம்பேத்கரின் விருப்பத்திற்கும் சற்று வேறுபாடு உண்டு. அவரவர் சுதேச சமஸ்தானங்களில் எப்போது எப்படி பிரதிநிதித்துவம் அமைய வேண்டும் என்ற முடிவைச் சமஸ்தான மன்னர்கள் அவரவர்களுக்கு ஏற்ற கால கட்டத்தில் புகுத்த வேண்டுமோ அப்போது புகுத்தலாமென விட்டுவிட வேண்டும்.... கனம் தலைவர் அவர்களே? சமஸ்தானங்களில் பிரதிநிதித்துவ ஆட்சியைக் கொண்டுவர வேண்டுமென்பதில் என்னைவிட விரைவு காட்டுவோர் வேறொருவரும் இருக்க முடியாது. என்னைப் போன்ற அவசரக்காரர்கள் ஒன்றை நினைவுகூர வேண்டும்....

*டாக்டர் அம்பேத்கர்:* கனம் மேலவைத் தலைவர் அவர்களே! சமஸ்தானங்களில் பிரதிநிதித்துவ ஆட்சி இருக்க வேண்டும் என்று நான் எப்போதுமே வலியுறுத்தியதில்லை. நான் சொல்வதெல்லாம் இந்திய சமஸ்தானங்களில், பிரிட்டிஷ் இந்தியாவில் இருப்பது போலவே பிரதிநிதித்துவ வாக்காளர் தொகுதிகள் இருக்க வேண்டும், அத்தொகுதிகளிலிருந்துதான் கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதாகும். சுதேச சமஸ்தானங்களில் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றம் அமைய வேண்டுமென்றும் அச்சட்டமன்றங்கள் சமஸ்தானங்களை அடக்கியாள வேண்டுமென்றும் இதனால் மக்களுடைய ஆட்சி அங்கு மலர வேண்டுமென்றும் நான் ஒருபோதும் கூறவில்லை. இவ்வாறு அமைந்த பிறகுதான் சுதேச மன்னர்கள் கூட்டாட்சியில் சேரலாம் என்பதும் என்னுடைய கருத்தல்ல.

*பண்டித எம். எம். மாளவியா:* டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்கள் வேண்டுமென்று விரும்பவில்லையென்றால் நான் அஃது வேண்டுமென்று கூறவில்லை. இதனை அவருடைய விருப்பத்திற்கு விட்டுவிடுகின்றேன். கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு வருகின்ற சுதேச மன்னர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருபவர்கள் அல்ல. இதனால் அவர்கள் மக்களுக்குப் பயனற்றவர்களாக இருக்கிறார்கள். இதனால் நான் மீண்டும் சொல்கிறேன்: அவர்களைவிட மக்களுக்குப் பயன்படுபவர்களும் நம்மோடு ஒத்துழைப்பவர்களும் நம்முடைய பணிக்கு உதாரணமாக இருப்பவர்களுமான வேறு நல்ல பிரதிநிதிகளை நாம் பெற முடியும்.

*குழுத்தலைவர்:* இதுவரையிலும் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் பேசிய பேச்சின் சாரத்தை கூறுவோமேயானால் அழிந்துபட்டத்* தொகுதிகள் எப்பொழுதும் அழிந்தே காணப்படாது என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

---

* Rottom boroughs என்பன இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்ட போது குடிபெயர்ந்து பட்டணத்திற்குச் சென்ற கிராமப்பகுதிகளாகும். மக்களே இல்லாத இந்தப் பகுதிகளுக்கும் பாராளுமன்றத்தில் பிரிதிநிதித்துவம் இருந்தது. இந்த பிரதிநிதித்துவத்தை செல்வந்தர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

*பண்டித எம். எம். மாளவியா:* தலைவர் அவர்களே, நானும் தங்களைப் போலவே உருவகப்படுத்தி எதையும் பேச முடியாது. (பிரதிநிதித்துவம் கொண்டுவருவது அந்தந்தச் சமஸ்தான மன்னர்களின் விருப்பத்திற்கே விட்டுவிட வேண்டும். தன்னிச்சையாகவே அவர்கள் செய்யட்டும், அவ்வாறு செய்தால்தான் அவர்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்குமென மாளவியா கூறினார்). ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள எனது அன்பர்களுக்கெல்லாம் நான் கூறுகின்ற பரிந்துரை என்னவென்றால், நான் பொறுமையினையும், கனிவினையும் காட்ட வேண்டும் என்பதே. அகில இந்தியக் கூட்டாட்சி முறையை ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே நாமெல்லாம் ஒத்துழைப்புத் தரவேண்டும். நமது எதிர்கால நம்பிக்கையும் அதுவேயாகும். அத்தகைய கூட்டாட்சித் துணை புரியும் பல்வேறு நிறுவனங்களை வளர்ந்திட வேண்டுமென்பதே நமது நம்பிக்கையாகும்.

*டாக்டர் அம்பேத்கர்:* இதே போன்ற அறிவுரைதான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் கூறப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தக்க சமயத்தில் விடிவு ஏற்படும்.

*பண்டிட் எம். எம். மாளவியா:* கனம் தலைவர் அவர்களே! என் நண்பர் டாக்டர் அம்பேத்கர் நான் கூறிய கருத்தைத் தவறாக எடுத்துக் கொண்டுள்ளார். அவர் என்னுடைய கருத்தை நான் நினைத்தபடிச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை எண்ணி வருத்தப்படுகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* தன்னுடைய கருத்தை எனக்குப் புரியும்படி விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*பண்டிட் எம். எம். மாளவியா:* ஒடுக்கப்பட்ட வகுப்பினர்கள் காத்திருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. 1918-ஆம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தைக் கொண்டுவர முற்படும்போது நான் எனது பரிந்துரைகளை வெளியிட்டுள்ளேன் அவற்றில் ஒடுக்கப்பட்ட மக்களின் குழந்தைகள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி கட்டாயமாக்கப்படவேண்டும் எனக் கூறியுள்ளேன். என்னைப் போலவே காங்கிரஸ் கட்சியும் அதனை வலியுறுத்தியுள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை அத்தகைய கல்வி முறை நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்திய அரசும் தொடக்கக் கல்விக்காகத் தங்கள் வருவாயின் பெரும் பகுதியைச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. "ஒடுக்கப்பட்ட வகுப்பினர்" என்ற இந்தச் சொற்கள் வரலாற்றிலிருந்து மறைந்து விட்டது. நாம் விரும்பியதைப் போலவே அவர்கள் தொடக்கக் கல்வியையும், பள்ளிக் கல்வியையும் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். காலப் போக்கில் உயர் கல்வியையும் பெற்று வருகிறார்கள். நான் காசி இந்துப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருக்கிறேன். அதில் ஒரு ஒடுக்கப்பட்ட மாணவருக்கு மற்ற மாணவர்களைப் போலவே தகுதியின் அடிப்படையில் இடம் கிடைத்தது

அவருக்கும் பிற மாணவர்களுக்கும் கொஞ்சம்கூட வேறுபாடு இல்லை. இவ்வாறு கல்வி அறிவைப் பெறும் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் டாக்டர் அம்பேத்கரைப் போலவே மிகச் சிறந்த அறிவாளிகளாகவே விளங்குகிறார்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் படித்தவனாக இருந்தாலும் என்னுடைய கல்வி இந்தச் சமுதாயத்திலே என்னை உயர்ந்த சாதிக் காரனாக ஆக்கவில்லை. நான் இன்னமும் சமுதாயத்திலே ஒரு தீண்டப்படாதவனாகவே இருக்கிறேன்.

*பண்டிட் எம். எம். மாளவியா:* நான் உங்களை வேண்டி மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஒரு தீண்டப்படாதவரே அல்ல. நீங்கள் ஒரு ஆத்ம நண்பர்: உடன் உறையும் சகோதரர். தங்களோடு பழகுவதற்கும் தாங்களைச் சந்திப்பதற்கும் பணியாற்றுவதற்கும் வைதீக இந்துக்களும் கூட மகிழ்ச்சியோடு விரும்புகிறார்கள். இன்று ஒடுக்கப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவர்களில் பிராமணர்களே அதிகமாக இருக்கிறார்கள். இந்த உண்மையை என் நண்பர் அம்பேத்கர் ஏற்றுக் கொள்வார்கள் என்றே எண்ணுகிறேன்.... ஒப்புக்கொள்வார். தலைவர் அவர்களே நான் அடுத்துப் பேசப்போவது நேர்முகத் தேர்தல், மறைமுகத் தேர்தல் என்பன பற்றியவையாகும். நேற்று மகாத்மா காந்தி இவைபற்றிக் கூறிய கருத்துக்கள் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டிருக்கின்றன. பீயில் பிரபு அவர்களின் கருத்துப்படி இந்த நாட்டில் வயதுவந்தோர் அனைவருக்குமே வாக்குரிமை தருவதென்பது மிகவும் கடினமான செயல் என்பதை மகாத்மா காந்தி அவர்களும் கூறினார்கள் ஆனால் அவர்கள் பீயில் பிரபுவின் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டார் என்று கூறமுடியாது. மறைமுகத் தேர்தல்முறைதான் சிறந்ததென்றும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால் மறைமுகத் தேர்தலின் போது வாக்காளர்கள் தான் வாக்களிக்கும் உரிமையிலிருந்து புறக்கணிக்கப் படுகிறோம் என்று நினைப்பார்கள்.

*சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* மகாத்மா காந்தி பேசியதை நான் அக்கறையோடும் கவனத்தோடும் கேட்டேன். அவர்கள் வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பது பற்றிப் பேசினார். அவருடைய பேச்சு, பண்டித நேருவின் அறிக்கையைவிடக் குறைந்தே காணப் படுகிறது. நான் தவறு என்றால் என்னைத் திருத்துவீர்களா?

*சர் சாமுவேல் ஹோர்:* பண்டித மாளவியார் அவர்களே, அஃது நேரடித் தேர்தலாகவே இருக்கும். நீங்கள் வயதுவந்தோர் வாக்குரிமைக்காக இப்போது வாதாடுகிறீர்கள். ஆனால் நேற்றைய கூட்டம் இதைப்பற்றியதல்ல. தேர்தல் நேரடியாக நடக்க வேண்டுமா அல்லது மறைமுகமாக நடக்க வேண்டுமா என்பது பற்றியதாகும். மகாத்மா காந்தி பேசியதிலிருந்து அவர் வயது

வந்தோருக்கு வாக்குரிமை என்பதையும் மறைமுகத் தேர்தல் வேண்டுமென்பதையும் விரும்பினார் என்பதை அறிகிறேன்.

★ ★ ★ ★ ★

*கர்னல் ஹரச்சர்:* நான் மேலும் பேசுவது தேவையென்று நினைக்கவில்லை. என் ஆத்ம நண்பர் பண்டித மாளவியா அவர்களின் கருத்தையே நான் மீண்டும் எதிரொலிக்கிறேன். அவர்களின் உரையின் சுருக்கத்தை மட்டும் சுருங்கக் கூற விரும்புகிறேன். இந்தியப் பேரரசு உருவாக்க நினைக்கும் கூட்டாட்சியில் எந்த ஒரு சமஸ்தானமும் தனித்து நிற்கக் கூடாது அந்தப் பேராட்சியின் நோக்கமே இந்தியா முழுவதையும் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே. இத்தகைய நோக்கத்தோடு அமைக்கப்படும் அப்பேராட்சியை நாம் எப்பாடுபட்டேனும் அமைத்தே தீரவேண்டும். அம்முயற்சிக்கு குறுக்காக எந்தத் தடைகள் வந்தாலும் அக்குறிக்கோளை நாம் அடைந்தே தீர வேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர்:* எந்தத் தடையும் ஒருபோதும் வராது, அதுவும் எங்களால் எந்தத் தடையும் வராது.

## இருபத்து ஆறாவது அமர்வு — 21 செப்டம்பர் 1931

### தலைப்பு 3

*(கூட்டாட்சிச் சட்டமன்றத்திலுள்ள இரு சபைகளுக்கிடையே நிலவும் தொடர்புகள்)*

* *டாக்டர் அம்பேத்கர்:* இக்கருத்துக்குப் புறம்பான ஒரு கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். இதனால், நான் குறுக்கீடு செய்வதாய்க் கருதவேண்டாம்.

தேவைகளை நிறைவு செய்யும் மசோதாக்கள், பண மசோதாக்கள் ஆகியவற்றைக் கீழ்ச் சபை கொண்டுவந்து, அவற்றிற்கான கருத்துக்களையும் கொடுத்த பின்னும், மேற்கொண்ட கருத்துக்களுக்காகவும், யோசனைகளுக்காகவும் அவற்றை மேல்சபைக்கு அனுப்ப வேண்டுமென்பது வழக்கமாகும், மேல்சபையும், அம்மசோதாவைப் பரிசீலித்துத் தனது கருத்துக்களையும், யோசனைகளையும் அத்துடன் இணைத்து மீண்டும் கீழ்ச் சபைக்கு அனுப்புவதும் வழக்கமென்று சர் தேஜ் அவர்கள் கூறினார்கள். ஒருக்கால் கீழ்ச் சபையானது மேல்சபைக் கூறிய கருத்துக்களையும், யோசனைகளையும் ஏற்க மறுத்தால் என்ன ஆகுமென்பதே எனது கேள்வியாகும்.

* *சர் தேஜ் பகதூர் சாப்ரு:* அப்படியானால் மேலவை அந்த மசோதாவை மறுத்துவிடும். அவ்வாறு மறுக்கும் உரிமை அச்

* மேற்படி நூல்: பக்கம் 207.

சபைக்கு உண்டு. அப்படியொரு நெருக்கடியேற்படும் போது நீங்கள் தென்னாப்பிரிக்காவை முன் உதாரணமாகக் கொண்டு அதன்படி செயல்படலாம்.

*டாக்டர் அம்பேத்கர்:* மேலவைத் தமது கருத்துக்களையும், யோசனைகளையும் மட்டுமே கூறலாமென்றிருக்கும் போது நெருக்கடி நிலை எப்படியுண்டாகும்?

*சர் தேஜ் பகதூர் சாப்ரு:* மேலவை அந்த மசோதாவை முழுவதுமாகவே நிராகரித்து விடலாம்.

*சர் முகம்மது சாஃபி:* மேலவை, முழுவதுமாகவே ஒரு மசோதாவை மறுத்து விடலாம் என்கிறீர்கள். அப்படியாயின் அதனைக் கீழவைக்கு அனுப்பி அதன் யோசனைகளைக் கேட்டபானேன்? யோசனைகளைக் கேட்டு அவற்றிற்குத் தக்கபடி அந்த மசோதாவைத் திருத்திச் சட்டமாக்குவதற்குப் பதிலாக மறுப்பதென்பது எப்படி அதன் உரிமையாகும்? மறுப்பதற்கும், திருத்தி அமைப்பதற்குமிடையேயுள்ள வேறுபாடுகளென்ன? கடைசியாக இரு அவைகளும் சேர்ந்தல்லவா ஒரு மசோதாவின் மீது முடிவெடுக்க வேண்டும்!

*சர் தேஜ் பகதூர் சாப்ரு:* இக்கால நடைமுறைக்கு ஒத்துவர வேண்டுமென்பதே இதன் முதல் நோக்கமாகும்.

*டாக்டர் அம்பேத்கர்:* நீங்கள் கூறும் யோசனைப்படிப் பார்த்தால், பண மசோதாவுக்கும் மற்ற மசோதாக்களுக்குமிடையே நிறைந்த வேறுபாடுகளிருப்பதாகத் தெரியவில்லை. ஒன்றே ஒன்று, நிதி மசோதாவைக் கீழ்ச்சபை மட்டுமே கொண்டுவரும் உரிமைப் பெற்றுள்ளது. மற்ற காரியங்களில் இரு சபைகளுமே சம உரிமைகளோடு திகழ்கின்றன.

*சர் தேஜ் பகதூர் சாப்ரு:* நடைமுறைக்கு அதுதான் ஒத்துவரும். அதைத்தான் நானும் கூறினேன்.

★ ★ ★ ★ ★

**திரு. ஜாஃபருல்லாகான்:* நடைமுறையிலுள்ளபடி இரு சபைகளிலுமுள்ள பெரும்பான்மை உறுப்பினர்கள் அல்லது மொத்தத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டால் மட்டுமே ஒரு மசோதா நிறைவேறும்.

*டாக்டர் அம்பேத்கர்:* திரு. ஜாஃபருல்லாகான் அவர்களே என் ஐயத்தைக் கேட்க அனுமதிக்கிறீர்களா? மேல்சபையும், கீழ்ச்சபையும் தனித்தனிப் பெரும்பான்மை வாக்குகளால் ஒரு விஷயம் பற்றி முடிவெடுக்கலாமென்கிறீர்களா? அல்லது இரு சபைகளிலும் கிடைக்கும் பெரும்பான்மையான வாக்குகளின் ஒட்டுமொத்தத்தைப் பெரும்பான்மை என்கிறீர்களா?

---

* *மேற்படி நூல், பக்கம் 242.*

*திரு. ஜாஃபருல்லாகான்:* தனிப் பெரும்பான்மையைத்தான் குறிப்பிடுகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* இரு சபைகளும் ஒன்றாக அமர்ந்திருக்கும் போது அவை தனிப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றுவதாக எனக்குத் தெரியவில்லையே.

*சர் முகம்மது சாஃபி:* ஏனென்றால் இரு சபைகளுக்குமிடையே கருத்து வேறுபாடு இருப்பதே இதற்குக் காரணமாகும்.

*திரு. ஜாஃபருல்லா கான்:* அடிக்கடி உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களுக்குள்ள கருத்து வேறுபாடுகளை அறிந்து கொள்ள முடிவதில்லை. இதற்கொரு காரணமுமுண்டு. இரு சபைகளின் நடத்தையுமே வேறுபட்டு நிற்பதுதான்.

★ ★ ★ ★ ★

**சர்தார் உஜ்ஜல் சிங்:* பண விஷயங்களைப் பொருத்த வரையில் இன்றுள்ள கூட்டாட்சிகளிலிருந்து சில எடுத்துக்காட்டுகளைக் காட்டி விளக்கலாமெனக் கருதுகிறேன். முதலாவதாகப் பார்ப்போமானால்—கனடா; இது ஒரு பிரிட்டிஷ் காமன்வெல்த்திலுள்ள உறுப்பினர் நாடு. அங்கே, பிரிவு 53-ஐப் பற்றி ஏற்கனவே பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர், என்ன சொல்லுகிறதென்றால்:

"அரசாங்கத்தின் பணத்திலிருந்து எடுத்துச் செலவிடப்படுவதற்காகக் கொண்டுவரப் பெறும் மசோதாக்களும், அல்லது அரசாங்கத்திற்கு வருவாயைச் சேர்க்கப் போடப்படும் வரிகள் அல்லது கப்பங்கள் பற்றிக் கொண்டுவரப்பெறும் மசோதாக்களும் பொதுமக்கள் சபையில்தான் கொண்டுவரப்பட வேண்டும்" என்கிறது. கனடாவில் இரு சபைகளின் அதிகார வரம்புகள் நிச்சயமாகவே நிர்ணயிக்கப்படவில்லை. கனடா பிரிட்டிஷ் பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்று, அந்நாட்டு அரசியல்சட்டப் பிரிவு 18-இல் இஃது கூறப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். அந்த பிரிவு 18-இல் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது:

"சட்ட உரிமைகளும், சட்ட விலக்களிப்புகளும் மற்றும் அதிகாரங்களும் செனட் சபையாலும், மற்றும் பொது மக்கள் சபையாலும் கைப்பற்றப்பட்டு, ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கூடியவையே....."

*டாக்டர் அம்பேத்கர்:* இதற்கு எவ்விதச் சாட்சியங்களும் இல்லை. அவைக்குள் அதற்குள்ள சலுகையே காரணம்.

*சர்தார் உஜ்ஜல்சிங்:* தாங்கள் மன்னிப்பீர்களாக. இச்சலுகைகள், உரிமைகள், அதிகாரங்கள் செனட் சபையாலும், மக்கள்

* மேற்படி நூல், பக்கம் 249.

சபையாலும் பயிலப்பட்டு அனுபவிக்கப் பெற்றன. ஆனால் நான் மக்கள் சபை உறுப்பினர்களைக் குறிப்பிடவில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* அப்படி இல்லை ஐயா, முன்னுரையில் நீங்கள் பார்ப்பீர்களானால், கனடாவின் அரசியல் சட்டம், இங்கிலாந்து நாட்டு அரசியல் சட்டம் போலவே இருக்க வேண்டுமெனக் கூறப்பட்டிருப்பதை அறியலாம், இங்கிலாந்து நாட்டுப் பொது மக்கள் சபைக்கும் பிரபுக்கள் சபைக்குமிடையுள்ள உறவு முறைகளைப் போலவே கனடா நாட்டுச் சபைகளுக்கிடையிலுள்ள உறவுமுறைகளைப் போன்றிருப்பதைக் காணலாம். ஆனாலும், கனடா நாட்டிலுள்ள பொதுமக்கள் சபைக்குத் தனி உரிமைகளுண்டு.

★ ★ ★ ★ ★

* *டாக்டர் அம்பேத்கர்:* இதுவரை நாம் வலியுறுத்திப் பேசிய கருத்துக்களில் ஒரு குறிப்பு மட்டும் எல்லா அரசியல் சட்டங்களிலும் பொதுவாகக் காணப்படுவதை அறிகிறோம். அக்குறிப்பே எதிர்கால இந்திய அரசியல் சட்டத்தை ஒழுங்குப்படுத்த வல்லதென்பதையும் அறிகிறோம். அதாவது இரு சபைகளுக்கும் அந்தஸ்து, அதிகாரம், ஆகியவை சமமாக இருக்கவேண்டுமென்பதே. பண மசோதாவைக் (Money Bill) கீழ்ச்சபைதான் கொண்டுவர வேண்டும், மேல்சபைக்கு அந்த உரிமை இல்லை போன்ற ஒரு சில தனி உரிமைகளைத் தவிர மற்ற எல்லாவகையிலும் இரு சபைகளும் சமமான அந்தஸ்து உள்ளவையென்பதே பொதுவாக எல்லோருடைய மனதிலுமுள்ள கருத்தாகும்.

எனக்கு முன்பேசிய பெருமக்களின்மீது எனக்கு மிகுந்த மதிப்பும், மரியாதையுமுண்டு என்பதைக் கூறிக்கொள்ளும் அதே நேரத்தில் என் மனதிலே தோன்றும் மன உலைச்சலையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர்கள் கூறிய அத்தனைக் கருத்துக்களுக்கும் எனக்கு உடன்பாடு இல்லையென்பதே என் உலைச்சலாகும்.

எனக்கும் அவர்களுக்குமிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடுக்குக் காரணம், இரண்டாவது சபை இருக்க வேண்டியதன் நோக்கமும், அது ஆற்றும் பணிகளும் பற்றி நாமெல்லோரும் பலரும் பலவிதமாகக் கொண்டுள்ள கருத்தேயாகும். நேற்றுப் பேசிய பெருமக்களின் அனுமானத்தை அளவெடுத்துப் பார்க்கும் போது அவர்களுடைய நோக்கமெல்லாம், நமது கூட்டாட்சியின் இரு சபைகளும் சமமான அதிகாரங்களையே பெற்றிருக்க வேண்டுமென்பதும் அதுவும் அதனுடைய சட்டமன்றம் ஒவ்வொன்றும் தனித்தனி குழு உறுப்பினரைக் கொண்டு, தனித்தனியாக வரையறுக்கப்பட்ட அதிகார எல்லைக்குட்பட்டு, பண்டைய பாணி

* மேற்படி நூல்: பக்கம் 266-70.

யிலேயே செயல்பட வேண்டுமென்பதும் ஆகும். கீழ்ச்சபையில் உள்ள குழுவினர் மேல் சபையில் அங்கம் வகிக்காமலும், மேல் சபையில் உள்ள குழுவினர் கீழ்ச்சபையில் அங்கம் வகிக்காமலும் இருப்பார்களேயானால் நேற்றுப் பேசியோரின் அனுமானம் ஒரு வேளைப் பூர்த்தியாகலாம். ஆனால், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் யாவரும், தனி வகுப்பாக வரையறுக்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டு இருந்துவருகின்றனர்; இரு சபைகள் இருக்கக் கூடாது என்று கூறுபவர்களில் நானும் ஒருவன், அதற்கு நான் ஒப்புதல் அளிக்க மாட்டேன்; பொது மக்களுக்காகப் பாடுபடும் நான் மகாத்மா காந்தியின் கருத்துக்கு இம்முறையில் எதிரியாவேன்; பொதுமக்களுக்காக வாதிடும் நான் இத்தகைய ''இரு சபைக் கோட்பாட்டிற்கு'' ஒப்ப மாட்டேன்; அத்தகைய சபைகள் பணியாற்றும் பாங்கும் எனக்கு ஒவ்வாத ஒன்றே காலஞ்சென்ற அஸ்கொய்த் பெருமகனார் (Lord Asquith) இப்படித்தான் இரண்டு சபைகள் ஆட்சி இருசபைகளுக்கும் சமமான அந்தஸ்தைத் தருவதாகத் தவறாக எண்ணி, ஆங்குச் சிக்கலில் மாட்டித் தவித்தாரென்பதை வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன்.

உண்மையில் நமது சட்டமன்றங்களின் சபைகள் தனிப்பட்ட நலன்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கும் அடிப்படையில் அமைக்கப்படப்போவதில்லை. எதிர்காலச் சட்டமன்றம் ஒவ்வொரு வகுப்பையும், ஒவ்வொரு மக்கள் அபிப்பிராயத்தையும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் அமைந்திருக்கும். இவ்வாறு இருக்கும் போது, இந்த சபைக்குப் போட்டியாகவோ அல்லது சம அந்தஸ்துள்ளதாகவோ இருக்கக் கூடிய இரண்டாவது சபை ஒன்றை நாம் அமைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, எனது கருத்து இத்தகையதாக இருப்பதால், தலைப்பு 3 உபதலைப்பு II-ல் இடம்பெற்றுள்ள கேள்வியைப் பொறுத்த வரையில், தீர்மானமாக அதிகாரம் கீழ்ச் சபைக்கே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

*தலைவர்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே! தங்களுடைய இக்கருத்தை நம்முடைய அரசியல் சட்டத்தில் புகுத்தலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம். இதைப் புகுத்தமுடியுமென்று நான் நம்புகிறேன்.

*தலைவர்:* இதைச் செய்ய முடியும். ஆனால், இரண்டு சபைகளிருப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா!

டாக்டர் அம்பேத்கர்: இருக்கலாம். நீங்கள் அருள்கூர்ந்து அது பற்றிப் பேச தனிநேரம் ஒதுக்கித் தாருங்கள். அதுபற்றி நான் பிறகு பேசுகிறேன். அதுவும் குறிப்பாகப் பண மசோதாக்கள் பற்றி விளக்கிப் பேசியாக வேண்டும்.

இரண்டாவது சபைக்குக் கீழ்ச்சபையால் அனுப்பப் பெறும் மசோதாக்களின் மீது விவாதித்துக் கருத்துக்களையும், யோசனை களையும் கூறும் அதிகாரம் கட்டாயம் இருக்கவேண்டும்; அவற் றைக் கீழ்ச்சபை விரும்பினால் ஏற்கலாம். ஆனால், இரண்டாவது சபைக்குப் பண மசோதாவைக் கொண்டுவரும் உரிமை இருக்கவே கூடாது என்பதோடு கீழ்ச்சபையால் அனுப்பப் பெறும் அத்தகைய மசோதாவைத் திருத்தி அமைக்கும் அதிகாரம் அதற்குக் கூடவே கூடாதென்பதே என் கருத்தாகும். ஒரு பண மசோதாவைக் கீழ்ச் சபைதான் கொண்டுவர வேண்டும்; அதனை மேல்சபை நிரா கரித்துத் தள்ளிவிட்டாலும், ஒரு சிறிதும் மாற்றம் செய்யாமல் அப்படியே அதனைச் சட்டமாக்கவேண்டும்.

இப்பொழுது, என்னுடைய் இத்தகைய தீர்மானம் முற்றிலும் மாறுபட்ட தீர்மானமாகத் தோன்றலாம். இதனை ஒரு புரட்சிகர மானத் தீர்மானமென்றே பிறர் வர்ணிப்பார்கள்; ஆனால், என் மதிப்பிற்குரிய மேலவைத் தலைவர் அவர்களே! இதை ஏன் இப்படிக் கூறுகிறார்களென்றால், நேற்றுப் பேசிய என்னருமை நண்பர்களும், அறிஞர் பெருமக்களுமான சர் தேஜ்பகதூர் சாப்ரூ அவர்களும் சர் முகம்மது ஷாஃபி அவர்களும் இக்கருத்தைப் பற்றிக் கூறினாலும், இன்றுள்ள அதிநவீன அரசியல் சட்டங்களைப் பற்றிக் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் புண்டைக் கால கனடா நாட்டு குடியேற்றமுறை அரசியல் சட்டம் ஆஸ்தி ரேலியா அல்லது தென்னாப்பிரிக்காப் போன்ற நாடுகளின் அரசியல் சட்டம் பற்றிப் பேசுவதோடு முடித்துக் கொண்டார்கள். கனடா நாட்டு அரசியல் சட்டம் 1867-லும் ஆஸ்திரேலிய நாட்டு அரசியல் சட்டம் 1901-லும் தென்னாப்பிரிக்கா நாட்டு அரசியல் சட்டம் 1909-லும் உருவானவை. மேல் சபைக்கும், கீழ்ச் சபைக்கு முள்ள அரசியல் சட்டத் தொடர்பான உறவுமுறைகள் இவை களைப் பற்றி ஏன் அருமைநண்பர்கள் குறிப்பிடவில்லையென்பது எனக்கு விளங்கவில்லை. அயர்லாந்து நாட்டிலுள்ள மேல்சபை, கீழ்ச்சபை ஆகிய இரண்டு சபைகளுக்குமிடையேயுள்ள உறவு முறைகள் பற்றி அவர்கள் ஏன் எண்ணிப் பார்க்கவில்லை என்பது எனக்குப் புரியவில்லை; இதைப் போலவே, பிர்சி குழு (Bryce Committee) வினுடைய பரிந்துரைகளை அவர்கள் ஏன் மறந்து விட்டார்களென்பதும் எனக்குப் புரியவில்லை. அவர்கள் இவற் றைப் பற்றியெல்லாம் விளக்கிப் பேசி விட்டிருப்பார்களே யானால் என்னுடைய இத்தகைய தீர்மானத்தைக் கேட்டவுடன் உறுப்பினர்கள் வியப்படைந்திருக்க மாட்டார்கள். அவர்கள் அவ் வாறு பேசாமல் விட்டு விட்டதால்தான் நான் என்னுடைய

இத்தகைய தீர்மானத்தைக் கூறி, அதற்கான எடுத்துக்காட்டுகளையும் கூற முனைந்தேன்.

இப்பொழுது நான் கூறும் தீர்மானம் 1911-ஆம் ஆண்டு பாராளுமன்றச் சட்டத்திலுள்ளதேயாகும். அந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளதுயென்னவென்றால், பணமசோதாவைப் பொறுத்த வரையில், மேல் சபையின் யோசனைகளையும் ஒருக்கால் ஏற்கலாம், ஆனால் முழுக்க முழுக்க மக்கள் சபைதான் தலையானதாகும். அந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு முக்கிய கூறுபாடு இதுதான்—ஒரு பண மசோதாவை உருவாக்கி, அதனை நிறைவேற்றும் உரிமை கொண்ட மக்கள் சபையே (House of Commons) அதனைச் சட்டமாக்கும் வல்லமைப்படைத்ததாகும். இதற்காகப் பிரபுக்கள் சபை (House of Lords) அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்பதற்கில்லை. அரசர் ஒப்புதல் அளித்தால் மட்டுமே அதற்குப் போதுமானதாகும்.

கனம் தலைவர் அவர்களே! நான் மீண்டும் ஒரு முறை கூறுவேன்—பண்மசோதாவைப் பொறுத்தவரை மேல் சபைக்கும், கீழ்ச் சபைக்குமிடையேயுள்ள அதிகார வரம்புகள் இவையேயாகும். இதுவே அயர்லாந்து அரசியல் சட்டத்தில் திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ள வரையறையாகும்.

அயர்லாந்து அரசியல் சட்டம் பிரிவு 35-இல் கூறப்படுவதாவது:—

> ''அயர்லாந்து நாட்டின் குடியரசுச் சட்டமன்றங்களில் கீழ்ச் சபைக்கு மட்டுமே பண மசோதாவை உருவாக்கவும், சட்டமாக்கவுமான அதிகாரம் அளிக்கப்படுகிறது.''

அந் நாட்டு அரசியல் சட்டம் 38-வது பிரிவு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:—

> ''அயர்லாந்து நாட்டு மக்களாட்சி மன்றம் ஒவ்வொரு மசோதாவையும் தானே உருவாக்கும் அதிகாரம் கொண்டது, அவ்வாறு உருவாக்கும் மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றுவதற்கு முன் மேல் சபைக்கு அனுப்பி, மேல்சபை கூறும் மாற்றங்களை ஏற்றுச் சட்டமாக்கலாம். ஆனால், அதுவே, பண மசோதாவாயிருந்தால் அதை அனுப்பும் தேவை அவ்வாறில்லை'' என்பன போன்றவையாகும்.

எனது தீர்மானத்திற்கு ஆதரவாக, அடுத்து நான் கூறப்போகும் மற்றொரு எடுத்துக்காட்டு, பிர்சிக் குழுவின் பரிந்துரைகளாகும். இந்தக் குழுவில் இங்கிலாந்து நாட்டுப் பொது மக்கள் சபையிலிருந்தும் பிரபுக்கள் சபையிலிருந்தும் உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தார்களென்பது நாம் எல்லோரும் அறிவோம். இக்குழு ஏகமனதாய்க் கூறி இருக்கும் தீர்மானம் இதுதான்: 'பண மசோதா'வைப் பொறுத்த வரையில் 1911-ஆம் ஆண்டுச் சட்டத்தில் கூறப்

பட்டுள்ளக் கூறுபாடுகள் அப்படியே பொருந்தும் என்பதேயாகும். இது சரியானதும், ஒழுங்கானதுமான முடிவேயாகும்.

கனம் தலைவர் அவர்களே! மூன்றாவதாக எனது கருத்துக்கு ஆதரவாக மற்றுமோர் ஆதாரத்தையும் குறிப்பிடலாமென எண்ணு கிறேன். பிர்சிக் குழுவின் அறிக்கையும், அதன் பரிந்துரைகளும் தள்ளப்பட்டு விடவில்லை; அவை 1922-இல் அயர்லாந்தில் ஏற்பட்ட கூட்டு அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அரசு, அப்பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு பல தீர்மானங்களைக் கொண்டுவந்தது. அன்றைய அவையிலிருந்த பீல் பெருமகனாரும் இந்தக் குழுவிலமர்ந்திருப்பதைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அன்றைய அமைச்சரவை பிர்சிக் குழு பரிந்துரைகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றிப் பாராளு மன்றத்தில் 11-7-1922-இல் வைத்தது. அதில் வரும் நான்காவது தீர்மானம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

''பண மசோதாவைப் பிரபுக்கள் சபை மாற்றியமைத்தோ அல்லது மறுத்து விடவோ முடியாது. ஒரு மசோதாவானது முழுவதுமாகப் பண மசோதாவா இல்லையா என்பதையும் அல்லது ஒரு பகுதி பணமசோதா மறுபகுதி வேறு மசோதா என்பதையும் கூட்டுக் குழுவே தீர்மானிக்க வேண்டும். அந்தக் கூட்டுக் குழு இரு சபைகளாலும் அமைக்கப்பெறும் குழு வாகும். அந்தக் குழுவெடுக்கும் தீர்மானமே முடிவானதாகும்.

பண மசோதாவை உருவாக்கும் உரிமையும், அதைச் சட்ட மாக்கும் உரிமையும் பொதுமக்கள் சபைக்கே சொந்தமான உரிமை யாகுமென்ற பிர்சிக் குழுவின் அறிக்கையின் சாராம்சத்தையே பொது மக்கள் சபை ஒப்புக் கொண்டு, அதையே 11.7.1922-இல் தீர்மானமாகக்கொண்டு வந்தது. இத்தீர்மானத்தின் மீது அன்றைய இந்தியச் செயலராகயிருந்த விஸ்கவுண்ட் பீல் என்பார் பேசி யதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடிப்படைக் கோட்பாடு களைச் சுருக்கமாகக் கூறுவதே இத்தீர்மானமாகும். இதற்கு மேலும் கூற வேண்டுமானால், மேல் சபைக்கு, கீழ்ச் சபைக்கு இருக்கும் எல்லா உரிமைகளும் கிடையாது; இருசபைகளும் சம அந்தஸ்து உடையவையாகக் கூறமுடியாது; மேல் சபையானது கீழ்ச் சபைக்கு எதிரியாவதென்பதும், அல்லது ஆட்சியைக் கலைத்து விடுவ தென்பதும், அல்லது அதிகாரிகள் இருசபைகளுக்குமே பொறுப் பாவார்கள் என்பதும் பொய்யான வாதமாகும். கீழ்ச்சபைக்குப் பல தனி உரிமைகளுண்டு; மேல்சபையினினும் மேலானது; அதிகாரிகள் கீழ்ச்சபைக்கே பொறுப்பாளிகளாவர்.

''நான் கீழ்ச் சபைதான் முக்கியமானது, உயர்வானதென்று கூறிய எனது கூற்றுக்குப் போதிய சான்றுகளை எடுத்துக்காட்டி விட்டேன். இவையே போதுமென எண்ணுகிறேன். இவற்றால், எனது தீர்மானத்தை இக்குழு ஏற்குமென நம்புகிறேன்'' என்று கூறி முடித்தார் அம்பேத்கர்.

*லார்டு பீல்:* ''நான் ஒன்றைக் கூறுலாமா? நீங்கள் குறிப்பிட்டுப் பேசியது கூட்டுமந்திரிசபை ஆட்சியாகுமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ''ஆம். அது கூட்டு மந்திரிசபை ஆட்சி தான்.''

*லார்டு பீல்:* ஒரு கூட்டுமந்திரி சபை ஆட்சியில் நீங்கள் கூற விரும்புவதெல்லாம் இருப்பதாகக் கூறிவிட முடியாது.

*டாக்டர் அம்பேத்கர்:* ''கனம் பீல் பெருமகனார் அவர்கள் மன அடக்கத்தோடு பேசவேண்டும். இது கூட்டு மந்திரி சபை ஆட்சியில் இருந்ததாக என்னால் கூற முடியாது. கூட்டு மந்திரி சபை ஆட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்சிகள் இணைந்து ஆட்சி புரிந்தன. ஆகவே, அத்தகைய ஆட்சியில் கொண்டுவரப்பெற்ற இத்தீர்மானம் ஒன்றுக்கும் மேற்பட்டக் கட்சியினால் ஆதரிக்கப் பட்டதாகும். அதில் பீல் பெருமகனாகிய நீங்களுமிருந்தீர்கள். நான் என்ன சொன்னேன்? இதுவரைக் கூறிய எடுத்துக்காட்டுகள் போதுமெனக் கருதுகிறேன். இதனடிப்படையில் எனது தீர்மானத்தை இக்குழுமுன் வைக்கிறேன். இது ஒரு புரட்சிகரமான தீர்மானமாகாது. ஏனென்றால் முன்பே நடந்தேறிய நடப்புகளை எடுத்துக்காட்டுகளாகக் கூறிய பின்புதான், அந்த மரபுக்கேற்ப இத்தீர்மானத்தை நீங்கள் ஏற்கலாமென்றேன். எனவே, என் தீர்மானம் முன் உதாரணத்தைத் தழுவி நிற்கும் மரபுசார்ந்ததே யொழிய புரட்சிகரமானதல்ல.

*சர் தேஜ் பகதூர் சாப்ரு:* கூட்டாட்சி முறையில் நடக்கும் ஒரு அரசாங்கம் இத்தகைய கருத்தை ஆதரித்தது என ஒரு உதாரணத்தை அம்பேத்கரால் காட்ட முடியுமாயென அவரைக் கேட்கிறேன். இங்கிலாந்தும், அயர்லாந்தும் கூட்டாட்சி நடத்துபவையல்ல.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம். அங்கெல்லாம் அப்படி இல்லை.

*சர் தேஜ் பகதூர் சாப்ரு:* கூட்டாட்சிக்கும் பிர்சிக் குழுவிற்கும் எந்தத் தொடர்புமில்லை.

*டாக்டர் அம்பேத்கர்:* உங்களின் கூட்டாட்சியில் மேல்சபை, கீழ்ச்சபையென்ற இரு அமைப்புகள் இருக்குமானால், மேல் சபையில் உள்ளவர்கள் கீழ்ச்சபை பிரதிநிதித்துவப்படுத்தாத வேறு சில நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்களானால் அப்போது நான் கூறிய கருத்து ஈண்டு ஏற்புடையாகும் என்பதே தங்களின் விரைவுக்கு நான் தரும் விடையாகும். இதை விட்டு விட்டு, ஓர் அரசு தனியாட்சியா அல்லது கூட்டாட்சியா என்பது கேள்வியல்ல. இரு சபைகளிருக்கும் எந்த ஒரு ஆட்சியிலும், கீழ்ச் சபைக்கே அதிக சிறப்புண்டு என்பதுதான் என் தீர்மானத்தின் உட்கருத்து.

*சர் பிரொவாஷ் சந்தர் மிட்டர்:* நான் ஒருவினாவைக் கேட்க விரும்புகிறேன். 'பிரபுக்கள் சபை' என்பது தலைமுறைகளாக தந்தைக்குப் பின் மகன் என்ற முறையில் உறுப்பாண்மை

ஏற்பதால் அமையுமொன்றாகும். ஒரு காலக்கட்டத்தில் அயர் லாந்து நாட்டு மேல்சபையும் இப்படித்தானே இருந்தது?

*டாக்டர் அம்பேத்கர்:* பிரபுக்கள் சபையென்பது மிகப் பழமை யானது. அதற்கு உரிய அந்தஸ்து, மரபுகள், தனித்த உரிமை களைக் கொண்டது. அதுவே, இத்தகைய புரட்சிகரமான மாற் றத்தை ஒப்புக் கொண்டுள்ளது. அப்படியானால் இந்திய சமஸ் தானங்களை பிரபுக்கள் சபையோடு ஒப்பிடும்போது, எந்தெந்த வகையில் வேறுபடுகின்றன?

*மேன்மை மிகு பிக்கானீர் மகாராசா:* இந்திய சமஸ்தான மன்னர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்படாமல் தனித்த ஆளும் இறைமையைப் பெற்றவர்கள்; பிரிட்டனிலுள்ள மிகப் பெரிய பிரபுக்கள் கூடப் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டவர்கள், அவ்வாட்சி அதிகாரத்திற்கு அடங்கி நடப்பவர்கள். ஆனால் இந்திய சமஸ் தான மன்னர்கள் தனித்தியங்கும் தன்மைப் படைத்தவர்கள். மொத்தத்தில் இந்திய சமஸ்தான மன்னர்களும் பிரிட்டிஷ் பிரபுக் களும் தங்களின் நிலைகளில் ஒருவருக்கொருவர் முற்றிலும் வேறு பட்டவர்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* 'இறையாண்மை' என்பது பிரபுக்கள் சபையின் அதிகாரம், கண்ணோட்டம் ஆகியவற்றைப் பொறுத்து நிற்பது.

*சர் முகம்மது சாஃபி:* டாக்டர் அம்பேத்கர் அவர்களை நானொன்று கேட்கலாமா? பிரபுக்கள் சபையின் தனியுரிமைகள் யாவை?

*டாக்டர் அம்பேத்கர்:* இந்நிலையில், அடுத்தபடியாக அரசியல் சட்டத்திலிருக்க வேண்டிய 'நிதி மசோதா' என்பதற்கான விளக் கத்தைப் பற்றிக் கூற விழைகிறேன். அயர்லாந்து நாட்டு அரசியல் சட்டத்தில் 'நிதி மசோதா' யென்றால் என்ன என்பது பற்றி விளக்கம் கூறப்பட்டுள்ளது. அப்படியே எடுத்துக் கொள்ளலா மென நினைக்கிறேன். இதே போன்ற விளக்கத்தைத்தான் 1911-ஆம் ஆண்டுப் பாராளுமன்றச் சட்டத்திலும் காணப் பெறு கிறோம்.

அடுத்து நான் கூற விரும்பும் மற்றொரு கருத்து ஒரு நிதி மசோதாவைக் கொண்டுவரும் உறுப்பினர், அது நிதி மசோதா தான் என்பதைத் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு மசோதா நிதிமசோதாவா அல்லவா என்பது பற்றிய சர்ச்சை வரும் போது இரு சபைகளிலுமுள்ள உறுப்பினர்கள் சிலரை நியமித்து, ஒரு கூட்டுக் குழுவை ஏற்படுத்தவேண்டும். அக்குழு வில் இரு சபையிலிருந்தும் போதுமான எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் அங்கம் வகிக்க வேண்டும். மேலும் எல்லாக் கட்சி களிலிருந்தும் அந்தந்தக் கட்சிக்கேற்ற போதுமான எண்ணிக்கை யிலான உறுப்பினர்களும் அதில் அங்கம் வகிக்க வேண்டும்.

களை செவ்வனே அமைத்துக் கொண்டன. அவ்வாறு அந்த அரசியல் சட்டங்களை எழுதும் போது அவை ஓராட்சி முறைக்கோ, கூட்டாட்சி முறைக்கோ எனக் குறிப்பிட்டு எழுதவில்லை.

எடுத்துக்காட்டாக, கனடா நாட்டு அரசியல் சட்டத்தைப் பார்ப்போம். அது என்ன சொல்லுகிறதென்றால்...

*அவைத் தலைவர்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே! திரு. காவின் ஜோன்ஸ் பேசுவதற்கு ஒரு வாய்ப்புத் தாருங்கள்.

*திரு. காவின் ஜோன்ஸ்:* நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஆஸ்திரேலியாவின் அரசியல் சட்டம் ஒரு கூட்டாட்சி அரசியல் சட்டமென்பதே.

*டாக்டர் அம்பேத்கர்:* உண்மைதான்.

*திரு. காவின் ஜோன்ஸ்:* நான் கூடச் சொல்லுவேன்; என்று ஆஸ்திரேலியா உலகத்திலேயே மிக உன்னதமான குடியரசு நாடு.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் அதை அப்படியே ஒப்புக் கொள்கிறேன்.

*திரு. காவின் ஜோன்ஸ்:* நமக்கு அத்தகைய பாதுகாப்புகள் தேவைதான் என்றால் நமது இந்திய அரசியல் சட்டத்திலும் அவற்றை இடம்பெறச் செய்வது நமது அறிவுடைமையாகும்.

*டாக்டர் அம்பேத்கர்:* அப்படி செய்வது இருக்கட்டும். ஆஸ்திரேலியா தனக்கொரு கூட்டாட்சி முறையிலான அரசியல் சட்டம் தேவையென விரும்பியது. ஆனால், நான் கூறிய மேல் சபைக்கும், கீழ்ச்சபைக்கும் இடையிலான உறவு முறைகளை வரையறுத்து, அவற்றை அந்த அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்துள்ளதா என்பதையே கேட்க விரும்புகிறேன். ஆஸ்திரேலியா, தனக்கொரு அரசியல் சட்டத்தை வகுக்க முற்பட்ட போது, இங்கிலாந்திலுள்ளபடி (எழுதா மரபுப்படி) தனது அரசியல் சட்டத்திலும் மரபு வழியைப் பின்பற்றி இருக்கக் கூடுமென நினைக்கிறேன்.

## இருபத்தெட்டாவது அமர்வு—செப்டம்பர் 23, 1931

### தலைப்பு—1

*(கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் வலிமையும் கட்டமைப்பும்)*

* *டாக்டர் அம்பேத்கர்:* துணைத்தலைப்புகள் I, II, III மற்றும் V ஆகியவைப் பற்றி நான் கூறுவதற்கு இல்லை. எனது நண்பர் திரு. ஜோஷி அவர்கள் இன்று காலை கூறிய எல்லாக் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்கிறேன். நான் கூட்டாட்சிக் கூட்டமைப்பிலுள்ள இரு சபைகளிலும் எத்தனை உறுப்பினர்கள் இருக்க

* *மேற்படி நூல், பக்கம் 344-46.*

வேண்டும் என்ற நிர்ணயத்தை நான் எனது கோட்பாடாகக் கொண்டிருக்கவில்லை. நமது பேச்சின் தொடக்கத்திலும் இந்த எண்ணிக்கைப் பற்றியே நாம் பேசவில்லை. மற்ற எல்லா முடிவுகளிலும் இத்தகைய எண்ணிக்கை என்பது இருந்தே தீர வேண்டும். ஆனாலும், பலதரப்பட்ட மக்களும் பங்கேற்று தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் அளவுக்கு இரண்டு அவைகளுமே மிக அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களைப் பெற்றிருக்க வேண்டுமென்பதே எனது உள்ளார்ந்த விருப்பமாகும். இச்சபைகளில் குறிப்பிட்டவர்கள்தான் இருக்க வேண்டுமென்ற நடைமுறை மாறவேண்டும். இக்கருத்தைத் தவிர மற்ற எல்லாக் கருத்துக்களையும் ஏற்கிறேன். இதில் மட்டுமே உங்களினின்று நான் வேறுபடுகிறேன்.

நம்முடைய சட்டமன்றங்கள் வணிக மன்றங்களைப் போல் குறிப்பிட்ட உறுப்பினர்களை மட்டுமே கொண்டிருத்தல் நலம் பயக்குமெனும் கருத்தும், இதனால் அதிக எண்ணிக்கையுள்ள சட்டமன்றம் தேவையில்லை என்ற கருத்தும் நிலவுகின்றன. இத்தகைய கருத்திலே ஒருவித வேகம் புதைந்திருப்பதாகக் கருதுகிறேன். ஒரு சட்டமன்றம் வணிக நிறுவனம் போல் செயல்பட வேண்டுமென்ற கருத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. குறைந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ள சட்டமன்றத்தில் செயல்முறைத் திட்டங்கள் கடினமாகவும், ஆணைகள் (உத்தரவுகள்) அதிகமாகவுமிருக்குமென அவர்கள் நினைத்திருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் ஒரு வணிக நிறுவனம் போல் சட்டமன்றம் விறுவிறுப்பாக செயல்படும். இதற்காகத்தான் சட்டமன்றம் அளவில் சிறியதாயிருக்க வேண்டுமென்கிறார்கள் போலும்.

துணைத் தலைப்பு IV-இல் பகுதி b-இல் கூறப்பட்டுள்ளதைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்.

துணைத்தலைப்பு IV, பகுதி b கீழ்க்கண்டவாறு மொழிகிறது:

> ''ஒரு கூட்டாட்சி அரசியல் சட்டத்தை வகுக்கும் நடவடிக்கைகளை கூட்டாட்சி அமைப்புக் குழு மேற்கொள்வதற்கு இந்திய சமஸ்தானங்களிலிருந்து குறைந்தபட்சம் எத்தனை உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும்?''

இத்தகைய கேள்வியை நாம் மேன்மைமிகு பிரிட்டிஷ் பேரரசர் ஆட்சியிடம்தான் கேட்க வேண்டுமென்று எனக்குப்படுகிறது. நமது கூட்டாட்சிச் சட்டமன்றக் கட்டமைப்பை அமைக்குமுன் அவர்கள்தான் இதற்கு இத்தனை எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் தேவையென்று கூற முடியும்.

திரை இன்னமும் விலக்கப்படாத இன்னொரு பிரச்சினையும் உள்ளது. இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டமாக இருக்க வேண்டு மென்று நம்மிடம் கூறப்படுகிறது; ஆனால் ஒரு கூட்டாட்சி வடி வத்தில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தை நிறுவுவதற்கு இந்திய சமஸ்தானங்கள் அதில் சேருவது ஒரு முக்கியமான நிபந்தனை என்பது இந்தக் கோட்பாட்டை வலியுறுத்துபவர்களது கருத்து என்பதை யாரும் விளக்கிக் கூறவில்லை. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் தங்களது இந்த நிலையை மேற்கொண்டிருப்பவர் களின் கருத்து என்ன என்பது எனக்குத் திட்டவட்டமாகத் தெரிந் தாலொழிய இது குறித்து என்னால் பேசுவது கடினம். அவர்கள் கருத்தை அறிந்து கொள்ளாமல் எனக்கு நானே பேசி எப்படி முடிவெடுக்க முடியும். நீரே இதற்கு விடைதாரும் என்று நீங்கள் கூறுவீர்களானால் நானே கூறத் தயார். இத்தனை சமஸ்தானங்கள் உறுப்பினராக வேண்டுமென்ற கட்டாயத்தை எதிர்நோக்கினால் நமது கூட்டாட்சி முறை பற்றிய பேச்சை இப்பொழுது நம்மால் தொடங்க முடியாது. இதனால்தான் அதற்காக நாம் காத்திருக்கக் கூடாதென்கிறேன். இந்திய சமஸ்தான மன்னர்கள் இந்தியக் கூட்டாட்சி அரசாங்கத்தில் சேருவதற்கு முடிவு செய்யும்வரை எந்தப் பிரிட்டிஷ் இந்தியனும் பொறுப்புள்ள அரசாங்கம் அமைக் கப்படுவதைக் கிடப்பில் போட விரும்பமாட்டான்.

இத்தகையச் சூழலில் நான் நினைப்பது இது தான்; நமக்கு உடனடியாகக் கூட்டாட்சி அமைப்பதற்கான அரசியல் சட்டம் வேண்டும். அதனை உடனே வகுத்தாக வேண்டும். அப்படியே அமைக்கத் தொடங்குவோம்: பிரிட்டிஷ் பேரரசர் சட்டமன்றத்தில் ஓர் ஆணையைப் பிறப்பித்து, ''புதிய சமஸ்தானங்கள் தாமே விரும்பி முன்வந்து சேரும்போது, இந்தியக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்தில் அவற்றை உறுப்பினராக ஏற்றுக் கொள்ளலாம்'' எனலாம். இது ஒன்றும் ஒரு புதிய கருத்தேயன்று. இத்தகைய ஏற்பாடு கனடா நாட்டு அரசியல் சட்டத்தில் உள்ளது. அதிலுள்ள 146 மற்றும் 147 ஆகிய பிரிவுகளிலும், ஆஸ்திரேலிய நாட்டு அரசியல் சட்டத்திலுள்ள 121-லிருந்து 124 வரையிலுள்ள பிரிவு களிலும் இத்தகைய வழிவகை அமைத்திருப்பதைக் காணலாம்.

கனடா நாட்டு அரசியல் சட்டப் பிரிவு 146-இல் ''1867-இல் அரசியல் சட்டம் வகுக்கப்பட்டபோது சட்டமன்றத்தில் சேராத மற்றப் பிரிவுகளையும் அவை பிரியப்படும்போது சட்டமன்றத்தில் சேர்ந்து கொள்ளலாம்'' என்று கூறப்பட்டுள்ளது. மேன்மைமிகு பிரிட் டிஷ் பேரரசர், இதற்கான ஓர் ஆணையைப் பிறப்பித்து, மற்றப் பிரிவினரையும் சேர்த்துச் சட்டமன்ற உறுப்பினர்களாக்கி

விடலாம். இத்தகைய ஒரு ஏற்பாட்டைச் செய்துவிட்டால், நாம் நினைப்பதைப் போலவே விரைவில் கூட்டாட்சி அரசியல் சட்ட மியற்றுவதைத் தொடங்கி விடலாம். இத்தகைய ஏற்பாடு, இந்திய சமஸ்தான மன்னர்களின் சொந்த விருப்பத்திற்கே விட்டுவிடு வதால் அவர்களின் தனிச் சுதந்திரமும் காப்பாற்றப்படுகிறது. அவர்கள் தாமே விரும்பினால் இந்திய கூட்டாட்சியில் சேரலாம் என்ற ஏற்பாட்டைச் செய்துவிட்டால் உடனே நாம் கூட்டாட்சி அரசியல் சட்டத்தை வகுத்து விடலாம்.

அடுத்து, துணைத்தலைப்பு V-இல் பிரிவு a-இல் கூட்டாட்சி யில் சுதேச சமஸ்தானங்கள் சேருவதைப் பற்றி மேன்மைமிகு பிக்கானீர் மகாராஜா கூறிய யோசனையைப் பார்ப்போம். அவ ருடைய யோசனைப்படி, கூட்டாட்சியில் ஒரு சமஸ்தானமோ, எல்லா சமஸ்தானங்களுமோ அல்லது ஒரு சில சமஸ்தானங் களுமோ மட்டுமே பங்கு கொண்டாலும் அவற்றுக்கு ஒதுக்கப் பட்டுள்ள எல்லா வாக்குகளையும் பயன்படுத்திக் கொள்ள அவற்றுக்கு உரிமைதர வேண்டுமென்பதாகும். இத்தகைய அவ ருடைய பிரேரணையானது எனக்கு மிகவும் வேதனையைத் தருகிறது. அவரிடத்தில் எனக்கு மிகுந்த மரியாதையுண்டு, ஆனா லும் அவருடைய இந்த கருத்துக்குச் சரியான நியாயம் இருப் பதாகத் தெரியவில்லை. இது முற்றிலும் வேறுபாடான கருத் தாகவே எனக்குப் படுகிறது. முடிவாக, இதன் பொருள் என்ன?

சுதேச மன்னர்களில் ஒருவர், கூட்டாட்சிச் சட்டமன்றத்திற்கு வந்து, இந்த பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலுமுள்ள மக்களின் தலைவிதியை நிர்ணயித்து விடலாம் என்பதே ஆகும். அதாவது, சட்டமன்றம் எடுக்கும் எந்த ஒரு முடிவையும், அந்த ஒரு சுதேச மன்னர் தனது வாக்கால் மாற்றி அமைக்க முடியும். ஏனென்றால் அவர் அளிக்கும் அவருடைய ஒரே வாக்கு, இந்தியா முழுவதிலு முள்ள சுதேச மன்னர்கள் அனைவருக்கும் உள்ள வாக்குகளின் எண்ணிக்கைக்குச் சமமானதாகும். மற்ற சுதேச மன்னர்கள் சட்ட மன்றத்திற்கு வராவிட்டாலும் அவர்களுடைய வாக்குகளையும் இவரே அளிப்பதாகக் கணக்கெடுப்பதால் பிரிட்டிஷ் இந்திய மக்கள் அனைவருமே பாதிக்கப்படுகின்றனர். இது சுதேச மன்னர் களுக்கே அதிகாரம் வழங்கும் ஒருதலைப் பட்சமான ஏற்பா டாகிறது. ஒரு சுதேச மன்னர் சட்டமன்றத்திற்கு வெளியிலிருந் தாலும் அவருடைய வாக்குரிமையைச் சட்டமன்றத்தில் பங்கேற்கும் மற்றொரு சுதேச மன்னர் பயன்படுத்துவதால், பிரிட்டிஷ் இந்தியா வின் தலைவிதியைப் பாதிக்கும் அதிகாரத்தைச் சுதேச மன்னர்கள் பெற்றவராகின்றனர். இதனால், நான் மிகவும் தாழ்மையுடன் சொல்லிக் கொள்வதெல்லாம், இந்த வகையில் நியாயமில்லை, சமநிலையில்லை, இதனால் இத்தகைய ஏற்பாட்டை நான் ஒரு போதும் ஏற்க மாட்டேன். இதற்குச் சரியான முறையான வழி யென்னவென்றால், சர் மிஸ்ரா இஸ்மாயில் அவர்கள் கூறி

யதைப் போல, சட்டமன்றத்தில் உறுப்பினராகும் சுதேச மன்னர்களுக்கு மட்டுமே அவரவர்களுக்கென்றுள்ள வாக்குரிமைகளின் படி உரிமை வழங்க வேண்டும்; அதாவது, ஒரே ஒரு சுதேச மன்னர் வருவதாகக் கொண்டால் அந்த ஒருவருக்குள்ள ஒரே ஒரு பிரதிநிதித்துவ உரிமையை மட்டும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்; சுதேச மன்னர் பலர் ஓரணியாக வந்தாலும் அவர்களுக்குச் சர் மிஸ்ரா இஸ்மாயில் கூறிய விதிமுறைப்படி ஒட்டு மொத்தமாக இரண்டு வாக்குரிமைகள் தரலாம்; பலர் சேர்ந்து ஓரணியாக வந்தாலும் அந்த இரண்டு வாக்குகள் அளிக்கும் உரிமைதான் அந்த அணிக்கு உண்டு. மற்றபடியான வேறு ஒரு ஏற்பாட்டை என்னால் ஏற்க முடியவில்லை.

## முப்பதாவது அமர்வு: செப்டம்பர் 25, 1931

### தலைப்பு: 4

*(நிதி வருவாய்களைக் கூட்டாட்சியும் மாகாண ஆட்சிகளும் பகிர்ந்து கொள்வது பற்றியது)*

*டாக்டர் அம்பேத்கர்: சர் முகம்மது சாஃபி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறேன். இதுபோன்ற துறைகளை மத்திய ஆட்சியின் துறைகளாகக் கொள்ள வேண்டுமென்ற கூட்டாட்சிக் கட்டமைப்புத் துணைக்குழு பரிந்துரைத்துள்ளது; அரசியல் சட்டத்தில் 'மத்திய ஆட்சி' என்பதும் 'கூட்டாட்சி' என்பதும் இணைக்கப்பட்டு ஒன்றாக எண்ணப்பட வேண்டியதே என்பதை அக்குழு வலியுறுத்தியது. இது பற்றி நாங்கள் விரிவாக விவாதிக்க, பிறகாவது எங்களுக்கு நேரம் ஒதுக்கித் தருவீர்களென்று நம்புகிறேன். ஒரு பொருள் பற்றித் தீர்மானித்து விட்டுப் பிறகு அதனைப் பரிசீலனைக்காக நிதித் துணைக்குழுவுக்கு அனுப்புவதா அல்லது நிதித் துணைக்குழுவை முதலில் ஏற்படுத்துவதா என்பதனை முதலில் தீர்மானிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இதனை உங்களின் ஆய்வின் முடிவுக்காக விட்டு விடுகிறேன்.

இத்தகைய ஒன்றுக்குள் ஒன்றாகச் சிக்குண்டு நிற்கும் பிரிவை அரசியல் சட்டப் பிரிவிலேயே வைக்கலாமா அல்லது துணைக் குழுவின் முடிவுக்கு விடலாமா என்பதே என்னைப் பெரிதும் வாட்டிய சிந்தனையாகும். இதனைத் தீர ஆய்ந்து ஒரு முடிவுக்கு வருவதே சிறப்பானதென்று நான் கருதுகிறேன்.

---

* மேற்படி நூல்: பக்கம் 418.

## முப்பத்து நான்காவது அமர்வு— 14 அக்டோபர், 1931

### தலைப்பு — 4

*(நிதி வருவாய்களைக் கூட்டாட்சியும் மாகாண ஆட்சிகளும் பகிர்ந்து கொள்வது பற்றியது)*

**கூட்டாட்சி நிதித் துணைக்குழுவின் அறிக்கைப் பற்றிய விவாதம்:**

*டாக்டர் அம்பேத்கர்: கனம் மேலவைத் தலைவர் அவர்களே! கடந்த இரண்டு நாட்களாகக் கூட்டாட்சி நிதித் துணைக்குழு அறிக்கையின் மீது விவாதம் நடந்து கொண்டிருப்பதை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த நீண்ட விவாதத்தால் தொய்வும், அலுப்பும் ஏற்படலாமென அஞ்சுகிறேன். துணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டப் பெருவாரியான தீர்மானங்களை நான் ஏற்க மறுப்பதால் இந்த விவாதத்தில் நான் குறுக்கிட்டிருக்கக் கூடாது.

நிதி வருவாய் மூலங்களைக் கூட்டாட்சிக்கும், மாநில ஆட்சிகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்வதென்ற சிக்கலான பிரச்சினையைத் துணைக்குழு எடுத்துக் கொண்டது. இதற்காக, இத்துணைக்குழு தானே ஒரு சில கோட்பாட்டு வழிமுறைகளை வகுத்துக் கொண்டு, அவற்றின்படி தனது முடிவுகளைத் தீர்மானித்துள்ளது. இத்தகைய கோட்பாடுகள் அதனுடைய அறிக்கை, பத்தி 8-இல் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி பார்த்தால், மத்திய அரசுக்கும், மாகாண அரசுகளுக்கும் இடையே வருவாயை எப்படியெல்லாம் பகிர்ந்து கொள்ளலாமென்ற வழிவகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மறைமுகவரிகள் மத்திய (கூட்டாட்சி) அரசுக்கும், நேர்முக வரிகள் மாநில அரசுகளுக்கும் சேர வேண்டுமென இருக்கிறது. சரி. இது ஒருவித கோட்பாட்டின்படி அமைந்திருக்கலாம். விட்டு விடுவோம். ஆனால், இத்தகைய முடிவு எந்த அடிப்படையின் மேல் எடுக்கப்பட்டதென்று தெரியவில்லை. நிதித் துணைக்குழு அறிக்கை 8-இல் கூறப்பட்டுள்ள தீர்மானங்கள் எந்த நாட்டை முன் உதாரணமாகக் கொண்டு எடுக்கப்பட்டவை என்பது எனக்குத் தெரியவில்லை. உலகிலுள்ள எத்தனையோக் கூட்டாட்சி அரசியல் சட்டங்களையும் நான் மிகவும் ஜாக்கிரதையாகப் பரிசீலித்துப் பார்த்து விட்டேன்.

இதுபோன்ற விதிகள் எங்குமே இல்லை. எடுத்துக்காட்டாக.

1) கனடா நாட்டு அரசியல் சட்ட விதிகள் 91 மற்றும் 92-ஐ எடுத்துக் கொள்வோம். மத்திய அரசுக்கு மறைமுக வரிகள்

---

* *மேற்படி நூல்: பக்கம் 529-34*

மட்டுமே சேரவேண்டுமென்றோ, அல்லது மாநில அரசுகளுக்கு நேர்முக வரிகள் மட்டுமே சேர வேண்டுமென்றோ அங்கு நிபந்தனை கிடையாது. மத்திய அரசு தான் விரும்புகிறபடி நேர்முக வரிகளையோ அல்லது மறைமுக வரிகளையோ தானே வைத்துக் கொள்ளலாம். கனடா நாட்டு மத்திய அரசுக்கு இந்த உரிமை உண்டு.

2) ஆஸ்திரேலியா நாட்டு அரசியல் சட்டவிதிகள் 86, 69 மற்றும் 90-ஐ எடுத்துக் கொண்டால் இதே முடிவைத்தான் நாம் காண்கிறோம். அவற்றின் அணுகுமுறைகள் வேறுபட்டாலும் முடிவு அதேதான். இந்த (மூன்று) விதிகளின்படி மாநில அரசுகளுக்குச் சுங்க வரிகளையும், கலால் வரிகளையும் விதிக்கும் அதிகாரம் கிடையாது.

இதிலிருந்து, ஆஸ்திரேலிய நாட்டு மத்திய அரசுக்குச் சுங்க வரியையும், கலால் வரியையும் விதிக்கும் அதிகாரம் மட்டுமே உள்ளது என்பது பொருளல்ல. இவ்விரு வகை வரிகளையும் விதிக்கும் அதிகாரம் மத்திய அரசின் ஏகபோக உரிமை என்பதே இதன் பொருளாகும். ஆஸ்திரேலிய நாட்டில் நேர்முக வரிகளை விதிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கே உண்டு.

இந்தத் துணைக்குழு அறிக்கை பத்தி 8-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் சட்டத்தில்—1913-இல் தனது 16-வது திருத்தத்தைச் செய்யும் வரை இதுபோன்ற ஒருமுறை இருந்ததாகச் சுட்டிக் காட்டுகிறது.

உங்களிடம் நான் மிகவும் வேண்டிக் கூறிக் கொள்கிறேன், அவ்வாறு துணைக்குழு குறிப்பிட்டது தவறான செய்தி என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் சட்டம், உருவாக்கப்பட்ட நாளிலிருந்து அது ஒரு போதும், மத்திய அரசு நேரடி வரிகளை விதிக்கும் அதிகாரத்திற்கு வரம்பு விதித்ததேயில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசியல் சட்டம் விதி ஒன்றிலுள்ள பிரிவு இரண்டில் ''அமெரிக்க ஐக்கிய நாட்டு மத்திய அரசு நேரடி வரி விதிக்க உரிமைப் பெற்றது'' என்று வெளிப்படையாகவே கூறப்பட்டுள்ளது. அப்படி நேரடி வரியை மத்திய அரசு விதிக்கும் போது ஒவ்வொரு மாநில்த்திலுமுள்ள மக்கள் தொகைக்கேற்ப விதிக்க வேண்டுமென்பதே அந்த விதியாகும். இது மட்டுமே அரசியல் சட்டம் கூறும் கட்டுப்பாடாகும். மக்கள் தொகைக்கு ஏற்ப மாநிலங்களில் நேரடி வரி விதிக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு கூட அந்நாட்டு அரசியல் சட்டத்தை 1913-இல் 16-வது முறையாகத் திருத்தும் போது நீக்கப்பட்டு விட்டது. ஆனால் நேரடி வரி விதிக்கும் அந்த உரிமை முதலிலிருந்தே இருந்து வந்தது. அது மட்டுமல்லாது 1864-லிலும், 1894-லிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இவ்வுரிமை புதுப்பிக்கப்பட்டது. நாம் இப்பொழுது கொண்டு வந்திருக்கும் தீர்மானத்திற்கேற்ப மத்திய அரசு 'மறைமுக வரிகளையும்' மாநில அரசுகள் (காண்டன்) நேர்முக வரிகளையும்

விதிக்கும் உரிமைகளைக் கொண்டிருந்த ஒரே நாடு சுவிட்சர் லாந்து மட்டுமேயாகும். சுவிட்சர்லாந்திலிருந்ததைப் போலவே நமது கூட்டாட்சியிலும் இருக்க வேண்டுமென்று எந்த ஒரு உறுப் பினரும் மனம் திறந்து தைரியமாகச் சொல்லமாட்டார்களென நான் நினைக்கவில்லை. சுவிட்சர்லாந்தையும் இங்கிலாந்தையும் ஒப்பிட்டு, அங்கிருப்பதைப் போலவே இங்குமிருக்க வேண்டு மெனக் கூறுவதில் பயனில்லை. அவ்வாறு ஒப்பிடுவது சுண்ணாம் பையும், வெண்ணெய்யையும் அவற்றின் வெண்மை நிறம் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு ஒப்பிடுவதைப் போலாகுமென் பேன். 1915-இல் இத்தகைய வரிவிதிப்பு முறையை சுவிட்சர் லாந்து அரசியல் சட்டத்திலிருந்து நீக்கிவிட்டு, மத்திய அரசே 'நேரடி' வரிவிதிப்பு முறையை மாநில அரசின் குடிமக்கள் மீது விதிக்கலாமென்றாக்கினர். இத்தகைய எடுத்துக்காட்டைப் பின் பற்றி நிபுணர் குழுவை அமைத்து வரி விதிப்பு முறையை இங்கும் பின்பற்றலாம் என்ற ஆலோசனைக்கு என்னால் ஒப்புதல் அளிக்க முடியவில்லை.

துணைக்குழு தனது அறிக்கை பத்தி 10-இல் கூறப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இப்பொழுது வருவோம். வருமான ஊற்றுக்களை மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பகிரும் முறைகளை இந்தப் பத்தி விளக்குகிறது. இவற்றின் தகுதிக்கேற்ற வருவாய்களை மட்டும் வைத்து இவற்றிற்கிடையே அவற்றைப் பங்கிட முடியுமா? தேவைப்படும் வரவு-செலவு கணக்குகளைத் தயாரித்த பின்பு தான், இவ்விரு ஆட்சிகளின் தகுதிகள், தேவைகள், செலவுகள் ஆகியவற்றைக் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். இல்லா விட்டால் ஒதுக்கப்படும் நிதி போதுமா போதாதாயென்பதை அறிய முடியாது. நலத் திட்டங்கள் பெரும்பாலும் மாநிலங்களுக்கே அதிகம் தேவைப்படுகிறதென்பதை மனத்திற் கொண்டு, மாநிலங் களுக்கே அதிக நிதி ஒதுக்க வேண்டும். அப்படி ஒதுக்கும் போது, மத்திய அரசுக்குப் போதிய வருவாயும், தேவைப்படும் தொகையும் குறைந்து விடுமென எனக்குத் தோன்றுகிறது.

துணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையில் பத்தி 10-இல் எதிர் பார்க்கும் வருவாயின் மொத்தத் தொகையை எடுத்துக் கொள் வோம். முதலாவதாகச் சுங்கவரிதான் வருவாயில் முக்கியமான தாகும். சுங்கவரி அதுவ்ரும் பல்வேறு வழிகளைப் பொருத்தே யுள்ளது. வாணிபம் பெருகினால் சுங்கவரியும் பெருகும்; வாணி பம் சுருங்கினால் சுங்கவரியும் சுருங்கும். ஏற்றுமதி அதிகரித்தால் வருவாயும் அதிகரிக்கும். ஏற்றுமதி குறைந்தால் வருவாயும் குறை யும். நுகர்வோர் எண்ணிக்கை குறைந்தால் இறக்குமதியும் குறை யும். இதனாலும் அரசுக்குச் சுங்கவரி குறையும். இவ்விரு காரணங் களால் அதாவது ஏற்றுமதி, இறக்குமதி குறைகின்ற காரணங் களால் நேரடியாகவே சுங்கவரியால் வரும் வருவாய் குறைந்து போகும்.

இரண்டாவதாகச் சில நேரங்களில் சுங்கவரி குறைந்து வருவாய் வற்றிப் போகக் காரணம் அரசு ஏற்றுமதி இறக்குமதியில் அவ்வப் போது கையாளும் கொள்கையேயாகும். சில நேரங்களில் இந்தியா வில் ஆளும் கட்சியாக வரும் அரசியல் கட்சிகள், உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களின் வளர்ச்சிக்காகவும், அவற்றின் பாதுகாப்பிற்காகவும், உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் பொருட் டும், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்களை நிறுத்தி விடும். இதனால், இறக்குமதிக்குத் தடை ஏற்படுகிறது. இவ்வாறு, இறக்குமதிக்குத் தடை ஏற்பட்டு விடுவதால், உள் நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு முழுப் பாதுகாப்பு ஏற்படுவது உறுதிதான், ஆனாலும், சுங்கவரி வருவாயின் ஆணி வேர் வெட்டப்பட்டு விடுகிறது. பிறகு, வேறொரு சமயத்தில் பதவிக்கு வரும் கட்சியானது கட்டுப்பாடற்ற வாணிபக் கொள்கை யைப் பின்பற்றி, உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்குப் பாதுகாப்பு அளிக்காமல் விடும் போதும் மத்திய அரசுக்குச் சுங்க வரி புரையோடிச் சுருங்கி விடுகிறது. எனவே, மத்திய அரசு அவ் வரியை நம்பிச் செயல்பட முடிவதில்லை.

அடுத்தபடியாக, மத்திய அரசுக்குக் கிடைக்கும் இரண்டாவது முக்கிய வருவாயான அபினி விற்பனையைப் பற்றிப் பார்ப் போம். இந்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்க்கும் போது, அபினியின் ஏற்றுமதி மூலமாக இந்திய அரசுக்கு இரண்டு கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதைக் காண்கிறோம், மருந்து பொருள்களைச் செய்வதற்காக விற்பனையாகும் அபினியின் மூலம் 10-லிருந்து 15 இலட்சம் பெறுமான சிறுதொகையே கிடைக்கிறது. இதிலிருந்து மத்திய அரசுக்குக் கிடைக்கும் வருவா யின் குறியளவு மிகக் குறைவானதேயென்பதை அறியலாம்.

மூன்றாவதாக, துணைக் குழுவின் அறிக்கையின்படி, உப்பு வரியால் வரும் வருமானம் மத்திய அரசைச் சேருகிறது. இது ஒரு நிரந்தரமற்ற வருவாய் ஆகும். இந்திய அரசியல் கோட்பாட்டின் சூறாவளியில் சிக்கி இது தவித்துக் கொண்டிருக்கிறது. காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தால் உப்புவரி அடியோடு நீக்கப்பட்டு விடும். காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்து உப்புவரியை அடியோடு நீக்கி விடுமோ என்னமோ, ஆனால் உப்புயென்பது, இந்தியாவிலுள்ள பொது மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாதப் பொருளாகும். எனவே, உப்பு வரியால் பெரும்தொகை வருவா யாக வருமென்று மத்திய அரசு ஒருபோதும் நம்பியிருக்க முடி யாது.

கடைசியாக, தொழில் நிறுவனங்கள் மூலமாகக் கிடைக்கும் வரி மத்திய அரசுக்குச் சேருமென்று துணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஏறத்தாழ இவ்வரியின் மூலம் மூன்று கோடி ரூபாய் தான் வருமானம் கிடைக்குமென அறிகிறேன். இது மிகவும் சிறிய தொகை. இந்தியா தொழில் மயமானால்தான் சுபிட்சமேற்படும்

என்பதை நாமெல்லாம் ஒப்புக்கொள்கிறோம். தொழில் மய மாவதற்கு நமக்கு மூலதனம் மிக முக்கியமானதென்பதையும் நாம் நன்கறிவோம். ஆனாலும், இந்த வரியை நாம் மேலும், மேலும் உயர்த்திக் கொண்டேபோனால் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக் குன்றிப்போகுமென்ற அச்சம் எனக்குண்டாகிறது.

இதுவரை, மத்திய அரசாங்கத்தின் வருவாய் இனங்களில் மிக முக்கியமானவற்றைப் பார்த்தோம். அதன் செலவினங்களை இனிப் பார்ப்போம். துணைக்குழுவின் கருத்துப்படி, மத்திய அரசின் செலவினங்கள் அதிகமில்லை என்பதை அறிகிறோம். இந்த நவீன காலத்தில் எந்த ஒரு அரசும் செலவு செய்யாமல் ஆட்சி நடத்த முடியும் என்பதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். மக்களைப் பாதுகாப்பது மட்டும் அரசாகாது. அரசாங்கமென்றால் சட்டமும் ஒழுங்கும் கெட்டுக் குழப்பமான நிலையேற்படும் போது, மக்களுக்குப் பாதுகாப்பளித்துக் காவல் புரியும் நிலையமெனக் கருதிய காலமொன்று வரலாற்றிலிருந்தது. இன்று இத்தகைய கருத்திலிருந்து மாறுபட்டு விட்டோமென நினைக்கிறேன். அரசு நமக்குக் காவலனாக அமைவதோடு நமது நலனைக் காக்கும் நல்ல வனாகவும் அமைய வேண்டுமென நாம் நம்புகிறோம். அரசாங்கம் மக்கள் நலனுக்காகப் பாடுபட வேண்டுமென்பதே என் கருத் தாகும். இந்திய அரசு இத்தகைய மக்கள் நலம் நாடும் நல்லாட்சி யாக அமைய வேண்டுமென்ற என் கருத்து, உங்களுக்கு ஒரு புதிய கருத்தாகப் படலாம். இது என்னுடைய உள்ளார்ந்த தனிக் கருத்து. மற்ற உறுப்பினர்கள் மத்திய அரசு என்னென்ன செய்ய வேண்டு மென்று பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால், எனது எண்ணமும் நோக்கமும் மத்திய அரசு மக்களின் நலன் களுக்காகவே, அவர்களின் முன்னேற்றத்திற்காகவே பாடுபட வேண்டும், செலவு செய்ய வேண்டுமென்பதேயாகும்.

நான் நினைப்பதும், நான் பிறிதோரிடத்திலும் தீர்மானமாகக் கொண்டுவர விரும்புவதும், மத்திய அரசு ஒடுக்கப்பட்ட மக்களுக் குப் பாதுகாப்பளிப்பதையும், உதவி செய்வதையும் மேலும் விரிவு படுத்தி, இதனால் வரும் இடையூறுகளையும் ஏற்று, எப்பாடு பட்டேனும் அவர்களுக்கு நலம் பயக்க வேண்டுமென்பதுதான். ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளும், தீண்டாமையை அகற்ற வேண்டுமென்ற முயற்சியும் இதற்குப் பிறகும் உள்ளாட்சி அல்லது மாநில ஆட்சியின் பொறுப்பு, அங்குள்ள சிக்கல்களென்று மத்திய அரசு நினைக்காமல் இது ஒரு தேசியப் பிரச்சினையென்று இந்தியா முழுவதும் ஒன்று சேர்ந்து இப்பிரச்சினையை தீக்க முன்வர வேண்டுமென்பதே என் விருப்பமாகும். மத்திய அரசு, மலைவாழ் மக்களை நாகரிகமாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டுமென்பதும் என் வேண்டுகோளாகும். இவர்களின் மக்கள் தொகை ஏறத்தாழ ஒடுக்கப்பட்ட மக்களின் மக்கள் தொகையளவு இருக்கலாமெனக் கருதுகிறேன். பிற்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் முன் னேற்றத்திற்காக அரசு சில நல்ல காரியங்களைத் தொடங்க

வேண்டும். மத்திய அரசு, இத்தகைய நலத்திட்டங்களைத் தொடங்கி ஒவ்வொரு சமுதாயமும் குறைந்தபட்சம் நாகரிக வாழ்வை எட்டு மாறாவது செய்ய வேண்டுமென்பதே என் விருப்பமாகும்.

இந்தியாவின் ஒரு பகுதியில், அல்லது ஒரு மாநிலத்தில் ஏற்படும் பேரழிவால் இந்தியா முழுவதும் பாதிக்கும் நிலை ஏற்படும்போது, அத்ற்கு அந்தப் பகுதி மட்டுமோ அல்லது மாநிலம் மட்டுமோ பொறுப்பேற்கட்டுமென விட்டுவிடக் கூடாது. உதாரண மாக: மலேரியா ஓரிடத்தில் ஏற்பட்டால் அது இந்தியா முழுவதும் பரவி மக்களின் உயிரைக் குடிக்க வல்லது. இதனால் பாதிக்கப் பட்ட மாநிலம் மட்டுமே பொறுப்பேற்று இதனை ஒழிக்க முடி யாது. அம்மாநிலம் அதனை ஒழிக்கும் சக்தியற்றதாகவும் இருக்க லாம்; அல்லது பொருளாதாரத்தில் வலிமையற்றதாகவும் இருக்க லாம். எனவே, இதனை ஒரு தேசிய அபாயமாகக் கருதி, தேசிய அரசே இதனை ஒழிக்க முற்பட்டு மக்களின் நலனுக்குப் பாடுபட வேண்டும்.

எல்லா மாநிலங்களுக்கும் சில பொதுவான சிக்கல்கள் உண்டு. ஆனால், சில மாநிலங்களுக்கு மட்டும் மற்ற மாநிலங்களுக்கு இல்லாத புதுப் பிரச்சினைகளும் உண்டு. எடுத்துக்காட்டாக: வட மேற்கு எல்லைப்புற மாநிலத்தில் வேறெங்குமில்லாத பல புதிய பிரச்சினைகளுண்டு. இவற்றை மத்திய அரசே நேரடியாகத் தீர்க்க வேண்டும். இதற்காகத் தனிப்பட்ட உதவித் தொகையை இத்தகைய மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்க வேண்டும். இதைப் போலவே, புதிதாக உருவாக்கப்படும் மாநிலங்களும் பாதிக்கப் படாமலிருக்க மத்திய அரசு உதவித்தொகை வழங்க வேண்டும். இத்தகைய உண்மைகளைத் துணைக்குழு எண்ணிப் பார்க்க வில்லை போலும்! இதனால்தான் இவைப் பற்றி அது எதுவும் குறிப்பிடவில்லை.

இதுவரை நான் கூறிவந்த செலவினங்களை வருவாயோடு ஒப்பிட்டு ஒருவித முடிவுக்கு நீங்கள் வந்திருப்பீர்களென நம்பு கிறேன். செலவினம், வரவினம் ஆகிய இரு கூறுபாடுகளையுமே நான் துணைக் குழுவின் அறிக்கையிலிருந்து எடுத்துத்தான் விளக் கினேன். எனவே, இதை ஏதோ நானே பெரிதுபடுத்திக் கூறி விட்டதாக நீங்கள் எண்ணக் கூடாது.

பொருளாதார நிலை மத்திய அரசுக்குப் போதாக் குறையாகவே உள்ளது; இது சாதாரணமாக, ஒருவன் ஏதோ உண்டு உயிர் வாழ்தலை மட்டுமே காப்பது போலிருக்கிறது என்று நான் கூறி இருந்தாலும் அது போதாது. நீரிலே விழுந்துவிட்ட ஒருவன் மூக்கை மட்டும் நீருக்கு வெளியிலே தூக்கிக் கொண்டு, சாகாமல் உயிருக்கு ஊசலாடுவதைப் போல், மத்திய அரசின் வருவாய் ஏதோ தற்காலிக உயிர்ப் பாதுகாப்பை மட்டுமே அளிப்பதாக வுள்ளது என்று கூறினாலும் அது போதுமானதாயில்லை. எதிர்த் திசையிலிருந்து ஒரு காற்று அடித்தாலும் நீரிலே விழுந்துவிட்ட

மனிதன் தன் மூக்கோடு நீருள் மூழ்கி இறப்பதைப் போல, பற்றாக்குறை வருவாயுள்ள மத்திய அரசும் அந்நிலைமையை அடையுமென்பதே என் கருத்தாகும்.

துணைக்குழுவின் அறிக்கையில் 21-வது பத்தியில் 'அவசர நிலைமை' என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதனை நான் 'ஆபத்தான அவசர நிலைமை' என அழைக்க விரும்புகிறேன். அத்தகைய அவசர நிலைமை மத்திய அரசுக்கு ஏற்படும் போது, மாநில அரசுகளிடமிருந்து மத்திய அரசு கொடையாகக் குறிப் பிட்டத் தொகைகளை வசூலித்துக் கொள்ளும் அதிகாரம் பெற் றுள்ளதெனத் துணைக்குழு கூறுகிறது. இது மத்திய அரசுக்குப் பாதுகாப்பான, நம்பி வாழக்கூடிய முறைதானா என்பது எனக் குள் எழும் ஐயமாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இத்தகைய வசூல் முறையை நம்பி, மத்திய அரசு வாழ முடியுமா? மாநிலங்கள் மத்திய அரசுக்கு அவசர நிலை ஏற்படும்போது தாமே முன் வந்து, மனமுவந்து தரும் கொடை பற்றி நேற்று என் அருமை நண்பர் ஒருவர் தன் கருத்தைத் தெரிவித்துள்ளார். அவசர காலத்தில் மத்திய அரசுக்கு மாநில அரசுகள் கொடையளித்து உதவ வேண்டு மென்றால், 'ஏற்பட்டுள்ளது அவசர நிலைமையா இல்லையா' என்பதை மாநில அரசுகள்தானே தீர்மானிக்க வேண்டும்? இந்த கருத்தை எல்லோருமே ஏற்பார்களென்று நான் நினைக்கவில்லை. ஆனால், இக்கருத்து ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டுகிறது; அதா வது மத்திய அரசுக்குப் பணப் பற்றாக்குறையால் அவசரநிலை ஏற்படும் போது, எல்லா மாநிலங்களுமே, தாமே முன்வந்து அப் பற்றாக்குறையைப் போக்கப் பணமளிக்காது என்பதுதான். மத்திய அரசுக்கு அவசர நிலை ஏற்படும்போது, மாநிலங்கள் தங்கள் பங்குத் தொகையாகக் குறிப்பிட்டப் பணத்தைக் கொடுக்குமென நம்பி இருக்க முடியுமா? இந்தக் கேள்வியை நான் கேட்டேன். ஆனால், என்னாலேயே இதற்கு விடையளிக்க முடியாது. எப்படிப் பார்த்தாலும், இந்த முறை நம்பிக்கையானதல்ல. கடன் தீர்க்கும் திறன் மாநிலங்களுக்கு உண்டாயென்றால் ஓரளவு இதற்கு உறுதி கூறிவிடலாம். ஆனால் அவசர நிலையில் மாநிலங் கள் பண உதவி செய்யுமா என்பதற்கான விடையை உறுதியாகக் கூற என்னால் முடியவில்லை.

கனம் மேலவைத் தலைவர் அவர்களே! மத்திய அரசுக்குச் செலவினங்கள் அதிகரிக்கும் போதும், அவசர நிலைகள் ஏற்படும் போதும் அவற்றைச் சமாளிக்க (இதுபோன்ற மாநில நன்கொடை களை எதிர்பார்க்காமல்) அது தன் வருவாய் ஊற்றுக்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்பதே எனது முடிந்த முடி வாகும். வருமான வரியை மத்திய அரசும், மாநில அரசுகளும் பொதுவாக பகிர்ந்து கொண்டால், அவற்றின் வருவாய் பெருகும். இதனால், மத்திய அரசும், மாநில அரசுகளும் போதிய வருவாயைப் பெற வாய்ப்படைகின்றன. தங்களுக்குத் தேவைப்படும் போது, உபரி வருவாயைப் பிறவற்றின் உதவியை நாடாமல் தாமே

பயன் படுத்திக் கொள்ளலாம். துணைக்குழுப் பரிந்துரையில் 21-வது பத்தியில் உள்ளபடி மற்றெந்த நன்கொடையும் நம்பி வாழாமல் தனித்தியங்கலாமென்பது என் கருத்தாகும்.

வருமான வரியை மத்திய, மாநில அரசுகள் இரண்டுமே பொது வருவாயாகக் கொள்ள வேண்டுமென்று கூறினேன். ஆயின் அதனை எந்த முறையில் இவ்விரு அரசுகளும் பகிர்ந்து கொள்வது என்பதையும் நான் கூறியாக வேண்டும். அவ்வாறு கூறும் முன் நான் இரண்டு கருத்துக்களை முன் வைக்கிறேன். முதலாவதாக, மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்படும் எத்தகைய வருவாயும் இவற்றிற்கிடையில் மட்டுமே பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும்.

பிரிட்டிஷ் மாநிலங்களென்பவை தன்னிறைவோடு திகழ்வன வாகும். இவை பிறவற்றிடமிருந்து துன்பங்களையோ, இன்பங் களையோ பகிர்ந்து கொள்ளக் கூடாது.

இரண்டாவதாக, ஒரு அரசாங்கம் எப்படிச் சட்டமன்றத் திற்குப் பொறுப்புள்ளதாக நடக்குமோ அதைப் போல மாநில அரசும் நிதி நிலையைப் பொறுத்தவரையில் பொறுப்போடு நடக்க வேண்டும். அதனால் நிதி நிலைக்குப் பாதகம் ஏற்படக் கூடாது.

*தலைவர் :* நீங்கள் சுட்டிக்காட்டியவற்றைப் பற்றி நான் சற்று விமர்சிக்கலாமா! முடிந்தவரை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு விரைவில் மாநிலங்களின் விஷயங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றீர்கள். எல்லா மாநில விஷயங்களும் விரைவில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பதற்காகவே, மாநில நிதி நிலைக்கு முன் ஒரு பீரங்கியையும் வைத்துள்ளீர்கள்.

*டாக்டர் அம்பேத்கர் :* கட்டாயமாக, முதலில் அவற்றைத் தீர்த் தாக வேண்டும். மத்திய அரசு வருமான வரியை நிர்ணயித்து அதில் வரும் வருவாயை அந்த அரசும் மாநில அரசுகளும் பகிர்ந்து கொள்வதென்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வரிவிதிப்புப் பணியின் ஒரு பகுதியை மத்திய அரசும், மற்றொரு பகுதியை மாநில அரசுகளும் ஏற்க வேண்டும். ஆனால், வரிவிதிப்பு விசாரணைக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்டபடி, வருமான வரியை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ள வேண்டு மென்ற முறையையே நான் ஏற்கிறேன்.

மாநிலங்களின் தனிவருமானத்தை மாநிலங்களுக்கும், மற்ற வருமானங்களை மத்திய அரசுக்கும் பகிர்ந்திடல் வேண்டும். தனி வருமானம் என்பது என்ன, அதன் வரிவிதிப்பு விகிதம் எவ்வளவு என்பதை மாநிலங்கள் ஒவ்வொன்றும் தானே நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். இதில் மத்திய அரசு தலையிட்டுத் தன் தேவைக்கேற்றபடி நிர்ணயிக்கக் கூடாது.

## முப்பத்தைந்தாவது அமர்வு— 15 அக்டோபர், 1931

### தலைப்பு—4

*நிதி வளங்களைக் கூட்டாட்சியும் அதன் பகுதிகளும் பகிர்ந்து கொள்ளுதல்*

**கூட்டாட்சி நிதித் துணைக்குழுவின் அறிக்கை மீது விவாதம்**

*டாக்டர் அம்பேத்கர்:* தலைவர் அவர்களே, கூட்டாட்சி அரசிற்காகத் துணைக்குழு வகுத்தளித்த வரிவிதிப்பு ஏற்பாடு போதுமானதல்ல; நாம் விரும்பும் வகையில் அது வளைவு சுழிவும் நீக்குப்போக்குமுடையதல்ல என்பதையும், ஏதாகிலும் நெருக்கடி நிலை தோன்றும்போது, அதன் காரணமாகக் கூட்டாட்சி அரசின் மீது சுமத்தப்படக் கூடிய நிதிச் சுமையை தாங்குமளவிற்கு அது ஆற்றல்படைத்தது அல்ல என்பதையும் ஆகவே, வருமான வரியை, கூட்டாட்சி அரசு, மற்றும் மாநில அரசுகளுக்கும் அதன் பிரிவு களுக்கும் பொதுவான வருவாய் ஆதாரங்களாய்ச் செய்வதன் மூலம், துணைக்குழு தெரிவித்த வருவாய் ஒதுக்கீட்டளவை மாற்ற வேண்டியது அவசியமாகும் என்பதையும் நான் நேற்றைய விவாதத்தின் போது சுட்டிக் காட்டினேன். மேலும், நிதி வளங் களை ஒதுக்கீடு செய்யும் திட்டத்தை வகுக்கும்பொழுது இரண்டு கருத்துக்களை மனதிற் கொண்டாக வேண்டும். முதலாவதாகக் கூட்டமைப்பு அரசினுடையதாக இருந்தாலும்சரி, மாநில அரசி னுடையதாக இருந்தாலும் சரி, நிதி ஏற்பாடு தன்னாட்சியுரிமை யுடையதாக இருக்க வேண்டும், தன்னிறைவு உடையதாக இருக்க வேண்டும்; இரண்டாவதாக, அந்த ஏற்பாடு, சட்டமன்றத்தின் பால் நிர்வாகம் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புணர்வுக்கு ஊறு ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது என்றும் கூட நான் கூறினேன். மேற் குறிப்பிட்ட உதவித் தொகைகள் அல்லது பங்குத் தொகைகள், (subventions or Contributions) தன்னாட்சியுரிமையுடைய மற்றும் தன்னிறைவுடைய நிதி ஏற்பாட்டினுக்குச் சற்றும் பொருந்தாதவை என்பது தெளிவு. அவை, சட்டமன்றத்தின் பால் நிர்வாகம் கொண் டிருக்கும் பொறுப்புணர்வைக் குறைப்படுத்தவே செய்யும்; மேலும், அவை சட்டமன்றம் நிர்வாகத்திடம் அலட்சியமாக நடந்து கொள்ளு மாறும் செய்யக்கூடும். ஏற்கனவே வெளியேயிருந்து பெற்றுக் கொண்ட வழங்கல்களை (supplies) மறுக்கும் அதிகாரம், மற்றும் வழங்கல்களின் ஒதுக்கீட்டை மறுக்கும் அதிகாரம் ஆகிய இவை யிரண்டும், நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அதனைச் சட்ட மன்றத்தின் விருப்பங்களுக்கேற்ப நடந்து கொள்ளுமாறுச் செய் வதற்கும் எவ்வகையிலும் பயனுள்ள வழிமுறைகளல்ல. இந்த நோக்கில் அணுகினால், வருவாய் ஆதாரங்களைப் பகிர்ந்தளிக்கும்

பிரச்சினை மிகப் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. நீங்கள் அந்த வருவாய் ஆதாரங்களை எப்படி வேண்டுமானாலும் பிரிக்கலாம்; அப்படிப் பிரித்தளிப்பது சட்டமன்றம், நிர்வாகம் ஆகிய இரண்டையும் தனித்தனியாகத் தத்தம் அளவில் தன்னாட்சியுரிமையுடையவையாகவும் தன்னிறைவுடையவையாகவும் ஆக்கும் வகையிலும் செய்யலாம்; அல்லது, அப்படிப் பிரித்தளிப்பதன் வாயிலாக விளையும் வரிவிதிப்பு ஏற்பாடு, உதவித்தொகைகள் மற்றும் பங்குத் தொகைகள் வழங்குவதன் வாயிலாகச் சரிசெய்ய இயலாத நிலையில் அது தன்னாட்சி உரிமையுடையவையாகவும் இருக்க முடியாது; தன்னிறைவு பெற்றவையாகவும் விளங்க முடியாது.

கூட்டு வருவாய் இனம் என்ற வகையில், வருமான வரியைக் கையாளுவது குறித்து இந்தக் குறிப்பிட்ட முறையைத் தெரிவிப்பதில், நான் இங்கு எடுத்துக் கூறிய கருத்துரைகளைப் பெரிதும் பின்பற்றி அந்த முடிவுக்கு வந்தேன். கூட்டாட்சி, மாநில அரசுகளின் கூட்டுவருவாய் வாயிலாக, வருமான வரியைக் கையாளுவதில் நாம் கருதிப் பார்க்கக் கூடிய இருவகை வழிமுறைகள் உள்ளன. முதலாவதாக, ''வருவாய் வாயில்களைத் தனியே பிரித்தொதுக்கி வைத்துக் கொள்ளுதல், கிடைத்த வருவாயைப் பகிர்ந்து கொள்ளுதல்'' என்றழைக்கப்படும் முறையை நீங்கள் பின்பற்றலாம்; இரண்டாவதாக, நீங்கள், 'வருவாய் ஆதாரங்களை ஒதுக்கித் தருதல் அல்லது பிரித்துக் கொள்ளுதல்; கிடைத்த வருவாயைப் பகிர்ந்து கொள்ளுதல்' என்னும் முறையை பின்பற்றலாம். முதல் முறையில், வரிவிதிப்பு வீதத்தை வரையறுப்பது இந்த இரண்டு அதிகார அமைப்புகளில் ஏதாவது ஒன்றின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்குள் இருக்கும். இயல்பாக இந்த அதிகாரம் கூட்டாட்சி அரசின் அதிகார வரம்பில் இருக்கும். மாநில அரசு, செயலற்றுக்கிடக்கும் கூட்டாளியாக (sleeping partner) இருக்கும். இரண்டாவது முறையில் இரு அரசுகளுமே, தத்தமக்குரிய வருமான வரி வீதங்களை வரையறுப்பதற்குரிய அதிகார வரம்பைச் சம அளவில் பெற்றிருக்கும். ஒரு மாநில அரசு, தனக்குரிய வருமான வரி வீதத்தைத் தானே நிர்ணயிக்கும். அது அந்த மாநிலத்திற்குள் செயலில் இருக்கும் கூட்டாட்சி அரசு தன் கீழ் உள்ள (மாநிலங்கள்) அனைத்திலும் செயலில் இருக்கும் வரையிலான வருமான வரிவீதம் ஒன்றை நிர்ணயிக்கும். வருமான வரியின் நிர்வாகமும் வசூலும் கூட்டாட்சி அரசு நிர்வாகத்தின் பொருளாகத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், வருவாயை ஒதுக்கீடு செய்யும் வழிவகையாக இரண்டாம் முறை பின்பற்றப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாகும். இது, பிரான்சு, பெல்ஜியம் மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையிலுள்ளவற்றிலிருந்து பெரிதும் வேறுபட்டதாக இருக்காது. இத்திட்டத்தின் கீழ் இரண்டு வகையான வருமான வரி வீதங்கள் இருக்கும்: (1) கூட்டாட்சி அரசு, தன்னுடைய தேவைக்கேற்ப அவ்வப்போது வரையறுக்கின்ற கூட்டமைப்பு அரசு வரிவீதம்,

(2) மாநில அரசுகள் ஒவ்வொன்றும் அவ்வவற்றின் நிதித் தேவை களுக்கிணங்க அவ்வப்போது வரையறுக்கின்ற மாநில வீதம் (Provincial rate). மொத்தத்தில், தற்போதுள்ளவாறே வரிவிதிப்பு நடைமுறை முழுவதையும் கூட்டாட்சி அரசே தொடர்ந்து நிர் வகித்து, வசூலித்து வரும்.

இத்திட்டத்தின் நன்மைகள் தெளிவாகவே உள்ளன. முதலாவ தாக, இந்த முறையில் உதவித் தொகைகள், பங்குத் தொகைகள் வழங்கும் ஏற்பாடு ஒழிக்கப்படும்; மேலும், இது ஒவ்வொரு மாகாண அரசின் நிதி ஏற்பாட்டையும் தன்னாட்சி உரிமையுடைய தாகவும், தன்னிறைவு உடையதாகவும் ஆக்கும். இரண்டாவதாக, தனது வழங்கலைப் பெறுவதற்கான வாயிலாக வருமான வரி வீதங்களை நிர்ணயிப்பதற்குச் சட்டமன்றத்தின் இசைவைப் பெறு மாறு நிர்வாக அமைப்பை கட்டாயப்படுத்துவதன் மூலம், அதன் பொறுப்புணர்வைப் பேணிவரும். மூன்றாவதாக (இது மிகவும் முக்கியமானதென நான் கருதுகிறேன்), ஒரு மாநிலத்தின் நலனுக் காக இன்னொரு மாநிலத்தின் மீது வரி விதிக்கும்படி இருக்காது. வருவாய் ஆதாரத்தைத் தனியே பிரித்தொதுக்கி வைத்துக் கொள் ளும் இன்னொரு ஏற்பாட்டின்கீழ், மாநிலங்கள் அனைத்துக்கும் பொருந்துகின்ற ஒரே வரி வீதம் இருக்கும்; கிடைக்கின்ற வருவாய் பகிர்ந்தளிக்கப்படும்; இந்த ஏற்பாட்டின்படி, ஒரு மாகாணத்தில் திரட்டப்படும் தொகை, அதற்கு வழங்கப்படக் கூடிய பங்கிற்குச் சம அளவில் இருக்கத் தேவையில்லை. சில மாநிலங்கள் அதிகம் வழங்கும்; ஆனால் குறைவாகப் பெறும். மாகாணங்களைப் பொறுத்தவரை, அத்தகைய வரிவிதிப்பு ஏற்பாடு, ஒரு மாநிலத் தின் நலனுக்காக, இன்னொரு மாநிலத்தின்மீது வரி விதிக்கும் மறைமுக வரிவிதிப்பு முறையேயன்றி வேறல்ல.

தற்போது, நான் கருத்துத் தெரிவிக்கின்ற வரிவிதிப்பு முறைக்கு எதிராக எழக்கூடிய ஒரேயொரு மறுப்புரை, வர்த்தகத்திற்கும் தொழிலுக்கும் தேவையானதாகவுள்ள, ஒரே சீரான வருமான வரிவீதத்தை வலியுறுத்துகிறவர்களிடமிருந்து எழுகிறது. ஒரே சீரான வரிவிதிப்பு வீதம் இருப்பது மிகவும் விரும்பத்தக்கதுதான்; ஆனால், அதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறுவது எளிது. இந்தியா பரப்பளவில் ஐரோப்பாவை ஒத்திருக்கும் அளவிற்குப் பரந்து விரிந்த நாடு. ஐரோப்பாவிலும் ஒரே சீரான வருமான வரிவிதிப்பு வீதம் இல்லை. என்றாலும், மற்ற எல்லா நாடுகளிலும் நடைபெறுவது போன்றே, அங்கு வர்த்தகமும் தொழிலும் நடைபெற்று வருகின்றன. அதுபோன்று இந்தியா விலும் ஏன் நடைபெறக் கூடாது? தவிரவும், ஒரே சீரான வருமான வரிவிதிப்பு வீதத்தை வலியுறுத்துபவர்கள், இந்தியாவில் நிலவரி தொடர்பாகத் தற்போதுள்ள உண்மை நிலவரங்களுடன் அவர்கள் எவ்வாறு ஒத்துப்போக முடிகிறது என்பதை அவர்கள் விளக்க வேண்டும். நிலவரி விதிப்பில் ஒரே சீரான வீதம் இல்லவே இல்லை. அதற்கு மாறாக, அங்குக் குழப்பமடையச் செய்கின்ற

அளவிற்குப் பற்பல வகையான நிலவரி வீதங்கள் நடைமுறையில் உள்ளன. எந்த இரண்டு மாநிலங்களை எடுத்துக் கொண்டாலும் செயலில் உள்ள வரிவீதம் ஒன்றுபோலில்லை; அன்றியும் எந்த இரு மாகாணங்களிலும் வரிவிதிப்பு முறை ஒரே மாதிரியாக இல்லை. துணைக்குழுவின் உறுப்பினர்கள் மீது நான் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறேன். எனவே, அவர்கள் பரிந்துரைத்துள்ள நிதி ஒதுக்கீட்டை மேம்படுத்தும் நோக்குடன், நான் கருத்துத் தெரிவித்துள்ள இந்த வரிவிதிப்பு முறைக்கு எதிராக இந்த மறுப் புரை மேலோங்கி நிற்கக் கூடாது. இந்த வரி விதிப்பு முறை, சாதாரண காலங்களிலும் சரி அசாதாரண காலங்களிலும் சரி, தொடர்புடைய அனைவரின் தேவைகளையும் நிறைவு செய்யும்.

நேற்றைய தினம் நான் தெரிவித்த ஒரு கருத்தினைத் திரும்பப் பெற விழைகிறேன். என்னுடைய திட்டம், வரிவிதிப்பு விசார ணைக் குழு (Taxation Enquiry Committee) பரிந்துரைத்தத் திட்டம் என்று நான் தெரிவித்தேன். அது தவறுதலாக வெளிப்படுத்த நேர்ந்த கருத்தாகும். அது, இந்த விவாதத்திற்காக நான் தயாரித் திருந்த குறிப்புகளில் என்னை அறியாமல் இடம் பெற்றுவிட்ட பிழை காரணமாக நிகழ்ந்தது. "இத்திட்டத்தை அவர்கள் ஆராய்ந் தார்கள்; ஆனால் பரிந்துரைக்கவில்லை" என்று நான் சொல்லி யிருக்க வேண்டும்; அவர்கள் சமாளிக்க முடியாத மறுப்பு ஏதும் உள்ளதாக அவர்களுக்குத் தெரியவரவில்லை என்றாலும், அவர் கள் இந்தத் திட்டத்தைப் பரிந்துரைக்கவில்லை.

அடுத்த கருத்து துணைக்குழுவின் 12-ஆம் பத்திக்குத் தொடர் புடையதாகும். அந்தப் பத்தியில் வரிவிதிப்பின் "எஞ்சிய அதிகாரங்கள்" குறித்த பிரச்சினை பற்றிக் கூறப்பட்டுள்ளது. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடம் நிலைபெறும் என்பதற்குச் சாதகமான முடிவு இருக்கும் என்று துணைக்குழு எதிர்பார்த்தது. அந்த அடிப்படையில், அட்டவணையிடப்படாத வரிகளை விதிக் கின்ற அதிகாரம் மாநிலங்களிடம் இருக்க வேண்டும் என்னும் பரிந்துரையைச் செய்துள்ளது. இப்படி ஒரு முடிவுக்கு ஏன் வந்தது என்பது பற்றித் துணைக்குழு எவ்விதக் காரணங்களையும் கூற வில்லை; ஆனால், அவர்கள் அளித்த இந்தப் பரிந்துரையை தவிர, வேறு எந்தப் பரிந்துரையையும் அளிப்பதற்கு அரசிய லமைப்புச் சட்டபூர்வ மறுப்புகள் இருப்பதாகத் துணைக்குழு அறி கிறது என்று குறிப்பிடப்படும் ஒருபகுதி 12-ஆம் பத்தியில் இடம் பெற்றுள்ளது. இதிலிருந்து, எந்தவொரு கூட்டமைப்பு அரசிலும் வரிவிதிப்பின் எஞ்சிய அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் நிலை பெற வேண்டும் என்பதே துணைக்குழுவின் கருத்தாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. இப்போது நான் தெரிவிக்க விரும் பும் கருத்து இது கூட்டாட்சி அரசின் காரணமாக ஏற்படுகின்ற கட்டாய விளைவு அல்லவே அல்ல. கனடா அரசியலமைப்புச் சட்டத்தைச் சற்றே புரட்டிப் பாருங்கள். அதன் 91-ஆம் பிரிவில்

பத்தி-3-இல், கனடா நாட்டின் மத்திய அரசுக்கு வரிவிதிப்பு ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது தெரியவரும். கனடா நாடு ஒரு கூட்டாட்சி அரசமைப்பை உடையது என்பது அனை வரும் அறிந்ததே. அந்த அதிகாரங்கள் நம்முடைய துணைக்குழுத் தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது போன்ற எவ்வித வரம்பு நிபந்தனையாலும் கட்டுப்படுத்தப்படவில்லை. நான் இப்போது குறிப்பிட்டுக் கூறிய பத்தியிலுள்ள கருத்துத்தான், நாம் எண்ணிப் பார்க்கக் கூடியவற்றிலேயே மிக விரிவாக எடுத்துரைக்கப்பட்ட கருத்தாகும். இந்தப் பத்தி, வரிவிதிப்பு விஷயங்களில் மத்திய அரசு ஒன்று வரம்பற்ற அளவில் பெற்றிருக்கக் கூடிய மிக மிக அதிகமான அதிகாரத்தை வழங்குவதாயுள்ளது. ஆனால், ஒரு வேளை, நான் ஒரு தவறான உதாரணத்தை எடுத்துக் காட்டி யுள்ளேன் என்று கூறப்படலாம்; ஏனெனில், கனடா நாட்டு அரசமைப்புச் சட்டத்தின் கீழ் எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமே நிலை பெற்றுள்ளன; மாநில அரசுகளிடம் அல்ல. நான் இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கூற விரும்பு கிறேன். அது ஆஸ்திரேலியா நாட்டு அரசமைப்புச் சட்டம். அதில் எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் (மாநில அரசுகளுக்கே) விடப் பட்டுள்ளன. அங்கும் கூட வரிவிதிப்பின் எஞ்சிய அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் விடப்படவில்லை; மத்திய அரசிடமே (கூட் டமைப்பு அரசு) அவை விடப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியா நாட் டின் அரசமைப்புச் சட்டத்தினுடைய 51-ஆம் பிரிவில் பத்தி (ii) பின்வருமாறு கூறுகிறது; அதாவது, மத்திய அரசு வரி விதிப்பு அதிகாரத்தைப் பெற்றிருக்கும்; ஆனால், அது மாநிலங்களுக்கிடை யில் அல்லது மாநிலத்தின் பகுதிகளுக்கிடையில் பாகுபாடு காட் டாதிருக்கும் வகையில், அந்த அதிகாரங்களைப் பெற்றிருக்கும். இங்கு, அந்தச் சட்ட வாசகம் கூட, நாம் எண்ணிப் பார்த்துக் கூடியவற்றில் மிக விரிவான பொருள்தரக் கூடிய வகையில் அமைந்ததாகும். இன்னும் சொல்வதானால், ஆஸ்திரேலிய கூட் டாட்சி அரசு, மாநிலங்களின் வரிவிதிப்பு ஏற்பாட்டினைக் கட்டுப் படுத்தும் அதிகாரங்களைப் பெற்றுள்ளதாகக் கூறக்கூடிய அள விற்கு அதன் அதிகாரங்கள் மிக விரிந்ததாகும். ''காமன்வெல்த் அல்லது ஆஸ்திரேலியா'' என்னும் தலைப்பில் வெளிவந்த நூலின் முதற்பதிப்பு குறித்து திரு. மூர் எழுதியுள்ள விமர்சனம் குறித்து உங்கள் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். அந்த விமர் சனத்தில் இது குறித்து மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதில், ஆஸ்திரேலிய கூட்டமைப்பு அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வரிவிதிப்பு அதிகாரம் எந்த அளவிற்கு உள்ளது என்பது பற்றி அவர் கூறியுள்ளது இதுதான் :

''காமன்வெல்த் ஏற்படுத்தப்பட்டதன் பேரில், மாநில அரசுகளுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுக் கட்டு படுத்தப்படுகின்றன; அதாவது, இந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்படுவதன் விளைவாக இனி அவை காமன்வெல்த்தினுடைய

சொத்துக்களுக்கு வரிவிதிக்க மாட்டா. ஒருவேளை காமன் வெல்த்தின் ஒப்பந்த விதிகளின் விளைவுகளுக்கும் இந்தக் கட்டுப்பாடு நீட்டிக்கப்பட்டுச் செயல்படலாம். காமன் வெல்த்தை நிறுவுவதன் வாயிலாக, ஒருசீராகச் சுங்கவரிகள் விதிக்கப்படுவதன் பேரில், மாநில அரசுகள் சுங்கவரிகளை யும் ஆயத்தீர்வைகளையும் விதிக்கமாட்டா; அன்றியும், பன் மாநில வர்த்தகம், வாணிகம், அல்லது பிற தொடர்புகள் குறித்து எவ்வித வரியும் விதிக்கமாட்டா. மேலும், பிற மாநிலங்களில் வசிக்கின்ற பிரிட்டிஷ் குடிமக்களைக் கடுமை யாக பாதிக்கின்ற வகையில் பாகுபாடு காட்டும் விதிகளும் நடைமுறைகளும் இனி செயலிழந்து விடும்.

இன்னும் இதைத் தொடர்ந்து அவர் கூறியுள்ள கருத்து மிக முக்கியமானது: இறுதியாக, ''வரிவிதிப்பு'' தொடர்பாகச் சட்ட மியற்றும் காமன் வெல்த் அதிகாரம், மாநில அரசுகளின் வரி விதிப்பை முறைபடுத்துகின்ற அளவுக்கு மிக விரிவான அதிகாரங் களை அளிக்கக் கூடும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, எஞ்சியுள்ள அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் நிலை பெற்றிருக்கும் ஓர் அரசியலமைப்பாகும். இருப்பினும், நிதி விவகாரங்களில் எஞ்சியுள்ள அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் நிலைபெற்றிருக்கவில்லை; மாறாக, அவை கூட்டாட்சி அரசிடம் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு I-ஐ எடுத்துக் கொண்டால், அங்கும் கூட, எஞ்சியுள்ள சட்ட அதிகாரங்கள் மாநில அரசுகளிடம் உள்ளனவேயன்றி கூட்டாட்சி அரசிடம் அல்ல. இருப்பினும் ஐக்கிய அமெரிக்கா வின் அரசியலமைப்புச் சட்டத்தின் VIII-ஆம் பிரிவைச் சேர்ந்த பிரிவு—1 கீழ்க்காணும் அதிகாரங்களுக்கு வகை செய்கிறது: ''ஐக்கிய அமெரிக்க நாட்டின் காங்கிரஸ் (நாடாளுமன்றம்) வரி, சுங்கவரி, திறைகள், ஆயத்தீர்வை ஆகியவற்றை விதித்தல், வசூலித்தல், கடன்களைத் திருப்பிச் செலுத்துதல், ஐக்கிய அமெரிக்க நாட்டின் பொதுவான பாதுகாப்பிற்கும், பொது நலனுக்கும் வகை செய்தல் ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருக்கும். ஆனால், சுங்க வரிகள், திறைகள், ஆயத்தீர்வுகள் ஆகியவை அனைத்தும் ஐக்கிய அமெரிக்கா முழுவதற்கும் ஒரே சீரானதாக இருக்க வேண்டும்.''

அதிலும் கூட ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மத்திய அரசி னுடைய வரிவிதிப்பு அதிகாரங்கள் மீது கட்டுப்பாடு எதுவும் விதிக்கப்பட்டிருப்பதை நீங்கள் காண இயலாது. ஆகவே, அரசிய லமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில், துணைக்குழு அளித் துள்ள பரிந்துரைக்குப் போதுமான காரணம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இருந்த போதிலும், இது தொடர்பாக மேலும் என்னுடைய கருத்தை முன்வைக்க விரும்புகிறேன்: அதாவது, வரிவிதிப்பு

குறித்து எஞ்சிய அதிகாரங்கள் கூட்டாட்சி அரசிடம் இருக்க வேண்டுமா அல்லது மாநிலங்களிடம் அந்த எஞ்சிய அதிகாரங்கள் இருக்க வேண்டுமா என்னும் இந்த வினா முற்றிலும் செயற்கையானது; இத்தகைய வினா வேறு எந்த நாட்டிலும் எழுந்ததில்லை. இது இந்தியாவில் மட்டும் ஏன் எழுந்தது என்று கேட்டால் அதற்குக் காரணம், நாம் தற்கால வருவாய்ப் பகிர்வு விதிகளில் எப்படியோ ஒரு அற்பமான ஏற்பாட்டைக் கொண்டு வந்துள்ளோம். அப்படிச் சொல்வதற்காக என்னை அன்பு கூர்ந்து பொறுத்தருளுங்கள் — இந்த அற்ப ஏற்பாடு என்பது 'வரிவிதிப்பு அட்டவணைகள்' குறித்த ஏற்பாடு தானேயன்றி வேறில்லை. இத்தகைய ஏற்பாடு வேறு எந்த நாட்டிலும் செயலில் இல்லை. சொல்லப்போனால், எந்த அரசும், அல்லது கூட்டமைப்பு அரசு ஒன்றின் அரசமைப்புச் சட்டத்தை வகுத்த எந்த அரசமைப்புச் சட்ட அதிகார மன்றமும் இத்தகைய ஏற்பாட்டைக் குறிப்பிட்டு வரையறுக்க வில்லை. நாம் எவ்வாறோ வரி விதிப்புப் பகுதிகளை மட்டும் பிரித்துக் கொண்டிருக்கவில்லை; மாறாக, இந்த விவர அட்டவணை வைத்துக் கொண்டு, இந்த வரிவிதிப்பு அதிகாரங்கள், எந்தக் குறிப்பிட்ட வழிமுறையைப் பின்பற்றி, எந்தக் குறிப்பிட்ட படிவத்தின்படி செலுத்தப்பட வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு வரையறுத்துக் கொண்டிருக்கிறோம்: இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு அவசியமேயில்லை என்று நான் நினைக்கிறேன். முதலாவதாக, அது வரிவிதிப்பு ஏற்பாட்டையே எவ்விதச் சுவையும் இல்லாத வெறும் நகலெடுக்கும் வேலையாக ஆக்கிவிடப் போகிறது; எதிர்கால நிதியமைச்சர்களின் அறிவாற்றலை மட்டுப்படுத்திவிடப் போகிறது. எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய ஒரு நிதியமைச்சரின் வரிவிதிப்பு அதிகாரங்கள் தொடர்பாக மட்டுமல்ல, அவர் விதிக்கக் கூடிய குறிப்பிட்ட வரிகளைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாகவும் கூட, அவருடைய விருப்பவுரிமைகள் மிகமிக வரையறுத்துக் கட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்திருக்கும் ஒரு நிதி ஏற்பாட்டினை நிர்வகிக்கும் பொறுப்பை, நிதியமைச்சராக வரவிருப்பவர் எவரும் ஏற்றுக் கொள்வார் என்று நான் நினைக்கவில்லை.

ஆகவே, இது பற்றிய என்னுடைய கருத்து, நாம் முழுவதுமாக இந்த விவர அட்டவணைகளை நம்முடைய அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்பதே. இது தொடர்பாக நாம் செய்ய வேண்டியதெல்லாம், கூட்டமைப்பு அரசுகள் நிலவுகின்ற இதர நாடுகளில் பின்பற்றப்படுகின்ற முறையின் மூலம் வரி விதிப்புத் துறையைப் பிரித்துக் கொள்வது மட்டுமே. இதன் பொருட்டு மாநில அரசுகள் மீது நாம் எளிய கட்டுப்பாட்டினை விதிப்பது போதுமானது. அதாவது, கூட்டமைப்பு அரசு விதிக்க வேண்டுமெனத் தெரிந்தெடுக்கிற சுங்க வரிகளை அல்லது ஆயத்தீர்வைகளை மாநில அரசுகள் விதிக்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்; அத் துறையின் எஞ்சிய பகுதிகளை

இரு அரசுகளும் அவை விரும்புகிற வண்ணம் பகிர்ந்து கொள்ளு மாறு விட்டுவிட வேண்டும். நான் சொல்வது போல, இதனையே கூட்டமைப்பு அரசு நிலவும் ஏனைய நாடுகளில் பின்பற்றுகின்றனர். ஆகவே, வரிவிதிப்பின் எஞ்சிய அதிகாரங்கள் (மாகாண அரசுகளுக்கு ஒதுக்கப்படுதல்) தொடர்பான விதியை நமது அரசமைப்புச் சட்டத்தினுள் புகுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றே நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாகக் கூட்டமைப்பு அரசின் நிதியில் சமஸ்தானங்களின் நிலைமை என்ன என்பது குறித்துக் குறிப்பிட விழைகிறேன். துணைக் குழுவின் அறிக்கையில் இந்தப் பகுதியை நான் புரட்டிப் பார்த்த பொழுது, முதன் முதலாக நான் கண்டறிய விரும்பியது இதுதான்: கூட்டமைப்பு அரசு தன்னுடைய நிதி இனங்களுக்குக் கூடுதலாக சமஸ்தானங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட வருவாய்த்துறைகள் என்ன என்பதே. சமஸ்தானங்கள் கூட்டாட்சியில் சேர்ந்தபின் கூட்டாட்சி அரசுக்குக் கூடுதல் வருவாய் எதனையும் வழங்கவில்லை என்றே அறிகிறேன். சுங்கவரி வருவாய் இனத்தைப் பொறுத்தவரை, இந்த வருவாய் இனம் ஒருபோதும் சமஸ்தானங்களின் வருவாய் இனமாக இருந்ததில்லை. சமஸ்தானங்களுக்குச் சுங்கவரி விதிப்பின் மீது சொந்தம் கொண்டாடும் உரிமையும் இல்லை; ஆகவே, அவை இந்த இனத்தின் கீழ்த் தமக்குத் தாமே எவ்விதக் கூடுதல் பொறுப்பையும் எடுத்துக் கொள்ளவும் இல்லை. உப்பைப் பொறுத்த வரையில், இந்த இனத்தின் வருவாய் உரிமை இந்திய அரசிடம் நிலைத்து உள்ளது; சமஸ்தானங்களிடம் அந்த உரிமை இல்லாததற்குக் காரணம் அதன் கொள்முதலே. செலாவணி ஆதாயங்களைப் பொறுத்தவரையில், அவை பிரிட்டிஷ் இந்தியக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு உரியவை. விட்டுக் கொடுக்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளின் (Ceded Territories) ரொக்கப் பங்குத் தொகைகளையும் வருவாயையும் பொறுத்த வரையில், அவை மத்திய அரசின் வருவாய் இனங்களாக இருந்து வந்துள்ளன; கூட்டமைப்பு அரசு இல்லாதிருந்தாலும் கூட, அவை அவ்வாறே இருந்திருக்கும். எனவே, 'கூட்டாட்சி அரசு' என்கிற அமைப்பினுள் இணைவதன் மூலம், இந்த சமஸ்தானங்கள் அவற்றுக்கு உரிமையுள்ளதாகச் சொல்லக் கூடிய எதனையும் அவற்றிடம் ஒப்படைத்து விடவில்லை என்பது தெளிவு. அவை அளிக்கக் கூடிய பங்கு என்று நான் காண்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான்; அது இந்திய நாட்டின் பாதுகாப்பிற்காகவுள்ள இராணுவப் படையின் வடிவில் வழங்கப் படும் பங்காகும். இந்திய அரசு நியமித்துள்ள குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரங்களைப் பார்த்து, தற்போது சமஸ்தானங்கள் இந்த இராணுவப் படைகளுக்காகச் செய்து வரும் மொத்தச் செலவு மிகச் சிறிய தொகையே; அதாவது ரூ. 2 கோடியே 38 இலட்சம் மட்டுமே என்று நான் அறிகிறேன்.

இந்த அறிக்கையில் நான் இன்னொன்றையும் காண விழைந்தேன். அது, கூட்டமைப்பு அரசின் நிதிச்சுமை தொடர்பாக மாகாண அரசுகள் மற்றும் சமஸ்தானங்கள் நடத்தப்பட முறை குறித்த ஒப்பீட்டு மதிப்பு பற்றியது. ஒன்றோடொன்று ஒப்பிட இவை எவ்வாறு நடத்தப்பட்டன என்பதை நான் கண்ணுற்ற போது, இரண்டுக்கும் சம அளவில் பொறுப்புச் சுமை அளிக்கப் பட வேண்டும் என்ற அடிப்படை விதியைத் துணைக்குழுக் காற்றில் பறக்க விட்டுவிட்டது என்ற முடிவிற்கு நான் வந்தேன். இந்த சமநிலையின்மை (in equality) எவ்வாறு இந்த அறிக்கை முழுவதிலும் இடம் பெற்றுள்ளது என்பதை நீங்களே பாருங்கள். முதலாவதாக, மாநில அரசுகள் கூட்டமைப்பு அரசு விதிக்கின்ற 'நேர்முக வரிகள்' மற்றும் 'மறைமுக வரிகள்' ஆகிய இரண்டை யுமே தாங்க வேண்டியுள்ளன. சமஸ்தானங்களோ (States) மறை முக வரிகளை மட்டுமே தாங்க வேண்டி யுள்ளன. அவை கூட்டு நிறுவன வரியை (Corporation tax) ஏற்க வேண்டும் என்று கூடத் துணைக்குழு அவற்றை வற்புறுத்தவில்லை. சமஸ்தானங்கள் "நேர் முகவரிகளை"த் தாங்க வேண்டியதில்லை என்பது மட்டுமல்ல; அவை தற்போது ஏற்று வருகின்ற திறைகள், ரொக்கப் பங்குத் தொகைகள் (Tributes and cash contributions) போன்ற 'நேர்முக வரி'களிலிருந்தும் கூட அவை விடுவிக்கப்படும். இரண்டாவதாக, மாகாண அரசுகள், தமது ஆட்சிப் பகுதிக்குள் உள்ளூர் சுங்க வரிகளை விதிப்பதிலிருந்து தடை செய்யப்படு கின்றன. ஆனால், சமஸ்தானங்கள் அத்தகைய சுங்க வரிகளை விதிக்கும் உரிமையை அவ்வாறே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், துணைக்குழு தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, கூட் டமைப்பு அரசின் குறிக்கோள்களில் ஒன்றாக, கூட்டமைப்பு அரசின் ஆட்சிப் பகுதிகள் முழுவதிலும் வாணிகச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது; அன்றி யும், சமஸ்தானங்கள் உள்ளூர்ச் சுங்கவரிகளின் மீதான உரிமை யைத் தொடர்ந்து பேணி வருமானால் அது கூட்டமைப்பு அரசின் வரவுகளைப் பாதிக்கக் கூடும் என்றும் துணைக்குழு ஒப்புக் கொண்டுள்ளது. மூன்றாவதாக, மாகாண அரசுகள் தங்கள் வருவாய்களை, கூட்டமைப்பு அரசின் கடன்களுக்காகப் பிணையம் வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன; ஆனால், சமஸ்தானங்களும் மாகாண அரசுகளைப் போலவே கூட்டமைப்பு அரசுகளின் பிரிவுகளாக இருந்த போதிலும் அவை இவ்வாறு தமது வருவாய்களைப் பிணையம் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படவில்லை.

சமஸ்தானங்கள் தங்களுடைய உள்ளூர் சுங்கவரிகளைத் தொடர்ந்து பேணிவரும் உரிமையை அவற்றுக்கு அனுமதித் துள்ளதற்கான காரணங்களை ஒருவர் எளிதில் புரிந்து கொள்ள முடியும். சட்டென்று உள்ளூர்ச் சுங்கவரி விதிப்பு உரிமைகளை

நிறுத்தி விடுமாறு அவற்றைக் கட்டாயப்படுத்தினால் அது அவர்களுடைய நிதிநிலை உறுதிப்பாட்டைச் சீர்குலைத்துவிடும் என்பதை நாம் காண முடிகிறது. ஆனால் அதே சமயம் கூட்டமைப்பு அரசு விதிக்கும் நேர்முக வரிகளைத் தாங்கும் பொறுப்பிலிருந்து சமஸ்தானங்கள் விடுவிக்கப்படுவதற்குத் துணைக்குழு ஏன் அனுமதித்தது என்று புரியவில்லை; அன்றியும், கூட்டமைப்பு அரசின் கடன்களுக்குத் துணைநிற்கும் வகையில் அரசுகள் தமது வருவாய்களைப் பிணையம் வைப்பதுபோல்சமஸ்தானங்களைக் கேட்க வேண்டியதில்லை என்று துணைக்குழு என்ன காரணத்தால் பரிந்துரைத்தது என்பதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சடங்குமுறை விஷயங்களில், மாகாண அரசுகளுக்கும் சமஸ்தான அரசுகளுக்கும் இடையில் பாகுபாடு இருக்குமாறு அனுமதிக்கப்படலாம். அணி வகுப்பு மரியாதைகள் போன்றவற்றை நமக்கு நாமே வழங்கி கொள்ள வேண்டியதில்லை; அவற்றை மறுத்துவிடலாம். சமஸ்தானங்கள் இது தொடர்பாக என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றனவோ அதைச் செய்து கொள்ளுமாறு அனுமதிக்கலாம். நிதி, வருவாய் விஷயங்களைப் பொறுத்தவரை, தொழில் முறை அலுவலில்—அதாவது வருவாய் விஷயத்தில் கண்டிப்பாக இருக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் (Business is business) என்றே நான் எண்ணுகிறேன். பிரிட்டிஷ் இந்தியா கூட்டமைப்பு அரசின் நலன்களுக்காக ஒரு தியாகத்தைச் செய்யுமானால், அது, கூட்டமைப்பு அரசின் நலன் கருதி, அதன் அங்கங்களாக உள்ள அனைத்துப் பிரிவுகளும் அதற்கு நிகரான அளவில் தியாகங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள அதற்கு உரிமையுண்டு. ஆகவே, துணைக்குழுவின் அறிக்கையின் இந்தப் பகுதிக்குக் கீழ்க்காணும் திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்:

(1) கூட்டாட்சி அரசின் 'நேர்முக வரிவிதிப்பு' உரிமையை சமஸ்தானங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்; இதனைச் செய்கின்ற வரையில் ரொக்கப் பங்குத் தொகைகள் தள்ளுபடி செய்யப்படக் கூடாது; ஆட்சிப் பகுதிகளை விட்டுக் கொடுப்பது பற்றியும் பரிசீலிக்கக் கூடாது.

(2) சமஸ்தானங்கள் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளுக்குள் விதிக்கும் உள்ளூர்ச் சுங்க வரிகளை ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் ரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். இந்தக் காலக் கெடுவுக்குள், அவை இதன் பொருட்டுத் தமது வரிவிதிப்பு ஏற்பாட்டில் பொருத்தமான மாற்றத்தைச் செய்து கொள்ள வேண்டும்; அத்தகைய மாற்றம் கூட்டமைப்பு அரசின் வரிவிதிப்பு ஏற்பாட்டிற்குக் கேடு விளைவிக்கும் முறையில் இருக்கக் கூடாது.

(3) கூட்டமைப்பு அரசின் கடன்களுக்காக சமஸ்தானங்கள் தங்கள் வருவாய்களைப் பிணையம் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விஷயம் பற்றி நான் கூறவேண்டியது இதுதான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## முப்பத்தெட்டாவது அமர்வு
## 22 அக்டோபர் 1931

### தலைப்பு 4

*(நிதி ஆதாரங்களைக் கூட்டாட்சிக்கும் அதன் உறுப்புகளுக்கும் இடையே பகிர்தல்)*

### கூட்டாட்சி நிதித் துணைக் குழுவின் மீது விவாதம்

**டாக்டர் அம்பேத்கர் :* நான் ஒன்று மட்டுமே சொல்ல விரும்புகிறேன். கூட்டாட்சி நிதித் துணைக் குழுவின் அறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட கொள்கைகள் பற்றிப் பொதுவான உடன்பாடு இருந்ததாகப் பீல் பிரபு (Lord Peel) இப்போது கூறினார். கூட்டாட்சிக் கட்டமைப்புக் குழுவின் மற்ற உறுப்பினர்களின் கருத்து எதுவாக இருந்தபோதிலும், என்னைப் பொறுத்தமட்டில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது கூட்டாட்சி நிதித் துணைக் குழு எடுத்துரைத்துள்ள கொள்கைகளை நான் நிச்சயமாக ஏற்கவில்லை என்பதே; இந்தக் குழுவின் நியமனம் பற்றி எனக்கு எந்த மறுப்பும் இல்லை என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை : கூட்டாட்சி அரசின் வருங்கால நிதி முறைமை வலுவுள்ளதாக அமையும் பொருட்டு, கொள்கைகளில் மாற்றங்களையும் திருத்தங்களையும் யோசனை கூறுவதற்குக் குழுவுக்கு உரிமை உண்டு என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

### தலைப்பு 8

*(கூட்டாட்சி நீதிமன்றம்)*

***டாக்டர் அம்பேத்கர் :* தலைவர் அவர்களே, இந்தியாவில் கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்றை அமைப்பது பற்றிப் பரிசீலிப்பதில் முக்கியமாக மூன்று பிரச்சினைகளை நாம் கவனிக்க வேண்டியுள்ளது என்று நான் கருதுகிறேன். முதலாவது பிரச்சினை நீதி

---

* கூட்டாட்சிக் கட்டமைப்புக் குழு மற்றும் சிறுபான்மையினர் குழு நடவடிக்கைகள், தொகுதி I பக்கம் 685.

** *மேற்படி, பக். 689-702.*

மன்றத்தின் அதிகார வரம்பு பற்றியது; இரண்டாவது, கூட்டாட்சி நீதிமன்றத்தின் தீர்ப்புக்களையும் முடிவுகளையும் செயல்படுத்துவது; மூன்றாவது கூட்டாட்சி நீதிமன்றத்தின் அமைப்பு முறை. இந்தத் தலைப்புகளில் ஒவ்வொன்று குறித்தும் நான் சில கருத்துகள் தெரிவிக்க விரும்புகிறேன். முதலில் கூட்டாட்சி நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பற்றிப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

கூட்டாட்சி நீதிமன்றத்தின் பணிகளில் ஒன்று கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்துக்குப் பொருள் கூறுவதாகும் என்பது ஏற்கப்பட்ட ஒரு கருத்தாகும். கூட்டாட்சி அரசில், ஒற்றை அலகு அரசில் (Unitary System of Government)இல்லாத தனிச் சிறப்பான அம்சம் அலுவல் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கப்படுவதாகும்; கூட்டாட்சியின் சாரமான அம்சமே அதுதான், இரண்டு அதிகார எல்லைகள் உள்ளன; இவற்றுள் ஒன்று, சட்டப்படி கூட்டாட்சி அரசுக்கும், மற்றொன்று சமஸ்தான அல்லது மாகாண அரசுக்கும் ஒதுக்கித் தரப்படுகிறது; ஒரு அரசுக்குத் தரப்பட்டுள்ள அதிகார வட்டத்தில் மற்ற அரசு தலையிடாமலிருக்குமாறு பார்த்துக் கொள்வது கூட்டாட்சியில் முக்கியமாகும். இவ்வாறு பார்த்துக் கொள்வதற்குக் கூட்டாட்சி நீதி அமைப்பு ஒன்று அவசியம் என்பது வெளிப்படையான ஒன்று. இரண்டு அரசுகளும் தமக்கென தரப்பட்டுள்ள அதிகார வட்டத்தில் மட்டும் செயல்படுமாறு அது பார்த்துக் கொள்ளும். கூட்டாட்சி நீதிமன்றத்தின் ஒரு நோக்கம் இது. கூட்டாட்சி நீதிமன்றம் நிறைவேற்ற வேண்டிய இரண்டாவது நோக்கம் ஒன்றும் உள்ளது என நான் கருதுகிறேன். கூட்டாட்சி நீதிமன்றம் ஒரு சர்வதேச நீதிமன்றம் போலவும் செயல்பட வேண்டும். பல தேசிய அரசுகள் கூட்டாட்சியாக இணைந்து அமைந்ததன் நோக்கங்களில் ஒன்று அவற்றினிடையே சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கு ஒரு ஏற்பாடு செய்வதாகும். கூட்டாட்சியாக அமைவதற்கு முன் இந்தப் பல்வேறு அரசுகளிடையே சிக்கல்களை ராஜதந்திர முறையில் தீர்த்துக் கொள்வது, அது இயலாமல் போகும் போது போர் மூலம் தீர்த்துக் கொள்வது என்று இருந்த முறைக்குப் பதிலாக இந்த அரசுகள் எல்லாம் சேர்ந்துள்ள கூட்டாட்சியின் நீதித் தீர்ப்புகள் மூலம் தீர்வு காண வேண்டும் என்பது இதன் நோக்கமாகும். அமெரிக்க உச்ச நீதிமன்றமே இந்தக் கருத்தைக் கொண்டுள்ளது; உங்கள் அனுமதியுடன் அமெரிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒன்றின் ஒரு பத்தியை வாசித்துக் காட்ட விரும்புகிறேன். லூயிஸியானாவுக்கும் டெக்ஸாசுக்கும் 176ஆம் எண் என்ற வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு அது.

*தலைவர் :* அதன் தேதி என்ன?

*டாக்டர் அம்பேத்கர் :* 1900. உச்சநீதிமன்றத்தின் பணி பற்றி நீதிபதி திரு. பிரவுன் கூறியது இது :

''அரசுகள் நினைவுக்கெட்டாத பழங்காலம் தொட்டே தங்களுடைய குடிமக்களின் நலன்களில் அக்கறை காட்டி வந்துள்ளன; தனி மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்காகப் போர்கள் அடிக்கடி தொடுக்கப்படுகின்றன; சென்ற சுதந்திரப் போர், பிரிட்டனுக்கும் சைனாவுக்கும் இடையே 1840-இல் நடந்த அபினிப் போர், தென் ஆப்பிரிக்காவில் பிரிட்டனுக்கும் டிரான்ஸ்வால் குடியரசுக்கும் இடையே இப்போது நடந்துவரும் போர் ஆகியவை இதற்குக் குறிப்பிடத்தக்க எடுத்துக் காட்டுகளாகும். தனி மனிதர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படுகின்றன; தனியார்களின் உடைமைகள் பற்றித் தீர்ப்புச் செய்வதற்குச் சர்வதேச நடுவர் மன்றங்கள் எப்போதும் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, மற்றொரு மாநிலத்தின் மீது போர் தொடுப்பதிலிருந்து அரசியல் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ள ஒரு மாநிலம், தனது மக்கள் மீதும் அவர்களின் உடைமைகள் மீதும் மற்றொரு மாநிலம் விதித்த தடையை நீக்குவதற்கு இந்த நீதிமன்றத்தின் அதிகாரத்தை நாட முடியாது என்பது ஒரு முரண்பாடாயிருக்கும். தடை விதிக்கும் நடவடிக்கை ஒரு போர் நடவடிக்கை அல்ல என்றாலும், போர் தொடுப்பதற்கு ஒரு தொடக்க நடவடிக்கையாக அது பல சமயங்களில் மேற்கொள்ளப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் அது தடைவிதிக்கும் மாநிலத்தின் மீது போர் தொடுப்பதற்குப் போதுமான காரணமாகக் கருதப்படலாம்.''

அவர் கூட்டாட்சியில் எழக்கூடிய மேலும் பல வழக்குகளையும் சுட்டிக் காட்டுகிறார்; கூட்டாட்சி இல்லாதிருந்தால் இவை ராஜதந்திர முறையில் அல்லது போர் மூலம் தீர்க்கப்படும் என்று குறிப்பிடுகிறார். எனவே இத்தகைய நிலைமைகள் வராமல் தடுப்பதற்குக் கூட்டாட்சி நீதிமுறையில் இம்மாதிரியான வழக்குகளில் எல்லாம் நீதி வழங்கச் செய்வதற்கு உதவியாகக் கூட்டாட்சி நீதி மன்றத்துக்கு விரிவான அதிகார வரம்பு அளிக்க வேண்டும். இந்தக் கருத்தை வைத்துப் பார்க்கும்போது, கூட்டாட்சி நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பற்றி நீங்கள் அன்றொரு நாள் குழுவுக்கு எடுத்துக் கூறிய திட்டம் ஓரளவில் போதுமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன். இவ்வாறு நான் கூறுவதற்கு மன்னிக்கவும்.

நீங்கள் அன்று தெரிவித்த கருத்துக்களின்படி, கூட்டாட்சியின் உறுப்புகளுக்கிடையே, ஒரு சமஸ்தானத்துக்கும் மற்றொரு சமஸ்தானத்துக்கும் இடையே, மாநிலத்துக்கும் சமஸ்தானத்துக்கும் இடையே, இந்திய காமன்வெல்த்துக்கும் ஒரு சமஸ்தானம் அல்லது மாநிலத்துக்கும் இடையே எழும் விஷயங்களில் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்கும். 'சமஸ்தானம்' என்ற சொல் இணைக்கப்பட்ட அமைப்பைக் குறிக்கிறதா அல்லது குடிமக்களின் அறங்

காவலர், புரவலர் அல்லது பிரதிநிதி என்ற நிலைமையில் உள்ள தன்மையைக் குறிக்கிறதா என்று தெரியவில்லை. இது ஒருபுறம் இருக்க, கூட்டாட்சியின் ஒரு உறுப்புக்கும், மற்றொரு உறுப்பின் குடிமகனுக்கும் இடையே எழும் விஷயங்களைக் கவனிப்பதற்கும் கூட்டாட்சி நீதிமுறை வழி செய்ய வேண்டும். இதோ ஒரு உதாரணம். கூட்டாட்சியின் உறுப்பாகச் சேரும் இந்திய சமஸ்தானம் ஒன்று, உத்தேசிக்கப்பட்டுள்ள கடன்கள் வாரியத்தின் மூலம் திறந்த சந்தையில் பணம் கடன் பெறுகிறது என்று வையுங்கள். பம்பாய் மாகாணத்தின் குடிமகன் ஒருவர் இந்தக் கடனுக்குப் பணம் கொடுக்கிறார் என்றும் கொள்ளுங்கள். அந்த சமஸ்தானம் இவரிடம் தனக்கு உள்ள பொறுப்பை நிறைவேற்றத் தவறுகிறது என்று கொள்ளுங்கள். இப்போது இதற்கு என்ன வழி? நீங்கள் கூறிய திட்டத்தில் இம்மாதிரியான விஷயத்தைக் கூட்டாட்சி நீதிமன்றம் கவனிப்பதற்கு வழிவகை எதுவும் செய்யவில்லை. மற்றொரு உதாரணத்தைப் பாருங்கள். இந்தியாவில் 'விட்டு கொடுக்கப்பட்ட பகுதிகள்' என்று கூறப்படும் சில பகுதிகள் பிரிட்டிஷ் அரசின் வசம் உள்ளன. இந்தப் பகுதிகளைத் தங்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சமஸ்தானங்கள் கோருகின்றன; அல்லது அதற்குப் பதிலாக இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று கோருகின்றன. இத்தகைய விட்டுக் கொடுக்கப்பட்ட பகுதி ஒன்றில் பிரிட்டிஷ் அரசு ஒரு தனி நபருக்கு நிலத்தை மானியமாகக் கொடுத்திருக்கிறது என்று கொள்ளுங்கள். இந்தப் பகுதி, சமஸ்தானத்துக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பின் சமஸ்தான மன்னர் அதே நிலத்தை மற்றொருவருக்கு மானியமாகக் கொடுக்கிறார் என்று கொள்ளுங்கள். இப்போது, இரண்டு வெவ்வேறு அதிகாரங்கள் ஒரே பொருளை இரண்டு வெவ்வேறு நபர்களுக்குக் கொடுத்திருக்கும் நிலைமை எழுகிறது. இம்மாதிரியான வழக்கைத் தீர்ப்பதற்கு வழி என்ன? கூட்டாட்சி நீதிமன்றம் இந்த விஷயத்தைக் கவனத்தில் எடுக்குமா, எடுக்காதா? மேலும், கூட்டாட்சியின் வெவ்வேறு உறுப்புகளில் வசிக்கும் இரண்டு தனிநபர்களுக்கிடையே எழக்கூடிய ஒரு வழக்கை எண்ணிப் பாருங்கள். இந்த வழக்கை எந்த நீதிமன்றம் கவனிக்கும்? நீங்கள் அன்று எங்களுக்கு எடுத்துக் கூறிய கருத்துக்களில் வகை செய்யப்படாத சில விஷயங்கள் இவை.

உங்களுடைய திட்டத்தில் இந்தியாவில் கூட்டாட்சி நீதிமன்றத்துக்குக் கூறப்பட்டிருக்கும் அமைப்பு முறையை, ஆஸ்திரேலியாவிலும், ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் உள்ள கூட்டாட்சி நீதிமன்றங்களுடன் ஒப்பிட்டால், உங்கள் திட்டம் கூட்டாட்சி அரசின் தேவைகளுக்கு மிகக் குறைவாக உள்ளது என்று கருதுகிறேன். ஆஸ்திரேலியாவில், 75-ஆவது பிரிவின்படி ஆஸ்திரேலிய உயர் நீதி மன்றத்துக்குப் பின்வரும் எல்லா விஷயங்களிலும் அதிகாரம் இருக்கிறது: (1) எந்த ஒரு உடன்படிக்கையிலிருந்தும் எழும் விஷயங்கள், (2) மற்ற நாடுகளின் கான்ஸல்கள் அல்லது மற்ற

பிரதிநிதிகள் சம்பந்தப்பட்டவை, (3) காமன்வெல்த்தோ அல்லது காமன்வெல்த் மீது வழக்குத் தொடுத்துள்ள நபரோ, காமன் வெல்த்தால் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நபரோ சம்பந்தப் பட்டவை, (4) மாநிலங்களுக்கிடையில், அல்லது வெவ்வேறு மாநிலங்களில் வசிப்பவர்களுக்கிடையில் எழும் விஷயங்கள், (5) காமன்வெல்த்தின் அதிகாரி ஒருவர் மீது உத்தரவு அல்லது தடை உத்தரவு விதிக்கக் கோரும் வழக்குகள். பிரிவு 76-இன்படி அந்த நீதிமன்றத்துக்கு, (1) அரசியல் சட்டத்தின் கீழ் எழுகின்ற, அல்லது அரசியல் சாசனத்துக்குப் பொருள் கூறுவது தொடர் பான விஷயங்கள், (2) நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களி லிருந்து எழும் விஷயங்கள், (3) கடற்படை நிர்வாகம், கடல் ஆதிக்கம் தொடர்பான விஷயங்கள், (4) ஒரே பொருள் தொடர் பூன வெவ்வேறு மாநிலங்கள் தங்கள் சட்டங்களின்படி தங்க ளுக்கு அதிகாரம் இருப்பதாகக் கூறும் விஷயங்கள் ஆகியவற் றிலும் நீதி அதிகாரம் இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியல் சட்டத்தைப் பார்த்தால், பின்வரும் விஷயங்களில் அதற்கு நீதி அதிகாரம் இருப்பதாக ஷரத்து 3 (2) கூறுகிறது: (1) அர சியல் சட்டம், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டங்கள், அதன் அதிகாரத்தின் கீழ் செய்து கொள்ளப்பட்ட அல்லது செய்யப்பட வுள்ள உடன்படிக்கைகள் ஆகியவற்றிலிருந்து எழுகின்ற அனைத்துச் சட்டப் பிரச்சினைகள்; (2) தூதர்கள், பொது அமைச்சர்கள், கான்ஸல்கள் சம்பந்தப்பட்ட அனைத்து வசதிகள்; (3) கடற்படை நிர்வாகம் கடல் ஆதிக்கம் சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகள்; (4) அமெரிக்க ஐக்கிய நாடுகள் தொடர்பான கருத்து முரண் பாடுகள்; (5) இரண்டு அல்லது பல மாநிலங்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள்; (6) ஒரு மாநிலத்துக்கும் ம்ற்றொரு மாநிலத்தின் குடிமகனுக்கும் இடையிலான கருத்து முரண்பாடு கள், (இது பின்னர் அரசியல் சட்டத்தின் பதினொன்றாவது திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டு விட்டது); (7) வெவ்வேறு மாநிலங்களின் குடிமக்களுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள்; (8) ஒரே மாநிலத்தின் குடிமக்கள் வெவ்வேறு மாநிலங்களால் தங்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறும் நிலங்கள் பற்றிய கருத்து முரண்பாடுகள்; (9) ஒரு மாநிலத்துக்கும் அல்லது அதன் குடிமக்க ளுக்கும் அந்நிய நாடுகளின் குடிமக்கள் அல்லது பிரஜைகளுக்கும் இடையே எழும் கருத்து முரண்பாடுகள். எனவே இங்கு நான் கூற விரும்புவது, இந்தக் கூட்டாட்சி நீதிமன்றம் உண்மையான பொரு ளில் கூட்டாட்சி நீதிமன்றமாக இருக்க வேண்டுமானால்— அதாவது, கூட்டாட்சியின் உறுப்புகளுக்கிடையில், அல்லது வெவ் வேறு உறுப்புகளின் குடிமக்களிடையில் எல்லாச் சிக்கல்களையும் அது கவனிப்பதாக இருக்க வேண்டுமானால்—அதன் அதிகாரப் பட்டியலை மறுபரிசீலனை செய்து, ஆஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றின் கூட்டாட்சி நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரங்களுக்கு ஒத்தபடி அமைக்க வேண்டும்.

*தலைவர்* அவர்களே, இப்போது நான் குறிப்பிட விரும்பும் அடுத்த கருத்து இது: இந்தியா கூட்டாட்சி நாடாக அமையப் போகிறது என்றாலும், ஆஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் கூட்டாட்சி நீதிமன்றங்களுக்கு இப்போது உள்ள அதிகாரங்களின் அளவில் அது திருப்தி அடைந்து விட முடியாது. அந்த நாடுகளில் இல்லாத சில தனிப்பட்ட சூழ்நிலைகள் இந்தியாவில் உள்ளன. எனவே இந்தியக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு ஆஸ்திரேலியாவிலும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் கூட்டாட்சி நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரங்கள் இருப்பதுடன், அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினரின் பாதுகாப்புத் தொடர்பான விஷயங்களிலும் அதிகாரம் இருக்க வேண்டும்.

*தலைவர் :* ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய ஷரத்தைக் குறிப்பிடுவீர்களா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம், குறிப்பிடுவேன்.

*தலைவர் :* அது எந்த இடத்தில் இருக்கிறது என்பதை மட்டும் தயவு செய்து தெரிவியுங்கள். எனக்கு அது மிக நன்றாகத் தெரியும், ஆனால் இந்த நேரத்தில் அதை நான் நினைவுகூர முடியவில்லை.

*டாக்டர் அம்பேத்கர் :* வருந்துகிறேன். அந்த விவரம் என்னிடம் இல்லை.

*தலைவர் :* நான் நினைப்பது, வெவ்வேறு மாநிலங்களிலும் உள்ள சுதந்திரமான குடிமக்களின் உரிமைகள், பாதுகாப்புகள் பற்றிக் குறிப்பிட்டுத் தொடங்கும் ஷரத்து. ஒவ்வொரு மாநிலத்தின் மக்களும் தடையின்றி உள்ளே வரவும் வெளியே செல்லவும் உள்ள உரிமை என்பது போன்ற விஷயங்களை அது குறிப்பிடுகிறது. ஆனால், இந்த நேரத்தில் அது என் நினைவுக்கு வரவில்லை என்பதனால் நாம் நமது நேரத்தை இதில் வீணாக்க வேண்டாம். ஷரத்து I-இன் பிரிவு 2-ஐத்தான் என் மனமானது நினைத்திருந்தது.

*டாக்டர் அம்பேத்கர் :* நான் சொல்ல விரும்புவது இதுதான் : அடிப்படை உரிமைகளை நாம் எப்படி வரையறை செய்தாலும், சிறுபான்மையினரின் உரிமைகளை நாம் எப்படி வரையறை செய்தாலும், அவற்றுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பது தான் முக்கியம். நான் இவ்வாறு கூறுவதற்குக் காரணங்கள் இவை: நாம் அமைக்கப் போகும் கூட்டாட்சி அரசியலமைப்பு, நம்மில் சிலர் எவ்வளவுதான் பெரிதாகச் சொல்லிக் கொண்ட போதிலும், குறையேதும் அற்ற கூட்டாட்சியாக இருக்கப் போவதில்லை. நாம் அமைக்கப் போகும் கூட்டாட்சி அநேகமாக, மக்கள் பங்கெடுக்கும் பிரதிநிதித்துவ அமைப்புகளைக் கொண்ட

பிரிட்டிஷ் இந்தியாவும், இத்தகைய மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகள் இல்லாத இந்திய சமஸ்தானங்களும் சேர்ந்ததாக இருக்கும். இப்படி நான் கற்பனை செய்து பார்க்கிறேன். ஒருவேளை நடப்பது வேறு விதமாக இருக்கலாம்; அப்படியானால் என்னை விட அதிக மகிழ்ச்சி அடைபவர் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் நிலைமை இப்படித்தான் இருக்கப் போகிறது—அதாவது ஜனநாயகமும் எதேச்சதிகாரமும் சேர்ந்த ஒரு கூட்டாட்சி அமையும்; மேலும், பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் அரசியல் ரீதியான பெரும்பான்மைகளைக் கொண்ட அரசு இல்லாமல், முக்கியமாக வகுப்புரீதியான பெரும்பான்மை கொண்ட அரசு இருக்கும். எனவே, அடிப்படை உரிமைகளையும், சிறுபான்மையினர் உரிமைகளையும் பாதுகாக்கும் பிரச்சினை வேறு எந்த அரசியல் சட்டத்திலும் இருப்பதைவிட இந்தியாவில் அதிக முக்கியமானதாக இருக்கும்; இந்த அடிப்படை உரிமைகளும் சிறுபான்மையினர் உரிமைகளும் என்னவாக இருந்தாலும் அவற்றுக்கு முழுமையான உத்தரவாதம் அளிக்கும் கடமை மிக உயர்ந்த முக்கியத்துவம் பெறுகிறது. இதைச் செய்வதற்கு மிகச் சிறந்த வழி, இவை தொடர்பாக எழும் பிரச்சினைகளை விசாரிப்பதற்குக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு அதிகாரம் அளிப்பதேயாகும். இது தான் நான் கூற விரும்புவது. எங்கேயானாலும், அடிப்படை உரிமைகள் பற்றியோ சிறுபான்மையினர் உரிமைகள் பற்றியோ, பிரிட்டிஷ் இந்தியாவில் பிரச்சினை எழுந்தாலும், சுதேச சமஸ்தானத்தில் பிரச்சினை எழுந்தாலும், அதை விசாரிப்பதற்குக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

*தலைவர்* : வணிக முறையில் விருப்பு வெறுப்பற்றுக் காட்டப்படும் விஷயத்தையும் நீங்கள் இதில் சேர்ப்பீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்* : ஆம். வணிக முறையில் விருப்பு வெறுப்பு இருக்கக் கூடாது என்பது ஓர் அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும் என்று நாம் எல்லோரும் ஒப்புக் கொண்டால் அது கூட்டாட்சி நீதிமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் வரவேண்டும். இதுவரை கூட்டாட்சி நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூறினேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது கூட்டாட்சி நீதிமன்றத்தின் முடிவுகளை செயல்படுத்துவது பற்றியதாகும். தலைவர் அவர்களே, நீங்கள் அனுப்பிவைத்த குறிப்பில் கூட்டாட்சி நீதிமன்றத்தின் முடிவுகளைச் செயல்படுத்துவதற்குச் சட்டபூர்வமான வழி எதுவும் கூறப்படவில்லை. இந்த விஷயம், பல்வேறு சமஸ்தானங்கள், மாகாணங்கள் ஆகியவற்றின் பொறுப்பாக விட்டு விடப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். மாகாணங்கள் அல்லது சமஸ்தானங்களின் நல்லெண்ணத்தைப் பற்றி நாம் அவநம்பிக்கை கொள்ளக்கூடாது என்றும், அவை கூட்டாட்சி நீதி

மன்றத்தின் முடிவுகளை நம்பிக்கையுடன் நிறைவேற்றும் என நாம் நினைக்க வேண்டும் என்றும் நீங்கள் உபதேசம் செய்கிறீர்கள். தலைவர் அவர்களே, ஜான் ஸ்டூவர்ட் மில் எடுத்துக் கூறிய நெறியை நாம் பின்பற்ற வேண்டும் என்று நான் நினைக்கிறேன். 'எல்லா மனிதர்களும் நல்லவர்களாயிருந்தால் சட்டங்கள் இயற்று வதற்குத் தேவை இராது; ஆனால் சில மனிதர்கள் கெட்டவர் களாக இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். ஆதலால் நாம் சட்டங்கள் இயற்ற வேண்டியது அவசியமாகிறது' என்று அவர் கூறினார். எனவே இந்த விஷயத்தை இவ்வாறு முடிவு செய்யாத நிலையில் விடக்கூடாது என்பது என் கருத்து. இந்தக் கருத்துக்கு அரண் செய்வதாக ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உச்சநீதிமன்றத் தின் அனுபவம் அமைந்திருக்கிறது. அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு களைச் செயல்படுத்துவது பற்றிய வரலாற்றை நான் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவதை மன்னிக்க வேண்டும். முதலாவதாக, 1793-இல், சிஷோம் (எதிர்) ஜார்ஜியா என்ற வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பைப் பார்ப்போம். உச்சநீதிமன்றம் தன்னுடைய கூட்டாட்சி நீதி அதிகாரத்தின்படி, ஒரு கடன் தொகையைத் திரும்ப வசூலிப்பது சம்பந்தமாக ஜார்ஜியா மாநிலத் துக்கு எதிராக திரு. சிஷோம் என்பவருக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறியது. ஆனால் ஜார்ஜியா மாநிலம் உச்சநீதிமன்றத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது என்பதை வரலாறு கூறு கிறது. அந்தத் தீர்ப்பு இறையாண்மை பெற்ற ஒரு மாநிலத்துக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு என்று கூறி ஜார்ஜியா அதைச் செயல்படுத்த மறுத்தது: ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு செயலாகாமல் நின்றது—அது நிறைவேற்றப் படவில்லை. ஜார்ஜியா மாநிலத்தின் இந்த மனப்பான்மைதான் அரசியல் சட்டத்தின் பதினோராவது திருத்தத்துக்குக் காரண மாயிற்று. ஒரு மாநிலத்துக்கும் மற்றொரு மாநிலத்தின் குடிமகனுக் கும் இடையிலான வழக்கில் உச்சநீதிமன்றத்துக்குக் கொடுக்கப் பட்டிருந்த அதிகாரம் இந்தத் திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டது. மற்றொரு உதாரணம், வர்ஜீனியா (எதிர்) மேற்கு வர்ஜீனியா என்ற வழக்கு. அமெரிக்க உள்நாட்டுப் போருக்குப் பிறகு, பழைய வர்ஜீனியா மாநிலம், வர்ஜீனியா என்றும், மேற்கு வர்ஜீனியா என்றும் இரண்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இது நடந்தது 1861-ஆம் ஆண்டில். இந்தப் பிரிவினை உடன்பாட்டின் ஒரு பகுதியாக, 1861 ஜனவரி முதல் தேதிக்கு முன் பழைய வர்ஜீனியா மாநிலம் பட்டிருந்த கடனில் நியாயமான ஒரு பங்கைச் செலுத்து வதாக மேற்கு வர்ஜீனியா ஒப்புக் கொண்டது. மேற்கு வர்ஜீனியா வின் அரசியல் சட்டத்தின் எட்டாவது ஷரத்தில் இந்தப் பொறுப்பு உறுதி செய்யப்பட்டது. இந்தத் தொகையை மேற்கு வர்ஜீனியா செலுத்தச் செய்வதற்கு வர்ஜீனியா நாற்பதாண்டுக் காலம் நட்பு முறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தன்னால் இயன்ற தனைத்தையும் செய்து பார்த்தது. பயன் எதுவும் ஏற்படவில்லை.

இறுதியாக 1906-ஆம் ஆண்டு வர்ஜீனியா இந்த விஷயத்தை ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உச்சநீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றது. மேற்கு வர்ஜீனியா இதற்கு மிகவும் தடையான வழியில் செயல்பட்டது. முதலில் உச்சநீதிமன்றத்தின் அதிகார வரம்பை ஏற்கவே மறுத்தது. உச்சநீதிமன்றத்துக்கு அதிகார வரம்பு இல்லை என்று 1906 முதல் 1911 வரை எதிர்த்து வாதாடியது. பின்னர் உச்சநீதிமன்றம் தனக்கு அதிகாரம் உண்டு என்று தீர்மானித்து, கணக்குகளைப் பார்த்து அறிக்கையைக் கொடுப்பதற்கு ஒரு அதி காரியை நியமித்தது. அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டது. அதன் பிறகும் மேற்கு வர்ஜீனியா மூன்றாண்டுக் காலம் அந்த அறிக் கையை ஏற்க மறுத்து வாதாடியது—அதன்பின் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமா என்பதைச் சட்டமன்றம் ஆய்வு செய் வதற்கு அவகாசமளிக்க வேண்டும் என்று மேற்கு வர்ஜீனியா கேட்டுக் கொண்டது. இவ்வாறாக 1913 வரை இந்த விஷயம் தொடர்ந்தது. அதன்பின், அறிக்கை அளிக்கப்பட்டு, மறுப்புக்கள் மறுதலிக்கப்பட்ட பின் எழுத்து மூலமான துணை அறிக்கை, ஒன்றைத் தாக்கல் செய்வதற்குக் காலக்கெடு கோரியது. 1915-இல் இந்தத் தடை முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்த பின் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. நான்காண்டுக் காலம் மேற்கு வர்ஜீ னியா அந்தத் தீர்ப்பை ஏறெடுத்துப் பார்க்க மறுத்தது. கடைசியாக 1919-இல் கடன் தொகையைச் செலுத்துமாறு அதற்கு எடுத்துக் கூறப்பட்டதை ஏற்று திருப்பிச் செலுத்தியது.

*திரு. ஜின்னா :* இவ்வாறு சிரமங்கள் உள்ளன என்று வைத்துக் கொண்டால் நீங்கள் என்ன வழி கூறுகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர் :* என்னுடைய யோசனை இதுதான். இந்த விஷயத்தில் என் உணர்ச்சிகள் உண்மையிலேயே ஓங்கி நிற்கின் றன என்பதை நான் சொல்ல வேண்டும். இன்னும் நீண்ட காலத் துக்கு வகுப்புவாதம் (Communalism) இருக்கும், மாகாணவாதம் (Provincialism) இருக்கும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்த வகுப்புவாதக் கொந்தளிப்பில் உச்சநீதிமன்றம் அல்லது கூட்டாட்சி நீதிமன்றத்தின்—நீங்கள் வைக்கும் பெயர் எது வானாலும், அதனுடைய—தீர்ப்புகள் மீறப்படமாட்டா என்பது உறுதியில்லை. ஒரு சிறுபான்மையின் சார்பில் பேசும் உறுப்பினர் என்ற முறையில், இப்போது உரிமைகள் எதுவும் இல்லாத, உரிமைகள் கோருகின்ற, எங்கும் அதற்கு எதிர்ப்புகளைச் சந்திக் கின்ற நான் ஒன்றைக் கூறுகிறேன். சட்டசபையில் வகுப்பு அடிப் படையில் பெரும்பான்மை ஆதரவு பெற்றுள்ள ஒரு மாகாண அரசு, தன்னுடைய நலன்களுக்குப் பொருந்தி வராத தீர்ப்பு களையும் முடிவுகளையும் செயல்படுத்தத் தயங்காமல் சம்மதிக்கும் என்பது உறுதியுமில்லை. இதுதான் என்னுடைய நிலை. இந்த விஷயத்தை நான் மிகவும் கடுமையானதாகக் கருதுகிறேன் என் பதைச் சொல்லிக் கொள்கிறேன். எனவே, தலைவர் அவர்களே,

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளும் உறுதிகளும் செயல்படுத்தப் படுவதற்கு அரசியல் சட்டத்தில் வகை செய்ய வேண்டும். இதற்கு ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள ஏற்பாட்டை நாம் பின்பற்றலாம் என்று நான் யோசனை கூறுகிறேன். முதலாவதாக, ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 118 மற்றும் 51 பத்தி 25, எல்லாச் சட்டங்களுக்கும் நம்பிக்கையும் மதிப்பும் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றன. இது ஒன்றும் சிறப்பானதன்று. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் சட்டத்திலும் இது காணப்படுகிறது. தீர்ப்புகளைச் செயல்படுத்துவது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தின் 34-ஆவது பத்தி, கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள மற்ற அதிகாரங்களுடன் இணைத் தொடர்பு உள்ள விஷயங்களில் சட்டம் இயற்றுவதற்கு அதிகாரம் அளிக்கிறது. இதுதவிர, முடிவுகளையும் தீர்ப்புகளையும் செயல்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசியல் சட்டம் மத்திய அரசுக்குச் சில குறிப்பான அதிகாரங்களை அளிக்கிறது. முதலாவதாகப் பிரிவு 51, பத்தி 24, மாநிலங்களுக்கிடையில் தீர்ப்புகளைச் சேர்ப்பிப்பதற்கும் செயல்படுத்துவதற்கும், காமன்வெல்த் முழுவதிலும் நீதிமன்றங்களின் உரிமை இயல் சட்ட, குற்றவியல் நடைமுறை ஆவணங்களைச் சேர்ப்பிப்பதற்கும் தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்கும் வகை செய்கிறது. இது ஒரு விஷயம். அடுத்து ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தில் பிரிவு 78 இருக்கிறது—

தலைவர்: ''நீதி அதிகார வரம்புக்கு உட்பட்ட விஷயங்களில் காமன்வெல்த்துக்கு அல்லது ஒரு மாகாணத்துக்கு (States) எதிராக நடவடிக்கை எடுக்கும் உரிமை அளிப்பதற்கு நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.''

டாக்டர் அம்பேத்கர்: ஆம், அது ஒரு விஷயம்; மேலும் தலைவர் அவர்களுக்குத் தெரியும், நீதிமுறைச் சட்டம் 1903, பகுதி 9-இல், மாகாணங்களுக்கெதிரான தீர்ப்புகளையும் முடிவுகளையும் எப்படி செயல்படுத்துவது என்பதற்கு ஆஸ்திரேலிய கூட்டாட்சிச் சட்டமன்றம் குறிப்பான முறையில் வகை செய்திருக்கிறது. அடுத்து, ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தின் பிரிவு 120 பின்வருமாறு கூறுகிறது—

> ''ஒவ்வொரு மாகாணமும், காமன்வெல்த்தின் சட்டங்களுக்கு எதிரான குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்ட அல்லது குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர்களைத் தன்னுடைய சிறைச்சாலைகளில் காவலில் வைப்பதற்கும், இத்தகைய குற்றங்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கும் ஏற்பாடு செய்யும்; இதைச் செயல்படுத்துவதற்குக் காமன்வெல்த் நாடாளுமன்றம் சட்டம் இயற்றலாம்.''

எனவே, கூட்டாட்சி நீதிமன்றத்தின் தீர்ப்புகளைச் செயல் படுத்த உதவும் வகையில் கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்குக் குறிப் பிட்ட முறையில் அதிகாரம் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*தலைவர்:* எம் மாதிரியான அதிகாரங்கள் வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* அவர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்த விஷயத்தை இம்மாதிரித் தனித்து விட்டு வைக்கக் கூடாது என்பதே என் வேண்டுகோள். தலைவர் அவர்களே, நான் சில மேற்கோள்களை எடுத்துக் கூறி ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் ஒன்றுக்கும் உதவாதவையாக இருந்தன என்பதைச் சுட்டிக்காட்ட இருந்தேன். தங்கள் தீர்ப்புச் செயல்படுத்தப் பெறாது என்றும் புறக்கணிக்கப்படும் என்றும் நீதிமன்றத்தின் மனத்தில் நிறைந் திருந்த எண்ணம்தான் இதற்குக் காரணம். உதாரணமாக ஒரு வழக்கில் ஒஹியோ மாகாண (State of Ohio) ஆளுநருக்கு நீதி மன்றம் ஒரு ஆணை அளித்தது. குற்றம் செய்து விட்டுத் தப்பி ஓடி அந்த மாகாணத்துக்குச் சென்ற ஒருவரை ஆளுநர் ஒப்படைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆளுநர் அவ்வாறு செய்ய மறுத்தார். பின்னர், பணிக்கும் உத்தரவு ஒன்றை (Writ of mandamus) நீதிமன்றம் அளிக்க வேண்டும் என்று கென்ட்டக்கி மாகாணம் (State of Kentucky) மாகாணம் கேட்டுக் கொண்டது. அதற்கு நீதிமன்றம் கூறியது: ''எங்களுடைய தீர்ப்பை நிறைவேற் றும் அதிகாரத்தை அரசியல் சட்டம் எங்களுக்குத் தரவில்லை. எனவே பணிக்கும் உத்தரவை நாங்கள் அளிக்கமாட்டோம்.'' தப்பியோடியவரை ஆளுநர் ஒப்படைக்கக் கடமைப்பட்டுள்ளார் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த போதிலும் அது இவ்வாறு கூறியது. இவ்வாறு தன்னுடைய தீர்ப்புகள் செயல்படுத்தப் பெறாது என்ற உணர்வு அழுத்திக் கொண்டிருந்த காரணத்தால் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உச்சநீதிமன்றம் உதவ மறுத்த வழக்குகளை நான் நூற்றுக்கணக்கில் எடுத்துக்காட்ட இயலும். இம் மாதிரியான நிலைமைகளில் நாம் ஏதாவது மாற்று ஏற்பாடு செய்தாலன்றி எப்படிப் பாதுகாப்புக் கிடைக்கும் என்று தெரிய வில்லை.

*தலைவர்:* எம் மாதிரியான சட்டம்? உதாரணமாக வங்காளத் துக்கு எதிராக ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டால், தீர்ப்பை நிறை வேற்றும் அமீனா (bailiff) ஒருவரை எவ்விதமேனும் வங்காளத் தில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* பிரிவு 78-இல் என்ன இருக்கிறதோ அதைத்தான் நான் கூறுகிறேன். பொது நீதிமன்ற உத்தரவுகளைச் செயல்படுத்துவதில் பொருளாளர் அல்லது கருவூலத்துக்குப் பொறுப்பு வகிப்பவர் பணம் செலுத்தக் கடமைப்பட்டவர்.

*தலைவர்:* அவர் செலுத்தவில்லை என்றால் என்ன ஆகும்?

*டாக்டர் அம்பேத்கர்:* அவர்மீது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச் சாட்டு கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறேன்.

*சர் மானக்ஜி தாதாபாய்:* அவர்மீது எங்கே விசாரணை நடக்கும்?

*டாக்டர் அம்பேத்கர்:* கூட்டாட்சி நீதிமன்றத்தில்; அது குறிப் பிடும் இடத்தில் விசாரணை நடத்தப்படும்.

*திரு. ஐயங்கார்:* நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை உத்தரவைச் செயல்படுத்துபவர் யார்?

*டாக்டர் அம்பேத்கர்:* கூட்டாட்சி அரசு தனது சொந்த அதி காரிகளின் மூலம் அதைச் செய்யும். கூட்டாட்சி அரசுக்கு இந்த அதிகாரம் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இது குறிப்பால் உணர்த்தப்படும் அதிகார மாகக் காணப்படுகிறது; ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தில் பிரிவு 120-இன்படி, கூட்டாட்சிச் சட்டத்துக்குக்கெதிராகக் குற்றம் செய் வோரைக் காவலில் வைப்பதற்குக் கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் சட்டம் ஒன்று இயற்றப் பட்டு, ஒரு மாகாணத்தின் குடிமகன் ஒருவன் அதை மீறுகிறான் என்றும், உச்சநீதிமன்றம் அவனுக்கெதிராகத் தீர்ப்பு அளிக்கிறது என்றும் கொள்வோம். இந்த விஷயத்தில் மாகாணத்தின் உணர்வு மிகத் தீவிரமாக இருந்து அவனைச் சிறையில் வைக்க விரும்ப வில்லை என்றால், பிரிவு 120-இல் கொடுக்கப்பட்டுள்ள அதி காரத்தின்படிக் கூட்டாட்சி அரசு தன்னுடைய சொந்த சிறைச் சாலைகளை வைத்திருக்கும் என்று கருதுகிறேன். கூட்டாட்சி அரசு எல்லா விஷயங்களிலும் நியாயம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று விரும்பினால், தீர்ப்புகள் செயல்படுத்தப்படுமாறு பார்த்துக் கொள்வதற்கு அதற்கு அதிகாரம் இருக்க வேண்டும். அது எவ்வாறு அதை நிறைவேற்றும் என்பதை இப்போது நான் சொல்வதற் கில்லை. நீதிமன்றத்தின் தீர்ப்புகளும் முடிவுகளும் இந்தியா முழு வதிலும் செயல்படுத்தப்படுமாறு பார்த்துக் கொள்வதற்குக் கூட் டாட்சி அரசுக்கு அரசியல் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் நான் சொல்ல விரும்புவது. உரிமையை நிலைநிறுத்த வழி இல்லாமல் போனால் உரிமையே இல்லாமல் போகிறது என்பதை நான் மீண்டும் கூறவேண்டியது அவசிய மில்லை.

*திரு. ஜயகர்:* இனக்கலவரம் அல்லது வகுப்புக் கலவரம் ஏற் பட்டால் தவறாமல் பலனளிக்கக்கூடிய வழி எதையும் உருவாக்க முடியாது.

*டாக்டர் அம்பேத்கர்:* இதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய தில்லை. நான் என்னுடைய சொந்த விஷயத்தை எடுத்துக் கொள் கிறேன். பம்பாய் மாகாணத்தில் ஒரு நாசிக் சத்தியாக்கிரகம்

நடக்கிறது என்று கொள்வோம். நான் அளித்துள்ள இந்த மனு வின் முதல் பகுதியில் நான் கோரியுள்ளது ஒரு அடிப்படை உரிமை—அதாவது கோவிலில் நுழையும் உரிமை—எங்களுக்கு இருக்கிறது என்பது. அப்பொழுது, நாங்கள் அமைதிக்குக் கேடு விளைப்பதாகவும், இதை நாங்கள் நிறுத்தவில்லையெனில் சிறை யில் அடைக்கப்படுவோம் என்றும் நடுவர் உத்தரவு பிறப்பித்தால், கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு இருக்க வேண்டியது என்று நான் கருதும் அதிகாரத்தின் கீழ் நாங்கள் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க, நடுவர் செய்தது தவறு என்று நீதிமன்றம் கூறுவ தாக இருந்தால் உள்துறை உறுப்பினரிடம் நாங்கள் சென்று நீதிமன்ற உத்தரவைச் செயல்படுத்தக் கோருகிறபொழுது உள் துறை அமைச்சர் பெரும்பான்மையான பழைமைவாத மக்களின் ஆதரவைச் சார்ந்து இருப்பவரானால் "நான் அதைச் செய்ய முடியாது", என்று கூறுவார். இம்மாதிரியான நிலைமையில் மத்திய அரசு தனது சட்டங்களைச் செயலாக்குவதற்கு ஏதேனும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திரு. ஜின்னா: நீங்கள் சொல்வதில் நிறைய வலுவிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஒரு உத்தரவை அல்லது வாரண்டை (Warrant) நிறைவேற்ற வேண்டுமானால் அதற்குப் பக்கபலமாக முதலில் காவல் துறையும், இரண்டாவதாக, இராணுவத்தின் இறுதி அதிகாரமும் நிற்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். உங்கள் கூட்டாட்சி அரசின் உறுப்பினர் இராணுவத்தைப் பயன்படுத்த முடிந்தாலன்றி அந்த உத்தரவை அல்லது வாரண்டை எப்படி நிறைவேற்றுவார் என்று நினைக்கிறீர்கள்?

டாக்டர் அம்பேத்கர்: அவரால் முடியலாம். அவருடைய அதிகாரத்துக்கு நான் எந்த வரம்பும் வைக்கவில்லை. இந்த நோக்கம் நிறைவேறுவதற்கு என்ன அதிகாரம் வேண்டும் என்று அவர் நினைக்கிறாரோ அந்த அதிகாரத்தை அவருக்குக் கொடுப் பேன்; இவ்வாறுதான் செய்ய வேண்டியிருக்கும். நான் அதை மறுக்கவில்லை; ஆனால் நான் சொல்வது இதுதான்; அடிப்படை உரிமைகளின் கீழ் அல்லது சிறுபான்மையினர் உரிமைகளின் கீழ் மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்குமாறு நீங்கள் உறுதிசெய்ய விரும்பினால், கூட்டாட்சி நீதிமன்றத்தின் முடிவுகள் எவை யாயினும் அவற்றை நிறைவேற்றக் கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் இருக்கவேண்டும்.

திரு. ஜின்னா: அதிகாரம் இருக்க வேண்டும் என்பது மட்டு மன்று, அந்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கு அவர்களுக்குப் பக்கப் பலமும் இருக்க வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர்: இதன்படி அவர்களுக்குத் துணை அமையும்.

திரு. ஜின்னா: கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கலாம்; ஆனால் அதைச் செயல்படுத்துவதற்கான துணை இருந்தால்தான் செயல்படுத்த முடியும்.

*டாக்டர் அம்பேத்கர் :* இராணுவம்.

*திரு. ஜின்னா :* மிகவும் சரி; அதனால் தலைவரவர்கள் கூறி யிருக்கும் யோசனை — அதை நீங்கள் கவனிக்காமல் விட்டு விட்டீர் கள் என நினைக்கிறேன் — கூட்டாட்சி நீதிமன்றத்தின் உத்தரவைச் செயல்படுத்தும் இறுதிப் பொறுப்பு மன்னரிடம் இருக்கும் என்பதாகும். மன்னர் இதற்குப் பொறுப்பாயிருப்பார் என்று கூறப் பட்டுள்ளது; ஏனென்றால் பாதுகாப்புத்துறை மன்னரின் அதி காரத்துக்கு உட்பட்ட விஷயமாக இருக்கப் போகிறது என்பதுதான் இதுவரை இருந்து வரும் கருத்தாகும் என்று நான் கருதுகிறேன். நான் கூறுவது சரிதானா, தலைவரவர்களே?

*தலைவர் :* ஆம். அதுதான் விஷயம்.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆனால் நான் சொல்லிக் கொண்டிருக் கும் கருத்து இதுதான் : அரசின் அதிகாரங்களை ஒரு புறம் கூட்டாட்சி அரசுக்கும் மற்றொருபுறம் மாகாண அரசுக்கும் இடையே பிரித்துக் கொடுக்கப் போகிறீர்கள் என்றால், உச்சநீதி மன்றத்தின் முடிவுகளைச் செயல்படுத்துவதற்குக் கூட்டாட்சி அரசுக்குச் சட்டமியற்றுவதற்கோ அல்லது வேறு எதற்குமோ தேவை யான அதிகாரம் கொடுக்கவில்லை என்றால், கூட்டாட்சி அரசு அதைச் செய்ய முடியாது. இதுதான் என்னுடைய கருத்து.

*திரு. ஐயகர் :* ஆனால், அதேசமயம், பிரச்சினை அத்துடன் முடிந்துவிடாது. அதாவது, நீங்கள் கற்பனை செய்யும் வகுப்புவாத உணர்வு நிலைமையில் பிரச்சினை அத்துடன் முடிந்துவிடாது.

*டாக்டர் அம்பேத்கர் :* மேலும் அதிகத் தீவிரமான நடவடிக்கை கள் எடுக்க வேண்டியிருக்கலாம் என நான் ஒப்புக் கொள்கிறேன். ஸ்விஸ் கூட்டாட்சியில் இராணுவம் கூடப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நாம் அறிவோம் — குறைந்தபட்சம், ஸ்விட்சர்லாந்தில் கூட்டாட்சி நீதிமன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தும் அதிகாரம் கூட்டாட்சி அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. என்ன வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று நான் விதிக்க விரும்பவில்லை. ஆனால் நான் சொல்வது இதுதான் : ஐக்கிய அமெரிக்க நாடுகளில் பிரச்சினை எழுந்தது, அதாவது கூட்டாட்சி அரசுக்கு அதிகாரம் இருக்கவில்லை.

*தலைவர் :* நீங்கள் சொல்வது புரிகிறது. அதாவது, அதனால் அவர்கள் பொறுப்பு ஏற்க விரும்பவில்லை.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம். இந்தியாவில் அந்த நிலைமை வரக்கூடாது.

*லார்டு லோதியன் :* அமெரிக்காவில் இந்த வேறுபாடு இருக்கிற தல்லவா? அதாவது கூட்டாட்சி அதிகார அமைப்பு, தனி நபருக் கெதிராக நடவடிக்கை எடுக்க முடிகிறது; ஆனால் அரசியல் மாநாட்டில் இந்தப் பிரச்சினை வந்தபோது ஒரு மாகாணத்துக் கெதிராக அது நடவடிக்கை எடுக்க முடியாது என்று தீர்மானிக்கப்

பட்டது. ஏனென்றால் ஒரு மாகாணம் மற்றொன்றுக்கெதிராக போர் மூலம் தான் நடவடிக்கை எடுக்க முடியும்; எனவே ஒரு மாகாணம் தன் கடமைப் பொறுப்பை நிறைவேற்றச் செய்வதற்கு நிர்ப்பந்தம் கொண்டு வருவதைச் சமுதாயத்தின் நல்லுணர்வுக்கு விட்டுவிட்டார்கள். தனி ஒருவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஏற்பாடு செய்யலாம்; ஆனால் கூட்டாட்சி அமைப்புக்குள், கூட்டாட்சி அரசு ஒரு மாகாண அரசுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு வகை செய்ய வேண்டுமானால் அரசியல் சட்ட நடைமுறையிலேயே போர்க்கால நடவடிக்கை எடுப்பதற்கும் வகை செய்யாமல் முடியாது; இதை யாரும் செய்ய மாட்டார்கள். இதுதான் உங்கள் பிரச்சினை.

*டாக்டர் அம்பேத்கர் :* அது தெரியவில்லை; ஆனால் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலேயே, அரசுக்கெதிரான கிளர்ச்சியை ஒடுக்குவதற்கு இராணுவத்தைப் பயன்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது.

*லார்டு லோதியன் :* அது ஒரு போர் நடவடிக்கை ஆகிறது; கடந்த காலத்தில் அவ்வாறு நடந்துள்ளது.

*டாக்டர் அம்பேத்கர்:* ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசியல் சட்டத்தில் இந்த ஏற்பாடு இடம் பெற்றுள்ளது.

*திரு. ஜயகர் :* ஆனால், உள்நாட்டுப் போர் அல்லது கூட்டாட்சிக்கு விசுவாசம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாகும் அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர் :* இதை நான் முற்றிலுமாக உணர்கிறேன். நீங்கள் கூறும் கருத்தை நான் மறுக்கவில்லை. நான் சொல்வது இதுதான் : ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உள்ள நிலைமை நமக்கு வரக்கூடாது; அதாவது, கூட்டாட்சி அதிகார வரம்புக்குள் எழும் வழக்குகளில் தீர்ப்புச் செய்வதற்குக் கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்று இருந்தபோதிலும், அந்தத் தீர்ப்புகளைச் செயல்படுத்துவதற்குக் கூட்டாட்சி அரசிடம் அதிகாரம் இல்லை. நம்முடைய கூட்டாட்சி அரசு அல்லது கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்கு ஆஸ்திரேலியாவில் இருப்பது போல அதிகாரம் இருக்க வேண்டும் என்பதே நான் கூற விரும்புவதாகும்.

*திரு. ஜின்னா :* வேறுபாடு இதுதான் : அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இராணுவம் கூட்டாட்சி அரசின் பொறுப்பில், அதன் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. நீங்கள் யோசனை கூறும் கூட்டாட்சி அரசு இராணுவத்தின் கட்டுப்பாட்டையும் பொறுப்பையும் உடனடியாகத் தன்வசம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறீர்கள்.

*டாக்டர் அம்பேத்கர் :* இப்போது இல்லை என்றாலும், பின்னர் அவ்வாறு செய்ய வேண்டும்.

*திரு. ஜின்னா :* இடைக்காலத்தில் என்ன நடக்கும்?

*டாக்டர் அம்பேத்கர் :* அது வேறு விஷயம்; இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாமல் போகலாம்.

*திரு. ஜயகர் :* இராணுவ உதவி அளிக்கும்படி மன்னரைக் கேட்க வேண்டியிருக்கும்.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம்.

*திரு. ஜயகர் :* மன்னர்தான் இறுதியான இராணுவ அதிகாரம் பெற்றவர்.

*டாக்டர் அம்பேத்கர் :* நான் சொல்லும் கருத்தை இது தேவையற்றதாக்கி விடவில்லை. கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்கு அதிகாரம் கொடுத்தாக வேண்டும். ஐக்கிய அமெரிக்க நாடுகளில், மரண தண்டனை விதிக்கப்பட்டதில் தவறு இருப்பதாக உச்சநீதிமன்றம் உத்தரவு வெளியிட்ட பின்பும் மாகாண அரசுகள் தண்டனை பெற்றவர்களைத் தூக்கில் போட்டிருக்கின்றன.

*தலைவர் :* ஆங்கில பொதுச்சட்டத்தைப் பற்றிக் கூறப்படுவதை நான் கேட்டிருக்கிறேன் : அதாவது ஒரு செடி வளர்ந்து வருகிறதா என்பதை அறிய மீண்டும் அதைப் பிடுங்கி அதன் வேரைப் பார்ப்பது பலனற்றது, ஆங்கில பொதுச் சட்டம் இத்தகைய செயலைத் தாங்க முடியாது என்பதைப் போலவே வேறு எந்தச் சட்டமும் தாங்க முடியாது என்பதை நீங்கள் உணரலாம். நீங்கள் மிகவும் சுவையானச் சட்டப் புதிர்கள் போடுகிறீர்கள்; ஆனால் யாரும் ஒன்றைச் செயல்படுத்த முடியாததாக ஆக்கிவிட முடியும் என்பதே இதற்குச் சுருக்கமான பதில். கட்டிடத்தின் அடிப்படைச் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு எப்போதும் தேடிக் கொண்டிருப்பது பலனற்றது. மக்களின் நல்லுணர்வில் பெருமளவுக்கு நம்பிக்கை வைக்க வேண்டும். வர்ஜீனியா வழக்கு உதாரணத்தில் மக்கள் சரியான கருத்துக்கு வருவதற்குப் பத்தொன்பது ஆண்டுகள் ஆயின. உங்கள் விஷயத்திலும் இதுபோல ஆகலாம். முதலில் இம்மாதிரியான கஷ்டங்கள் இருக்கலாம்; ஆனால் நீங்கள் ஒன்று சேர்ந்து செயல்படத் தொடங்கும்போது இவற்றில் பல மறைந்து போவதைக் காண்பீர்கள். உங்கள் வீட்டின் அஸ்திவாரம் சரியாக இருக்கிறதா என்று மூன்று வாரங்களுக்கு ஒருமுறை தோண்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் மக்களைச் சிறிது நம்பவேண்டும்.

*டாக்டர் அம்பேத்கர் :* என்னுடைய ஒரே பதில் நம்முடைய அஸ்திவாரத்தை மணலின் மேல் அமைக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த விஷயத்தின் மூன்றாவது பகுதியாகக் கூட்டாட்சி நீதிமன்றத்தின் அமைப்பு முறையைக் கவனிப்போம். இது பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டவற்றில் பலவற்றை நான் ஏற்றுக் கொள்வதால் நான் இப்போது அதிகமாக எதுவும் கூற விரும்ப

வில்லை. ஆயினும் ஒன்று மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த விஷயத்தில் நாம் ஆஸ்திரேலியாவின் முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும். அதன் மூலம் கூட்டாட்சி அதிகாரத்துக்குட்பட்ட விஷயங்களில் மேல் முறையீட்டுக்குக் கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்று அமைவதுடன் இந்தியா முழுவதற்குமான மேல் முறையீட்டு உச்ச நீதிமன்றமும் அமையும். ஆஸ்திரேலியாவில் இவ்வாறுதான் செய்திருக்கிறார்கள். அங்கே கூட்டாட்சி நீதிமன்றம், கூட்டாட்சி அதிகார வரம்பில் செயல்படும் நீதிமன்றங்களுக்கு மேல் முறை யீட்டு நீதிமன்றமாக இருப்பதுடன், அந்த அதிகார வரம்புக்கு வெளியில் உள்ள விஷயங்களிலும் மேல் முறையீடுகளை விசாரிக் கிறது.

குறிப்பாக, இந்திய சமஸ்தானங்களில் உள்ள நீதிமன்றங்கள் கூட்டாட்சி அதிகார வரம்புக்கு உட்பட்ட வழக்குகளை விசாரிப் பதற்கு அதிகாரம் அளிப்பதற்குக் கூட்டாட்சிச் சட்டமன்றத்துக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். இதன் மூலம் இந்திய சமஸ்தானங் களில் உள்ள சமஸ்தான நீதிமன்றங்களைச் சட்டமன்றம் பயன் படுத்திக் கொள்ள முடியும். கூட்டாட்சி அதிகாரத்துக்குட்பட்ட விஷயங்களில் மாகாணங்களில் உள்ள உயர்நீதிமன்றங்களுக்கு மட்டுமே விசாரணை அதிகாரம் கொடுக்காமல், திறமையாகச் செயல்படுவதாகச் கூட்டாட்சி நீதிமன்றத்துக்குத் தெரிந்துள்ள சமஸ்தான நீதிமன்றங்களுக்கும் கூட்டாட்சி அதிகாரத்துக்குட்பட்ட சில விஷயங்களில் விசாரணை அதிகாரம் அளிக்கலாம். இப்படிச் செய்வதனால் ஏற்படும் விளைவு மிக முக்கியமானது. முதலாவ தாக, சமஸ்தான நீதிமன்றங்களின் கண்ணியம் உயர்வடையும்; இரண்டாவதாக, சமஸ்தான நீதிமன்றங்கள் இந்தியா முழுவதன் நீதிமன்ற முறையுடன் இணைக்கப்பட்டு நமது கூட்டாட்சி உண்மை யான கூட்டாட்சி ஆகும்.

*திரு. ஜயகர் :* மேல் முறையீடு உச்சநீதிமன்றத்தில் செய்ய வேண்டுமா, கூட்டாட்சி நீதிமன்றத்தில் செய்ய வேண்டுமா?

*டாக்டர் அம்பேத்கர் :* அந்த விஷயத்துக்கு வருகிறேன். சமஸ் தான நீதிமன்றங்கள், கூட்டாட்சி அதிகாரத்துக்கு உட்படாத விஷயங்களிலும் கூட மேல் முறையீடுகளைக் கூட்டாட்சி உச்சநீதி மன்றத்துக்கு அனுப்ப இணங்கவேண்டும் என்பது என் யோசனை. அப்படி அவை இணங்கவில்லையானால், ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தில் பின்பற்றப்பட்டுள்ளது போன்று வெளிப்படையான கொள்கையைப் பின்பற்ற வேண்டும். ஆஸ்திரேலிய அரசியல் சட்டத்தில், மாநில நீதிமன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீடு களைக் கூட்டாட்சி நீதிமன்றமோ, ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றமோ விசாரிப்பது தடுக்கப்படாது என்று வகை செய்யப்பட்டுள்ளது. நம்முடைய அரசியல் சட்டத்திலும் இதே போல வகை செய்ய வேண்டும். மேலும் சமஸ்தான நீதிமன்றங்கள் மேல்முறையீடுகளைக் கூட்டாட்சி நீதிமன்றங்களுக்குத்தான் அனுப்ப

வேண்டும் என்பதைக் கட்டாயமாக்காவிட்டாலும், சமஸ்தான நீதிமன்றங்கள் மேல்முறையீடுகளைக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கே அனுப்புவதென்று பின்னர் தீர்மானித்தால், கூட்டாட்சி உயர்நீதி மன்றம் அந்த மேல்முறையீடுகளை விசாரணைக்கு ஏற்றுக் கொள் வதைத் தடுக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியபடி, ஆஸ்தி ரேலிய அரசியல் சட்டத்தைப் பின்பற்றி, சமஸ்தான நீதிமன்றங் கள் தங்கள் வழக்குகளில் மேல் முறையீடுகளைக் கூட்டாட்சி நீதி மன்றத்துக்கு அனுப்புவதை முறைப்படுத்துவதற்கு உரிமை அளிக்க வேண்டும். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களிலிருந்து மேல் முறை யீட்டுக்கு இருக்கும் அதே உரிமைகளை அவை அளிக்காமல் இருக்கலாம்; அவை விரும்பினால் அதை முறைப்படுத்தலாம்.

நான் மற்றொரு விஷயம் கூற விரும்புகிறேன். இது உயர்நீதி மன்றத்துக்கும் கூட்டாட்சி அரசுக்கும் உள்ள உறவு பற்றியது. இப்போது இந்திய உயர்நீதிமன்றங்கள் நிதி விஷயத்திலும் நிர்வாக விஷயத்திலும் மாகாணங்களின்கீழ் உள்ளன. கல்கத்தா உயர்நீதி மன்றம் மட்டும் விதிவிலக்காக நிதி விஷயத்தில் மாகாணத்தின் கீழும், நிர்வாகத்தில் மத்திய ஆட்சியின் கீழும், நிதி விஷயத்தில் மாகாணங்களின் கீழும் இருக்கவேண்டும் என்று நேற்று தேஜ் பகதூர் சாப்ரு யோசனை கூறினார். நிர்வாகத்தில் அவை மத்திய ஆட்சியின்கீழ் இருக்க வேண்டும் என்று அவர் கூறிய யோசனையை நான் முற்றிலுமாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இதற்கு என்னுடைய காரணங்கள் சற்று வேறுபடுகின்றன. அவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்திய மாகாணங்களில் உள்ள நீதிபதிகளிடம் தாங்கள் உள்ளூர் அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகக் கூடும் என்ற அச்சம் ஓரளவுக்கு இருப்பதாகவும், எனவே, உள்ளூர் அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு அப்பால் கூட் டாட்சி மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குத் தங்களை மாற்ற வேண்டும் என்று அவர்கள் விரும்புவதாகவும் அவர் கூறினார். ஆனால், பிரதிநிதித்துவ ஜனநாயகமும், பொறுப்பான அரசாங்க மும் உள்ள எந்த நாட்டிலும் உயர்நீதிமன்றங்கள் அரசியல் செல் வாக்கு அல்லது கட்சி அரசியல்வாதிகளின் செல்வாக்குக்கு உட் படாமலிருக்க முடியும் என்று நான் கருதவில்லை.

*சர் தேஜ் பகதூர் சாப்ரு:* ஆங்கிலேய நீதிமன்றங்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவை என்பதுதான் சட்டத் தத்துவம் என்று நான் கருதினேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* நாட்டில் சில நீதித்துறைப் பதவிகள் அரசியல் ரீதியான நியமனங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் அது வேறு விஷயம். இப்போது நான் இந்தக் குழுவின் முன் குறிப்பிட விரும்பும் கருத்து இது: நாம் இந்தக் கூட்டாட்சியில் சுமார் 562 இந்திய சமஸ்தானங்களைச் சேர்க்கிறோம்.

*திரு. ஜின்னா:* நீங்கள் அப்படிச் செய்கிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: அதுதான் திட்டம் என்று நினைக்கிறேன்; குறைந்தபட்சம் நாம் எடுத்துக்கொண்டிருக்கும் குறிக்கோள், எல்லா இந்திய சமஸ்தானங்களும் கூட்டாட்சியில் சேரும் என்பதே. இந்தியக் கூட்டாட்சியில் இடம் பெறும் மிகப்பல சமஸ்தானங்கள் தகுதிவாய்ந்த நீதித்துறை ஒன்றை வைத்துக் கொள்வதற்குப் போதிய நிதிபலம் இல்லாதவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை என நினைக்கிறேன். பம்பாய் மாகாணத்தில் ஒரு உதாரணத்தை—எனக்கு நேரடியாகத் தெரிந்த ஒன்றைக் குறிப்பிடுகிறேன். பம்பாயில் ஒரு சிறிய சமஸ்தானம் இருக்கிறது. ஒரு பெண்மணி அதன் நிர்வாகத்தை நடத்துகிறார். அந்தச் சமஸ்தானத்தில் எனக்குத் தெரிந்த மட்டும் ஒரே ஒரு அதிகாரிதான் இருக்கிறார். அவர் பொது நீதிபதியாகச் செயல்படுகிறார்; நடுவராகவும் செயல்படுகிறார்; செஷன்ஸ் நீதிபதியாகவும் அவரே இருக்கிறார். அவர் அளிக்கும் தீர்ப்புகளின் மேல் முறையீடுகள் சமஸ்தானத்தின் தலைவரிடம் போகின்றன; அந்தப் பெண்மணிக்கு உதவியாக ஒரு திவான் இருக்கிறார்; எனக்குத் தெரிந்தவரையில் அவர் ஒரு ஓய்வுபெற்ற வருவாய்த்துறை அலுவலர். மிகச் சிக்கலான வழக்குகள் இந்த மன்றத்துக்கு வருகின்றன; இந்த மன்றம் சமஸ்தானத்தின் 'பிரிவிக் கவுன்சில்' என்று அழைக்கப்படுகிறது; இப்படிப்பட்ட ஒரு நீதிமன்றம் இன்று தீர்ப்புகள் அளித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு நான் யாரையும் குறைகூறவில்லை. நான் குறிப்பிடுவது, இப்படிப்பட்ட ஒரு சமஸ்தானம் மிகச் சிறியதாக இருக்கும் காரணத்தால் தகுதிவாய்ந்த நீதிமன்றம் ஒன்றை வைத்திருப்பதற்குப் போதிய வருமானம் அதற்கு இல்லை என்பதே.

மேலும், பிரிட்டீஷ் இந்தியாவிலும் நாம் புதிய மாகாணங்களை உருவாக்கிக் கொண்டு போக முடியும். இந்த மாகாணங்களும் மிகச் சிறியவையாக அமைந்து, உயர்நீதிமன்றம் ஒன்றை வைத்துப் பராமரிக்க முடியாத அளவுக்கு நிதியில் பலவீனமாக இருக்கக் கூடும். இன்றும்கூட இம்மாதிரி நிலைமை உள்ளது. அஸ்ஸாம் மாநிலம் உயர்நீதிமன்றம் ஒன்றை வைத்துப் பராமரிக்க முடியாது. வங்காள மாகாணத்தின் உயர்நீதி மன்றமே அதற்கும் உயர்நீதிமன்றமாக உள்ளது. எனவே நான் கூற விரும்புவது இதுதான்: சிறியவையாகவும், நிதி பலம் இல்லாதவையாகவும் உள்ள சுதேச சமஸ்தானங்கள் எல்லாம், பிரிட்டீஷ் இந்தியாவில் உள்ள உயர்நீதிமன்றங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பதன் மூலம் தங்களுடைய குடிமக்களுக்குப் பொதுக்குற்றவியல் வழக்குகளில் நீதி வழங்குவதற்குத் தகுந்த நீதித்துறையை வைத்துக் கொள்ள உதவ முடியுமானால், அத்தகைய திட்டம் வரவேற்கத் தக்கதாகும். ஆனால், மாகாண உயர்நீதிமன்றம், முற்றிலுமாக மாகாண அரசின் கட்டுப்பாட்டில் இருந்தால், மாகாணத்தின் விவகாரங்களின் கட்டுப்பாட்டில் தங்களுக்குப் பங்கு எதுவும் இல்லாத சமஸ்தானங்கள் அந்த உயர்நீதிமன்றங்களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பமாட்டா. அவ்வாறின்றி, மாகாண உயர்நீதி

மன்றங்கள் மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயமாக இருந்தால், மத்திய அரசில் எல்லாச் சமஸ்தானங்களுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பிரதிநிதித்துவம் இருப்பதால், இந்த நீதி மன்றங்களை அவை பயன்படுத்திக் கொள்வதற்குத் தூண்டுதல் அதிகமாக இருக்கும்—நிச்சயமாக அதற்கு ஆட்சேபம் குறைவாக இருக்கும். இதன் விளைவாக, வருங்கால இந்திய அரசின் பகுதியாக இருக்கப்போகும் சுதேச சமஸ்தானங்களில் நீதி நிர்வாகம் பெருமளவுக்கு மேம்பாடு அடையும்; அதே சமயம் மாகாண உயர்நீதி மன்றங்களின் திறமை எந்த வகையிலும் பாதிக்கப்படாது. இந்தக் காரணத்தின் அடிப்படையில் மாகாண நீதிமன்றங்கள் நிர்வாகம், நிதி ஆகிய இரண்டு விஷயங்களிலும் மத்திய அரசின் அதிகாரத்தின்கீழ் வரவேண்டும் என்று நான் யோசனை கூறுகிறேன். கல்கத்தா உயர்நீதிமன்றம் மத்திய நிர்வாகத்தில் இருப்பதற்கான காரணங்களில் ஒன்று, அது வங்காள மாகாணத்துக்கு மட்டும் தனியாக உள்ள நீதிமன்றம் அல்ல என்பதாகும். அது வங்காள மாகாணம், அஸ்ஸாம் மாகாணம் ஆகிய இரண்டுக்கும் கூட்டாக உள்ள நீதிமன்றமாகும். இந்தக் காரணத்தினால்தான் இந்த முறை நீடிக்க வேண்டும் என்றும், மற்ற மாகாணங்களுக்கும் இது விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் சைமன் குழு பரிந்துரை செய்தது. இந்தக் காரணத்தினால்தான் இந்த யோசனை வரவேற்கத்தக்கது என்று நான் கூறுகிறேன்.

இவ்வளவுதான் கூட்டாட்சி நீதிமன்றம் பற்றி நான் கூறுவதற்கு உள்ளது.

## நாற்பத்து நான்காவது அமர்வு
## நவம்பர், 2, 1931

### மூன்றாவது அறிக்கையின் முழு வடிவு பற்றிய விவாதம்

* டாக்டர் அம்பேத்கர்: பத்தியின் கடைசி நான்கு வரிகளைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். தொடக்கத்தில் இரண்டாவது அறிக்கையின் முப்பத்து நான்காவது பத்தியில் துணைக் குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து தாங்கள் குறிப்பிட்டுள்ளதாவது:

> "இந்தக் கருத்துப் பற்றிய முடிவு சிறுபான்மையோர் துணைக் குழுவைச் சார்ந்துள்ளதால், முதலில் உள்ள நான்கு நலன்களைப் பற்றிய பரிந்துரை தரப்படவில்லை."

இதனால் இந்த நான்கு நலன்களின் வேண்டுகோள்களை குழு அக்கறையோடு கவனிக்கவில்லை என்று நான் நினைக்க

* கூட்டாட்சி அமைப்புக் குழு மற்றும் சிறுபான்மையோர் குழுவின் நடவடிக்கைகள், தொகுதி. 1, பக். 882-83.

வில்லையாயினும், இரண்டாவது அறிக்கையின் பத்தி 34-ல் தெரிவித்த கருத்து, பின்வரும் பொருள் தருகிறது என்று கருதுகின்றேன். அதாவது, கோரிக்கைகளுக்கு ஏற்றவாறு—அல்லது அவற்றின் போக்கிற்கேற்றவாறு எவ்விதப் பரிந்துரைகளும் செய்ய முடியாது என்று தாங்கள் கருதியுள்ளீர்கள். எனவே, 'பரிந்துரைகள்' என்னும் சொல்லுக்குப் பின்னர், பின்வரும் சொற்களைச் சேர்த்துக் கொள்ளத் திருத்தம் செய்வீர்களானால் நான் தங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்:

''அவர்களது பிரதிநிதித்துவத்தின் அளவும் முறையும் சம்பந்தப்பட்ட வரையில்''

*திருமதி சுப்பராயன் :* சட்டமன்றத்தில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது பற்றிச் சிறப்பு வழிவகைகள் செய்வதற்கான வாய்ப்பு பற்றி ஓர் அமர்வில் பேசியது தங்களுக்கு நினைவிருக்கக் கூடும். சிறுபான்மையோர் குழுவின் அறிக்கை வெளிவரும்வரை இதைப் பற்றி யோசிப்பதை நிறுத்தி வைக்கலாம் என்று நான் தெரிவித்தேன். அந்தக் கருத்துக் கவனிக்கப்படாவிட்டாலும், அதைப் பற்றிய குறிப்பாவது இங்கு இடம் பெற வேண்டும் என வேண்டுகின்றேன். பத்தி 28-ன் வரி 9-ல் 'நலன்கள்' என்னும் சொல்லுக்குப் பின், பின்வரும் சொற்கள் சேர்க்கப்பட வேண்டும் :

''சட்டமன்றங்களில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்குரிய வகையில்''

*அவைத் தலைவர் :* இவை விடுபட்டது பற்றி வருந்துகின்றேன். இதைச் சுட்டிக் காட்டிய டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன். இந்த இரு திருத்தங்களையும் ஏற்றுக் கொள்வோம். இவை கவனக்குறைவால் விடுபட்டுள்ளன.

*திருமதி சுப்பராயன் :* வேறொரு சமயத்தில், சட்ட மன்றங்களில் நியமன உறுப்பினர்களின் சிறந்த பணிகளைப் போற்றிப் பாராட்டிய போதிலும் அவ்வாறு புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் நியமன உறுப்பினர்களைச் சேர்ப்பதை கொள்கை அளவில் நான் எதிர்த்தேன். சட்டமன்றம், மேலவை என்று இரு அவைகள் ஏற்பட்டு இரண்டிற்கும் சமமான அதிகாரங்கள் இருக்கும் வகையில் செய்யப்படுமானால் இவ்வகை நியமனத்தை வன்மையாக எதிர்க்கிறேன். மூத்த அரசியல் அறிஞர்களின் சேவைகள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்த மாதிரியான நியமனமுறை அறிவுடைமையாகாது, ஜனநாயகத்திற்குப் புறம்பானது என்பேன். அத்தகையவர்களின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஏதாவது ஒருவகையான தேர்தல் முறை இருப்பது நல்லது. நியமன முறை என்றிருக்குமானால், இந்தச் சட்டப் பிரிவின் முழு நோக்கமும் அடிப்பட்டுப்

போய்விடும் என்றே நான் கருதுகின்றேன். அதோடு இந்த முறை யின் மூலம் அமைச்சரவை, மேலவையில் தமது கட்சிக்காரர்களை நியமனம். செய்து பலத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். பொது வான இந்த மறுப்போடு, பத்தி 32-ன் வரிகள் 7, 10, 19, 20 ஆகியவற்றிலுள்ள ‘ஆண்கள்’ என்பதற்குப் பதிலாக ‘நபர்கள்’ என்று மாற்றிக் கொள்ள வேண்டுகின்றேன்.

*அவைத் தலைவர்* : திருமதி சுப்பராயன் தெரிவித்ததை ஏற்றுக் கொள்கிறேன். இங்கிலாந்தில் கூட ஒரு ஐந்தாண்டுகளுக்கு முன் வரையில் ‘நபர்கள்’ என்றால்‘பெண்களை’யும் உள்ளடக்கியதாக ஆகாது என்றே வைத்துக் கொண்டிருந்தோம்.

*திருமதி சுப்பராயன்* : பெண்கள் அதைவிட மேலானவர்கள் என்று கருதியிருப்பார்கள் போலும்.

*திரு. ஜாஃபருல்லா கான்* : நமது பொது விதிகள் சட்டத்தில் ‘ஆண்’ என்று குறிப்பிட்டுள்ள இடங்களில் எல்லாம் ‘பெண்’ என்பதையும் அது குறிக்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

*திரு. ஐயங்கார்* : என் நண்பர் திருமதி சுப்பராயன் நியமன உறுப்பினர்கள் பற்றித் தெரிவித்த கருத்தையே நானும் கொண் டுள்ளேன். சட்டமன்ற மேலவையில் அரசியல் அறிஞர்கள் இடம் பெற்றிருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று நானும் கருது கின்றேன். ஆயினும் இந்த நாட்டிற்கு இவர்களின் சேவை அவசி யமே என்று கருதப்படும் பட்சத்தில் ஏதாவதொரு தொகுதியில் தேர்தலில் நின்று அவர்கள் மேலவைக்கு வருவதற்கு வாய்ப் புள்ளது. நியமனம் என்ற கொள்கை நேர்மையற்றது; அது முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்பேன்.

*டாக்டர் அம்பேத்கர்* : திருமதி சுப்பராயன் தெரிவித்தவற்றை ஆதரிக்கின்றேன்.

★ ★ ★ ★ ★

* *அவைத் தலைவர்* : ‘‘பெண்களுக்கென்று தேவையான சிறப்பு விதிகளைக் கவனத்தில் கொண்டு மேலவைக்கான வேட் பாளர்களுக்குரிய ஒரு முன்மாதிரியாகக் கொள்ளப்பட வேண் டும்.’’

*டாக்டர் அம்பேத்கர்* : பத்தி 34-ல்—‘சமஸ்தான அவைக்குரிய தகுதிக்கு ஒரு முன்மாதிரியாக’—என்றிருப்பதை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. இதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம் முற்றிலுமாகத் தடுப்பதற்குரிய வழி ஏற்படும் எனத் தோன்றுகின்றது.

---

* கூட்டாட்சி அமைப்புக் குழு மற்றும் சிறுபான்மையோர் குழுவின் நடவடிக்கைகள், தொகுதி 1, பக். 886

*அவைத் தலைவர் :* அவ்வாறு செய்யமாட்டோம்.

*டாக்டர் அம்பேத்கர் :* அவர்களுக்கான மாதிரி விதிகளை உருவாக்குவதைக் கவனிப்பதற்கு வாக்குரிமைக் குழுவிற்குச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.

★ ★ ★ ★ ★

**டாக்டர் அம்பேத்கர் :* மாநில அரசுகள், சமஸ்தானங்கள் இவற்றினிடமிருந்து வரும் பங்குகளை எதிர்பார்த்திராமல் அவசரப் பணிகளில் நேரடியாகவும், சுதந்திரமாகவும் செலவிடுவதற்கு மத்திய அரசுக்கு நிதியாதார வசதிகள் செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதையும் குழு கருதிச் செய்ய வேண்டும் என்கிறேன்.

*லார்டு பீல்:* பல்வேறு கோணங்களில் இவை அனைத்தும் கவனிக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக வேறுபட்ட கருத்துக்களை உள்ளடக்கிய ஓர் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இப்போதைக்கு இதைத்தான் நான் சொல்ல முடியும்.

*திரு. ஜோஷி :* அவைத் தலைவர் அவர்களே, டாக்ட்ர் அம்பேத்கர் அவர்களின் கருத்தையே நானும் கொண்டுள்ளேன்.

*டாக்டர் அம்பேத்கர் :* அவைத் தலைவர் அவர்களே, மத்திய சட்டமன்றத்திற்கான செலவுகளைப் பங்கிடும்போது பிரிட்டீஷ் மாகாணங்கள் மற்றும் சுதேச சமஸ்தானங்கள் ஆகியவை அளிக்க வேண்டிய சம பங்கினை வரையறுப்பது பற்றிய விதிகளை ஆய்வுக்குழு, கருத்தில் கொள்ள வேண்டும் எனச் சொல்ல விரும்புகின்றேன்.

## நாற்பத்தைந்தாவது அமர்வு
## நவம்பர் 4, 1931

***தலைவர் :* இந்த அறிக்கை பற்றித்தான் உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகிறேன். இப்போது பத்தி 52-ஐ சற்றுக் கவனத்திற் கொள்ளுங்கள்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பத்தி 52 குறித்து நான் கூற விரும்புவது இதுதான். சமஷ்டி (கூட்டாட்சி) நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பற்றி நாம் விவாதித்தபோது, ஒரு பிரச்சினையை நான் எழுப்பியது நினைவிருக்கலாம்; அரசியலமைப்புச் சட்டத்திற்கு விளக்கம் தரும் அதிகாரம், பொருள் கூறும் அதிகாரம் அந்த நீதிமன்றத்துக்கு இருக்க வேண்டும், சமஷ்டி அரசும் மாகாண அரசும்

* முன்காட்டியது, பக். 889-900

** சமஷ்டி அமைப்புக் குழு மற்றும் சிறுபான்மைக் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகள், தொகுதி 1, பக்கம் 903.

ஒன்றின் அதிகாரத்தில் மற்றொன்றுத் தலையிடாதபடி அது பார்த்துக் கொள்ள வேண்டும்; அது மட்டுமின்றி, அடிப்படை உரிமைகள் தொடர்பாகவோ சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பாகவோ எழக்கூடிய விவகாரங்களைக் கையாளவும் சமஷ்டி நீதிமன்றத்துக்கு உரிமை இருக்க வேண்டும் என்று நான் கூறினேன். திரு. ஐயகரும், திரு. சாஸ்திரியும் நான் கூறியதை ஆதரித்தார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பத்தியில் இது சம்பந்தமாக ஒரு குறிப்புச் சேர்க்கப்பட வேண்டும்.

*தலைவர் :* டாக்டர் அம்பேத்கருக்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். இவை யாவும் அரசியல் சட்டத்தில் இடம் பெறும் போது, இயல்பாகவே அவை சமஷ்டி நீதி மன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வந்து விடும் என்பதை அவருக்கு உறுதி கூறுகிறேன்.

*திரு. ஐயகர் :* ''அரசியல் சட்ட ரீதியில்'' என்னும் சொல்லில் இது அடங்கும்.

★ ★ ★ ★ ★

**தலைவர் :* இனி 62 பத்திக்கு வருவோம்.

*டாக்டர் அம்பேத்கர் :* இந்த நீதிமன்றம் டில்லியில் அமைந்திருக்க வேண்டுமா என்பது குறித்து ஒருமித்தக் கருத்து நிலவுவதாக நான் நினைக்கவில்லை. ஏதேனும் ஒரு குழு அமைத்து இந்தப் பிரச்சினையை ஆராயும் பொறுப்பை அதனிடம் விட்டு விடலாம் என்று நினைக்கிறேன்.

*திரு. ஐயகர் :* இந்த நீதிமன்றம் டில்லியில் அல்லாமல் வேறு எங்கேயாவது அமைந்திருக்க வேண்டும் என்று யோசனை கூறுகிறேன். ஆண்டு முழுவதும் நீதிமன்றம் பணியாற்றும் வகையில் பருவ நிலை சாதகமாக இருக்கக் கூடிய ஓரிடத்தில் நீதிமன்றத்தை நிறுவலாம்.

திரு. ஜாஃபருல்லா கான்: இது தொடர்பாக பல்வேறு வட்டாரங்களிலிருந்தும் எத்தனையோ விதமான யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால் டில்லியில் இந்த நீதிமன்றத்தை அமைப்பதற்கு இருக்கும் அமோக ஆதரவைப் போல் வேறு எந்த ஓர் இடத்துக்கும் ஆதர்வு இல்லை என்றே கருதுகிறேன்.

*தலைவர் :* அடுத்து 63, 64 பத்திகளைப் பற்றி ஆராய்வோம்.

## நாற்பத்தாறாவது அமர்வு—நவம்பர் 16, 1931

### எதிர்கால நடைமுறைப் பற்றி விவாதம்

***டாக்டர் அம்பேத்கர் :* ராணுவ அமைச்சருக்கும் தலைமைப்

* மேற்படி, பக்கம் 922.

** மேற்படி, பக். 979.

படைத்தளபதிக்கும் இடையே எத்தகைய உறவு நிலவ வேண்டும் என்பது குறித்து சர் தேஜ் பகதூர் சாப்ரூ என்ன கருத்துக் கொண் டுள்ளார் என்பதை அறிய விரும்புகிறேன். தலைமைத் தளபதி அமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழும் கண்காணிப்பின் கீழும் உள்ள ஒரு வெறும் துறைத் தலைவராக மட்டுமே இருப்பாரா? ராணுவ அமைச்சர் தலையிட உரிமையில்லாத சில குறிப்பிட்ட அதிகாரங்களை அவருக்கு நீங்கள் வழங்குவீர்களா?

*சர் தேஜ் பகதூர் சாப்ரூ :* இது குறித்த விவரங்களில் ஈடுபட நான் விரும்பவில்லை. எனினும் ராணுவ அமைச்சர் கொள்கை, நிதி போன்ற பொது விஷயங்களைக் கையாள வேண்டும், மற்ற படி ராணுவம் தொடர்பான தொழில்நுட்ப அல்லது நிர்வாக விஷயங்களில் அவருக்கு எத்தகைய அதிகாரங்களும் இருக்கக் கூடாது என்று கருதுகிறேன். அப்படியே இத்தகைய அதிகாரங்கள் அவருக்கு இருந்தாலும், அவற்றை அவர் பயன்படுத்தாதிருப்பதே விவேகம் என்று நினைக்கிறேன். இந்த விஷயத்தில் எனக்கு நேரடி அனுபவம் எதுவுமில்லை. ராணுவம் சம்பந்தமாக இங்கிலாந்தி லுள்ள நிலைமை என்ன என்பதை விளக்கிக் கூறுமாறு என் னுடைய பிரிட்டிஷ் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ராணு வத்தின் உள்ள கட்டுப்பாடு குறித்த விஷயங்களில் தலையிட யுத்த அமைச்சருக்கு அதிகாரமில்லை, கொள்கை சம்பந்தப்பட்ட மிக முக்கியமானப் பிரச்சினைகளைத்தான் அவர் கையாள வேண்டும் என்று நினைக்கிறேன். ராணுவ வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தை, கேம்பிரிட்ஜ் கோமகன் தலைமையில் ராணுவம் இருந்த காலகட்டத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது.

# 10

# சிறுபான்மையோர் குழுவில்

## ஏழாம் அமர்வு—செப்டம்பர் 28, 1931

***தலைவர்:** தங்கள் பிரதிநிதிகளை இங்கு அனுப்பியுள்ள சிறுபான்மை வகுப்பாரும் உள்ளனர். நாம் இந்தக் கூட்டத்தை ஒத்தி வைப்பதானால், தங்கள் கருத்துக்களை எடுத்துரைப்பதற்கு அவர்கள் தயாராக இருப்பார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். மற்றப் பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த ஒத்தி வைப்புக் காலத்தைத் தாங்கள் சொல்ல வேண்டியதைத் தயாரித்துக் கொள்வதற்கும் அவற்றைப் பின்னர் என்னிடம் கொடுப்பதற்கும் விவாதத்தில் பங்கு பெறுபவர்களின் பெயர் பட்டியலை எனக்கு அளிப்பதற்கும் பயன்படுத்திக் கொள்வார்களானால் ஒத்திவைப்பது நல்லது. இன்று காலைவரை எவரும் தங்கள் பெயரை என்னிடம் தரவில்லை. நீங்கள் விரும்பினால் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களில் முடிக்கின்ற வகையில் இந்த மாநாட்டினை நான் நடத்துவேன். இந்த மாதிரி நடத்த வேண்டும் என்று நான் முடிவெடுத்துள்ளவாறு இந்தக் கூட்டம் அமைந்துவிடக் கூடாது. விவாதங்களை நட்புணர்வுடனும், பயனுள்ள வகையிலும் நடப்பதற்குரியவாறு உதவுவதற்கு யார் பேசப் போகிறார்கள், என்னென்ன கருத்துக்களை எடுத்துரைக்க இருக்கிறார்கள் என்பதை நான் முன்கூட்டியே தெரிந்து கொண்டால் மிக உதவக்கூடிய தக்க நேரத்தில் அவர்களை நான் பேச அழைக்க முடியும். இது பேசுவதைத் தடுப்பதற்கு ஓர் உபாயம் என்று கருதலாகாது. ஆனால் நடக்கின்ற விவாதம் உயர்ந்த அளவு பயன்தரக் கூடிய வகையில் நடைபெற வேண்டும் என்பதற்கே இந்த யோசனை. இப்போது கூட்டத்தை ஒத்திவைத்தீர்களானால், இந்த இடைவெளிக் காலத்தில் சொல்ல வந்ததை மட்டும் எடுத்துரைப்பதாக, சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாக அமைந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்று என்னிடம் நேரில் வேண்டுகிறவர்களும் இருக்கிறார்கள் என்பதை மறவாதீர்கள். எனவே எனக்கு உதவ வேண்டுகின்றேன். இந்த உடன்பாட்டு உணர்வோடும் பலர் வேண்டுவதை ஏற்றும் இந்தக் கூட்டத்தைத் தள்ளிவைக்க விரும்புகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* இந்தக் கூட்டத்தை ஒத்தி வைப்பதற்கு முன்னதாக ஒன்று கூற விரும்புகின்றேன். இத்தகைய சமரசப்

---

* கூட்டாட்சி அமைப்புக்குழு மற்றும் சிறுபான்மையோர் குழுவின் நடவடிக்கைகள், தொகுதி 1, பக். 1337-38.

பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது மற்ற சிறு பான்மை வகுப்பார்தம் வழக்கிற்கான விவாதங்களைத் தயார் செய்ய வேண்டும் என்று தாங்கள் ஆலோசனை கூறுகின்ற நேரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை எங்கள் வழக்கினை ஏற்கனவே சிறுபான்மையினர் துணைக் குழுவிடம் கடந்த முறை தந்திருக்கிறோம் எனக் கூற விரும்புகிறேன்.

இப்போது நான் செய்யக்கூடியதெல்லாம் பல்வேறு சட்ட மன்றங்களில் எங்களுக்குரிய பிரதிநிதித்துவம் எவ்வளவு என்பதைக் குறித்து ஒரு சிறு அறிக்கையை இந்தக் குழுவின் முன் வைக்க வேண்டியது தான். அதற்கு மேல் நான் செய்ய வேண்டியது எதுவுமில்லை என்று நினைக்கிறேன். எனினும் தொடக்கத்திலேயே பொதுவாக ஒன்றினைக் குறிப்பிட விரும்புகின்றேன். வகுப்புரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடக்க இருக்கின்றன என்பதைக் கேள்வியுற்று நான் பெரிதும் மகிழ்கிறேன். ஆயினும், அதே நேரத்தில் எங்கள் நிலையை ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்திட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை தொடர்பாக யாருக்கும் எவ்வித ஐயமும் இருக்கத் தேவையில்லை என்பது என் விருப்பம். சமரசப் பேச்சு வார்த்தையை மேற்கொள்பவர்கள் தாங்கள் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டு நியமிக்கப் பட்டவர்கள் அல்லர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். திரு. காந்தி அவர்களின் அல்லது காங்கிரஸ்காரர்களின் பிரதிநிதித்துவத் தன்மை எவ்வாறிருந்த போதிலும் அவர்கள் எங்களைக் கட்டுப்படுத்தும் நிலையில் நிச்சயமாக இல்லவே இல்லை. இதனை மிக ஆணித்தரமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் கூறுவேன். பல்வேறு சிறுபான்மையினர் குழுவின் முன் வைத்துள்ள கோரிக்கைகள், மற்ற சிறு பான்மையோரின் உரிமைக் கோரிக்கைகளை ஒத்திருக்கிறதா இல்லையா என்பதைக் கருதாமல் முன்வைக்கப்பட்டவை. இதன் விளைவு இதர சிறுபான்மை வகுப்பாரின் கோரிக்கை என்ன என்பதை கவனிக்காமல் ஒரு பக்கம் ஒரு சிறுபான்மை வகுப் பாருக்கும் மற்றொரு பக்கம் காங்கிரஸ் அல்லது வேறொரு கூட்டத்தாருக்குமிடையே செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் என்னைப் பொறுத்தவரை வெற்றிபெற வாய்ப்பில்லாதது என்பேன். இதனை நான் தெள்ளத் தெளிவாகக் கூறிவிட விரும்புகின்றேன். ஏதேனும் ஒரு வகுப்பார் கூடுதல் சலுகை (Weightage) பெற வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி எனக்குச் சச்சரவு எதுவுமில்லை. அத்தகைய கூடுதல் சலுகை கேட்பவர்களோ அல்லது அதிகப்படிச் சலுகையைக் கொடுக்க விரும்புபவர்களோ அதனை என்னுடைய பங்கிலிருந்து கொடுக்கக் கூடாது; கொடுக்கவும் முடியாது. இதனை மிகத் தெளிவாகக் கூறிவிட விரும்புகிறேன்.

*சர் ஹென்றி கித்னே :* நான் ஒரு சில சொற்கள் சொல்ல விரும்புகிறேன். என் நண்பர் டாக்டர் அம்பேத்கர் சொன்ன வற்றை நான் முழுமனதோடு ஆதரிக்கின்றேன். ஒரு சிறு வகுப் பாரின் பிரதிநிதியாக வந்துள்ள எனக்கு இந்த உடன்படிக்கை களில் எனக்குள்ள இடம் என்ன என்று தெரியவில்லை. ஒரு பக்கம் காங்கிரசும் மற்றொரு பக்கம் முகம்மதியர்களும் உடன் பாடொன்றினைச் செய்து கொள்வார்களானால் மற்ற சிறு பான்மை வகுப்பாருக்கு அதில் தலையிடுவதற்கு என்ன இருக் கிறது? எங்களுக்குள் இருக்கின்ற வேற்றுமைகளை நாங்களே தீர்த்துக் கொண்டு அதைத் தனித்தனியாக முன் வைக்க வேண்டும் என்று சொல்லுங்கள். இதை நான் ஏற்கனவே செய்திருக்கிறேன். நான் பிரதிநிதியாக வந்துள்ள ஒரு சிறிய வகுப்பாரின் சார்பில் சென்ற மாநாட்டிலேயே குறைந்த அளவு எண்ணிக்கைகளைக் கொண்ட கோரிக்கையை அளித்திருக்கிறேன். இந்தியாவின் புதிய தொரு நிலப்படத்தை உருவாக்குவதில் எல்லாச் சிறுபான்மை உறுப்பினருக்கும் பங்கிருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடக் கூற விரும்புகின்றேன். ஏற்படப் போகின்ற உடன்பாடு ஓர் இந்து—முஸ்லீம் உடன்பாடாக மட்டும் இருக்குமானால் அப் போது நமக்கு எங்கே அத்தகைய வாய்ப்புக்கு இடமிருக்கிறது என்று எனக்குத் தோன்றவில்லை.

*தலைவர் :* மனவேறுபாட்டிற்கு இடமளிக்காதீர்கள். இறுதி உடன்பாடு இந்த அரசாங்கத்தின் முன்புதான் ஏற்பட வேண்டும். இதற்கு முன்வரை ஒருவரோடொருவர் கருத்து மோதல் கொண்டி ருந்த சிறுபான்மை வகுப்பினர் அல்லது வகுப்பார் தங்களுக்கு இடையே நிலவும் சங்கடங்களைப் போக்கிக் கொள்வதற்கு ஒத்தி வைக்கும் இந்த இடைவெளிக் காலத்தில் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பது ஒரு யோசனைதான். ஒரு பொதுவான உடன் பாட்டிற்கு வருவதற்கு இது ஒரு முக்கியமான, அவசியமான முதற்படி; எனினும் அந்த உடன்பாடு பொதுவானதாகத்தான் இருக்கப் போகிறது.

*டாக்டர் அம்பேத்கர் :* என்னுடைய நிலையை நான் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன்.

*தலைவர் :* டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நிலை தெளி வாகவே உள்ளது. அவர் தமக்கே உரிய அற்புதமான முறையில் இதில் ஐயத்திற்கு இடமில்லாமல் தெளிவாக்கியுள்ளார். இந்தக் குழு மீண்டும் தன் ஆலோசனையைத் தொடரும் போது அது எடுத்துக் கொள்ளப்படும். ஏதாவது இரண்டு அல்லது மூன்று கட்சிகளுக்கிடையேயான உடன்பாட்டிற்காக அல்லாமல் ஒரு முழுமையான, பொதுவான ஒப்பந்தத்திற்காக நாமனைவரும் ஒருமுகமாக ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணம் வரவேண்டும் என விரும்புகிறேன்.

★ ★ ★ ★ ★

*டாக்டர் அம்பேத்கர்: கூட்ட ஒத்தி வைப்புக்கான கால இடை வேளையில் தனிப்பட்ட வகையில் அமர்ந்து இந்தப் பிரச்சினை குறித்துக் கூடிப்பேசுவதற்காகச் சிறுபான்மை வகுப்பாரின் பிரதி நிதிகளும் காங்கிரசின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு சிறு குழு வினை நீங்கள் நியமிக்க முடியுமா என யோசனை கூற விரும்பு கிறேன்.

தலைவர்: இந்த யோசனையை நானே கூற இருந்தேன். அத்தகைய குழுவினை நியமிக்குமாறு என்னைக் கேட்க வேண் டாம்; நீங்களே செய்யுங்கள். நீங்கள் அனைவரும் ஒன்று கூடுமாறு நான் அழைப்பு விடுத்திருக்கின்றேன். உங்களுக்குள்ளாகவே ஒரு தனிப்பட்டக் கூட்டத்தினைக் கூட்டி இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச உங்களால் முடியாதா? பிறகு நீங்கள் பேசும்போது மற்றவர்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்பது பற்றி ஒரு தெளிவுடன் பேச முடியும் அல்லவா? இப்படியே நாம் செய்ய லாமா?

டாக்டர் அம்பேத்கர்: தாங்கள் விரும்பியவாறே செய்யலாம்.

தலைவர்: அதுவே பெரிதும் நலம் பயப்பதாகும்.

## எட்டாவது அமர்வு—1 அக்டோபர் 1931

*திரு. காந்தி: ''பிரதமர் அவர்களே, கடந்த இரவு மேதகு ஆகாகான் மற்றும் இதர முஸ்லீம் நண்பர்களுடன் கலந்தாலோ சித்த பிறகு, ஒரு வார காலத்திற்குச் சிறுபான்மையினர் குழுக் கூட்டம் ஒத்தி வைக்கப்படுமாறு கோரினால், எந்த நோக்கத்திற் காக நாம் இங்கே கூடுகிறோமோ அந்த நோக்கம் ஈடேறும் என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். நான் என்னுடைய மற்ற நண்பர்களுடன் கலந்தாலோசிக்க வாய்ப்பில்லாமல் போயிற்று. ஆனால் அவர்கள் எனது பிரேரணைகளை ஏற்றுக் கொள்வார் கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. எனது முஸ்லீம் நண்பர்களு டன் ஆர்வமுடன் கலந்து ஆலோசித்து வந்திருக்கிறேன். பல்வேறு வகுப்பு மற்றும் குழுவைச் சார்ந்த மற்ற நண்பர்களையும் நேற்று நண்பகலின் போது சந்தித்தேன். எனினும் பேச்சுக்களில் முன் னேற்றம் காணமுடியவில்லை. கருத்துக்களைப் பரிமாறிக் கொள் வதற்குத் தமக்குள்ள காலம் போதாது என்று அவர்கள் கருது கிறார்கள். என்னைப் பொறுத்த வரை இந்த ஒருவாரகால ஒத்தி வைப்புக்குப்பின் மீண்டும் ஒத்தி வைப்புக்குக் கோர மாட்டேன். ஆனால் இந்த ஒரு வார காலத்தில் நான் மேற்கொண்ட முயற்சி களின் விளைவு என்ன ஆனது என்பதை இந்தக் குழுவிற்கு அறிவிப்பேன்.

---

* கூட்டாட்சி அமைப்புக்குழு மற்றும் சிறுபான்மையோர் குழுவின் நடவடிக்கைகள், தொகுதி 1, ப. 1340

மேதகு ஆகாகான் அவர்களுடனும் மற்ற நண்பர்களுடனும் நான் தனிமையில் கலந்தாலோசித்த போது, பல்வேறு வகைப் பட்ட தரப்பாரையும் கண்டு பேசி இறுதி முடிவுக்கு வருவதற்கான வழிவகைகளைக் காணும் பெரும்பொறுப்பினை எனக்கு அளித் திருக்கிறார்கள். இதில் இரகசியம் எதுவுமில்லை. இந்த யோசனை பிரதம மந்திரி அவர்களுக்கும் இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர் களுக்கும் மேலானது எனத் தோன்றுமானால் நான் மகிழ்ச்சி அடைவேன். மேதகு ஆகாகான் அவர்கள் என்னுடைய இந்த தீர்மானத்தை வழிமொழிவார்கள் என அறிவேன். இந்த வார இறுதிக்குள்ளாக ஒருவாறு உடன்பாடு ஏற்பட்டு அறிக்கை அளிக்க முடியுமென நம்புகின்றேன்.

இத்தகைய நம்பிக்கையை நான் தெரிவிக்கும் அதே வேளை யில், நடக்கப் போவதை நான் அறிந்திருப்பதாகவோ, என் நம்பிக்கையை அதன் அடிப்படையில் வளர்த்துக் கொண்டிருப்ப தாகவோ ஒரு எண்ணத்தை உருவாக்க விரும்பவில்லை. எனினும் நான் நல்லதே விளையும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உள்ளவன். என் வாழ்நாளில் பலநேரங்களில் புலர் காலைப் பொழுது இருளாகத் தோன்றிய போதிலும், திடீரெனச் சில மாற்றங்கள் ஏற்பட்டதுண்டு. இதுவே என் நம்பிக்கைக்குக் கார ணம். இது எவ்வாறு இருந்தபோதிலும், மனிதரின் முயற்சிகள் எப்படியும் பயனளிக்கும் என்னும் நம்பிக்கையில் இயன்றதைச் செய்யலாம். இந்தக் குழுவின் உறுப்பினர்கள் பலரும் ஒரு உடன் பாட்டிற்கு வருவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

*மேதகு ஆகாகான்:* இந்தத் திட்டத்தினை நான் வழிமொழி வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*சர்தார் உஜ்ஜல் சிங்:* இந்தத் திட்டத்திற்கு என் முழு மனதான ஆதரவைத் தெரிவிக்கின்றேன். இந்த முறையின் வாயிலாக இரு தரப்பிலும் நல்லெண்ணத்தைக் கொண்டு ஓர் உடன்பாட்டிற்கு வருவோம் என அனைவரும் எதிர்பார்ப்பதையே நானும் எதிர் பார்க்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* இக்குழுவினை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகளுக்கு எவ்விதமான சிரமத்தையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. மகாத்மா காந்தி அவர்கள் கூறிய விதத்தில் ஒரு தீர்வு காணப்படுமாயின் அத்தகைய பிரேரணைக்கு நான் எவ்வித ஆட்சேபமும் செய்ய மாட்டேன்.

ஆனால் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதி என்கிற முறையில் ஒரு சிரமத்தை நான் எதிர்நோக்குகிறேன். சிறுபான்மை யினர் குழுக்கூட்ட ஒத்திவைப்புக் காலத்தில் இப்பிரச்சினையைப் பரிசீலிக்க மகாத்மா காந்தி அவர்கள் எத்தகைய குழுவினை நிய மிக்க உத்தேசித்துள்ளார் என்பதை நான் அறியேன். ஆனாலும்,

ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கும் இக்குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்று எண்ணுகிறேன்.

*திரு. காந்தி:* சந்தேகத்திற்கிடமில்லாமல்...

*டாக்டர் அம்பேத்கர்:* உங்களுக்கு என்து நன்றி... ஆனால் இன்று நான் இருக்கும் நிலையில் உத்தேசிக்கப்பட்டுள்ள குழுவில் சேர்ந்து பணியாற்றுவது எனக்கோ என் உடன் தோழருக்கோ பலனளிக்குமா என்று எனக்குத் தெரியவில்லை. இந்தக் காரணத் திற்காகத்தான், மகாத்மா காந்தி, கூட்டமைப்புக் குழுவில் (Federal Structure Committee) முதல் நாளன்று பேசியபோது இந்திய தேசிய காங்கிரசின் பிரதிநிதி என்கிற முறையில் முகம்மதியர், சீக்கியர் ஆகியோரைத் தவிர வேறெந்த வகுப்பாருக்கும் அரசியல் அங்கீ காரம் அளிக்கத் தாம் தயாராக இல்லை என்று கூறினார்.

ஆங்கிலோ-இந்தியர்களையும், ஒடுக்கப்பட்ட வகுப்பினரையும், இந்தியக் கிறிஸ்தவர்களையும் அங்கீகரிக்க அவர் தயாராக இல்லை. ஒருவார காலத்திற்கு முன்பு மகாத்மா காந்தி அவர்களை நான் மகிழ்ச்சியோடு சந்தித்து ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் பிரச்சினை குறித்து விவாதித்தபோதும், மற்ற சிறுபான்மையினரின் அங்கத் தினர்கள் என்ற முறையில் நேற்று அவர்தம் அலுவலகத்தில் பார்த்து அவரிடம் பேசிடும் வாய்ப்பு கிடைத்தபோதும், கூட் டமைப்புக் குழுக் கூட்டத்தில் தாம் கொண்டிருந்த போக்கு திட மானதும் நன்கு பரிசீலிக்கப்பட்டதும் ஆகும் என்று அவர் தெளி வாகக் கூறிவிட்டார். இதனைச் சொல்வதால் அவையின் மரபிற்கு தீங்கிழைப்பதாக நான் நினைக்கவில்லை. வருங்கால இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அரசியல் அங்கீகாரம் பெற உரிமையுள்ள ஓரினமாக அங்கீகரிக்கப்படுவார் கள் என்று தொடக்கத்திலேயே நான் அறிந்து கொண்டா லொழிய, இது தொடர்பாக மகாத்மா காந்தி அவ்ர்கள் அமைக்க உத்தேசித்திருக்கும் குழுவில் நான் சேர்ந்து பணியாற்றுவது ஏதே னும் உபயோகமானதா என்று எனக்குத் தெரியவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால், அரசியல் அங்கீ காரம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று சிறுபான்மையினர் துணைக்குழுவில் கடந்த ஆண்டு பரிந்துரை செய்யப்பட்ட அனைத்து வகுப்பினரும் வருங்கால இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்கிற விதத்தில் இக்குழு வின் பணி தொடங்கும் என்ற உத்திரவாதத்தை நான் பெற்றா லொழிய, கூட்டம் ஒத்தி வைக்கப்படுவதற்கான கருத்தினை நான் முழுமனதுடன் ஆதரிக்க முடியுமென்றோ அல்லது நியமனம் செய்யப்படவுள்ள குழுவில் முழுமனதுடன் ஒத்துழைக்க முடியு மென்றோ எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றிதான் நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*சர் ஹென்றி கித்னே (ஆங்கிலோ-இந்தியர்):* என்னைச் சார்ந்த சிறுபான்மை வகுப்பாரின் பிரதிநிதி என்ற வகையில்

வில்லை. முன்பு நீங்கள் விடுத்த வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் எங்களுடைய தன்மானத்தைக் காப்பதற்கும், பொறுப்புணர்வுடன் எங்கள் குடும்ப விவகாரத்தைப் பிறருடைய தலையீடு எதுவுமில்லாமல் தீர்த்துக் கொள்வதற்கும் அதற்குச் சாதகமான ஒத்த கருத்து உருவானால் அதைத் தங்களுக்குத் தெரிவிப்பதற்கும் எப்படியும் ஒரு ஒருங்கிணைந்த முடிவுக்கு வருவதற்காகவே மகாத்மா காந்தி இந்த ஒத்திவைப்புக்காகக் கேட்டிருக்கிறார் என்று கருதுகின்றேன். எந்த ஒரு சிறுபான்மை வகுப்பாரும் அவர்கள் எவ்வளவு சிறியதொரு தொகையினராக இருந்த போதிலும் எந்தவித அச்சமும் கொள்ளவேண்டியதில்லை என எண்ணுகின்றேன். இந்திய நாட்டிலுள்ள சிறுபான்மையினர், பெரும்பான்மையோரைப் போலவே நாட்டின் அங்கமாக இருப்பவராவர். பணச் செலவு இல்லாமல், படை எதுவுமில்லாமல் ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கி இருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொள்ளும் ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு பெரிய அரசியல் தலைவர் எனக்குரைத்த அறிவுரையை மேற்கொண்டு நடக்க நான் உறுதி பூண்டுள்ளேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அவர், ''அம்மையீர், உங்கள் சிறுபான்மை மக்களை மகிழ்ச்சியுடனிருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் நாட்டுச் சிறுபான்மையோருக்கு இந்தப் பாதுகாப்பு உணர்வை அளிக்காமல் ஒரு நாட்டை நீங்கள் உருவாக்க முடியாது'' என்று கூறினார். எனவே நம் நாட்டுச் சிறுபான்மையோருக்கு அத்தகையதொரு பாதுகாப்பு உணர்வை அளிப்பதற்கும் பெரும்பான்மையோரைப் போலவே அவர்களும் இந்திய நாட்டின் பிரிக்க முடியாத அங்கமாக இருப்பவர்கள் என்று உணரவைப்பதற்கும் மகாத்மா காந்தி அவர்களின் வார்த்தைகளின் மூலமாகவும், சிறுபான்மை வகுப்பாரைச் சேர்ந்த மேதகு ஆகாகான் அவர்களின் சொற்கள் மூலமாகவும் நம்முடைய பிரச்சினைகளுக்குச் சம்பந்தமில்லாதவர்கள் முன் நமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டிய குடும்பத்தின் சிறுசிறு பூசல்களை வைக்க வேண்டாமென்றும், நம்முடைய குடும்பத்திற்குள் நிலவும் வேற்றுமைகளை அந்நியர்கள் அறியாத வகையில் தன்மான உணர்வோடு, பெருந்தன்மையும் சமத்துவமும், துணிவும் மிக்க உணர்வோடு நமக்குள் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

பிரதமர் அவர்களே, என்னுடைய வேண்டுகோள் இதுதான். இங்குள்ள சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் வகுப்பாரின் பிரதிநிதிகள் அனைவரும் இதனை ஏற்பார்கள் என நம்புகின்றேன்.

*டாக்டர் அம்பேத்கர்* : என்னுடைய நிலையை மேலும் தெளிவாக விளக்க வேண்டி உள்ளேன். நான்சொன்னது குறித்து ஒரு வகையான தவறான கருத்து நிலவியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. கூட்டம் ஒத்திவைப்பதற்கு நான் ஆட்சேபிக்கிறேன் என்று

அர்த்தமல்ல; இப் பிரச்சினையைப் பரிசீலிப்பதற்காக நியமிக்கப் படவுள்ள குழுவில் நான் சேர்ந்து பணியாற்ற ஆட்சேபிக்கிறேன் என்றும் அர்த்தமாகாது. இக்குழுவில் பங்கேற்கச் செல்லுமுன் நான் அறிந்து கொள்ள விரும்புவது யாதெனில், இக்குழுவில் சேர்ந்து பணியாற்றும் உரிமையை எனக்கு அவர்கள் அளிப்பார் களாயின், 'இந்தக் குழு பரிசீலிக்கப்போவது என்ன?' என்பது தான். முகம்மதியர்கள் — இந்துக்களை எதிர்நோக்கியுள்ள பிரச் சினையை மட்டும் பரிசீலிக்கப்போகிறதா? அல்லது கிறித்தவர்கள், ஆங்கிலோ — இந்தியர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினையையும் சேர்த்துப் பரிசீலிக்கப்போ கிறதா? இக்குழு இந்துக்கள் — முஸ்லிம்கள், இந்துக்கள் — சீக்கியர் கள் ஆகியோரின் பிரச்சினையில் மட்டும் அக்கறை கொள்ளாது தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஆங்கிலோ — இந்தியர்கள் மற்றும் கிறித்தவர்கள் ஆகியோரைப் பற்றியும் ஆராயும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் என்பதனைக் குழு செயல்படத் துவங்கும் முன்னரே நாம் தெளிவாகப் புரிந்து கொள்வோமானால் கூட்ட ஒத்திவைப்புக்கான தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு எவ்வித ஆட்சேபமுமின்றி மனதார நான் சம்மதிக்கிறேன். இந்த இடை வேளை இந்து-முஸ்லீம் பிரச்சினைக்கு அல்லது இந்து-சீக்கிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக உபயோகப்படுத்தப்படு மாயின், சில சிறுபான்மையினத்தினர் பற்றிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மட்டும் முறைப்படி ஏற்படுத்தப்படாத ஒரு குழுவிடம் அப்பொறுப்பினை விடுவதைக் காட்டிலும் சிறுபான்மை யினர் குழுவே அப்பிரச்சினையை வலிய ஏற்றுத் தீர்வுகாண முன்வர வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*திரு. காந்தி:* பிரதமர் அவர்களே, மற்றும் நண்பர்களே, நாமாகவே நமக்குமுன் வைத்திருக்கும் பணியின் எல்லை குறித்து பலவிதமான தவறான கருத்து நிலவுவதை நான் காண்கிறேன். டாக்டர் அம்பேத்கர், கர்னல் கித்னே, மற்ற நண்பர்கள் என்ன நடக்கப்போகிறதோ என்று தேவையில்லாமல் அஞ்சி நடுங்கு கிறார்கள் என்று நான் பயப்படுகிறேன். இந்தியாவில் உள்ள எந்தவொரு தனிநலனுக்கும் அல்லது வகுப்பினருக்கும் அல்லது தனிநபருக்கும் அரசியல் அந்தஸ்தினை மறுத்திட நான் யார்? ஒரு தேசிய நலனைப் பலியாக்கிடும் குற்றத்தை நான் புரிவேனாகில், காங்கிரசின் பிரதிநிதி என்கிற முறையில் என்மீது காங்கிரஸ் கொண்டுள்ள நம்பிக்கைக்கு யோக்கியதையற்றவனாகி விடுவேன். இவ்விஷயங்கள் மீது என்னுடைய சொந்தக் கருத்துக்களைச் சந்தேகத்திற்கிடமின்றி நான் வெளியிட்டிருக்கிறேன். அக்கருத்துக் களை நான் கொண்டிருப்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனாலும் ஒவ்வொரு தனிப்பட்ட பிரிவினருக்கும் பாதுகாப்பு உத்திரவாதம் அளிப்பதற்கு முயலும்போதுதான் பல வழிகள் உண்டு. அதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவது ஒன்று கூடி முயலும்போதுதான் சாத்தியமாகும். முறைசாரா இம்மாநாட்டின்

உண்மையினை கொள்ள இயலாத குறையும் உள்ளது. நாம் விரும்புவதைப் பெறப்போகிறோம் என்பதை நிச்சயமாக நாம் அறிந்தால், தீமைதரும் சச்சரவில் அதனைத் தூக்கி எறிவதற்கு முன்னதாக ஐம்பது முறை நாம் தயங்கிட வேண்டும். வகுப்புவாதச் சச்சரவுக்கு ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு முடிவைக் காண்பது தற்போதைய பிரதிநிதிக் குழுவின் திறமையைச் சார்ந்துள்ளது என நமக்குத் தெரிவிக்கப்பட்டால் அன்னியர் ஆதிக்கம் காரணமாக நமது கருத்து வேறுபாடுகள் கடினமாகாவிட்டால், அவை ஏற்படாவிட்டால், அத்தீர்வு சுயராஜிய அரசியலமைப்பின் கிரீடமாக இருக்கும்; அஸ்திரமாக அல்ல. வகுப்புப் பிரச்சினை வித்தியாசங்கள் என்னும் பனிக்கட்டிச் சுதந்திர சூரியனின் இதமான ஒளியால் கரைந்து விடும் என்பதில் எனக்குக் கடுகளவும் சந்தேகமில்லை.

எனவே, காலவரையின்றிச் சிறுபான்மையினர் குழு ஒத்தி வைக்கப்பட வேண்டுமென்றும், அரசியலமைப்பு அடிப்படைக் கொள்கைகள் முடிந்தவரை விரைவிலேயே செதுக்கி உருவாக்கப் பட வேண்டும் என்றும் நான் ஆலோசனை கூற முன்வருகிறேன். அதேநேரத்தில், வகுப்புவாதப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு காணும் சம்பிரதாயப்படியல்லாத பணி தொடரும்; தொடர வேண்டும்; அரசியலமைப்பினை உருவாக்கும் பணி தொடர்ந்து முன்னேறுவதற்கு வகுப்புவாதப் பிரச்சினை இடையூறு செய்யக் கூடாது அல்லது தடையாக இருக்க அனுமதிக்கக் கூடாது; இப்பிரச்சினையிலிருந்து கவனம் திருப்பப்பட வேண்டும்; அரசியலமைப்பின் முக்கிய அம்சங்கள் மீது பெரிதும் கவனம் செலுத்த வேண்டும்.

★ ★ ★ ★ ★

இறுதியாக, இவ்விவாதங்களில் நான் கலந்து கொள்வதற்கு ஒரே காரணம் நான் இந்திய தேசீயக் காங்கிரசின் பிரதிநிதியாக இருப்பதன் நிமித்தம்தான், அதனுடைய (காங்கிரசின்) நிலைமையைத் தெளிவாக முன்வைக்க வேண்டும், எதிரிடையான நிலைகள், குறிப்பாக இங்கிலாந்தில் காணப்பட்டாலும், காங்கிரசு தான் நாடு முழுவதின் பிரதிநிதி என உரிமை கொண்டாடுகிறது; நிச்சயமாக ஊமைகளாக உள்ள இலட்சக்கணக்கான மக்களின் பிரதிநிதியென்று உரிமையுடன் கூறுகிறது; இத்தகைய ஊமைகளாக உள்ள மக்களில் தாழ்த்தப்பட்டிருப்பதைக் காட்டிலும், அடக்கப்பட்டவர்களாக உள்ள கணக்கிலடங்காத தீண்டத்தகாத மக்கள் . உள்ளனர்; மற்றும் ஒருவகையில் உதாசீனப்படுத்தப் பட்டுள்ள, அதிர்ஷ்டமற்ற இன மக்களும் பின்தங்கி உள்ளனர்.

★ ★ ★ ★ ★

சட்டமன்றத்தில் தீண்டாதவர்களுக்கு எவ்விதமான பிரதிநிதித்துவமும் தருவதை நான் எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

என்று எனக்குத் தெரிகிறது. இது உண்மையைப் பரிகாசம் செய் வதாகும். நான் சொல்லியிருப்பது., நான் மீண்டும் சொல்லுவது என்னவெனில், அவர்களுக்கு அளிக்கப்படும் தனி பிரதிநிதித் துவத்தை எதிர்ப்பதுதான். இந்தத் தனி பிரதிநிதித்துவம் அவர் களுக்கு எவ்வித நன்மையும் அளிக்காது; அதிகமாகத் தீங்கு தான் இழைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்; வயது வந்தோர் வாக்குரிமை வழங்கும் கருத்து காங்கிரசோடு இணைக்கப்பட்ட தாகும். எனவே, இலட்சக்கணக்கான அம்மக்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவர். தீண்டாமை விரைவாக மறைந்துவரும் போது, இத்தகைய (தாழ்த்தப்பட்டோர்) வாக்காளர்களின் வேட் பாளர்கள் பகிஷ்கரிக்கப்படுவார்கள் என்று என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுவதைக் காட்டிலும் அவர்களுக்குத் தேவை என்னவென்றால் சமூக, மதக் கொடுமையின் துன்புறுத்தலிருந்து பாதுகாப்பு அளிப் பதுதான். சட்டத்தைக் காட்டிலும் வல்லமை பெற்றதாகவுள்ள சமூக, மதக் கொடுமையின் துன்புறுத்தலிலிருந்து பாதுகாப்பு அளிப் பதுதான். சட்டத்தைக் காட்டிலும் வல்லமை பெற்றதாகவுள்ள சமூக வழக்கம் இம்மக்களை கீழ்நிலைக்குத் தள்ளியுள்ளது; அது குறித்துச் சிந்தனைத் திறனுள்ள ஒவ்வொரு இந்துவும் வெட்கப்பட வேண்டும்; அதற்காக பிராயசித்தம் செய்ய வேண்டும். என்வே, அனைத்தும் குற்றமாக்கப்படும் வகையில் ஒரு கடுமையான சட்டத் தைக் கொண்டுவர நான் விரும்புகிறேன். இந்துக்களின் மனசாட்சி தட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இதற்காக நாம் கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். நமது கடந்த காலத்தின் சின்னம்தான் தீண் டாமை என்று கூறும் வகையில்; தீண்டாமை ஒழிந்துவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

டாக்டர் அம்பேத்கர்: மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களே, சம்பிரதாயமல்லாத குழுவின் கூட்டம் கடந்த இரவு நடந்து முடிந்த போது ஒருவிதத் தோல்வியுணர்வுடன் பிரிந்து சென்றோம். அப்போது குறைந்தது ஒரு பொதுவான உடன்படிக்கையுடன் தான் கலைந்தோம்., அதாவது, இன்று இங்கு நாம் கூடும்போது, ஒருவரும் கோபத்தை உண்டுபண்ணும் வகையில் பேசக் கூடாது அல்லது எரிச்சலூட்டும் கருத்தினை எழுப்பக் கூடாது. இந்த உடன்பாட்டினைத் திரு. காந்தி அவர்கள் மீறிய குற்றத்திற்குள் ளாகி இருக்கிறார் என்பது வருந்தத்தக்கதாகும். மன்னிக்கவும். பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் வேண்டும். அவரைப் பொறுத்த வரை சம்பிரதாயமற்ற குழுவின் தோல்விக்கு என்ன காரணங் கள் என்பதைக் கூறி, திரு. காந்தி பேச ஆரம்பித்தார். ஒரு உடன்பாட்டிற்கு வராது, அக்குழு தோல்வியடைந்ததற்கான காரணங்கள் என்ன என்று எனக்குத் தெரியும்; ஆனால் இப் போது அவைகளை விவாதிக்க நான் உத்தேசிக்கவில்லை. சிறு பான்மையினர் குழு காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட வேண் டும் என்று அவர் கூறும் கருத்தைப் பற்றி மட்டும் பேசுவதற்குப்

பதிலாக, இந்த மேஜையைச் சுற்றி அமர்ந்திருக்கும் பல்வேறு வகுப்பினர்களின் பிரதிநிதிகளின் மீது சில அவதூறுகளை அள்ளிவீசியிருப்பது எனது மனதைத் துன்புறுத்துகிறது. இங்குள்ள பிரதிநிதிகள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும், அவர்கள் சம்பந்தப்பட்ட வகுப்பினரின் கருத்தினை அவர்கள் பிரதிபலிக்கவில்லை என்றும் அவர் கூறினார். அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர் என்ற குற்றச்சாட்டை நாம் மறுக்க முடியாது; ஆனால், என்னைப் பொறுத்தவரை, இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, இம்மாநாட்டிற்கு அனுப்பும் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால், எனக்கு எல்லா நேரத்திலும் இங்கு ஓர் இடம் உண்டு என்பது பற்றி எனக்குச் சிறிதளவுங்கூட சந்தேகமில்லை. எனவே, நான் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ இல்லையோ, எனது சமுதாயத்தின் கோரிக்கைகளின் பிரதிநிதியாக வந்துள்ளேன். இதுபற்றி எந்த மனிதருக்கும் தவறான எண்ணம் வேண்டாம். காங்கிரசு, தாழ்த்தப்பட்டவர்களுக்காகவே எப்போதும் உள்ளது என்றும், என்னையும் அல்லது என்னுடைய உடன் நண்பரையும் விட மிக அதிகமாகக் காங்கிரசு தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக உள்ளது என்றும் மகாத்மா அவர்கள் எப்போதும் பாத்தியதைக் கொண்டாடுகிறார். பொறுப்பற்றவர்கள் எப்போதும் கூறிக்கொண்டிருக்கும் தவறான பல உரிமைகளில் இதுவும் ஒன்று என்று மட்டும் நான் கூறுவேன். இத்தகைய உரிமைகள் கொண்டாடும் இந்த நபர்கள்தான் அவைகளை எப்போதும் தொடர்ந்து மறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் எப்போதும் போகாத ஒரு இடத்திலிருந்து வந்துள்ள தந்தி ஒன்று இங்கு என்னிடம் உள்ளது. நான் எப்போதும் பார்த்திராத ஒருவர் அனுப்பியுள்ளார். குமாயுன் மாவட்டம் என்ற இடத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் யூனியன் தலைவர் இதை அனுப்பியுள்ளார்; இந்த இடம் ஐக்கிய மாகாணங்களிலுள்ளது என்று நம்புகிறேன். இத்தந்தியில் பின்வரும் தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளது. ''இந்தியாவிலும், வெளியேயும் உள்ள காங்கிரசு இயக்கத்தில், தனக்கு நம்பிக்கை இல்லை என இக்கூட்டம் பிரகடனப்படுத்துகிறது; மற்றும் காங்கிரசு ஊழியர்களின் முறைகளை வன்மையாகக் கண்டிக்கிறது''.

மேலும் இந்தத் தந்தியை வாசிக்க விரும்பவில்லை. காங்கிரசில் தாழ்த்தப்பட்ட மக்களிடம் அனுதாபமுள்ளவர்கள் இருக்கலாம்; ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் காங்கிரசில் இல்லை என்பதை என்னால் சொல்ல முடியும். (மேலும், திரு. காந்தி தனது நிலையை ஆய்ந்து பார்த்தால் அவருக்கு உண்மை புரியும்). இக்கூற்றினை நிரூபிக்க நான் உத்தேசித்துள்ளேன். இந்தத் தகராறின் நுணுக்கங்களுக்குள் செல்ல நான் விரும்பவில்லை. திரு. காந்தி அவர்கள் சொன்ன முக்கிய விஷயம் இக்குழு, காலவரையின்றி ஒத்திவைக்கப்பட வேண்டும் என்பதே. இக்கூற்று பற்றிச் சர் முகமது சாஃபி

அவர்கள் கொண்டுள்ள மனப்பாங்கினை நான் முற்றிலும் ஏற்றுக் கொள்கிறேன். இக்கூற்றினை ஏற்றுக் கொள்பவர்களில் நானும் ஒருவன் அன்று. இரண்டு வேறு வழிகள் மட்டும் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அதாவது இப்பிரச்சினைக்கு ஒருவகை திருப்திகரமான முடிவு ஏற்படும்வரை சிறுபான்மைக் குழு தொடர்ந்து சமாளிக்க வேண்டும். இது சாத்தியமானால் அவ்வாறு செய்யலாம். அப்படிச் சாத்தியப்படாவிட்டால், பிரிட்டீஷ் அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்றாவது தரப்பின் சமரசத்தின் மூலம் இப்பிரச்சினைக்கு முடிவுகாண இவ்விஷயத்தை விட்டுவிட நாங்கள் சம்மதிக்க மாட்டோம். ஏனெனில், மூன்றாவது தரப்பின் தொடர்பு, பிரிட்டீஷ் அரசாங்கத்தின் பொறுப்பைப் போல் ஒரே மாதிரியாக இருக்காது.

பிரதம மந்திரி அவர்களே, ஒன்றை நான் தெளிவுபடுத்த அனுமதியுங்கள்: உடனடியாக அதிகாரம் பிரிட்டீஷ் அரசாங்கத்திடமிருந்து இந்திய மக்களுக்கு மாற்றப்பட வேண்டுமெனக் கோரி, தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த ஒரு இயக்கத்தையும் ஆரம்பிக்கவில்லை; அதற்காக அவர்கள் ஆவலாகவும் இல்லை; கூக்குரலும் போடவில்லை. பிரிட்டீஷ் மக்களுக்கு எதிராக எங்களுக்கு மனக்குறைகள் உண்டு. அத்தகைய மனக்குறைகள் நியாயமானவை என்று நாங்கள் உணர்கிறோம் என்பதைத் தெளிவாக்கும் வகையில் நான் குரல் எழுப்பி இருக்கிறேன் என்று நம்புகிறேன். ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டுமானால், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அரசியல் அதிகார மாற்றம் செய்யப்பட வேண்டுமெனக் கூச்சலிடவில்லை என்பதுதான் உண்மை நிலை. இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், அதிகார மாற்றும் எங்களது ஆசையுமல்ல; கவலையுமல்ல. ஆனால், அதிகார மாற்றம் வேண்டுமெனக் கூக்குரலிடும் இந்திய நாட்டில் உருவாகி இருக்கும் சக்திகளை, பிரிட்டீஷ் அரசாங்கம் எதிர்க்க முடியவில்லை. இன்றைய சூழ்நிலையில், தாழ்த்தப்பட்ட மக்கள் அச்சக்திகளை எதிர்க்கும் நிலையில் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். பின்னர், எங்களது பணிவான வேண்டுகோள் இதுதான்: நீங்கள் அதிகார மாற்றம் செய்தால், அத்தகைய மாற்றம் ஒரு சிறு தன்னலக் கூட்டத்தின் கையில் மாட்டிக் கொள்ளாது, ஒரு சிறு அதிகார வர்க்கத்தின் கையில் சிக்கிக் கொள்ளாது, அல்லது முகமதியர்களோ அல்லது இந்துக்களோ உள்ள ஒரு கூட்டத்தின் கைக்குப் போய்விடாது என்ற நிபந்தனைகளும், வழி வகைகளும் அத்தகைய அதிகார மாற்றத்துடன் இணைக்கப்பட வேண்டும்; எல்லா வகுப்பினரும் தங்களது மக்கள் தொகைக்கேற்ப அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதே இப்பிரச்சினைக்கு முடிவு காண்பதாகும். இத்தகைய கருத்தினை நாங்கள் மேற்கொண்டிருக்கும் போது, நானும் என்னுடைய சமுதாயமும் எங்கு இருக்கிறோம் என்ற நிலை எனக்குத் திட்டவட்டமாகத் தெரிந்தாலன்றி,

கூட்டாட்சி அமைப்புக் குழுவின் விவாதங்களில் நான் எவ்வாறு முக்கியமாகப் பங்கு கொள்ள முடியும்.

*திரு. காந்தி:* தீண்டப்படாதவர்கள் என்று கூறப்படும் மக்கள் பற்றி மேலும் ஒரு வார்த்தை கூற வேண்டும். இதர சிறுபான்மையினர் கொடுக்கும் கோரிக்கைகள் பற்றி நான் புரிந்து கொள்ள முடியும். ஆனால், தீண்டப்படாதார் சார்பில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்னைப் பொறுத்தவரை ''எல்லாவற்றையும் விட இரக்கமற்ற காயமாகும்.'' நிரந்தரமாக இழிநிலையில் கிடத்தி விடுவதாகும். இந்தியா விடுதலை பெறுவதற்காக, தீண்டப்படாத மக்களின் தலையாய நலனை மூடி முத்திரையிட்டு விடமாட்டேன். தீண்டப்படாத பாமர மக்களின் பிரதிநிதியாக நான் என் சொந்த முறையில் நிற்கிறேன் என்று நான் உரிமை கொண்டாடுகிறேன். இங்கு நான் காங்கிரஸ் சார்பில் மட்டும் பேசவில்லை. என் சொந்த முறையிலும் பேசுகிறேன். மேலும், தீண்டாதவர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தினால் நான், அவர்களின் வாக்கினைப் பெறுவேன் என்று உரிமையுடன் கூறுகிறேன்; நான் அத்தகைய வாக்கெடுப்பில் முதல் இடம் பெறுவேன் என்றும் கூறுகிறேன். வைதீக இந்து மதத்தின் அவமானமாக உள்ள இந்தத் தீண்டாமைப் பேயை ஒழிக்கத் தனித்தொகுதிகளும், இட ஒதுக்கீடும் துணைபுரியாது என்று இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்குச் சென்று தீண்டாத மக்களிடம் கூறுவதற்கு உழைப்பேன்.

தீண்டாமையென்னும் கறையினை நீக்க உறுதி கொண்டுள்ள இந்துமதச் சீர்திருத்தவாதிகள் அடங்கிய குழு ஒன்று இன்று உள்ளது. இக்குழுவும், உலகமுழுவதும் இதை அறிந்து கொள்ள வேண்டும். எங்களது பதிவேட்டிலும், மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் தீண்டப்படாத மக்கள் ஒரு தனி வகுப்பாகப் பிரித்தெழுதப் படுவதை நாங்கள் விரும்பவில்லை. சீக்கியர்கள் நிரந்தரமாக அவ்வாறு இருக்கலாம். முகமதியர்களும், ஐரோப்பியர்களும் அவ்விதம் இருக்கலாம். தீண்டப்படாத மக்கள், தீண்டப்படாதவர்களாக நிரந்தரமாக இருப்பார்களா? தீண்டாமை நிலைத்து நிற்பதைவிட இந்து மதம் செத்துப்போவதையே நான் விரும்புவேன். எனவே, டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்பாடு அடைவதற்கு அவர் காட்டும் ஆர்வத்திற்கும், அவரது அறிவுக்கும் நான் பெருமதிப்பளிக்கிறேன். இங்கு அவர் பெரிய தவற்றின் அடிப்படையில் தன்னை வருத்திக் கொண்டுள்ளார் என்றும், அனேகமாக அவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் அவரது முடிவில் தற்காலிகமாக இழையோடியிருக்கிறது என்றும் பணிவுடன் நான் கூறிக்கொள்கிறேன். இதை நான் சொல்ல வேண்டியதிருப்பது என் உள்ளத்தை நோகச் செய்கிறது; ஆனால், இதனைச் சொல்லாவிட்டால் எனக்கு உயிர்

போன்று உள்ள தீண்டாத மக்களின் பிரச்சினைக்கு நான் உண்மை யான வனாக இருக்க முடியாது. அனைத்துலகப் பேராட்சியே கிடைத்தாலும் அவர்களின் உரிமைகளை விலை பேசமாட்டேன். தகுந்த பொறுபபுணர்வுடன்தான் இவ்வாறு நான் பேசுகிறேன். இந்தியாவிலுள்ள அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பேச முயற்சிப்பது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் முறையான உரிமையல்ல என்று நான் கூறுவேன். இது இந்து மதத்தில் பிரிவினையை உண்டு பண்ணும்; எவ்விதமான மனத் திருப்தியுட னும், நான் அப்பிரிவினையை விரும்பவில்லை. தீண்டத்தகாத வர்கள் விரும்பினால், இஸ்லாம் அல்லது கிறிஸ்துவ் மதத்திற்கு அவர்கள் மதம் மாறுவதை நான் பொருட்படுத்த மாட்டேன். அதை நான் சகித்துக் கொள்வேன். ஆனால், கிராமங்களில் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டால் இந்து மதத்திற்கு என்ன ஏற்படும் என்பதை அனேகமாக என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. தீண்டப்படாத மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிப் பேசுபவர் களுக்கு, இந்திய நாட்டைப் பற்றித் தெரியாது; இந்திய சமுதாயம் இன்று எப்படி கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. எனவே, இதனை எதிர்ப்பது நான் ஒருவன்தான் என்றால், என்னுடைய உயிரையும் பணயம் வைத்து, அதை நான் எதிர்ப்பேன் என்று எனக்குள்ள சக்தியனைத்துடன் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

## பின்னிணைப்பு: 1*

# வகுப்புவாரி பிரச்சினை தீர்வுக்காக முஸ்லீம்கள், ஒடுக்கப்பட்ட வகுப்பினர், இந்தியக் கிறித்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள்மற்றும் ஐரோப்பியர்கள் ஆகியோர் கூட்டாக வட்டமேசை மாநாட்டின் முன்வைத்த யோசனைகள்:

### சிறுபான்மை வகுப்பினரின் கோரிக்கைகள்

1. எந்த ஒரு நபருக்கும் அவரின் பிறப்பு, மதம், சாதி அல்லது சமயக்கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கப் பணி, அதிகார அல்லது கௌரவப் பதவி வகித்தல் அல்லது அவர்தம் குடியியல் உரிமைகளை (civic rights) அனுபவித்தல் அல்லது ஏதேனும் வணிகம் அல்லது வாழ்க்கைத் தொழில் மேற்கொள்ளுதல் குறித்து எவ்விதத்திலும் பாரபட்சம் காட்டப்படக் கூடாது.

2. எந்த ஒரு வகுப்பாரையும் பாதிக்கத்தக்க வகையில் சட்ட மன்றத்தால் இயற்றப்படும் பாகுபாட்டுச் (discriminatory laws) சட்டங்களுக்கு எதிராகத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையிலான சட்டரீதியான காப்பு விதிகள் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

3. பொதுமக்களின் அமைதி மற்றும் ஒழுக்கப் பண்பு ஆகியவற்றின் பராமரிப்புக்குட்பட்டு அனைத்து வகுப்பாருக்கும் முழுமையான சமய சுதந்திரத்திற்கு அதாவது முழுமையான நம்பிக்கை, வழிபாட்டுச் சுதந்திரத்திற்கும், சடங்குகளைக் கடைப்பிடித்தல், பிரச்சாரம், ஒன்றாகக் கூடுதல், மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான சுதந்திரத்திற்கும் உத்திரவாதமளிக்க வேண்டும்.

சமய மாற்றத்தினாலேயே ஒருவர் யாதொரு குடியியல் உரிமை அல்லது சலுகையை இழக்கவோ அல்லது தண்டனைக்குள்ளாகவோ கூடாது.

4. சிறுபான்மையினர் தங்களின் சொந்தச் செலவிலேயே அற நிலையங்கள், சமய மற்றும் சமூக நிலையங்கள், பள்ளிகள் மற்றும் இதரக் கல்வி நிறுவனங்கள் நிறுவுவதற்கும், நிர்வகிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், அவற்றில் தங்களின் சமய உரிமையை மேற்கொள்வதற்குமான உரிமை.

5. சிறுபான்மை வகுப்பாரின் மதம், பண்பாடு இனமுறைச் சட்டம் (personal law) ஆகியவற்றின் பாதுகாப்பிற்காகவும், கல்வி,

---

* கூட்டாட்சி அமைப்புக் குழு மற்றும் சிறுபான்மையோர்க் குழு ஆகியவற்றின் நடவடிக்கைகளில் இது மூன்றாம் பின்னிணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது. பக். 1394-99.

மொழி, அறநிலையங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும் அரசாங்கமும், தன்னாட்சி உறுப்புகளும் அளிக்கும் மான்யங்களில் (grants-in-aid) சிறுபான்மை வகுப்பினர்க்குரிய பங்கினைப் பெறுவதற்காகவும் அரசியல் நிர்ணய சட்டத்தில் போதுமான அளவுக்குக் காப்பு விதிகள் உருவமைக்கப்பட வேண்டும்.

6. எல்லாக் குடிமக்களும் குடியியல் உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதை உறுதிசெய்ய வேண்டும் அதைத் தடுத்திடும் நோக்குடன் செயல்படும் எந்தச் செயலையும் அல்லது கடமைப் புறக்கணிப்பினையும் சட்டத்தினால் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாக்க வேண்டும்.

7. மத்திய, மாகாண அரசுகளில் அமைச்சரவைகளை அமைக்கும்போது முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களையும் கணிசமான எண்ணிக்கையில். உள்ள இதரச் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களையும் இயன்ற அளவுக்கு அமைச்சரவையில் சேர்த்துக் கொள்வது ஒரு மரபாக்கப்பட வேண்டும்.

8. சிறுபான்மையினர்களின் பாதுகாப்பிற்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் மத்திய மற்றும் மாகாண அரசுகளில் சட்ட முறையான துறைகள் அமைக்கப்பட வேண்டும்.

9. எந்த ஒரு சட்டமன்றத்திலும் நியமனம் அல்லது தேர்தல் மூலமாகத் தற்போது பிரதிநிதித்துவத்தினை அனுபவித்துக் கொண்டுள்ள அனைத்து வகுப்பாரும் தனி வாக்காளர் தொகுதிகள் மூலமாக அனைத்துச் சட்டமன்றங்களிலும் பிரதிநிதித்துவம் பெற்றிட வேண்டும். அனைத்துச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பின்னிணைப்பில் (Annexure) குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தைக் காட்டிலும் குறைவாக இருத்தல் கூடாது. ஆனால் எந்தப் பெரும்பான்மையினரும் ஒரு சிறுபான்மையினராகக் குறைக்கப்படவோ அல்லது சமநிலைக்குக் கூடக் கொண்டு வரப்படவோ கூடாது. ஆயினும் பத்து ஆண்டுகள் முடிவுற்ற பிறகு பஞ்சாபிலும் வங்காளத்திலும் உள்ள முஸ்லீம்களும் வேறெந்த மாகாணங்களிலும் உள்ள சிறுபான்மையினரும் கூட்டு வாக்காளர் தொகுதிகளையோ அல்லது இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர்களையோ ஏற்பது அவர்களின் விருப்பத்திற்குட்பட்டது. அதே போன்று பத்தாண்டுகள் முடிவுற்ற பிறகு மத்திய சட்டமன்றத்தில் யாதொரு சிறுபான்மையினரும் சம்பந்தப்பட்ட ஒப்புதலோடு இடஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதிகளையோ அல்லது இட ஒதுக்கீடற்றக் கூட்டுவாக்காளர் தொகுதிகளையோ ஏற்பது அவர்களின் விருப்பத்திற்குட்பட்டதாக ஆக்க வேண்டும்.

ஒடுக்கப்பட்ட வகுப்பினரைப் பொறுத்த வரையில் தனிவாக்காளர் தொகுதி முறையினைக் கையாண்டு இருபது ஆண்டுக் கால அனுபவத்திற்கு முன்பும், அதுவும் அந்த வகுப்பாரின் வயது வந்தோர் அனைவருக்கும் நேரிடையான வாக்குரிமை நிறுவப்படும்

வரையில் கூட்டுவாக்காளர் தொகுதிகளுக்கும் இட ஒதுக்கீட்டு முறைக்கும் மாற்றமேதும் செய்யப்படக்கூடாது.

**10.** ஒவ்வொரு மாகாணத்திலும் மத்திய அரசைப் பொறுந்தும் அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைக்கப்பட வேண்டும். ஆளுநர் தலைமை (Governor-General) அல்லது ஆளுநர்களால் நியமனம் மூலமாக நிரப்பப்பட வேண்டிய ஒதுக்கப்பட்ட இடங்கள் ஏதேனும் இருக்குமாயின் அந்த இடங்களின் விகிதத்தைத் தவிர்த்து, எஞ்சியுள்ள அரசுப் பணிகளுக்கான ஆள் எடுப்புப் பணி, அந்தந்தத் தேர்வாணையத்தால்தான் செய்யப்பட வேண்டும். திறமை (efficiency) மற்றும் தேவையான தகுதிகளின் (qualifications) முக்கியத்துவத்திற்கு ஒத்த முறையில் பல்வேறு வகுப்பார் நியாயமான அளவு பிரதிநிதித்துவம் பெற்றிடும் விதத்தில் அத்தகைய தேர்வு செய்யப்பட வேண்டும். தலைமை ஆளுநருக்கும் மற்றும் ஆளுநர்களுக்கும் வழங்கப்படும் அறிவுறுத்தல் பத்திரத்தில் இக்கொள்கைகளை நிறைவேற்றுதற்குரிய அறிவுறுத்தல்கள் சேர்க்கப்பட வேண்டும். அக்காரணத்திற்காக பணிகளின் கூட்டமைவினை (Composition of Services) அவ்வப்போது மறுசீராய்வு செய்திட வேண்டும்.

**11.** சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்படும் ஒரு மசோதா எந்தச் சட்ட மன்றத்திலாவது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் கருத்துப்படி அந்த வகுப்பாரின் சமயத்தையோ அல்லது சமயத்தின் அடிப்படையிலான சமூகப்பழக்கத்தையோ பாதிக்கத்தக்க அல்லது அடிப்படை (ஜீவாதார) உரிமைகளை பாதிக்கத்தக்க மசோதாவாக இருக்குமானால், மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவிப்பதாயின் சட்டமன்றத்தினால் அம்மசோதா நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக அவைத்தலைவருக்குத் தங்களின் ஆட்சேபங்களை சமர்ப்பிக்கும் உரிமை உண்டு. அவைத்தலைவர் அந்த ஆட்சேபங்களின் தன்மைக்கேற்றவாறு அதனை தலைமை ஆளுநர்-தலைவருக்கோ அல்லது ஆளுநருக்கோ அனுப்பி வைக்கவேண்டும். அதன்பின் ஆளுநர்-தலைமை அல்லது ஆளுநர் அம்மசோதாவின் செயற்பாட்டினை (operation) ஓராண்டுக் காலத்திற்கு நிறுத்தி வைத்து அந்த ஓராண்டு முடிவுற்ற பிறகு அம்மசோதாவை அச்சட்ட மன்றம் மேலும் கவனிக்க வேண்டியதற்காகத் திருப்பி அனுப்ப வேண்டும். அம்மசோதா சட்டமன்றத்தினால் மேலும் கவனிக்கப்பட்டு ஆட்சேபங்களுக்கான குறைகளை நீக்கிடவோ, திருத்தியமைக்கவோ சட்டமன்றம் மறுத்தால் ஆளுநர் தலைமை ஆளுநர் தமது சம்மதத்தை அளிக்கும் விருப்புரிமையைப் (discretion) பயன்படுத்தி மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்கவோ அல்லது மறுக்கவோ செய்யலாம். மேலும் தங்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றினை அம்மசோதா மீறுவதாக உள்ளது என்ற காரணத்தினடிப்

படையில் (ground) அதன் மூலம் பாதிக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்த இரண்டு உறுப்பினர்கள் அச்சட்டத்தின் செல்லுபடியாகும் தன்மையை (validity) உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) எதிர்க்கலாம்.

### முஸ்லீம்களின் சிறப்புரிமைக் கோரிக்கைகள்

அ. வடமேற்கு எல்லை மாகாணம் மற்ற மாகாணங்களைப் போல், ஆனால் அது ஒரு எல்லை (Frontier) மாகாணமாய் இருப்பதால் அதற்கு வேண்டிய பாதுகாப்புகளுடன், ஒரு ஆளுநரின் மாகாணமாக (Governor's Province) அமைக்கப்பட வேண்டும். மாகாணச் சட்டமன்ற அமைப்பில் நியமனம் மொத்தத்தில் 10 சதவீதத்தைக் காட்டிலும் அதிகமாகக் கூடாது.

ஆ. பம்பாய் மாநிலத்திலிருந்து (Bombay Presidency) சிந்து பிரிக்கப்பட்டுப் பிரிட்டீஷ் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களைப் போலவே மற்றும் அவைகளின் அடிப்படையிலேயே ஒரு ஆளுநரின் கீழான மாகாணமாக்கப்பட வேண்டும்.

இ. மத்திய சட்டமன்றத்தின் (Central Legislature) மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் மூன்றில் ஒரு பங்காக இருக்க வேண்டும். மத்தியச் சட்ட மன்றத்தில் அவர்களின் பிரதிநிதித்துவம் பின்னிணைப்பில் (Annexure) குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தை விடக் குறைவாக இருக்கக் கூடாது.

### ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் சிறப்புரிமைக் கோரிக்கைகள்

அ. நாட்டின் எந்தக் குடிமகனும் குடியியல் உரிமையை அனுபவிப்பதில் தீண்டாமையின் காரணமாக வழக்காறு அல்லது பழக்கமரபு (custom or usage) ஆகியவற்றால் திணிக்கப்படும் எவ்விதமான தண்டத்தொகையோ, தீங்கோ அல்லது குறைபாடோ அல்லது குடிமகனுக்கு எதிரான பாகுபாடோ, இருக்குமாயின் அது சட்டப்படிச் செல்லாதது என அரசியலமைப்புச் சட்டம் உறுதியாக அறிவிக்க வேண்டும்.

ஆ. ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து அரசுப் பணிகளுக்கு ஆள் எடுப்பதிலும், காவல் (Police) மற்றும் படைத்துறை (Military) பணிகளில் சேர்த்துக் கொள்ளும் நல்வாய்ப்பினை நல்குவதிலும் தாராளமான கவனிப்பு (generous treatment) வேண்டும்.

இ. பஞ்சாப் நில உடைமை மாற்றச் சட்டத்தின் (Punjab Land Alienation Act) பலன் பஞ்சாபிலுள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஈ. எந்த ஒரு நிர்வாக அதிகாரியின் காழ்ப்புணர்வு நடவடிக்கையினாலோ அல்லது நலப்புறக்கணிப்புச் செயலினாலோ பாதிக்கப்படும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தம் குறைகள் களையப்

படுவதற்காக ஆளுநருக்கோ அல்லது தலைமை ஆளுநருக்கோ மேல்முறையீடு செய்யும் உரிமை வேண்டும்.

உ. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் பின்னிணைப்பில் குறிப்பிடப் பட்டுள்ள அளவுக்குக் குறையாத பிரதிநிதித்துவத்தினைப் பெற வேண்டும்.

### ஆங்கிலோ-இந்திய வகுப்பினரின் சிறப்புரிமைக் கோரிக்கைகள்

அ. ஆங்கிலோ-இந்திய வகுப்பினரின் தனி இயல்பான தன்மையைக் கருதி அவர்கள் போதுமான வாழ்க்கைத் தரத்தை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு அரசு உத்தியோகத்தில் பிரத்தியேக முக்கியத்துவம் (special consideration) அளிக்கும் விதத்தில் துணைக் குழு எண் — 8 (பணிகள்) (Sub-Committee No VIII — Services) ஏற்றுக் கொண்ட உரிமைக் கோரிக்கைகளுக்குத் தாராளமான விளக்கம் (generous interpretation) அளிக்க வேண்டும்.

ஆ. தமது சொந்தக் கல்வி நிறுவனங்கள் (அதாவது, ஐரோப்பியக் கல்வி முறை) அமைச்சரின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தாங்களே நிர்வகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான உரிமை.

தற்போதுள்ள மான்யங்களின் அடிப்படையில் தாராளமான மற்றும் போதுமான மான்ய உதவிக்கும் உதவித் தொகைக்கும் (scholarship) உரிய ஏற்பாடுகள்.

இ. சட்டப்படியான நிலை (legitimacy) மற்றும் பரம்பரைக்கான (descent) நிரூபணம் தேவையெனும் நிபந்தனையின்றி இந்தியாவிலுள்ள மற்ற வகுப்பினர் அனுபவிக்கும் முறைகாண் ஆயத்திற்கு (வழக்கின் சான்றுகளை ஆராய்ந்து தங்களின் தீர்ப்பினை அளிப்பவர்கள் — Jury) சமமான உரிமையும், குற்றம் சாட்டப்படும் நபர்கள் ஒரு ஐரோப்பிய அல்லது இந்திய முறைகாண் ஆயத்தால் (Jury) விசாரிக்கப்படுவதற்குமான உரிமையும்.

### ஐரோப்பிய இனத்தவரின் சிறப்புரிமைக் கோரிக்கைகள்

அ. தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகளில் (செயல்களில்) இந்தியர்களாகப் பிறந்திட்ட குடிமக்களைப் போலவே உரிமைகளையும் உரிமைப் பேறுகளையும் (privileges) சமமாக அனுபவிக்கும் உரிமை.

ஆ. தற்போது நடைமுறையில் உள்ள குற்றவிசாரணை முறையில் உள்ள உரிமைகளைத் தொடர்வது, அத்தகைய நடைமுறையினைத் திருத்தம் செய்வதற்கோ (amend) மாற்றியமைப்பதற்கோ (alter) அல்லது சிறுமாற்றம் செய்வதற்கோ (modify) ஏதேனும் நடவடிக்கை (measure) அல்லது மசோதாவை தலைமை ஆளுநரின் முன்கூட்டிய ஒப்புதலின்றிச் சட்டமன்றத்தில் முன்னிலைப் படுத்தக் (introduce) கூடாது.

ஒப்புக்கொள்ளப்பட்டது:

**மேன்மைமிகு ஆகர்கான்** (முஸ்லிம்களுக்காக)

**டாக்டர் அம்பேத்கர்** (தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக)

**ராவ் பகதூர் பன்னீர்ச் செல்வம்** (இந்தியக் கிறித்தவர் களுக்காக)

**சர் ஹென்றி கித்னே** (ஆங்கிலோ-இந்தியர்களுக்காக)

**சர் ஹியூபர்ட் கார்** (ஐரோப்பியர்களுக்காக)

★ ★ ★ ★ ★

**பின் இணைப்புக்கு விளக்க மகஜர்**

1. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்பாக தெரிவிக்கப் பட்ட யோசனைகள் இந்துக்கள் அல்லது சீக்கியர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை; ஆனால் மத்திய சட்டமன்றத்தில் பின்னர் குறிப்பட்டவர்களின் பிரதிநிதித்துவ கோரிக்கை முற்றிலும் ஏற்கப் பட்டுள்ளது.

2. பல்வேறு சிறுபான்மையினருக்கான இட ஒதுக்கீட்டு யோச னைகள் ஒரு முழுமையான திட்டமாகும்; இந்த விரிவான யோச னைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவையாகும்.

3. எத்தகைய சூழ்நிலையிலும் பெரும்பான்மை சமூகத்தினர் சிறுபான்மையினர் நிலைக்கோ அல்லது அதற்குச் சமமான நிலைக்கோ தாழ்த்தப்படக் கூடாது.

4. வாணிகம், நிலப் பிரபுக்கள், தொழில், தொழிலாளர் முதலிய நலன்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படக் கூடாது; முடிவாகப் பார்க்குமிடத்து, இந்த இடங்கள் வகுப்பு ரீதியானவை என்று எண்ணப்படுவதால், இந்த நலன் விரும்பும் வகுப்பினர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டிலிருந்து அதனைச் செய்ய லாம்.

5. மத்திய சட்டமன்றத்தில் முஸ்லீம்களுக்கு 33½ சதவிகிதப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது; இதில் 26 சதவிகிதம் பிரிட் டிஷ் இந்தியாவிலிருந்தும், 7 சதவிகிதம் இந்திய சமஸ்தானங் களுக்கு ஒதுக்கப்பட்ட இனங்களிலிருந்து தரப்படுகிறது.

6. பஞ்சாபில் முஸ்லீம்களும், சாதி இந்துக்களும் தாழ்த்தப் பட்ட வகுப்பினரும் செய்துள்ள பொதுத் தியாகத்தின் காரணமாக சட்டமன்றத்தில் அவர்களுக்கு 54 சதவிகித இடங்களும் சீக்கியர் களுக்கு 20 சதவிகித இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

7. இந்த யோசனைகள் 11.5 கோடி மக்களால் அதாவது இந்தியாவின் மக்கள் தொகையில் 46 சதவீதத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என எடுத்துக் கொள்ளலாம்.

## பின்னிணைப்பு: 2*

# தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான அரசியல் பாதுகாப்புரிமைகள்

வட்டமேசை மாநாட்டில் டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்களும், ராவ்பகதூர் இரட்டை மலை ஸ்ரீநிவாசன் அவர்களும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் சிறப்புப் பிரதிநிதித்துவத்திற்கான உரிமைக் கோரிக்கையின்மீது அளித்த பிற்சேர்வான மகஜர் (Supplementary Memorandum).

சுயாட்சியுடைய இந்தியாவிற்கான அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் பாதுகாப்பிற்கான அரசியல் காப்பீடுகளோடு தொடர்புள்ளதும், சிறுபான்மையினர் குழுவின் நடவடிக்கைக் குறிப்புகளின் அச்சிடப்பட்ட பாகத்திற்கு 111-வது பிற்சேர்க்கையாக அமைந்துள்ளதுமான கடந்த ஆண்டு எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில், ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் சிறப்புப் பிரதிநிதித்துவம் என்பது அத்தகைய பாதுகாப்புரிமைகளில் ஒன்றாக அமையவேண்டும் என்று நாங்கள் கோரியிருந்தோம். ஆனால் நாங்கள் அம்மக்களுக்கு அவசியமானதாகக் கோரிய அந்தச் சிறப்புப் பிரதிநிதித்துவத்தின் விவரங்களை அப்பொழுது நாங்கள் விளக்கவில்லை. அந்த விஷயம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாகவே, சிறுபான்மையினர் துணைக்குழுவின் நடவடிக்கைகள் முடிந்து விட்டன என்பதுதான் அதற்கான காரணம் ஆகும். சிறுபான்மையினர் துணைக்குழு இந்த ஆண்டில் இவ் விஷயத்தைப் பரிசீலிக்குமானால், அது தேவையான விவரங்களை அளிக்க வேண்டும் எனும் நோக்கத்தில் இந்தப் பிற்சேர்வான மகஜரைச் சமர்ப்பிப்பதன் மூலம், விட்ட குறையைச் சரி செய்திட நாங்கள் எண்ணுகிறோம்.

### 1. சிறப்புப் பிரதிநிதித்துவத்தின் அளவு

*அ. மாகாணச் சட்டமன்றங்களில் சிறப்புப் பிரதிநிதித்துவம்*

1. வங்காளம், மத்திய மாகாணங்கள், அசாம் பீகார், ஒரிசா, பஞ்சாப் மற்றும் ஐக்கிய மாகாணங்களில் சைமன் குழுவினாலும் இந்திய மத்தியக் குழுவினாலும் மதிப்பிடப்பட்டுள்ளவாறு ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தங்களின் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்றவாறு பிரதிநிதித்துவம் பெற வேண்டும்.

2. சென்னையில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பினர் 22 சதவீதம் பிரதிநிதித்துவம் பெற்றிட வேண்டும்.

* மாநாட்டின் முதல் கூட்டத்தின் போது நடந்த சிறுபான்மையோர் துணைக் குழுவின் நடவடிக்கைகளின் பின்னிணைப்பாக முந்தைய மகஜர் தரப்பட்டுள்ளது. நவம்பர் 4, 1931 நாளிட்ட இந்தப் பிற்சேர்வான மகஜர் மூலச் செயல்முறைகளில் பின்னிணைப்பு VII 1409-11 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

## பின் இணைப்பு: 1 தொடர்ச்சி

# சட்டமன்றங்களில் பிரதிநிதித்துவம்

அடைப்புக் குறிகளுக்குள் ( ) இருக்கும் எண்கள் 1931 மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படியும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் விகிதங்கள் சைமன் அறிக்கைப்படியும்

| | சபையின் பலம் | இந்துக்கள் | | | முஸ்லீம் | கிறித்தவர் | சீக்கியர் | ஆங்கிலோ இந்தியர் | மலைவாழினத்தார் | ஐரோப்பியர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாதி இந்து | ஒடுக்கப் பட்டோர் | மொத்தம் | | | | | | |
| இந்தியா முழுமையாக (1931) | | (47.5) | (19) | (66.5) | (21.5) | | | | | |
| மேலவை ... | 200 | 101 | 20 | 121 | 67 | 1 | 6 | 1 | ... | 4 |
| கீழ்சபை ... | 300 | 123 | 45 | 168 | 100 | 7 | 10 | 3 | ... | 12 |
| | | (48.9) | (13.4) | (62.3) | (34.8) | | | | | |
| அசாம் ... | 100 | 38 | 13 | 51 | 35 | 3 | ... | 1 | ... | 10 |
| | | (18.3) | (24.7) | (43) | (54.9) | | | | | |
| வங்காளம் ... | 200 | 38 | 35 | 73 | 102 | 2 | ... | 3 | ... | 20 |
| | | (67.8) | (14.5) | (82.3) | (11.3) | | | | | |
| பீகாரும் ஒரிசாவும் ... | 100 | 51 | 14 | 65 | 25 | 1 | ... | 1 | 8 | 5 |
| | | (68) | (8) | (76) | (20) | | | | | |
| பம்பாய் ... | 200 | 88 | 28 | 116 | 66 | 2 | ... | 3 | ... | 13 |

## பின் இணைப்பு: 1 தொடர்ச்சி

அடைப்புக் குறிகளுக்குள் () இருக்கும் எண்கள் 1931 மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படியும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் விகிதங்கள் சைமன் அறிக்கைப்படியும்

| | சபையின் பலம் | இந்துக்கள் | | | முஸ்லீம் | கிறித்தவர் | சீக்கியர் | ஆங்கிலோ இந்தியர் | மலைவாழினத்தார் | ஐரோப்பியர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாதி இந்து | ஒடுக்கப் பட்டோர் | மொத்தம் | | | | | | |
| மத்திய மாகாணங்கள் .. | 100 | (63.1) 58 | (23.7) 20 | (86.8) 78 | (44) 15 | 1 | ... | 2 | 2 | 2 |
| சென்னை ... | 200 | (71.3) 102 | (15.4) 40 | (86.7) 142 | (7.1) 30 | (3.7) 14 | ... | 4 | 2 | 8 |
| பஞ்சாப் ... | 100 | (15.1) 14 | (13.5) 10 | (28.6) 24 | (56.5) 51 | 1.5 | (13) 20 | 1.5 | ... | 2 |
| உத்தரப்பிரதேசம் ... | 100 | (58.1) 44 | (26.4) 20 | (84.5) 64 | (14.8) 30 | 1 | ... | 2 | ... | 3 |

3. பம்பாயில்,

(a) பம்பாய் மாநிலத்தின் ஒரு பகுதியாகச் சிந்து தொடர்ந்து இருக்குமானால் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் 16 சதவீதம் பிரதிநிதித்துவம் பெற்றிட வேண்டும்.

(b) பம்பாய் மாநிலத்திலிருந்து சிந்து பிரிக்கப்படுமானால், அம்மாநிலத்தில் உள்ள முஸ்லீம்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் மக்கள் தொகையில் சமமாகயிருப்பதால், முஸ்லீம்கள் அனுபவிக்கும் பிரதிநிதித்துவ அளவிற்கு நிகரானப் பிரதிநிதித்துவத்தினை ஒடுக்கப்பட்ட வகுப்பினர் அனுபவிக்க வேண்டும்.

### ஆ. மையக்கூட்டாட்சிச் சட்டமன்றத்தில் (Federal Legislature) சிறப்புப் பிரதிநிதித்துவம்

மையக் கூட்டாட்சிச் சட்ட மன்றத்தின் இரு சபைகளிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்தியாவில் உள்ள தங்களின் மக்கள் தொகை விகிதத்திற்கேற்றவாறு பிரதிநிதித்துவம் பெற்றிட வேண்டும்.

### இட ஒதுக்கீடுகள்

சட்ட மன்றங்களில் பிரதிநிதித்துவ விகிதத்தினைக் கீழ்க் காணும் ஊகங்களின் (assumptions) அடிப்படையில் நிர்ணயித்துள்ளோம்:

1. சைமன் குழுவினாலும் (பாகம் 1, பக்கம் 40) இந்திய மத்தியக் குழுவினாலும் (அறிக்கை, பக்கம் 44) குறிப்பிடப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தொகைக்கான எண்ணிக்கையை, இடங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒரு அடிப்படையாகக் கொள்வதற்குப் போதிய அளவில் சரியென்று ஏற்றுக் கொள்ளத்தக்கதான நாங்கள் ஊகித்துள்ளோம்.

2. மையக்கூட்டாட்சிச் சட்டமன்றம் இந்தியா முழுவதையும் உள்ளடக்கி இருக்கும் என்றும், அந்நிலையில் இந்திய மாநிலங்களிலும், மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் பிரதேசங்களிலும் (Centrally Administered Areas), விலக்கப்பட்டப் பிரதேசங்களிலும் (Excluded Territories) மேலும் ஆளுநரின் மாகாணங்களிலும் (Governor's Provinces) உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகை, கூட்டாட்சி சட்ட மன்றத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவ அளவினைக் கணக்கிடுவதற்கு மிகவும் சரியானதொரு கூடுதல் விவரமாக அமையும் என்றும் நாங்கள் ஊகித்துள்ளோம்.

3. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் நிர்வாக எல்லைகள் இன்றுள்ளபடியே தொடரும் என்று நாங்கள் ஊகித்துள்ளோம்.

ஆயின், சில தன்னலக்கட்சியினர் பயமுறுத்துவது போல, ஒடுக்கப்பட்ட மக்கள் தொகை குறித்து நாங்கள் ஊகித்த எண்ணிக்கைகள் சரியில்லை என்று சொல்லப்பட்டால் மற்றும் புதிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் கீழ் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் குறைந்த விகிதத்தில் காட்டப்படுவார்களானால் அல்லது மாகாணங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டு, அது தற்போதுள்ள மக்கள் தொகை அளவினைப் பாதிக்குமானால், பிரதிநிதித்துவ விகிதத்தை மாற்றியமைப்பதற்கும், முக்கியத்துவத்தினைக் கோருவதற்கும் கூட ஒடுக்கப்பட்ட வகுப்பினர் உரிமை பெற்றிருக்கிறார்கள். அதே போன்று அனைத்திந்திய கூட்டமைப்பு (All India Federation) நடைமுறைக்கு வரவில்லையென்றால், கூட்டாட்சிச் சட்ட மன்றத்தில் அந்த அடிப்படையில் கணக்கிடப்படும் அவர்களின் பிரதிநிதித்துவ விகிதத்தினை மீண்டும் சரிபடுத்திக் கொள்வதற்கு நாங்கள் சம்மதிக்க விருப்பம் தெரிவிப்போம்.

## 2. பிரதிநிதித்துவ முறை

*1.* மாகாண மற்றும் மத்திய சட்டமன்றங்களில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகளை அவர்களின் தனிவாக்காளர் தொகுதி (Seperate Electorates) மூலமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

கூட்டாட்சி (Federal) அல்லது மத்திய சட்டமன்றத்தின் மேல் சபைக்குப் பிரதிநிதிகளை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் மறைமுக (indirect) தேர்தல் மூலம் தெரிவு செய்ய முடிவெடுக்கப்படுமானால், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் எவ்வகைப்பட்டதாயிருப்பினும் தாழ்த்தப்பட்டோரின் பங்கினை அவர்களுக்கு வழங்கிட உத்தரவாதமுள்ள ஏற்பாடு செய்யப்படுமேயாயின் தங்களின் மேல்சபைப் பிரதிநிதித்துவத்தைப் பொருத்தமட்டில் தனி வாக்காளர் தொகுதி (Seperate Electorate) கோரும் உரிமையைக் கைவிட அவர்கள் சம்மதிப்பார்கள்.

*2.* கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலொழிய ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கானத் தனி வாக்காளர் தொகுதிகள் (Separate electorate) கூட்டு வாக்காளர் தொகுதிகளாக மாற்றியமைக்கப்படக் கூடாது:

> அ. சம்பந்தப்பட்டச் சட்டமன்றங்களில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் கோரிக்கையின் பேரில் அந்த மக்களில் வாக்குரிமை பெற்றுள்ள வாக்காளர்களிடையே நடத்தப்படும் வாக்கெடுப்பு (referendum) அறுதிப்பெரும்பான்மையில் முடியும்போது தனி வாக்காளர் தொகுதி முறை மாற்றியமைக்கப்படலாம்.
>
> ஆ. இருபது ஆண்டுகளுக்குப் பின்பு வயது வந்தோர் எல்லோருக்கும் வாக்குரிமை (adult franchise) வழங்கப்படும் வரையில் அத்தகைய வாக்கெடுப்பு செய்யக் கூடாது.

### 3. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் யாவர் என்பதை விளக்குவதன் அவசியம்

கடந்த காலத்தில் மாகாண சட்டமன்றங்களில் ஒடுக்கப்பட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஒடுக்கப்பட்ட வகுப்பினரல்லாதவர்கள் நியமிக்கப்பட்டதால் அந்தப் பிரதிநிதித் துவம் பெருமளவு மோசடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சாராதவர்கள் ஒடுக்கப்பட்ட வகுப் பினரின் பிரதிநிதிகளாக நியமனம் பெற்றது நிகழ்ந்துள்ளது. ஒடுக்கப்பட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களை நியமனம் செய்வதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த ஆளுநர், அந்த அதிகாரத்தை ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களை மட்டுமே நியமிப்பதற்குப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப் படவில்லை என்பதுதான் அத்தவறுக்கான காரணம். நியமன முறை, புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தேர்தல் முறை யினால் மாற்றப்படவிருப்பதால் இந்த மோசடிக்கு இடமிருக்காது. ஆனால் அவர்களின் சிறப்புப் பிரதிநிதித்துவ நோக்கம் பாதிக்கப் படாமலிருக்கச் சட்டத்திற்குப் புறம்பாக ஏதாவது செய்வதற்கு வழியேதும் விட்டுவைக்கக்கூடாது என்பதற்காக நாங்கள் கோருவ தாவது :

1. ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தனி வாக்காளர் தொகுதி கள் உரிமையை மட்டும் பெற்றிருக்காமல் தங்களினத்தினரால் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்யப்படும் உரிமையையும் பெற்றிருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்போர் யாவர் என்பதை அங்கே நிலவி வரும் தீண்டாமை முறைக்கும், தேர்தல் நோக்கங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட பட்டியலில் எந்தப் பெயர் மூலம் குறிப் பிட்டிருக்கின்றனவோ அந்த இனங்களைச் சார்ந்தவர்கள் என்பதைக் குறிக்கும் வகையிலும் கண்டிப்பாக வரையறுத்து விளக்கப்பட வேண்டும்.

### 4. சுட்டுப்பெயர் அல்லது பெயர்க்குறிப்பு (Nomenclature)

ஒடுக்கப்பட்ட வகுப்பினரைக் குறிப்பதற்குத் தற்போது வழக்கி லிருக்கும் சுட்டுப் பெயர் தொடர்பான இப்பகுதியை அணுகும் போது, தற்போது நிலவி வரும் சுட்டுப்பெயர் அதனைப் பரிசீ லித்த ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களாலும், அவர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள மற்றவர்களாலும் ஆட்சேபிக்கப்படு கின்றது என்பதை நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம். இது அவர்களை அவமதிப்பதாகவும், அவமானம் செய்வதாகவும் (degrading and contemptuous) இருக்கிறபடியால் அரசு அலுவலகக்

காரணங்களுக்காக அப்பெயரை மாற்றுவதற்குப் புதிய அரசிய லமைப்புச் சட்டம் வரையப்படுவதற்கான இத்தருணத்தைப் பயன் படுத்திக் கொள்வது நல்லது. அவர்கள் ''சாதியற்ற இந்துக்கள் (Non-Caste Hindus)'' ''இந்து மதக் கொள்கை மறுப்பாளர்கள்'' (Protestant Hindus). அல்லது இந்து மதக் கொள்கையை ஒப்புக் கொள்ளாதவர்கள்'' (Non-Conformist Hindus) அல்லது ''ஒடுக்கப் பட்ட வகுப்பினர்'' (Depressed Classes) என்பதற்குப் பதிலாக வேறேதேனும் ஒரு பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஒரு குறிப்பிட்ட பெயரை நாங்கள் வற்புறுத்துவதற்கு எங்களுக்கு அதிகாரமில்லை. நாங்கள் அவை களை யோசனைக்கு வைக்கத் (Suggest)தான் முடியும். உரிய முறையில் விளக்கமளிக்கப்பட்டால் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தங்களுக்கு மிகப் பொருத்தமான ஒரு பெயரை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

இந்த மகஜரில் உள்ள கோரிக்கைகளை ஆதரித்து இந்தியா வின் எல்லா இடங்களிலும் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பின ரிடமிருந்து ஏராளமான தந்திகளை நாங்கள் பெற்றுள்ளோம்.

*சர் பி. ஜே. ஃபேகன் :* சங்கங்கள் போதுமான பாதுகாப்பு இல்லை என்று கருதவே செய்யும் என்றுதான் நான் நினைக் கிறேன்.

*389 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தியப் பத்திரிகை களும், அரசியல்வாதிகளும் உங்கள் மீது பெரிதும் வெறுப்புணர்வு கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் வலியுறுத்தியதிலிருந்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் கேட்கும் பாதுகாப்பு கள் முடிவில் பத்திரிகைகளும் சட்டமன்றமும் வெளிப்படுத்தும் பொது மக்களின் நியாயமான கருத்திலிருந்து உங்களைத் தனிமைப் படுத்திவிடும் என்று நான் சொன்னால், அது உண்மை தானா?

*சர் பி. ஜே. பேகன் :* இல்லை; இது எங்களைத் தனிமைபடுத்தி விடும் என்று நான் எண்ணவில்லை. நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல முடியும். பொதுமக்களின் ஆரோக்கியமான கருத்துக்குப் புறம்பாக நாங்கள் தனிமைப்பட்டு நிற்போம் என்று நான் நினைக்கவில்லை.

*391: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இக்கேள்வியை மீண்டும் நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்: இந்திய அமைச்சர்களின் ஒப்புதலுடன் இந்தியச் சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங் களின் கட்டுப்பாட்டில் நீங்கள் வரும்போது, பத்திரிகைகள், மக்கள் உங்களைத் தாக்கும்போது, உங்களை நீங்களே தனிமைப் படுத்திக் கொள்வதன் மூலம் பெரும் பாதுகாப்பைவிட இந்திய அமைச்சர்கள் அளிக்கும் பாதுகாப்பு சிறந்தது என நீங்கள் கருத வில்லையோ?

*சர் பி. ஜே. ஃபேகன்:* இல்லை. சங்கங்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும் என எனக்குத் தோன்றவில்லை.

*391 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சற்றுமுன் கூறிய கருத் துக்கு ஆதரவாக சைமன் குழுவின் அறிக்கையின் சில குறிப்பு களை நீங்கள் இப்போது படித்தீர்கள். சர் ஜான் சைமன் தன் விருப்பத்திற்கு மாறாகச் சட்டம்-ஒழுங்கை 'ஒதுக்கப்பட்ட துறை'யி லிருந்து 'மாற்றப்பட்டதுறை'க்கு மாறுதல் செய்ய பரிந்துரை செய் தது மேற்கண்ட துறையை 'ஒதுக்கப்பட்ட துறை'யிலேயே வைத் திருப்பது அத்துறையில் செயல்படும் பணித்துறைகளை மிகுந்த கண்டனத்துக்குள்ளாக்கும் எண்ணத்தினால்தான் என்பது உண்மை தானே?

*சர் பி. ஜே. ஃபேகன் :* இது தேவையில்லாத விவாதம் என்று நான் நினைக்கிறேன். இது மிகவும் சர்ச்சைக்கிடமான விஷயம்; மேலும் இந்த விஷயம் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன என நான் எண்ணுகிறேன். சர் ஜான் சைமன் என்ன நினைத் திருப்பார் என்பதற்கு நான் பொறுப்பாக முடியாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சைமன் குழுவின் அறிக்கையில் இது இடம் பெற்று இருப்பது மேற்கூறிய காரணத்தினால்தான் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

*சர் ஆஸ்டன் சேம்பர்லைன் :* சாட்சி ஏற்கனவே இந்தக் கேள்விக்கு விடையளிப்பதிலிருந்து விலக்குக் கேட்டு இருக்கிறார்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அவர் பதிலளிக்க விரும்பாத போது நான் அதை வலியுறுத்த விரும்பவில்லை.

*சர் ஆஸ்டன் சேம்பர்லைன்:* அரசுப்பணித்துறைப் பிரதிநிதிகளிடம் இந்தக் கேள்வியை கேட்பது பொருத்தமில்லாததுதான். ஏனென்றால் அவர்கள் இந்தியாவில் ஏற்படும் பொதுச் சீர் திருத்தம் பற்றிய விவாதத்தில் கலந்து கொள்ள வரவில்லை. மாறாக அவர்கள் தங்களது சிறப்பு நிலை பற்றியும் தங்கள் கோரிக்கைகள் பற்றியும் மட்டுமே பேச வந்துள்ளனர்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* 'ஒதுக்கப்பட்ட துறை'யிலிருந்து 'மாற்றப்பட்ட துறை'க்குச் சட்டம்-ஒழுங்கை மாற்றியதற்கு, சர் ஜான் சைமன் கூறிய காரணம், அத்துறையைச் சட்டமன்றக் கட்டுப் பாட்டிற்கு அப்பால் நிறுத்துவது பத்திரிக்கைகள் மற்றும் பொது மக்களின் கண்டனத்திற்கு உட்படும் என்பதே.

*விஸ்கவுண்ட் பர்ன்ஹம் :* சட்டக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் டாக்டர் அம்பேத்கர் கூறியது பெரிய அளவில் திசை திருப்பும் பேச்சாகும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதை நான் தவறாகப் படித் திருக்க வாய்ப்புண்டு.

## 2

## திரு. சச்சிதானந்த சின்கா, பாரிஸ்டர்; இந்தியா கவுன்சில் உறுப்பினர்

**1985: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* முதலில் ஆளுநரின் விசேஷ அதிகாரம் பற்றி, குறிப்பாக, அமைதிக்கு ஊறு ஏற்படும் போது அதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பதற்கான அவருக் குள்ள அதிகாரம் பற்றி நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்; மாற்றப்பட்ட துறையின் இன்றைய நிலை குறித்து உங்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன். இந்திய அரசுச் சட்ட நகல் இப்போது உங்களிடம் இருக்கிறதா?

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம். இருக்கிறது.

*1986 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்திய அரசுச் சட்டத் தின் 52-வது பிரிவை நீங்கள் பார்த்துச் சொல்ல முடியுமா?

*திரு. சச்சிதானந்த சின்கா :* முடியும்.

*1987 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாற்றப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட துறைகள் அடங்கிய இந்திய அரசுச் சட்டத்தின்

---

* சாட்சியம் பற்றிய குறிப்பேடு, தொகுதி II(அ) 22 ஜூன் 1933 பக். 256-58.

பிரிவு 45-ன் பால் உங்கள் கவனத்தை திருப்ப நான் விரும்ப வில்லை. காரணம் அது நமக்கு நன்றாய்த் தெரிந்ததே. இந்தத் துறைகளின் அதிகாரம் பற்றி மட்டுமே நான் கேள்வி கேட்க விரும்புகிறேன். பிரிவு 52-ன் உட்பிரிவு (1)-ஐ பாருங்கள். அது இவ்வாறு கூறுகிறது: ''ஆளுநரின் ஆட்சிக்குட்பட்ட மாகாணத்தில் ஆளுநர் அவரது நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அல்லாதவர்களை அமைச்சர்களாக அரசாணை மூலம் நியமிக்கலாம்.''

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம்.

**1988:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நாம் துணைப் பிரிவு 3-க்கு வரும்போது, அது இவ்வாறு கூறுகிறது: ''மாற்றப்பட்ட துறைகளைப் பொறுத்தவரையில் ஆளுநர் அமைச்சர்களின் ஆலோசனையின் அடிப்படையில் செயல்பட வேண்டும். அவர் அமைச்சர்களின் ஆலோசனைகளையும் மீறி, சரியான காரணங் கள் இருக்கும் போது தன்னிச்சையாகச் செயல்படலாம்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம். அவ்வாறு செயல்படலாம்.

**1989:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்பிரிவு, எப்போ தெல்லாம் அமைதிக்கும் ஒழுங்குக்கும் ஊறு ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் ஆளுநர் அமைச்சர்களின் ஆலோசனையை மீறிச் செயல்படலாம் என்று குறிப்பிடவில்லை என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம். குறிப்பிடவில்லை.

**1990:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்போது வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது போல், குறிப்பிட்ட ஷரத்து எதுவும் இப்பிரிவில் இல்லை, அல்லவா?

*திரு. சச்சிதானந்த சின்கா:* அது இல்லைதான்.

**1991:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆளுநர் எப்போதெல் லாம் அமைச்சர்களின் ஆலோசனையின்படி செயல்பட வேண்டிய தில்லை என ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள 'செயலாணை ஆவண'த்தில் கூறப்பட்டுள்ளதைப் படித்துப் பாருங்கள்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* அந்த ஆவணம் இப்போது என்னிட மில்லை.

**1992:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பக்கம் 269-ல் நீங்கள் இதைப் பார்க்கலாம்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம். இதில் இருக்கிறது.

**1993:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 'செயலாணை ஆவணத் தின்' பக்கம் 270 வாக்கியப் பிரிவு VI இவ்வாறு சொல்கிறது: ''எந்த ஒரு விஷயத்திலும் ஓர் அமைச்சரின் ஆலோசனையைப் பரிசீலிக்கும்போதும், அவரது கருத்திலிருந்து மாறுபடுவதற்குப் போதிய காரணம் இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கும்போதும், சட்ட மேலவையுடன் அவருக்குள்ள உறவுகளையும், அந்த அவையில்

பிரதிபலிக்கப்படும் இந்த ராஜதானி மக்களின் விருப்பங்களையும் உரிய முறையில் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்,'' வேறு விதமாகச் சொன்னால், சட்டமன்றத்தின் அல்லது தொகுதி மக்களின் ஆதரவு அமைச்சர்களுக்கு இல்லை என்ற முடிவுக்கு ஆளுநர் வரும்போதுதான் அவர் அந்த அமைச்சரைப் புறக்கணித்து, அவரது ஆலோசனையை நிராகரிக்க முடியும், இல்லையா?

*திரு. சச்சிதானந்த சின்கா :* நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

**1994 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திட விரும்புகிறேன். 'அ' ஷரத்தின்படி அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு இப்போது ஆளுநருக்கு விசேட ரத்து அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது; ஆனால் மாற்றப்பட்ட துறைகளை நிர்வகிக்கும் தற்போதைய ஏற்பாட்டின்கீழ் அவர் இந்த விசேட அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியாது, அப்படித்தானே?

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம். அப்படித்தான்.

**1995 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இன்று சட்டம் ஒழுங்கு துறை 'ஒதுக்கப்பட்ட துறையில்' இருப்பதால் ஆளுநர் விரும்பும் எந்த ஒரு நடவடிக்கையும் இத்துறையின் வரைமுறைக்கு உட்பட்டு மேற்கொள்ள முடியும்?

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆமாம்.

**1996 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆனால் ஆளுநர் அமைச்சரிடம் இவ்வாறு கூற இயலாது: ''மாற்றப்பட்ட துறையின் அதிகாரங்களின் அடிப்படையில் நீங்கள் ஆலோசனை சொன்னாலும் நான் அதை ஏற்க இயலாது; ஏனெனில் அது அமைதி மற்றும் ஒழுங்குக்கு ஊறு ஏற்படுத்துவதாக இருக்கக் கூடும்.''

*திரு. சச்சிதானந்த சின்கா :* அவர் அப்படி கூற இயலாது.

**1997 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆக, அது பிற்போக்கு அம்சத்தைக் கொண்டதல்லவா?

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம். சந்தேகத்திற்கு இடமில்லை.

**1988 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இன்று அமைச்சர் தன்னுடைய துறையில் அவர் விரும்பும் எந்த ஒரு முடிவையும் எடுக்க இயலும். ஆனால், இந்த வெள்ளை அறிக்கையின்படி உருவாக இருக்கும் புதுத்திட்டத்தில் (வெள்ளை அறிக்கை நடைமுறைக்கு வரும்போது) ஒவ்வொரு துறையும் மாற்றப்பட்ட துறையாகி விடும். ஆனால் அமைதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் பொருட்டு, தற்போது சட்டம்-ஒழுங்குத் துறையில் மட்டுமே பயன்படுத்தப்படும் ஆளுநரின் தடை அதிகாரம் வெள்ளை அறிக்கை நடைமுறைப்படுத்தப்படும்போது அனைத்துத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம்.

**1999:** இந்த வகையில் அனைத்துத் துறைகளும் மாற்றப்பட்ட துறைகளாக இருந்தும் அவைகளின் அதிகாரங்களும் பொறுப்பு களும் குறைக்கப்பட்டு விடுகின்றன.

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் இப்போது அரசுப் பணி கள் குறித்த பிரச்சினைக்கு வருகிறேன். நீங்கள் பிற்சேர்க்கை 7-ஐப் பாருங்கள்.

*விஸ்கவுண்ட் பர்ன்ஹம் :* மதிப்புமிக்க தலைவர் அவர்களே, எனக்கு ஏற்பட்டுள்ள ஓர் ஐயத்தை இங்கு கூற விரும்புகிறேன். மாகாண ஆளுநர்களின் தற்போதைய அதிகாரங்கள் பற்றிய விளக்கத்தை நாம் பார்த்தோம். ஆனால், அவ்வதிகாரங்கள் எதில் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பது கூறப்படவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்திய அரசுச் சட்டம் பிரிவு 52 (1)-ஐ ஏற்கனவே உங்களது கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

*விஸ்கவுண்ட் பர்ன்ஹம் :* எந்த அதிகாரத்தின்கீழ் இந்த விளக் கம் தரப்படுகிறது?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* எனக்குத் தெரியவில்லை.

*விஸ்கவுண்ட் பர்ன்ஹம் :* இந்த விளக்கத்தைத் தரும்படி உங்க ளுக்கு அதிகாரம் அளித்தவர் யார்?

**2000:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இது சட்டம் குறித்த என்னுடைய சொந்த விளக்கம். அதைச் சாட்சிகளும் ஏற்றுக் கொண்டனர். நான் அச்சட்டத்தின் 52-வது பிரிவிலிருந்தும், செயலாணை ஆவணத்திலிருந்தும் இவ்விளக்கம் கூறுகிறேன். பணியாளர்கள் பற்றிய பிரச்சினைக்கு நாம் வருவோம்; பிற் சேர்க்கை 7-ஐப் பாருங்கள். அதில் உள்ள ஒவ்வொரு பொருள் குறித்தும் நாம் விவாதிக்க வேண்டியதில்லை. இக்குறிப்பின்படி, இந்திய அமைச்சகம் பணியாளர்களின் பணிநிலையை வரன் முறைப்படுத்தவும், வகைப்படுத்தவும் உள்ள அதிகாரத்தைத் தொடர்ந்து தன்னிடத்தில் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

*திரு. சச்சிதானந்தா சின்கா :* ஆம்.

**2001:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் தற்போது உங்க ளைப் பகுதி 96 'பி'-ல் துணைப்பகுதி (2)-ஐப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அது இவ்வாறு கூறுகிறது: ''இந்திய அமைச்சகம் அரசுப் பணியாளர்களை வகைப்படுத்தும் முறை களையும், தேர்வு செய்யும் முறைகளையும், அவர்களின் பணி நிலைமை, ஊதியம், சலுகைகள், ஒழுக்கம் மற்றும் நன்னடத்தை யையும் நெறிப்படுத்தும் அதிகாரங்களைப் பெற்றுள்ளது.''

மேலும், ''சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டு இவ்வதிகாரங்களை கவர்னர் ஜெனரலுக்கும் அவரது நிர்வாக சபைக்குமோ, மாகாண அரசிற்கோ அல்லது இந்தியச் சட்டமன்றத்திற்கோ இந்தியா அமைச்சகம் வழங்கலாம்.''

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம். அவ்வாறு செய்யலாம்.

**2002 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆக, இந்திய அரசுச் சட்டத்தைக் கூர்ந்து நோக்கும்போது அதை இயற்றும் போதிருந்த உள்நோக்கம் அரசுப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் அவர்களது பணி நிலைமைகள் குறித்த விதிமுறைகளை வகுக்கும் அதிகாரத்தைத் தலைமை ஆளுநர் அல்லது இந்தியச் சட்டமன்றங்கள் ஆகியவற்றுக்குக் கொடுக்க வேண்டும் என்பதேயாகும், சரிதானே?

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம். சரிதான்.

**2003 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மேலும் அச்சட்டத்தின் உள்நோக்கம் புதிதாக அறிமுகப்படுத்த இருக்கும் அரசு முறைக் கேற்ப அரசுப் பணியாளர்களுடைய பணி நிலைமைகளும் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதுமாகும், இல்லையா?

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆம். அதுதான் அதனுடைய உட்பொருள்.

**2004 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பிற்சேர்க்கை 7-ல் குறிப்பிட்டுள்ளவாறு ஒருவேளை சட்டங்கள் இயற்றப்படுமானால் இந்திய அரசுச் சட்டத்தில் கூறியுள்ளபடி, இந்திய அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தடைபடும்.

*திரு. சச்சிதானந்த சின்கா :* ஆகவேதான் நான் அரசுப் பணியாளர்கள் குறித்த இத்திட்டம் இந்தியர்களுக்கு மனநிறைவு அளிக்காது என்று என் கருத்துரையில் குறிப்பிட்டேன்.

**2005 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியா அமைச்சகம் இப்போது கையாண்டுவரும் இந்த அதிகாரங்கள் உகந்த நிலைமைகளின்கீழ் இந்திய சட்டமன்றத்திற்கு மாற்றப்படுவது முற்றிலும் அவசியமாகும்; இந்திய அரசுச் சட்டத்திலேயேகூட இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது, இல்லையா?

*திரு. சச்சிதானந்த சின்கா :* சரி.

**2006:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இவ்வெள்ளை அறிக்கையின் திட்டங்களுக்குச் செயல்வடிவம் தரப்படுமானால் அதிகாரப் பகிர்வு தடைபடும்.

*திரு. சச்சிதானந்த சின்கா :* நிச்சயமாகத் தடைபடும்.

**2007:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசுப் பணியாளர்கள் தொடர்பாக ஆளுநருக்கு சில விசேஷ அதிகாரங்கள் இருக்கின்றன. அவற்றை இங்கு பார்ப்போம். உதாரணமாக, 121-ஆம் பக்கத்தில்

உள்ள 14-ஆவது ஷரத்து ''எந்த அதிகாரியையும் கண்டிப்பதற்கு ஆளுநரின் ஒப்புதல் வேண்டும்'' என்கிறது; 15-ஆவது ஷரத்து ''எந்த நியமனத்துக்கும் ஆளுநரின் சம்மதம் தேவை என்று கூறு கிறது; 16-ஆவது ஷரத்தோ ''மேலதிகாரியின் எந்த ஓர் ஆணை யையும் எதிர்த்து ஆளுநரிடம் மேல்முறையீடு செய்து கொள்ள லாம்'' என்று சொல்கிறது; இத்யாதி, பணிநிலைகள் குறித்த இந்த அதிகாரங்கள் உண்மையில் முடிவானவை அல்ல; அவை பரிணா மக் கட்டத்தில்தான் இருக்கின்றன. அமைச்சர்களின் எதிர் நடவடிக் கைகள் எப்படி இருக்கும் என்று எவருக்கும் நிச்சயமாகத் தெரி யாததால்தான், இந்த விதிகள் இயற்றப்பட்டன என்று கூறலாம்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, உங்கள் கேள்வி என்ன?

*2008: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என்னுடைய கேள்வி இதுதான். இங்கு நான் உங்களது கவனத்திற்குக் கொண்டுவந்த சில பணிநிலை விதிகள் சோதனை முறையில் வகுக்கப்பட்டவையே ஆகும். மக்கள் ஆதரவு பெற்ற ஓர் அமைச்சருக்கும் சிவில் பணித் துறைக்கும் இடையேயான உறவின் இறுதி முடிவு எவ்வாறிருக்கும் என்பதைக் கண்டறிவதற்கே இந்த விதிகள் இயற்றப்பட்டன இல்லையா?

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம்.

*2009: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவை முடிவானவை என்று கருத முடியாது.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம். நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

*2010: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்போது உள்ளது போலவே அவை இயற்றப்படுமானால், பொறுப்புவாய்ந்த அரசுக் கும் அரசுப் பணியாளர்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை உருவாக்கும் செயல்முறை தடைபடும் என நான் மறுபடியும் சொல்கிறேன்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம்.

*2011: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த மத்தியப் பொறுப் பாட்சியைப் பற்றி உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகின் றேன். நீங்கள் 'கூட்டமைப்பின்' ஆரம்ப நாளை நிர்ணயிப்பதில் அதிக அக்கறை காட்டுவதாகச் சர் ஹென்றி கித்னேயின் கேள்விக் குப் பதில் அளிக்கும் போது கூறினீர்கள்.

*திரு. சச்சிதானந்த சின்கா:* ஆம்.

*2012: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* குறிப்பிட்ட காலத்திற் குள் சமஸ்தான மன்னர்கள் கூட்டமைப்பில் சேராத சூழ்நிலை இருப்பதால் குறிப்பிட்ட நாளைக் குறிப்பது இயலாது என்பதை நீங்கள் உணர்வீர்கள். இதை நீக்கச் சில தற்காலிக ஷரத்துக்கள்

இந்த வெள்ளை அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளதையும் நீங்கள் அறிவீர்கள். உங்களுடைய கருத்தைப் பெறும் நோக்கில் நான் உங்களிடம் கேட்க விரும்புவது இதுதான்: தேவையான எண்ணிக் கையில் மன்னர்கள் சேர்வது குறித்த கூட்டமைப்பின் அம்சத்தைத் தவிர்த்து, மத்திய சட்டமன்றத்தில் அலுவலர் மற்றும் அலுவலர் அல்லாதார் கொண்ட நியமன உறுப்பினர்களை வைத்துக் கூட் டமைப்பை உடனே அமைக்கும் எனது கருத்தை நீங்கள் எதிர்க் கிறீர்களா?

*திரு. சச்சிதானந்த சின்கா:* இப்போது என் கருத்தைக் கூற இயலாது; உங்களுடைய கருத்தை நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். நீங்கள் கூறியுள்ள கருத்து ஆய்ந்தறிய வேண்டிய ஒன்று.

*2013: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தக் கருத்தில் தெளிவு பெற நான் விரும்புகிறேன். பிரிட்டிஷ் இந்தியா இந்திய மன்னர்களுடன் சேர்ந்து கூட்டமைப்பை ஏற்படுத்திய பிறகே பொறுப்பாட்சி உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் உங்க ளுக்கு உடன்பாடு இல்லை என நான் நினைக்கிறேன்?

*திரு. சச்சிதானந்த சின்கா:* எந்தக் கருத்தையும் இப்போது வெளியிட நான் விரும்பவில்லை. ஏனென்றால் வெள்ளை அறிக்கையில் கூறப்பட்ட திட்டங்கள் அனைத்தும் வட்டமேசை மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்று நான் அறிந்துள் ளேன்.

*2014: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இவ்வாறு கூறு கிறேன்: வெள்ளை அறிக்கை ஒருபுறம் இருக்க, கூட்டமைப்பு இல்லாமலேயே பிரிட்டிஷ் இந்தியா மத்தியப் பொறுப்பாட்சியைக் கொண்டிருக்க முடியும் என நீங்கள் சொல்லவோ ஏற்கவோ இயலாது அப்படித்தானே?

*திரு. சச்சிதானந்த சின்கா:* இல்லை, வெள்ளை அறிக்கைக்கு அப்பாற்பட்டு நான் எதுவும் சொல்வதற்கில்லை.

*திரு. பட்லர்:* மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொடர்ந்து விவாதிப்பதற்கு முன்னால் நான் இதைச் சொல்ல விரும்பு கிறேன்: இந்திய அரசுச் சட்டத்தின் அடிப்படையில் இந்த விவாதங் களின் பொருள்களை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. குறிப்பாக, இந்திய அரசுச் சட்டம் பகுதி 52 வாக்கியப் பிரிவு VI-ல் குறிப்பிட்டுள்ளபடி இப்போதுள்ள அரசின் வரையறை களை நாங்கள் ஏற்றுக் கொள்ள இயலாது.

## 3

## மன்னர்களின் சபை சார்பாக திரு. மீர் மக்பூல் மாமூது, டாக்டர் பி. கே. சென், திரு. கே. எம். பணிக்கர் மற்றும் திரு. டி. காக்

***3000:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தக் கேள்விகள் மூலம் நான் தெரிந்து கொள்ளும் கருத்து இதுதான்: ''இந்த வெள்ளை அறிக்கையில் கூட்டமைப்பைத் துவக்க ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது; அது குறிப்பிட்ட அளவு சுதேச சமஸ்தானங்கள் சேர வேண்டும் என்பதே. மேலும், நிதியை மாற்றுத் துறைக்குக் கொண்டுவர, வங்கி ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற முக்கியமான நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. இச்சூழலில் நான் கேட்க விரும்பும் கேள்வி நிதி மாற்றுத் துறைக்குப் போகாவிட்டால் மன்னர்கள் கூட்டமைப்பில் சேரத் தயாராய் இருப்பார்களா?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* இந்த கேள்விக்குப் பதிலளிக்க எனக்கு எதுவும் நிச்சயமாகத் தோன்றவில்லை. ஆனால் இன்றைய சூழலில் மன்னர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை.

**3001:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆக, நிதி ஒரு மாற்றப்பட்ட துறையாக ஆக்கப்படாவிட்டால் அவர்கள் கூட்டமைப்பில் சேர இணங்க மாட்டார்கள்?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* நான் அப்படி நினைக்கவில்லை.

**3002:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சரி. நாம் வேறு சில விசயங்களுக்கு வருவோம். கடந்த முறை நீங்கள் சாட்சியம் அளித்த போது எல்லா மன்னர்களும் கூட்டமைப்பில் உடனே சேரா விடில், வேறொரு முறையை அறிமுகப்படுத்தலாம் என்றீர்கள். அதன்படி யார் கூட்டமைப்பில் சேர்கின்றார்களோ அவர்கள் சேராதவர்களின் வாக்கையும் பயன்படுத்தலாம். நான் சொல்வது சரிதானே?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* இது அச்சூழலின் ஒரு பக்கத்தை மட்டுமே பிரதிபலிக்கின்றது.

**3003.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது நீங்கள் மேற்கொள்ளும் நிலைதானே?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* ஆம். ஆனால் அது பாதி உண்மை; முழு உண்மை அல்ல; நாம் இரண்டு அனுமானங்களை இதிலிருந்து பெறலாம்.

**3004.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 'நாடுகளின் கூட்டரசு' என்ற உங்களுடைய நிலை எனக்குத் தெரியும்.

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு, தொகுதி II(அ) 27 ஜூன், 1933, பக். 272-276.

*திரு. மீர் மக்பூல் மாமூது:* நான் அதைக் கூறவில்லை. நான் கூறிய இரண்டு விசயங்களில் ஒன்று கூட்டமைப்பில் சேரும் சுதேச சமஸ்தானங்கள் சட்ட மேலவையில் 40 விழுக்காடு உறுப்பினர் களையும் கீழவையில் 3-ல் 1 பங்கு உறுப்பினர்களையும் கொண் டிருக்கும். இது கூட்டமைப்பில் தனித்தனியாக சேரும் சமஸ்தானங் கள் சம்பந்தப்பட்டதாகும். இன்னொன்று, இக்கூட்டமைப்பில் சேராத சுதேச சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்டது. கூட்டமைப்பின் முடிவுகள் அவற்றையும் பாதிக்கும். மேற்கண்ட இரண்டும்தான் நான் கூற வந்தவை. நீங்கள் கூறியது நான் இரண்டாவதாக சொல்லியது சம்பந்தப்பட்டது என்று நினைக்கிறேன்.

*3005. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் தற்போது குறிப் பிட விரும்பும் கருத்தில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டு மென்று விரும்புகிறேன். நாம் கடந்த முறை விவாதிக்கும் போது ஒரு நிபந்தனையை நீங்கள் குறிப்பிட விரும்பினீர்கள்: அதாவது கூட்டரசில் அனைத்துச் சுதேச சமஸ்தானங்களும் சேராத போது, சேர்கின்றவற்றுக்குச் சேராத நாடுகளின் வாக்குகளையும் மிகைப் பட்ட வாக்குகளாக வழங்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. அதுதானே அன்றைய நிலை?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* ஆம்.

*3006: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்சமயம் இது குறித்து நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்: சேர விரும்பாத நாடுகளுக்கு, சேர்ந்த சமஸ்தானங்களின் சார்பில் வாக்களிக்கும் போது, சேராத சமஸ்தானங்களில் மைய சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் குறித்து அவற்றின் நிலை என்ன? மத்தியச் சட்டங்கள் அந்த சமஸ்தானங்களில் செயல்படுமா?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* இன்றைய நிலைபோலவே இருக்க லாம்.

*3007: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இல்லை; என் கேள்வி இது. மையச் சட்டம் கூட்டமைப்பில் சேராத சமஸ்தானங்களில் செயல்படுவதாக இருக்குமா? ஏனெனில் சேராத சமஸ்தானங் களின் வாக்குகளைச் சேர்ந்த சமஸ்தானங்கள் பயன்படுத்தி உள்ளன.

*திரு. மீர் மக்பூல் மாமூது:* சில வரிவிதிப்பு முறைகளில் இது பொருந்தலாம். ஆனால், மற்ற விஷயங்களில் பேச்சு வார்த்தை மூலமே இது செயல்வடிவம் பெறும்.

*3008: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சேராத சமஸ்தானங் கள் இந்தியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களாகக் கருதப்படுமா?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* இல்லை. அப்படி கருத முடியாது.

*3009: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆக சேராத சமஸ் தானங்கள் கூட்டமைப்பின் உறுப்பினர்களாகக் கருதப்பட மாட்டா.

திரு. மீர் மக்பூல் மாமூது: ஆமாம். கருதப்பட மாட்டா.

3010: டாக்டர் அம்பேத்கர்: இருந்த போதும் அவற்றின் வாக்குகளை மட்டும் பயன்படுத்தலாமா?

திரு. மீர் மக்பூல் மாமூது: ஆம். கனடா நாட்டு அரசியல் அமைப்புச் சட்டம் விதி 147-ஐப் பயன்படுத்தி,. நோவாஸ்கோசியாவும், நியூ புரூன்ஸ்விக்கும் எட்வர்டு தீவின் வாக்கைச் செனட் சபையில் அளித்தது போலவே இங்கும் பயன்படுத்தலாம்.

3011: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நான் இப்போது தேசிய பண்பு பற்றிச் சில கேள்விகள் கேட்க விரும்புகின்றேன். உங்களில் யார் பதில் தரப் போகின்றீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. சுதேச சமஸ்தானங்களில் வாழும் மக்கள் பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்தவரைச் சட்ட ரீதியாக அந்நியர்கள் என்பது பொதுவான கருத்து.

திரு. கே. எம். பணிக்கர்: அவர்கள் பிரிட்டிஷாரின் பாதுகாப்பில் இருக்கும் மக்கள்; சட்டத்தின் பார்வையில் அந்நியர்கள்.

3012: சர். ஹரிசிங் கவுர்: அவர்கள் பிரிட்டிஷ் குடிமக்கள் இல்லை, அல்லவா?

திரு. மீர் மக்பூல் மாமூது: ஆம். அவர்கள் பிரிட்டிஷ் குடிமக்கள் இல்லை.

3013: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: பிரிட்டிஷ் இந்தியாவில் அவர்கள் வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் வருகிறார்கள்.

திரு. மீர் மக்பூல் மாமூது: நான் அவ்வாறு நினைக்கவில்லை.

3014: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நான் சொல்வதைச் சற்று கேட்பீர்களா? அவர்கள் அவ்வாறுதான் எண்ணப்படுவார்கள். எனினும் எது எப்படி இருந்தாலும் அவர்கள் பிரிட்டிஷ் குடிமக்கள் அல்லர் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. நீங்கள் அகில இந்திய கூட்டமைப்புக்கு மிகவும் பொருந்துவதும் நிலையானதுமான இந்திய தேசியத்தை இதுவரை பரிந்துரைக்கவில்லை என்றே நான் எண்ணுகிறேன்.

திரு. மீர் மக்பூல் மாமூது: அது இதுவரை எதிர்பார்க்கப் படாதது.

3015: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்நிலை இப்படியே தொடருமானால், 'அந்நியர்கள்' என்று கருதப்படும் இந்திய சுதேச சமஸ்தானத்து மக்கள், பிரிட்டிஷ் அரசின் குடிமக்கள் ஆகாமலேயே வாக்குரிமை பெறத் தகுதி உடையவர்களாகவும், மத்திய மற்றும் மாநிலச் சட்டமன்றங்களில் உறுப்பினர்கள் ஆவதற்குத் தகுதி பெற்றவர்களாகவும், பிரிட்டிஷ் மன்னரின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகளாகப் பதவி பெறத் தகுதி பெற்றவர்களாகவும் ஆகலாம் என நான் முடிவுக்கு வர முடியுமல்லவா?

திரு. மீர் மக்பூல் மாமூது: அது இப்போதும் சாத்தியம்.

***3016 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :*** ஆம். அது சாத்தியம் என்று எனக்கும் தெரியும்.

*திரு. மீர் மக்பூல் மாமூது :* இப்போதும்கூட அது நடந்துள்ளது.

***3017 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:*** ஆனால் நான் கேட்க விரும்புவது இதுதான்: இது முரண்பாடானது என நீங்கள் கருத வில்லையா?

*திரு. மீர் மக்பூல் மாமூது :* நாங்கள் அப்படி கருதவில்லை.

***3018 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :*** எந்த ஓர் அரசியலமைப் பிலாவது, ஓர் அந்நியன் வாக்குரிமை பெறத் தகுதியுள்ளவனாக வும், சட்டமன்ற உறுப்பினனாகும் தகுதி பெற்றவனாகவும், நம்பிக் கைக்குரிய அதிகாரியாகும் தகுதிபெற்றவனாகவும் இருக்கும் நிலையை நீங்கள் எனக்குக் காட்ட முடியுமா?

*திரு. மீர் மக்பூல் மாமூது :* நம் மதிப்பிற்குரிய பிரதிநிதி சர் பி. பட்டாணி அவர்கள் கூட நிர்வாகக் குழுவின் ஒரு உறுப் பினராக இருக்கின்றாரே!

***3019 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :*** அது எனக்குத் தெரி யும். இது எந்த ஒரு கூட்டமைப்பிலும் காணப்படாத ஒரு முரண் பாடான நிலையென்பதே நான் இங்கு வலியுறுத்த விரும்புவது.

*திரு. மீர் மக்பூல் மாமூது :* இந்நிலையில் நான் எந்த ஒரு சான்றையும் இங்குக் காட்ட இயலாது.

***3020 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் ;*** இந்திய சுதேச சமஸ் தானத்தின் குடிமகன் ஒருவன் வெளிநாட்டவர் சட்டத்தின் கட்டுப் பாட்டில் வந்த போதிலும், பிரிட்டிஷ் மன்னரின் நம்பிக்கைக்குரிய பதவியில் அமரும் நிலை ஒரு பரந்த முறை என்று நீங்கள் கருது கிறீர்களா?

*திரு. மீர் மக்பூல் மாமூது :* அவன் அரசியலமைப்புச் சட்டத்தின் படி நடப்பதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கும் வரை நீங்கள் கூறியது போன்று பதவியில் இருக்கலாம்.

***3021: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :*** அப்படியானால் இந் நிலையில் அவன் வெளிநாட்டவர் சட்டத்தின் கட்டுப்பாட்டி லிருந்து விடுபடும் நிலைவருமா?

*திரு. மீர் மக்பூல் மாமூது :* நீங்கள் அச்சட்டத்தை மறுபரிசீ லனை செய்ய விரும்பினால் அவ்வாறு செய்யலாம்.

***3022 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :*** இதைத்தான் நான் கூற விரும்பினேன். ஆக ஒரு பொது இந்திய தேசியப் பண்பு இருப்பது விரும்பத்தக்கதில்லையா?

*திரு மீர் மக்பூல் மாமூது:* இந்த நிலையின் சட்டச் சிக்கல்களை நாம் ஆராயவில்லை என்று நினைக்கிறேன்.

***3023. திரு. ஜெயகர்:*** பொது தேசியப் பண்பு என்னும் இந்தப் பிரச்சினையை சமஸ்தான மன்னர்கள் பரிசீலிக்கவே இல்லையா?

திரு. மீர் மக்பூல் மாமூது: ஆம். அவர்கள் பரிசீலித்தனர்.

3024: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை?

டாக்டர் பி. கே. சென்: சுதேச சமஸ்தான பிரஜைகள் சமஸ்தான மன்னர்கள் மீது விசுவாசம் காட்டுவதுடன் பிரிட்டிஷ் அரசின்பாலும் விசுவாசம் காட்டுவதை சமஸ்தானாதிபதிகள் மறுக்கவில்லை. இங்ஙனம் கூடுதல் விசுவாசத்தைச் சமஸ்தான பிரஜைகள் கொண்டிருப்பதால் அவர்களும் பிரிட்டிஷ் இந்திய மக்கள் கொண்டிருக்கும் சலுகைகளையும் பெறலாம்.

3025: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: சட்டநிலைமை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றித்தான் நான் பேசுகிறேன்.

திரு. மீர் மக்பூல் மாமூது: நீங்கள் கூறுவது போல் ஓர் ஒப்புமை எவ்வகையிலும் இச்சிக்கலுக்கு உதவாது என நினைக்கிறேன். ஏனெனில் பிரிட்டிஷ் அரசுடன் சுதேச சமஸ்தானங்களும் வைத்திருக்கும் தொடர்பு தனித்தன்மை வாய்ந்தது. ஆகையால் ஒப்புமைப்படுத்திப் பார்ப்பதின் மூலம் நீங்கள் எதையும் பெரிதாகச் சாதித்துவிட முடியாது. ஆனால், தேசியப் பண்பு பற்றிய பிரச்சினை மிகவும் முக்கியமானதுதான். இதைப் பரிசீலிப்பதின் மூலமே நாம் ஒரு முடிவுக்கு வர இயலும் என நான் நம்புகிறேன். சாட்சிகளை விசாரிப்பதின் மூலம் மட்டும் இதில் எழும் சட்டச் சிக்கல்களுக்கு முடிவுகாண முடியும் என்று நான் எண்ணவில்லை. இதுபோன்ற தனித்தன்மை வாய்ந்த கருத்துகளுக்கு ஒப்புமை எவ்விதத்திலும் பயன்தராது. இந்த நிலை உலகின் வேறு எந்த நாட்டிலும் இருக்கிறதா இல்லையா என்று ஆராய்வதும் பயன் தராத ஒன்றாகும். ஏனெனில் இந்நிலை தனித்தன்மை வாய்ந்த ஒன்று. சமஸ்தான பிரஜைகள், ஒருபுறம் தங்கள் மன்னருக்கும் இன்னொரு புறம் ஆங்கில அரசுக்கும் விசுவாசம் கொண்டடிருக்கிறார்கள். இந்நிலையில் இதன் சட்டச் சிக்கலையும், இதன் பின் விளைவுகளையும் நன்கு ஆராய்ந்து முடிவுக்கு வர வேண்டும். இதுபோன்று, சாட்சியம் எடுக்கும் முறையின் மூலம் இச்சிக்கலுக்கு வழி காண முடியாது.

3026: திரு. எம். ஆர். ஜெயகர்: ஆக, இந்தப் பிரச்சினையை பொறுத்தவரை சுதேச சமஸ்தானங்கள் உறுதியான, திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரவில்லை என நான் கருதலாமா?

திரு. மீர் மக்பூல் மாமூது: இல்லை.

3027: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நீங்கள் இச்சூழ்லை முரண்பாடானதும் ஆழந்து சிந்திக்க வேண்டியதுமானது என்று கூறியது எனக்கு மனநிறைவைத் தருகிறது.

திரு. மீர் மக்பூல் மாமூது: சந்தேகத்திற்கு இடமின்றி இது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய சிக்கல்.

*3028: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இப்போது கூட்டமைப்பின் நீதிமன்றம் பற்றி ஒரு கேள்வி எழுப்ப விரும்பு கிறேன். நீங்கள் வெள்ளை அறிக்கையின் பத்தி 155-ஐச் சிறிது பார்க்கிறீர்களா? இதில், ஒரு இந்திய சமஸ்தானத்தின் குடிமகனுக் கும் ஒரு பிரிட்டிஷ் இந்திய மாகாணத்தின் குடிமகனுக்கும், அதேபோல் ஒரு பிரிட்டிஷ் இந்திய மாகாணத்தின் குடிமகனுக்கும் ஒரு இந்திய சமஸ்தானத்தின் குடிமகனுக்கும் இடையே எழும் எந்த ஒரு தகராறிலும் தலையிட்டுத் தீர்வுகாணும் ஆட்சியதிகாரம் கூட்டமைப்பு நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டதாக எந்த அம்ச மும் இல்லை என்பதை நீங்கள் காணலாம். இந்தப் பிரச்சினைக் குத் தீர்வுகாண ஓர் அமைப்புத் தேவை என்பதை நீங்கள் ஏற்க வில்லையா?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* வெள்ளை அறிக்கையை நான் புரிந்து கொண்டவரை, இரண்டு சுதேச சமஸ்தானங்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சினை, சுதேச சமஸ்தானத்திற்கும் மாநிலத் திற்கும் ஏற்படும் பிரச்சினை, சுதேச சமஸ்தானத்திற்கும் கூட்டமைப் பிற்கும் ஏற்படும் பிரச்சினை ஆகியவை மட்டுமே பத்தி 155-ன் படி ஏற்றுக்கொள்ளத் தக்கவை. தனிப்பட்டவரின் பிரச்சினை யைப் பொறுத்தவரை, கூட்டமைப்பின் நீதிமன்றத்திற்கு அதை விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் 'உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்'படியே அது உறுதி செய்யப் படும். இச்சட்டத்தின்படி எங்கு வழக்கின் தொடக்கம் தோன்றி யதோ அங்கோ அல்லது எங்கு எதிர்த்தரப்பினர் இருக்கின்றாரோ அங்கு தான் வழக்கைத் தொடர முடியும்.

*3029: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு அது அல்ல கேள்வி. கூட்டமைப்பு நீதிமன்றம் இத்தகைய அதிகாரம் பெற்றிருக் கிறதா? இதுதான் கேள்வி.

*திரு. மீர் மக்பூல் மாமூது:* இல்லை; கூட்டமைப்பு நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருக்கும் என்று கருதவில்லை.

*3030: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒருவேளை மைய சட்டத்தின் கீழ் ஒரு வழக்கு வந்தால் அதைத் தீர்மானிக்க வேண் டிய உரிமை கூட்டமைப்பு நீதிமன்றத்திற்கு இருக்காதா? இது போன்ற வழக்கில் மத்திய சட்டத்துக்குரிய வழக்கு என்று கருது வதா அல்லது உரிமையியல் வழக்கு மன்றத்திற்குரிய வழக்கு என்று கருதுவதா?

*திரு. மீர் மக்பூல் மாமூது:* இதுபோன்ற வழக்கில் பிரிட்டிஷ் இந்தியாவில் அல்லது சுதேச சமஸ்தானத்தில் அந்த வழக்கு எழுந்த தாகக் கருதப்படும். நாம் மேல் முறையீடு பற்றிய பிரச்சினைக்கு வருவோம்.

*3031: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால், இந்த உரிமை யியல் வழக்குப் பரந்த வரையறைகளைக் கொண்டதால் அது கூட்டமைப்பு நீதி மன்றத்தின் ஆளுகைக்குள் வரும்.

*திரு. மீர் மக்பூல் மாமூது :* நான் அவ்வாறு நினைக்கவில்லை.

*3032 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் இங்கு உங்கள் கவனத்தைப் பத்தி 155-ன் ஷரத்துக்கு திருப்ப விரும்புகிறேன். அதில் கூட்டமைப்பு நீதிமன்றம் இயற்றும் சட்டத்தினால் ஒரு குடி மகனுடைய உரிமைகள் சுதேச சமஸ்தான ஆட்சியினால் பாதிக்கப் படும்போதோ அல்லது ஒரு சமஸ்தான குடிமகனின் உரிமை இந்திய மாகாணத்தால் பாதிக்கப்படும் போதோ அதை நீக்க எந்த ஷரத்தும் இல்லை.

*திரு. மீர் மக்பூல் மாமூது :* இது வெளிப்படையாகத் தெரிந்ததே.

★ ★ ★ ★ ★

*3026 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் உங்கள் குறிப் பறிக்கையின் பத்தி ஜி-ல் ஆவணம் 21-ல் துணைப் பத்தி(சி)யைத் தயவு செய்து பார்க்கிறீர்களா?

*திரு. மீர் மக்பூல் மாமூது :* பார்க்கிறேன்.

*3037 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அப்பத்தியின் முடிவில், ஒரு குறிப்பிட்ட சமஸ்தானம் கூட்டமைப்பு நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றத் தவறுமாயின் அரசுப் பிரதிநிதிக்கு (வைசிராய்) அதைச் செயல்படுத்தும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும்' எனக் கூறியுள்ளீர்கள்.

*டாக்டர் பி. கே. சென் :* ஆமாம். கூறியுள்ளேன்.

*3038 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் ஏன் அவ்வதி காரத்தை அரசுப் பிரதிநிதிக்குப் பதிலாகத் தலைமை ஆளுநருக்கோ அல்லது கூட்டமைப்பின் அமைச்சரவைக்கோ கொடுக்க விரும்ப வில்லை? கூட்டமைப்பு நீதிமன்றம் கூட்டமைப்பின் அரசியல் சட்டத்தின் ஒரு பகுதிதானே?

*டாக்டர் பி. கே. சென் :* கூட்டாட்சி நீதிமன்றத்தின் ஆணையை ஒரு சமஸ்தானம் செயல்படுத்தாத போது, அதைச் செயல்படுத்தும் அதிகாரம் பெற்றவர் அரசுப் பிரதிநிதியே.

*3039 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசுப் பிரதிநிதி எதற்கு? ஏன் தலைமை ஆளுநர் அல்லது கூட்டாட்சி அமைச் சரவை இருக்கின்றதே? அதற்கு ஏன் அரசுப் பிரதிநிதி?

*டாக்டர் பி. கே. சென் :* ஏனெனில் அரசுப் பிரதிநிதி, அரசின் முக்கிய பிரதிநிதி என்ற முறையில் இந்திய சமஸ்தானங்கள் செய்ய வேண்டிய பணியைச் செய்யுமாறு பார்த்துக் கொள்ள வேண்டி யது அவருடைய பொறுப்பாகும்.

*3040 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இல்லை. எனக்கு மாறு பட்ட கருத்து உண்டு. அதை உங்களுக்குக் கூறுகிறேன். கூட்டாட்சி நீதிமன்றம் கூட்டாட்சி அரசு அமைப்பின் ஓர் அங்கம். வெள்ளை அறிக்கையின்படி தலைமை ஆளுநரே கூட்டமைப்பின் தலைவர்.

மாறாக அரசுப் பிரதிநிதி அல்லர். ஆகவே, இந்த அதிகாரத்தைப் பெற வேண்டிய ஒருவர் தலைமை ஆளுநரே தவிர அரசுப் பிரதி நிதியல்லர்.

*டாக்டர் பி. கே. சென் :* தலைமை ஆளுநர் கூட்டமைப்பு அமைச்சரவையின் தலைவர் அல்லது தலைமை ஆளுநர் என்ற முறையில், கூட்டாட்சி நீதிமன்றத்தின் ஆணையைச் சமஸ்தானம் செயல்படுத்தாத போது, அப்பிரச்சினையை வெளிக்கொணரும் அதிகாரம் மட்டும் பெற்றிருக்கிறாரா அல்லது அந்த ஆணையைச் சமஸ்தானத்தில் நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தையும் பெற் றிருக்கின்றாரா? என்பதுதான் இங்குக் கேள்வி.

**3041:** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என்னைப் பொறுத்த வரை தலைமை ஆளுநரே இவ்வாணையைச் செயல்படுத்தும் அதிகாரம் பெற்றிருக்கிறார். அரசுப் பிரதிநிதியல்லர். அரசுப் பிரதிநிதி இவ்விஷயங்களில் ஆங்கில அரசின் பிரதான பிரதிநிதி என்று மட்டுமே இருப்பார்.

*டாக்டர் பி. கே. சென் :* தலைமை ஆளுநரின் அதிகாரம்தான் என்ன? அரசுப் பிரதிநிதியே அரசின் பிரதான பிரதிநிதி என்ற முறையில் மேற்கூறிய பொருள் குறித்துச் செயல்பட வேண்டும் என்பதே பொதுக்கருத்து.

**3042 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் சொல்ல வந்த தைத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேனா என்பதே எனக்குத் தெரியவில்லை. கூட்டாட்சி நீதிமன்றம் கூட்டாட்சியின் ஓர் அங்கம் என்பது எனது கருத்து.

*டாக்டர் பி. கே. சென் :* சந்தேகத்திற்கு இடமில்லாமல், அப்படித்தான்.

**3043 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* கூட்டாட்சி அமைப் பின் தலைவர் தலைமை ஆளுநரேயல்லாமல் அரசுப் பிரதிநிதி யல்லர்.

*டாக்டர் பி. கே. சென் :* சரிதான்.

**3044 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இதனடிப்படையில், கூட்டாட்சி நீதித்துறையின் முடிவுகளைச் செயல்படுத்த வேண்டி யது தலைமை ஆளுநரேயல்லாமல் அரசுப் பிரதிநிதியல்லர். ஏனெனில், நீதித்துறைக் கூட்டாட்சி அமைப்பின் ஓர் அங்கம். மேலும் தலைமை ஆளுநருக்கு மட்டுமே இவ்வதிகாரம் கொடுக்கப் பட்டிருக்க வேண்டும்.

*டாக்டர் பி. கே. சென் :* தலைமை ஆளுநரின் செயல் முறைகள் அரசுப் பிரதிநிதி மூலமாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே சரியான வழிமுறை என்று இதிலிருந்தெல்லாம் தெரி வதாக நான் கூற நினைக்கிறேன்.

**3045 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் இதுபற்றி மேலும் தொடர்ந்து பேச விரும்பவில்லை. திரு. பணிக்கர் அவர்களே,

நீங்கள், திரு. ஜெயகரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது, சமஸ்தானங்கள் மத்திய அரசின் அதிகாரத்திற்கு இராணுவம் போன்ற துறைகளை மாற்றும் போது, சமஸ்தானங்களின் முன் ஒப்புதல் தேவை என்று கூறினீர்கள். நான் நீங்கள் கூறியதைச் சரியாகக் கூறுகிறேனா?

*திரு. கே. எம். பணிக்கர்:* ஆம். மிகவும் சரியாகச் சொன்னீர்கள்.

*3046: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 'இராணுவத்தை மாற்றப்பட்ட துறைக்கு மாற்றக் கூடாது என்று வேறு ஒரு தருணத்தில் இதுபற்றி ஒரு கேள்வி எழும்போது சமஸ்தானங்கள் கூறினால், அவ்வாறே மாற்றப்படக்கூடாது என்று நீங்கள் கூறினீர்கள். நான் உங்கள் கருத்தைச் சரியாக அறிந்து கொண்டேனா?

*திரு. கே. எம். பணிக்கர்:* சரி என்றே கருதுகிறேன்.

## (4)

### சர் மைக்கேல் ஓ டையர், ஜி. சி. ஐ. எப்., கே. சி. எஸ். ஐ.

*3356: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் கூறிய சாட்சியத்தில் அறிஞர்கள், சாதாரண மக்கள் என்று நுணுக்கமாக வேறுபடுத்திச்* சொன்னீர்கள். நான் இதை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்: நீங்கள் நினைக்கும் அறிஞர்கள் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட தரத்து மக்களிடம் இருந்து வந்தவர்களாக இருக்கும் சூழலுக்கும், சமூகத்தின் பல்வேறு தரப்புகளில் இருந்து வந்தவர்களாக இருக்கும் சூழலுக்கும் ஏதாவது வேறுபாடு காட்ட நீங்கள் விரும்புகின்றீர்களா?

*சர் மைக்கேல் ஓ டையர்:* ஆமாம். நான் வேறுபடுத்திக் காட்டுகின்றேன். அவர்கள் பல்வேறு நிலைகளில் இருந்து வரும்போது பரந்த மனப்பான்மை உள்ளவர்களாக இருப்பார்கள்.

*3357: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்போதைய சூழலில் இந்தியாவில் உள்ள அறிஞர்கள் பிராமணர்கள் மட்டும் அல்லாமல், பிராமணர் அல்லாதோர், இஸ்லாமியர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆகியோர் அடங்கிய தொகுப்பாக இருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கவில்லையா?

*சர் மைக்கேல் ஓ டையர்:* இந்நிலை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பலவாறு வேறுபட்டு இருக்கிறது. வட இந்தியாவில் பஞ்சாப் நீங்கலாக அறிஞர்கள் பெரிதும் உயர்சாதி இந்துக்களாகவே இருக்கிறார்கள். கல்வி பரவலாக்கப்பட்டு இருக்கும் சென்னை மாநிலத்தில் இந்நிலை வேறுபட்டதாக இருக்கிறது. ஆகவே இதைப் பொதுவாக்குவது இயலாது.

---

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு, தொகுதி II (அ) 29 ஜூன் 1933, பக். 406-07.

அணுகும் நிலை இருந்தால் நடைமுறையில் சுயாட்சி என்பது பயனற்றுப் போய்விடும்.

*சர் எட்வர்டு பென்தல்:* இந்திய வர்த்தகத்தைத் தடை செய்வ தாக எந்த வரிவிதிப்பு இருக்குமோ அப்போது மட்டுமே மைய அரசை அணுக வேண்டி இருக்குமே தவிர எப்போதும் அல்ல. ''நாங்கள் இக்கருத்தை முன்வைப்பதின் நோக்கம் விதிகளை விதிப்பது அல்ல; மாறாக அவைகளைக் கூட்டுத் தேர்வுக் குழுவின் பார்வைக்கு கொண்டுவருவதே நோக்கம்'' என நான் கூற விரும்பு கிறேன்.

*6224: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆக நான் இதைப் பொதுவாக இவ்வாறு கூறுகிறேன்; மத்திய—மாநிலங்களுக்கு இடையே நிதிநிலை பற்றிய அமைப்பு ஒன்றை உருவாக்கும் போது எந்த அமைப்பை ஏற்றுக் கொண்டாலும் அது மாநில சுயாட்சியையோ அல்லது மாநிலங்களில் உள்ள பொறுப்பாட்சி யையோ பாதிக்காதவாறு பார்த்துக் கொள்வீர்கள் என்பதே அது.

*சர் எட்வர்டு பென்தல்:* ஆமாம். முன்பு ஒரு கேள்விக்கான பதிலில் தேவைக்கதிகமான பொது அதிகாரங்கள் இருக்கக் கூடாது என்றும் அதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்றும் கூறி னேன். துறைகளின் பிரிப்பும் வரிவிதிப்பு முறைகளும் எந்த அளவிற்குத் தெளிவாக இருக்க முடியுமோ அந்த அளவிற்குத் தெளிவாக இருக்க வேண்டும். ஆனால், வர்த்தகத்தைப் பொறுத்த வரை இந்த அம்சங்கள் எப்படி மாநிலங்களுக்கு இடையே சுங்கத் தடைகளை உருவாக்கும் என்பதைக் குறிக்க விரும்பினோம்.

*6225: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்போது நான், பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ள 'ரிசர்வ் வங்கி' பற்றி ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன். நீங்கள் அந்த வங்கி அரசியல் தலையீடு இல்லா மல் இருக்க வேண்டும் எனச் சொன்னீர்கள்.

*சர் எட்வர்டு பென்தல்:* ஆமாம்.

*6226: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நெருக்கடிகளின்போது அரசியல் உதவி இந்த வங்கிக்குத் தேவைப்படும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நான் நினைக்கிறேன்.

*சர் எட்வர்டு பென்தல்:* இருக்கலாம்.

*6227: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நெருக்கடியில் இந்த வங்கியை ஆதரிக்கும் பொருட்டு அரசு கடன் வசூல் ஒத்திபோடு வதை அறிவிக்க அரசியல் தலையீடு தேவைப்படும்.

*சர் எட்வர்டு பென்தல்:* ஆமாம். இது வழக்கமான முறை என்றே நான் நினைக்கிறேன். அனைத்து ரிசர்வ் வங்கிகளின் அமைப்பிலும் பொருளாதார நெருக்கடிகளில் அரசு தலையிடு

வதற்கான வழிமுறைகள் இருக்கின்றன. அத்தலையீடு இங்கு ரிசர்வ் வங்கியிலும் இருப்பதை நான் மறுக்கவில்லை.

*6228 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆகையால் வங்கியின் நெருக்கடி நிலைகளில் கடன் வசூலை ஒத்திப் போடுவதன் மூல மாகவோ, முன்பணம் வழங்குவதின் மூலமாகவோ வங்கியின் நிதியிருப்பைப் பலப்படுத்த உதவும் வகையில் அரசு தலையிடு வதை நீங்கள் அனுமதிக்கின்றீர்கள். ஆகவே வங்கியின் செயல் பாட்டில் அரசு சிறிதளவு செல்வாக்குப் பெறும்.

*சர் எட்வர்டு பென்தல் :* அரசு ஏதாவது ஒரு வழியில் வங்கி யின் சில அலுவலர்களையும் சில இயக்குநர்களையும் நியமிக்க லாம். ஆனால் அரசு பெரும்பான்மையான இயக்குநர்களை நிய மிக்க இயலாது.

*6229 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் இந்தக் கருத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அரசியல் தலையீடு, குறுக்கீடு மற்றும் செல்வாக்கு இவைகளுக்கிடையே வேறுபாடுகள் இருப் பதை நான் காண்கிறேன். இதில் எதை நீங்கள் அரசுக்கு அனுமதிக் கின்றீர்கள்? எதிலிருந்து அரசை விலக்குகிறீர்கள்?

*சர் எட்வர்டு பென்தல் :* அதை வரையறுப்பது என்பது ரிசர்வ் வங்கியின் அமைப்பு விதி முறைகளையே உருவாக்குவதாக அமையும்.

*6230 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த விஷயத்தை நான் தொடர விரும்பவில்லை. இப்போது இயக்குநர்களைப் பொறுத்த வரையில் அரசியல் செல்வாக்கை விலக்கும் வழிவகைகளை எப்படி அனுமானித்து உள்ளீர்கள்? எடுத்துக்காட்டாக, இந்தியா வில் உள்ள அரசியல் கட்சியைச் சார்ந்த ஒருவர் இயக்குநராவ தற்குத் தகுதியில்லாதவர் என நீங்கள் கூறமுடியுமா?

*சர் எட்வர்டு பென்தல் :* முடியாது. நான் பங்குதாரர்கள் வங்கி ஒன்று வைத்திருப்பேனேயானால் அதில் உள்ள பங்கு தாரர்களே பெரும்பான்மையான இயக்குநர்களை நியமனம் செய்ய முடியும்.

*6231 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அவர்கள் அரசியல் வாதிகளாகக் கூட இருக்கலாமா?

*சர் எட்வர்டு பென்தல் :* சட்டமன்றத்தில் இருக்கும் அரசியல் வாதிகள் அல்லர்.

*6232 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆனால் அவர்கள் கட்சி நிதிக்கு ஆதரவு தருபவர்களாக இருக்கலாம்.

*சர் எட்வர்டு பென்தல் :* அவர்கள் தீவிரமாகக் கட்சி அரசியலை ஆதரிப்பார்களேயானால், அவர்களால் நாட்டின் பொருளாதார நம்பிக்கையைப் பெற்றிருக்க முடியாது.

*சர். மைக்கேல் ஓ டையர் :* நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

***3369 :*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நம் எண்ணத்தின்படி இந்தியாவில் எந்த ஒரு பிரிவினரும் உங்களது திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையில் உங்களது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? நீங்கள் இது குறித்து நாடாளு மன்றத்திற்கு என்ன ஆலோசனை கூறுகிறீர்கள்?

*சர் மைக்கேல் ஓ டையர் :* இந்திய மக்களின் நலனுக்குப் பொருத்தமானது எது என்று எண்ணுகிறேனோ அதை நான் செய்ய முற்படுவேன்.

***3370 :*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியர்கள் ஏற்றுக் கொண்டாலும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் உங்களுக்கு எது சிறந்தது என்று தோன்றுகிறதோ அதைச் செய்வீர்கள் இல்லையா?

*சர் மைக்கேல் ஓ டையர் :* ஆமாம். காலம் செல்லச் செல்ல இப்போது திணிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டை மக்கள்...

***3371 :*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* விவாதத்திற்காக எடுத்துக் கொள்வோம். போதுமான கால அவகாசத்திற்குப் பிறகு கூட உங்களுடைய திட்டத்திற்கு எந்த ஒரு தரப்பில் இருந்தும் ஒப்புதல் வராமல் போனால் அந்நிலையில் நீங்கள் நாடாளுமன்றத்திற்குத் தரவிரும்பும் ஆலோசனை என்ன?

*சர் மைக்கேல் ஓ டையர் :* நாடாளுமன்றம் எவை செயல் படுத்தத்தக்க சாத்தியமான செயல்கள் எனக் கருதுகிறதோ அவற்றைத் தொடர்ந்து செய்யுமாறு நான் ஆலோசனை வழங்குவேன். ஏனெனில் நாடாளுமன்றத்தின் கருத்து காலப்போக்கில் ஏற்றுக் கொள்ளக் கூடியது என இந்திய மக்கள் உணரும் காலம் வரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

***3372 :*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மன்னிக்கவும். நீங்கள் என் கேள்வியைப் புரிந்து கொள்ளவில்லை. என்னுடைய கேள்வி மிகவும் தனிப்பட்டது.

*சர் மைக்கேல் ஓ டையர் :* நான் இதைச் சுருக்கமாக இவ்வாறு கூற முடியும். மக்கள் பிடிவாதமாக காரணமின்றி வெகு காலத்திற்கு இப்படியே இருப்பார்கள் என நான் எண்ணவில்லை.

***3373 :*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஒருவேளை வெள்ளை அறிக்கையின் திட்டம் ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு மோசமானது என்று மக்கள் எண்ணினால்...

*சர் மைக்கேல் ஓ டையர் :* 'நீங்கள் ஏற்றுக்கொள்ள முடியும்' என எண்ணுமளவிற்கு சிறந்த வழியை பிரிட்டிஷ் அரசு கையாளும்.

*3564: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சர் மைக்கேல் ஓ டையர் புறப்படும் முன் நான் ஒரு விஷயத்தை குறிப்பிடலாமா? சர் மைக்கேல் அவர்கள் திரு. பட்லர் அவர்களுக்கு பதில் அளிக்கையில், சைமன் குழு சட்டம்-ஒழுங்கை மாற்றுவதற்குப் பரிந்துரைத்ததாகக் குறிப்பிட்டார்கள். இது சைமன் குழு அறிக்கையின் பகுதி II-ல். 369-வது பத்தியில் உள்ளது: ''இந்த அறிக்கையை எழுதும்போது கடந்த சில மாதங்களாக இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஏதும் சந்தேகக் குறிப்புகள் இல்லை'' என்ற பத்திதானே உங்கள் நினைவில் இருந்தது?

சர். மைக்கேல் ஓ டையர்: ஆமாம். அதேதான்.

*3564 டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நம்மில் பலர் மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்திருக்கக் கூடும் என்பதை நான் இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை இந்த 'நிகழ்ச்சிகள்' என்ற சொல் குறிப்பிடுகிறதே தவிர கான்பூரில் நடந்த வகுப்புக் கலவரத்தைக் குறிக்காது என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

விஸ்கவுண்ட் பர்ன்ஹம்: அந்நிகழ்ச்சிகள் வகுப்புக் கலவரத்தைக் குறித்ததே. நான் அதை அந்த அர்த்தத்தில்தான் புரிந்து கொண்டேன். அது சட்டமறுப்பு இயக்கத்தையோ அல்லது அதன் விளைவாக ஏற்பட்ட வகுப்புக் கலவரத்தையோ குறிக்காது.

## 5

## திரு. எப். இ. ஜேம்ஸ்., திரு. டபிள்யூ. டபிள்யூ. கே. பேஜி, திரு. டி. காவின்-ஜோன்ஸ், திரு. ஜி. ஈ. கஃபி, திரு. எல். ஏ. ரோஃபி, சர் வில்லியம் மெக்கொர்சர் மற்றும் திரு. எப். டபிள்யூ. ஹோக்கன்ஹல்

**3882: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உங்களிடம் சில கேள்விகள் மட்டும் கேட்க விரும்புகிறேன். திரு. ஜேம்ஸ் அவர்களிடம் முதலில் ஒரு கேள்வி கேட்கிறேன். உங்களது சங்கம், இர்வின் பிரபு அரசுப் பிரதிநிதியாக இருந்த காலத்தில் (29 அக்டோபர் 1929) வெளியிட்ட பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதா? அப்பொழுது அதிகாரத்தில் இருந்த மன்னர் பிரான் அரசின் கருத்துப்படி, இந்திய அரசியல் சட்டத்தின் தருக்க ரீதியான பரிணாம வளர்ச்சியின் விளைவே டொமினியன் அந்தஸ்து என்று அந்தப் பிரகடனம் கூறியது. அந்தப் பிரகடனத்தை உங்கள் சங்கம் ஏற்றுக் கொண்டதா?

---

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு தொகுதி II (அ) 29 ஜூன் 1933 பக். 424.

** முன் குறிப்பிட்ட அடிக்குறிப்பு: 4 ஜூலை 1933 பக். 476-77.

*திரு. எஸ். இ. ஜேம்ஸ்:* நான், இர்வின் பிரபுவால் குறிப்பிடப் பட்ட இந்த அறிக்கை வெள்ளை அறிக்கையில் இருப்பதாக நம்ப வில்லை.

*3883: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த வாசகம் அதி லில்லை.

*திரு. எஸ். இ. ஜேம்ஸ்:* என் குறிப்பறிக்கை வெள்ளை அறிக்கை யின் திட்டங்கள் குறித்தது. இந்த அறிவிப்பு வரும்போது சங்கம் இது குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டது என எனக்கு நினைவு. இந்த அறிக்கை வந்த செய்தித் தாளின் கோப்பைப் பார்க்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*3884: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் அவ்வறிக்கை யின் சுருக்கத்தைக் கூற முடியுமா?

*திரு. எப். இ. ஜேம்ஸ்:* அதை இப்பொழுதே கூறுமளவிற்கு எனக்கு நினைவாற்றல் இருப்பதாக நம்பிக்கை இல்லை.

*3885: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என்னுடைய கருத்தை வேறு வார்த்தைகளில் சொல்கிறேன். இந்திய அரசியலமைப்புச் சட்டம் அமைய வெள்ளை அறிக்கையின் திட்டங்களை இறுதி வடிவம் பெற்றவையாக ஏற்கிறீர்களா அல்லது மேலும் முன்னேறிச் செல்வதற்கு இடம் இருக்கிறது என்று கருதுகிறீர்களா? இதில் எந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்?

*திரு. எப். இ. ஜேம்ஸ்:* இதற்கான விடை விவரக் குறிப்பின் பத்தி 1-ல் காணலாம் என நான் நினைக்கிறேன்.

*3886: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியா? அதில் பதில் இருக்கிறதா?

*திரு. எப். இ. ஜேம்ஸ்:* அதுதான் விடையென எண்ணுகிறேன். *''வெள்ளை அறிக்கையின் திட்டங்கள் பொதுவாகவே மனநிறை வளிப்பதாக நாங்கள் கருதுகிறோம். அதுதான் எதிர்காலத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏற்புடைய அடிப்படை யாகும் எனவும் நாங்கள் கருதுகின்றோம்.''*

*3887: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் சொல்வதானால், என் கேள்வி வேறுவிதமானது. இத்திட்டங்கள் இந்திய அரசிய லமைப்புச் சட்டத்திற்கு இறுதியான வடிவத்தைத் தரக் கூடியது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

*திரு. எப். இ. ஜேம்ஸ்:* நீங்கள் விவரக் குறிப்பு பத்தி 1-ல் உள்ள துணைப் பத்தி 3-ஐப் பார்ப்பீர்களேயானால், அதில் பின் வருவனவற்றைக் காணலாம்: ''கூட்டுத் தேர்வுக்குழுவின் பரிந் துரையின் அடிப்படையிலேயே, நாடாளுமன்றத்தில் எதிர்கால இந்திய அரசை உருவாக்கும் மசோதா அளிக்கப்படும். எனினும், சங்க அறிவுரைக் குழுவே அரசியலமைப்புச் சட்டத்தின் இறுதி வடிவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றது.''

3888 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : மன்னிக்கவும். மறுபடியும் அது என்னுடைய கேள்விக்கான விடையல்ல. என் கேள்வி சற்று வேறுபட்டது. என்னுடைய கேள்வி என்னவெனில், வெள்ளை அறிக்கையின் .திட்டங்கள் நீங்கலாக இந்தியாவின் அரசியல் நிலை முன்னேறுவதற்கு ஏதாவது இடம் இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்களா என்பதே?

திரு. எப். இ. ஜேம்ஸ் : ஆம். எதிர்காலத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு வெள்ளை அறிக்கை வெளிப்படையாக இடமளித்து இருக்கிறது.

3889 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நான் 'முன்னேற்றம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறேன்.

திரு. எப். இ. ஜேம்ஸ் : அப்படியென்றால் அதற்கும் இடம் இருக்கிறது.

3890 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நான் இது குறித்து மேலும் கேட்கவில்லை.

திரு. எப். இ. ஜேம்ஸ் : ஆனால் நாம் இப்போது வெள்ளை அறிக்கையின் திட்டங்களையே கருத்தில் கொண்டிருக்கிறோம்.

3891 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : பத்தி 52-ல், இந்திய சட்டமன்றங்களுக்கு பிரிட்டிஷ் தேசியப் பண்பைப் பாதிக்கக்கூடிய சட்டம் தீட்டும் உரிமை இல்லை என நீங்கள் முன்மொழிந்தீர்கள். நான் இக்கருத்தைச் சரியாகத் தொடர்கிறேன். மேலும், கனடா நாட்டின் சட்டத்தில் உள்ளது போல இந்தியச் சட்டமன்றம், இந்திய தேசியப் பண்பு என்று கருதப்படுவது குறித்தும் சட்டம் இயற்றும் உரிமை இல்லை எனச் சொன்னீர்கள். நீங்கள் சொன்னதை நான் சரியாகப் புரிந்து கொண்டேனா? நான் இப்போது தெரிந்து கொள்ள விரும்புவது இதுதான்; எந்த ஒரு குறிக்கோளுக்கும் இந்தியச் சட்டமன்றம் இந்திய தேசியப் பண்பை உருவாக்குவதற்கு முழுமையான தடை விதிக்க நீங்கள் விரும்புகின்றீர்களா?

திரு. எப். இ. ஜேம்ஸ் : இல்லை. இந்தப் பத்தி மிகவும் தெளிவாகவே இருப்பதாக நான் நினைக்கிறேன். இந்தியச் சட்டமன்றம் இது குறித்துச் சட்டம் இயற்ற விரும்பும் போது, இந்தியாவில் உள்ள ஐரோப்பிய பிரிட்டிஷ் சமுதாயத்தினரை நீக்க விரும்பினால், அது போன்ற சட்டங்களை அனுமதிக்க மாட்டோம் என்றே நாங்கள் கூறினோம்.

3892 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நான் இதுபோல் கூறுகிறேன், எடுத்துக்காட்டாகக் கனடாவின் சட்டம் உருவாவதற்கு வழி செய்தது போன்ற ஒரு நிலைமை இங்கு உருவாவதாகக் கொள்வோம். பன்னாட்டுத் தீர்வாயத்தில் இந்தியாவின் பிரதிநிதித்துவம் தேவைப்படுவதாகவும், அந்தப் பிரதிநிதித்துவ உரிமை

மாட்சிமை தங்கிய அரசரின் இந்திய பிரிட்டிஷ் குடி மகனுக்கோ அல்லது மன்னர் பிரானின் இந்தியக் குடிமகனுக்கோ வழங்கப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புவதாகவும் வைத்துக் கொள் வோம். அப்போது தனது சட்டத்தில் வழங்கியுள்ளது போலவோ அல்லது தென்னாப்பிரிக்காச் சட்டத் தில் உள்ளது போலவோ சட்டம் இயற்ற இங்குள்ள சட்டமன்றத்திற்கு உரிமை வழங்கப் படுமா?

*திரு. எப். இ. ஜேம்ஸ் :* இந்தக் கேள்விக்கு விடை இந்தப் பத்தி யின் கடைசி வரியில் உள்ளது. ஒருவேளை திரு. பேஜ் அவர்கள் மிக விரிவாக இதை விளக்கக்கூடும்.

*திரு. பேஜ் :* அதில் தவறான கருத்துக்கள் ஏதாவது மறைந் துள்ளதாக நீங்கள் எண்ண வேண்டாம். இந்தியக் குடியுரிமையை உருவாக்குவதால், ஆங்கிலக் குடிமகன் என்ற முறையில் ஆங்கிலே யன் ஒருவன் பெறும் உரிமை பாதிக்கப்படக் கூடாது என்பதே எங்களுடைய முழுமையான நோக்கமாக இப் பத்தியில் குறிப்பிடு கிறோம். அனைத்து ஆங்கிலேயர்களும் இந்தியாவில் தற்காலிக மாகவோ, அல்லது நிரந்தரமாகவோ வசிக்கும்போது, மன்னர் பிரானின் இந்தியக் குடிமக்களைப் போல் அனைத்து உரிமைகளும் பெறுவதுடன் அவர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண் டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். அவர்களின் உரிமையைப் பாதிக்கும் எந்தச் சட்டத்தையும் தடுக்கவே நாங்கள் விரும்பு கிறோம். இப்பத்தியின் முழுமையான நோக்கம் அதுதான். இந்தியக் குடியுரிமையை உருவாக்குவதில் எங்களுக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மதிப்புக்குரிய தலைவர் அவர் களே, திரு. காவின் ஜேம்ஸ் அவர்களின் யோசனையின் அடிப் படையில் எழுந்ததே இந்தக் கேள்வி. அவ்வாறு இல்லை என்றால் இதை மேலும் நான் தொடரவில்லை.

*தலைவர்:* என்னுடைய தனிப்பட்ட கருத்தை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கேட்பாரேயானால், இந்த விஷயம் இவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளும் அளவிற்கு அவ்வளவு முக்கியம் வாய்ந்தது அல்ல என்றுதான் கூறுவேன்.

## 6

## சர் ஜான் பெர்ரோனெட் தாம்சன், கே.சி.எஸ்.ஐ., கே.சி.ஐ.இ.,

## சர் ஆல்ஃபிரட் வாட்சன் மற்றும் திரு. எட்வர்டு வில்லியர்ஸ்

*4659. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சர் ஜான் தாம்சன் அவர்களே, ஒரே ஒரு கேள்வி. நேற்று நீங்கள் மாகாணங்களில் நிதி நிலையைப் பாதுகாக்கச் சில வழிவகைகள் உருவாக்குவது

---

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு, தொகுதி II(அ) 6 ஜூலை 1933, ப. 540.

குறித்து ஒரு கேள்வி எழுப்பினீர்கள். மேலும், ஓர் உதாரணத்தைக் காட்டுவதன் மூலம், மாகாணங்களின் நிதியில் முக்கியப் பங்கு வகிக்கின்ற தண்ணீர் வரியைத் தற்போதைய சூழ்நிலையில் நிர்வாகச் சட்டத்தின் மூலம் மாற்றலாம் என்று விளக்கினீர்கள். இதுதான் நேற்று நீங்கள் குறிப்பிட்டது என நான் நினைக்கிறேன்.

*சர் ஜான் தாம்சன்:* ஆமாம்.

**4660.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நிலவரி, நிர்வாகச் சட்டத்தின் மூலம் உயர்த்தப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அது போல அனைத்து வரிவிதிப்புக்களையும் நிர்வாகச் சட்டத்தின் மூலம் உயர்த்துவதைப் பல ஆண்டுகாலமாக எதிர்த்து வரும் இந்தியர்கள் அவை நிர்வாகச் சட்டத்தின் மூலம் அல்லாது சட்ட மன்றம் இயற்றும் சட்டங்களின் மூலம் உயர்த்தப்பட வேண்டும் என்று கோருகிறார்கள் என்பது உண்மையல்லவா?

*சர் ஜான் பி. தாம்சன் :* நிலவரி சம்பந்தமாக அதுபோன்ற ஒரு போராட்டம் நடந்தது உண்மைதான். ஆனால் பாசனவரி குறித்து அம்மாதிரிப் போராட்டங்கள் எழுந்ததாக எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

**4661.** *சர் தேஜ்பகதூர் சாப்ரூ :* நிலவரி நிர்வாகச் சட்டத்தின் மூலம் உயர்த்தப்படவில்லை என்ற உண்மையை நான் இங்குக் குறிப்பிடலாமா? நிர்வாகச் சட்டத்தினால் உயர்த்தப்பட்டது நில வரித்தீர்வு என்பதைத்தான் அவர் அவ்வாறு நினைத்து விட்டார்.

*சர் ஜான் பி. தாம்சன் :* ஆமாம்.

**4662.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சரி. நிர்வாகச் சட்டத்தால் உயர்த்தப்பட்ட அனைத்து நிதிவருவாய்களும் இனியும் நிர்வாகச் சட்டத்தால் உயர்த்தப்படாமல், சட்டமன்றத்தின் சட்டத்தினால் உயர்த்தப்பட வேண்டும் என்று பரிந்துரையும் செய்யப் பட்டது.

*சர் ஜான் பி. தாம்சன் :* அது எனக்குத் தெரியாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது செயல் வடிவம் பெற வில்லை.

## 7

### சர் சார்லஸ் இன்னெஸ் கே. சி. எஸ். ஐ., சி. ஐ. இ.,

***5161 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சர் சார்லஸ் அவர்களே, நீங்கள் இரண்டாவது சபை பற்றிப் போதிய அளவு வலி யுறுத்தி உள்ளீர்கள்.

*சர் சார்லஸ் இன்னெஸ் :* ஆமாம்.

**5162.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* விசேஷ அதிகாரத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதைக் குறைக்கும் தேவையே இதற்குக் காரணம் என்றீர்கள்.

---

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு, தொகுதி II (அ) 6 ஜூலை 1933, பப. 573-74.

*சர் சார்லஸ் இன்னெஸ்:* இல்லை. இது இந்தத் தேவையைக் குறைக்கும் என்று நான் கூறியதாக எனக்குத் தெரியவில்லை. இது விசேஷ அதிகாரத்தை வலியுறுத்தும் என்றே கூறினேன். யாரும் விரும்பாத விசேஷ அதிகாரத்தைத் தேவையற்றதாக மாற்றவோ அல்லது எப்போதாவது பயன்படுத்தவோ இரண்டாவது சபை உதவும் என நான் நம்பினேன்.

**5163.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* விசேஷ அதிகாரத்துக்குப் பதிலாக இரண்டாவது சபையை உருவாக்க நீங்கள் விரும்ப வில் லையா?

*சர் சார்லஸ் இன்னெஸ்:* இல்லை.

**5164.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் கேட்க விரும்பும் இரண்டாவது கேள்வி இதுதான்: இன்று காலையில், இந்த விசேஷப் பொறுப்பதிகாரத்தில், வழக்கத்துக்கு மாறானது எதுவும் இல்லை; இத்தகைய பொறுப்பதிகாரங்கள் சில குடியேற்ற நாட்டு அரசியல் சட்டங்களிலேயே காணப்படுகின்றன என்றீர்கள் என நான் நினைக்கிறேன்.

*சர் சார்லஸ் இன்னெஸ்:* 'காப்பு உரிமைகளில்' எதுவும் புதியதாக இல்லை என்று நான் கூறியதுதான் சரியானது என நினைக்கிறேன்.

**5165.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இதை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்: டொமினியன் அரசியலமைப்புச் சட்டங்களில் கூறப்படும் காப்பு உரிமைகளுக்கும், வெள்ளை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள காப்பு உரிமைகளுக்கும் வேறுபாடு இருக்க வில்லையா? நான் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க இயலாமைக்கு வருந்துகிறேன். ஏனெனில், இக்கேள்வியைக் கேட்பதற்கு முன், இந்நிலை குறித்து நான் புரிந்து கொண்ட சில விளக்கங்களைக் கூறியாக வேண்டும். பொறுப்பாட்சி அரசாங்கத்தின் கீழ் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோசனையின்படி செயல்பட முற்றிலும் கடமைப்பட்டுள்ளார் என்பது ஒருபோதும் புரிந்து கொள்ளப்படுவதில்லை (நானும் புரிந்து கொள்ள வில்லை). ஆளுநர், அமைச்சரவையின் ஆலோசனை தேவையில்லை என நினைக்கும் போது அவற்றை நிராகரிக்கலாம்; ஆளுநரை ஆதரிக்கும் மற் றொரு அமைச்சரவையைக் கூட அவர் அமைக்கலாம் என்பதும் இதனுடைய பொருள் என்று நான் நினைக்கிறேன். அந்த மாதிரி அமைச்சரவையும், ஒருவேளை ஆளுநரின் விருப்பப்படி நடந்து கொள்ளாத போது, சட்ட மன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிய சட்டமன்றத்தை ஏற்படுத்தலாம். அவர் மேலும் அப்புதிய சட்ட மன்றத்தின் மூலம் அமைச்சரவையை உருவாக்க முடியாத போது அவர் அதைவிட்டு விடலாம். அப்படித்தானே?

*சர் சார்லஸ் இன்னெஸ்:* ஆமாம். பொதுவாக அதுதான் பொருள். எப்பொழுது அவர் அதை முக்கியமானது எனக் கருதுகிறாரோ அதற்கு முன் வரை அவர் அவ்வாறு செய்யக் கூடாது.

5166. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வெள்ளை அறிக்கையின்படி, ஆளுநர் எந்த ஒரு அமைச்சரவையையும் நிராகரிக்கலாம் என்பதுதான் மிக முக்கியமான வேறுபாடு.

*சர் சார்லஸ் இன்னெஸ்:* 'நியாயமான ஒத்துழைப்பு' என்ற உணர்விலேயே இந்தியர்கள் அரசியலமைப்புச் சட்டத்தைச் செயல்படுத்தத் துணிகிறார்கள் என்றே எங்கள் தரப்பில் நாங்கள் அனுமானிக்கிறோம். அதுபோலவே அரசியல் அமைப்புச் சட்டம் எந்த உணர்வோடு உருவானதோ அந்த உணர்விலேயே ஆளுநர் சிறந்த முறையில் செயல்படுவார் என்ற அனுமானத்தை நீங்களும் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

5168. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியா?

*சர் சார்லஸ் இன்னெஸ்:* ஆளுநர் ஏன் இவ்வதிகாரங்களைப் பயன்படுத்துவார் என்று நீங்கள் அனுமானித்துக் கொள்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அனைத்து ஆளுநர்களும் அவர்களால் முயன்ற அளவு விசேஷ அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் இருக்கவே முயல்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

5169. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் காணும் இரு நிலைகளுக்கும் உள்ள வேறுபாட்டை வெளிக்கொண்டுவர இங்கு முயற்சிக்கிறேன்: எந்த ஒரு அமைச்சரவையின் ஆலோசனை தனக்கு ஏற்புடையதில்லையோ அந்தக் குறிப்பிட்ட அமைச்சரவையை கலைக்க மட்டுமே இந்த விசேஷ அதிகாரங்கள் ஆளுநருக்கு உரிமை அளிக்கவில்லை.

*சர் சார்லஸ் இன்னெஸ்:* நீங்கள் என்ன கூற முயற்சிக்கிறீர்கள் என்று எனக்கு உண்மையிலேயே விளங்கவில்லை.

5170. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் சொல்ல விரும்பும் கருத்து இதுதான்: ஆளுநருக்கு வழங்கப்பட இருக்கும் விசேஷ அதிகாரத்தில், ஒரு குறிப்பிட்ட அமைச்சரவையின் ஆலோசனையை அவர் ஏற்றுக் கொள்ளாத போது, அந்த அமைச்சரவையை மட்டுமே நிராகரிக்க அவருக்கு உரிமை கொடுக்கப்படவில்லை. ஆனால் எந்த அமைச்சரவையையும் கலைக்க அவருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது.

*சர் சார்லஸ் இன்னெஸ்:* சரியாகச் சொன்னீர்கள். ஆளுநர் அவருக்கு வழங்கப்பட்டுள்ள விசேஷ பொறுப்பதிகாரத்தை நிறைவேற்றும் பொருட்டே இவ்வதிகாரங்களைப் பெற்றிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட அமைச்சரவையை கலைப்பதும் அல்லது ஏற்பதும் அல்ல இங்குக் கேள்வி. விசேஷ பொறுப்பதிகாரங்களை அவர் பாதுகாக்கின்றாரா இல்லையா என்பதே கேள்வி.

5171. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதுதான் பாதுகாப்புகளுக்கு இடையேயான முக்கியமான வேறுபாடு.

*சர் சார்லஸ் இன்னெஸ்:* அதுதான் நான் சொன்னது. ஒரு சில காரணங்களுக்காக இந்தியாவில் உள்ள காப்புகள் மிகச்

சுருக்கமாகவும் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். வகுப்புக் கலவரங்கள் போன்றவற்றை தடுப்ப திற்கு காப்பு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

**5172.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் அதற்கு ஏதேனும் காரணம் இருக்கிறதா எனக் கேட்கவில்லை. ஆனால் அங்கு ஒரு வேறுபாடு இருக்கிறது என்பதைத்தான் நான் கூற விரும்புகிறேன்.

*சர் சார்லஸ் இன்னெஸ் :* உண்மைதான்.

## 8

## ஒருங்கிணைந்த இந்திய வர்த்தக சபைகளின் சார்பாக சர் எட்வர்டு பென்தல், சர் தாமஸ் கேட்டோ மற்றும் திரு. வின்டர் போத்தம்

***6214 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சர் எட்வர்டு அவர்களே, கூட்டாட்சி நிதி பற்றி நீங்கள் தெரிவித்த கருத்தின் ஒரு பகுதி குறித்து நான் முதன் முதலில் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்தியாவில் ஒருமுக வரிவிதிப்பு முறை குறித்து நீங்கள் மிகவும் முக்கியத்துவம் தருவதாக நான் நினைக்கின்றேன். நான் சரியாகச் சொன்னேனா என்று எனக்குத் தெரியவில்லை.

*சர். எட்வர்டு பென்தல் :* ஆமாம். நீங்கள் கூறியது சரிதான்.

**6215 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மேலும் அந்தக் குறிப்பில், சற்றேறக்குறைய மைய, மாநிலங்களுக்கிடையேயான அனைத்து வருவாய் மூலாதாரங்களும், மத்தியிலேயே இருக்க வேண்டும் என்றும் அதிலிருந்து மைய அரசே மாநிலங்களுக்குப் பிரித்து வழங்க வேண்டும் என்றும் நீங்கள் யோசனை கூறினீர்கள். அப்படித்தானே?

*சர் எட்வர்டு பென்தல் :* நாங்கள் அப்படிக் கூறினோமா?

**6216 :** *டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் :* ஒருமுக வரிவிதிப்பைக் கொண்டு வருவதற்காக ஏறத்தாழ முக்கியமான வரிகள் அனைத்தையும் மத்திய அரசே விதிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள் என்று நான் கூறினேன்.

*சர். எட்வர்டு பென்தல் :* ஒருமுக வரி விதிப்பை விரும்புகிறோம் என்றுதான் நாங்கள் சொன்னோமே ஒழிய அனைத்து வரிகளையும் மத்திய அரசே விதிக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை.

**6217 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தியா முழுமைக்கும் வரிவிதிக்கும் உரிமை ஒரே அதிகாரத்தின் பொறுப்பில் இல்லாத போது எப்படி ஒருமுக வரிவிதிப்பு இருக்க முடியும்?

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு, தொகுதி II (அ), 13 ஜூலை 1933 பக். 640-42.

*சர் எட்வர்டு பென்தல்:* ஒருங்கிணைந்த முறை அதற்கென உருவாக்கப்படலாம்.

*6218: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* எடுத்துக்காட்டாகச் சொன்னால் ஒரு மாநிலத்தில் அதன் குறிக்கோள்களுக்காக வருமான வரிக்கு 'மேல்வரி' விதிக்கும் முறையை நாம் அறிமுகப் படுத்தினால் அது ஒருமுக வரிவிதிப்பு முறையில் குறுக்கிடாதா?

*சர் எட்வர்டு பென்தல்:* ஆம். நாங்கள் முழுமையாக அதை எதிர்க்கிறோம்.

*6219: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மேலும் நீங்கள் 'இறுதி வரி'யையும் எதிர்க்கிறீர்கள்.

*சர் எட்வர்டு பென்தல்:* கொள்கை அடிப்படையில் நாங்கள் அதை எதிர்க்கின்றோம். மேலும் மாநிலங்களுக்கிடையே சுங்க வரிக்ளையோ அல்லது மாநிலங்களுக்கிடையே தடைகளையோ எந்த வரியும் உருவாக்குமானால் அதற்குக் கூட்டமைப்பின் முன் அனுமதி பெற வேண்டும் என நாங்கள் யோசனை கூறினோம். நாங்கள் கூறியதின் பொருள் அதுதான்.

*6220: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இது முடிவில் வரி விதிப்பு மூலாதாரங்களை பிரிப்பதாகவே அமையும். அதன் விளைவு மாநிலங்க்ள் வரிவிதிக்க இயலாமல் போவதோ அல்லது மத்திய அரசின் முன் அனுமதி பெற்று வரிவிதிப்பதாகவோ இருக்கலாம்.

*சர் எட்வர்டு பென்தல்:* அதற்கு ஒரு மூன்றாவது ஒருங் கிணைந்த முறையை உருவாக்க முடியுமென நான் நினைக்கிறேன்.

*6221: டாக்டர் பி. ஆர். அம்பேத்கா:* இந்த ஒருங்கிணைப்பை உருவாக்க ஏதாவது வழி உங்களிடம் உள்ளதா என்று எனக்குத் தெரியவில்லை.

*சர் எட்வர்டு பென்தல்:* தற்பொழுதே அதற்கென விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என நான் நினைக்கின்றேன். ஆனால் தற்சமயம் இந்த விதிகளை வகுத்திருக்கும் அரசு ஒருமை (unitary) அரசாகும்.

*6222: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்நிலையை நாம் எதிர்நோக்கும் மாநில சுயாட்சி என்ற கருத்தின் அடிப்படையில் கண்டிப்பாகப் பார்க்க விரும்புகிறோம். மேலும் இக்கருத்தை மாநிலங்களில் நாம் உருவாக்கும் பொறுப்பாட்சி அரசு என்ற கோணத்திலும் அணுக வேண்டும்.

*சர் எட்வர்டு பென்தல்:* ஆமாம்.

*6223: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இப்போது இதைக் கேட்க விரும்புகிறேன்: மாநில சுயாட்சிக் கோட்பாட்டில், மாநிலமே வரிவிதிப்பிற்கான முறைகளையும் திட்டங்களையும்

*6233 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அவர்களைப் போன்ற வர்களை உறுப்பினர் ஆக்குவதற்குத் தகுதியின்மை எதுவும் இல்லை.

*சர் எட்வர்டு பென்தல் :* அவர்கள் இவையிரண்டையும் ஒரே நேரத்தில் செய்வார்களேயானால் அறிவிலிகளே!

*6234 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வெள்ளை அறிக்கை யின் பத்தி 122-ஐப் பற்றிய உங்களது ஆய்வு பற்றிப் பார்ப்போம். பத்தி 5-ல், 122-வது திட்டத்தில் சில தகுதிகளைச் சேர்ப்பதற்குச் சில யோசனைகளை நீங்கள் சொன்னீர்கள்.

*சர் எட்வர்டு பென்தல் :* ஆமாம்.

*6235 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அந்தப் பத்தியின் கடைசி நான்கு அல்லது ஐந்து வரிகளை நான் உங்களுக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன். ''ஆனால், ஒரு பகுதியில் விவ சாயத்தில் ஈடுபட்டோ அல்லது தொடர்பு கொண்டோ இருக்கும். ஒரு வகுப்பினர் என அடையாளம் காணப்பட்ட வகுப்பினர் போன்றோர் தவிர வேறு எந்த ஒரு நபருக்கும் முழுமையாகவோ அல்லது விலக்குகளுடனோ ஒரு விவசாய நிலத்தை விற்பதற்கோ அல்லது அடமானம் வைப்பதற்கோ இயற்றப்படும் எந்தவொரு சட்டமும் பாகுபாடானது எனக் கருதப்பட மாட்டாது.'' இதிலிருந்து நான் சொல்ல விரும்புவது ''சாதி, இன அல்லது மத பாகுபாடின்றி'' என்ற சொற்களை மேற்கண்ட பகுதியில் உள்ள 'வகுப்பு' என்ற இடத்தில் சேர்க்காதவரை, சாதி, இனம் அல்லது மதத்தின் அடிப்படையில் பாகுபாடு ஏற்படுவதற்கு மீண்டும் இடம் இருக்கும் என்பதே என் கருத்து; நீங்கள் ஒரு விவசாயி வர்க்கத் தைச் சாதி, இன அல்லது மத அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டலாம்.

*சர் எட்வர்டு பென்தல் :* ஆமாம். நான் வழக்கறிஞர்களை இக் கருத்தைப் பற்றி பரிசீலிக்க வேண்டுகிறேன்.

*6236 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் இந்த ஷரத்தை மேம்படுத்த சில ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்ற காரணத்தில்தான் நான் கேட்டேன். ''இத்திட்டங்கள் செயல் திறன் மிக்கவையாக இருக்க வேண்டுமானால் அதில் பிரிட்டிஷ் இந்தியாவில் 'வாழுமிடம், தொடர்ந்து வாழ்ந்து வரும் காலம் அல்லது வாழ்ந்துவரும் ஆண்டுகள்' ஆகியவற்றையும் இணைக்க வேண்டியது மிக அவசியம் ஆகும்.

*சர் எட்வர்டு பென்தல் :* ஆமாம்.

*6231 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சாதி, இன அல்லது மத அடிப்படையிலான எந்த வேறுபாட்டையும் நீக்க வேண்டும் என்று நீங்கள் கூறவில்லை. பாகுபாட்டுக்கு எதிராக இப்பத்தி செயல்திறன் மிக்கதாக இருக்க வேண்டுமானால் இவ்வாறு செய்யப்பட வேண்டும்.

*சர் எட்வர்டு பென்தல் :* அந்தப் பத்தியின் பிற்பகுதி தொடர்பாக நான் குறிப்பிட்ட விஷயம் பகுதி 'ஜி'-யில் உள்ள பத்தி 6-ல் அடங்கியிருக்கிறது. ஐரோப்பியர்கள் அதுபோன்ற நிலங்களையோ பயிர் செய்பவர்களையோ அல்லது அவர்களைப் போன்ற மக்களையோ எடுத்துக் கொள்வதைத் தடுக்க நாங்கள் விரும்பவில்லை.

*6238 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* உங்கள் குறிக்கோள் பயன்பெறவும், அது நிறைவேற்றப்படவும் சாதி, இன, மத அடிப்படையில் வேறுபாடு இருக்கக் கூடாது என நான் விரும்பு கின்றேன்.

*சர். எட்வர்டு பென்தல் :* ஆம். அது சட்ட வரைவைப் பொறுத் துத்தான் அமையும்.

## 9

## இந்திய பெண்களுக்கு வாக்குரிமை கோரும் பிரிட்டிஷ் குழுவின் சார்பாக சீமாட்டி லேட்டன், திருமதி ஓ. ஸ்ட்ரேசி மற்றும் சர் பிலிப் ஹார்டாக்

** சி 67 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். என் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று எனக்குத் தெரியாது. பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதை வலியுறுத்தும் வேளையில் வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் பெண்கள் இந்தியச் சமூகத்தின் அனைத்துத் தரப்புகளையும் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதை நீங்களும் விரும்புவீர்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்கள் முழுக்க முழுக்க மேல்தரத்தில் இருந்தோ அல்லது நடுத்தர வர்க்கத்தி லிருந்தோ அல்லது கீழ்த்தட்டு மக்களாகவோ இருக்கக் கூடாது என்பதையும் நீங்கள் விரும்புவீர்கள். வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் இவர்கள் சமுதாயத்தில் உள்ள பல்வேறு சமூகங்களி லிருந்து ஓரளவேனும் விகிதாசார முறையில் இடம் பெற்றவர் களாக இருக்க வேண்டும்.

*சீமாட்டி லேட்டன் :* முடிந்த அளவுக்கு நிச்சயமாக இதைச் செய்ய லாம்.

*சி 68 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான்கில் ஒன்று அல்லது ஐந்தில் ஒன்று என்பது போன்ற விகிதாசாரத்தில் அல்லாமல், எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த எல்லாப் பெண்களுமே வாக் காளர் பட்டியலில் இடம் பெறுவதையே நீங்கள் விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன்.

*சீமாட்டி லேட்டன் :* நகரம் மற்றும் கிராம வாக்காளர்களும் மற்றும் அனைத்துத் தரப்பினரும் போதிய அளவிற்குப் பிரதிநிதித்

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு தொகுதி II (இ) 26 ஜூலை 1933 ப. 2276.

துவம் பெறுவதை முடிந்த அளவு செயல்படுத்த நாங்களும் விரும்பு கிறோம்.

*சி 69. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கல்வித் தகுதியோ அல்லது சொத்துத் தகுதியோ மிக உயர்வாக நிர்ணயிக்கப்பட் டால், அதன் விளைவாக இந்திய சமுதாயத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்த பெண்கள் மட்டுமே வாக்காளர் பட்டியலில் இடம் பெறக் கூடிய நிலை ஏற்படும் என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

*சீமாட்டி லேட்டன்:* நீங்கள் கூறுவது போல் செய்வது நிர்வாக ரீதியில் சாத்தியமானால் அதை நாங்கள் வரவேற்கிறோம். மேலும் அதிகச் சொத்துரிமை உடையோரின் மனைவியர் மட்டுமல்லாது குறைந்த சொத்துரிமை உடையோரின் மனைவியரும் வாக்குரிமை பெற வேண்டும் என நாங்கள் எங்களது விவரக் குறிப்பில் வலியுறுத்தி இருக்கிறோம்.

*சி 70: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் ஆர்வமாகப் பெற விரும்பும் பதில் என்னவெனில் மக்கள் தொகைக்கு ஏற்றாற்போல் சரியான விகிதப்படி பெண்கள் வாக்குரிமை பெறுவார்கள் என்பதற்கு நீங்கள் முக்கியத்துவம் அளிக்கின்றீர்களா அல்லது ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற விதத்தில் மகளிரும் வாக்குரிமை பெறுவார்கள் என்பதற்கு மட்டும் நீங்கள் முக்கியத் துவம் அளிக்கின்றீர்களா என்பதுதான்.

*சீமாட்டி லேட்டன்:* இரண்டு கருத்துக்களுக்கும் நாங்கள் முக்கியத்துவம் வழங்குகின்றோம். ஆனால், இப்போது இது விஷயத்தில் போதுமான அளவிற்குப் பெண்களின் நலம் பாது காக்கப்பட்டிருக்கிறது என நாங்கள் எண்ணுகிறோம். அனைத்து மாவட்டங்களிலும் பெண்கள் போதுமான அளவிற்கு வாக்குரிமை பெற்றிருப்பார்களேயானால் அவர்கள் வாக்குரிமை பெறாதவர் களையும் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். வாக்குரிமை பெறாத பெண்களின் எண்ணிக்கை முடிந்த அளவு குறைந்ததாக இருக்கு மாறு நாங்கள் பார்த்துக் கொள்ள விரும்புகிறோம். இந்த நிலையி லிருந்து சிறிதளவு முன்னேறி, சாத்தியக் கூறு உள்ள அளவு மகளிர் அதிக அளவு வாக்குரிமை பெறப் பார்த்துக் கொள் வோம். ஏனெனில், மிகக் குறைந்த அளவே வாக்குரிமை பெறாத பெண்கள் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். இயலுமானால் நாங்கள் வயது வந்தோர் வாக்குரிமை யையும் கோர ஆயத்தமாய் உள்ளோம். ஆனால் நடைமுறையில் இப்போது அது சாத்தியப்படாது.

*சி 71: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இக்கருத்தை வேறு விதமாகக் கூறட்டுமா? அனைத்துப் பெண்களும் சமூக நலம் பற்றி ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அது குறித்துப் பெண்களின் கருத்தும் ஒன்று போல் உள்ளது. ஆனால் சமூக நலத் திட்டங்களுக்கு நிதி தேவை என்பதை நீங்கள் அறிவீர்கள். திட்டங்களைச் செயல்படுத்த வரி விதிப்புத் தேவைப்படும்.

*சீமாட்டி லேட்டன் :* ஆமாம். உண்மைதான்.

*சி 72 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அனைத்துப் பெண்களும் இது குறித்து ஒரே கருத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் கொண்டுள்ள கருத்து அவர்கள் சார்ந்த வகுப்பின் அடிப்படையில் அமையலாம்.

*சீமாட்டி லேட்டன் :* ஆமாம். நான் உங்களுக்கு இரண்டு பதில்கள் தர முடியும். முதலாவதாகக் கல்வியை எடுத்துக் கொள்வோம். உங்களிடம் கல்விக்கென ஒதுக்க ஒரு குறிப்பிட்ட தொகை இருக்குமானால் அனைத்து வகுப்பைச் சார்ந்த பெண்களும் அத் தொகையை ஆண் பெண் இரு பாலருக்கும் சமமாக செலவு செய்ய ஒத்துக் கொள்வார்கள். மாறாக, இந்தக் கோரிக்கையை வலியுறுத்தும் பெண்கள் போதிய எண்ணிக்கையில் இல்லாத போது, நீங்கள் பெண்டிரை விட ஆண்களுக்கு அதிகமாகச் செலவு செய்து கொண்டே இருப்பீர்கள். நாம் பார்க்க வேண்டியது இதுதான். மேலும் நான் இதைக் கூறுவேன் : மக்கள் நலத் தில் அக்கறை காட்டும் அனைத்து வகுப்பைச் சார்ந்த பெண்களும், கல்விக்காக அதிக அளவு நிதியை ஒதுக்க வற்புறுத்துவார்கள். இச்சிந்தனையே அனைத்து வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கும் தற்போது இருக்கும் என நான் நம்புகிறேன். ஆனால், வெகு விரைவில் வாக்குரிமை வரப்போவது கண்டு நான் மகிழ்கிறேன். அதனால் கல்வித் தகுதிக்கு நான் மிகுந்த முக்கியத்துவம் தருகிறேன். செல்வாக்குத் தரும் அளவிற்கு வற்புறுத்தலைத் தரும் எந்த நுண்ணறிவையும் பெற்ற ஒரு பெண் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் தன்னைக் கல்வித் தகுதிக்கு ஏற்றவளாக மாற்றிக் கொள்வாள். வாக்குரிமை என்பது தங்கள் கையில் உள்ள ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம் என்ற உண்மையை கல்வி அறிவு இல்லாத காரணத்தால் பல பெண்கள் உணராதிருக்கிறார்கள். இக்காரணத்திற்காகத்தான் நான் எப்போதும் கல்வியை ஆழமாக வலியுறுத்துகிறேன். அது போலவே, இந்தியா வில் உள்ள மகளிர் இயக்கங்களும் கல்வியை வலியுறுத்துகின்றன.

*சி 73 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* என் கருத்தை நீங்கள் புரிந்து கொண்டதில் எனக்கு மன நிறைவு ஏற்படுகிறது. சர் ஃபிலிப் ஹார்டோக் அவர்களே, உங்களிடம் கல்வி பற்றிய கேள்வி ஒன்று கேட்க விரும்புகிறேன். பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதில் கல்விச் சோதனையை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக, அனைவரும் கூறுவதுபோல, எவ்விதமான நிர்வாகச் சிக்கல்கள் உள்ளன என்பதற்கு உண்மையிலேயே நம்மிடம் எந்த விவரங்களும் இல்லை. நான் உணர்ந்து கொண்ட சிக்கல்கள் இவைதான். பதிவு அலுவலர் எடுத்த எடுப்பில், ஒரு பெண் வாக்குரிமை பெறுமளவிற்கு கல்வித் தகுதி பெற்றிருக்கிறாளா என்று மன நிறைவு கொள்ளும் அளவிற்கு எந்தச் சான்றிதழ்களும் இல்லை என்பதும், அதனடிப்படையில் அப்பெண்ணை உடனடியாக வாக்காளர் பட்டியலில் சேர்க்க இயலாமையும் முதல் குறை. அப்போது

திட்டங்களில் சொல்லியிருப்பது போல கிராம அதிகாரி பரிசீலனை செய்து வட்டாட்சியரின் மேற்சான்றுடன் சான்றிதழ் வழங்கும் முறையை நாம் மேற்கொள்ளலாம். இதில் ஒரு நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. கிராமத்தில் உள்ள ஒரு பெண் கல்வி அறிவு உள்ளவரா அல்லது இல்லாதவரா என்பதை கிராம அதிகாரி எவ்வாறு அணுகி அறிவார் என்பதே அந்த சிக்கல். வாக்குரிமை பெற விரும்பும் பெண்கள் அவர்களாகவே முன்வந்து விண்ணப்பிக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களா?

*சர் பிலிப் ஹார்டாக்:* நான் அதுதான் சாத்தியமான வழி என்று நினைக்கிறேன். தானாகவோ அல்லது அவரது கணவன் மூலமாகவோ கிராம அதிகாரியை அணுகி, ''நான் கல்வி கற்றவள்; என் கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டும்; நான் வாக்காளர் பட்டியலில் இடம் பெற விரும்புகிறேன்'' எனச் சொல்லும் ஆர்வம் இருக்க வேண்டும்.

*சி 74 : திரு. பட்லர் :* இது விண்ணப்பித்துக் கொள்வதிலிருந்து எப்படி வேறுபட்டது?

*சீமாட்டி லேட்டன் :* நாங்கள் எங்களது விவரக் குறிப்பில் கல்வி பற்றி விண்ணப்பிக்க மறுப்புத் தெரிவித்திருக்கிறோம் என நான் நினைக்கவில்லை. நாங்கள் அதை மறுக்கவில்லை. எந்தக் கல்வித் தகுதியிலும் கல்வி கற்றவராக அங்கீகரிக்கப்பட்ட எவரும் இயல்பாகவே பட்டியலில் அனுமதிக்கப்படுவார் என்று நாங்கள் எண்ணுகிறோம். அதைத் தவிர விண்ணப்பிப்பது மற்றொரு முறையாகும்.

*சர் பிலிப் ஹார்டோக்:* டாக்டர் அம்பேத்கர் கூறிய கருத்துக்கு விடையளிக்கக் கூடிய விதத்தில் இந்தியா மந்திரி அளித்த இரண்டு பதில்களை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். கேள்வி எண் 7437-க்கு அவர் அளித்த பதில் வருமாறு: ''எதிர்காலத் தலைமுறையைச் சேர்ந்த பெண்கள் தங்கள் கல்விப் பதிவேடுகளை எளிதாகப் பெற முடியும். ஆகையால் அவர்கள் எளிதாக வாக்காளர் பட்டியலிலும் இடம்பெற இயலும். ஆனால் இம்முறை இதுவரை செயற்படுத்தப்படாத மாநிலங்களில் முதல் தேர்தலில் செயற்படுத்துவது சிறிது சிரமமான காரியம்.'' பக்கம் 817-ல் உள்ள கேள்வி 7217-க்கு இந்தியா மந்திரி அளித்த பதிலையும் இத்துடன் வைத்துப் படித்துப் பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்: ''பத்து ஆண்டுகளில் எந்த மாற்றமும் இருக்காது.'' சாலிஸ்பரி கோமானுக்குப் பதிலளிக்கும் போது, அவர் 'நாடாளுமன்றச் சட்டத்தில் வாக்குரிமையில் பத்து ஆண்டுகளுக்கு எந்த மாற்றமும் இருக்காது எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாகக் கூறினார். அதன் விளைவாகப் பத்து ஆண்டுகளுக்குள் இரண்டாவது, மூன்றாவது அல்லது நான்காவது தேர்தல்களும் நடக்குமானால் அவைகளுக்குப் பட்டியலின் அவசியம் குறைந்தளவே இருக்கும். வாக்காளரின் எண்ணிக்கையைப் பற்றி நான் எடுத்துக் கொள்கிறேன். லோத்தியன் அறிக்கையில் கணக்கிடப்பட்டுள்ளபடி படித்த பெண் வாக்காளர் எண்ணிக்கை

1,25,000 ஆகும். இது அவ்வறிக்கையின் பக்கம் 86-ல் குறிப் பிடப்பட்டிருக்கிறது. அவர்களில் சென்னையில் உள்ள 3,45,000 வாக்காளர் பற்றி எந்தச் சிக்கலும் இல்லை. அதை விடுத்து மீத முள்ள இந்தியாவில் 8,75,000 பேர் மட்டுமே இருக்கிறார்கள். தற்சமயம், சென்னையில் உள்ள 3,45,000 பெண் வாக்காளர் களைத் தேர்தல் வருவதற்குள் பட்டியலில் சேர்க்கும் போது, மீதமுள்ள 8,75,000 பெண்களையும் பட்டியலில் சேர்ப்பது எப்படி இயலாமல் போகும்?

## (10)

## அகில இந்திய பெண்கள் மாநாடு மற்றும் இரண்டு மகளிர் சங்கங்களின் சார்பாக திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் மற்றும் திருமதி அமீது அலி

*சி 334: *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* முகமதியர்களின் இல்லங்களைப் பொறுத்தவரையில் எந்தச் சிக்கலும் இல்லை யெனக் கூறுகிறீர்களா?

*திருமதி அமீது அலி:* முகமதியர் மனைவியர் தம் பெயரைக் குறிப்பிட எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள். சர் ஹரி சொன் னது போல் அவர்களிடம் தயக்க உணர்வே இருக்கும். ஆனால், முகமதியர்களின் மனைவியர் பெயரைக் குறிப்பிடுவதற்கு சிக்கல் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மகளிர் கணவரது பெயரைச் சில சமயம் மட்டுமே குறிப்பிடுவார்கள் என்பது உண்மையே.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* இந்துக் குடும்பங்களில் மனைவியின் பெயரைக் குறிப்பிடுவதற்குக் கணவர் எதிர்ப்புத் தெரிவிப்பார்.

★ ★ ★ ★ ★

*சி. 342: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சர் ஹரிசிங் கவுர் எழுப்பிய கேள்வியில் உள்ள கருத்து இந்துக் கணவரோ அல்லது முகமதியக் கணவரோ அவர்தம் மனைவியர் பெயரைச் சொல்வ தால் ஏற்படும் மனநிலை ஆட்சேபனை பற்றியது அல்ல. மாறாக, அக்கேள்வியின் கருத்து அவர்கள் இருவரில் யார் ஒரு பதிவு அலுவலரின் விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவிப்பார் என்பதே.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* பதிவு அலுவலர் எவ்வகை விசாரணை செய்வார் என எனக்குப் புரியவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ''உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறாரா? அப்படியெனில் அவர் பெயரென்ன?'' இப்படிக் கேட்கலாம்.

*சர் ஹரிசிங் கவுர்:* மேலும் ''உங்களுக்கு எத்தனை மனைவி யர் இருக்கிறார்கள்?''

* சாட்சியங்கள் பற்றிய குறிப்பேடு, தொகுதி II (இ), 29 ஜூலை 1933, பக். 2314-21.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* எமது கேள்வியின் பொருள் பதிவு அலுவலரின் விசாரணைக்கு எவர் மறுப்பு தெரிவிப்பார் என்பதே.

*லோத்தியன் கோமான் :* ''அவர் 21 வயது நிறைந்தவரா?''

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இதுபோன்ற கேள்விகள்தாம்.

*சி. 343 : தலைவர் :* சாட்சி இப்போது குறுக்கிடலாம். டாக்டர் அம்பேத்கரின் யோசனைகளுக்குப் பதிலாக உங்கள் கருத்துக்கள் இருந்தால் சொல்லலாம்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* இதுபோன்ற கேள்வி களுக்கு எவரும் எதிர்ப்புத் தெரிவிப்பார் என நான் எண்ண வில்லை. இவைபோன்ற கேள்விகளுக்கு இன்னும் முக்கியத்துவம் தருவதின் நோக்கத்தை என்னால் புரிந்து கொள்ள இயலவில்லை.

*சி 344 : தலைவர் :* திருமதி அமீது அலி, நீங்கள் அவர் கூறிய கருத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? மேலும் இதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்பதையும் ஏற்றுக் கொள்கிறீர்களா?

*திருமதி அமீது அலி :* இவையெல்லாம் பதிவு அலுவலர் கேட்கும் முறையையும் அவர்தம் தொனியையும் பொறுத்தவை. சாதாரணமாக தவறான எண்ணம் இல்லாமல் நல்லெண்ணத் துடன் கேட்கப்படும் கேள்விகளை எவரும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

★ ★ ★ ★ ★

*சி 346 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் திருமதி அமீது அலியிடம் மேலும் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் பம்பாயில் இருந்து வருகிறீர்கள். அங்கு முகமதியர்கள் மட்டுமே வாழும் சில பகுதிகள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் அனுபவத்தில் ஒரு தேர்தல் அதிகாரி அந்தப் பகுதியில் இதுபோன்ற விசாரணைகளைச் செய்வது உண்மையில் சாத்தியம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

*திருமதி அமீது அலி :* பம்பாயைப் பொறுத்தவரை முடியும். பம்பாயில் நகராட்சிக்கு அடிக்கடித் தேர்தல் நடந்ததால் அங்கு உள்ள மக்கள் இதுபோன்ற விசாரணைகளில் பழக்கப்பட்டு இருப்பதால் அவர்களில் எவரும் இதை எதிர்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

★ ★ ★ ★ ★

*சி 352 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* கூட்டமைப்புச் சட்ட மன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் பற்றிய இணைப்பு எண் 56-ல் கூறப்பட்டுள்ளவை என்ன என்பதை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ''ஒன்றுபட்ட எங்கள் அணி களுக்குள் வகுப்புவாத விஷக்கிருமி ஊடுருவதை நாங்கள் விரும்ப

வில்லை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளோம்'' என அது தெரிவிக்கின்றது. வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டப்படிக் கீழவையில் பெண்களின் பிரதிநிதித்துவம் வகுப்பு வாக்குரிமை அடிப்படையில் அமையாது, பொது வாக்காளர் அடிப்படையிலும், ஒற்றை மாற்று வாக்கு அடிப்படையிலும் அமைந்துள்ளதை நீங்கள் பார்க்கலாம்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆமாம்.

*சி 353 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தக் கருத்தின் அடிப்படையில் ஒரு வகுப்பு சார்ந்த வாக்காளர்கள் என்ற காரணத்தினால் எதிர்ப்பு தெரிவித்திருப்பார்கள் என்று நான் எண்ணியிருக்க வேண்டும்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* முதலாவதாகக் கூட்டமைப்புச் சட்டமன்றத்தின் கீழ்ச்சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக வகுப்பு அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது. இது நேற்று முன்தினமோ அல்லது மூன்று நாள்களுக்கு முன்பாகவோ கொடுத்த சாட்சியத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. கூட்டமைப்புச் சட்டமன்றத்தின் கீழ்ச் சபையில் ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கான மறைமுகத் தேர்தல் முறை அது வகுப்பு அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதைத் தெளிவாகக் குறிக்கிறது.

*சி 354 : திரு. எம். ஆர். ஜெயகர் :* உங்களது எதிர்ப்பு வகுப்பு அடிப்படையில் அமைந்த இட ஒதுக்கீட்டிற்குத்தானே?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆமாம். மேலும் அரசியல் சட்டத்தில் இன்று கூறப்பட்டுள்ள அடிப்படையில் சட்டமன்றங்களுக்கான மறைமுகத் தேர்தல்களும் வகுப்பு அடிப்படை கொண்டதாகவே இருக்கும்.

*செல்வி மேரி பிக்ஃபோர்டு :* நான் இங்குக் குறுக்கிடலாமா? வகுப்புக் குறித்த கேள்வி வரும்போது இந்தியா மந்திரி அளித்த பதிலில் அவர் குறிப்பிட்டது வங்க மாநில மேலவையில் பெண்களுக்குரிய இடம் குறித்ததே ஆகும். மாறாகச் சட்டப் பேரவையில் இடம் பெறுவது பற்றியது அல்ல.

*சி 355 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் அப்படித்தான் நினைத்தேன். வெள்ளை அறிக்கை பக்கம் 89-ல் உள்ள பிற்சேர்க்கை II--ன் பால் சாட்சியின் பார்வையை நான் ஈர்க்கும்போது இக்கருத்து நிறைவு பெற்றுவிடும் என்று நினைக்கிறேன். நீங்களும் அதைப் பாருங்கள்; ''ஒவ்வொரு மாநிலங்களிலும் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கான தேர்தல், மாநிலச் சட்டப்பேரவை உறுப்பினர்களின் 'ஒற்றை மாற்று' வாக்களிப்பு மூலம் நடைபெறும்.''

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆமாம்; என் கருத்து இது தான். செல்வி ஃபிக்போர்டு அவர்களின் கேள்விக்கு இந்தியா மந்திரி அளித்த பதில் வங்க மாநில மேலவைக்கு வகுப்பு அடிப் படையில் ஒதுக்கப்பட்ட தொகுதிகள் பற்றித்தானா என்பதை அறிய விரும்புகிறேன். கீழவையில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலும் வகுப்புவாத பிரச்சினை நுழைந்து விடாதா என் பதை நான் தெரிந்து கொள்ளலாமா? கீழவைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் வகுப்புவாதமல்லாத முறையில் ஒதுக்கப்பட்டுள் ளனவா? நான் இதுபற்றித் தெளிவுபெற விரும்புகிறேன். நான் இந்த இடங்கள் எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

★ ★ ★ ★ ★

*சி 363 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : சிறிது குழப்பம் ஏற்பட் டுள்ளது என்று நினைக்கிறேன். குழப்பத்தைக் களைவதற்காக நான் இதை மேலும் தொடரலாமா? நீங்கள் மறைமுகத் தேர்தலை எதிர்க்கின்றீர்களா?*

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆம்.

*சி. 364 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நீங்களுமா எதிர்க் கிறீர்கள்.*

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆம்.

*சி 365 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இது உங்களது ஓர் ஆட்சேபம், அப்படித்தானே?*

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆம்.

*சி. 366 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : கூட்டமைப்பின் கீழவைக்குப் பெண் பிரதிநிதிகள், மாநில மேலவைகளிலிருந்து மறைமுகத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதை நீங்கள் விரும்பவில்லை.*

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* நிச்சயமாக விரும்ப வில்லை.

*சி 367 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நீங்கள் ஒருவகையான நேரடித் தொகுதியை விரும்புகிறீர்கள்.*

*திருமதி. ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* வகுப்பு அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்பட்டால் நாங்கள் அதை எதிர்க்கிறோம். எங்க ளைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்சினைக்கு இடமில்லை. ஆனால் நாங்கள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை விரும்பு கிறோம்.

*சி 368 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அடிப்படையைப் புரிந்து கொள்ள நான் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். கீழவையில் பெண் களுக்கென ஒதுக்கீடு செய்வதை நீங்கள் விரும்புகிறீர்களா?*

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* வயதுவந்தோர் வாக்குரிமை வரும் வரை வகுப்பு அடிப்படையில் அல்லாது பொது வாக்காளர் களால் தேர்ந்தெடுக்கப்படும் அடிப்படையில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு தருவதை நாங்கள் பரிந்துரைப்பதாக எங்கள் இயக்கங் கள் மூலமாக நான் கூறினேன். இந்த நிபந்தனையின் பேரில் மட்டுமே நாங்கள் இதை ஏற்றுக்கொள்வோம்.

*சி 369 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் இரண்டு விஷயங் களைப் புரிந்து கொண்டேன். பெண்களுக்கெனச் சில இடங்கள் ஒதுக்கப்படுவதைத் தற்சமயம் நீங்கள் விரும்புகிறீர்கள்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* நாங்கள் எப்போதும் இட ஒதுக்கீட்டை எதிர்க்கின்றோம்.

*சி 370 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் உங்களிடம் இரண்டாவதாய்ப் புரிந்து கொண்டது கூட்டமைப்பின் கீழவையில் மறைமுகத் தேர்தலின் மூலம் பெண்கள் பெறும் பிரதிநிதித் துவத்தை நீங்கள் விரும்பவில்லை என்பதாகும். நான் தவறாகச் சொல்லியிருந்தால் திருத்தம் சொல்லுங்கள். அதுதானே நீங்கள் கூறிய இரண்டாவது கருத்து?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆமாம்.

*சி 371 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் உங்களிடம் கேட்க விரும்புவது .....?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* இடஒதுக்கீட்டை நாங்கள் விரும்புகிறோமா என்று நீங்கள் கேட்கப்போகிறீர்கள்? நாங்கள் எப்போதும் இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறோம். இதை முன்பே சொன்னேன்.

*சி 372 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் எத்தகைய இட ஒதுக்கீட்டையும் விரும்பவில்லையா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* நாங்கள் ஒருபோதும் இட ஒதுக்கீட்டை விரும்பவில்லை என்று கூறுகிறோம். விருப்பம் இல்லாத பல செயல்கள் நம்மீது திணிக்கப்படுவது போல இட ஒதுக்கீடும் எங்கள் மீது திணிக்கப்படுமானால் எங்கள் இயக்கங்கள் இடஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்ள நாங்கள் கூறும் நிபந்தனை தேர்தல்கள் நேரடியாகவும் பொதுவாக்காளர்கள் மூலமும் நடத்தப் பட வேண்டும் என்பதே. இடங்கள் வகுப்பு அடிப்படையில் அமையாத போது நாங்கள் எங்கள் விருப்பப்படி மகளிரை நிறுத்தும் உரிமை பெறுவோம்.

*சி 373 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* உங்கள் விருப்பத் திற்கே இதை விட்டு விடும்போது, நீங்கள் கூட்டமைப்பின் கீழவையில் இத்தனை இடங்கள் மகளிருக்கு வேண்டும் என்று கேட்க மாட்டீர்களா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* நிச்சயமாக இல்லை.

*சி 374 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அப்படியானால் நீங்கள் கூட்டு வாக்காளர்களின் அடிப்படையில் நேரடித் தேர்தல் முறையைத்தானே விரும்புகிறீர்கள்?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆம். வகுப்பு அடிப்படையில் அமையாத நேரடித் தேர்தல் முறை.

*சி 375 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வகுப்புச் சாரா அடிப் படையை நான் எடுத்துக் கொள்கிறேன். பெண்கள் மட்டுமே அடங்கிய தொகுதியை நேரடித் தேர்தலுக்காக நீங்கள் விரும்புகிறீர்களா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* இல்லை. ஆண் பெண் இருசாராரும் அடங்கிய தொகுதியையே நாங்கள் விரும்புகிறோம்.

*சி 376 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் இத்தொகுதி ஆண், பெண் வாக்காளர்கள் அடங்கிய ஒன்றிணைந்த தொகுதி யாக இருப்பதை விரும்புகிறீர்கள்?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆம்.

*சி 377 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படுபவர் ஒரு பெண் ணாகத்தான் இருக்க வேண்டும் என்கிறீர்களா?

*ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* ஆம், ஒரு ஒதுக்கப்பட்ட தொகுதிக்கு ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால் அவர் பெண்ணாகத்தானே இருக்க முடியும்.

*சி 378 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சட்டப்பேரவையில் எப்படி இந்த நேரடித் தேர்தல் முறையைச் செயலாக்குவீர்கள்?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* இது தொடர்பாக முறை யான திட்டம் எதுவும் எங்களிடம் இல்லை. ஏனெனில் நாங்கள் எல்லா நேரத்திலும் இடஒதுக்கீட்டை எதிர்த்துள்ளோம். நாங்கள் இதைக் குழுவின் விருப்பத்திற்கு விடுகிறோம். ஆனால் நாங்கள் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, இட ஒதுக்கீடு கொடுக்கப்படு மானால், பிரதிநிதித்துவம் மிகுந்த தொகுதிகளைக் கண்டுபிடிக்கும் பொறுப்பையும் குழுவின் விருப்பத்திற்கே விட்டு விடுவோம்.

*சி 379 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வெள்ளை அறிக்கை யில் கூறப்பட்டுள்ளபடி, கூட்டமைப்புச் சட்டமன்றத்தின் கீழவை யில் மகளிர் பிரதிநிதித்துவத்திற்கு மறைமுகத் தேர்தல் முறைப் பின்பற்றப்படுவதை எதிர்ப்பதாக ஒரு கேள்விக்கு நீங்கள் பதி லளித்ததாக நினைக்கிறேன். இது வகுப்புச் சாயம் பூசப்பட்டதாக நீங்கள் எண்ணுவதாக நான் கருதுகிறேன்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆம்.

*சி 380 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாநிலச் சட்டமேலவை களில் உள்ள பிரதிநிதிகள் அவர்களின் வாக்குகளைப் பயன் படுத்தும் போது வகுப்பு அடிப்படையில் செயல்படலாம் என்ற அடிப்படையில் உங்கள் எதிர்ப்பு இருக்கிறது இல்லையா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* இந்த கேள்விக்கு ஏற்கனவே நான் பதிலளித்துள்ளேன்.

*சி 381 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆம். நான் மேலும் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். நான் இன்னொரு கருத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மறைமுகத் தேர்தலை நீங்கள் எதிர்ப்பதன் நோக்கம், மாநிலச் சட்ட மன்றங்களில் உள்ள பல்வேறு சமூகங்களைச் சார்ந்த பிரதிநிதிகள், வகுப்பு எண்ணங் கொண்டிருப்பதால் அவர்கள் வகுப்பு அடிப்படையில் செயல்படு வார்கள் என்பதே.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* நான் மீண்டும் சொல் கிறேன். முதலில் மறைமுக தேர்தலை எதிர்க்கிறோம். நேரடித் தேர்தல் வேண்டுமென்கிறோம்.

*சி 382 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சரி. நான் அதைப் புரிந்து கொண்டேன்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* அதுதான் எங்களது முதல் எதிர்ப்பு. மறைமுகத் தேர்தல்கள் மாநில மேலவைகளின் மூலம் செயல்படுத்தப்படும் போது, வகுப்பு அடிப்படையில் அமைந்த அந்த மாநில மேலவைகள் மகளிரைத் தேர்ந்தெடுக்கும் போதும் வகுப்பு அடிப்படையில் செயல்படும் என்பது எங்களுடைய இரண் டாவது எதிர்ப்பு.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது உண்மைதான். நான் உங்க ளிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். மாநில மேலவைகளில் பல வகுப்புக்களைச் சார்ந்த, பலதரப்பட்ட பிரதிநிதிகள் இருப் பதால் மகளிருக்குரிய தொகுதிகளிலும் வகுப்புவாதம் பிரதி பலிக்கப்படும் என்பதே உங்கள் ஆட்சேபணை என்பதை நான் உணர்கிறேன்.

*சி 383 : திரு. எம். ஆர். ஜெயகர் :* அது மறைமுகத் தேர்தல் பற்றி நீங்கள் செய்யும் ஒரு ஆட்சேபனை. அத்தேர்தல் மறைமுக மாக அமைகிறது என்பதே நீங்கள் சொல்லும் மற்றொரு ஆட்சே பனையும் என்று நான் உணர்கிறேன்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* அதை பலமுறை நான் சொல்லி இருக்கிறேன்.

*சி 384 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* என் கேள்வி இது தான். நீங்கள் விரும்பும் ஒரு நேரடித் தொகுதியை உதாரணத் திற்காக எடுத்துக் கொள்ளுங்கள். அது பம்பாய் நகரம் என்று இருக்கட்டும். கீழ்ச்சபைக்கு ஒரு பெண் பிரதிநிதியைத் தேர்ந் தெடுப்பதற்காக விசேடமாக ஒதுக்கப்பட்ட அந்தத் தொகுதி பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த ஆண், பெண் வாக்காளர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* ஆம்.

*சி 385: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியெனில், நேரடித் தேர்தல் மூலம் பெண் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் பங்கு பெறும் வாக்காளர்கள், மாநிலச் சட்ட மேலவைகளில் வகுப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கு பெற்றுப் பெண் பிரதிநிதியை மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுப்பதைவிடக் குறைந்த அளவு வகுப்புக் கண்ணோட்டம் கொண்டவர்களாக இருப்பார்கள் என நீங்கள் கூறுகிறீர்களா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* அதில் எனக்கு சந்தேகம் இல்லை. ஏனெனில் வகுப்புக் கண்ணோட்டம் சட்டமன்றங்களில் இருப்பவர்களைவிடப் பொது மக்களிடம் குறைவானதாகவே இருக்கிறது.

*சி 386: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் நான் உங்கள் கவனத்துக்கு ஒரு விஷயத்தைக் கொண்டுவர விரும்புகிறேன். இதே வாக்காளர்கள்தான், மறைமுகத் தேர்தலில் வாக்களிக்க இருக்கும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பவர்கள்.

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* அது அப்படி இருக்கலாம். ஆனால் கூட்டு வாக்காளர்கள் என்ற நிலையில், அவர்களின் வாக்குகளை நாம் பெற முயலும் போது ஏற்படும் வகுப்புக் கண்ணோட்டம், தனி வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாநில சட்ட மேலவையில் காணப்படும் வகுப்புக் கண்ணோட்டத்தைவிடக் குறைவாகவே இருக்கும். வகுப்புக் கண்ணோட்டம் வராமலும் போகலாம்.

*சி 387: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியாவில் பொதுத் தொகுதிகளில் ஆண், பெண் வாக்காளர்களிடம் வகுப்புக் கண்ணோட்டம் இல்லை என நீங்கள் எண்ணுகிறீர்களா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* பொதுமக்களிடம் வகுப்புக் கண்ணோட்டம் நிச்சயமாக இல்லை.

*சி 388: டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்:* நீங்கள் எப்போதாவது இதுபோன்ற தேர்தலை பார்த்திருக்கிறீர்களா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர்:* ஆமாம். இதற்கு சான்றாகச் சமீபத்தில் நடந்த ஒன்றை சொல்லலாம். அதில் எங்கள் சங்கத்தைச் சார்ந்த பெண் ஒருவர், பெண் வாக்காளர் இல்லாத ஆண் வாக்காளர்கள் மட்டும் கொண்ட பம்பாயில் உள்ள ஒரு பொதுத் தொகுதியில் போட்டியிட்டு மிக பெரும்பான்மையான வாக்குகள் பெற்றார். அந்தத் தேர்தலில் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும் மற்றவர்களும் வாக்களித்தனர். அது நகராட்சித் தேர்தல். அது மட்டும் அல்ல, பாட்னாப் பல்கலைக் கழகத் தேர்தலில், வகுப்புக் கண்ணோட்டமோ வேறு சிக்கலோ இல்லாமல், ஒரு பெண் பிரதிநிதி ஆண்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை இன்னொரு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

*சி 389 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஒரு பெண் தேர்ந் தெடுக்கப்படும் போது சந்தேகத்திற்கு இடமில்லாமல், மறைமுகத் தேர்தலைவிட நேரடித் தேர்தலில் வகுப்புவாத உணர்வு குறை வாகவே இருக்கும். இல்லையா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* நிச்சயமாக. சட்டமேலவை யில் மூலமாக எப்படிப்பட்ட மறைமுக தேர்தல் நடந்தாலும் அதில் வகுப்புவாதம் நிச்சயமாகப் புகுந்து கொள்ளும்.

★ ★ ★ ★ ★

** சி 406 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மேலவையில் உறுப் பினர்களாக இருப்பவர்களை நியமன உறுப்பினர்கள் என்று நான் கருதுகிறேன்.

*திருமதி. ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* ஆமாம். அங்கு தேர்தல் எதுவும் கிடையாது.

*சி 407 : சர் ஹரிசிங் கவுர் :* சட்டப்பேரவைக்கு இதுவரை இத்தகைய நியமனங்கள் ஒருபோதும் செய்யப்படவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இல்லவே இல்லை.

*சி 408 : டாக்டர். பி. ஆர். அம்பேத்கர்:* ஏதாவது தகுதி இன்மை காரணமா?

*திருமதி ராஜ்குமாரி அம்ரித் கவுர் :* அப்படி எதுவும் இருப் பதாக் தெரியவில்லை.

*திருமதி அமீது அலி :* இது தொடர்பாக நான் ஒன்று சொல் கிறேன். தகுதியின்மை சமீபத்தில்தான் மாநிலங்களில் இருந்து எடுக்கப்பட்டது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது மிக மிகச் சமீபத்தில்தான் செய்யப்பட்டது. சில மாநிலங்களில் இந்நிலை நீக்கப்பட்டபின் மற்றொரு தேர்தல் நடைபெறுவதற்குக் கூடக் கால அவகாசம் இல்லை.

## (11)

## திருமதி பி. கே. சென் மற்றும் திருமதி எல். முகர்ஜி

*** சி 588 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பெண்கள் பணி யில் சேரும்போது வகுப்புவாத வேற்றுமை உணர்வு அவர்களிட மும் பரவும் என்று நாம் எடுத்துக் கொள்ளலாமா?

*திருமதி எல். முகர்ஜி :* நான் அப்படிக் கருதவில்லை. பொது வாகப் பெண்கள் வகுப்புவாத உணர்வுக்கு இடந்தரமாட்டார்கள்

---

* சாட்சியங்கள் குறிப்பேடு தொகுதி II ( 29 ஜூலை) 1933. பக். 2327.

** சாட்சியங்கள் குறிப்பேடு தொகுதி II-C 29 ஜூலை) 1933 [illegible]

என்றுதான் கருதுகிறேன். பெண் இனம் என்ற அடிப்படையில் நட்போடு இருப்பார்கள்.

*சி. 589 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வேலையிலும் பணியிலும் சேர்வதற்கு ஆண்களிடம்தானே இன்று போட்டியும் போராட்டமும் இருக்கின்றன?

*திருமதி எல். முகர்ஜி :* ஆமாம்.

*சி 590: டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியாவில் பெண்கள் குடும்பத்தில் சம்பாதிக்காதவர்களாக இருப்பதுதானே இதற்குப் பெரும்பாலும் காரணம்?

*திருமதி எல். முகர்ஜி :* நீங்கள் சொல்வது சரிதான்.

*சி. 591 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* கல்வியை எடுத்துக் கொள்வோம். படித்த பெண்கள் ஆண்களோடு அதிக எண்ணிக்கையில் கல்விப் பணியிலும், வேறு பணியிலும் சேரும்போது இத்தகைய நிலைமை பெண்களிடமும் பரவுமா?

*திருமதி எல். முகர்ஜி :* அப்படி நடக்க வாய்ப்பிருக்கிறது. விளைவு என்ன என்று தெரியாமல் என்னால் பதில் கூற முடியாது.

*சி 592 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* உங்களைப் பாராட்டுகிறேன். உண்மை நிலைமையை உங்களுக்கு எடுத்துக்காட்டவே விரும்பினேன்.

*திருமதி எல். முகர்ஜி :* நமது நாட்டுப் பெண்கள் எதிர்காலத்தில் பணியில் சேரும் நிலை வரும்போது வகுப்புவாத சச்சரவு போய்விடும் என்றுதான் எதிர்பார்க்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நானும் அப்படித்தான் நம்புகிறேன்.

★ ★ ★ ★ ★

*சி 610 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* திருமதி சென், உங்களை ஒரு கேள்வி மட்டும் கேட்க விரும்புகிறேன். கூட்டமைப்பின் கீழவையில் பெண்கள் பங்குபெறுவது பற்றி விளக்கிச் சொன்னீர்கள். மறைமுகத் தேர்தல் குறித்து வெள்ளை அறிக்கையிலுள்ள ஷரத்து பற்றியும் உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தீர்கள் இல்லையா?

*திருமதி பி. கே. சென் :* ஆமாம்.

*சி 611 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வகுப்புவாதத்தை வெளிப்படுத்தும் ஷரத்து எதையும் நீங்கள் பொதுவாக விரும்பவில்லை என்றாலும் மாநிலச் சட்டமன்றங்களில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கும் ஷரத்து பற்றிக் கருத்து எதுவும் நீங்கள் சொல்லவில்லையே?

*திருமதி பி. கே. சென் :* ஆமாம்.

*சி 612 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது பற்றி நீங்கள் கருத்து சொல்ல விரும்புகிறீர்களா?

*திருமதி பி. கே. சென் :* கேள்வியை நான் கவனிக்கவில்லை.

*சி 613 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மாநிலச் சட்டமன்றங் களில் பெண்களுக்காகப் பல இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன, இல்லையா?

*திருமதி பி. கே. சென்:* ஆம்.

*சி 614 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஒதுக்கப்பட்ட இடங் களை நிரப்புவதற்கான வழிமுறையை விளக்கிச் சொல்லும் ஷரத் துக்கள் வெள்ளை அறிக்கையில் இல்லை. வெள்ளை அறிக்கை யின் பின்னிணைப்பு III, பக்கம் 93-ல் உள்ள ''பொது'' என்ற தலைப்பின் கீழ், சென்னை மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 152 இடங்களில் 6 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. முகமதியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த இடங்கள் 29-இல் ஒரு இடம் பெண்ணுக்குரியது. இதுதானே வெள்ளை அறிக்கை யில் உள்ள ஷரத்து?

*திருமதி பி. கே. சென் :* ஒவ்வொரு மாநிலத்திலும் பெண் களுக்கு ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டால், வகுப்புவாரியாக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் வேண்டாமென்று சொல்லிவிடு வோம். அதுதான் சரியானது என்று நினைக்கிறோம். ஒதுக்கப் படும் ஆறு இடங்களிலும் திறமை மிக்கப் பெண்களை அமரச் செய்வோம்.

*சி 615 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த ஆறு இடங்களை யும் நிரப்புவதற்கு வேறு வழிமுறை ஏதாவது பற்றி உங்களால் சொல்ல முடியுமா?

*திருமதி பி. கே. சென் :* முடியும். தலைநகர், கூட்டமைப்புச் சட்டமன்றத்திற்கு. அதற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக் கிறேன். மாநிலச் சட்டமன்றங்களுக்கும் அதே போலத்தான். தலை நகர் ஒரு தொகுதியாக அமையும். அங்கு வாக்காளர்களின் எண் ணிக்கை சிறிய அளவில் இருக்கும். பெரிய அளவில் செலவு ஏற்படாது என்பதால், மாநிலம் முழுவதும் உள்ள பெண்கள் போட்டியிடுவார்கள்.

*சி 616 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சென்னை மாநிலத்தில் ஆறு இடங்களுக்கும் தலைநகரிலேயே போட்டியிடுவார்களா?

*திருமதி பி. கே. சென்:* இல்லை. மாநிலத்திற்குள் உள்ள சமஸ் தானங்களிலும் பெண்கள் போட்டியிடுவார்கள்.

*சி 617 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் எந்த அள விற்கு ஒத்துக் கொள்கிறீர்கள் என்பதற்காகத்தான் கேட்டேன். இடங்களின் மொத் , எண்ணிக்கை மாறாமல், சில இடங்களை முஸ்லீம் பெண்கள் போன்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதிப்பீர்களா? சட்டமன்ற மேலவைகளுக்கு ஒன்றிணைக்கப் பட்ட வாக்காளர்களைக் கொண்டு, பெண்கள் தேர்ந்தெடுக்கப்

படும் ஏற்பாட்டை ஏற்பீர்களா? பலதரப்பட்ட பிரிவுகளின் வகுப்புவாத உணர்வுகளைப் பெருந்தன்மையோடு பார்த்துவிட்டுக் கொடுப்பீர்களா?

*திருமதி பி. கே. சென் :* வகுப்பு அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வதை நாங்கள் எதிர்க்கிறோம்.

*சி 618 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஐந்து இந்துப் பெண் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு தனியான இந்துப் பெண் வாக்காளர் தொகுதிகளையும் ஒரு முஸ்லீம் பெண் உறுப் பினரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு தனியான முஸ்லீம் பெண்கள் தொகுதியையும் ஏற்படுத்துவதற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக் கிறீர்கள் என்பதை நான் நன்றாகவே புரிந்து கொள்கிறேன். நான் உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது இதுதான் : இந்துப் பெண்களும் முஸ்லீம் பெண்களும் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுதி யிலிருந்து தேர்ந்தெடுக்கும் முறைக்கு, குறைந்தபட்சம் ஒரு முஸ்லீம் பெண்ணுக்கு ஒரு இடம் ஒதுக்கீடு செய்து கொள்ளும் முறைக்கு முன்புபோலவே எதிர்ப்பு தெரிவிப்பீர்களா?

*திருமதி பி. கே. சென் :* எல்லாருமே முஸ்லீம் பெண்ணுக்குத் தான் வாக்களிப்பார்கள்.

*சி 619 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் பெருந்தன்மை யோடு அதிக இடங்கள் தருவீர்கள் என்பது எனக்குத் தெரியும். முஸ்லீம் பெண் ஒருவருக்கு ஓர் இடம் ஒதுக்கப்பட வேண்டும். சட்டத்தின் மூலம் ஓர். இடம் ஒதுக்கீடு செய்வதை ஒப்புக் கொள் வீர்களா?

*திருமதி பி. கே. சென் :* ஆம். அது ஏற்கனவே இருக்கிறது. அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம்.

*சி 620 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது தனிவாக்காளர் களின் அடிப்படையில் இருக்கலாம். அது எப்படி இருக்கும் என்பது பற்றிச் சொல்லப்படவில்லை. அதனால்தான் இந்த விஷயத்தில் உங்களுடையக் கருத்தைத் தெரிந்து கொள்ள விரும்பி னேன். வெள்ளை அறிக்கையில் சென்னை மாநிலத்திற்கு ஆறு இடங்கள் ஒதுக்குவது பற்றி விளக்கமான ஷரத்துக்கள் இல்லையே?

*திருமதி பி. கே. சென் :* ஆண், பெண் வாக்காளர்களைக் கொண்ட கூட்டுத் தொகுதியாக அது இருக்க வேண்டும்.

*சி 621 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* எனக்குத் தெரிய வில்லை. இந்த ஆறு இடங்கள் எப்படி நிரப்பப்படும் என்பது பற்றித் திரு. பட்லர் நமக்கு விளக்கம் அளிக்கலாமே?

*திருமதி எல். முகர்ஜி :* வகுப்பு வேறுபாடு எதுவும் வேண்டாம் அதைத் தவிர்க்கலாம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. வகுப்பு இணக்கத்தைக் கெடுத்துவிடாமலிருப்பதற்கு

ஆண், பெண் வாக்காளர்களைக் கொண்ட ஓர் இடம் ஒதுக்கு வதற்கு உங்கள் எதிர்ப்பைக் குறைத்துக் கொள்வீர்களா என்று நான் கேட்கிறேன்?

*திரு. பட்லர் :* ''தொகுதிகளில் பெண்களுக்குரிய சிறப்பிடங் களை ஏற்படுவதற்குச் சரியான தேர்தல் அமைப்பை உருவாக்கும் வேலை இன்னும் பரிசீலனையில் உள்ளது'' என்பதை டாக்டர் அம்பேத்கர் கவனத்தில் கொள்வார் என்று நினைக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பொதுத் தொகுதியில் தனி யாகப் பெண் வாக்காளர்களைக் கொண்டு இந்த இடங்கள் நிரப்பப்படுமா என்பதையே கேட்கிறேன். இது தெளிவாகச் சொல்லப்படவில்லை. இது எப்படி செய்யப்படுகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் இடங்கள் குறித்து கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் தனித்தலைப்புகளில் ஒதுக் கீடு காட்டப்பட்டுள்ளது. ''பொது'' என்ற தலைப்பில் பெண் களுக்கு ஆறு இடங்கள், ''முஸ்லீம்'' என்ற தலைப்பில் ஒன்று; இது முஸ்லீம் பெண்களுக்கு மட்டுமே தனி வாக்காளர் தொகுதி இருக்கிறது என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்துகிறது. கடைசி யில் ஆண்களுக்கு 28 இடங்கள், பெண்களுக்கு ஓர் இடம் என்றாகிறது. இது எனக்குப் புரியவில்லை; விளக்கம் கேட் கிறேன்.

*சி 622 : தலைவர் :* இன்று பிற்பகல் நேரத்தைச் சாட்சிகளிட மிருந்து விளக்கம் பெறுவதற்குப் பயன்படுத்தலாம். நீங்கள் விஷ யத்திற்கு வருகிறீர்களா?

*திருமதி பி. கே. சென் :* பெண்களை மட்டும் கொண்ட தனி வாக்காளர் தொகுதியாக இருக்காது.

*சி 623 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த விஷயம் உங்க ளிடம் விடப்படுமானால் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட இடங் களைக் கொடுக்கலாம்.

*திருமதி பி. கே. சென் :* நிச்சயமாக.

*சி 624 : டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* பயத்தின் காரணமாக எதுவும் இருக்க வாய்ப்பில்லை என்றுதான் நினைக்கிறேன்.

*திருமதி பி. கே. சென் :* உண்மைதான்.

## (12)

## * புனா ஒப்பந்தம் பற்றிக் கூட்டுக்குழுவில் விவாதம்

*** சர் என். என். சர்க்கார் :* விஷயத்தை நான் சுருக்கமாக சொல்

---

* சாட்சியங்கள் குறிப்பேடு, தொகுதி IIC, 31 ஜூலை 1933, ப. 1356-561.

** பூனா, தற்பொழுது, 'பூனே' என்று வழங்கப்படுகிறது.

லட்டுமா? ''வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு'' தொடர்பாக இந்தக்குழு அனுமதிக்குமானால் நான் கேள்விகள் கேட்கும் உரிமையை எடுத்துக் கொள்கிறேன். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் உள்ள தகராறு குறித்து நான் எந்தக் கேள்வியும் கேட்க விரும்பவில்லை. ஏனென்றால் நான் கேட்கப்போகும் கேள்விகள் தொடர்பான விஷயங்களை எந்த சாட்சியும் சொல்லப்போவதில்லை. மதிப்பிற்குரிய நடுவர்களே, புனா உடன்படிக்கைத் தொடர்பான விஷயங்கள் பற்றிச் சாட்சிகளிடம் கேள்விகள் கேட்க விரும்புகிறேன். சர் அன்னெபு பாத்ரோ கூறியுள்ள வாக்கு மூலம் தொடர்பாக நான் இரண்டு கருத்துக்கள் கூற அனுமதி வேண்டுகிறேன். அவரது வாக்குமூலத்தில் ஒன்றோடொன்றைக் கலந்து கூறியிருக்கிறார். ஒரு மாநிலத்தில் ஏற்படும் விளைவு வேறொரு மாநிலத்தில் ஏற்படும் விளைவோடு தொடர்பில்லாதது என்பதை முடிவு ஆவணம் தெளிவாகவே சுட்டிக்காட்டுகிறது. ஒரு மாநிலத்தில் செய்யப்படுகின்ற மாற்றத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதொரு மாற்றத்தை இன்னொரு மாநிலத்தில் செய்யலாம் என்பதையும் அந்த ஆவணம் முடிவு கூறுகிறது. எனது நண்பர் திரு. ஜாபருல்லா கானின் வாக்குமூலம் தொடர்பாக நான் கூறுவது இதுதான்: வட்டமேசை மாநாட்டில் பெரிய அளவில் ஏற்படும் உடன்பாடு என்ன என்பதைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தோம். அதை நான் இப்படிக் கூறலாம்: இந்துக்களுக்கு 100 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப்படவில்லையென்றால் நான் இனிமேல் இந்த மாநாட்டில் பங்கு கொள்ள மாட்டேன். இப்படி ஒரு முடிவு எடுப்பது நல்லதல்ல. பிரச்சினையின் முக்கியத்தை இந்தக் குழு ஆராயுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்* : நான் ஒரு வார்த்தை சொல்லட்டுமா? புனா உடன்படிக்கைப் பற்றி மட்டுமே இங்குச் சர்ச்சை நடக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது எனக்கு மகிழ்ச்சி தான். சர் நிருபேந்திர சர்க்கார் இந்துக்களும் முஸ்லீம்களும் இடங்களைப் பகிர்ந்து கொள்வது பற்றிய பிரச்சினையை மீண்டும் விவாதிப்பது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. முஸ்லீம்களை அணுக வேண்டிய முறை பற்றித் திரு சௌதுரி ஜாபருல்லா கான் கூறிய கருத்துக்கள் வட்டமேசை மாநாட்டில் நான் கலந்து கொள்ளத் தொடங்கிய காலத்திலிருந்து கூறிவரும் கருத்துக்கள் தான். புனா உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று என்பதாலேயே தெளிவுபடுத்துவதற்காக நடந்த பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள நானும் கூடச் சம்மதித்தேன். ஆனால் சர் நிருபேந்திர சர்க்கார் இந்தக் குழுவின் முன்னால் விவரங்களைச் சொல்வதற்கு நான் மறுப்பு ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் ஏதாவது தவறு இருந்தால் அதைத் திருத்துவதற்கு வாய்ப்பு கிடைக்குமென்பது எனக்குத் தெரியும். தாழ்த்தப்பட்ட வகுப்புக்களின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாக இந்தப் பிரச்சினை மீண்டும் எழுப்பப்படுமானால், இந்தக் குழுவின் நடவடிக்கைகளில் நான்

கலந்து கொள்ள முடியும் என்று நினைக்கவில்லை. இது எனது நிலை.

*சர் என்.என். சர்க்கார் :* நான் பிரதமருக்கு எழுதிய கடிதம் ஒன்றையும் சர் இரவீந்திரநாத் தாகூர் 27 ஜூலை 1933 தேதியிட்டு அனுப்பிய தந்தி ஒன்றையும் நான் சமர்ப்பிப்பதற்கு மதிப்பிற்குரிய நடுவர் அவர்கள் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**சர் என்.என். சர்க்கார் பிரதமருக்கு அனுப்பிய கடிதம்**

செயின்ட் ஜேம்ஸ் கோர்ட்
பக்கிங்ஹாம் கேட்
இலண்டன், எஸ். டபிள்யு. ஐ
14, டிசம்பர், 1932.

பிரதமர் அவர்களே,

நீங்கள் கேட்டுக்கொண்டபடி சில தந்திகளை உங்களுக்கு அனுப்புகிறேன். முதல் தந்தி வங்காளச் சட்ட மேலவையைச் சார்ந்த 25 உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டது. அது பின் வருமாறு கூறுகிறது :

1. ''வங்காளச் சட்ட மேலவையின் 25 உறுப்பினர்கள் செய்துகொள்ளும் முறையீடு. புனா ஒடுக்கப்பட்ட வகுப்பினர் உடன்படிக்கை வங்காளத்தில் உள்ள இந்துக்களைக் கலந்து ஆலோசிக்காமலே உருவாக்கப்பட்டது. இந்தியாவில் மற்ற பகுதிகள் போலவே வங்காளத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரச்சினையை லோத்தியன் குழு கவனமாகப் பரிசீலனை செய்யவில்லை. அம்பேத்கருக்கும் மற்றவர்களுக்கும் வங்காளத்திலுள்ள நிலைமைப் பற்றி நேரடியாக ஒன்றும் தெரியாது. அங்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அவர்கள் சொல்வது போல் அரசியல் ரீதியில் துன்பப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. இந்து சமுதாயம் வங்காளத்தில் வளர்வதை வேரறுத்து விடுவதற்கான புரட்சிகர மாற்றத்தை புனா ஒப்பந்தம் உருவாக்குகிறது. லோத்தியன் குழுவின் திட்டம் வங்க நிலைமையைச் சரியாகவே பார்ப்பது போல் வங்காளத்திற்குப் பொருத்தமாகப் புனா உடன்படிக்கையை மாற்றி அமைக்குமாறு வற்புறுத்துகிறோம். பிரதமர் இதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

''பி. சி. சட்டர்ஜி, எஸ். எம். போஸ், தினாஜ்பூர் மகாராஜா, காசிம்பூர் மகாராஜா, ராஜாபகதூர் நசிபுர், நரேந்திர குமார் போஸ், சியாம்பிரசாத் முகர்ஜி, ராய்பகதூர் காமினி குமார் பாசு, சத்தியேந்திர குமார்தாஸ், கேசவ சந்திரபானர்ஜி, ஹரிதன் தத், சதிஸ்சந்திர முகர்ஜி, சரத்சந்திர மித்ரா, ஆனந்த மோகன் போதார், சதிஸ் சந்திரா, ராய் சௌதரி, ஹனுமன் பிரசாத் போதார், கிசோரி மோகன் சௌதரி, சத்தியகிங்கர் சஹானா,

க்ஷேத்திர மோகன் ராய், தேப்ராய் மொகஷி, சாந்திசேகரேஸ்வர் ராய், சரத்குமார் ராய், பி. பானர்ஜி, சுரேந்திரநாத் லா, சைலேஸ்வர் சிங் ராய்.''

2. மேலே உள்ள தந்தியை டாக்டர் அம்பேத்கருக்குக் காட்டினேன். அவருக்கும் ஒரு தந்தி வந்திருந்தது. அது இவ்வாறு கூறுகிறது:

''வங்காளம் குறித்து. வங்காள மாநிலத்திற்காகப் புனா உடன்படிக்கையை திருத்த வேண்டும் என்று கோரி இந்து நண்பர்கள் இந்தத் தந்தியை அனுப்புகிறோம். அவர்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிவிட்டார்கள். முதல் சந்தர்ப்பம் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பட்டியலை லோத்தியன் குழுவிடம் கொடுக்கத் தவறியது. இரண்டாவது சந்தர்ப்பம். பம்பாய் செப்டம்பர் மாநாட்டுக்கு அழைத்த போது யாரும் கலந்து கொள்ளவில்லை. இப்போது பொய்சொல்லிக் கூச்சலிடுகிறார்கள். அதோடு நாமசூத்திரர்கள் எல்லா இடங்களையும் பறித்துக் கொள்வார்கள் என்று எந்தக் காரணமும் இல்லாமல் பயப்படுகிறார்கள். வங்காளத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 103 இலட்சம். லோத்தியன் தொகுதி II-ஐக் காணவும். புனா உடன்படிக்கை லோத்தியன் பரிந்துரைகளுடன் ஒத்துப் போகிறது. லோத்தியன் தொகுதி II-இல் மலிக் தந்துள்ள குறிப்புகளைப் பார்க்கவும். கல்கத்தாவில் புனா உடன்படிக்கைக்கு இந்துக்களின் ஆதரவு இருப்பதை தாக்கர் குறிப்பிடுகிறார். ஆகவே அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள இந்த உடன்படிக்கையைத் திருத்திக் கொள்ள முடியாது.''

—பிர்லா மற்றும் தாக்கர்

3. மேலும் இரண்டு தந்திகள் என்னிடம் உள்ளன. அவை வருமாறு:

''பிர்லா அம்பேத்கருக்கு அனுப்பிய தந்தி. பிர்லாவுக்கு வங்காளத்திலுள்ள நிலைமைப் பற்றி எதுவும் தெரியாது. ஆகவே அவர் பிரதிநிதித் துவம் செய்ய முடியாது. சென்னை மாநிலத்திற்குச் சமமாக வங்காளத்தில் 30 இடங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப் படுவதை நியாயப்படுத்த முடியாது. வங்காளத்திலுள்ள தாழ்த்தப் பட்ட மக்களின் பிரச்சினை மற்ற மாநிலங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. ஆகவே இந்தப் பிரச்சினையில் பிரதமரின் முடிவை வங்காளம் ஏற்கக் கூடும்.''

''சதிஸ்சந்திர சென், பிஜய்குமார் பாசு, சத்தியேந்திர சந்திர கோஷ்மௌலிக், அமர்நாத் தத், சத்தியேந்திரசந்திர மித்ரா, சத்தியசரண் முகர்ஜி, சந்தியேந்திரநாத் சென், ஜகதீஸ்சந்திர பானர்ஜி, நப குமார்சிங் துதோரியா ஆகிய மத்திய சட்டமன்றத்திலுள்ள முஸ்லீம்கள் அல்லாத வங்காள உறுப்பினர்கள் இதைச் சமர்ப்பிக் கிறோம்.''

— அமர்நாத் தத்.

''வங்காள மேலவை உறுப்பினர்களாகிய நாங்கள் முன்பு தந்தி கொடுத்தோம். பிர்லா, தாக்கர் ஆகியோர் கொடுத்த தந்தி தவறானது என்று கூறுகிறோம். புனா உடன்படிக்கை ஏற்படுவதற்கான மாநாட்டுக்கு வங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்படவில்லை. உடன்படிக்கை ஷரத்துக்கள் வங்காளத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கின. ஒத்துக் கொண்டபடி பிரதமரின் திட்டப்படி இந்த உடன்படிக்கை வங்காளத்தைக் கட்டுப்படுத்தாது. வங்காளத்தில் எந்தச் சாதி தீண்டத்தகாதது, எந்தசாதி அணுகக் கூடாதது என்பது பற்றி லோத்தியன்குழு ஆய்வு செய்துள்ளது. இந்துக்களையும் முஸ்லீம் களையும் கொண்ட மாநில வாக்காளர் குழு இதற்குச் சரியாக பதில் கூறுகிறது. அறிக்கை தொகுதி II. மௌலிக் அளித்துள்ள குறிப்பு குழு முன் வைக்கப்படவில்லை; அது இரகசியமாகத் தயாரிக்கப்பட்டது. வங்காளத்தில் தாழ்த்தப்பட்டவர்களை மௌலிக் வகைப்படுத்தியிருப்பது மற்ற மாநிலங்களிலிருந்து வேறுபட்டது. அங்கெல்லாம் சுபர்னோபனிக்குகள், சாஹர்கள், மஹிசியர்கள் ஆகியோர் தாழ்த்தப்பட்ட சாதியினர் அல்லர். இங்கிலாந்து கூடப் பிரம்ம சமாஜவாதிகள், வைத்தியாக்கள், காயஸ்தர்கள் ஆகிய இந்தியர் களை திருப்பி அனுப்பிவிட்டது. இவர்களைப் பிராமணர் களுக்கு எதிராக நிறுத்தியது. வங்காளத்திலுள்ள பொது வாழ்க்கை சாதி அடிப்படையிலிருந்து விலகியிருக்கிறது. மதாரிபூரில் 1923-இல் நடைபெற்றத் தேர்தலில் சட்டர்ஜிக்கு எதிராக ஒரு நாம சூத்திரரைச் சாதி இந்துக்கள் தேர்ந்தெடுத்தனர். தேசபந்து பிராமணப் பெண்ணை மணக்க வேண்டும் என்று ஐதீகத்தை கைவிட்டார். சாதி இந்துக்கள் பலர் அவரைப் பின்பற்றினார்கள். நாமசூத்திரர்களுக்கு ஒதுக்கப்பட்டவை 20 இடங்கள் என்பதை ஜூலை 14-ஆம் தேதியிட்ட கல்கத்தா அரசிதழ் உறுதி செய்கிறது. இதைக் கண்டு நாமசூத்திரர்கள் அல்லாதவர்கள் அலறினார்கள். நாமசூத்திரர்கள், ராஜ்பன்சிகள் ஆகியோர் மற்ற தாழ்த்தப்பட்ட சாதிகளை ஒதுக்கி வைக்கிறார்கள். ஆகவே இவர்களுக்கு அவர் களை பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை இல்லை. ஆனால் சாதி இந்துக்கள் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல தலைமுறை பாடுபட்டிருக்கிறார்கள். புனா உடன்படிக்கை இந்து வங்காளத்தை அரசியல் ரீதியில் பிளவுப்படுத்துகிறது. இதுவரையில் இங்கு அப்படி இல்லை. பிரதமர் இதை கவனிக்கவேண்டும்.

— *சட்டர்ஜியும் மற்றவர்களும்*

4. கடந்த ஆகஸ்டு மாதம் இந்தியாவிலிருந்து வெளிநாடு சென்றுவிட்டேன். ஆகவே புனா உடன்படிக்கைப் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

5. உங்களது 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வில்' பின் வருமாறு கூறப்பட்டுள்ளது: ''தங்கள் முடிவை மாற்றும் நோக்கத் தோடு மேற்கொள்ளப்படும் எத்தகைய பேச்சுவார்த்தைகளிலும் தாங்கள் கலந்து கொள்ள முடியாது என்பதையும், பாதிப்புக்குள் ளாகும் அனைத்துத் தரப்பினர்களின் ஆதரவைப் பெறாத எந்த

மாற்றத்தையும் செய்யக் கோரும் எத்தகைய விண்ணப்பத்தையும் தங்களால் பரிசீலனை செய்ய முடியாது என்பதையும் மன்னர் பிரான் அரசு மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.''

6. உங்களுடைய முடிவுப்படி இந்துக்களுக்கு (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உட்பட) 80 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் முஸ்லீம்களுக்கு 119 இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்துக்களை விட முஸ்லீம்களுக்கு 50 சதவிகித இடங்கள் அதிகம். ஐரோப்பியர்களுக்கு 25 இடங்கள்; அதாவது மொத்த இடங்களில் 10 சதவிகிதம். ஆனால் ஐரோப்பியர்கள் மக்கள் தொகையில் ஒரு விழுக்காடு கூட இல்லை. சமூகநிலை, செல்வாக்கு கல்வி முதலியவை இதில் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஐரோப்பியர்களைப் பொறுத்தவரை இது சரியான முடிவாக் இருக்கலாம். ஆனால் இந்துக்கள், முஸ்லீம்கள் விஷயத்தில் தலைகள்தான் எண்ணப்பட்டுள்ளன. இருபத்தியொரு வயதிற்கும் குறைந்தவர்களை எண்ணிக்கையில் சேர்த்துக்கொண்டு முஸ்லீம்கள் 54 சதவீதத்தினர் என்று கூறுகிறார்கள். வயது வந்தவர்களை மட்டும் கணக்கெடுத்தால் முஸ்லீம்கள் கணிசமாகப் பெரும்பான்மை இல்லை.

7. மக்கள் தொகையில் முஸ்லீம்கள் 54% என்று வைத்துக் கொண்டாலும் இந்துக்களை விட 50% இடங்கள் ஒதுக்குவது விசேஷ இடங்கள் என்றுதான் கூறவேண்டும். 51 இடங்கள் ஒதுக்கீடு இந்துக்களிடமிருந்து எடுத்துத் தரப்படுவதுதான்.

8. ஐரோப்பியர்களுக்கு 25, ஆங்கிலோ-இந்தியர்களுக்கு 4, தொழிலாளர்களுக்கு 8 என்று விசேஷ இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது இந்துக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கீடு கிடைக்கவில்லை என்பதையே காட்டுகின்றது.

9. உங்களுடைய முடிவு, வாதம் ஆகியன விறுவிறுப்பாக இருந்தாலும் இந்த முடிவு இந்துக்களுக்கு எதிராகவே இருக்கிறது, ஆகவேதான் உங்களுடைய முடிவைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை விட வங்காள இந்துக்கள் எதிர்க்கிறார்கள். என்பதை நீங்கள் செவிமடுத்துக் கேட்கவில்லை என நான் முழுமையாக உணர்கிறேன். நான் வாதத்திற்காகக் கூற விரும்புவதை அனுமதிக்க வேண்டுகிறேன். ஒரு வகுப்பினருக்கு மற்ற வகுப்பினரை விட 50% அதிகமாகக் கிடைத்திருப்பதை நீதியின் பெயரால் அவர்கள் விட்டுக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முடியாத காரியம்.

10. இங்குள்ள பிரச்சினை உண்மை நிலவரம் சம்பந்தமான பிரச்சினை. இப்போது குறை கூறிக் கொண்டிருப்பவர்கள் உங்களுடைய முடிவில் மாறுதல் செய்வதற்கு ஒத்துக் கொள்வார்களா? ஒப்பந்தம் கையெழுத்தான கூட்டத்திற்கு வங்காளிகள் 'வரத் தவறியது' பற்றிச் செய்யப்படும் வாதத்தில் வலுவில்லை. எது எப்படியிருந்தாலும், இத்தகைய தவறு நடைபெற்றிருக்கிறதா என்பது இனிமேல்தான் தீர்மானிக்கப்பட வேண்டும்; இதைக் கொண்டுதான் உங்கள் தீர்வை மாற்றுவதற்கு வங்காளத்தைச்

சேர்ந்த தாழ்த்தப்பட்டவரல்லாதவர்கள் ஒப்புக்கொண்டார்களா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

11. பிர்லாவும் தாக்கரும் அனுப்பிய தந்தி விவாதிக்கப்படும் விவரங்களைச் சரியாகக் குறிப்பிடுகிறதா என்பதைக் கண்டறி வது மிகவும் முக்கியம். அந்த உண்மைகள் சரியாகவே இருந்தாலும் உடன்பாடு ஏற்படுமா என்பதைக் கூறமுடியாது.

12. பாதிப்புக்குள்ளான தரப்பினரின் நலனுக்காகப் புனா உடன்படிக்கையில் வங்கத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பின ரல்லாதவர்கள் ஒரு தரப்பினர்தானா, அது அவர்களைக் கட்டுப் படுத்துமா என்பதை இந்திய அரசு அல்லது வங்காள அரசு அல்லது பொறுப்புள்ள வேறு ஏதேனும் அமைப்பு விசாரணை யின் மூலம் விளக்கமாகக் கண்டறிய வேண்டும்.

தகவலுக்காக இந்தக் கடிதத்தின் நகல் ஒன்றை டாக்டர் அம்பேத் கருக்கு அனுப்புகிறேன். நான் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட விருப்பதால், விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான ஏற்பளிப்பு அல்லது பதிலைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பு வதற்கு ஏற்பாடு செய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள் கிறேன்:

திரு. நரேந்திர குமார் பாசு, மேலவை உறுப்பினர்,
வழக்கறிஞர் சங்கம், உயர்நீதிமன்றம், கல்கத்தா.

தங்களின் உண்மையுள்ள
(ஒப்பம்) **என். என். சர்க்கார்,**
உறுப்பினர் இந்திய வட்டமேசை மாநாடு

## சர் இரவீந்திரநாத தாகூர் அனுப்பிய தந்தி

*நாள்: 27 ஜூலை 1933*

சர் என். என். சர்க்கார் அவர்களுக்கு,

வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தீர்வு சம்பந்தமாக மகாத்மாஜி தெரிவித்த யோசனையை ஏற்பதற்குத் தாமதிக்க வேண்டாம் என்று பிரதமரை வேண்டி அவருக்கு அனுப்பிய தந்தி எனக்கு நினைவுக்கு வருகிறது. புனா உடன்படிக்கை ஏற்படுத்தும் விளைவு என்ன என்பதைப் பற்றி அமைதியாகச் சிந்திக்க அந்த நேரத்தில் எங்க ளுக்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது. சாப்ரு, ஜெயகர் இருவரும் மற்ற உறுப்பினர்களோடு புறப்பட்டுச் சென்று விட்டார் கள். வங்காளத்திலிருந்து வந்த உறுப்பினர்களில் ஒருவர் கூடப் பொறுப்பான பிரதிநிதியாக இல்லை. இந்தப் பிரச்சினைக்கான உடனடித் தீர்வில்தான் மகாத்மாஜியின் ஜீவன் இருந்தது. இத் தகைய ஒரு நெருக்கடி ஏற்படுத்திய தாங்க முடியாத கவலை என்னை நெருக்கித் தள்ளிய தால் நான் அதை ஒத்துக் கொள்ள நேர்ந்தது. அது தவறு என்று இப்போது நான் உணர்கிறேன். நாட்டின் நல னுக்கு அது எப் போதும் எதிரானது. அரசியல் விஷயங்களில்

அனுபவம் இல்லாததாலும் மகாத்மாஜியிடம் பெரிய அளவில் அன்பும், இந்திய அரசியல் பற்றிய அவரது அறிவுக் கூர்மையில் நம்பிக்கையும் வைத்திருந்ததாலும் நான் மீண்டும் பரிசீலனை செய்யாமல், வங்காளத்தின் விஷயத்தில் நீதி பலியிடப்பட்டதைக் கவனிக்காமல் ஒத்துக் கொள்ளத் துணிந்தேன். சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் அநீதி இழைக்கப்பட்டு அல்லல்படு வார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. வகுப்பு வாதப் பிணக்கு ஊக்கம் பெற்றுள்ளதைப் பார்க்கும் போது நமது மாநிலத்தில் அமைதியான அரசமைப்பது கடினம்.

— **இரவீந்திரநாத தாகூர்**

## பிரதமருக்கு டாக்டர் அம்பேத்கர் அனுப்பிய கடிதமும் இணைப்புகளும்

இம்பீரியல் ஹோட்டல்
ரஸ்ஸல் சதுக்கம்
லண்டன், டபிள்யூ. சி. ஐ
5, சனவரி 1933.

அன்பார்ந்த பிரதமர் அவர்களே,

சர் என். என். சர்க்கார் இந்தியாவிற்குப் புறப்படுவதற்குச் சற்று முன் 19 டிசம்பர் 1932 தேதியிட்டு உங்களுக்கு எழுதிய கடிதத் தின் நகல் ஒன்றை எனக்கு அனுப்பியிருந்தார். வங்காளத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் சாதி இந்துக்களுக்கும் ஏற் பட்டுள்ள பூனா உடன்படிக்கையின் நிபந்தனைகள் வங்கத்தி லுள்ள சாதி இந்துக்களுக்குப் பொருந்தாது என்றும் ஏனென்றால் அந்த உடன்படிக்கையில் தாங்கள் கையெழுத்திடவில்லை என்றும் கூறி வங்காள சாதி இந்துக்கள் அனுப்பிய சில தந்திகளை உங்க ளுடைய பரிசீலனைக்காக அக்கடிதத்தில் வைத் துள்ளார்.

எதிர்தரப்பிலிருந்தும் தந்திகள் எனக்கு வந்தன. திரு. தாக் கூர், திரு. பிர்லா ஆகியோரிடமிருந்து வந்த தந்தி ஒன்றையும் சர் என். என். சர்க்காரிடம் காட்டினேன். பூனா உடன்படிக்கை யின் விளைவாக திரு. காந்தியின் சார்பாகப் பேச்சு வார்த்தை யில் இவர்கள் கலந்துகொண்டவர்கள். திரு. காந்தி எழுதிய கடிதத் தில் உடன்படிக்கை வாசகங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இதையெல்லாம் சொல்லி நான் உங்களைச் சிரமப்படுத்த விரும்ப வில்லை. ஏனெனில் முதலாவதாக, மேன்மைமிகு அரசரின் ஆட்சி பூனா உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதாகவே தெரி கிறது. ஆகவே இந்தப் பிரச்சினை என்னைப் பொறுத்தவரை முடிந்துவிட்ட ஒன்று. இரண்டாவ தாக, தமக்குக் கிடைத்தத் தந்திகளையெல்லாம் உங்களுக்குத் தகவலுக்காக அனுப்புவதைத் தவிர வேறு எதுவும் செய்யப்போவதில்லை என்று சர் என். என்.சர்க்கார் எனக்கு உறுதியளித்தார். ஆனால் திரு. என். என். சர்க்கார் அந்தத் தந்திகளை உங்களுக்கு அனுப்பிவைத்ததோடு நிற்கவில்லை. மாறாக, பூனா ஒப்பந்தம் கையெழுத்தான கூட்டத்துக்கு வங்காள

இந்துக்கள் 'வரத் தவறியது' பற்றித் திருவாளர்கள் தாக்கரும் பிர்லாவும் தங்கள் தந்தியில் முன்வைத்துள்ள வாதத்தில் வலு வில்லை என்று அவர் கூறியுள்ளார். மேலும், ''வங்காளத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவரல்லாதோர் பூனா ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டனரா, அந்த ஒப்பந்தம் அவர்களைக் கட்டுப்படுத்துமா என்பதைக் கண்டறிய இந்திய அரசாங்கத்தின் மூலமோ, வங்க அரசாங்கத்தின் மூலமோ அல்லது வேறு எந்தப் பொறுப்பு வாய்ந்த, நடுநிலைமை அமைப்பின் மூலமோ விசாரணை நடத்தப் பட வேண்டும்'' என்றும் அவர் கோரியுள்ளார். இந்தக் கோரிக் கைக் குறித்து இங்கு எனது கருத்துக்களை முன்வைக்க விரும்பு கிறேன்.

எனது முதல்வாதம், வங்கத்திலுள்ள இந்துக்கள் பூனா உடன் படிக்கையை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்ற காரணத்தி னாலேயே வங்கத்துக்கு அது பொருந்தாது என்று கருத முடியாது. மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசு வழங்கிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வின் 4-ஆவது பத்தி இந்தத் தீர்வுக்குப் பதி லாக ஓர் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஏற்படுவதற்கு வகை செய்கிறது. ஆயினும் பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்குமான இத்தகைய ஒரு மாற்றுத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பூனா ஒப்பந்தம் பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்குமானது என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்—இத் திட்டத்தை எல்லா சாதி இந்துக்களும், சகல தாழ்த்தப்பட்ட மக்களும், ஒவ்வொரு மாகாண மும் ஏற்றுக் கொண்டால்தான் அது ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டமாகக் கருதப்படும் என்று இந்தப் பத்தி நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை என்பதே என் கருத்து. இன்னும் சொல்லப் போனால் தனியொரு மாகாணத்தின் ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட வரை கூட இத்தகைய நிபந்தனை வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத் தீர்வில் அடங்கியிருக்கவில்லை என்றும் கூறுவேன். என் கருத்துப் படி 4-ஆது பத்தி சொல்லுவதெல்லாம் சம்பந்தப்பட்ட வகுப் பினர் அனைவரும் மாற்றுத் திட்டத்தைப் பரஸ்பரம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் மன்னர் அரசாங்கம் திருப்தி யடைந்திருக்க வேண்டும் என்பதுதான். 4-ஆவது பத்திக்கு இத் தகைய பொருள் கொள்ளும் அடிப்படையில், ஒன்றைத் திட்ட வட்டமாகக் கூற விரும்புகிறேன்: அதாவது வங்க சாதி இந்துக் களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை என்ற காரணத் துக்காக பூனா ஒப்பந்தம் வங்காளத்துக்குச் செல்லுபடியாகாது என்றாகி விடாது. இந்த 4-ஆவது பத்திக்கு இதற்கு மாறான பொருள் கொள்ளப்படும் பட்சத்தில் அப்போது பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பீகார், ஒரிசா ஆகிய மாகாணங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் பூனா ஒப்பந்தத்தை நிராகரிக்க உரிமை பெற்றவர்களாகி விடுவார்கள்; ஏனென்றால் அவர்களது பிரதி நிதிகளும் பூனா மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

எனது இரண்டாவது வாதம், சாதி இந்துக்கள் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை என்று சர் என்.என்.சர்க்கார் மூலமாகத் தந்தி

அனுப்பியவர்கள் சொல்வதை எடுத்துக் கொண்டு விவாதத்தைத் தொடர வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில் அவர்களுடைய பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்குகொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படியிருக்கும்போது, மாநாட்டில் கலந்து கொள்ள விடுக்கப்பட்ட அழைப்பை வங்க இந்துக்கள் ஏற்கவில்லை என்று திரு. தாக்கரும் திரு. பிர்லாவும் தமது தந்தியில் கூறியிருப் பதும், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஒரு விசாரணை நடத்த வேண்டும் என்று சர் என். என். சர்க்கார் கோரியிருப்ப தும் தவறானது. தவிரவும்; இந்த வங்காளப் பிரதிநிதிகள் வெறும் பார்வையாளர்களாக இல்லாமல் பேச்சு வார்த்தையில் தீவிர மாகக் கலந்து கொண்டவர்கள் என்பதும் மனதில் பதிய வைக்க வேண்டிய முக்கியமான விஷயம். அந்தப் பிரதிநிதிகளில் ஒருவர் ராஜா கட்சியைச் சேர்ந்த வங்காளத் தாழ்த்தப்பட்ட இளைஞர் ஒருவருடன் என்னைப் பம்பாயில் சந்தித்தார். ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் தனியாகப் பேசினோம். அப்போது ஒன்றிணைந்த வாக்காளர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கும் அடிப்படையில் சாதி இந்துக்களுடன் ஓர் உடன்பாட்டிற்கு வரும்படி என்னை வலியுறுத்தினார். ஆகவே சாதி இந்துக்கள் பிரதிநிதித்துவப்படுத்த வில்லை என்று கூறுவதும், சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் முக்கிய இயல்பு சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளின் முழு விவரங் களையும் பெற முடியாத இயலாமையே திருவாளர்கள் தாக்கர், பிர்லா இருவரின் அறிக்கையில் காணப்படும் தவற்றுக்குக் காரணம் என்றும், இது முற்றிலும் மன்னிக்கப்படத்தக்கதே என்றும் கூறு வதும் உண்மைக்குப் புறம்பானது. என்னோடு உரையாடிய வங்காள சாதி இந்துவின் பெயரைச் சொல்ல இயலாமைக்கு நான் வருந்துகிறேன். ஆனால் நான் இந்தியா திரும்பியதும் அவரது பெயரைத் தெரிவிக்கிறேன்.

ஆகவே பூனா உடன்படிக்கை குறித்துச் சாதி இந்துக்களின் சார் பாக மறுபடியும் பேசுவதற்கு எதுவும் இல்லை. திரு. எம். பி. மல்லிக் எனக்குக் கொடுத்த தந்தியில் தாழ்த்தப்பட்டவர்கள் பூனா உடன் படிக்கையை ஏற்றுக் கொண்டதாகக் கூறியுள்ளார். அவரது தந்தி யையும் திரு. தாக்கர், திரு. பிர்லா ஆகியோரும் அனுப்பியுள்ள தந்திகளையும் தகவலுக்காக இணைத்துள்ளேன். நான் அடுத்தவாரம் இந்தியா திரும்புகிறேன். இது விஷயமாக எனது பம்பாய் முகவரிக் குக் கடிதத் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள் கிறேன். முகவரி கீழே தருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள
(ஒப்பம்) **பி. ஆர். அம்பேத்கர்**

*முகவரி:*
தாமோதர் ஹால், பரேல்,
பம்பாய்—12 (இந்தியா)

**1 டிசம்பர் 1932 தேதியிட்ட தந்தியின் நகல்**

*1774 டில்லி. 118. 29. 2020*

டி. எல். டி. டாக்டர் அம்பேத்கர், இந்தியா அலுவலகம், லண்டன்.

பூனா உடன்படிக்கைச் சம்பந்தமாக வங்காள சாதி இந்துக்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் கலந்துகொள்ள தவறிவிட்டார்கள். லோத்தியன் குழுவிடம் தாழ்த்தப்பட்ட வகுப்புக்களின் பட்டியல் தர தவறியது முதல் சந்தர்ப்பம். பம்பாய்ச் செப்டம்பர் மாநாட்டில் கலந்து கொள்ளத் தவறியது இரண்டாவது சந்தர்ப்பம். ஆனால் இப்போது பொய்யான முறையில் கூச்சலிடுகிறார்கள். நாமசூத்திரர்கள் மேலும் இடங்களைப் பறித்துக் கொள்வார்கள் என்று காரணமில்லாமல் பயப்படுகிறார்கள். வங்காளத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 103 இலட்சம். லோத்தியன் தொகுதி II, பக்கம் 263-ஐக் காணவும். ஆனால் இடங்களுக்காக 75 இலட்சம் என்று கணக்கிட்டோம். லோத்தியன் குழு அறிக்கையைக் காணவும். லோத்தியன் குழு அறிக்கை பூனா உடன் படிக்கையைப் பெரிதும் ஒத்துப்போகிறது. லோத்தியன் தொகுதி II, பக்கம் 251-இல் திரு. மல்லிக் தந்துள்ள குறிப்பைக் காணவும். கல்கத்தாவில் உடன்படிக்கைக்கு பொதுவாக இந்துக்களின் ஆதரவு இருக்கிறது. ஆகவே அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ள உடன் படிக்கையை மாற்ற இயலாது.

— *பிர்லா மற்றும் தாக்கர்*

***1932—டிசம்பர் 26-ந் தேதியிட்ட தந்தியின் நகல்***

*டபிள்யூ எல். டி. அம்பேத்கர், இந்திய மாநாடு, லண்டன்.*

வங்காள தாழ்த்தப்பட்ட வகுப்பார், பூனா உடன்பாட்டை ஒத்துக் கொள்கின்றனர். அதே போல ஹிந்து கவுன்சிலும், ஹிந்துக்கள் பிரதிநிதித்துவம் வஞ்சகமானது, விபரீதமானது — மல்லிக்

## (13)

## டாக்டர் பி. எஸ். மூஞ்சே, திரு. பி. சி. சட்டர்ஜி, திரு. ஜே. பானர்ஜி, திரு. ஜி. ஏ. கவாய், ராய் சாஹிப் மெஹர்சந்த் கன்னா, திரு. ஆர். எம். தேஷ்முக், திரு. பாய் பரமானந்த் மற்றும் பண்டிட் நானக்சந்த் ஆகியோர் — ஹிந்து மகாசபையின் சார்பாக

*8813. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* துவக்கத்தில், டாக்டர் மூஞ்சேயிடம் நான் ஓரிரு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். டாக்டர் மூஞ்சே! மகாத்மா காந்தி உண்ணாவிரதம் பற்றி எழுந்துள்ள சில பிரச்சினை குறித்து என்ன செய்யப்படலாம் என்பதை விவாதிப்பதற்காகப், பண்டித மதன்மோகன் மாளவியா விடுத்திருந்த பம்பாய்க் கூட்டம் பற்றி, சர். நிரிபேந்திர சர்க்கார் சில கேள்விகளை உங்களிடம் கேட்டுள்ளார். அந்த விவரங்களைத் தெளிவுபடுத்துவதற்காக, நான் உங்களிடம் ஓரிரு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். 1932-செப்டம்பர் 19-ந் தேதியன்று,

* சாட்சியக் குறிப்பு, தொகுதி II-C, 1933 ஜூலை 31, பக். 1425-34.

பண்டித மாளவியாவின் தலைமையில், பம்பாயில் நடைபெற்ற முதலாவது மாநாட்டில் நீங்கள் வருகை செய்திருந்தீர்கள் அல்லவா?

*டாக்டர் மூஞ்சே :* ஆம்.

8814. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அந்தக் கூட்டத்தில், ஒரு சிறிய துணைக்குழு (Sub-Committee) நியமிக்கப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்?

*டாக்டர் மூஞ்சே :* ஆம்.

8815. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அக்குழுவில், திரு. ஜெயகர், சர் தேஜ் பஹதூர் சாப்ரூ உள்ளிட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சாதி ஹிந்துக்களின் பிரதிநிதிகள் இருந்தனர்?

*டாக்டர் மூஞ்சே :* ஆம்.

8816. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தத் துணைக்குழு பிரச்சினையை விவாதிப்பதற்காகப் பூனா சென்றது?

*டாக்டர் மூஞ்சே :* ஆம்.

8817. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஏனெனில், இப் பிரச்சினையை விவாதிக்கும்போது, மகாத்மா காந்திக்கு அருகில் இருப்பது விரும்பத்தக்கது என்று அவர்கள் நினைத்தார்கள்; துணைக்குழுவின் விவாதங்களின் விளைவாக, மகாத்மா காந்தியின் ஒப்புதலுடன், பூனா ஒப்பந்தம் தீர்மானிக்கப்பட்டது?

*டாக்டர் மூஞ்சே :* ஆம்.

8818. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதன் பின்னர், இந்த துணைக் குழுவை நியமனம் செய்த முக்கிய ஹிந்துக்குழு மீண்டும் செப்டம்பர் 25-ந்தேதி பம்பாயில் கூடிற்று?

*டாக்டர் மூஞ்சே :* இருக்கலாம். நான் ஆஜராகி இருக்கவில்லை.

8819. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அந்தக் கூட்டத்தில், ஒப்பந்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அப்படித்தானே?

*டாக்டர் மூஞ்சே :* விவரங்களனைத்தையும் விளக்கிக் கூற டாக்டர் அம்பேத்கர் எனக்கு வாய்ப்பளித்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

8820. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதனை நீங்களே சொந்தமாக அறிந்து கொண்டீர்களா?

*டாக்டர் மூஞ்சே :* எனக்குத் தெரிந்த விவரங்களை நான் கூற முடியும்.

8821. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தக் கேள்வியை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன்; பூனாவில் தனது வேலையை முடித்துக் கொண்ட துணைக்குழு மீண்டும் பம்பாய் திரும்பி, துணைக்குழுவை நியமித்த ஹிந்துக்களின் முக்கிய மாநாட்டிற்கு தான் என்ன செய்துள்ளது என்று அறிவித்தது உங்களுக்குத் தெரியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

டாக்டர் மூஞ்சே: ஆம், தெரியும்.

8822. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : திரு. கவாயிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்; அவர் அங்கிருந்தார் என்று நான் நினைக்கிறேன். திரு. கவாய், பூனா ஒப்பந்தம் ஏற்படக் காரணமாக இருந்த பேச்சு வார்த்தைகளில் நீங்கள் பங்கு கொண்டீர்கள் அல்லவா?

திரு: கவாய்: ஆம்.

8823. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : உங்களை வருத்துவதற்காக நான் இதைக் கேட்கவில்லை; ஆனால், நீங்கள் அந்த நேரத்தில் ராஜா-மூஞ்சே ஒப்பந்தக் கட்சி என்று அழைக்கப்படும் கட்சியைச் சேர்ந்தவரல்லவா?

திரு. கவாய்: ஆம்.

8824. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : பூனா கூட்டத்தில் நீங்கள் இருந்தீர்கள் அல்லவா?

திரு. கவாய் : ஆமாம்.

8825. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : ஒப்பந்தம் கையெழுத்தான பின் துணைக்குழு பம்பாய்க்குத் திரும்பி வந்து, பண்டித மாளவியாவின் தலைமையில் ஒரு கூட்டம் கூட்டி, குழு முழுவதுமே பூனா ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றிற்று?

திரு. கவாய் : ஆம்.

டாக்டர் மூஞ்சே : டாக்டர் அம்பேத்கர், என்னிடம் கேட்டது குறித்து, நான் விளக்க வேண்டாமா?

தலைவர் : டாக்டர் அம்பேத்கரது பரிசீலனையின் முடிவினை முதலில் கேட்பதையே குழு விரும்புகிறது. அதற்குப் பின்னர், உங்களது விளக்கத்தை நாம் கேட்போம், திரு. மூஞ்சே!

8826. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : துணைக்குழு நியமனம் செய்யப்பட்டு, அது இந்த விஷயத்தை மகாத்மா காந்தியுடன் விவாதிப்பதற்குப் பூனா சென்ற பின்னர், 1932 செப்டம்பர் 24 — 26 தேதிகளுக்கிடையே டில்லியில் ஹிந்து மகாசபைக் கூட்டத் தொடர் நடைபெற்றதா?

டாக்டர் மூஞ்சே : ஆம்.

8827. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அது பண்டித மாளவியா தலைமையில்தானே நடந்தது?

டாக்டர் மூஞ்சே : அல்ல. திரு. என். சி. கேல்கரின் தலைமையில்.

8828. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : டில்லிக் கூட்டத்தில் திரு. ராமானந்த் சட்டர்ஜி இருந்தாரா?

டாக்டர் மூஞ்சே : ஆம்.

8829. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : டில்லியில் நடைபெற்ற ஹிந்து மகா சபாக் கூட்டத்தில் ராஜா நரேந்திர நாத்தும் இருந்தாரா?

டாக்டர் மூஞ்சே: ஆம்.

உயிருக்கு நோவிருந்த அபாயம் அகன்று விட்டது'' என்று சொல்லி, அதனாலேயே நான் டில்லி சென்றேன். டில்லியில் ஹிந்து மகாசபாக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பூனா ஒப்பந்தத்தைக் காந்தி ஏற்றுக் கொண்டார் என்ற தந்தி எங்களுக்குக் கிடைத்தது; இயற்கையாகவே, ஒவ்வொருவரும், காந்தியின் உயிரைக் காப்பாற்ற ஆவலாயிருந்தோம்; ஹிந்து மகாசபாவில் நாங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

*8842. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு?

*டாக்டர் மூஞ்சே:* ஆம். அதை ஏற்றுக் கொண்டுதான். ஆனால், இந்த நேரத்தில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். பஞ்சாபின் சார்பாக, ராஜா நரேந்திரநாத் எதிர்த்தார்; அவரது எதிர்ப்பு வீண்; ஆனால், அப்போது, அந்தக் கூட்டத்தில் பெரும் பான்மையினர் ஒரு வித அச்சத்திலும், பயத்திலுமிருந்தனர்....

*8843. திரு. ஜாஃபருல்லாகான்: உண்ணாவிரதச் சூழலிலா...?*

*டாக்டர் மூஞ்சே:* ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படாவிடில், மகாத்மா காந்தியின் உயிரைக் காப்பாற்ற முடியாது என்பதனால், ஒப்பந்தத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இவைதான் விவரங்கள். குறிப்பிட்டுக் கூற வேண்டியதொரு அம்சம் இதுதான்: முதலாவது, இரண்டாவது வட்டமேசை மாநாடுகளின் போது, டாக்டர் அம்பேத்கருடன் நாங்கள் மேற்கொண்ட பேச்சு வார்த்தைகளில்; கூட்டு வாக்காளர் தொகுதி அமைப்பின் கீழ், மக்கள் தொகை அடிப்படையில், இட ஒதுக்கீடு செய்யப்பட்டால், டாக்டர் அம்பேத்கர் முற்றிலும் திருப்தியுறுவார் என்று தெரிந்தது, இதன்பேரில் டாக்டர் அம்பேத்கரின் ஒப்புதலுடன் நான் ஹிந்து மகாசபாவுடன் உடன்பாடு மேற்கொண்டேன். ஒரு சந்தர்ப்பத்தில், இரண்டாவது வட்டமேசை மாநாட்டின்போது, இந்த அம்சத்தில் ஓரளவு தெளிவின்மை இருப்பதாக டாக்டர் அம்பேத்கர் எண்ணியபோது, ஹிந்துக்களும் பங்கு கொள்ளும் கூட்டு வாக்காளர் தொகுதிகளில் மக்கட் தொகை அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யும் ஏற்பாட்டின் மூலம் ஹிந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் இடையே உள்ள வேறுபாடு அகற்றப் பட்டுவிடும் என்று அவரும் நானும் கையொப்பமிட்ட ஒரு கூட்டுக் கடிதத்தைப் பிரதமருக்கு அனுப்பலாம் என்று நான் யோசனை கூறினேன்.

*8844. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதற்கு நான் ஒப்புக் கொள்ளவில்லை?

*டாக்டர் மூஞ்சே:* அதற்கு அந்த நேரத்தில், டாக்டர் அம்பேத்கர் ஒத்துக் கொள்ளவில்லை; ஆனால், முதலாவது வட்டமேசை மாநாட்டில், டாக்டர் அம்பேத்கர் அதற்கு ஒத்துக்கொண்டார்; மற்றும், அவரது இசைவுடன், இந்த தகவல் அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு அறிவிக்கப்பட்டது.

*டாக்டர் அம்பேத்கர் :* இந்தக் கூற்றை நான் ஏற்றுக்கொள்ள வில்லை.

**8845.** *திரு. எம். ஆர். ஜயகர் :* திரு. மூஞ்சே! நான் ஒரு கேள்வி கேட்கலாமா? ஹிந்து மகர்சபை, பூனா ஒப்பந்தத்தை டில்லியில் ஏற்றுக்கொண்டது என்று நீங்கள் பேசினீர்கள் அல்லவா?

*டாக்டர் மூஞ்சே :* ஆம்.

**8846.** *திரு. எம். ஆர். ஜயகர் :* பூனா ஒப்பந்தத்தை அதன் தகுதிகளின் அடிப்படையிலல்லாது, மகாத்மா காந்தியின் உயிரைக் காப்பாற்றுவதற்குத்தான் ஹிந்து மகாசபை அதை ஏற்றுக் கொண் டது என்பது நீங்கள் கூறியதன் பொருளா?

*டாக்டர் மூஞ்சே :* ஒப்பந்தத்துக்கான கோட்பாடு தனி வாக் காளர் தொகுதிகளின் அடிப்படையில் அமைந்து உள்ளதால், அந்தக் கோட்பாடு எனக்குத் தனிப்பட்ட முறையிலும், மொத்தத் தில் ஹிந்து மகாசபாவுக்கும் உடன்பாடே என்பதை ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட போதே நான் தெளிவாகக் கூறியதாக, ஏற் கனவே நான் சொல்லியுள்ளேன்.

*திரு. பாய் பரமானந்த் :* நான் ஒன்று சொல்லலாமா? பூனா ஒப்பந்தம் குறித்து வங்காள ஹிந்துக்களைப் போன்றே, பஞ்சாபிய ஹிந்துக்களுக்கும் அதே உணர்வு உள்ளது. அதனை அவசரமாக ஏற்றுக்கொண்டு, ஹிந்து மகாசபை தீர்மானம் நிறைவேற்றிய அதே நாளில், ராஜா நரேந்திரநாத் அதனை எதிர்த்தார். பூனா ஒப்பந்தம் பம்பாயில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 48 மணி நேரத்திற் குள்ளாகப் பகிரங்கக் கூட்டத்தில் ஹிந்துக்களின் எதிர்ப்பு வெளி யிடப்பட்டது. பஞ்சாப் ஹிந்துக்களின் செயலாளரும் எதிர்ப்புத் தெரிவித்தார்; பஞ்சாப் ஹிந்துக்கள் அதை எதிர்ப்பதாக டாக்டர் கோகல்சந்த் பிரதமருக்குத் தந்தியொன்றை அனுப்பினார். ஹிந்து உணர்வு இன்னமும் அதை எதிர்க்கத்தான் செய்கிறது. பூனா ஒப் பந்தம், பஞ்சாப் ஹிந்துக்களை மிக மோசமாகப் பாதிப்பதாக, பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன — அவை இப் போது என்னிடம் இல்லை. மேலும் ஒரு விஷயம்: மக்கள் தொகைப் பதிவு அறிக்கையில், ஹிந்துக்கள் என்று பதிவு செய்யப் பட்டுள்ளதாகக் கருதும் பட்வாலாக்கள், பாராவாலாக்கள், கபீர் பந்தாஸ்கள், டோம்கள் போன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சில குறிப்பிட்ட பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட வகுப்புப் பழங்குடியினரில் சேர்க்கப்படவில்லை. அதற்காக, அவர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்; அந்தப் பழங்குடியினரின் பெயர் கள் : பட்வாலா, பாராவாலா, கபீர்பந்தாஸ் மற்றும் டோம். பஞ்சாப் மக்கள் தொகையில் அவர்கள் சுமார் 50,000 ஆவர்; மக்கள் தொகைக் கணிப்பு அறிக்கையில் அவர்கள் ஒரியாக்கள் என்று தங்களைப் பதிவு செய்து கொண்டார்கள். தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்களாக அவர்கள் குறிப்பிடப்படவில்லை; அந்தப் பட்டி யலில் சேர்க்கப்பட வேண்டுமென்பதற்காக இந்தக் கிளர்ச்சியைத்

தோற்றுவித்துள்ளனர். ஆகவே, ஹிந்துக்கள் என்று தங்களைக் கூறிக் கொள்பவர்கள் அனைவருக்குமிடையே, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த இந்தப் பழங்குடியினருக்கெதிராக, ஒருவிதத் தப்பெண்ணம் இருப்பதையே இது காட்டுகிறது. எனவே, இந்த விஷயத்தைக் கவனிக்குமாறும், புதிய பழங்குடியினரின் உரிமைகளையாவது அவர்களுக்குக் கொடுக்குமாறும் நான் கூட்டுத் தேர்வுக்குழுவை (Joint Select Committee) கேட்டுக் கொள்கிறேன்.

*8847. திரு. ஜாஃபருல்லாகான் :* அவர் கடைசியாகக் கூறியது தெளிவாக இல்லை. நீங்கள் குறிப்பிட்ட இந்தப் பழங்குடியினர், தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட வேண்டும் என்கிறீர்களா?

*திரு. பாய் பரமானந்த் :* ஆம்.

*8848. திரு. ஜாஃபருல்லாகான் :* அவர்கள் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இல்லையா?

*திரு. பாய் பரமானந்த் :* இது மற்றோர் அம்சம் —

*8849. திரு. ஜாஃபருல்லாகான் :* நான் இந்த அம்சத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவர்களைப் போன்று இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அல்ல, அப்படித்தானே?

*திரு. பாய் பரமானந்த் :* நான் கூறுவது இதுதான்: சாதிப் பட்டியலில் அவர்கள் தங்களை ஹிந்துக்கள் என்று வர்ணித்துக் கொண்டதால், இதரப் பழங்குடியினருக்குத் தரப்பட்டுள்ள உரிமைகளிலிருந்து இவர்கள் விலக்கப்பட்டுள்ளனர்.

*8850. திரு. ஜாஃபருல்லாகான் :* பட்டியலில் சேர்க்கப்படும் உரிமையைப் பற்றிக் கூறுகிறீர்களா?

*திரு. பாய் பரமானந்த் :* ஆம்.

*டாக்டர் மூஞ்சே :* இதனை நான் விளக்கலாமா? பஞ்சாபையும், வங்காளத்தையும் பொறுத்தமட்டில், ஹிந்து மகாசபாவின் மறுப்பு என்னவென்றால், மக்களாலும், லோத்தியன் குழுவாலும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னர், தாழ்த்தப்பட்ட இனங்கள் பிரச்சினை பஞ்சாபில் கிடையாது என்றும், வங்காளத்தில் தாழ்த்தப்பட்ட இனங்கள் பிரச்சினை அழுத்தமானது அல்ல, அல்லது மிகப்பெரும் கவனம் செலுத்த வேண்டிய அளவுக்கு அது முக்கியமானது அல்ல என்றும் தெரியவந்தது.

இந்த அம்சம்தான் ஒரு குறையாகக் காட்டப்படுகிறது; தாங்கள் ஆரிய சமாஜிகள் ஆக்கப்பட்டதனால், தாழ்த்தப்பட்ட இனப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்று அந்த மக்கள் புகார் கூறுவதாக என்து நண்பர் திரு. பரமானந்த் கூறுகிறார். விஷயம் என்னவென்றால், பஞ்சாபில் தாழ்த்தப்பட்ட இனப்பிரச்சினை, தனி வாக்காளர் தொகுதிகள் வடிவில் உரிமையாகத் தோற்றுவிக்கப்படுமானால், தாழ்த்தப்பட்ட இனங்கள் என்ற பட்டியலில்,

இந்தத் தாழ்த்தப்பட்டவர்களையும் சேர்ப்பதற்கு உரிமையுண்டு. அத்தகைய தனி வாக்காளர் தொகுதிகள் தோற்றுவிக்கப்படா விட்டால், அந்த மக்கள், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பட வேண்டும் என்று கோர முடியாது.

*8851. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஒரு கேள்வி: உங்களது அபிப்பிராயப்படி பஞ்சாபில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் இல்லாத தால், பஞ்சாபில் பூனா ஒப்பந்தம் செயல்படுத்தப்படுவதை நீங்கள் மறுக்கிறீர்கள்?

*திரு. பாய் பரமானந்த் :* இதர பல மாநிலங்களில் காணப்படு பவர்களைப் போல அவ்வளவு இல்லை.

*8852. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இதைப்போல, அதைப் போல என்பது வேண்டாம். அவர்கள் இருக்கிறார்களா, இல் லையா? பஞ்சாபில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் உள்ளனர், அல்லவா?

*திரு. பாய்பரமானந்த் :* அவர்கள் தீண்டத்தகாதவர்களோ அல்லது நெருங்கக் கூடாதவர்களோ அல்லர். அவர்களுக்கும் பிறருக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. பஞ்சாபில் சாதி ஹிந்துக் களுக்கும், தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும் இடையே எந்த வேறு பாடும் இல்லை என்று சைமன் குழு அறிக்கையும், இந்திய அர சாங்க அறிக்கையும் கூடக் கூறுகின்றன.

*8853. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* உங்களிடம் ஒரு கேள்வி கேட்கட்டுமா? உங்களது முதல் நிலை: அங்குத் தாழ்த்தப்பட்டவர் எவருமே இல்லை, எனவே அவர்களுக்கென்று எத்தகைய தனி ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பது, உங்களது, இரண்டாவது புகார்: சில குறிப்பிட்டத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பது, இது முரண் பாடு அல்லவா?

*பண்டித நானக்சந்த் :* இந்த அம்சத்தை நான் முன்னரே குறிப் பிட்டேன். நான் ஒரு விளக்கம் தருகிறேன். தீண்டாமை, நெருங் காமை என்பதைப் பொறுத்த வரையில் அது அங்கு இல்லை; அப்படியே இருந்தாலும், அது கணக்கிலெடுத்துக் கொள்ள முடி யாத வாறு மிகச் சொற்ப அளவிலேயே உள்ளது. இதனை அரசாங்க அதிகாரிகளும், சீக்கியரும், முகம்மதியர்களும், ஹிந்துக் களும் ஒப்புக்கொள்கின்றனர்; ஆனால், சில இனங்கள் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் என்றும், வேறுசிலர் சம அந்தஸ்துடையவர்கள் என்றும் பட்டியலிடப்பட்டுள்ளது; பொருளாதார ரீதியில் பின் தங்கியவர்களோ, இல்லையோ, சில வகுப்பினருக்குச் சில குறிப் பிட்ட உரிமைகள் — உதாரணமாக, நிலம் வாங்குவது போன்ற சில உரிமைகள் — மறுக்கப்படுகின்றன; அவர்க்ள் தங்களையும், பட்டியலிலுள்ள இதரார்களோடு சேர்க்க வேண்டுமென்கின்றனர்; ஏனெனில், அவர்களும் அதே சமூக அந்தஸ்தில் உள்ளனர்.

*8854. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அவர்கள் அதில் சேர்க்கப் பட வேண்டுமென்று நீங்கள் ஆவலுடனிருக்கிறீர்களா?

*பண்டித நானக்சந்த் :* நான் ஆவலுடனில்லை; ஆனால், அவர்கள் ஆவலுடனுள்ளனர். நான் எவரையுமே தாழ்த்தப்பட்ட வகுப்பு என்று அழைக்க விரும்பவில்லை.

*8855. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வங்காளத்தைச் சேர்ந்த திரு. சாட்டர்ஜியிடம் நான் சில கேள்விகள் கேட்க விரும்பு கிறேன். பூனா ஒப்பந்தம் உருவாக்கப்பட்டபோது, வங்காள ஹிந்துக்கள் பிரதிநிதித்துவம் பெறவில்லை என்பது உங்களது பிரதான முறையீடு இல்லையா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* இது எனது முறையீடுகளில் ஒன்று. எனது முக்கிய முறையீடு ....

*8856. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இதனை நான் முதலில் எடுத்துக் கொள்கிறேன்; ஏனெனில், ஒவ்வொன்றாக நான் விளக்க விரும்புகிறேன். பம்பாயிலும், பூனாவிலும் வங்காள ஜாதி ஹிந்துக் களின் உறுப்பினர்கள் இருந்தனர் என்று உங்கள் தோழர் ஒத்துக் கொண்டார் என்று நினைக்கிறேன்.

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* ஆம்.

*திரு. ஜே. பானர்ஜி :* பூனாவில் ஒரு சாதி ஹிந்து ஆஜராகி இருந்தார் என்றுதான் நான் சொன்னேன்.

*8857. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இதர மாநிலங்களிலிருந்து டஜன் கணக்கானவர்கள் அங்கு வந்திருக்கவில்லையா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* இருக்கலாம்.

*ஜெட்லண்டு கோமான் :* டாக்டர் அம்பேத்கர்! அங்கு இருந்த வங்காள சாதி ஹிந்துக்களின் பெயர்களைச் சொன்னால், இந்தப் பிரச்சினை முழுவதையும் நாம் தீர்த்துவிட முடியுமல்லவா?

*8858. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் பெயர்களைத் தருகிறேன். 1933 மார்ச் 14-ந்தேதி வங்காளச் சட்ட மேலவைக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது கொடுக்கப்பட்ட பெயர்கள்தான் அவை.

*பி. சி. சாட்டர்ஜி :* அந்தப் பெயர்களைத் தயவு செய்து கூற முடியுமா?

*8859. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த அம்சத்தில் எந்த வித முரண்பாடும் இல்லை அல்லவா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* அந்த நேரத்தில் நான் இங்கிலாந்தில் இருந்தேன்.

*8860. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வங்காளச் சட்ட மேலவை யில் தாழ்த்தப்பட்ட வகுப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்திய

திரு. மல்லிக்கின் பேச்சிலிருந்து இங்கு மேற்கோள் காட்டுகிறேன். அவர் சொன்னது இதுதான்.

*திரு. ஜே. பானர்ஜி:* அவர் ஒரு நியமன உறுப்பினர்; தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி அல்ல; இதனை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

8861. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அவர் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் பிரதிநிதிதானே?

*திரு. ஜே. பானர்ஜி :* இதற்கு முன்னர் ஒரு தொகுதியில் அவர் இருமுறை தோற்கடிக்கப்பட்டார்.

8862. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் கூறிக் கொண்டிருக்கும் விஷயத்தில் அது எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை. சில குறிப்பிட்ட வங்காள ஹிந்துக்கள் அங்கு இருந்தார்களா இல்லையா என்பதுதான் நான் கேட்பது. பூனா ஒப்பந்தத்தை ஆதரித்து வங்காளத் தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர் ஒருவர், வங்காளச் சட்ட மேலவைக் கூட்டத்தில் கூறிய வாசகம் இது: "பண்டித மாளவியா, சர் தேஜ் பகதூர் சாப்ரூ, திரு. எம். ஆர். ஜெயகர், திரு. ராஜகோபாலாச்சாரி போன்றவர்களுடன், ஹிந்து மிஷனைச் சேர்ந்த சுவாமி சத்யானந்தா, அம்ரித சமாஜைச் சேர்ந்த பாபு ஹரிதாஸ் மஜும்தார் எம். ஏ. பி. எல், மித்னாப்பூர் சட்ட மேலவை உறுப்பினரான பாபு பிரமானந்த் பானர்ஜி, காதி பிரதிஷ்தானைச் சேர்ந்த பாபு எஸ். சி. தாஸ் குப்தா ஆகியோர் இருந்தனர் என்பதை நாம் அறிவோம்.

*திரு. ஜே. பானர்ஜி :* அவர்களில் ஒருவர் நீங்கலாக, எவருமே பூனாவில் ஆஜராகவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது சட்ட மேலவையில் கொடுக்கப்பட்ட அறிக்கை.

8863. *திரு. ஜே. பானர்ஜி :* நான் மேலும் பேச என்னை அனுமதிப்பீர்களா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் ஒரு கேள்வி கேட்கும் போது அதற்குப் பதில் சொல்லுங்கள்.

*திரு. ஜே. பானர்ஜி :* அது ஒரு தவறான அறிக்கை.

8864. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த அறிக்கையை, வங்காளச் சட்ட மேலவையில் எவரும் மறுக்கவில்லை என்று நான் கூறுகிறேன்.

*திரு. ஜே. பானர்ஜி :* நான் அன்று அங்கிருந்தேன். எந்த உரையும் ஆற்றப்படவில்லை; எழுதி வைத்திருந்தது எதுவோ வாசிக்கப்பட்டது; அதனை இங்கிருந்தவர்கள் கவனிக்கத் தவறியிருப்பது சாத்தியமே. ஒரு கட்டுரை தெளிவற்ற முறையில் வாசிக்கப்பட்டது.

*8865. திரு. எம். ஆர். ஜெயகர்:* உங்கள் சட்டமேலவையின் நடவடிக்கைகள் பிரசுரிக்கப்படுகிறதல்லவா?

*திரு. ஜே. பானர்ஜி:* ஆம்.

*8866. திரு. எம். ஆர். ஜெயகர்:* அந்த நிகழ்ச்சிகள் பிரசுரிக்கப் பட்டதன் பின்னர், ஏதேனும் மறுப்பு இருந்ததா?

*திரு. ஜே. பானர்ஜி:* ஆம். விவாதம் முடிவடைந்த உடனேயே, சில பெயர்கள் கொடுக்கப்பட்டன என்பதை நாங்கள் கேள்விப் பட்டவுடன், ஒரு மறுப்பு பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

*8867. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பம்பாயில் அந்த நபர் கள் இருந்தார்களா என்று நான் கேட்கிறேன்.

*திரு. ஜே. பானர்ஜி:* நான் பூனாவைப் பற்றிப் பேசிக் கொண் டிருக்கிறேன்.

*8868. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் முதற்கண் பம்பா யைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். துணைக்குழு அமைக்கப் பட்ட போது, இந்த நபர்கள் பம்பாயில் இருந்தனர் என்பதோடு அல்லாமல், அவர்கள் ஒவ்வொருவராக எனது அலுவலகத்தில் என்னோடு பேச்சு நடத்தி, என்னை ஓர் உடன்பாட்டிற்கு வரு மாறு வலியுறுத்தினர். இந்த உண்மையை நான் 'பாம்பே டைம்ஸ்'க்கு அளித்த பேட்டியில் வெளியிட்டுள்ளேன்; அது, மார்ச்சு 17-ந் தேதி அதாவது உங்கள் சட்ட மேலவை நிகழ்ச்சிகள் அறிவிக்கப் பட்ட பிறகு வெளியாகியுள்ளது.

*திரு. ஜே. பானர்ஜி:* அதற்கு அடுத்த நாளே, உங்களது அறிக் கையை நான் மறுத்துள்ளேன்; நீங்கள் ஒப்புக் கொண்டபடியே, அவர்களில் மூன்று உறுப்பினர்கள் பூனா செல்லவில்லை என்ப தனாலும், ஒப்பந்தத்தின் போது அவர்கள் அங்கில்லை என்பத னாலும் இந்த அம்சத்தை அது குறிப்பிடவில்லை என்று கூறி னேன்.

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* இந்த நபர்கள் பம்பாய்க்கு அனுப்பப் பட்டார்கள் என்பதோ, அல்லது பூனாவில் ஒரேயொரு நபர் இருந்தார் என்பதோ, அவர் வங்காள ஹிந்துக்களாலோ அல்லது வேறு எந்த வங்காளி ஹிந்துக்களாலோ அனுப்பப்பட்டார் என்பதோ எவருடைய வாதமுமல்ல; அது டாக்டர் அம்பேத்கரின் வாதமுமல்ல என்று நான் நினைக்கிறேன்; அவர்கள் அங்குத் தற்செயலாகவோ அல்லது நோய்வாய்ப்பட்டுள்ள மகாத்மாவைப் பார்ப்பதற்காகவோ இருந்திருக்கலாம்; அவரது பூதஉடலை ஊர்வலமாக சுமந்து செல்லும் நற்பேற்றினைப் பெறுவதற்காகக் கூட சிலர் உண்மையில் அங்குச் சென்றனர்.

*8869. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியானால், மாள வியாவின் மாநாட்டில் கலந்து கொள்ளும் நிச்சயமான நோக் கோடுதான் அவர்கள் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டார்கள் என்று

அனைவரும் அறிந்த விஷயத்தை நான் கூறுகிறேன். இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்? அது "லிபர்டி" பத்திரிகையில் கூடப் பிரசுரமாகியுள்ளது.

*திரு. ஜே. பானர்ஜி:* வங்காளத்திலுள்ள எந்தப் பொது நிறுவனமும் அதிகாரம் அளித்ததால் அவர்கள் அங்குச் செல்லவில்லை. அவர்கள் தங்களது சொந்த விஷயங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ சென்றிருக்கலாம். டாக்டர் அம்பேத்கருக்கு நான் ஒன்றைக் கூறலாமா? வங்காளத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கிறார்கள் என்று யாரேனும் கூறுவதையே வங்காளத்திலுள்ள நாங்கள் அனைவரும் இழுக்காகக் கருதுகிறோம். சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக, சாதித் தடைகளை அகற்றுவதற்கும், அதைப் போன்ற பணிகளுக்கும் வங்காள ஹிந்துக்கள் சமூக சேவை ஆற்றி வருகிறோம். இதனை ஒப்புக் கொள்ளுமாறு நான் டாக்டர் அம்பேத்கரைக் கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட இனத்தவர் யார் என்பதை நிர்ணயிக்க இரண்டு தனிப் பண்புகளை, இரண்டு உரைகல்லை லோத்தியன் குழு நியாயமாகவே வரையறுத்துள்ளது; தீண்டாமை, ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு நெருங்காமை ஆகியவையே அவை. யார் தீண்டத்தகாதவர்கள், யார் நெருங்கி வரத் தகாதவர்கள் என்பது பற்றி வங்காள அரசாங்கம் ஒரு விசாரணை நடத்த நான் கோருகிறேன்; அத்தகையோரின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டால், கூட்டு வாக்காளர் தொகுதிகள் அடிப்படையில், வங்காளச் சட்ட மேலவையில்,அவர்களுக்கு வீதாச்சாரப் பிரதிநிதித்துவம் அளிக்க நாங்கள் உடன்படுகிறோம்.

8870. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் கூட்டு வாக்காளர் தொகுதிகளைப் பற்றி இங்கு விவாதிக்கவில்லை. மாளவியாவின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சில வங்காள சாதி ஹிந்துக்கள் பம்பாய் சென்ற, அனைவரும் அறிந்த முக்கியமான விஷயத்தையே இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறேன். 1932-செப்டம்பர் 17-ந் தேதிய "லிபர்டி" பத்திரிகையை நான் ஆதாரமாகக் கூறுகிறேன். அந்தப் பத்திரிகை கல்கத்தாவில் வெளியிடப்படுவது. அந்தத் தேதியில், அந்தப் பத்திரிகையின் பக்கம் 5, பத்தி 4-ல், பெரிய தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையை இங்கு சுட்டிக் காட்டுகிறேன்: "சுவாமி சத்யானந்தாவும், பிறரும் பம்பாய் செல்கின்றனர். சுவாமி சத்யானந்தா, அம்ரித சமாஜைச் சேர்ந்த ஸ்ரீ ஹரிதாஸ் மஜூம்தார், மற்றும் ஞானேஸ்வர் மண்டல் ஆகியோர் மாளவியா மாநாட்டில் பங்கு கொள்வதற்காக இன்றிரவு பம்பாய் புறப்படுகின்றனர்." 'அவர்கள் தங்களது சொந்த அலுவலுக்காகச் செல்லவில்லை அல்லவா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* என்னைப் பொறுத்தவரை இந்தக் கனவான்களைப் பற்றி நான் கேள்விபட்டதேயில்லை; முதன் முறையாக, இப்பொழுதுதான் நான் அவர்களைப் பற்றிக் கேள்விப்படுகிறேன். வங்காளத்தைப் பொறுத்தமட்டில், அவர்கள்

அவ்வளவு பிரபலமானவர்கள் அல்லர். தங்கள் பயணத்தை விளம்பரப்படுத்துவதற்காக அந்தப் பெருமக்களேகூட அந்த அறிக்கையைக் கொடுத்திருக்கக் கூடும்.

**8871.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் கூற விரும்புவது என்னவெனில், மாளவியா மாநாட்டில் கலந்து கொள்ள, சாதி ஹிந்துக்களைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் வங்காளத்திலிருந்து செல்கின்றனர் என்பதை வங்காளப் பொதுமக்கள் அறிவர்; அப்படிச் செல்பவர்கள் தங்களது பிரதிநிதிகள் அல்லர் என்று வங்காளப் பொது மக்கள் எண்ணியிருந்தால், அவர்களை நம்ப வேண்டாம் என்று மாளவியாவுக்கு அவர்கள் செய்தி அனுப்புவது முற்றிலும் சாத்தியமே அல்லவா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* 'லிபர்டி' பத்திரிகையில் தற்செயலாக ஏதோ ஒரு பத்தியில் வெளிவந்த செய்திக்கு வங்கப் பொது மக்களைப் பொறுப்பாக்குவது பெரிதும் நியாயமற்றது என்று நான் கூறுவேன்.

**8872.** *டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் :* வங்காளத்திலுள்ள ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டியதொரு உண்மையைத்தான் நான் எடுத்துரைக்கிறேன்.

*திரு. பி. சி.சாட்டர்ஜி :* எவரும் அந்தப் பத்திரிகையை ஆழ்ந்து படிப்பதில்லை. அதுபோன்று குறிப்பிடத்தக்கப் பத்திகளை எவரும் தேடுவது இல்லை. அதனால் அது ஒருபோதும் நம் கவனத்துக்கு வருவதில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதற்கு மேல் உங்களை நிர்ப்பந்திக்க நான் தயாராக இல்லை.

**8873.** *சர் ஆஸ்டின் சேம்பர்லேன் :* பம்பாயில் அத்தகையதொரு கூட்டம் நடைபெறுவது தனக்குத் தெரியாது என்று திரு. சாட்டர்ஜி கூறுகிறாரா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* கூட்டம் நடைபெறப் போவதை நாங்கள் அறிவோம்; ஆனால், அந்தக் கூட்டத்திற்கு வங்காளத்திலிருந்து செல்ல எவரேனும் முனைந்துள்ளனரா என்பது எங்களுக்கு அறவே தெரியாது.

**8874.** *சர் ஆஸ்டின் சேம்பர்லேன் :* இந்த விஷயம் குறித்து, உங்களுக்கு இத்துணை தீவிர உணர்வுகள் இருக்கும்போது, உங்களைப் போன்ற கருத்துக்கள் கொண்டோரைப் பெரிதும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பு (the most representative body) உங்களுடையதுதான் என்று நீங்கள் கருதினால், அந்தக் கூட்டம் பற்றி அறிந்த வுடன் நீங்கள் ஏன் உங்களது பிரதிநிதிகளை அனுப்பியிருக்கக் கூடாது?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* அங்கு என்ன நடக்கின்றது என்பது எங்களுக்குத் தெரியாது. திரு. காந்தி உண்ணாவிரதம் மேற்கொள்ளும் செய்தியைக் கேள்விப்பட்டதைத் தவிர, கல்கத்தாவில் இருக்கும் எங்களுக்கு அங்கு என்ன நடைபெறுகிறது என்பது உண்மை யாகவே தெரியாது.

*திரு. ஜே. பானர்ஜி:* நாங்கள் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கவில்லை. மாளவியா மாநாடு வங்காளத்திலுள்ள சாதி ஹிந்துக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போவதில்லை; எனவே, எவரும் எந்த அமைப்பின் சார்பிலும் அங்குச் செல்லவில்லை. பூனா கூட்டம்தான் உண்மையிலேயே முக்கியமானது.

8875. *சர் ஆஸ்டின் சேம்பர்லேன்:* அந்தக் கூட்டத்தைப் பற்றி நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆனால், அதில் கலந்து கொள்வது பயனற்றது என்று நீங்கள் எண்ணினீர்கள். அப்படித்தானே?

*திரு. ஜே. பானர்ஜி:* பம்பாயிலும், பூனாவிலும் நடைபெற்ற இரண்டு கூட்டங்களையும் ஒன்றாகப் போட்டு நீங்கள் குழப்புகிறீர்களோ என நான் அஞ்சுகிறேன். பூனாவில்தான் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று; அது முக்கியமான கூட்டம்; அதற்கு சாதி ஹிந்துக்கள் அழைக்கப்படவில்லை, பம்பாயில் நடைபெற்ற கூட்டம் ஒருவகையான பூர்வாங்க நாடகம்தான். அதற்கு நாங்கள் முக்கியத்துவம் அளிக் காதது நியாயமானதேயாகும்.

8876. *திரு. ஜாஃபருல்லாகான்:* உங்களிடம் இதைக் கேட்கலாமா? உங்களை எவ்வகையிலும் புண்படுத்த விரும்பவில்லை, திரு. சாட்டர்ஜி! ஆனால், ஒருவேளை வங்காளத்து சாதி ஹிந்துக்களின் நோக்கு கீழ்க்கண்டவாறு இருக்குமோ என்று தோன்றுகிறது: அதாவது, ''இது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை; அதனால் விளையப்போவது ஒன்றுமில்லை; அது மகாத்மாவின் உயிரைக் காப்பாற்ற உதவினால் மெத்தச்சரியே; எவ்வகையிலேனும் அது நம்மைப் பாதித்தால் பின்னர் நாம் அதை மறுதலித்துக் கொள்ளலாம்?''

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* அப்படியல்ல என்பதை மிகுந்த மரியாதையுடன் கூறிக்கொள்கிறேன். மாநில வாக்குரிமைக் கமிட்டியில் அங்கம் வகிக்கவும், லோத்தியன் குழுவுடன் ஒத்துழைக்கவுமான கௌரவம் எனக்குக் கிட்டியுள்ளது. யார் தீண்டத்தகாதவர்கள் என்று மிகக் கவனமாக நாங்கள் ஆராய்ந்ததோம். ஆராய்ச்சிக்குள்ளாகிய முழு அம்சமே அதுதான்.

8877. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் எடுத்துக் கொண்டுள்ள விஷயத்திலிருந்து நீங்கள் விலகிச் செல்லுகிறீர்கள். பம்பாயிலும், பூனாவிலும் என்ன நடைபெற்று வருகின்றன என்பது குறித்த செய்திகள் முறையாகவும், முழுமையாகவும் தினந்தோறும் 'லிபர்டி'யில் வெளியிடப்பட்டன. அதை நீங்கள் மறுக்க முடியுமா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* மன்னிக்கவும்; நான் 'லிபர்டி'யை வாசிப்பதேயில்லை.

8878. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 'லிபர்டி'யைப் பற்றியே இங்கு குறிப்பிட்டேன். வேண்டுமென்றேதான் நான் 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையை இதில் இழுக்கவில்லை; ஏனெனில், அது ஆங்கிலோ-இந்தியப் பத்திரிகை என்று நீங்கள் கூறலாமல்லவா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* ஏன் நான் அவ்வாறு கூற வேண்டும்? அப்படிக் கூறுவதை என்னால் கற்பனை செய்யக் கூட முடியாது.

*8879. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* வேண்டுமென்றேதான் அதை இங்கு குறிப்பிட்டேன். ஏனெனில், அது ஒரு ஹிந்துப் பத்திரிகை என்று நானறிவேன்.

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* ஆம். அது என் வீட்டிற்கு வருகிறது. நான் அப்போதைக்கப்போது அதைப் படிப்பதுண்டு.

*8880. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* 20-ந் தேதி நடைபெற்ற மாளவியா மாநாட்டின் விவரங்கள், 'லிபர்டி'யில் முதல் பக்கம் முழுவதும் கொடுக்கப்பட்டுள்ளன.

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* 'உங்களிடமிருந்துதான் அதைத் தெரிந்து கொள்கிறேன்.

*8881. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நீங்கள் அதைப் பார்த்துக் கொள்ளலாம். அதை உங்களுக்குத் தருகிறேன்.

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* உங்கள் வார்த்தைகளை நம்புகிறேன்.

*8882. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதே போன்று, 21-ந் தேதி என்ன நடைபெற்றது என்பது 22-ந்தேதி முழுமையாக முதல் பக்கத்தில் வெளியாகியுள்ளது.

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* நிச்சயமாக அவ்வாறுதானிருக்க வேண்டும்.

*8883. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆக, பம்பாயிலும், பூனாவிலும் என்ன நடைபெற்று வந்தது என்பது வங்காளத்திலுள்ள அனைவருக்கும் தெரிந்திருக்கும். நான் மற்றுமொரு விஷயத்தை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவரலாமா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* வங்காளப் பொது நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட இத்தகைய முக்கியத்தன்மையுள்ள விஷயத்தில் முடிவெடுக்கு முன்னர், விவாதங்களில் பங்கேற்க எங்கள் பிரதிநிதிகள்ளை அனுப்புமாறு நாங்கள் அழைக்கப்படுவோம் என்றே நாங்கள் எண்ணினோம்.

*8884. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* துணைக்குழு உருவாக்கப்பட்ட போது, அதன் அமைப்பு குறித்து எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லையே?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* அதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது.

*8885. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 1932 செப்டம்பர் 22-ந்தேதிய 'லிபர்டி' பத்திரிகையை நீங்கள் பார்த்தால், நான்

எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளேன் என்று துணைக்குழுவிற்கு நான் வழங்கிய எனது பிரேரணைகள் அதிலிருப்பதைக் காணலாம். நான் சில விஷயங்களை முன் மொழிந்தேன்; அதனடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராயிருந்தேன் என்பது திரு. ஜயகருக்குத் தெரியும். எனது யோசனைகளில் நான் வங்காளத்திற்கு •50 இடங்களைக் கேட்டிருந்தேன்.

*திரு. ஜே. பானர்ஜி:* அதாவது, தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு?

8886. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம். தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு. செப்டம்பர் 22-ந் தேதி இதழில், நான் கூறியபடி மிக முக்கியமான இடத்தில் எனது கோரிக்கைகள் பிரசுரமாகியுள்ள போதிலும், அது உங்களுக்குத் தெரிந்திருந்த போதிலும், இந்த அடிப்படையில் ஒப்பந்தத்தை உருவாக்கிய பண்டித மாளவியாவுக்கு ஏதேனும் ஒரு எதிர்ப்பு அறிக்கையோ, அல்லது பூனாவுக்கு யாரையேனும் அனுப்ப வேண்டுமென்ற உணர்வோ வங்காளச் சாதி ஹிந்துக்களுக்கு ஏற்படவில்லை என்று நான் கூறுகிறேன்.

*திரு. ஜே. பானர்ஜி:* டாக்டர் அம்பேத்கரது யோசனைகளுக்குத் தந்திருக்க வேண்டிய அளவு முக்கியத்துவத்தை நாங்கள் தரவில்லை என்பது குறித்து நான் வருந்துகிறேன்.

8887. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் அதற்காகக் கஷ்டப்படுவது குறித்து நான் வருந்துகிறேன். இதுபற்றி ஓரிரண்டு கேள்விகளை உங்களிடம் கேட்க நான் விரும்புகிறேன். பூனா ஒப்பந்தத்தை அங்கீகரித்து மேன்மை மிகு மன்னரது அறிவிப்பு 1932, செப்டம்பர் 26-ந் தேதி வெளியானது. இது மத்திய சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் அறிவிக்கப்பட்டது. மாட்சிமை தங்கிய மன்னர் அரசாங்கத்தின் இந்த அறிவிப்பு மத்திய சட்ட சபையில் எல்லோராலும் வரவேற்கப்பட்டது; இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக சட்டமன்றத்திலோ அல்லது ராஜ்யக் கவுன்சிலிலோ எந்த உறுப்பினரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அப்படித்தானே?

*திரு. ஜே. பானர்ஜி:* அவ்வாறு இருக்கலாம்.

*திரு. எம். ஆர். ஜயகர்:* மத்திய சட்டசபையில் வங்காளம் பிரதிநிதித்துவம் வகிக்கிறது.

*சர் ஹரிசிங் கௌர்:* உள்துறை அமைச்சர் சர் ஹாரி ஹெய்க் சட்டசபையில் ஓர் அறிவிப்பினைத் தந்தபோது, எந்த உறுப்பினரிடமிருந்தும் எதிர்ப்பு இல்லை என்று டாக்டர் அம்பேத்கர் கூறிய குற்றச்சாட்டு குறித்துஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மாட்சிமை தங்கிய மன்னரின் அரசாங்கம் ஒரு முடிவை சட்ட சபையில் அறிவிக்கும் போது, சபையில் எந்த உறுப்பினரும் அது குறித்து எதிர்ப்பு எழுப்புவதில்லை என்பது சட்டசபையின்

நடைமுறை மரபு என்பதை நான் கூட்டுக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

8888. *லெப்டினன்ட் கர்னல் சர் ஹெச். கித்னே:* சர் ஹாரி ஹெய்க் அந்த அறிக்கையை வெளியிட்ட போது நான் சபையில் இருந்தேன், அது அனைவராலும் ஆரவாரமாய் வரவேற்கப்பட்டது?

*திரு. பாய் பரமானந்த்:* நானும் அங்கிருந்தேன். அது குறித்து எந்த வரவேற்பு ஆரவாரமுமில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அந்த அறிக்கை தரப்பட்ட போது கரவொலி இருந்தது என்று கூறலாமல்லவா?

8889. *லெப்டினன்ட் கர்னல் சர் ஹெச். கித்னே:* கரவொலி யைத்தான் நான் குறிப்பிட்டேன். சரிதானே?

*திரு. பாய் பரமானந்த்:* ஒருசிலர் அவ்வாறு செய்திருக்கக் கூடும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அந்த அறிக்கை முழுவதும் 1932 செப்டம்பர் 26-ந்தேதிய சட்டசபை நடவடிக்கைக் குறிப்பு, தொகுதி 5, எண் 5-ல் தரப்பட்டுள்ளது. அறிக்கை முடியும்போது, அடைப் புக் குறிகளுக்குள் ''கரவொலி'' என்று உள்ளது. அதே அறிக்கை ராஜியக் கவுன்சிலிலும் கொடுக்கப்பட்டது. நான் கூற வருவது என்னவெனில், கீழ்க்கண்ட கனவான்கள் சட்டசபையில் சாதி ஹிந்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லையா? (பெயர்களை வாசிக்கிறார்). ராஜீயக் கவுன்சிலில் அவர்கள் பெயர் வருமாறு (பெயர்களை வாசிக்கிறார்).

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* ஒப்பந்தத்தின் பின்விளைவுகளை அப் போது அவர்கள் உணரவில்லை என்பதுதான் எனது பதில்; இப்பொழுது அவர்கள் ஒருமனதாக அதைக் கண்டனம் செய் கின்றனர்.

*திரு. பாய் பரமானந்த்:* இந்த அம்சத்தை நான் விளக்கலாமா?

8890. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதற்கு ஏதும் விளக்கம் தேவையா என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் சட்டசபை உறுப்பினர்கள்; அவர்கள் அதை எதிர்க்கவில்லை. 1932 செப்டம் பரில் ஒப்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னர் வங்காள மாகாணத்தில் எதிர்ப்பு ஏற்பட்டது குறித்து, 1932 நவம்பரில் வங்கமேலவைக் கூட்டம் நடைபெற்றது அல்லவா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* ஆம்.

8891. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பூனா ஒப்பந்தத்தை வங்காளத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போது வங்க மேலவையில் தீர்மானம் ஏதேனும் கொண்டு வரப்பட்டதா?

*திரு. பி. சி. சட்டர்ஜி:* இல்லை.

8892. *டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்:* நான் அறிக்கையைப் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* இந்தக் கேள்விக்கு நான் பதில் கூற வேண்டும். மேலவைக் கூட்டம் கூடிய பின்னர், மிகக் குறுகிய காலத்திற்குள், முதல் வேலையாக, நாங்கள் செல்வாக்குமிக்க எல்லா ஹிந்துக் கவுன்சில் அங்கத்தினர்களையும் ஒன்று திரட்டி, நாங்கள் அனைவரும் கூட்டாக ....

8893. *டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் :* எனது கேள்விக்கு விடையளித்து விட்டு, பின்னர் விளக்கத்திற்கு வருவோம். பூனா ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்ட உடன் நடைபெற்ற வங்காள மேலவையின் நவம்பர் கூட்டத்தில், அதை எதிர்த்து, தீர்மானம் கொண்டு வரப்பட்டதா என்பதைத்தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தீர்மானம் கொண்டுவரப்பட்டதா என்பதுதான் எனக்குத் தெரிய வேண்டும்.

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* நிச்சயமாக, நவம்பர் கூட்டத்தில் பூனா ஒப்பந்தத்தை எதிர்த்து நான் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தேன்; ஆனால், நாம்சூத்ராக்களின் (Namsudras) உறுப்பினரான திரு. ரஸிக் பிஸ்வாஸும் பண்டித மாளவியாவும் கூட்டாக வேண்டுகோள் விடுத்ததால் நான் தீர்மானத்தை விலக்கிக் கொள்ளும்படி நேர்ந்தது; ஆனால் அந்த இருவரும், அவர்கள் முன்னுள்ள சில உண்மைகளைக் கருத்தில் கொண்டு, பூனா ஒப்பந்தத்தைத் திருத்துவதற்கு, மற்றொரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு டாக்டர் அம்பேத்கரை இணங்க வைப்பதாக எனக்கு உறுதி அளித்தனர்; மேலும், இந்த வாய்ப்பினை அவர்களுக்குத் தராமல், மேலவையில் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாமென்று அவர்கள் மீண்டும் மீண்டும் என்னைக் கேட்டுக் கொண்டார்கள்.

8894. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* தீர்மானம் கொண்டு வரப்பட்டதா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* நான் சொன்ன காரணத்திற்காக, அதைத் திரும்ப பெறுமாறு என்னை அவர்கள் தூண்டினர்.

8895. *டாக்டர் அம்பேத்கர் :* அது கொண்டுவரப்படவில்லை?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* நான் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டேன்.

8896. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது கொண்டுவரப்படவில்லை?

*திரு. பி. சி. சாட்டர்ஜி :* திரும்பப் பெற்றுக் கொண்டேன் என்று நான் கூறினேனே?

8897. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* தீர்மானம் கொண்டு வருவதற்கு அறிவிப்புக் கொடுத்தீர்களா?

*திரு. பி. சி. சாட்டர்ஜி:* நான் அறிவிப்புக் கொடுத்தேன்; பின்னர் திரு. ரஸிக் பிஸ்வாஸும், பண்டித மாளவியாவும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதைத் திரும்ப பெற்றுக் கொண்டேன். தீர்மானத்தை நான் கொண்டு வரவில்லை.

8898. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : 1933 மார்ச் கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட்ட தீர்மானம் ஒரு விசேஷ தீர்மான மாகும். திரு. சாந்தி ஷேகரேஸ்வர் ரே என்பவரின் பெயரில் இருந்த சாதாரண தீர்மானம் கொண்டுவரப்படவில்லை?

திரு. ஜே. பானர்ஜி : அதைப் பெற முடியவில்லை.

8899. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அதற்கு முன்னுரிமை ஏதும் கேட்கப்படவில்லையா?

திரு. ஜே. பானர்ஜி : முன்னுரிமை கோரப்பட்டது; ஆனால் அதைப் பெறமுடியவில்லை. அதற்கான அவகாசமும் இல்லை. அதை அடுத்து, ஒரு விசேடத் தீர்மானம் என்னால் கொண்டு வரப்பட்டது.

8900. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : வங்காளச் சட்ட மேலவையின், 1933 மார்ச் கூட்டத் தொடரில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்திற்குப் பின்னர், 1933, ஏப்ரல் 21-ல், கல்கத்தாவிலுள்ள ஆல்பர்ட் அரங்கில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. சாமல் என்பவரது தலைமையில் நடந்த அந்தக் கூட்டம், பூனா ஒப்பந்தத்தை எதிர்த்த வங்காளச் சட்டமேலவையின் நோக்கினைக் கண்டித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இல்லையா?

திரு. ஜே. பானர்ஜி : இருக்கலாம்.

8901. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அந்தக் கூட்ட நிகழ்ச்சி கள் முழுமையாக, 1933 ஏப்ரல் 22-ந்தேதி ''லிபர்டி''யில் வெளியிடப்பட்டது. அது உண்மையா, இல்லையா?

திரு. பி. சி. சாட்டர்ஜி : இருக்கலாம். எனக்கு அது தெரியாது. நான் இங்கிலாந்திலிருந்தேன்.

8902. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : பூனா ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த நேரத்தில் வங்காள அரசாங்கம் டார்ஜிலிங் கில் எங்கோ இருந்ததாகவும், எந்த ஒரு ஹிந்துவிடமும் ஆலோசனை கலக்கப்படவில்லை என்றும் நீங்கள் கூறினீர்கள். சர் நிரிபேந்திர சர்க்காருக்குப் பதிலளிக்கும் போது அதைக் கூறினீர்கள்?

திரு. பி. சி. சாட்டர்ஜி: ஆம்.

8903. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : 1932 செப்டம்பரில், வங்காள நிர்வாக சபையின் இயைபு என்ன என்று நீங்கள் கூற முடியுமா? அதன் உறுப்பினர்கள் யார், அதன் இன இயைபு என்ன?

திரு. ஜே. பானர்ஜி : மூன்று வங்காளி உறுப்பினர்கள் இருந்த னர் — இல்லை, இரண்டு வங்காளி ஹிந்து உறுப்பினர்கள், வங்க அரசாங்கத்திலிருந்தனர்.

8904. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இரண்டு சாதி ஹிந்து உறுப்பினர்களைக் கொண்ட வங்காள அரசாங்கம் பூனா ஒப்பந் தத்தை அங்கீகரிக்கவில்லை என்று கூறுகிறீர்களா?

*திரு. ஜே. பானர்ஜி:* அரசாங்கத்தைப் பற்றிக் கூறுவதற்கு எனக்கு ஒன்றுமில்லை; ஆனால், அரசாங்கத்தின் இரண்டு ஹிந்து உறுப்பினர்களும் ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை என்று நான் உறுதியாகக் கூற முடியும்; அவர்கள் அதனைத் திட்டவட்டமாக எதிர்த்துள்ளனர்.

8905. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மத்திய நிர்வாகக் குழுவைப் பொறுத்தமட்டில், ஒரு வங்காள ஹிந்து சர் பி. எல். மிட்டர் அதில் இருக்கிறார் என்று நீங்கள் சொன்னீர்கள். அப்படித் தானே?

*திரு. ஜே. பானர்ஜி:* ஆம். நான் பி. எல். மிட்டரைப் பற்றி எதுவும் கூற முடியாது; ஆனால், வைஸ்ராயின் நிர்வாகக் கவுன்சிலில் தற்போதுள்ள உறுப்பினரை பற்றிப் பேசுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

8906. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மகாத்மா காந்தியின் உண்ணாவிரதத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஒருவித அவசர நிலையின் காரணமாக, மேன்மைமிகு மன்னர் இவற்றை எல்லாம் ஒப்புக் கொண்டார் என்று சர் நிரிபேந்திர சர்க்கார் தனது சாட்சியத்தின்போது கூறியுள்ளார். நான் உங்களிடம் கேட்க விரும்புவது இதுதான்: அரசாங்கத்திற்கு மகாத்மாகாந்தி எழுதிய முதல் கடிதம் ஆகஸ்டு 18-ந்தேதியிடப்படவில்லை; மாறாக அது 1932 மார்ச்சு 11-ந் தேதியிடப்பட்டது (அந்தக் கடிதம் சர் சாமுவேல் ஹோருக்கு விலாசமிடப்பட்டுள்ளது); சர் நிரிபேந்திர சர்க்கார் குறிப்பிட்டுள்ள கடிதம் எதார்த்தத்தில் ஐந்து மாதங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது; அதைத்தான் அவர் கூறியுள்ளார். அதாவது, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத் தீர்வுக்கு முன்பு—அதுதான் எனது வாதம். அவரது கடிதம் இதுதான்: ''அன்புள்ள சர் சாமுவேல், சிறுபான்மையினரின் கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது, வட்டமேசை மாநாட்டில் எனது உரையின் முடிவில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதிகள் வழங்குவதை, நான் என் உயிரைப் பணயம் வைத்து எதிர்ப்பேன் என்று நான் கூறியதை நீங்கள் ஒருவேளை நினைவு கூர்வீர்கள். இது அந்தச் சந்தர்ப்பத்தின் சூட்டிலோ அல்லது வாய்ச் சவடாலுக்காகவோ கூறப்பட்டதல்ல. மிகவும் சிந்தித்துக் கூறப்பட்ட ஒன்றாகவே அதற்குப் பொருள் கொள்ள வேண்டும்''. அவர் மேலும் கூறுகிறார்: '' எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக, தனித் தேர்தல் தொகுதிகளை உருவாக்க மேன்மைமிகு மன்னரது அரசாங்கம் முடிவெடுக்குமானால், நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்பதை அரசாங்கத்திற்கு மிக மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' ஆக, உண்ணாவிரத அச்சுறுத்தல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், ஆகஸ்டு 18 ஆம் தேதி கடிதத்தில்

விடுக்கப்பட்டதல்ல, மாறாக அது 1932 மார்ச் 11-ந் தேதிய கடிதத்திலேயே விடுக்கப்பட்டிருக்கிறது என்றாகிறதல்லவா?

*திரு. ஜே. பானர்ஜி:* முற்றிலும் உண்மை.

8907. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* மார்ச்சு 11-ந் தேதிய கடிதத்தில் உள்ள அச்சுறுத்தலுக்குப் பிறகும் மேன்மைமிகு மன்னரது அரசாங்கம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தேர்தல் தொகுதிகள் வழங்கியுள்ளது.

*திரு. ஜே. பானர்ஜி:* தனித் தேர்தல் தொகுதிகளின் ஒவ்வொரு தீமையையும் ஒப்பந்தம் நீட்டிக்கச் செய்கிறது என்பதே அதற்கெதிரான எங்களது புகார்.

8908. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அது வேறு விஷயம்; அதை நீங்கள் மகாத்மா காந்தியிடம் கூறுங்கள்; நான் அதை விவாதிக்க முடியாது.

*திரு. ஜே. பானர்ஜி :* பூனா ஒப்பந்தத்தைக் காட்டிலும் மேன்மை மிகு மன்னர் அரசாங்கம் வழங்கிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு எங்களுக்கு உடன்பாடானதே.

8909. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதுபற்றி உங்களிடம் ஓரிரு கேள்விகள் கேட்கிறேன். மேன்மைமிகு மன்னரது அரசாங்கம் தந்துள்ளதைக் காட்டிலும், பூனா ஒப்பந்தம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அதிக எண்ணிக்கையில் இடங்களை வழங்குகிறது என்பது உங்கள் புகார். 1932 செப்டம்பர் 8-ந்தேதி, பிரதம மந்திரி, காந்திக்கு எழுதிய கடிதத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதில் அவர் கூறியிருப்பதாவது: ''மேலும் அதிக பிராந்திய இடங்களைப் பெறுவது முஸ்லீம்களுக்குச் சாத்தியமில்லை என்ற எதார்த்த உண்மையினால், அவர்களுக்குப் பிராந்திய இடங்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்டுள்ளது; பெரும்பாலான மாகாணங்களில் அவர்களது மக்கள் தொகை வீதாச்சாரத்தைக் காட்டிலும் அதிகமாக அவர்கள் இடங்களைப் பெறுகின்றனர். உங்கள் விசேட கவனத்தை இது குறித்து நான் ஈர்க்க விரும்புகிறேன். ''விசேட தாழ்த்தப்பட்ட இனத் தொகுதிகளிலிருந்து நிரப்பப்படவிருக்கும் விசேட இடங்களின் எண்ணிக்கை மிகச் சிறிது என்றே தோன்றுகிறது; தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மொத்த மக்கள் தொகையினருக்கு உகந்த எண்ணிக்கையில் அவர்களுக்கு உரிய இடங்கள் நிர்ணயிக்கப்படவில்லை; ஆனால், தாழ்த்தப்பட்ட இனத்தவராலேயே பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்தபட்ச எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் சட்டசபையில் இருப்பதற்குச் செய்த ஏற்பாடே அது. அவர்களது விசேட இடங்களின் விகிதம் எங்குமே தாழ்த்தப்பட்ட வகுப்பினரது மக்கள் தொகை சதவிகிதத்தைக் காட்டிலும் குறைவானதே.

*திரு. ஜே. பானர்ஜி:* ஆம். அதுசரியே; ஏனெனில், பெரும் பாலான தாழ்த்தப்பட்ட வகுப்பினர், குறிப்பாக வங்காளத்தில், பொதுத் தொகுதிகளின் மூலமே இடம் பெறுவர் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

**8910.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புவது இதுதான்: வகுப்புவாரிப் பிரதி நிதித்துவத் தீர்வினை வழங்குவதிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு இடங்களை ஒதுக்குவதிலும், அந்த இடங்கள் மக்கள் தொகை வீதாச்சாரப்படி இல்லை என்றும், மிகக் குறைவாக உள்ளது என்றும் மேன்மைமிகு மன்னரது அரசாங்கமும், பிரதம மந்திரி யுமே திட்டவட்டமாக ஒப்புக் கொள்கின்றனர்.

*திரு. ஜே. பானர்ஜி:* உண்மைதான். ஆனால், அதே நேரத் தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் அவர்களது எண்ணிக்கை வீதத்தைக் காட்டிலும் குறைவு என்று பிரதம மந்திரி தெளிவாகக் கூறியுள்ளார்; அவர் விசேடமாக வங்காளத்தைக் குறிப்பிடுவதற்குக் காரணம், வங்காளத்தில், பல தாழ்த்தப்பட்ட இன உறுப்பினர்கள் பொதுத் தொகுதிகளின் மூலமாகவே சட்டமன்றத்தில் இடம் பெறுவது உறுதியாக உள்ளது.

**8911.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவர் வங்காளத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என நிச்சயம் கூற முடியும்.

*திரு. ஜே. பானர்ஜி:* நிச்சயமாக, அவர் அவ்வாறு கூறியுள் ளார்; நான் அந்தத் தீர்வினைக் கவனமாகப் படித்தேன்.

**8912.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதுபற்றி, **1932** செப் டம்பர் **17-19** தேதிகளுக்கிடையே திரு. ராமானந்த சாட்டர்ஜி யின் தலைமையில் மால்டாவில் வங்க மாநில ஹிந்து மாநாட்டின் ஏழாவது கூட்டத் தொடர் நடைபெற்றது அல்லவா?

*திரு. ஜே. பானர்ஜி:* இருக்கலாம்.

**8913.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மால்டாவில் நடை பெற்ற அந்த வங்க மாநில ஹிந்து மாநாட்டின் ஏழாவது கூட்டத் தொடரில்....

*திரு. ஜே. பானர்ஜி:* நடந்திருக்கலாம். எனக்குத் தெரியாது. அது குறித்த எந்தச் செய்தியும் எனக்குத் தெரியாது.

**8914.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த வங்க மாநில ஹிந்து மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று **1932** செப்டம்பர் **19**-ந்தேதி 'லிபர்டி'யில் பிரசுரமாகியுள்ளது. அதை உங்களுக்கு வாசித்துக்காட்ட விரும்புகிறேன்: "வரவிருக்கும் அரசி யல் சட்டத்தில், தனித் தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கோர வேண்டாமென தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றழைக்கப்படுபவர்களை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது; மற்றும், ஹிந்துக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பெருவாரியான

இடங்களைக் கைவிட வேண்டி வந்தாலும் கூட, கூட்டுத் தேர்தல் தொகுதிகளின் மூலம், அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப, தாழ்த்தப்பட்ட இனத்தாருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க மாநாடு தயாராக உள்ளது. ராஜா—மூஞ்சே ஒப்பந்தத்தை ஏற்பதாகவும் மாநாடு உறுதியளிக்கிறது.''

*டாக்டர் மூஞ்சே:* அந்தக் கேள்விக்கு நான் பதிலளிக்கட்டுமா? அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாங்கள் அதை ஒட்டி நடப்போம்; எனது நண்பர் திரு. சாட்டர்ஜி, டாக்டர் அம்பேத்கருக்கு ஒரு பெருந்தன்மையான சலுகையை அளித்தார். தீண்டத் தகாதவர்கள், நெருங்கத் தகாதவர்கள் என்று வரையறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள் மக்கள் தொகை அடிப்படையில் என்ன எண்ணிக்கையில் இடங்களைப் பெறுவர் என்பதை அவர் காணத் தயாரா? நாங்கள் டாக்டர் அம்பேத்கருக்கு பின்வரும் பெருந்தன்மையான சலுகையை அளிக்கத் தயாராக இருக்கிறோம்: தாழ்த்தப்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர் தீண்டத்தகாதவர் அல்லது நெருங்கத்தகாதவர் என்ற வரையறையின்படி, தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கை என்ன என்ற அடிப்படையில் மொத்தப் பிரச்சினையும் வங்காளத்திலும், பஞ்சாபிலும் தீர்மானிக்கப்படட்டும். இந்தச் சலுகையை நாங்கள் அளிக்கிறோம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* எனது மக்களின் தலைவிதியை எந்தக் கட்சி அரசியலின் சலுகைக்குட்படுத்த நான் விரும்பவில்லை. அந்தச் சலுகையை நான் ஏற்றுக் கொள்ள முடியாது என்று நான் எண்ணுகிறேன்.

★ ★ ★ ★ ★

**9269.** * *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் ஒரு துணைக் கேள்வி கேட்கலாமா? உங்களது ஹிந்து மகாசபாவில் நீங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் சேர்த்துள்ளீர்களா? அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக நீங்கள் கூறுகிறீர்களா?

*டாக்டர் மூஞ்சே:* எனது வாதம் இதுதான்: நானும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்; என்னருகே அமர்ந்திருக்கும் என் நண்பர் திரு. கவாயும், ஹிந்து மஹாசபாவின் சார்பில் அனுப்பப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு பிரதிநிதிதான்; எனினும், நான் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறேனா அல்லது திரு. கவாய் தாழ்த்தப்பட்ட இனத்தவரில் பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறாரா என்பது ஒருபோதும் மெய்ப்பிக்கப்படவில்லை.

**9270.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது வேறுவிஷயம். நீங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

---

* சாட்சியக் குறிப்புகள் — தொகுதி II-C, 1933 — ஜூலை 31, ப. 1466)

டாக்டர் மூஞ்சே: தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பெரும்பான்மைப் பகுதியினரையும் நான் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன்.

9271. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: என்னைப் பொறுத்த மட்டில், நான் அந்த நிலையை முற்றிலும் ஏற்க மறுக்கிறேன். இது பற்றி திரு. கவாய் என்ன சொல்கிறார்? டாக்டர் மூஞ்சே பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனத்துடன் — அவரது விளக்கக் குறிப்பைப் பொறுத்தவரை — தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களை இணைத்துக் கொள்ள முடியாது என்ற உண்மையை நான் மீண்டும் கூறுகிறேன். பஞ்சாபிலுள்ள ஹிந்துக்கள் அதை மறுதலித்துள்ளார்கள் என்பதை நான் அறிவேன்.

டாக்டர் மூஞ்சே: என்ன?

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உங்களது விளக்கக் குறிப்பு எண் 57-ன் அந்தப் பகுதி, பஞ்சாப் வகுப்பினரால் மறுதலிக்கப்பட்டுள்ளது.

## (14)

### அனைத்திந்திய வருணாசிரம சுயராஜ்ய சங்கத்தின் சார்பில் திரு. எம். கே. ஆச்சார்யா, திரு. எல். எம். தேஷ்பாண்டே, மற்றும் திரு. ஜே. எல். பானர்ஜி ஆகியோர் அளித்த சாட்சியம்

*10,753. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: திரு. ஆச்சாரியா அவர்களே, சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என்று நீங்கள் கூறுவதைப் பாதிக்கக் கூடிய சட்டங்கள் இயற்றச் சட்ட மன்றத்திற்கு அதிகாரம் இருக்கக் கூடாது என்பதுதான் உங்கள் விருப்பம் என்று நான் கூறினால், அக்கூற்று உங்களை நான் சரியாகப் புரிந்து கொண்டுள்ளதாக ஆகுமா?

திரு. எம். கே. ஆச்சார்யா: ஆம்.

10,754. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அத்தகைய சட்டங்கள் ஏதேனும் இயற்றப்படும் முன்னர் சமய அமைப்புகளின் தலைவர்களிடமிருந்து ஏதாவது ஒரு விதத்தில் முன் அனுமதி பெற வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

திரு. எம். கே. ஆச்சார்யா: ஆம்.

10,755. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: மூன்றாவதாக, இது தொடர்பான மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அவையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினரால் ஏற்கப்படும் வரை அது சட்டமாகக் கூடாது என்கிறீர்களா?

திரு. எம். கே. ஆச்சார்யா: ஆம்.

10,756. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உங்களிடம் இதைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் குறிப்பிடும் மூன்றில் இரண்டு

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-C, ஆகஸ்டு 2, 1933, பக். 1605-08.

பங்குப் பெரும்பான்மை என்பது சட்டமன்ற இந்து உறுப்பினர் களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையா அல்லது மொத்தச் சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையா?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* பாதிப்புக்கு உள்ளாகும் ஒவ்வொரு சமூகத்தையும் இதில் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். இந்து சமூகம் மட்டும்தான் என்றால் அது இந்து உறுப்பினர்களாக மட்டும் இருத்தல் வேண்டும். பாதிக்கப்படப் போவது முஸ்லீம் சமூகம் என்றால் அதில் முஸ்லீம் உறுப்பினர்களும் இருப்பார்கள்.

**10,757.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* உங்கள் சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என்ன என்பதை உங்களால் திட்ட வட்டமாகக் கூற முடியுமா? அப்போதுதான் அதில் எந்த அளவுக் குச் சட்டமன்றம் தலையிட முடியும்; எந்த அளவுக்குத் தலையிட முடியாது என்பதை இக் குழுவால் அறிய இயலும்.

*திரு. எம். கே. ஆச்சார்யா :* குழு நான் பேசுவதை மூன்று மணி நேரம் கேட்குமானால், சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்த என் பணிவான உரையை நிகழ்த்தத் தயாராக இருக் கிறேன்.

**10,758.** *சர் ஆஸ்டென் சேம்பர்லேன் :* சட்டத்தின் பகுதி களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வடிவமைத்துக் கொள்வதற்கு உதவக்கூடிய ஒரு விதிமுறையை உங்களால் தர முடியாதா?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* அதைத்தான் நான் கூறினேன். மூன்று சொற்களில் ஏதோ ஒருவித விடையை அளிக்க என்னை கட்டாயப்படுத்த தற்போது டாக்டர் அம்பேத்கர் முயல்கிறார். என்னால் இயலாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் எவ்வகையிலும் உங்களை கட்டாயப்படுத்த முயலவில்லை. உங்களைப் புரிந்து கொள்ளவே முயல்கிறேன். சட்டம் இயற்றும் நோக்கங்களுக்காக இந்தக் குழு விற்கு நீங்கள் ஏதேனும் ஒரு விதிமுறையை வழங்க வேண்டும். அப்போதுதான் சட்டமன்றத்தில் இயற்றப்படும் ஒரு குறிப்பிட்ட சட்டம் அந்தச் சட்டமன்றத்தின் அதிகார வரம்புக்கு அப்பாற் பட்டதா என்பதை அவைத் தலைவரோ, ஆளுநரோ, இத்தகைய விஷயங்களைத் தீர்மானிக்கும் அதிகாரமுடைய வேறு எவரோ அல்லது நீதிமன்றங்களோ துல்லியமாக அறிய இயலும்.

*திரு. எம். கே. ஆச்சார்யா ;* மிகவும் நடைமுறைச் சாத்தியமான ஒரு விதிமுறையை அளித்திருப்பதாகவே நினைத்தேன். உண்மை யில் அதை ஏதோ ஒன்றிலிருந்து—

**10,760.** *டாக்டர் அம்பேத்கர் :* அவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளை மட்டுமே கூறினீர்கள். பிறகு விஷயம் முழுவதை

யும் தீர்மானிக்காமலேயே விட்டு விட்டீர்கள். நீங்கள் குறிப்பிட்ட அந்த அடிப்படைக் கோட்பாடுகள் என்ன?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* நான் தெரிவித்த விதிமுறை இது தான்: எந்த ஒரு சமயத்தையும் பாதிக்கக் கூடிய ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தும் முன் அந்த மாநிலத்தில் உள்ள அங்கீகரிக்கப் பட்ட சமயத் தலைவர்களின் கருத்தை அறிய அதை ஆளுநர் (Governor) அல்லது தலைமை ஆளுநர் (Governor-General) அவர் களுக்கு அனுப்ப வேண்டும். அவர்களின் கருத்துக்களைப் பெற்ற பின்னர், அக் கருத்துகளுக்கேற்பச் சட்டத்தை மாற்றியமைத்து அறிமுகப்படுத்தலாம். இதை அனைத்தையும் ஆளுநரோ, அல்லது தலைமை ஆளுநரோதான் முடிவு செய்ய வேண்டும்.

10,761. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஒரு குறிப்பிட்ட சட்டம் உங்களுடைய சமய அடிப்படைகளைப் பாதிக்கிறதா, இல்லையா என்பது சமய நிறுவனங்களின் தலைவர்களால் தீர்மா னிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் கருதுவதாக நான் எடுத்துக் கொள்ளலாமா?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* நிச்சயமாக அவ்வாறுதான் நான் கருதுகிறேன். இதைத் தீர்மானிப்பதற்குத் தகுதி பெற்ற நீதிமான் கள் அவர்கள்தான்.

10,762. *டாக்டர் பி. ஆர்.. அம்பேத்கர் :* திரு. ஆச்சார்யா அவர்களே,, நீங்கள் சாதியில் ஒரு பிராமணர்தானே?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* ஆம்.

10,763. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* திரு. தேஷ்பாண்டே அவர்களே, நீங்கள் சாதியில் ஒரு பிராமணர்தானே?

*திரு. தேஷ்பாண்டே :* ஆம்.

10,764. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* திரு. பானர்ஜி அவர் களே, நீங்களும் சாதியில் ஒரு பிராமணர் தானே?

*திரு. ஜே. பானர்ஜி :* ஆம்.

10,765. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* திரு. ஆச்சார்யா அவர்களே, இந்து சமயத்தில் பிறப்பால் பிராமணரல்லாத எவரும் புரோகிதராக முடியாது என்பது உண்மை இல்லையா?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* அது உண்மை அல்ல.

10,766. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அப்படியானால், எந்த ஓர் இந்துவும் ஒரு இந்துச் சமயச் சடங்கில் புரோகிதராகப் பணியாற்ற முடியும் என்று சொல்லுகிறீர்களா?

*திரு. எம்.கே.ஆச்சார்யா :* இதன் பொருள் அதுவல்ல.

10,767. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* என் கேள்வியே அது தானே?

திரு. எம். கே. ஆச்சார்யா: தயை கூர்ந்து கேள்வியைச் சரியான முறையில் கேளுங்கள்.

**10,768.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: பிராமணரல்லாத எவரும் ஏதேனும் சமயச் சடங்கைப் பொறுப்பேற்று நடத்தி இருக்கிறாரா?

திரு. எம். கே. ஆச்சார்யா: மிகவும் எளிதான கேள்வி. ஒவ்வொரு சமூகமும் உட்பிரிவும் அல்லது வகுப்பினரும் அந்தச் சமூகத்தை, உட்பிரிவைச் சேர்ந்த தனது சொந்தப் புரோகிதரை அல்லது பூசாரியை அல்லது சமய குருவைப் பெற்றுள்ளது. ஒரு பிராமணன் சில சமூகங்களின் சமயச் சடங்குகளுக்குச் செல்லுவதில்லை.

**10,769.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நீங்கள் கூறுவது சரியல்ல என்று பணிவோடுக் கூறிக் கொள்கிறேன்.

திரு. எம். கே. ஆச்சார்யா: எனக்குத் தெரிந்தவரை இது உண்மையே.

**10,770.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இது திரு. தேஷ்பாண்டேக்குத் தெரியுமா?

திரு. தேஷ்பாண்டே: இப்போது தெரிந்து கொண்டேன்.

திரு. எம். கே. ஆச்சார்யா: ஒரு பிராமணர் சில சமயவினை முறைகளைச் செய்வதில்லை.

**10,771.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: எல்லாச் சமய நிறுவனங்களின் தலைவர்களும் பிராமணர்கள்தான், இல்லையா?

திரு. தேஷ்பாண்டே: அப்படியில்லை. பம்பாய் மாநிலத்தில் ஒரு மிகப்பெரிய மடம் இருக்கிறது. அதற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. இதில் இருப்பவர்கள் அனைவரும் பிராமணரல்லாதவர்களே.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: மொத்தத்தில்?

திரு. தேஷ்பாண்டே: சிலவற்றுக்குப் பிராமணர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். வேறு சிலவற்றுக்குப் பிராமணரல்லாதார் தலைவர்களாக இருக்கிறார்கள்.

**10,773.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: பம்பாய் மாநிலத்திலும் இதே நிலைமைதான் இருக்கிறதா?

திரு. தேஷ்பாண்டே: லிங்காயத்துகள் போன்ற மற்றவர்களும் இருக்கிறார்கள்.

**10,774.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: பிரச்சினையைக் குழப்புவதற்கு நான் விரும்பவில்லை. என்னுடைய கேள்வி இதுதான்: லிங்காயத்துகள், ஜைனர்கள், பௌத்தர்கள் முதலியோரைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் (இங்கு முற்றிலும் இந்துக்களைப் பற்றி மட்டுமே பேசுகிறேன்) பார்த்தால், இந்த நிறு

வனங்கள் எல்லாம் பிராமணர்களின் ஆதிக்கத்தில்தான் இருக்கின்றன என்பது உண்மை அல்லவா?

*திரு. தேஷ்பாண்டே :* பம்பாய் மாநிலத்தில் கூட பிராமணரல்லாதாரின் கட்டுப்பாட்டில் சில சமய் நிறுவனங்கள் உள்ளன.

*10,775. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அப்படிப்பட்ட நிறுவனங்கள் மிகச் சிலதான், இல்லையா?

*திரு. தேஷ்பாண்டே :* உண்மைதான், ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்த நிறுவனங்கள் அனைத்துமே பிராமணர்களுடையவை அல்ல.

*10,776. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சரி, முன் அனுமதி வழங்கும் உரிமை இந்த நிறுவனங்களின் தலைவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், இந்து சமூகத்தின் கதிப்போக்கு முழுவதும் இந்த நிறுவனங்களுக்குப் பொறுப்பாயுள்ள பிராமணர்களின் கைகளில்தான் இருக்கும் என்று பொருளாகுமல்லவா?

*திரு. எம். கே. ஆச்சார்யா :* அவ்வாறு பொருளாகாது.

*10,777. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* உங்களது பிரதிநிதித்துவம் பற்றி ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். திரு. தேஷ்பாண்டே அவர்களே, சதாரா மாவட்டத்தில் பிராமணரல்லாதார் கட்சி ஒன்று இருக்கிறது, இல்லையா?

*திரு. தேஷ்பாண்டே :* ஆம், இருக்கிறது.

*10,779. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சதாரா மாவட்டத்திலுள்ள பிராமணரல்லாதார் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 90 சதவிகிதத்தினராக உள்ளனர், அப்படித்தானே?

*திரு. தேஷ்பாண்டே :* ஆமாம்.

*10,779. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சதாரா மாவட்டத்தில் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதர்ருக்கும் இடையே மிகுந்த பகைமை உணர்ச்சி நிலவுகிறது, இல்லையா?

*திரு. தேஷ்பாண்டே :* சில விஷயங்களில்தான்; எல்லா விஷயங்களிலும் அல்ல.

*10,780. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அரசியல் பிரச்சினையிலும் சமூக சீர்திருத்தப் பிரச்சினையிலும் முரண்பாடு நில்வுகிறதல்லவா?

*திரு. தேஷ்பாண்டே :* அரசியல் பிரச்சினைகளில்.

*10,781. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சமூகப் பிரச்சினைகளில்?

*திரு. தேஷ்பாண்டே :* அவ்வளவாக இல்லை.

10,782. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சமயவினை முறைகளைப் பொறுத்த வரையில், கோவில்களில் சமத்துவம் பெறுவதற்குப் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையே போராட்டம் நடைபெற்று வருகிறது அல்லவா?

*திரு. தேஷ்பாண்டே:* சில மாவட்டங்களில் இது நடைபெறக் கூடும்; எல்லா மாவட்டங்களிலும் அல்ல.

10,783. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இரு வகுப்பாரிடையேயும் கடுமையான பிளவு இருக்கவில்லையா?

*திரு. தேஷ்பாண்டே:* எனக்குத் தெரிந்த வரையில் இல்லை.

10784. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் இருக்கவே செய்கிறது. இது எப்படியிருந்தாலும், ஒரு தனி அமைப்பு ஒரு தனி அரசியலை நடத்தித்தான் வருகிறது?

*திரு. தேஷ்பாண்டே:* உண்மைதான், ஒவ்வொருவருக்கும் சொந்த அரசியல் உண்டு.

10,785. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சதாதாரா மாவட்டத்திலுள்ள ஒரு சில பிராமணர்கள் அங்குள்ள பிராமணரல்லாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்று இன்னமும் நீங்கள் கருதுகிறீர்களா?

*திரு. தேஷ்பாண்டே:* என்னைப் பொறுத்த வரையில் அவ்வாறு தான் கருதுகிறேன்.

10,786. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த அறிக்கையில் கண்டுள்ள பெரும்பாலான பிரச்சினைகளில் நீங்களும் பிராமணரல்லாதார்களின் தலைவர் திரு. ஜாதவும் ஒத்துப் போவீர்களா?

*திரு. தேஷ்பாண்டே:* திரு. ஜாதவைப் பற்றி எனக்குத் தெரியாது. என்னைப் பற்றித்தான் எனக்குத் தெரியும்.

10,787. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்துவீர்களா?

*திரு. தேஷ்பாண்டே:* திரு. ஜாதவும் நானுமா? இல்லை.

10,788. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சென்னை மாநிலத்தில் பிராமண்ரல்லாதார்களைக் கொண்ட நீதிக்கட்சி (ஜஸ்டிஸ்) இருக்கிறதல்லவா?

*திரு. எம். கே. ஆச்சார்யா:* சில ஆண்டுகளுக்கு முன்னர் அப்படி ஒரு கட்சி இருந்தது. ஆனால் அது முன்போல இப்போது தீவிரமாகச் செயல்பட்டு வருகிறதா என்பது எனக்குத் தெரியாது.

10,789. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது ஒன்று அல்லது இரண்டாண்டுக் காலம் இருந்து வந்ததா?

*திரு. எம். கே. ஆச்சார்யா:* ஏழு அல்லது எட்டாண்டுகள் இருந்து வந்தது.

10,790. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: சென்னை மாநிலத்தில் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையே மீண்டும் மிகக் கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதல்லவா?

திரு. எம். கே. ஆச்சாரியா: சமயப் பிரச்சினைகள் எனக் கூறப்படுபவற்றில் அவ்வளவு மிகக் கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது.

10,791. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அவர்கள் தங்களுக்கென ஒரு தனி நிறுவனத்தை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள், இல்லையா?

திரு. எம். கே. ஆச்சார்யா: நீதிக் கட்சியில் தற்போது பிராமணர்களும் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

10,792. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஆனால் இதுவரை அவர்கள் அனுமதிக்கப்படவில்லை அல்லவா?

திரு. எம். கே. ஆச்சார்யா: அவர்கள் இப்போது பிராமணர்களையும் கூட அனுமதித்து வருகின்றனர்; ஆகவே, அவர்கள் மாறி வருகின்றனர்.

10,793. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நீங்கள் பிராமணர்களின் கருத்துக்களை மட்டுமே வெளிப்படுத்துகிறீர்கள் என்று கூறுவது சரியாக இருக்கும், அல்லவா?

திரு. எம். கே. ஆச்சார்யா: முற்றிலும் சரியல்ல.

10,794. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இப்போது உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீங்கள் அளித்த 64-ஆம் எண் அறிக்கையில், பூனா ஒப்பந்தம் பற்றிய எத்தகைய கருத்தையும் என்னால் காண முடியவில்லை. அப்படித்தானே?

திரு. தேஷ்பாண்டே: பூனா ஒப்பந்தம் குறித்து அதில் கருத்து ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

10,795. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உண்மையாகவா?

திரு. தேஷ்பாண்டே: உண்மைதான்.

10,796. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இது ஒரு புறமிருக்கு, திரு. ஆச்சார்யா அவர்களே, உங்கள் 65-ஆம் எண் அறிக்கையில் 3-ஆவது பக்கத்தில் பின்கண்ட ஒரு வரி இருக்கிறது: ''பூனா ஒப்பந்தத்தை அதன் தகுதிகளின் அடிப்படையில் நாங்கள் எதிர்க்கிறோம்.'' ஆனால் இது பற்றி நீங்கள் மேற்கொண்டு விளக்கம் ஏதும் தரவில்லையே?

திரு. எம். கே. ஆச்சார்யா: இது போதும் என்று நினைத்தேன்.

10,797. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உங்களது இந்தக் கூட்டு அறிக்கையை மிக அண்மையை சிந்தனைப் போக்கு எனலாம், இல்லையா?

திரு. எம். கே. ஆச்சார்யா : ஆம், மற்றவற்றைவிடப் பிந்தியது.

10,798. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இந்து மகாசபைச் சாட்சியம் அளித்ததற்குப் பிறகா?

திரு. எம். கே. ஆச்சார்யா : இல்லை, அதற்கும் முன்னால்.

10,799. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : திரு. தேஷ்பாண்டே அவர்களே, இதனைக் கண்டிப்பதற்கு உங்களுடைய ஆதரவாளர்களின் ஒப்புதலைப் பெற்றிருப்பதாக இப்போது கூறியிருப்பதை உங்கள் அறிக்கையில் முன்னரே ஏன் குறிப்பிடவில்லை?

திரு. தேஷ்பாண்டே : அது அவசியம் என்று நான் நினைக்கவில்லை.

10,800. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இன்னுமொரு கேள்வியைத் தங்களிடம் கேட்க விரும்புகிறேன். உங்களது 72-ஆம் எண் கூட்டறிக்கையில் மாநில தன்னாட்சியையும் மத்தியில் பொறுப்பாட்சியையும் கோரியிருக்கின்றீர்கள்; அதை இங்கு வாசித்துக் காட்டுவது அவசியமில்லை என்று நினைக்கிறேன். இப்போது, 4-ஆவது பத்தியில் கீழ்ச் சபைகளுக்கான வாக்குரிமை என்னும் தலைப்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றீர்கள் : ''நமது நாட்டு மக்களில் பெரும் பகுதியினர் பிரதிநிதித்துவ அமைப்புகளைச் செயல்படுத்தும் வழிமுறையில் இன்னும் பயிற்சி பெறவில்லை.'' இங்கு உங்களிடம் நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான் : ''நம் நாட்டு மக்கள் பிரதிநிதித்துவ அமைப்புகளைச் செயல்படுத்தும் வழிமுறையில் இன்னும் பயிற்சி பெறவில்லை'' என்று நீங்கள் கூறுகிறீர்கள்; அப்படியானால் எவருடைய நன்மைக்காக நீங்கள் மாநில தன்னாட்சியையும், மத்தியில் பொறுப்பாட்சியையும் கேட்கிறீர்கள்?

திரு. எம். கே. ஆச்சார்யா : அந்தப் பத்தியை மிகக் கவனமாகப் படிக்கும்படி மதிப்பிற்குரிய நண்பரைக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கான பதில் அதிலேயே இருக்கிறது.

10,801. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அந்தப் பதில் என்ன?

திரு. எம். கே. ஆச்சார்யா : பதில் அதிலேயே இருக்கிறது. படித்துப் பாருங்கள் தெரியும்.

10,802. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அந்த பதில் என்ன?

திரு. எம். கே. ஆச்சார்யா : வாக்குரிமை பெறுவதற்கான தகுதிகளை இனி வருங்காலத்தில் வகைதொகையற்றுக் குறைப்பதை நாங்கள் எதிர்க்கிறோம்; அவசர கோலமாக இத்தகுதிகளைக் குறைப்பதைக் கண்டிக்கிறோம்; ஆனால் இந்தக் குறைப்பை மிகவும் விவேகமான முறையில் செய்த பிறகு, மாநில தன்னாட்சியையும் மத்தியில் பொறுப்பாட்சியையும் வலியுறுத்த உடனடியாக அடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

10,803. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : வாக்குரிமைத் தகுதியை முன்பின் யோசிக்காமல் குறைப்பது எப்படி உங்கள் நாட்டு மக்களைப் பிரதிநிதித்துவ அமைப்புகளைச் செயல்படுத்தும் வழி முறையில் பயிற்றுவிக்க முடியும்?

திரு. எம். கே. ஆச்சார்யா : அதைத்தான் நாங்கள் சொல்லு கிறோம். அவசரகோலமான குறைப்பு அவர்களுக்குப் பயிற்சி அளிக்காது.

10,804. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : ஆகையால் அதனை மேலும் உயர்த்த வேண்டும் என்று கூறுகிறீர்களா?

திரு. எம். கே. ஆச்சார்யா: இல்லை, விவேகமுள்ள குறைப்பு என்பதற்கு எதிர்ப்பதம் விவேகமற்ற குறைப்பு என்பதுதான்.

10,805. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : வாக்குரிமையை பிராமணர்களுடனும் உயர் வகுப்பினருடனும் மட்டும் நிறுத்திக் கொள்ள வேண்டும், அப்படித்தானே?

திரு. எம். கே. ஆச்சார்யா: பகுத்தறிவுள்ள குறைப்பு என்பதற்கு இதுவல்ல பொருள். வெள்ளை அறிக்கை வாக்குரிமை பெறத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 3,80,00,000 என்று கூறு கிறது. இந்த எண்ணிக்கை 2,00,00,000 அல்லது 2,80,00,000 ஆக இருந்தால் நான் திருப்தியடைவேன். ஒரு குறிப்பிட்ட வகுப் பினருக்குத்தான் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று இதற்குப் பொருளாகாது.

10,806. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : மலபாரில் நையாடி கள் (Naiyadis) என்னும் ஒரு வகுப்பினர் இருப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

திரு. எம். கே. ஆச்சார்யா : ஆம், தெரியும்.

10807. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அங்கு நிலவும் சமூகப் பழக்க வழக்கங்களின்படி ஒரு நையாடி சாலையில் நடந்து செல்ல முடியாது என்று தெரிகிறது.

திரு. எம். கே. ஆச்சார்யா : இப்போது அவன் பொதுச் சாலை களில் நடந்து செல்ல முடியும்.

10;808. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அவன் ஏதேனும் விற்க வேண்டும் என்றாலோ, வாங்க வேண்டும் என்றாலோ, தனது பண்டங்களை அல்லது பொருள்களைத் தெருவிலிருந்து சுமார் 60 கெஜ தூரத்தில் வைத்துக் கொண்டுதான் அங்கிருந்து அவன் கூவ வேண்டும்?

திரு. எம். கே. ஆச்சார்யா : எனக்குத் தெரிந்தவரை இது சரி யரன தகவல் அல்ல.

10,809. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அந்தத் தகவலை நான் தரட்டுமா?

*திரு. எம். கே. ஆச்சார்யா:* இந்தத் தகவல் உண்மை அல்ல; அதை நான் மறுக்கிறேன். நான் பல ஆண்டுக்காலம் மலபாரில் இருந்திருக்கிறேன்; மதிப்பிற்குரிய என் நண்பரைவிட நான் மலபாரை நன்கு அறிவேன்.

**10,810.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் உங்களிடம் கேட்கப்போகும் விஷயம் இன்னும் ஒருபடி மேலே செல்லக் கூடியது. நான் கூறிய தகவல்கள் சரியானவை என்பதை முதலில் ஒப்புக் கொள்ளுங்கள்.

*திரு. எம். கே. ஆச்சார்யா:* அந்தத் தகவல்கள் தவறானவை யாக இருக்கும் போது, அவற்றை எப்படி நான் ஏற்றுக்கொள்ள முடியும்?

**10,811.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மலபாரில் பொதுத் தெருவில் ஒரு நையாடி நடந்து செல்வதை எந்த ஒரு இந்துவும் தடுப்பதைக் குற்றமாக்கக் கூடிய ஒரு சட்டம் இயற்றப்படுவதாக வைத்துக் கொள்வோம்; அப்போது அந்தச் சட்டம் உங்கள் சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களைப் பாதிக்கிறது என்று கூறு வீர்களா?

*திரு. எம். கே. ஆச்சார்யா:* மதிப்பிற்குரிய நண்பர் தவறான தகவல்களின் அடிப்படையில் எண்ணுவதுபோல், அங்கு இத்தகைய வழக்கமும் இல்லை, இத்தகைய சட்டமும் இல்லை. இத்தகைய ஒரு பழக்கம் இருக்குமானால், இப்படிப்பட்ட ஒரு சட்டம் இயற்று வதற்குத் தேவை இருக்குமானால், அப்போது அந்தச் சட்டம் எந்த ஒரு சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டிற்கும் முரண்பாடான தாக இருக்காது.

★ ★ ★ ★ ★

**10,899.** **டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு ஒரு விஷயத் தைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். திரு. ஆச்சார்யா அவர்களே, பூனா ஒப்பந்தத்தின் முடிவுகளை பண்டித மாளவியா ஏற்க மறுத்துவிட்டதாக நீங்கள் கூறினீர்கள். இது தொடர்பாக உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: பூனா ஒப்பந்தம் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருப்பது மட்டுமல்லாமல், இந்துக்கள் மீது ஒரு குறிப்பிட்ட கடமைப் பொறுப்பையும் சுமத்தி யுள்ளது, அதாவது இந்துக்கள் தீண்டாமையைக் கைவிட வேண்டு மென்றும், இந்துக் கோவில்களைத் தீண்டாதார்களுக்குத் திறந்து விட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது எனத் திரு. காந்தி கூறியிருப்பது உண்மைதானே?

*திரு. எம்.கே. ஆச்சார்யா:* அவ்வாறுதான் காந்தி கூறியிருக் கிறார் என்று நினைக்கிறேன்.

---

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-C, ஆகஸ்டு 2, 1933, ப. 1720.

*10,900. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இது அப்படியல்ல என்று பண்டித மாளவியா கூறுகிறார்; இவ்வாறு செய்யும்படி பூனா ஒப்பந்தம் இந்துக்கள் மீது எத்தகைய கடப்பாடுக்ளையும் சுமத்தவில்லை, எனவே, பூனா ஒப்பந்தத்தின் முடிவுகளைத் தம்மால் ஏற்க முடியாது என்று அவர் கூறுகிறார். இதுதானே விஷயம்?*

*திரு. எம். கே. ஆச்சார்யா : ஆம், அதுதான் விஷயம்.*

*10,901. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : பிரச்சினையின் அரசியல் அம்சத்தை இது தொடவில்லை. தீண்டாதார்க்குக் கோவில் கதவுகளைத் திறந்துவிடும் கடமைப் பொறுப்பை பூனா ஒப்பந்தம் இந்துக்கள் மீது சுமத்தியுள்ளது என்று திரு. காந்தி கூறுகிறார். பண்டித மாளவியாவோ இத்தகைய கடமைப் பொறுப்பு எதுவுமே இல்லை என்கிறார். அப்படித்தானே?*

*திரு. எம். கே. ஆச்சார்யா : ஆம், அப்படித்தான்.*

## (15)

**லெப்டினெண்ட் — கர்னல் சி. இ. புரூஸ், சி. எஸ். ஐ., சி. ஐ. இ., சி. பி. இ., லெப்டினெண்ட் — ஜெனரல் சர் ஜார்ஜ் மக்முன், கே. சி. பி., கே. சி. எஸ். ஐ., டி. எஸ். ஓ., திரு. எஃப். எஃப். லியால், சி. ஐ. இ., திரு. வாரிஸ் அமீர் அலி ஐ. சி. எஸ், திரு. ஓ. சி. ஜி. ஹெய்தர், மாண்புமிகு நீதிபதி டபிள்யூ. எ. லி ரோசிக்னோல்.**

*12,465. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நீங்கள் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றி வந்தபோது இந்தியாவில் அமைச்சர்கள் இருந்தார்களா?*

*லெப். கர்னல் சி. புரூஸ் : அமைச்சர்கள் இருந்தார்கள், ஆனால் அவர்கள் எனது துறை சம்பந்தப்பட்டவர்களல்லர். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள் அல்ல என்பதையும் கூற வேண்டும். ஆனால் இந்த அறிக்கையில் இப்போது நான் குறிப்பிடுவது எதிர்கால அரசியல் சட்டத்தைப் பற்றியதே ஆகும்.*

*12,466. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உங்கள் அனுபவத்திலிருந்து நீங்கள் பேசுவதாக நினைத்தேன்.*

*லெப். கர்னல் சி. இ. புரூஸ்: நான் உங்களுக்குச் சற்று விளக்கிக் கூறலாமா? இங்கு நான் குறிப்பிடுவது எதிர்காலத் திட்டத்தைப் பற்றித்தான். இந்தத் திட்டத்தின்படி அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்களின் கீழ் பணியாற்றுவார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சட்டமன்றங்களுக்கு பொறுப்புக்கூற அவர்கள் கடமைப்பட்டிருப்பார்கள், அமைச்சரவை இருந்தால் அவர்களும் இருப்பார்கள், அமைச்சரவை வீழ்ந்தால் அதனுடன் சேர்ந்து அவர்களும் வீழ்வார்கள்.*

*சர் ஹரி சிங் கௌர்:* உங்கள் சொற்கள் தீர்க்க தரிசனம் போல் ஒலிக்கின்றன.

## (16)

### விங் கமாண்டர் ஏ. டபிள்யூ. எச். ஜேம்ஸ், எம். பி, டாக்டர் ஜே. எச். ஹட்டன், சி. ஐ. இ., ஐ. சி. எஸ்

* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பழங்குடி மக்கள் தங்கள் குல மரபுச் சட்டங்களைப் பழக்க வழக்கச் சட்டங்களாக ஏற்றுக் கொள்ளும்படி வாதாட முடியாதா?

*விங். கமா. ஏ. டபிள்யூ. எச். ஜேம்ஸ்:* இல்லை, உயர்நீதி மன்றம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* எந்தப் பழக்க வழக்கத்தையும் உயர்நீதிமன்றம் ஏற்குமல்லவா?

*விங். கமா. ஏ. டபிள்யூ. எச். ஜேம்ஸ்:* அது ஒரு இந்து அல்லது முஸ்லீம் பழக்க வழக்கம் என்று நிலைநாட்ட வேண்டிய தேவையில்லை. இது தொடர்பாக எந்தச் சட்டமும் இயற்றப்படவில்லை என்றால், பழக்க வழக்கம்தான் கட்டுப்படுத்தும். சாதாரணமாக இவ்வாறுதான் நிகழ்வது உண்டு. நேரடி அனுபவத்தோடு இதை நான் கூறவில்லை.

★ ★ ★ ★ ★

** டி 222. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* டாக்டர் ஹட்டன் அவர்களே, விலக்கப்பட்ட பிரதேசங்களின் நிர்வாகம் ஒரு மாநிலத் துறையாக இருப்பதைவிட மத்தியத் துறையாக இருப்பதையே நீங்கள் விரும்புவதாக, மேஜர் அட்லி கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் நீங்கள் தெரிவித்தீர்கள் இல்லையா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* அது என் சொந்தக் கருத்து.

★ ★ ★ ★ ★

டி 224. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உங்கள் ஆய்வில் விவாதிக்கப்பட்டுள்ள வேறு சில விஷயங்களுக்கு இப்போது வருவோம். பழங்குடி மக்கள் எந்தச் சூழ்நிலைமையிலும் புதிய அரசியல் சட்டத்தின் வரம்புக்குள் வரக்கூடாது என்ற அடிப்படையில்தான் நீங்கள் செயல்பட்டு வருகிறீர்கள் என்று நினைக்கிறேன்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* நீங்கள் சொல்வது சரி.

டி 225. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் நீங்கள் செயல்பட்டு வருகிறீர்கள், என்று சொல்லுங்கள்?

---

* மேற்படி, தொகுதி II — டி, அக்டோபர் 16, 1933, பக். 2376.

** மேற்படி — பக்கங்கள் 2388-90.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன் :* இந்த மக்கள் இதர மக்களிடையே மிகப் பரவலாக வாழ்ந்துவரும் சில சந்தர்ப்பங்களில் இது வேறு விதமாக இருக்கும்.

டி 226. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* எனினும் முக்கியமாகீ இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் நீங்கள் செயல்பட்டு வருகிறீர்கள்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன் :* ஆம், முக்கியமாக இந்தக் கோட் பாட்டின் அடிப்படையில்தான் செயல்பட்டு வருகிறேன்.

டி 227. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்த மக்களுக்காக நீங்கள் மேற்கொண்டிருக்கும் குறிக்கோள் என்ன? நீங்கள் சிறந்த முறையில் பதிலளிக்கும் பொருட்டு என் கேள்வியை இன்னும் தெளிவாக்க விரும்புகிறேன்.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன் :* இந்த மக்களின் வாழ்க்கையில் எவரது தலையீடும் மிகக் குறைந்த அளவே இருக்க வேண்டும்.

டி 228. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தக் கேள்வியை என் அகக் கண்களில் எவ்விதம் உருவகித்துக் காண்கிறேனோ அவ்விதம் இங்கு முன்வைக்க என்னை அனுமதியுங்கள். நாகரிகம் அறியாத இந்தப் பழங்குடி மக்கள் இந்தியாவின் இதர பகுதிகளது விவகாரங்களில் எத்தகைய தொடர்புமின்றித் தொடர்ந்து பழங் குடி மக்களாகவே இருந்து வர வேண்டும் என்பதுதான் உங்கள் குறிக்கோளா அல்லது இந்த மக்கள் மனித குலத்தின் ஓர் ஒதுக்கி வைக்கப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக இருந்து வரும் அவல நிலைக்கு முடிவுகட்டி, ஏனைய இந்திய மக்கள் செய்து வருவது போன்று நாட்டின் பொது விவகாரங்களில் அவர்களும் முன்னின்றுப் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களது எதிர்காலத்தை, கதிப்போக்கை நாளடைவில் ஒழுங்கமைப்பது, சீரமைப்பது உங்கள் எண்ணமா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன் :* நீங்கள் இரண்டாவதாகக் குறிப் பிட்டதுதான் என் குறிக்கோள்.

டி 229. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அவர்கள் நாகரிகமற்ற மக்களாக நிரந்தரமாகத் தொடர்ந்து இருந்துவரக் கூடாது என்று கருதுகிறீர்கள், இல்லையா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன் :* இயலுமானால் முடிவில் அவர் கள் தங்கள் நாட்டின் வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே இங்குள்ள பிரச்சினை.

டி 230. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நானும் அதைத் தானே சொல்லுகிறேன்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன் :* ஆனால் சில சந்தர்ப்பங்களில் இந்தக் குறிக்கோளை நாம் அடைய முடியாமலும் போகக் கூடும்.

டி 231. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இலட்சியங்கள் என்ன என்பதை முதலில் உறுதி செய்து கொள்வோம்.

டாக்டர் ஜே. எச். ஹட்டன் : ஆமாம்.

டி 232. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அவர்கள் இந்த சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் அலலது அந்த சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று சமயப் பிரச்சினை எதையும் இங்கு நான் புகுத்துகிறேனா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன் : இல்லை.

டி 233. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நீங்கள் சுட்டிக்காட்டு வதெல்லாம் இதுதான். அவர்கள் நாகரிக சமுதாயத்தின் பிரிக்க முடியாத பகுதியினராக வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள், இதுதான் உங்கள் குறிக்கோள் என்று நினைக்கிறேன்.

டாக்டர் ஜே. எச். ஹட்டன் : ஆம்.

டி 234. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : அவர்கள் நாகரிகமற்ற நிலையிலிருந்து விடுபட்டு முன்னேற வேண்டும் என்றும் விரும்பு கிறீர்கள்?

டாக்டர் ஜே. எச். ஹட்டன் : ஆம், அது அவசியம் என்று கருது கிறேன்.

டி 235 டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : சரி, மேலே செல் கிறேன். இதுதான் உங்கள் கருத்து என்றால், இந்தியாவின் நாகரிகமடைந்த மக்களுக்கும், இந்தப் பழங்குடி மக்களுக்கும் இடையே பொதுவான முறையில் நெருங்கிய தொடர்பு ஏற்படு வது விரும்பத்தக்கதல்லவா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன் : அதற்கான தருணம் இன்னும் வர வில்லை.

டி 236. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இந்திய சமுதாயத்தின் நாகரிகமடைந்த பகுதியினரது மனங்களைக் கிளர்த்திவரும் கருத் துக்கள் இந்த ஆதிவாசி மக்களிடையே ஊடுருவது அவசிய மல்லவா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன் : இந்தக் கருத்துகள் பரவுவதில் சிக்கல் ஏதும் இருக்காது.

டி. 237. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: எப்படிச் சொல்லு கிறீர்கள்?

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: அவர்கள் தனித்து ஒதுங்கியிருந்தா லொழிய மிகவும் எதிர்பாராத விதமாகத் திடீரென ஏற்படும் தொடர்பால் அவர்கள் அழிந்துபோகக் கூடிய அபாயம் இருப்பது தான் என்னைக் கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. உலகில் ஏறத் தாழ எல்லா இடங்களிலும் இவ்வாறுதான் நிகழ்ந்துள்ளது.

*டி. 238. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது எனக்குத் தெரியாது. நீங்கள் ஒப்புக் கொண்டுள்ளபடி, இந்த ஆதிவாசி மக்கள் ஒருநாள் இந்தியச் சமுதாயத்தின் ஒரு பிரிக்க முடியாதப் பகுதியாக வேண்டும் என்பதே 'உங்கள் குறிக்கோள் என்றால், நீங்கள் கூறுவது போன்று, அந்த மக்களைப் பிரித்து வைப்பது—முற்றிலும் பிரித்துவைப்பது—மிகக் கண்டிப்பான முறையில் பிரித்து வைப்பது. அந்தக் குறிக்கோளை அடைவதற்குச் சரியான, இசைவான வழியாகுமா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* இதுதான் இயலுகின்ற வழியாக எனக்குத் தோன்றுகிறது.

*டி. 239. சர் ரெஜினால்டு கிரேத்தக்:* நான் ஒரு கேள்வி கேட்கலாமா? பல்வேறு கல்வி நிறுவனங்கள் இந்தப் பழங்குடி மக்கள் சிலரிடையே பணியாற்றி வருகின்றன. இது உண்மையா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* ஆம், உண்மைதான்.

*டி. 240. சர் ரெஜினால்டு கிரேத்தக்:* அவை முக்கியமாகச் சமயப் பரப்பாளர்கள் (மிஷனரி) நடத்தும் பள்ளிகளா? அரசுக்கு இங்கு ஏதேனும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* அரசுக்கு ஏராளமானப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

*டி. 241. சர் ரெஜினால்டு கிரேத்தக்:* இந்த வகுப்பினரின் மேம்பாடு தொடர்பாக நீங்கள் குறிப்பிடப்போகும் அம்சங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும், இல்லையா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* ஆம், இந்த அம்சத்தை நான் குறிப்பிட வேண்டும்.

*டி. 242. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இன்னும் சற்று மேலே செல்ல விரும்புகிறேன். உங்கள் ஆய்வறிக்கையிலிருந்து நீங்கள் இரண்டு விஷயங்கள் குறித்துக் கவலை கொண்டிருப்பதைப் பார்க்கிறேன் (நான் ஏதேனும் தவறாகக் கூறியிருந்தால் என்னைத் திருத்துங்கள்). கற்றறிந்த அல்லது முன்னேற்றமடைந்த அல்லது நாகரிகமடைந்த இந்தியர்களும் இந்த ஆதிவாசி மக்களும் ஓர் அரசியல் அமைப்பில் தொடர்பு கொள்வது அல்லது ஒன்றிணைவது—இந்தச் சொல்லாட்சியை நான் பயன்படுத்துவதாக இருந்தால்—முன்னேற்றமடைந்த வகுப்பினர்களால் அல்லது இன்னும் சொல்லப்போனால் இந்திய சமுதாயத்தின் நாகரிகமடைந்த பகுதியினரால் அவர்கள் சுரண்டப்படுவதில்தான் அநேகமாக முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள், இல்லையா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* ஆம்.

*டி. 243. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இரண்டாவதாக, இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதானால், புதிய கவுன்சிலில் அவர்

களிடம் போதிய கவனம் செலுத்தப்பட மாட்டாது என்று நீங்கள் அஞ்சுகிறீர்கள்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* ஆம்.

டி. 244. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உங்களிடம் இன்னொரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அவர்களது நில விவகாரத்தையே எடுத்துக் கொள்வோம். இந்தப் பிரச்சினை அதாவது இந்தப் பழங்குடி மக்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக ஆக்கி விடாத வகையில் கூடிய மட்டும் நிலம் அவர்கள் கையில் இருக்கும் படிப் பார்த்துக் கொள்ளும் பிரச்சினை இந்தியாவிலுள்ள அநேக விவசாய வர்க்கத்தினரின் முன்னாலுள்ள பிரச்சினையே என்பதும், அவர்களது பாதுகாப்புக்காகப் பம்பாயில் தட்சண விவசாய நிவாரணச் சட்டம், பஞ்சாபில் நிலவுடைமை மாற்றச் சட்டம் போன்ற பல சட்டங்களை இயற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது என்பதும் உண்மை அல்லவா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* இத்தகைய சட்டங்கள் இயற்றப் பட்டிருக்கின்றன என்றே கருதுகிறேன்.

டி. 245. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த ஆதிவாசி மக்கள் ஒரே அரசியலமைப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டால், லேவாதேவிக்காரர்களை உள்ளே நுழைய விடக்கூடாது, உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக இருக்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்துவதில் அவர்கள் தன்னந்தனியாக இருக்க மாட்டார்கள்; இதே போன்ற கோரிக்கைகளை சட்ட மன்றத்தில் எழுப்ப விரும்பும் இன்னும் பலர் இருப்பார்கள் என்பது என் கருத்து. பழங்குடி மக்கள் எவ்விதத்திலும் தனித்து விடப்பட மாட்டார்கள் என்பதையே இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* தின்றால் தெரியும் பணியாரத் தின் சுவை என்று சொல்லுவார்கள். இந்த மக்கள் எப்போதுமே தங்கள் நிலத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதையே அனுபவம் காட்டியுள்ளது.

டி. 246. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* டாக்டர் ஹட்டன் அவர்களே, இன்று அமைந்துள்ள சட்டமன்றங்களையும், சில காலத்திற்கு முன்னர் இருந்த சட்டமன்றங்களையும் போன்றே வெள்ளை அறிக்கையின்படி அமைக்கப்படப்போகும் சட்டமன்றங் கள் இருக்கப் போவதில்லை என்பதை நீங்கள் மனத்தில் இருத்த வேண்டும்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* நல்லது.

டி. 247. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பொதுத் தொகுதியி லிருந்து உங்களுக்கு ஓரளவு பிரதிநிதித்துவம் கிடைக்கும். அவர் கள் ஏழை வர்க்கங்களை ஆதரிக்கக் கூடியவர்களாக இருப்

பார்கள். இதுபோன்ற விஷயங்களில் கடந்த சட்டமன்றங்களின் அனுபவம் நம்பகமான வழிகாட்டுதலாக இருக்க முடியாது?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* நான் விரைவில் பத்திரமான இடத்தில் இருப்பேன்; அவர்களை விலக்கி வைப்பேன்.

டி. 248. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என்ன காரணமோ தெரியவில்லை. சட்டமன்றத்தில் அவர்களுக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறுக்கத் தயாராக இல்லையே?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* இதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். அவர்களுக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை முதலில் எனக்கு ஏற்பட வேண்டும். ஒரே மாதிரியான நலன்களைக் கொண்ட பலர் இருக்கலாம்; ஆனால் தனிப்பட்ட முறையில் இந்த மக்களுடன் அவர்களுக்குப் பொதுவான அம்சங்கள் ஏதும் இருக்க முடியாது.

டி. 249. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உண்மைதான். ஆனால் ஒரே மாதிரியான நிலைமையில் உள்ள ஒரு வகுப்பினரின் பாதுகாப்பு என்னும் பொதுவான பிரச்சினையைப் பொறுத்த வரையில்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* சிஹத்திலுள்ள ஒரு முஸ்லீம் சாகுபடியாளன் தனக்கு மிக அதிக அளவுப் பாதுகாப்பு வேண்டும், அயலார்களுக்கு மிக அதிக அளவுப் பாதுகாப்புக் கூடாது என்று கோருவான் என்றே கருதுகிறேன்.

டி. 250. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியர்களின் நலன்களுக்குப் பெரிதும் தேவையான சில சட்டங்களை விரிவுபடுத்தக் கூடாது, அச் சட்டங்களின் பாதுகாப்பைப் பழங்குடி மக்களுக்கு வழங்கக் கூடாது என்று கூறுமளவுக்குச் சட்டமன்றங்கள் செல்லும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* இல்லை, அந்த அளவுக்குச் செல்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

டி. 251. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியானால் எவ்விதத்தில் ஏற்ற தாழ்வு தோன்றக்கூடும்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* தேவையானப் பாதுகாப்பைப் பெறுவது ஆதிவாசிகளுக்கு மிகவும் கடினமாக இருக்கும் என்று கருதுகிறேன். புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, சாகுபடியாளர் தேவையான பாதுகாப்பைப் பெறுவார் என்ற வாக்குறுதி ஏதும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை.

டி. 252. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* முற்றிலும் உண்மை; நீங்கள் கூறுவதை ஒப்புக் கொள்கிறேன். மற்ற வகுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து, வேறுசில சிறுபான்மையினருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பைத் தடுக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. இந்த அச்சம் நியாயமானதே. ஆனால் ஒரு அணியிலுள்ள சக்தி

களையும் இன்னொரு அணியிலுள்ள சக்திகளையும் கணக்கி லெடுத்துக் கொண்டு பார்க்கும் போது, ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்; அதாவது, மாகாணச் சட்ட மேலவையிலுள்ள பழங்குடி மக்களின் ஒரு சில பிரதிநிதி கள் மறு அணியைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான பிரதி நிதிகளின் முன்னால் தாங்கள் எதுவும் செய்ய இயலாது என்று அச்சம் கொள்ளக்கூடும்; ஆனால் வெள்ளை அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ள யோசனைகளின்படி எதிர்காலத்தில் அமைய விருக்கும் சட்டமன்றங்களின் இயைபு குறித்து நான் அளிக்க விருக்கின்ற ஆய்வைப் பார்த்தால், இந்த அச்சம் முற்றிலும் நியாய மற்றது என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* இன வேறுபாடு நிலவுவதால், ஒரு சில இடங்களிலாவது இத்தகைய அச்சம் கொள்வதற்கு நியாயம் இருக்கிறது என்றே கருதுகிறேன்.

டி. **253.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கல்விப் பிரச் சினையை இங்கு மீண்டும் எடுத்துக் கொள்வோம். பம்பாய் மாநிலத்திலுள்ள இந்தப் பழங்குடி மக்களைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும். நாங்கள் பிற்பட்ட வகுப்பினர்கள்.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* ஆம், அது எனக்குத் தெரியும்.

டி. **254.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நாங்கள் இந்தப் பழங் குடி மக்களிடமிருந்து பெருமளவுக்கு வேறுபட்டிருக்கவில்லை.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* அதுவும் எனக்குத் தெரியும்.

டி. **255.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கல்விக் கண்ணோட்டத் திலிருந்து சொல்லுவதானால், பழங்குடி மக்களைவிட அல்லது பிற்பட்ட மக்களைவிடக் குறைந்த அளவே கல்வி வசதித் தேவைப் படுபவர்கள் இந்தியாவில் ஏராளமானோர் உள்ளனர் என்று கூற முடியாதல்லவா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* என்ன கூற முடியாது என்கிறீர் கள்?

டி. **256.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உதாரணமாக ஒடுக்கப் பட்ட மக்களை எடுத்துக் கொண்டால் அவர்களது அத்தியாவசியக் கல்வித் தேவை குறைவானது என்று சொல்ல முடியாது.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* ஆம், அது குறைவானது என்று சொல்ல முடியாதுதான்.

டி. **257.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படி ஒருவர் சொல்ல முடியாதா?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* சொல்லமுடியாது.

டி. **258.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பம்பாயில் பிற்பட்ட வகுப்பினர் வாரியத்தில் நான் உறுப்பினராக இருக்கிறேன்.

ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கும் பழங்குடி மக்களுக்குமான நிறுவனம் இது.

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: சில இடங்களில் பழங்குடி மக்கள் கல்வியில் மிகவும் முன்னேறியவர்களாக இருக்கிறார்கள்.

டி. 259. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: எனவேதான், அவர்களது கல்வித் தேவையைப் பொறுத்தவரையில் சட்ட மேலவையில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள் என்று கூறுகிறேன்.

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: சரி, இருக்கட்டும்.

டி. 260. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்த மக்கள் முழு அளவுக்குத் தனித்திருக்க வேண்டும் என்றும், இந்த மக்களின் மிகப் பெரிய தேவை என நான் கருதும் கல்வித் தேவை போன்ற அவர்களது தேவைகள் ஆளுநர் தமது விசேடப் பொறுப்பின்படி வழங்கும் வருவாயிலிருந்து பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் நீங்கள் விரும்புகிறீர்கள்?

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: ஆம்.

டி. 261. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்தக் கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்: பழங்குடி மக்களின் கல்விக்குத் தேவையானதெனத் தாம் கருதும் நிதியைத் தமது அமைச்சர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வழங்கக்கூடிய அளவுக்கு ஓர் ஆளுநர் செல்வாரா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: இது ஒரு கடுமையான சிக்கல் தான்.

டி. 262. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இப்போது நான் உங்களிடம் தெரிவித்த கருத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடியது ஏதேனும் இருக்குமானால், இந்த மக்களின் பிரதிநிதிகள் சட்டமேலவையில் இடம்பெறுவது விரும்பத்தக்கது அல்லவா? அப்போது இவர்களது வாக்குகளைச் சார்ந்திருக்க வேண்டிய ஓர் அமைச்சர் அவர்களது தேவைகளை நிறைவேற்ற முன்வரக்கூடுமல்லவா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: ஒன்று அல்லது இரண்டு வாக்குகள் ஓர் அமைச்சரைப் பாதித்து விடாது.

டி. 263. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஒன்று அல்லது இரண்டு என்று நான் கூறவில்லை. சிறு எண்ணிக்கையில் இருந்தாலும் சட்டமன்றத்தில் இவர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இருக்கும் பட்சத்தில், அமைச்சர் இவர்களது வாக்குகளை நம்பியிருக்கக்கூடுமல்லவா? அப்போது இவர்களது தேவைகள் தொடர்பாக அவர் மிகுந்த இணக்கத்துடன் நடந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது அல்லவா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: இது கோட்பாட்டளவில் இருக்கலாம், ஆனால் நடைமுறையில் அல்ல. அவர்களது எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அரசியலில் ஒரே ஒரு வாக்குக் கூட சமநிலையை மாற்றிவிடக் கூடும்.

டி. **264.** *லார்டு எஸ்டேஸ் பெர்சி:* இந்த மக்கள் மாநிலத்தின் அதிகார வரம்பிலிருந்து மட்டுமன்றி, ஆளுநரின் அதிகார வரம்பிலிருந்தும் விலக்கப்பட வேண்டும், மத்தியிலிருந்து அவர்கள் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதே டாக்டர் ஹட்டனின் பரிந்துரை என்று நினைக்கிறேன். அப்படித்தானே?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* மொத்தத்தில், இதைத்தான் நான் விரும்ப வேண்டும். தலைமை ஆளுநரின் (கவர்னர்-ஜெனரல்) முகவராக (ஏஜெண்ட்) ஆளுநர் செயலாற்றும், முற்றிலும் விலக்கப்பட பிரதேசங்கள் தொடர்பாக வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளைப் பொறுத்தவரையில், அந்த யோசனைகள் திருப்திகரமானவையாக இருக்கின்றன என்று எனது அறிக்கையில் கூறியிருந்தேன். அவற்றை நான் விரும்ப வேண்டும் என்று சொல்லவில்லை.

டி. **265.** *லார்டு எஸ்டோஸ் பெர்சி:* சின்னஞ்சிறு அரசுகளை அமைப்பது தொடர்பாக நீங்கள் தெரிவித்துள்ள யோசனைகளிலிருந்து அது கூடிய மட்டும் ஒரு மத்தியத் துறையாக இருக்க வேண்டும் என்பதே உங்கள் நோக்கம் என்று நினைக்கிறேன்.

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* அது கூடிய மட்டும் மத்தியத் துறையாக இருக்க வேண்டும் என்பதே என் நோக்கம் என்பதில் ஐயமில்லை.

டி. **266.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தத் துறை மத்திய அரசின் துறையாக மாற்றப்பட்டாலும்கூட எனது குற்றச்சாட்டு அதற்கும் பொருந்தும்; ஏனென்றால் இத்துறையை நிர்வகிப்பதற்குத் தேவையான தொகையை ஆளுநர் உறுதி செய்தாக வேண்டும்; இந்தத் தொகை செலவிடப்படுவதற்கு மத்திய அமைச்சர்கள் மறுப்பு தெரிவித்தால் அப்போதும் மோதல் இருக்கவே செய்யும்; ஆனால் அந்த மோதல் மாநிலக் களத்திலிருந்து மத்தியக் களத்துக்கு மாறும், அவ்வளவுதான்?

*டாக்டர் ஜே. எச். ஹட்டன்:* இதில் அமைச்சருக்கு எத்தகைய அதிகாரமும் இல்லை என்று கருதுகிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதில் அமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதே என் கருத்து; ஏனென்றால் இக்கோரிக்கைக்குப் போட்டியாக இதர செலவினக் கோரிக்கைகளும் இருக்கும்; அப்போது, சட்டமன்றத்தின் ஒரு பகுதியாக இல்லாத இந்தப் பழங்குடி மக்கள் மீது அமைச்சர் அக்கறை காட்டுவார் என்று எதிர்பார்க்க முடியாது.

*டாக்டர் ஷபாயத் அகமத் கான்:* சட்டமன்றத்திலுள்ள பழங்குடி மக்களின் பிரதிநிதிகள் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களுடன் பொதுவாக இணைந்து செயல்படலாம் அல்லவா?

டி. 267. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இத்தகைய ஒரு நிலையைத்தான் கற்பனை செய்து காண்கிறேன். அப்போது அவர்களுக்குப் பல நண்பர்கள் கிடைப்பார்கள்.

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: சட்டமன்றத்தில் பழங்குடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்று நான் நினைக்க வில்லை.

டி. 268. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: உங்களைப் போலவே நானும் நம்பிக்கையற்றவனாக இருந்தால், ''இந்த அரசியலமைப்புச் சட்டமே வேண்டாம்'' என்று தயக்கமின்றிக் கூறுவேன்.

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: பழங்குடி மக்களுக்கு இந்த அரசியலமைப்புச் சட்டம் வேண்டாம்.

★ ★ ★ ★ ★

டி. 284. மேஜர் அட்லி: சைமன் கமிஷன் உங்கள் கண்ணோட்டத்தை அனுசரித்துக் காடுகளைப் பரிந்துரைத்திருப்பதாக நான் கருதவில்லை. காடுகள் மாற்றப்பட்ட துறையாக இருக்க வேண்டும் என்றுதான் சைமன் கமிஷன் பரிந்துரைத்துள்ளது, இல்லையா?

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: இல்லை, ஒரு விலக்கப்பட்ட பிரதேசத்தைச் சிக்கனமான முறையில் நிர்வகிப்பதற்கு இதனை ஒரு யோசனையாக நான் முன்வைத்தேன்.

லார்டு எஸ்டோஸ் பெர்சி: இந்தச் சிக்கலை டாக்டர் ஹட்டன் தான் சமாளிக்க வேண்டும்; ஏனென்றால், மாநில வனத்துறை அதிகாரியும், மாநில வனத்துறைக் கொள்கையும் கொண்ட முற்றிலும் விலக்கப்பட்ட பிரதேசம் என்பது என்ன என்று எனக்குப் புரியவில்லை.

டி. 285. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: என்னைக் கேட்டால் பிரதேசம் விலக்கப்பட்ட பிரதேசமல்ல, மக்கள்தான் விலக்கப்பட்ட மக்கள் என்று கூறுவேன்.

டாக்டர் ஜே. எச். ஹட்டன்: இல்லை, வெள்ளை அறிக்கையில் நான் வாசித்தபடி, பிரதேசம்தான் விலக்கப்பட்ட பிரதேசம். முற்றிலும் விலக்கப்பட்ட ஒரு பிரதேசம் பற்றிய விளக்கம் ஏதும் வெள்ளை அறிக்கையில் உள்ளதா?

## (17)

## ரைட் ஹானரபிள் சர் வின்ஸ்டன் ஸ்பென்சர் சர்ச்சில், சி. எச். காமன்ஸ் சபை உறுப்பினர்

14681. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: திரு. சர்ச்சில் அவர்களே, குடியேற்றநாட்டு அரசியல் சட்டத்தை உருவாக்குவது பற்றி வெள்ளை அறிக்கை ஏதும் கூறவில்லை அல்லவா?

சர் வின்ஸ்டன் சர்ச்சில்: இல்லை.

*14682. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: எனவே, சம்பிரதாய

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-C, 24 அக்டோபர் 1933, பப. 1807-08.

முறையிலான குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கும் அரசியலமைப்பு முறையிலான குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டறிய முடியுமா என்னும் தருக்கவியல் ரீதியிலான, மறைபொருளியல் ரீதியிலான நிலை குறித்து எத்தகைய கேள்விகளையும் கேட்டு உங்களைத் தொல்லைப்படுத்த நான் விரும்பவில்லை. வெள்ளை அறிக்கைத் தொடர்பாக ஒன்றிரண்டு கேள்விகளை மட்டுமே உங்களிடம் கேட்க விரும்புகிறேன். நீங்கள் தெளிவாக வேறுபடுத்திக் காட்ட எண்ணியுள்ள விஷயம் சம்பந்தப்பட்ட எதையும் இங்குப் புகுத்தி, பிரச்சினையைக் குழப்பாமல் இக் கேள்விகளைக் கேட்க உள்ளேன். ஆகவே, 1931 டிசம்பர் திங்கள் முதல் நாளன்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். அப்போது தீர்மானத்தை முன்மொழிந்து பிரதமர் பின்வருமாறு கூறினார்: ''1931 டிசம்பர் 1-ஆம் தேதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 3972-ஆம் எண் அரசு ஆணை அறிக்கையில் (Command Paper)—இந்திய வட்டமேசை மாநாடு—குறிப்பிடப் பட்டுள்ள மன்னர் பிரான் அரசின் இந்தியக் கொள்கையை இந்தச் சபை ஏற்கிறது.'' இது முதலாவது வெள்ளை அறிக்கையே தவிர முழுமையானத் திட்டமன்று. இல்லையா?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* பிரதமரின் உரையைக் குறிப்பிடுகிறீர்களா?

14,683. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம், பிரதமரின் உரையைத்தான் குறிப்பிடுகிறேன்.

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* நல்லது.

14,684. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த அவைக்கு அளிக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் விவரிக்கப்பட்டிருந்த அரசியலமைப்புச் சட்டம் கூட்டுத் தேர்வுக் குழுவுக்கு அளிக்கப் பட்ட வெள்ளை அறிக்கையில் கண்டிருந்த கருத்துக்களை முக்கியமாக உள்ளடக்கியதாக உள்ளது. இதன்படி மாநிலங்களில் பொறுப்பாட்சி இருக்கும்; சட்டம், ஒழுங்குத் துறை அதற்கு மாற்றப்படும்; மத்தியில் ஒரு விதமான இரட்டையாட்சி நிலவும்; பாதுகாப்பும் அயல் விவகாரங்களும் ஒதுக்கப்பட்ட துறைகளாக இருந்துவரும். நான் சொல்வது சரிதானே?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* இந்தக் கட்டத்தில் நான் குறுக்கிடுவதற்குத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

14685. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இனி அடுத்த விஷயத்திற்கு வருவோம். அது பற்றிக் கேட்க விரும்புகிறேன். காமன்ஸ் சபையில் இந்தத் தீர்மானத்ததை முன்மொழியும் போது பிரதம மந்திரி தமது குறிக்கோளைத் தெளிவுப்படுத்தினார். அவர் கூறிய சொற்களை இங்கு அப்படியே வாசிக்கிறேன்: ''நேற்று வட்ட மேசைக் கூட்டத்தில் நான் அளித்த அறிக்கை அமைச்சரவையின்

முழு ஆதரவைப் பெற்றதாகும். அந்த அறிக்கையை இந்த அவைக்குத் தெரிவித்துவிட்டேன். அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்து, இந்தக் கொள்கையுடன் தன்னை இணைத்துக் கொள்ளும்படி அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.'' காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் நோக்கம் இது தான். இப்போது நீங்கள் இந்தத் தீர்மானத்துக்கு ஒரு திருத்தத்தை அளித்துள்ளீர்கள். அந்தத் திருத்தத்தின் வாசகம் வருமாறு: ''திரு. சர்ச்சில்: ''வரி 3-ன் இறுதியில் பின்கண்ட சொற்களைச் சேர்த்துக் கொள்ளுமாறுக் கேட்டுக் கொள்கிறேன்: வெஸ்ட் மினிஸ்டர் சட்டத்தில் வரையறுத்துக் கூறியுள்ளபடி, இந்தியாவில் குடியேற்ற நாட்டு அரசியலமைப்பை நிறுவுவதற்கு அவையைக் கட்டுப்படுத்தும் எதுவும் மேலே கூறிய கொள்கையில் இடம் பெற்றிருக்கக் கூடாது; மேலும் இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் வர்த்தகமும், அதேபோன்று இந்தியாவுடன் நடைபெறும் பிரிட்டிஷ் வர்த்தகமும் பாதிக்கப்படாமல் இந்தக் கொள்கை பாதுகாப்பதாக இருக்க வேண்டும்; தவிரவும் இந்தக் கட்டத்தில் இந்தியாவில் தன்னாட்சியை மேலும் விரிவுப்படுத்துவது இந்தியாவில் அமைதியையும் ஒழுங்கையும் நல்லாட்சியையும் நிலைநாட்டுவதற்கு பாராளுமன்றத்திற்குள்ள முக்கியப் பொறுப்பை எவ்வகையிலும் ஊறுபடுத்துவதாக இருக்கக் கூடாது.''

14,686. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: 1931 டிசம்பர் 3-ஆம் நாளன்று காமன்ஸ் சபையில் நடைபெற்ற விவாதத்தை ஊன்றிப் படித்த போது என் மனத்தில் ஏற்பட்ட கருத்து இதுதான்: நீங்கள் அளித்தத் திருத்தத்தைப் பிரதமர் ஏற்றுக் கொண்டிருந்தால், பிரதமர் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து நீங்கள் வாக்களித்திருப்பீர்கள். சரிதானே?

சர் வின்ஸ்டன் சர்ச்சில்: இத்தகைய ஊகமான சூழ்நிலையில் என்ன நடந்திருக்கும் என்று கூறுவது மிகவும் கடினம் என்று நினைக்கிறேன். ஆனால் அந்தத் திருத்தம் தொடர்பாக என்னை ஆதரித்தவர்களுடன் அரசு இணங்கிப்போயிருந்தால், காமன்ஸ் சபையிலுள்ள ஏராளமான கன்சர்வேடிவ் உறுப்பினர்களுக்கு மிகுந்த மனநிறைவு ஏற்பட்டிருக்கும், இதனைத் தொடர்ந்து உடனே மிகவும் சுமுகமான சூழ்நிலைமையும் உருவாகி இருக்கும்.

14,687. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அதிர்ஷ்டவசமாக, என்னைப் பொறுத்தவரையில், இந்த விஷயம் உண்மையிலேயே ஊகமானது என்று நான் கருதவில்லை; ஏனென்றால் அந்த விவாதத்தின் போது உங்கள் திருத்தம் குறித்து மிகவும் திட்டவட்டமான போக்கை நீங்கள் கடைப்பிடித்திருப்பதாகவே நான் நினைக்கிறேன். உங்கள் உரையின்போது நீங்கள் தெரிவித்த ஒன்றிரண்டு கருத்துக்களை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு விஷயம் என்னைத் திகைக்க வைக்கிறது: முதலாவதாக, அரசு வலியுறுத்தும் கருத்துக்கும் உங்கள் திருத்தத்தில்

நீங்கள் தெரிவித்திருக்கும் கருத்துக்கும் உண்மையில் எத்தகைய வேறு பாடும் இல்லை என்பதே அச்சமயம் அவையிலிருந்த பெரும் பாலான உறுப்பினர்களின் அபிப்பிராயமாக இருந்தது, இல்லையா? உங்கள் உரையிலிருந்து ஒரு பகுதியை இங்கு வாசிக்கிறேன். நான் கூறவந்தது இதுதான்: அன்றைய தினம் காமன்ஸ் சபையில் பிரதமர் தமது அறிக்கையை அளித்தார்; நீங்கள் உங்களுடைய திருத்தத்தை முன்மொழிந்தீர்கள்; இவ்விரண்டிற்கும் இடையே எவ்வித வேறுபாடும் இருப்பதை நான் காணவில்லை. இதுவே உங்கள் நிலையாகவும் இருந்தது. உங்கள் உரையிலிருந்து நான் வாசிக்கப்போகும் பகுதி இதனைத் தெளிவுபடுத்தும். 234-ஆவது பத்தியில் நீங்கள் பின்வருமாறு கூறியிருக்கிறீர்கள்: "நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன். இவ்வளவு நேரம் என் உரை யைப் பொறுமையோடு கேட்டமைக்காக அவைக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துவதைத் தவிர நாங்கள் வேறு என்ன செய்ய முடியும். இது மன்னர்பிரான் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பல்ல." இதுதான் இங்கு கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயம். "மாறாக, அவர் களே உறுதிப்படுத்தும் கோட்பாடுகளை, பிரதமரும் வெளி விவகார அமைச்சரும் உறுதிப்படுத்தும் கோட்பாடுகளை இந்தத் திருத்தம் வலியுறுத்துகிறதே தவிர வேறல்ல." ஆக, பிரதமரின் அறிக்கையில் கண்டுள்ள கருத்துக்களுக்கும் உங்களது திருத்தத்தில் பொதிந்துள்ள கருத்துக்களுக்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை என்பதை உண்மையில் நீங்களே தெரிந்து கொண்டிருக் கிறீர்கள், இல்லையா?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* ஆம். நான் அளித்த திருத்தம் குறித்து அரசு சரியான கண்ணோட்டத்தை மேற்கொள்ளாதது துரதிர்ஷ்ட வசமானது என்று நினைத்தேன். என் திருத்தம் ஏற்கப்பட்டிருக்கு மானால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

**14,688.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதே நாளன்று நீங்கள் நிகழ்த்திய உரையிலிருந்து மற்றொரு பகுதியையும் இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அன்றைய தினம் நீங்கள் அரசுக்கு உங்களது இரண்டாவது மாற்று யோசனையையும் கூறி னீர்கள்; அதாவது, உங்கள் தீர்மானம் ஏற்கப்படாவிட்டாலும், பிரதமரின் அறிவிப்புடன் அன்று காமன்ஸ் சபையில் இந்தியா மந்திரி ஆற்றிய உரையையும் சேர்த்து வெளியிட்டால் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தீர்கள்?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* உண்மைதான்.

**14,689.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பிரதமரின் அறிவிப் புடன் காமன்ஸ் சபையில் இந்தியா மந்திரி நிகழ்த்திய உரையையும் சேர்த்து வெளியிடுவதாக இருந்தால், அந்தக் குறிப்பிட்ட விவாதத் தின்போது அரசை ஆதரித்து வாக்களிக்கத் தயாராக இருப்பதாக நீங்கள் கூறியதுதான் உங்கள் நிலை என்றால், உங்களிடமிருந்து

நான் புரிந்து கொள்ள விரும்புவது இதுதான்: இந்தக் குழுவிற்கு அளிக்கப்பட்ட வெள்ளை அறிக்கைக்கும் இந்தியா மந்திரியின் உரையுடன் இணைந்த பிரதமரின் அறிக்கைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? குழுவிற்கு அளிக்கப்பட்ட வெள்ளை அறிக்கைக்கும் காமன்ஸ் சபையில் இந்தியா மந்திரி விளக்கிக் கூறிய பிரதமரின் அறிவிப்புக்குமிடையே நீங்கள் காணும் வேறுபாட்டை எங்களுக்கு எடுத்துக் கூற முடியுமா?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* ஒரு நாடாளுமன்றத்திலோ அல்லது காமன்ஸ் சபையிலோ இருதரப்பு விவாதங்களின்போது தோன்றும் வேறுபாட்டைப் பொறுத்தவரையில், அந்த வேறுபாடு என்ன என்பதை வெளியார் கணிப்பது கடினம்; இதற்கு, எங்கள் விவாதங்களில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய, தாக்கம் உண்டு பண்ணக் கூடிய எல்லாச் சூழ்நிலைகளையும் அவர்கள் புரிந்து கொள்வது அவசியம். எனினும் நான் அளித்தத் திருத்தத்துக்கும் எங்களைப் புறக்கணித்துவிட்டு அரசு நிறைவேற்றிய தீர்மானத்துக்கும் இடையே உண்மையிலேயே மிகப் பெரிய வேறுபாடு நிலவுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. அதுவும் மிகக் கூர்மையான வேறுபாடு. ஒவ்வொரு தரப்பும் சபை உறுப்பினர்களது ஆதரவை இழந்து விடாத முறையில் தனது கருத்தை முன் வைக்கிறது. இது முற்றிலும் இயல்பே. எனினும் வேறுபாடு நீடிக்கவே செய்கிறது. அதுவும் அந்த வேறுபாடு மிக முனைப்பாகத் தெரிகிறது. எங்கள் நாடாளுமன்ற அமைப்புகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றால், நாங்கள் இன்னமும் இரு அவைகளைக் கொண்ட நாடாளுமன்ற அமைப்பைப் பெற்றிருக்கிறோம் என்பதையும், மேன்மக்கள் அவையில் (House of Lords) நடைபெறும் விவாதங்களை காமன்ஸ் சபையில் நடைபெறும் விவாதங்களுடன் இணைத்தே படிக்க வேண்டும் என்பதையும் டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் நினைவிற் கொள்ள வேண்டும் என்று அவருக்கு நான் கூறத்தேவையில்லை.

**14690.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மேன்மக்கள் சபையின் அல்லது இதர கட்சி உறுப்பினர்களின் நிலை எவ்வாறு இருந்த போதிலும் உங்கள் நிலையை மட்டுமே நான் புரிந்து கொள்ள விரும்புகிறேன், இந்தியா அமைச்சரின் உரையுடன் சேர்த்து பிரதமரின் அறிக்கை வெளியிடப்படுமானால் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்கத் தயாராக இருப்பதாக நீங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தீர்கள். இங்குப் பின்வரும் கருத்தை உங்களிடம் பணிவுடன் முன்வைக்க விரும்புகிறேன்: கூட்டு நாடாளுமன்றக் குழுவுக்கு அளிக்கப்பட்ட வெள்ளை அறிக்கைக்கும் அன்றைய தினம் காமன்ஸ் சபையில் இந்தியா அமைச்சர் விளக்கிக் கூறிய பிரதமரின் அறிக்கைக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருப்பதை நீங்கள் காண்கிறீர்களா? அப்படி வேறுபாடு இருக்குமானால், நீங்கள் மாறுபட்ட கருத்துக் கொள்வதற்கு எல்லா நியாயமும் உண்டு என்பதில் ஐயமில்லை.

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* இந்த நேரத்தில் இந்தியாவில் ஒரு கூட்டமைப்பை (சமஷ்டி) நிறுவுவதையோ, மாநிலங்களில் சட்டம் ஒழுங்கை மாற்றப்பட்ட துறையாக்குவதையோ நான் ஒருபோதும் ஆதரித்ததில்லை என்பதை டாக்டர் அம்பேத்கருக்கு உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்கு முரணான எதையும் நான் எப்போதும் கூறியதில்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தங்களிடம் மேற்கொண்டு கேட்பதற்கு எதுவும் இல்லை.

★ ★ ★ ★ ★

**14945.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு கேள்வி கேட்கலாமா?

*தலைவர்:* தாராளமாகக் கேட்கலாம்.

***14946.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* திரு. சர்ச்சில் அவர்களே, தங்களிடம் ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்க விரும்புகிறேன். பொறுப்பாட்சிக்கும் குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கும் இடையே வேறுபாடு எதையும் தாங்கள் காண்கிறீர்களா?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* ஆம், வேறுபாடு இருக்கிறது. பொறுப்பாட்சி என்பதற்குப் பல விளக்கங்கள் உள்ளன. அவற்றை நாம் நடைமுறையில் அறிந்துமிருக்கிறோம்; பார்த்துமிருக்கிறோம். பொறுப்பாட்சி என்பது மிக முக்கியமான பணிகளை ஒரு மாநில அல்லது உள்ளாட்சி அமைப்பின் விருப்புரிமைக்கு மாற்றுவதைக் குறிக்கலாம் அல்லது சட்டமன்றத்துக்கு அமைச்சர்கள் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருப்பது போன்ற சட்ட நுணுக்க மொழியில் குடியேற்ற நாட்டு அல்லது காலனி விவகார அலுவலகங்களில் புரிந்து கொள்ளப்படுகின்ற பல்வேறு படி நிலைகளில் அமைந்த பொறுப்பாட்சியையும் அது குறிக்கலாம்; எனினும் எங்களது தொலைதூரக் குடியேற்ற நாடுகள் மற்றும் பேரரசின் வரலாற்றில் ''பொறுப்பாட்சி'' என்னும் சொல்லமைவுக்குள் அடங்கக் கூடிய துல்லியமான அமைப்பு முறைகளில் எண்ணற்றப் படிநிலைகள் உள்ளன.

★ ★ ★ ★ ★

** **15147.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வயது வந்தோர் வாக்குரிமை அளிக்கப்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஏன்?

---

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II சி, அக்டோபர் 25, 1933, பக்கம் 1883.

** மேற்படி, பக்கம் 1849.

*சர் வின்ஸ்டன் சர்ச்சில்:* ஏனென்றால் அதை நடைமுறைச் சாத்தியமற்றது என்று நான் கருதுகிறேன்.

## (18)

## லெப்டினெண்ட் கர்னல் சர் ஹென்றி கித்னே, எம்.எல்.ஏ., ஐ.எம்.எஸ் (ஓய்வு) ஆங்கிலோ-இந்திய மற்றும் இந்தியாவில் குடியமர்ந்துள்ள ஐரோப்பியர்கள் சங்கத்தின் சார்பில்

* *16241. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உங்கள் சமூகத்துக்கு என்ன நேருமோ என்று நீங்கள் அச்சம் கொண்டிருப்பதை உங்கள் அறிக்கையிலிருந்து என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இதர பல சிறுபான்மையினரும் உங்களைப் போன்றே அச்சம் அடைந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே, இந்தக் கேள்வியை உங்களிடம் முன்வைக்க விரும்புகிறேன்: இந்தியாவிலுள்ள பல்வேறு சமூகங்களின் தார்மிக, பொருளாயத நிலைமை குறித்து ஆண்டுதோறும் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை அளிப்பதற்குச் சட்டரீதியாகக் கடமைப்பட்ட யாரேனும் ஓர் அதிகாரியோ அல்லது ஏதேனும் ஒரு துறையோ இந்தியாவின் எதிர்கால மத்திய அரசில் இருப்பதற்கு அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்டால், அது நீங்கள் கருத்தில் கொண்டுள்ள உங்கள் நோக்கத்திற்கு எவ்வகையிலேனும் உதவியாக இருக்குமா? பல்வேறு மாநிலங்களின் நிர்வாகத்தில் உங்களது பொருளாயத நலன்கள் பாதிக்கப்படக் கூடிய எதைப் பற்றியும் நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு இந்த யோசனை உங்கள் சமூகத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

*சர் ஹென்றி கித்னே:* சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு ஒரு தொலைதூர நடவடிக்கை என்ற முறையில் இந்த யோசனைக்கு என் முழு ஆதரவு உண்டு. இருப்பினும் இதற்கு ஒரு தொடக்க நடவடிக்கையாக சிறுபான்மையினர் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றனர்; அதாவது யாரோ ஒருவர் ஆண்டுதோறும் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை அளித்து அதன் மூலம் கிட்டும் பாதுகாப்புக்குப் பதிலாக நடைமுறை ரீதியிலான பாதுகாப்பையே அவர்கள் கோருகின்றனர்.

*16242. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* என் கருத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் கூறும் யோசனை உங்கள் கோரிக்கைக்கு ஒரு மாற்றல்ல; மாறாக அது உங்கள் கோரிக்கையைப் பலப்படுத்தக் கூடியதாக இருக்கலாமல்லவா?

*சர் ஹென்றி கித்னே:* நீங்கள் கூறுவது உண்மைதான்.

---

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II சி, நவம்பர் 10, 1933, பக்கம் 1996.

**16243.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதிகாரம் துஷ்பிர யோகம் செய்யப்படக் கூடிய சாத்தியக் கூறுகளை அம்பலப்படுத் தும் இந்த வாய்ப்பேகூட அல்லது முறையேகூட இந்த அத்து மீறலைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு தடுப்பு நடவடிக்கையாக அமையக் கூடும் என்ற என் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள் கிறீர்களா?

*சர் ஹென்றி கித்னே:* பல்வேறு சமூகத்தினருக்கும் கேடு விளைவிக்கக் கூடிய எதையும் நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு இது ஒரு வழியாக இருக்கும் என்று நான் உறுதியாக கருதுகிறேன்.

**16244.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இது உங்கள் கருத்து மட்டுமல்ல, இதர பலருடைய கருத்துமாகும்.

*சர் ஹென்றி கித்னே:* எல்லாச் சிறுபான்மையினரின் கருத்து என்றும் கூறலாம்.

*திரு. ஜாஃபருல்லா கான்:* இதன் பேரில் நாடாளுமன்றம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பல்வேறு அரசுகளின் நட வடிக்கைகளை நாடாளுமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் தங்கள் பொறுப்பிலுள்ள பல்வேறு சிறுபான்மையினர் தொடர் பாகத் தமக்குள்ள கடமைப்பொறுப்புக்களை பல்வேறு அரசுகள் எவ்வாறு நிறைவேற்றி வருகின்றன என்பதை தலைமை ஆளுநர் மட்டுமன்றி, நாடாளுமன்றமும் தெரிந்து கொள்ளும்.

*சர் ஹரி சிங் கௌர்:* இதை மாநிலத் தன்னாட்சி என்று கூறு வீர்களா?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம், நிச்சயமாக.

## (19)

### திரு. ஜே. சி. பிரெஞ்ச், திரு. எஸ். எச். மில்ஸ் இந்தியக் காவல்துறை சார்பில்

**16904.** * *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* திரு. மில்ஸ் அவர் களே இந்த விஷயத்தில் உங்கள் கருத்தைத் தெரிந்து கொள்ள நான் மிகவும் ஆர்வமுடன். இருப்பதால் ஒரே ஒரு கேள்வியை மட்டும் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். உத்தேச அரசியல் சட்டத்தின்கீழ் வங்காளத்தில் முஸ்லீம்களும் ஒடுக்கப்பட்ட மக்க

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II சி, நவம்பர் 13, 1933, பக்கம் 2043.

ளும் காங்கிரசின் செல்வாக்கின் கீழ் இருப்பார்கள் என்று ஓரளவு உறுதிப்படக் கூறியிருக்கிறீர்களே?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* அவர்கள் காங்கிரசின் செல்வாக்கின் கீழ் வருவதற்கு எல்லா வாய்ப்பும் உண்டு என்று கருதுகிறேன் — குறிப்பிட்ட சதவிகிதத்தனர் அவ்வாறு வரலாம்.

**16,905.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒடுக்கப்பட்ட மக்களில் சுமார் 20 சதவீதத்தினர் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள்?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* ஆம், உண்மைதான்.

**16,906.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்போது பயங்கர வாத இயக்கத்திடம் அனுதாபம் கொண்டவர்கள் யாரும் ஒடுக்கப் பட்ட வகுப்பினர்களிலோ அல்லது முஸ்லீம்களிலோ இருக்கிறார் களா?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏராளமானோர் பயங்கரவாதிகள் என்ற முறையில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

**16,907.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவர்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* நாம் கேட்டறியாத சமூகத்தினர் சிலரும், அநேக சஹாக்களும் இவர்களில் அடங்குவர்; இதல்லாமல், மித்ன பூரைச் சேர்ந்த அநேக ஒடுக்கப்பட்ட வகுப்பினர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் — முக்கியமாக மித்னபூர் நகரை இவ்வகையில் குறிப்பிட வேண்டும்.

**16908.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சஹா என்பவர்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஷெட்யூல்டு சாதியினர் இல்லை அல்லவா?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* இல்லை. மித்னபூர் மாவட்டத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஏராளமானோர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

**16909.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்போது மற்றொரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்: இது தொடர்பாக உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா? வங்காளத் தில் நாமசூத்திரர்கள் போன்ற ஒரு பெரிய சமூகத்தினர் பயங்கர வாத இயக்கத்துடன் எவ்வகையிலேனும் சம்பந்தப்பட்டிருக்கிறார் களா என்பதை உங்கள் அனுபவத்திலிருந்து கூற முடியுமா?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* ஆம், சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

**16910.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அடுத்து உங்களிடம் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளின்படி, வங்களாத்தைச் சேர்ந்த

சிறுபான்மையினருக்குத் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* ஆம், தெரியும்.

**16911.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தனித் தொகுதிகள் இருந்தாலும் இந்த சமூகத்தினர்களிடமிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் காங்கிரஸ் செல்வாக்குச் செலுத்தும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* இது பெரிதும் சாத்தியமே என்று நினைக்கிறேன்.

**16912.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அந்தச் செல்வாக்கு எவ்விதம் சாத்தியமாகும்?

*திரு. எஸ். எச். மில்ஸ்:* பயங்கரவாதிகள் காங்கிரசுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இதனால் அந்த மாநிலத்தில் காங்கிரஸ் பற்றி அச்சம் நிலவுகிறது. இந்தப் பயம் சிறுபான்மையினர்மீது காங்கிரஸ் ஆதிக்கம் செலுத்துவதற்குத் துணை புரியக் கூடும்.

## (20)

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்திருத்தக் கூட்டுக் குழுவின் முன் இந்தியா மந்திரியின் சாட்சியம்

*** ரைட் ஹானரபிள் சர் சாமுவேல் ஹோர் பிட்., ஜி. பி. இ., சி. எம். ஜி., எம். பி., சர் மால்கம் ஹெய்லி, ஜி. சி. எஸ். ஐ., ஜி. சி. ஐ. எஃப்., சர் பின்லேட்டர் ஸ்டுவர்ட், கே. சி. பி., கே. சி. ஐ. எஃப்., சி. எஸ். ஐ.**

**6394.** ** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 82, மற்றும் 95-ஆவது யோசனைகளின்படியேகூட, சட்ட மன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், தமது சட்டத்தைச் சபையில் முன்வைக்க வேண்டிய அவசியமில்லை என்று ஆளுநர் கருதினால் அவ்வாறே முன்வைக்காதிருக்கலாம் என்பது உண்மையா?

*சர் சாமுவேல் ஹோர்:* அது முற்றிலும் உண்மை, இந்த விஷயத்தில் ஆளுநர் தமது விருப்பம்போல் நடந்து கொள்ள முழு அதிகாரம் உண்டு.

**6395.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆளுநருக்கு முழு விருப்புரிமை இருக்கிறதா?

---

* சர் சாமுவேல் ஹோர் இந்தியா மந்திரியாகவும், சர் மால்கம் ஹெய்லி ஐக்கிய மாகாணங்களின் ஆளுநராகவும், சர் பின்லேட்டர் லண்டன் இந்தியா அலுவலகத்தில் நிரந்தரத் துணைச் செயலாளராகவும் இருந்தனர்.

** சாட்சியக் குறிப்புகள், தொகுதி IIபி, 14 ஜூலை 1933 பக்கம் 729.

*சர் சாமுவேல் ஹோார்:* சட்ட மன்றத்திற்கு வெளியே அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கவோ, சட்டம் இயற்றவோ அவருக்கு முழு உரிமை இருக்கிறது.

★ ★ ★ ★ ★

**6440.** **டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தப் பிரச்சினை குறித்து மேலும் விவாதிக்க விரும்புகிறேன். இது சூழ்நிலையைப் பொறுத்து அமைந்திருக்கும் என்று நீங்கள் கூறினீர்கள். சர் தேஜ் பகதூர் சாப்ரு கேட்ட கேள்வி இதுவல்ல. அவர் கேட்ட கேள்வி இதுதான்: ஆளுநர் தலையிட்டு, ''இல்லை, இந்தச் சட்டம் அமைதியையும் சட்ட ஒழுங்கையும் சீர்குலைக்கும், இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்த நான் அனுமதிக்க மாட்டேன்'' என்று கூறுமளவுக்கு இந்த விதி அவருக்கு விரிவான அதிகாரத்தை அளிக்கிறதா?

*சர் தேஜ்பகதூர் சாப்ரு:* இது இம்மாகாணத்தில் அமைதிக்கும் சட்டம் ஒழுங்குக்கும் கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று ஆளுநர் உறுதியாக நம்பும்போது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காகத்தான் இந்த விதி அவருக்கு விரிவான அதிகாரத்தை வழங்குகிறதேயன்றி, ஏதேனும் ஒரு வகுப்பினரின் நலன்களுக்கு இந்தச் சட்டம் விரும்பத்தக்கதல்ல என்று அவர் கருதுகிறார் என்பதற்காக இந்த விரிவான அதிகாரத்தை அவருக்கு வழங்கவில்லை.

**6441.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த முடிவுக்கு 'அவர் வந்து விட்டால் அப்போது இந்த விதி அவர் பின்வருமாறு கூறுவதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கிறது: ''இத்தகைய சட்டம் பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு உங்களை அனுமதிக்க மாட்டேன்''?

*சர் சாமுவேல் ஹோார்:* ஐக்கிய மாகாணங்களில் விவசாயிகள் பிரச்சினையாலும் குத்தகைப் பிரச்சினையாலும் மிகக் கடுமையான குழப்பம் ஏற்பட்டது. இந்த விதியை அங்குச் செயல்படுத்துவது அவசியம் என்று நான் நினைக்கும் அளவுக்கு அங்குப் பயங்கர நிலைமை உருவாயிற்று. மாநிலத்தின் சில பகுதிகளில் குத்தகைதாரர்கள் பெருமளவில் கலகம் செய்யக் கூடிய அபாயம் ஏற்பட்டதால்தான் எனக்கு இந்த எண்ணம் உருவாயிற்று. சட்ட மன்ற நடவடிக்கையால் ஏதேனும் ஒரு வகுப்பினர் பாதிப்புக்குள்ளாகி இருந்தால், அப்போது இந்த விதியைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாகி இருக்காது.

★ ★ ★ ★ ★

**6533.** ***டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாநிலங்களில் இரண்

* மேற்படி. பக். 735.

** மேற்படி. பக். 747.

டாவது சபைகளை அமைப்பது குறித்த எந்தக் கேள்விகளையும் நான் ஒதுக்கி வைக்க வேண்டும்' என்று இந்தியா மந்திரி விரும்புகிறாரா?

*சர் சாமுவேல் ஹோர்:* இரண்டாவது சபைகளை அமைப்பதைப் பொறுத்தவரை (உறுப்பினர்கள்) வாக்குரிமைப் பிரச்சினையோடு சேர்த்து அது பற்றி விவாதிக்கலாம் என்று யோசனை கூறுகிறேன்.

6534. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த வாக்குரிமை பிரச்சினை இந்தக் கட்டத்தில் ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமா?

*சர் சாமுவேல் ஹோர்:* குழு என்ன நினைத்த போதிலும் வாக்குரிமைப் பிரச்சினைக்குப் பின்னால் வரலாம் என்றுதான் நினைக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியா அமைச்சரிடம் நான் எந்தக் கேள்வியையும் கேட்கப் போவதில்லை.

*தலைவர்:* இந்தியா மந்திரியின் யோசனை நடைமுறைக்கு உகந்தது என்று கருதுகிறேன். இந்தக் கட்டத்தில் நீங்கள் எந்தக் கேள்விகளையும் கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

6535. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இரண்டாவது சபையின் இயைபு பற்றிக் கேள்வி கேட்கலாம் என்று இருக்கிறேன். அதைப்பற்றிப் பின்னால் விவாதிக்கலாமா?

*சர் சாமுவேல் ஹோர்:* அதுதான் நல்லது.

6536. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சென்ற முறை கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது, மாநிலங்களில் மேல் சபை, கீழ்ச்சபை ஆகிய இரண்டு சபைகளிலிருந்துமே மந்திரிகளை நியமிக்கலாம் என்று நீங்கள் கூறினீர்கள் இல்லையா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம்.

6537. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, இரண்டாவது சபையில் 10 நியமன உறுப்பினர்கள் இருப்பார்கள் என்று நீங்கள் கூறியது நினைவிருக்கும்.

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம்.

6538. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மேலவையில் அமரப் போகும் இந்த 10 நியமன உறுப்பினர்களும் அமைச்சர்களாவதற்குத் தகுதியுடையவர்கள்தானா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம், இவர்களையும் மற்றவர்களையும் நான் பாகுபடுத்திப் பார்க்க முடியாது.

6539. *டாக்ட பி. ஆர். அம்பேத்கர்:* நியமன உறுப்பினர்கள் அமைச்சர்களாக முடியும் என்று கூறுகிறீர்களா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம், நிச்சயமாக; இப்படி இருக்க வேண்டும் என்றுதான் நான் எண்ணியுள்ளேன்.

6540. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாகாண சட்டமன்றத்தில் நியமன உறுப்பினராக இருக்கும் எவரும் அமைச்சராவதற்குத்

தகுதிபெற்றவர்களல்ல என்று இப்போதைய இந்திய அரசுச் சட்டத்தில் ஒரு திட்டவட்டமான விதி இருக்கிறதே?

*சர் சாமுவேல் ஹோர்:* இதை நான் அம்பேத்கரிடமிருந்துதான் தெரிந்து கொள்கிறேன்.

6541. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் கூறுவதில் ஏதேனும் தவறு இருந்தால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்?

*சர் சாமுவேல் ஹோர்:* சரி.

6542. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆக, மேல் சபையிலுள்ள நியமன உறுப்பினர்களை புதிய அரசில் அமைச்சர்களாவதற்கு அனுமதிப்பதன் மூலம் உண்மையிலேயே நீங்கள் ஒரு மிக முக்கியமான மாற்றத்தைச் செய்கிறீர்கள் என்று சொல்லுங்கள்?

*சர் சாமுவேல் ஹோர்:* அது முற்றிலும் வேறுபட்டதொரு வகையைச் சேர்ந்த அரசாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

6543. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இதற்கான காரணங்களைப் பற்றி ஒன்றும் ஆராயப் போவதில்லை. மாறாக, உண்மை விவரங்களைத்தான் கூறுகிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்புடையது,. அமைச்சரவையின் விருப்பத்துக்கு மாறாக எந்த ஓர் அமைச்சரையும் திணிக்கும் நோக்கம் ஏதும் இருக்க முடியாது என்பதை எப்போதும் கருத்திற்கொண்டு, ஆளுநர் சுதந்திரமாகச் செயல்படும் அதிகாரத்தை அவருக்கு வழங்குவது பற்றி எவ்வளவோ சொல்ல முடியும் என்று நினைக்கிறேன்.

★ ★ ★ ★ ★

6549. **சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* அமைச்சர்களின் நியமன விஷயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் நியமன உறுப்பினர்களுக்கும் இடையே இப்போதைய இந்திய அரசாங்கச் சட்டம் வேறுபாடு காண்கிறது என்பதை சர் சாமுவேல் ஒப்புக் கொள்கிறாரா?

*சர் மால்கம் ஹெய்லி:* இது எனக்குப் புதிய தகவலாக இருக்கிறது. டாக்டர் அம்பேத்கரிடமிருந்துதான் இதைத் தெரிந்து கொண்டேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அமைச்சராக நியமிக்கப்படும் ஒருவர் ஆறு மாதங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக ஆக வேண்டும் என்ற பொருளில்தான் இதைக் கூறினேன்.

*சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* அமைச்சர்களாக நியமிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் நியமன உறுப்பினர்களுக்கும் இடையே இந்திய அரசுச் சட்டம் எத்தகைய வேறுபாட்டையும் கடைப்பிடிப்பதாக நான் கருதவில்லை. அந்தச் சட்டத்திலுள்ள இது தொடர்பான பகுதி 52-ஆவது பகுதியாகும்.

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-B, ஜூலை 14, 1993, பக். 748.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவ்வாறு நியமிக்கப்படும் அமைச்சர் தன்னைத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினராக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

**6550.** *சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* அமைச்சர்கள் நியமன விஷயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் நியமன உறுப்பினர்களையும் இந்திய அரசுச் சட்டம் பாகுபடுத்திப் பார்க்கிறது என்று டாக்டர் அம்பேத்கர் சர் சாமுவேலிடம் கூறியதாக நினைத்தேன்.

*சர் மால்கம் ஹெய்லி:* ஓர் அமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக ஆனாலொழிய அவர் ஆறு மாதங்களுக்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது என்ற பொருளில்தான் இந்திய அரசுச் சட்டம் இந்த வேறுபாட்டைக் கடைப்பிடிக்கிறது.

**6551.** *சர் தேஜ்பகதூர் சாப்ரூ:* ஏற்கெனவே ஒரு நியமன உறுப்பினர் இருந்தால் அவரை அமைச்சராக நியமிப்பதை எதுவும் தடைசெய்ய முடியாது.

*சர் மால்கம் ஹெய்லி:* நீங்கள் கூறுவதுதான் சரி.

**6552.** *சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறதா?

*சர் மால்கம் ஹெய்லி:* ஆம்.

*சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* நான் புரிந்து கொண்டவரைச் சட்டம் இவ்வாறுதான் கூறுகிறது: எந்த ஒரு வெளி நபரையும் அமைச்சராக ஆளுநர் நியமிக்கலாம். ஆனால் அந்த வெளி நபர் ஆறு மாதத்திற்குள் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதே போன்று ஏற்கெனவே அவையிலுள்ள நியமன உறுப்பினர்கள் குழுவிலிருந்து ஒருவரை அமைச்சராக ஆளுநர் நியமிக்கலாம். இங்கு சட்டம் எத்தகைய. வேறுபாட்டையும் காண்பதில்லை.

**6553.** *திரு. ஜாஃபருல்லா கான்:* ஒரு நியமன உறுப்பினர் அமைச்சரான பிறகு கடைசிவரை அவர் நியமன உறுப்பினராகவே இருந்து வரலாமா அல்லது அவர் தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமா?

*சர் சாமுவேல் ஹோர்:* இல்லை. இது தொடர்பாக சட்டம் தெளிவாக இருக்கிறது என்றே நினைக்கிறேன். ஒரு நியமன உறுப்பினர் வேறு எவரையும் போன்றே நடத்தப்படுகிறார்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலொழிய ஆறு மாதத்திற்குப் பிறகு அமைச்சராக நீடிக்க முடியாது.

★ ★ ★ ★ ★

***6558.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அந்தப் பகுதியை நான் வாசிக்கட்டுமா?

---

* மேற்படி, பக்கங்கள் 749-750.

சர் சாமுவேல் ஹோரர்: இப்போதுள்ள நிலைமை சம்பந்தமாக அது உண்மையிலேயே மிக முக்கியமானதா?

**6559.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: முக்கியமானது என்றே கருதுகிறேன். ஏனென்றால் உண்மையான நிலைமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பகுதி 52, துணைப் பகுதி 2 பின்வருமாறு கூறுகிறது: ''எந்த அமைச்சரும் சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்தாலொழிய அவர் ஆறு மாதங் களுக்கு மேல் பதவியில் நீடிக்கக் கூடாது.'' ஒரு நியமன உறுப் பினர் தொடர்ந்து அமைச்சராக இருக்கலாம் என்று இந்தச் சட்டம் கூறவில்லை என்பதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆனால் வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனை கள் ஏற்கப்படுமானால், இரண்டாவது அவையில் உள்ள ஒரு நியமன உறுப்பினர் அமைச்சராக உரிமை உண்டு. அமைச்சரவை யின் நியமனத்தைப் பொறுத்தவரையில், மாநில அரசியலமைப்பு குறித்த துணைக் குழுவின் பரிந்துரையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவர்கள் கூறியிருப்பதாவது: ''இந்தப் பணியை நிறைவேற்றும் போது, சட்டமன்றத்தில் மிகப் பெரிய ஆதரவைப் பெற்றுள்ள உறுப்பினரை சாதாரணமாக ஆளுநர் அழைக்க வேண்டும், தமது அனுமதிக்காக அமைச்சர் களின் எண்ணிக்கையையும் அவர்களுடைய பெயர்களையும் அளிக்கும்படி ஆளுநர் அவரைக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று இந்தத் துணைக் குழு கருதுகிறது.'' அவர் தம்முடைய அமைச்சர்களைத் தெரிவு செய்வதில் மிகப்பெரிய முயற்சி எடுத் துக் கொள்ள வேண்டும் என்று 6,7-ஆவது பதது கூறுகிறது— மாநில அரசியலமைப்புக் குழு செய்துள்ள பரிந்துரையிலிருந்து இது வெகுதூரம் விலகிச் செல்கிறது என்று கருதுகிறேன்?

சர் சாமுவேல் ஹோரர்: இதில் எத்தகைய பிறழ்வும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ''சாதாரணமாக'' என்ற சொல்லைக் குழு பயன்படுத்தியுள்ளது. சாதாரணமாக நடைபெறுவதைத்தான் அது குறிக்கிறது.

**6560.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: கூட்டுப் பொறுப்பைப் பேணி வளர்ப்பதற்கு, அமைச்சரவை அமைப்பதில் அவர் ஒரு குறிப்பிட்ட வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கடமைப் பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்துவது அவசியம் என்று நீங்கள் கருதவில்லையா?

சர் சாமுவேல் ஹோரர்: டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடும் வட்ட மேசைக் குழு அவ்வாறு நினைக்கவில்லை.

**6561.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அவ்வாறுதான் அது நினைத்தது என்று நான் எண்ணினேன்.

சர் சாமுவேல் ஹோரர்: ''சாதாரணமாக'' அவர்கள் அவ்வாறு நினைத்தார்கள் என்று கூறி சற்று முன்னர்தான் ஒரு மேற் கோளைப் படித்தீர்கள்.

*6562. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அல்லது அதை அவர்கள் செய்ய வேண்டும்—''பெருமுயற்சி எடுத்துக் கொண்டல்ல''?

*சர் சாமுவேல் ஹோர்:* இது சொற்கள் தொடர்பான பிரச்சினை.

*6563. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் கேட்க விரும்பும் அடுத்த கேள்வி 104-ஆவது விதியின்படி அவசரச் சட்டங்கள் பிறப்பிப்பதற்கு அமைச்சர்களுக்குள்ள அதிகாரம் பற்றியதாகும். இங்கு ஒன்றை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்: இத்தகைய ஒரு விதியை அரசியல் சட்டத்திலேயே சேர்க்க வேண்டிய அவசியம் என்ன? மாநில சட்டமன்றத்திலுள்ள ஓர் அமைச்சரவை 1926 ஆண்டு அவசரச் சட்டம் போன்ற ஒன்றை சட்டமன்றத்திலேயே இயற்ற முடியாதா? சட்டமன்றத்தில் இயற்றப்பட்டச் சட்டங்களிலிருந்து அது தனது அதிகாரங்களைப் பெற இயலாதா? 104-ஆம் எண் விதியைப் பற்றித்தான் இங்குப் பேசுகிறேன். ஒரு குறிப்பிட்ட நெருக்கடி நிலைமையில் செயல்படுவதற்குத் தேவையான அதிகாரங்களளத் தங்களுக்கு வழங்கக் கூடிய ஒரு சட்டத்தை மாநில அமைச்சரவை மாநில சட்டமன்றத்தில் இயற்ற இயலாதா?

*சர் சாமுவேல் ஹோர்:* சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறாத போது, அவசர நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் இன்றியமையாத முறையில் பெற்றிருக்க வேண்டிய அதிகாரம் இது; அதிலும் குறிப்பாகத் தொலை தூரத்துக்கு விரிந்து பரந்திருக்கும் இந்தியா போன்ற ஒரு நாட்டில், சட்டமன்றத்தைக் கூட்டுவதற்குச் சிறிது காலம் பிடிக்கக்கூடிய நிலைமையில் இத்தகைய அதிகாரம் அவசியம் என்று கருதுகிறேன்.

*6564. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தாங்கள் சமாளிக்க வேண்டிய நெருக்கடி நிலைமைகளை நிர்ணயித்துக் கூறும் ஒரு சட்டத்தை மாநில அமைச்சரவை மாநில சட்டமன்றத்தில் இயற்றலாம், மாநில சட்டமன்றம் அமைச்சரவைக்குத் தேவையான அதிகாரங்களை அளிக்கலாம், அப்படியிருக்கும் போது அரசியல் சட்டத்திலேயே இத்தகையதொரு விதியை இடம்பெறச் செய்ய வேண்டிய தேவை என்ன?

*சர் சாமுவேல் ஹோர்:* ஏனென்றால் ஓர் அரசுக்கு இன்றியமையாததாக இருக்க வேண்டிய அதிகாரமாக இதை நாங்கள் கருதுகிறோம். அரசியலமைப்புப் பணியில் நாங்கள் ஈடுபட்டிருக்கும் நிலைமையில், அரசியலமைப்புச் சட்டத்தில் இத்தகைய அதிகாரத்தைச் சேர்த்தாக வேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இது ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சரவைக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் அதிகாரமாகும். இயல்பாகவே கூறவேண்டுமானால், நெருக்கடி நிலையோ, இல்லையோ ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சரவைத் தனக்குத் தேவையான அதிகாரங்களைத் தான் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ள சட்டமன்றத்திடமிருந்தே பெற வேண்டும்.

*லார்டு எஸ்டேஸ் பெர்சி:* இந்த நாட்டில் கடந்த காலத்தில் சட்டத்தின் எத்தகைய துணையுமின்றியே அமைச்சர்கள் அடிக்கடிப் பயன்படுத்திவந்த ஓர் அதிகாரத்தை 1920-ஆம் ஆண்டுச் சட்டம் ஒழுங்குப்படுத்த மட்டுமே செய்தது என்பதை டாக்டர் அம்பேத் கருக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன். பின்னால் நாடாளுமன்றத் தின் சட்ட ரீதியான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் ஓர் அமைச்சரவை அவசர ஆணையைப் பிறப் பிப்பது இந்த நாட்டில் எப்போதுமே ஒரு நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் கேட்க விரும்பியது இவ்வளவுதான்.

★ ★ ★ ★ ★

6870. **சர் ஹூபர்ட் கார்:* தலைமை ஆளுநருக்குள்ள (கவர் னர் -ஜெனரல்) விருப்புரிமை அதிகாரத்தைப் பற்றி 44-ஆவது விதி பின்வருமாறு கூறுகிறது: ''எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒரு மசோதாவை அல்லது ஒரு விதியை அறிமுகப்படுத்துவதோ அல்லது. அறிமுகப்படுத்த உத்தேசித்திருப்பதோ அல்லது ஒரு மசோதா வுக்குத் திருத்தம் கொண்டுவருவதோ அல்லது திருத்தம் கொண்டு வர எண்ணியிருப்பதோ இந்தியாவின் அமைதிக்கும் ஒழுங்குக்கும் ஏற்படக் கூடிய கடுமையான அச்சுறுத்தலைத் தடுப்பதற்குத் தமக்குள்ள ''விசேடப் பொறுப்பை'' நிறைவேற்றுவதைப் பாதிக் கும் என்று தலைமை ஆளுநர் கருதினால் அந்த மசோதா, விதி அல்லது திருத்தம் தொடர்பாக மேற்கொண்டு எத்தகைய நடவடிக் கையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அவர் ஆணையிட லாம்.'' இந்தியாவின் அமைதிக்கும் ஒழுங்குக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் போது அவருக்குள்ள விசேடப் பொறுப்பை நிறைவேற் றும் போதுதான் இது நடைபெறும் என்று நான் புரிந்து கொண் டிருக்கிறேன். அவருக்குள்ள இதர விசேடப் பொறுப்புகள் அச்சுறுத்தலுக்குள்ளாகும் போதும் இத்தகைய அதிகாரங்கள் அவ ருக்கு உண்டா?

*சர் சாமுவல் ஹோார்:* இல்லை, நான் அப்படி நினைக்க வில்லை.

6871. *சர் ஹூபர்ட் கார்:* உதாரணமாக (பி): ''கூட்டமைப் பின் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் நன்மதிப்பையும் பாது காப்பது'' போன்ற விஷயங்களில்?

*சர் சாமுவேல் ஹோார்:* இல்லை, அமைதிக்கும் ஒழுங்குக்கும் கடுமையான அச்சுறுத்தல் ஏற்படுவது தொடர்பான விசேடப் பொறுப்புக்கு மட்டும்தான் இது பொருந்தும்.

---

* சாட்சியக் குறிப்புகள் தொகுதி II B. 18, ஜூலை 1933, பக். 784.

*சர் மால்கம் ஹெய்லி:* இதற்கான காரணத்தை சர் ஹூபர்ட்டுக்கு என்னால் தரமுடியும் என்று நினைக்கிறேன். இது, பிரிட்டிஷ் இந்தியாவில் பாதுகாப்பையும், அமைதியையும் பற்றி மட்டுமே குறிக்கும் இப்போதைய சட்டத்திலுள்ள 67 (2ஏ) ஆவது பிரிவின் ஒரு மறுபகர்ப்பேயாகும்; கிட்டத்தட்ட அதே சொற்களிலேயே அது திரும்பவும் கூறப்பட்டுள்ளது.

6872. *சர் ஹூபர்ட் கார்:* அமைதி மற்றும் ஒழுங்கை தவிர இதர விஷயங்களில் தலைமை ஆளுநருக்குள்ள பொறுப்புகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலைத் தடுத்து நிறுத்த அவருக்கு இந்த அதிகாரத்தை வழங்க வேண்டிய தேவையில்லை என்று கருதப்பட்டதா?

*சர் பின்லேட்டர் ஸ்டூவர்ட்:* அப்படி இல்லை. அவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு தமது ஒப்புதலை அளிக்க அவர் மறுக்க முடியும்.

6877. *சர் ஹூபர்ட் கார்:* ஆனால் அவரால் விவாதத்தை நிறுத்த முடியாதல்லவா?

*சர் பின்லேட்டர் ஸ்டூவர்ட்:* முடியாது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கொள்கை சம்பந்தப்பட்ட கேள்விகளை இந்தியா மந்திரியிடம் கேட்க விரும்புகிறேன்.

★ ★ ★ ★ ★

7016. **டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* திரு. மார்கன் ஜோன்ஸ் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது காலத்துக்கும் வேகத்துக்கும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட எந்த அரசியல் நிபுணரும் இந்த நாட்டில் இல்லை என்று நீங்கள் கூறினீர்கள். இது உண்மைதானா?

*சர் சாமுவேல் ஹோரா்:* ஆம்.

7017. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் இந்திய அரசியலமைப்பின் முடிவானக் குறிக்கோள் குடியேற்ற நாட்டு அந்தஸ்து தான் என்ற ஒரு பொதுவான, உடன்பாடான கருத்து நிலவுகிறது என்று நினைக்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோரா்:* இவ்வாறுதான் அடிக்கடிக் கூறப்பட்டு வந்திருக்கிறது.

7018. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியானால் முடிவான குறிக்கோள் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் உண்மையில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்று சொல்லுங்கள்?

*சர் சாமுவேல் ஹோரா்:* ஆம். அப்படித்தான் சொல்ல வேண்டும்.

---

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II B, ஜூலை 18, 1933, பக்கங்கள் 797-805.

7019. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்போது உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: இதையெல்லாம் கருத்திற் கொண்டு, காலம் மற்றும் வேகம் தொடர்பான பிரச்சினையைச் சூழ்நிலைகள் தீர்மானிக்க விட்டுவிட்டு, இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்துடையதாக இருக்கும் என்று இந்திய அரசின். அரசியல் சட்ட முன்னுரையில் குறிப்பிட நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

*சர் சாமுவேல் ஹோர்:* நாடாளுமன்றம் இயற்ற வேண்டிய ஒரு சட்டத்தில் எது இருக்கும், எது இருக்காது என்று இப்போதே என்னால் வாக்குறுதி அளிக்க முடியுமென்று நான் நினைக்கவில்லை. நல்ல காரணங்களுக்காகவோ, கெட்ட காரணங்களுக்காகவோ நாடாளுமன்றச் சட்டங்களின் முன்னுரைக்கு எதிரான கருத்தை நான் கொண்டிருக்கும் நிலைமையில், டாக்டர் அம்பேத்கரின் கேள்விக்கு 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ பதிலளிக்க இயலாதவனாக இருக்கிறேன். இது குழு ஆராய வேண்டிய விஷயம். எவ்வகையிலும் இதனைக் கோட்பாடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையாக நான் கருதவில்லை; இதை முக்கியமாக விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாகவே கருதுகிறேன். வெளித்தோற்றத்தைக் கொண்டு மட்டுமே மதிப்பிடும் போது, முன்னுரைகளில் இவ்விதம் பொதுவான உறுதிமொழிகளை அளிப்பதை நான் எதிர்க்கிறேன்.

7020. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு நான் கூற விரும்புவது இதுதான்: இது இப்போது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினை அல்ல; இந்திய மக்களிடம் இது மிகுந்த நம்பிக்கையை ஊட்டும் என்ற காரணத்தால் இந்திய அரசுச் சட்டத்தின் முன்னுரையில் இதனைச் சேர்ப்பது விரும்பத்தக்கதாக இருக்கும் அல்லவா?

*சர் சாமுவல் ஹோர்:* இந்தப் பிரச்சினையில் டாக்டர் அம்பேத்கர் கூறியதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

7021. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உங்களிடம் நான் அடுத்தபடியாகக் கேட்க விரும்பும் கேள்வி கூட்டமைப்பை (சமஷ்டி) தொடங்கும் நாள் பற்றியதாகும்: கூட்டமைப்பில் சமஸ்தான மன்னர்கள் சேருவது தொடர்பாக சில நிச்சயமற்ற நிலைமைகள் நிலவுவதன் காரணமாக, கூட்டமைப்பைத் தொடங்கிவைக்கும் நாளை நிர்ணயிப்பது விரும்பத் தக்கதல்ல என்று கருதுகிறேன். இதற்கு நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். இது நான் என் சொந்த முறையில் கூறும் யோசனையே ஆகும். சமஸ்தான மன்னர்களுக்காகக் காத்திராமல் நீங்கள் சமஷ்டியைத் தொடங்கும் பணியில் ஈடுபடுங்கள். அதில் வைசிராயால் அல்லது தலைமை ஆளுநரால் நியமிக்கப்பட்ட ஒரு கூட்டணியை அமையுங்கள். அந்தக் கூட்டணி அதிகாரிகளைக் கொண்டதாகவோ அல்லது அதிகாரச் சார்பற்றவர்களைக் கொண்டதாகவோ இருக்கலாம்; ஓரளவுக்கு அதிகாரிகளைக்

கொண்டதாகவும் ஓரளவுக்கு அதிகார சார்பற்றவர்களைக் கொண்டதாகவும்கூட அது இருக்கலாம். பிறகு சமஷ்டியின் தொடக்க விழாவை நடத்துங்கள். இதனைத் தொடர்ந்து, மன்னர் கள் வந்தால் அவர்களுக்கு வழி விட்டு இந்த நியமனக் கூட்டணி யைக் கலைத்துவிடுங்கள். இம்மாதிரியான ஒரு யோசனைக்கு உங்களுக்கு ஏதேனும் மறுப்பு உண்டா?

*சர் சாமுவல் ஹோரர்:* ஆம், எனக்குப் பல மறுப்புகள் உண்டு. எடுத்த எடுப்பில் எனக்குத் தோன்றும் மிகப் பலமான மறுப்பு இது முற்றிலும் ஒரு புதிய யோசனை என்பதாகும். சமஸ்தான மன்னர்கள் போதிய பிரதிநிதித்துவம் பெறக்கூடிய ஓர் அனைத் திந்திய சமஷ்டியை தவிர வேறு எந்த வகையான சமஷ்டியைப் பற்றியும் கடந்த மூன்று ஆண்டுகளாக நாங்கள் எண்ணிப் பார்த்த தில்லை.

7022. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மிகவும் சரி. ஆனால் நான் எடுத்துக் கொண்ட பிரச்சினை பற்றித் தொடர்ந்து பேச என்னை அனுமதியுங்கள்.

*சர் சாமுவேல் ஹோரர்:* என் பதிலைக் கூறி முடிக்கலாமா? நான் முன்னர் தெரிவித்த கடுமையான மறுப்பு ஒரு புறமிக்க, நமது விவாதம் முழுவதையும் மீண்டும் அடியிலிருந்து தொடங்க வேண்டி யிருப்பது எனது இரண்டாவது மறுப்பாகும். எனக்கு இன்னொரு மறுப்பும் உண்டு. அது இதுதான்: அதாவது நீங்கள் கூறுகிறபடி ஒரு நியமனக் கூட்டணியை உருவாக்குவதாக வைத்துக் கொள் வோம், அப்போது சமஷ்டியில் மன்னர்கள் சேராமல் அதை அடி யோடு புறக்கணித்தால் இந்தக் கூட்டணி என்ன ஆவது?

7023. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இனி எனது அடுத்த கேள்விக்கு வருகிறேன். சமஸ்தானாதிபதிகளின் பிரதிநிதித்துவம் ஒரு நிலைப்படுத்தும், ஸ்திரப்படுத்தும் அம்சமாக இருக்க வேண் டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா?

*சர் சாமுவேல் ஹோரர்:* இல்லை, அதை விடவும் அதிகமாக விரும்புகிறேன், டாக்டர் அம்பேத்கர் அவர்களே; இந்த வரம்பிற் குள் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. கூட்டமைப்பில் சமஸ்தான மன்னர்கள் சேருவதைப் பல காரணங் களுக்காக விரும்புகிறேன். மன்னர்களின் பிரதிநிதித்துவம் ஒரு நிலைப்படுத்தும் அம்சம் என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் இந்திய அரசாங்கத்தில் பல அரிய பலன்களை உண்டு பண்ண முடியும்.

7024. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் இந்த யோசனையை அரசியலமைப்பின் ஒரு நிரந்தர பகுதியாக நான் முன்வைக்க வில்லை. சமஷ்டியில் சமஸ்தான மன்னர்கள் சேரும்வரையிலான இடைக் காலத்துக்குத்தான் இந்த யோசனையைத் தெரிவிக்கிறேன். சமஷ்டியில் சேருவது சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்திற் குள் மன்னர்கள் முடிவு செய்யாத போது எழக்கூடிய சிக்கலைச்

சமாளிப்பதற்கே நான் முயற்சிக்கிறேன். சமஷ்டியைத் தொடங்கும் நாள் குறித்த சிக்கலிலிருந்து விடுபடுவதற்கும் முயற்சிக்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோார்:* உங்கள் கருத்தை நன்கு புரிந்து கொண்டேன். இருப்பினும், இவ்வகையான இடைக் காலத் திட்டத்துக்கு மேலே கூறிய எனது கடுமையான மறுப்புகள் இருந்துவரவே செய்யும்.

*நவாப் சர் லியாகத் ஹயத் கான்:* இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, நாம் மீண்டும் சந்திக்கும் போது இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பது உசிதமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவசியம் ஏற்படும்போது நாம் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப் படும் என்று உறுதி கூறப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு யோசனை இப்போதைவிட அப்போது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

*சர் எ. பி. பத்ரோ:* அப்படிச் சந்திக்கும் போது அங்கு நீங்கள் இருக்க மாட்டீர்கள்.

*சர் சாமுவேல் ஹோார்:* ஓர் அனைத்திந்திய சமஷ்டியை அமைப்பதில் உண்மையிலேயே ஆர்வம் கொண்டவர்கள் சமஷ்டி ஒரு போதும் ஏற்படாது என்ற எண்ணத்திலோ அல்லது அறுதியிட்டுக் கூற முடியாத எதிர்காலத்தில்தான் அது ஏற்படும் என்ற எண்ணத் திலோ ஒரு வகையான இடைக்கால அரசை நிறுவுவதில் முழுக் கவனம் செலுத்துவது மாபெரும் தவறு என்று எப்போதுமே கூறி வந்திருக்கிறேன். இம்மாதிரியான யோசனையை முன்வைக்கும் இந்தக் குழு உறுப்பினர்களும் இந்தியப் பிரதிநிதிகளும் உண்மை யில் சமஷ்டியை மேன்மேலும் வெகு தொலைவுக்குத் தள்ளிக் கொண்டு செல்லுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நான் எனது சொந்தக் கருத்தைத்தான் திரும்பத் திரும்பக் கூறி வருகிறேன். வெளியே உள்ள பகைவர்களால் இது அடிக்கடி திரித்துப் புரட்டிப் பொருள் கொள்ளாதபடிப் பார்த்துக் கொள் வதற்கு என்னுடைய பிரிட்டிஷ், இந்திய நண்பர்களை நம்பியிருக் கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தப் பிரச்சினை குறித்து மேலும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்; நீங்கள் சமஷ்டியை மிக முக்கியமானதாகக் கருதுகிறீர்களா, அல்லது பொறுப்பை மிக முக்கியமானதாகக் கருதுகிறீர்களா?

7025. *சர் தேஜ்பகதூர் சாப்ரூ:* அல்லது இரண்டில் எதையுமே முக்கியமானவையாகக் கருதவில்லையா?

*சர் சாமுவேல் ஹோார்:* டாக்டர் அம்பேத்கரது கேள்வியின் கருத்து எனக்குப் புரியவில்லை.

7026. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என்னுடைய கருத்து இது தான்: இடைக்காலத்துக்கு எந்த ஒரு மாற்று ஏற்பாட்டையும் பற்றிச் சிந்திக்க நீங்கள் தயாராக இல்லை என்றால், கூட்டாட்சி (சமஷ்டி)

இல்லையென்றால் எந்தப் பொறுப்பும் இருக்க முடியாது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கும், இல்லையா?

*சர் சாமுவேல் ஹோரா:* நாம் மூன்றாண்டுகளாக விவாதித்து வந்துள்ள பிரச்சினைகளைத்தான் டாக்டர் அம்பேத்கர் இப்போது எழுப்பியுள்ளார். ஓர் அனைத்திந்திய சமஷ்டியை நிறுவுவது என்னும் அடிப்படையில் அமைந்ததுதான் இந்த யோசனைகள் என்று மூன்று ஆண்டுகளாக ஒவ்வொரு விவாதத்திலும் நாம் எண்ணி வந்திருக்கிறோம். அப்படியிருக்கையில் இந்த மூன்றாண்டு கள் விவாதங்களுக்குப் பிறகு இந்தப் பிரச்சினையை மீண்டும் கிளப்ப இப்போது நான் தயாராக இல்லை.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நல்லது. இந்தப் பிரச்சினையை மேற்கொண்டு தொடர நான் விரும்பவில்லை. ஒரு மாற்று ஏற்பாட்டைத்தான் உங்கள் பரிசீலனைக்கு வைக்கிறேன். நான் மேலும் இரண்டு கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். ஆனால் அக்கேள்விகள் நாம் விவாதித்துக் கொண்டிருக்கும் பொருளின் வரம்புக்குள் வருமா என்று எனக்குத் தெரியாது. ஒரு கேள்வி, சமஷ்டி மேல்சபைக்குப் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களின் தகுதிகளைப் பற்றியது.

*கான்டர்பரி அதிமேற்றிராணியார் (ஆர்ச் பிஷப்):* இந்தப் பிரச்சினை வாக்குரிமை என்னும் தலைப்பின்கீழ் வருவதே முறை என்று நினைக்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பொருளாதாரப் பாதுகாப்புகள் குறித்து ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

*கான்டர்பரி ஆர்ச் பிஷப்:* அது நிதித்துறையின் கீழ் வருகிறது என்பது தெளிவு.

**7027.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பாதுகாப்புப் பற்றி ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன். பாதுகாப்புக் குறித்த துணைக் குழு அளித்த தனது அறிக்கையில் ஒரு ராணுவக் கவுன்சில் அமைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். இது தொடர்பாக வெள்ளை அறிக்கையில் எத்தகைய யோசனையும் தெரிவிக்கப்பட வில்லையே?

*கான்டர்பர்ரி ஆர்ச் பிஷப்:* இதை அரசியலமைப்புச் சட்டத் தில் இடம்பெற வேண்டிய யோசன்னையாக நாங்கள் கருதவில்லை; மாறாக நிர்வாகம் தொடர்புடைய யோசனையாகவே இதைக் கருதுகிறோம்.

**7028.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இம்பீரியல் பாதுகாப்புக் கமிட்டி போன்ற ஒன்று இந்தியாவில் இருந்துவர வேண்டும் என்ற கருத்தை நான் எப்போதுமே ஆதரித்து வந்திருக்கிறேன். நடை முறையில் இது மிக முக்கியமானது என்று கருதுகிறேன். பாது காப்பு அமைச்சர்களும், பாதுகாப்பு அதிகாரிகளும் பாதுகாப்புப்

பிரச்சினைகளில் கவனம் செலுத்தவது மிக முக்கியமானது. அது மட்டுமன்று, தற்போது பாதுகாப்பு என்பது ஒரு தேசத்தின் வாழ்க்கையில் மிகப் பரந்த துறைகளைத் தழுவியதாக இருப்பதால், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவ்வப்போது பங்கு கொண்டு, குறிப்பிட்ட விவாதங்களில் ஈடுபடுவதற்கு ஒருவகையான குழு இருப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தியாவில் பொதுமக்களின் அபிப்பிராயத்தை மட்டுமன்றி, இராணுவ அபிப்பிராயத்தையும் பிரதிபலிக்கும் ஒரு வலுவான அமைப்பு இதுபோன்றதொரு குழு உருவாக்கப்படுவதை ஆதரிக்கிறது. எனினும் இதை நாடாளுமன்றச் சட்டம் கையாள வேண்டிய ஒரு பிரச்சினை என்று கூறுவதைவிட அடிப்படையில் இது ஒரு நிர்வாகப் பிரச்சினை என்று கூறுவதுதான் சரியானதாக இருக்கும்.

★ ★ ★ ★ ★

7033. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒதுக்கப்பட்ட துறைகளைப் பொறுத்த வரையில், பட்ஜெட் மீது வாக்கெடுப்பு நடத்தும் யோசனையை நீங்கள் முன்வைக்கவில்லையே?

*சர் சாமுவேல் ஹோர்:* உண்மைதான்.

7034. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் தற்போதுள்ள ஒதுக்கப்பட்ட துறைகள் தொடர்பான கோட்பாட்டுக்கு இது முரணாகவல்லவா இருக்கிறது?

*சர் சாமுவேல் ஹோர்:* இதற்கு முன்னர் நாங்கள் நடத்திய விவாதங்களின் அடிப்படையில்தான் இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டது. பாதுகாப்புத் துறைத் தொடர்புடைய சில குறிப்பிட்ட அம்சங்கள் குறித்து வட்டமேசை மாநாடுகளில் விரிவான விவாதம் நடைபெற்றது. என்ற போதிலும் பண விஷயத்தை வாக்கெடுப்புக் குரியதாக ஆக்கக் கூடாது என்பதில் மிகப் பொதுவான உடன்பாடு காணப்பட்டது.

7035. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* செலவினத்தில் எத்தகை தீவிர வெட்டுகள் இருந்தாலும் அதை உறுதி செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இருக்கிறது. அப்படியிருக்கும்போது சட்டமன்றம் அதன்மீது வாக்கெடுப்பு நடத்துவதில் என்ன பெரிய அபாயத்தை நீங்கள் காண்கிறீர்கள்?

*சர் சாமுவேல் ஹோர்:* இது போன்ற விஷயத்தில் வைசிராய்க்கு உள்ள பொறுப்பு தெளிவாகவும் ஐயத்துக்கிடமின்றியும் இருக்கிறது. எனவே, இது குறித்து விவாதம் நடத்த வாய்ப்பளிக்கலாமே தவிர, தேவையான செலவினங்கள் பற்றி வாக்கெடுப்பு நடத்துவது சரியல்ல.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* எனது அடுத்த கேள்வி தலைமைப் படைத்தளபதியின் நியமனம் தொடர்பானது. இது குறித்து

வெள்ளை அறிக்கையில் எந்தத் திட்டவட்டமான யோசனைகளும் காணப்படவில்லை. ''ராயல் சைன் மானுவலின்''படி (Royal Sign Manual) அளிக்கப்படும் அத்தாட்சிப் பத்திரத்தின் பேரில் மேன்மை மிகு மன்னரால் தலைமைப் படைத்தளபதி நியமிக்கப் படுவார் என்று மட்டுமே இந்திய அரசுச் சட்டத்தின் 19-ஆவது பிரிவு கூறுகிறது.

7036. *சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* இப்போதைய இந்திய அரசுச் சட்டத்தில் தலைமைப் படைத்தளபதி நியமனம் பற்றி எந்தக் குறிப்பும் இல்லாதது விந்தையாக இருக்கிறது. தலைமைப் படைத்தளபதி நிர்வாக சபையில் ஓர் உறுப்பினராக இருந்தால் அவருக்கு நிர்வாக சபையின் மற்ற உறுப்பினர்களைவிட முன் னிலை அளிக்கப்படும். இந்த விஷயத்தில் சட்டம் செய்திருப்ப தெல்லாம் இதுதான். வெள்ளை அறிக்கை இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தலைமைப் படைத் தளபதியின் நியமனம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

7037. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்போதைய இந்திய அரசுச் சட்டத்தின் 19(1) ஆவது பகுதி பின்வருமாறு கூறுகிறது: ''இந்தியாவிலுள்ள மாட்சிமை தங்கிய மன்னரின் தலைமைப் படைத்தளபதி 'ராயல் சைன் மானுவலின்' கீழ் வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரத்தின்படி மேன்மை மிகு மன்னரால் நியமிக்கப் படுகிறார்.''?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம், உண்மைதான். இதே போன்று தான் இந்த நியமனம் தொடர்ந்து நடைபெறும்.

7038. *லார்டு இர்வின்:* வெள்ளை அறிக்கையின் 39-ஆவது பக்கத்தில் அடியில் காணப்படும் 6-ஆவது யோசனையில் இந்த விஷயம் குறிப்பிடப்பட்டிருக்கிறது அல்லவா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம், பத்தி 6, பக்கம் 39.

7039. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்த நியமனம் எவ்வாறு செய்யப்படும், யாருடைய ஆலோசனையின்படி என்பதை பத்தி 6 கூறவில்லை.

*சர் சாமுவேல் ஹோர்:* இந்த நியமனத்தை மன்னர்தான் செய் வார்.

7040. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* யாருடைய ஆலோசனை யின் பேரில்?

*சர் சாமுவேல் ஹோர்:* இங்கு நியமனம் அரசால் செய்யப் படுகிறது.

7041. *சர் ஆஸ்டன் சேம்பர்லேன்:* இந்தியாவிலுள்ள அமைச் சர்களின் ஆலோசனையின் பேரில் மாட்சிமை தங்கிய மன்னர் செய்கிறார்.

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம்.

7042. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 1921 பிப்ரவரி 17-ஆம் தேதி சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதங்களை சின்னாட்களுக்கு முன்னர்ப் படித்துப்பார்த்தேன். தலைமைப் படைத் தளபதி எத்தகைய சூழ்நிலையில் நியமிக்கப்படுகிறார் என்பதை சர் காட்பிரே ஃபெல் பின்வருமாறு விவரித்தார்: ''தலைமைப் படைத்தளபதியின் நியமனம் அமைச்சரவையின் ஆலோசனையின் படி மாட்சிமை தங்கிய மன்னரால் செய்யப்படுகிறது; அமைச்சரவையோ பிரிட்டிஷ் பேரரசின் மிக உயர்ந்த ராணுவ அதிகாரியான இம்பீரியல் தளபதிகள் குழாமின் தலைவரது (Chief of the Imperial General Staff) ஆலோசனையை நாடிப் பெறுகிறது.'' ஆக, தற்போதைய சட்டத்தின்படி அல்லது நடைமுறையின்படி இம்பீரியல் தளபதிகள் குழாமின் தலைவரது ஆலோசனையின் பேரில் தலைமைப்படைத்தளபதி நியமிக்கப்படுகிறார் என்பது தான் இப்போதுள்ள நிலை.

*சர் சாமுவேல் ஹோர்:* அவர் அமைச்சரவையால் நியமிக்கப் படுவதில்லை; பிரதம மந்திரி அல்லது இந்தியா அமைச்சரின் ஆலோசனையின்படி மன்னரால்தான் அவர் நியமிக்கப்படுகிறார்.

7043. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இங்கு நான் எடுத்துக் காட்ட விரும்பும் விஷயம் இதுதான்: பாதுகாப்பு பெரும்பாலும் இந்திய மக்களின், இந்திய சட்டமன்றங்களின் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது, இந்த நடைமுறை நாம் எண்ணியிருக்கும் புதுவகையான அரசாங்கத்துக்கு உடன்பாடானதாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஒதுக்கப்பட்ட துறையாக உள்ள பாதுகாப்பு விஷயத்தில் இது முற்றிலும் தவிர்க்க முடியாதது.

7044. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் இது இந்திய மக்களின் மற்றும் இந்தியச் சட்டமன்றங்களின் பொறுப்பாகவும் இருக்கப்போகிறது. புதிய அரசாங்கத்தில் மிக முக்கியமான ஒரு துறைக்குப் பொறுப்பாக இருக்கப் போகின்ற ஒரு முக்கியமான அதிகாரியின் நியமனம், இந்தியா அமைச்சரின் அல்லது கவர்னர் ஜெனரலின் ஆலோசனையின் பேரில் அல்லாமல், இம்பீரியல் தளபதிகள் குழாமின் தலைவரைக் கலந்து பேசி அமைச்சரவையின் ஆலோசனையின்பேரில் நடைபெறும் இந்த நியமனம் பாதுகாப்பை இந்திய மக்களின் பொறுப்பாகக் கொண்ட ஓர் அரசாங்கத்துக்கு எப்படி இசைந்ததாக இருக்க முடியும்?

*சர் சாமுவேல் ஹோர்:* பாதுகாப்பு ஓர் ஒதுக்கப்பட்ட துறையாக இருக்குமானால், அந்த ஒதுக்கப்பட்ட துறைகள் எந்த அரசாங்கத்துக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளனவோ அந்த அரசாங்கம்தான் நிச்சயமாக இந்த நியமனத்தைச் செய்யும்.

7045. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வைசிராய் இந்த நியமனத்தைச் செய்வதை என்னால் புரிந்து கொள்ள முடியும்;

இந்தியா மந்திரி இந்த நியமனத்தைச் செய்வதை என்னால் புரிந்து கொள்ள முடியும்.

*சர் சாமுவேல் ஹோர்:* இது இவ்வாறுதான் நடைபெறுகிறது.

★ ★ ★ ★ ★

**7125.** *மார்க்கெஸ் சாலிஸ்பரி:* ஏற்கெனவே சட்டமன்றத்தில் மன்னர்களுக்குள்ள பிரதிநிதித்துவத்துடன் இதர மன்னர்களின் பிரதிநிதித்துவ விகிதாசாரத்தை ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டவர்களுக்குள்ள அதே விகிதாசாரத்தின் அடிப்படையில் சேர்ப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித் தானே?

*சர் சாமுவேல் ஹோர்:* ''ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டவர்களுக்குள்ள அதே விகிதாசாரத்தின் அடிப்படையில்'' என்று லார்டு சாலிஸ்பரி எந்தப் பொருளில் கூறுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

**7126.** *மார்க்கெஸ் சாலிஸ்பரி:* மாகாணங்களில் இடப்பங்கீடு பற்றி ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இப்பிரச்சினையில் மிகுந்த கருத்து வேறுபாடு நிலவுவது அவருக்குத் தெரியும். பூனா ஒப்பந்தப்படி, வங்காளத்தில் பல்வேறு வகுப்பினருக்குச் சரியான முறையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பது பற்றி ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை குறித்து இங்கு நான் ஆராய்ச்சியில் இறங்கப்போவதில்லை. ஆனால் இப்பிரச்சினை தொடர்பாக இந்தியா மந்திரி ஏதேனும் அறிக்கை அளிக்கவிருக்கிறாரா என்று அவரிடம் கேட்க விரும்புகிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய அரசின் முடிவை இங்குக் குறிப்பிடுகிறீர்களா?

**7128.** *மார்க்கெஸ் சாலிஸ்பரி:* முக்கியமாக வங்காளத்தைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்பான அரசின் முடிவை விளக்கும் அறிக்கையை மே 26-ஆம் நாளன்று குழுவுக்கும் பிரதிநிதிகளுக்கும் வழங்கினேன். இதற்கு மேல் நான் கூறுவதற்கு எதுவுமில்லை. அரசு தனது முடிவு இறுதியானதென்றும், பல்வேறு வகுப்புகளின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள் ஒப்புக் கொள்ளும் சிறு மாறுதல்களை மட்டுமே தான் ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அது தனது நிலையைப் பெரிதும் தெளிவுப்படுத்திற்று. அரசின் கொள்கையை விளக்கும் இந்த 'அறிக்கைக்கும் அதிகமாக அரசு உறுப்பினன் என்ற முறையில் நான் வேறு ஏதும் கூறுவதற்குத் தயாராக இல்லை.

*தலைவர்:* இந்தியா மந்திரி அவர்களே, சற்று முன்னர் தாங்கள் குறிப்பிட்ட அறிக்கையை இப்போது இங்கு தருவதற்கு விரும்புகிறீர்களா?

*சர் சாமுவேல் ஹோரர்: ஆம், அந்த அறிக்கை வருமாறு:*

**வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு (Communal Award)**

வெள்ளை அறிக்கை தயாரிக்கப்படுவதற்கு முன்னர் என்ன நிகழ்ந்தது என்பதை அறியாத என் நண்பர்கள் பலர் கூட்டுத் தேர்வுக் குழுவில் இருக்கக்கூடும்; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு (Communal Award) என்பது என்ன, அதன் வரலாறு யாது, அரசைப் பொறுத்தவரையில் வெள்ளை அறிக்கையில் கண்டுள்ள இதர யோசனைகளிலிருந்து அது ஏன் வேறுபட்ட அடிப்படையில் அமைந்துள்ளது என்பதைப்பற்றி எல்லாம் இங்கு சுருக்கமாகக் கூறினால், அது அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

2. இந்தியாவிலுள்ள பல்வேறு பெரிய வகுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் எத்தனை இடங்கள் ஒதுக்க வேண்டும், இந்த இடங்களுக்கான தேர்தல்கள் எத்தகைய முறையில் நடைபெற வேண்டும் என்பது குறித்து இந்தியப் பிரதிநிதிகளிடையே பரஸ்பர உடன்பாடு ஏற்படாதது வட்டமேசை மாநாட்டின் முதலாவது, இரண்டாவது கூட்டத்தொடர்களின் முன்னேற்றத்துக்கு பெரிதும் இடையூறாக இருந்தது. தனித் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டுமா அல்லது ஒதுக்கப்பட்ட இடங்களுடன் கூடிய கூட்டுத் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டுமா என்பதே தேர்தலைப் பொறுத்த வரையில் முக்கியப் பிரச்சினையாக இருந்தது (இந்தச் சொல்லாட்சிகள் பற்றிய விளக்கத்தை சட்டக் கமிஷனின் அறிக்கை, தொகுதி 1, பத்தி 149 மற்றும் 156-ஐக் காண்க). எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், இந்தப் பிரச்சினைகளில் உடன்பாடு காண்பதில் மீண்டும் மீண்டும் தோல்வியே ஏற்பட்டது. இந்தத் தோல்வி இதுவரை வரையப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் உருவரையில் ஒரு முக்கியமான இடைவெளியைத் தோற்றுவித்தது; அதுமட்டுமன்று, சட்டமன்றத்தில் தமக்குள்ள பிரதிநிதித்துவம் தொடர்பாகத் தங்கள் நிலை என்ன என்பது தெரியாத நிலைமையில், அரசியலமைப்புச் சட்டத்தின் இதர அம்சங்கள் பற்றி மேற்கொண்டு விவாதிப்பதில் சில சிறுபான்மை வகுப்பினர் பங்கு கொள்வதையும் இத்தோல்வி தடுத்து வந்தது.

3. எனவே, முன்னேற்றத்திற்குக் குறுக்கே நின்ற இந்தத் தடையை அகற்றும் பொருட்டு, இந்தப் பிரச்சினைகள் குறித்து அரசு மிகவும் தயக்கத்தோடு ஒரு தீர்வை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது; இத் தீர்வை ஏறத்தாழ ஒரு நடுவர் தீர்வு என்றே கூற வேண்டும். மாநிலச் சட்டமன்றங்களின் இயைபையும், அவற்றுக்குத் தேர்தல் நடத்தும் வழிமுறையையும் இந்தத் தீர்வு விவரித்தது. விசேட நலன்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்க வேண்டும், சட்டமன்றங்களின் எண்ணிக்கை எவ்விதம் இருக்க வேண்டும் என்பது போன்ற பிரச்சினைகளிலிருந்து முற்றிலும்

வகுப்புகள் தொடர்பான பிரச்சினைகளை வேறாகப் பிரித்துப் பார்ப்பது இயலாததாக இருந்தது. எனினும் இந்தப் பிரச்சினை களில் இந்திய வாக்குரிமைக் (லோதியன்) குழுவின் ஆலோசனை யைப் பெறும் நல்வாய்ப்பு அரசுக்குக் கிட்டிற்று.

4. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஒரு மாற்றத்துடன் தீர்வின் ஷரத்துக்கள் வெள்ளை அறிக்கையின் 91 மற்றும் 93 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன (தேர்தல் தொடர்பான ஷரத்துக்கள் சற்றுச் சுருக்கமாக 91-ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது).

இந்தத் தீர்வுக்கு ஒரு முன்னுரைபோல் அமைந்துள்ள அறிவிப் பில் பின்கண்ட மிக முக்கியமான பகுதி அடங்கியுள்ளது:

பத்தி 4. ''தங்கள் தீர்வைத் திருத்தும் நோக்கத்தோடு மேற் கொள்ளப்படும் எத்தகைய பேச்சுவார்த்தைகளிலும் தாங்கள் ஒரு தரப்பாக இருக்க முடியாது என்பதையும், சம்பந்தப்பட்ட அனைத் துத் தரப்புகளின் ஆதரவைப் பெறாமல் இந்தத் தீர்வில் எவ்வித மாற்றத்தையும் செய்யும் நோக்கத்தோடு முன்வைக்கப்படும் எத்த கைய கோரிக்கையையும் ஆய்வு செய்யத் தாங்கள் தயாராக இல்லை என்பதையும் மாட்சிமை தங்கிய மன்னர் அரசு மிகத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறது. எனினும் அனைவரும் ஏற்கக் கூடிய ஓர் உடன்பாடு ஏற்படுமானால் அதைத் தாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பதாகவும் அரசு தெரிவித்துக் கொள் கிறது. ஆகவே, ஒரு புதிய இந்திய அரசாங்கச் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்னர், ஆளுநரின் மாநிலங்களில் ஏதேனும் ஒன்று தொடர்பாகவோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் தொடர்பாகவோ அல்லது பிரிட்டிஷ் இந்தியா முழுவதன் தொடர் பாகவோ ஒரு நடைமுறைச் சாத்தியமான மாற்றுத் திட்டம் குறித்துச் சம்பந்தப்பட்ட வகுப்பினர்கள் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் உடன்பாட்டிற்கு வந்து விட்டதாகத் தாங்கள் மனநிறைவு கொள்ளும் பட்சத்தில், அப்போது தற்சமயம் வகுக்கப் பட்டிருக்கும் ஷரத்துக்களுக்குப் பதிலாக அந்த மாற்றுத் திட்டத்தை வெள்ளை அறிக்கையில் முன்வைக்கும்படி நாடாளுமன்றத்துக்குப் பரிந்துரைக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் மாட்சிமை தங்கிய மன்னர் அரசு அறிவிக்கிறது.''

5. தீர்வு வெளியிடப்பட்ட பின்னர், தாழ்த்தப்பட்ட வகுப்பின ரின் பிரதிநிதித்துவம் சம்பந்தமான ஒரு முக்கியமான திருத்தம் அதில் செய்யப்பட்டுள்ளது. அதன் வரலாற்றை இங்கு சுருக்க மாகத் தருகிறோம்:

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாகத் தீர்வில் கண்டுள்ள ஷரத்துக்கள் திரு. காந்திக்கு உடன்பாடில்லை; இந்த ஷரத்துக்கள் இந்து சமுதாயத்தைச் செயற்கையான முறையில் பிளவுபடுத்தும் என்று அவர் கருதினார்; எனவே, இதை எதிர்த்துத்

தாம் உண்ணா நோன்பு மேற்கொள்ளப் போவதாக அறிவித் தார். இது தொடர்பாகப் பிரதமருக்கும் திரு. காந்திக்கும் இடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்று, அது பத்திரிகைகளிலும் வெளிவந்தது. இப்பிரச்சினையில் திரு. காந்தி கொண்டுள்ள கருத்துக்களைத் தங்களால் ஏற்றுக் கொள்ள இயலாததற்கான காரணங்களை பிரதமர் தமது கடிதத்தில் விளக்கி இருந்தார். எனினும், திரு. காந்தி அதில் திருப்தியடையாமல் தமது உண்ணா விரதத்தைத் தொடங்கினார். பின்னர் திரு. காந்தியின் ஆதரவுடன் சாதி இந்துக்களின் பிரதிநிதிகளுக்கும் டாக்டர் அம்பேத்கர் தலைமை யில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. இதன் பயனாய் ஓர் உடன் பாடு ஏற்பட்டது. அதுதான் தற்போது புனா ஒப்பந்தம் எனப் படுகிறது. இதன்படி, ஒவ்வொரு மாநிலத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத் தீர்வில் பரிந்துரைக்கப்பட்டிருந்ததைவிட அதிகரிக்கப்பட்டது; அதேசமயம் முன்னர் குறிப்பிட்டிருந்த தேர்தல் முறைக்குப் பதிலாக வேறுபட்டதொரு தேர்தல் முறை புகுத்தப் பட்டது. சாதி இந்துக்களுக்கான இந்து இடங்களும் (இவை ''பொது'' இடங்கள் எனச் சட்டமுறையில் கூறப்படுகிறது) தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான இடங்களும் சேர்ந்த மொத்த எண்ணிக்கை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வின்கீழ் இருந்த மாதிரியே புனா ஒப்பந்தத்தின் கீழும் இருந்தது. மேலே கூறிய 4-ஆவது பத்தியில் கண்டுள்ள ஷரத்துக்களின்படி இது பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்ட மாற்று ஏற்பாடாக இருந்தமையால், அரசு தங்களது வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத் தீர்வில் திருத்தம் செய் யும் இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை ஏற்றுக் கொண்டது; இந்த முடிவு அறிவிக்கப்பட்டதும் திரு. காந்தி தமது உண்ணா நோன்பை முடித்துக் கொண்டார். வெள்ளை அறிக்கையின் 91 மற்றும் 93-ஆம் பக்கங்களிலுள்ள ஷரத்துக்களில் புனா ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள் இணைக்கப்பட்டன.

7. ஆகவே, மாநிலச் சட்டமன்றங்களின், இயைபையும், அவற்றிற்கான தேர்தல் முறையையும்* குறித்த ஷரத்துக்களைப் பொறுத்தவரையில், அரசின் நிலை இதுதான்: சம்பந்தப்பட்ட வகுப்புகள் பரஸ்பரம் தமக்குள் ஏற்றுக் கொள்ளும் மாற்றத்தை தவிர, இந்த ஷரத்துக்களுக்கு வேறு எந்த மாற்றத்தையும் தாங்க ளாகவே நாடாளுமன்றத்துக்குப் பரிந்துரைப்பதில்லை என்று அரசு உறுதியளிக்கிறது; அதே போன்று, இத்தகைய ஒரு மாற் றத்தைச் செய்யும் நோக்கத்திற்காக அரசு என்ற முறையில் எந்தப் பேச்சுவார்த்தைகளிலும் பங்கு கொள்வதில்லை என்றும் அது உறுதி கூறுகிறது; இந்த அடிப்படையில்தான் மேலே கூறிய சூழ்நிலைமைகளில் புனா ஒப்பந்த ஷரத்துக்களைத் தாங்கள்

*. இது வாக்குரிமையைக் குறிக்கவில்லை.

ஏற்றுக் கொண்டதாகவும் அரசு இந்த உறுதிமொழிக்கு விளக்கம் தருகிறது.

மூல வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு மாநிலச் சட்ட மன்றங்களைப் பொறுத்ததாக மட்டுமே இருந்தது; சமஷ்டி சட்ட மன்றத்தில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு எத்தனை இடங்களை ஒதுக்கு வது, பிரிட்டிஷ் இந்திய சமஸ்தானங்களுக்கு எத்தனை இடங்களை ஒதுக்குவது என்பது முடிவு செய்யப்படாததால்தான் மத்திய சட்ட மன்றம் சம்பந்தமாக இத்தகைய ஷரத்துக்களை வகுக்க முடிய வில்லை. வெள்ளை அறிக்கையின் பிற்சேர்க்கை I-லும், II-லும் (வெள்ளை அறிக்கையினது முன்னுரையின் 18-ஆவது பத்தியை யும் இதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்) கண்டுள்ள யோச னைகளில் இந்தப் பொருள் குறித்த அரசின் யோசனைகளும் இப்போது இடம்பெற்றுள்ளன. இந்த யோசனைகளை நடை முறையில் மூல வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வுக்குப் பிற் சேர்க்கையாகவே கொள்ள வேண்டும். எனினும் மேலே கூறிய மூல அறிவிப்பின் 4-ஆவது பத்தியில் அடங்கியிருப்பது போன்ற ஒரு திட்டவட்டமான உறுதி மொழியை இவை சம்பந்தமாக அரசு அளிக்கவில்லை. ஆகவே, மத்திய சட்டமன்றத்தில் பல்வேறு வகுப்புகளுக்கு இடங்கள் ஒதுக்குவது குறித்த இந்த யோசனைகளை மீண்டும் அடியாரம்பத்திலிருந்து ஆராய்வதில் அரசு ஆர்வம் கொண்டிருக்கவில்லை; அதேசமயம் மாகாணவகுப்புவாரிப் பிரதி நிதித்துவத் தீர்வு போன்று இந்த யோசனைகளையும் தன்னுடைய கண்ணோட்டத்தைப் பிரதிபலிப்பவையாக அரசு கருதவில்லை. ஆயினும் இரண்டு விஷயங்களில் அதாவது சமஷ்டி சட்டமன்றத் தில் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு உள்ள இடங்களில் மூன்றிலொரு பகுதியை முஸ்லீம்களுக்கு ஒதுக்கும் விஷயத்திலும், அதேபோல் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் ஒதுக்கப் பட்டுள்ள இடங்களின் விகிதாசாரத்திலும் எத்தகைய மாற்றம் செய்வதற்கும் மிகக் கடுமையான எதிர்ப்பு இருப்பதை அரசு காண்கிறது.*

9. ஆக, தொகுத்துக் கூறுமிடத்து, வகுப்புவாரிப் பிரதிநிதித் துவத் தீர்வு என்பது சட்டமன்றங்களின் இயைபு சம்பந்தப்பட்டது மட்டுமே என்பதும், அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம்பெறக் கூடிய சகல சமூகப் பிரச்சினைகள் (ஆளுநர்களுக்கும் தலைமை ஆளுநருக்குமுள்ள விசேடப் பொறுப்புகள், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமுள்ள உறவுகள், அடிப்படை உரிமைகள் போன்றவை) சம்பந்தப்பட்டது அல்ல என்பதும் மேலே கூறிய வற்றிலிருந்து தெள்ளத் தெளிவாகும். மேலும், வகுப்புவாரிப்

* தப்பெண்ணத்தைப் போக்கும் பொருட்டு பின்கண்ட விளக்கம் தரப்படுகிறது: மேல்சபைக்கு தலைமை ஆளுநர் நியமிக்கும் பத்துப் பேர்களில் ஆறுபேர் பிரிட்டிஷ் இந்தியாவையும் நான்குபேர் இந்திய சமஸ்தானங்களையும் சேர்ந்தவர்களாக இருப் பார்கள்.

பிரதிநிதித்துவத் தீர்வில் அடங்கியுள்ள பிரச்சினைகள் குறித்து அரசு ஏற்கெனவே தனது நிலையைத் திட்டவட்டமாக விள்க்கிக் கூறியிருப்பதையும், எத்தகைய நிபந்தனைகளின் அடிப்படையில் இந்தப் பாதையிலிருந்து அரசு விலகிச் செல்ல முடியும் என்பதை யும் மேலே கூறியவற்றிலிருந்து தெளிவாகப் புரிந்து கொள்ள லாம்.

★ ★ ★ ★ ★

7231. *சர் ஆஸ்டன் சேம்பர்லேன்: நமது கூட்ட நடவடிக்கை களின்போது எப்போதேனும் இவ்வகையான யோசனைகளை நம் முன் வைக்க இந்தியா மந்திரி எண்ணியிருக்கிறாரா?

*சர் சாமுவேல் ஹோர்:* நிச்சயமாக; எந்த ஓர் அரசியல் சட்டத் திலும் இத்தகைய அதிகாரங்கள் எங்கேயேனும் இருப்பது முற்றி லும் இன்றியமையாதது என்று கருதுகிறேன்.

7232. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்போதைய இந்திய அரசுச் சட்டத்தில் இத்தகைய ஷரத்துகள் இருப்பதை இங்கு கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு பிற்சேர்க்கை யின் சில பகுதிகளில் இவை குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

*சர் சாமுவேல்ஹோர்:* ஒவ்வொரு அரசியல் அமைப்புச் சட்டத் திலும், ஏன் இந்திய அரசுச் சட்டத்திலும்கூட இவ்வாறே உள்ளது என்று நினைக்கிறேன்.

★ ★ ★ ★ ★

7236. *சாலிஸ்பரி பிரபு:* அதை நான் படித்திருக்கிறேன்; ஆனால் அதனை என்னால் முற்றிலுமாக ஆதரிக்க முடியவில்லை.

*சர் சாமுவேல் ஹோர்:* நாம் ஆராய வேண்டிய பிரச்சினை களில் இதுவும் ஒன்று என்பதையும், அரசியல் சட்டத்தில் இதற்கு ஏதேனும் ஓர் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதையும் எப் போதும் மனத்திற் கொண்டு சாலிஸ்பரி பிரபு மீண்டும் இதைப் பார்ப்பாரேயானால், அதைப் பூரணமாக ஆதரிப்பார் என்று நம்புகிறேன்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அது இந்திய அரசுச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையாகும்; ''இந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் இந்தியச் சட்டமன்றத்தால் நீக்கப்படலாம் அல்லது மாற்றப் படலாம்.''

★ ★ ★ ★ ★

7620. **ஜெட்லண்ட் கோமான்: துணைக் கேள்வி ஒன்றை நான் கேட்கலாமா? தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளைத் தேர்ந்

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II D, ஜூலை 20, 1933, பக்கம் 828.

** மேற்படி, ஜூலை 21, 1933, பக்கம் 832.

தெடுக்கும் இந்த நான்கு தொகுதிகளும் பிரதேசம் விட்டுப் பிரதேசம் வியாபித்திருக்குமா?

*சர் சாமுவேல் ஹோரா்:* இது முடிவு செய்யப்பட்டுவிட்டதாக நான் நினைக்கவில்லை; எனினும் பிரதேசம் விட்டுப் பிரதேசம் வியாபிக்காதபடி தொகுதிகள் அமைக்கப்படும். சென்னைப் பிரதேசம் முழுவதும் 15 பகுதிகளாகப் பிரிக்கப்படும்; இவற்றில் 11 பகுதிகள் சாதாரண வகையைச் சேர்ந்தவையாக இருக்கும்.

7261. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பதினைந்தும் பொதுத் தொகுதிகளாக இருக்குமா?

*சர் சாமுவேல் ஹோரா்:* 11 சாதாணமானவையாக இருக்கும். மொத்தத்தில் 19 இருக்கும்; 11 ஒற்றை உறுப்பினர் தொகுதியாகவும் 4 இரட்டை உறுப்பினர் தொகுதியாகவும் இருக்கும்.

7162. *திரு. ஜாபருல்லா கான்:* இந்தப் பிரச்சினையின் ஓர் அம்சத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு சர் பின்லேடட்டர் ஸ்டூவர்ட்டிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இந்த அம்சத்தை நன்கு புரிந்து கொள்வதே என் நோக்கம். நான்கு பேர்களடங்கிய ஒரு பட்டியல் தெரிவு செய்யப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அந்த நால்வரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் தங்களுக்குள் போட்டியிட முற்படு கிறார்கள். இது முதல் நிலைத் தேர்தல், இறுதித் தேர்தலில் ஷெட் யூல்டு வகுப்பினர் மட்டுமின்றி, பொதுத் தொகுதியில் வாக்களிக்க உரிமையுடைய எல்லோருமே வாக்களிப்பார்கள். இத்தகைய சூழ்நிலையில் இந்த நால்வரில் மூவர் பின்வருமாறு கூறுகிறார் கள் என்று வைத்துக் கொள்வோம்: ''நாங்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை.'' அப்போது, தேர்தல் நடைபெறு வதற்கு முன்னர் அவர்கள் போட்டியிலிருந்து விலகிக் கொள்வது சாத்தியமா?

*சர் பின்லேடட்டர் ஸ்டூவர்ட்:* புனா ஒப்பந்தம் இவ்வாறுதான் விளக்கம் தருகிறது.

*சர் சாமுவேல் ஹோரா்:* டாக்டர் அம்பேத்கர் என்ன சொல்லு கிறார்?

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவர்கள் நால்வரும் போட்டி யிட்டுத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இதுதான் புனா ஒப்பந்தத்தின் கருத்து.

*சர் என். என். சர்க்கார்:* கருத்து இருக்கட்டும், அது அவ்வாறு தெளிவாகச் சொல்லவில்லையே.

*திரு. ஜாபருல்லா கான்:* மற்றொரு விஷயம்; இந்தக் குறிப் பிட்ட தொகுதிகளில் ஒன்றில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நான்கு வேட்பாளர்களை நிறுத்தித்தான் ஆக வேண்டுமா? அவர்கள் ஒரே ஒருவரை மட்டும் நிறுத்தினால் அது ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை

மீறுவதாகுமா? இது விஷயத்தில் மாட்சிமை தங்கிய மன்னர் அரசு இந்த ஒப்பந்தத்தை எவ்வாறு பார்க்கிறது?

*சர் ஏ. பி. பத்ரோ:* முதல் நிலைத் தேர்தலின் நோக்கமே தோல்வியடைந்துவிடும். ஓர் இடத்துக்கு நான்கு பேரைத் தேர்ந் தெடுக்கும் முதல் நிலைத் தேர்தலின் பொருள் என்ன?

*சர் என். என். சர்க்கார்:* புனா ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்ட சமயத்தில் இதற்கு என்ன பொருள் கொள்ளப்பட்டது என்பதை நான் கூறுகிறேன். டாக்டர் அம்பேத்கர் இதனை உறுதி செய்வார் என்று நம்புகிறேன். நான்கு பேரைத் தேர்ந்தெடுப் பதற்குப் பதிலாக ஒரே ஒருவரை மட்டும் தேர்ந்தெடுக்கும் சுதந் திரம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு உண்டு என்று அச்சமயம் பொருள் கொள்ளப்பட்டது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த ஒருவர் தானாகவே தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நீங்கள் சொல்வது ரொம்பவும் சரி.

*திரு. ஜாபருல்லா கான்:* அவர்கள் நான்கு பேரை நிறுத்தி னால் அவர்களில் எவரும் போட்டியிலிருந்து விலகிக் கொள்ள லாம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆம்.

★ ★ ★ ★ ★

*7488. *சர் என். என். சர்க்கார்:* குழுவின் முன் சில விவரங் களை நான் முன்வைக்கலாமா? வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு எந்தத் தேதியில் மேற்கொள்ளப்பட்டது? 1932 ஆகஸ்டு 17-ஆம் தேதியன்றுதானே?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆகஸ்டு 16-ஆம் நாளன்று.

7489. *சர் என். என். சர்க்கார்:* என்னிடமுள்ள பிரதியில் 17 என்று உள்ளது. ஒரு நாள் முக்கியமன்று. இந்தத் தீர்வின்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பொதுத் தொகுதிகளில் வாக்களிப்பர், அவர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் 10 ஆக இருக்கும், இந்த ஏற்பாடு 20 ஆண்டுகளுக்குப் பிறகு முடிவுக்கு வரும். மிகச் சுருக்க மாகச் சொன்னால் இதுதானே முடிவு?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆமாம்.

7490. *சர் என். என். சர்க்கார்:* நான் குறிப்பிட விரும்பும் மற்றொரு தேதி ஆகஸ்டு 18, 1932. இந்தத் தேதியில்தான் மகாத்மா காந்தி பிரதம அமைச்சருக்குத் கடிதம் எழுதினார்; அதில் தாம் உண்ணா விரதம் இருக்கப்போவதாகக் கூறி, பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார்: ‘‘பிரிட்டிஷ் அரசு தனது முடிவை மாற்றிக் கொண்டு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரதி

* சாட்சியக் குறிப்பு, தொகுதி II B, ஜூலை 21, 1933, பக்கங்கள் 858-63.

நிதித்துவம் அளிப்பது சம்பந்தமான தங்கள் திட்டத்தை விலக்கிக் கொண்டால் இந்த உண்ணா நோன்பை நிறுத்திக் கொள்வேன்.'' மகாத்மா காந்தி தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவதையும் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் விவரித்துப் பிரதம ருக்கு எழுதியிருந்தார். அந்தத் தேதி உங்களிடமுள்ள தகவல் களுடன் ஒத்துப் போகிறதா?

*சர் சாமுவேல் ஹோர்:* அந்தத் தேதிகள் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

*7491. சர் என். என். சர்க்கார்:* நான் ஒரு யோசனை கூறு கிறேன். அதை இந்தியா அமைச்சர் ஏற்றுக் கொள்வாரா?

*சர் சாமுவேல் ஹோர்:* சரி, ஏற்றுக் கொள்கிறேன்.

*7492. சர் என். என். சர்க்கார்:* நான் அந்தத் தேதிகளைச் சொல்கிறேன். ஆகஸ்டு 18-ஆம் தேதிதான் பிரதமருக்கு மகாத்மா காந்தி தமது கடிதத்தை எழுதினார். 1932 செப்டம்பர் 8-ஆம் தேதி பிரதமர் மகாத்மா காந்திக்குப் பதிலெழுதினார்; அதில் தமது திட்டம் அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வு தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இந்து சமூகத்திடமிருந்து பிரித்து விடாது என்று சுட்டிக்காட்டியிருந்தார். செப்டம்பர் 17, 18 தேதி களில் டில்லியில் ஒரு மாநாட்டைக் கூட்டியிருப்பதாக பண்டித மதன் மோகன் மாளவியா சில பத்திரிகைகளில் 1932 செப்டம்பர் 15-ஆம் தேதி ஓர் அறிவிப்பை வெளியிட்டிருந்தார். பத்திரிகை களில் பிரசுரிக்கப்பட்டிருந்த அழைப்பிதழில் ''ஒரு சில நண்பர் களுக்கு'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது நடைபெற்றது 1932 செப்டம்பர் 18-ஆம் நாளன்று. 1932 செப்டம்பர் 16-ஆம் தேதி பண்டித மதன் மோகன் மாளவியாவே பத்திரிகை களில் மற்றோர் அறிவிப்பை வெளியிட்டார். மாநாடு நடை பெறும் இடம் டில்லியிலிருந்து பம்பாய்க்கு மாற்றப்படுவதாக அந்த அறிவிப்பில் அவர் குறிப்பிட்டிருந்தார். 1932 செப்டம்பர் 20-ஆம் தேதி உண்ணாவிரதம் தொடங்கிற்று; இது பின்னால் சாகும்வரை உண்ணாவிரதம் என்று வருணிக்கப்பட்டது. செப்டம் பர் 24-ஆம் தேதியன்று மகாத்மா காந்தியின் உடல் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 1932 செப் டம்பர் 25-ஆம் நாளன்று ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இவை தான் நான் தங்களிடம் தரும் தேதிகள். இவற்றில் ஏதேனும் திருத்தம் இருந்தால் பிறகு கூறலாம்; அல்லது இவற்றை ஏற்றுக் கொள்ள லாம்.

*சர் சாமுவேல் ஹோர்:* நல்லது.

*சர் என். என். சர்க்கார்:* மேலும் சில தேதிகளைப் பற்றி எனது அடுத்த கேள்வியில் உங்களிடம் கேட்கப் போகிறேன். இதற்கு உடனடியாக விடையளிக்க நீங்கள் இப்போது தயார் நிலை யில் இல்லையென்றால், விடை அளிக்குமாறு உங்களை நான்

வற்புறுத்தப் போவதில்லை. ஆனால் இந்த விவரங்களை எல்லாம் மெய்ப்பிப்பதற்கு நான் சாட்சிகளை அழைக்க வேண்டியிருப்பதால் தான் இவ்வளவு விரிவாகப் பேசுகிறேன். புனா ஒப்பந்தம் 1932 செப்டம்பர் 25-ஆம் நாளன்று கையெழுத்தாயிற்று. வங்காள இந்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாரும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. இதற்கு மறுநாளே அதாவது 1932 செப்டம்பர் 26-ஆம் தேதியன்றே காலை 11 மணிக்கு உள்துறை அமைச்சர் டில்லியில் ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டார்; அதாவது மாட்சிமை தங்கிய மன்னர் அரசு இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டதாக அவர் அறிவித்தார். மேன்மை தங்கிய மன்னர் அரசாங்கம் ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் தலைவர்களுக்கும், இந்து சமூகத்தினருக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டிருப்பதை அறிந்து திருப்திப்பட்டிருக்கிறது. இது அடுத்த நாளே சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேதிகள் இங்கே உள்ளன. நீங்கள் விரும்பினால் அதைச் சரிபார்த்துக் கொள்ளலாம். அவைகளைச் சரிபார்த்துவிட்டு, நீங்கள் நேற்றுத் தந்த விளக்கங்கள், அதாவது அரசாங்கம், ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்களுக்கும், இந்து சமூகத்தினருக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணத்திலேயே இருக்கிறது. உங்களுடைய கருத்தும் அதுவாகவே இருக்க வேண்டும்.

*சர் சாமுவேல் ஹோர்:* நான் உங்கள் வினாக்களுக்கு நீங்கள் பேசி முடித்தவுடன் பதில் சொல்லுகிறேன்.

**7494.** *சர் என்.என். சர்க்கார்:* நான் என் கேள்வியை முடித்து விட்டேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* அரசாங்கம் சரியாகவோ, தவறாகவோ, அசல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வின் பத்தி 4-ல் கண்டுள்ள விதிகளின் கீழ் புனா ஒப்பந்தத்தை, சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு இடையிலான, அதாவது ஒடுக்கப்பட்ட இன மக்களுக்கும், மற்ற இந்துக்களுக்கும் இடையிலான அகில இந்திய ஒப்பந்தமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் பொதுவாழ்வில் உள்ள ஒவ்வொருவருக்கும், கட்டாயம் ஒரு விஷயம் தெரிந்திருக்க வேண்டும்; அதாவது புனா ஒப்பந்தம் உருவாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது, சம்பந்தப்பட்ட பிரிவினர்கள் தங்களுடைய கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டு விடக் கூடாது என்பதை உறுதி செய்து கொள்வதில் மிகவும் கவனமாக இருந்தார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும், ஒரு வேளை வங்காளிகளிடம் இருந்து இந்த ஒப்பந்தம் வெளியான ஒரு குறிப்பிட்ட காலம் வரை எந்தவித எதிர்ப்பும் வரவில்லை என்பது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படாமல் போகலாம். (கமிட்டி இந்த உண்மையைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்). பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போது கூட, ஒப்பந்தத் திற்கு ஆதரவாக ஏராளமான தந்திகள் வந்தன. எதிராக ஒன்று கூட இல்லை. அப்படி ஒப்பந்தத்துக்கு

ஆதரவாக வந்த ஏராளமான தந்திகளில் ஒன்று வங்காளத்தின் சிறப்புமிக்க இந்தியர் ஒருவரிடம் இருந்து வந்தது. அவர்தான் சர் பட்டம் பெற்ற வங்கக் கவிஞர் ரவீந்திரநாத தாகூர். வங்காளத்தில் முதன்முதல் எதிர்ப்பு எப்போது கிளம்ப ஆரம்பித்தது என்பது எனக்குத் தெரியாது. ஒப்பந்தத்திற்கு எதிராக விண்ணப்பங்கள் ஏதும் மேன்மை தங்கிய மன்னர் அரசுக்கு புனா ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மூன்று மாதங்களுக்குப் பிறகாவது தரப்பட்டதா என்பதை என்னால் அறிய இயலவில்லை. வங்காளத்தைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் ஒப்பந்தத்தின் தன்மைகள் பற்றி எந்தக் கருத்தும் கூறவில்லை. ஆனால் அரசாங்கம் வங்காளத்தைப் பொறுத்த வரை எந்த மாற்றங்களையும் இருதரப்பினரையும் கலந்து பேசிச் செய்யத் தயாராகவே இருந்தது. ஆனால் அசல் வகுப்புவாரிப் பிரதிநித்துவத்தீர்வின் விதிகளுக்கு இணங்க அரசாங் கம் ஓர் அரசாங்கம் என்ற முறையில் இந்த நோக்கத்துடன் நடை பெறக்கூடிய எத்தகைய பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொள்ள முடியாததாக இருந்தது.

**7495.** எம். ஆர். ஜெயகர்: சர் ரவீந்திரநாத தாகூர் அனுப் பிய தந்தியின் வாசகம் என்ன? அவர் இந்த ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டுள்ளாரா?

சர் சாமுவேல் ஹோர்: ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள அரசை வற்புறுத்தி உள்ளார்.

சர் தேஜ் பகதூர் சாப்ரூ: சர் சாமுவேல் ஹோர் அவர்களே! இது சம்பந்தமாக உங்களுக்கும், குழுவுக்கும் ஒரு கருத்தைச் சொல்லலாமா? நானும், திரு. ஜெயகரும், குழுவின் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பூனாவில் நான்கைந்து நாட்கள் இருக்க நேர்ந்தது. எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது, வங்காளத்தில் உள்ள இந்துக்களிடம் இருந்து நிறையத் தந்திகள் வந்தன. வங்காளத்தில் உள்ள முக்கிய இந்துப் பெருமக்களிடம் இருந்து எனக்கே நேரடியாகத் தந்திகள் வந்தன. அவற்றை நான் இங்குக் கொண்டுவரவில்லை. ஆனால், ரவீந்திர நாத தாகூர், காந்தியைச் சிறையில் சென்று அவர் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்குவதற்கு முன் போய்ப் பார்த்தார். என் நினைவுக் கெட்டிய வரை இதுதான் நடந்தது. இதில் தவறு இருக்குமானால் திருத்திக் கொள்வேன்.

சர் ஹரிசிங் கௌர்: உண்மை அதுதான். அவர் போய்ப் பார்த்தார்.

சர் தேஜ் பகதூர் சாப்ரூ: அங்கே சில வகையான சடங்குகள் நடைபெற்றன. ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டவுடன் நான் பூனாவை விட்டுக் கிளம்பிவிட்டேன். நான் பூனாவை விட்டுக் கிளம்பிய பிறகு இவை எல்லாம் ஒரு வேளை நடைபெற்றவையாய் இருக்கலாம். திரு. ஜெயகர் அங்கே இருந்தவர். எனவே அவர் இது பற்றி ஒரு அறிக்கை தரலாம்.

*எம். ஆர். ஜெயகர்:* ரவீந்திர நாததாகூர் காந்தியைப் பார்க்க வந்த போது நான் அங்கு இல்லை. அப்போது நான் புனாவில் இருக்கவில்லை.

**7496.** *சர் என். என். சர்க்கார்:* சர் ரவீந்திரநாத தாகூர் ஒரு பிராமணர் என்பது சர் சாமுவேல் ஹோருக்குத் தெரியுமா?

*சர் சாமுவேல் ஹோர்:* இந்த விஷயத்தை நான் சர் நிர்பேந்தர சர்க்கார் மூலமே அறிந்து கொண்டேன். இதில் ஒரு மறுக்க முடியாத உண்மை என்னவென்றால், ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள வற்புறுத்தி இந்தியாவில் இருந்து கணக்கற்ற தந்திகளும் கடிதங்களும் தொடர்ந்து பலவாரங்கள் வந்தனவே தவிர, ஒப்பந்தத் துக்கு எதிராக ஒன்றுகூட வரவில்லை.

**7497.** *சர் என். என். சர்க்கார்:* நான் இதை இன்னும் நுணுகிப் பார்க்கவில்லை. காரணம் இதுபற்றிய சாட்சியங்கள் இன்னும் பல வரவேண்டி உள்ளது. எனவே நீங்கள் இந்தத் தந்திகளை எல்லாம் பரிசீலித்துப் பார்த்து விட்டீர்களா? அவை எல்லாம் காங்கிரஸ் காரர்கள் அனுப்பியவைதானா?

*சர் சாமுவேல் ஹோர்:* அவை எல்லாமே இந்துக்கள் இட மிருந்து வந்தவை. அவை முழுக்க முழுக்கக் காங்கிரஸ் இந்துக்கள் அனுப்பியவை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

**7498.** *சர் என். என். சர்க்கார்:* ஏன் போதுமான அளவு எதிர்ப்பு எழவில்லை என்பதையும் அந்தத் தந்திகள் எந்தச் சந்தர்ப்பத்தில் யாரால் அனுப்பப்பட்டன என்பதையும் பற்றி நான் உங்களுக்கு ஒன்றை விளக்கியாக வேண்டும். அதாவது மகாத்மா காந்தி உண்ணாவிரதம் என்ற வார்த்தையை உச்சரித்த உடனேயே, இந்துக்களில் பெரும் பகுதியினர் மட்டுமே நிலை குலைந்து போகவில்லை; மேன்மை பொருந்திய மன்னர் அரசின் நிலையும் இதுபோலத்தான் இருந்தது என்று சொல்வதில் தவ றில்லை அல்லவா?

*சர் சாமுவேல் ஹோர்:* இதை நாங்கள் எண்ணிப் பார்க்கவே இல்லை.

**7499.** *சர் என். என். சர்க்கார்:* அப்படியானால் நான் உங்களை ஒன்று கேட்கிறேன்: அப்போதுதான் அதை எண்ணிப் பார்க்கவில்லை இப்போது எண்ணிப்பாருங்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் இதைச் செய்தால், அல்லது அதைச் செய்யத் தவறி னால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று மகாத்மா காந்தி அறிவித்த உடனேயே நீங்கள் இந்தியன் பீனல் கோடு செக்ஷன் 508-ஐ சுட்டிக் காட்டி, ''இது கிரிமினல் குற்றம் என்றாலும் சிறைச்சாலைக்குள் வைக்காது உங்களை வெளியே விட்டிருக்கிறோம்'' என்று மேன்மை தங்கிய அரசரின் அரசாங்க மும் அவருக்குச் சுட்டிக்காட்டவில்லை. அதற்கு என்ன காரணம்? அவர்பால் உள்ள அளவுமீறிய அநுதாபமும். இந்த மனிதர் உண்ணாவிரதம் தொடங்க அனுமதிக்கப்பட்டு விடுவாரானால்,

அதனால் மிகப்பெரிய விளைவுகள் உண்டாகும் என்ற அச்சமும் தான் இதற்குக் காரணம். எனவே இந்தியக் குற்றவியல் சட்டப் படி அவர் குற்றம் இழைத்தபோதிலும் அது கண்டும் காணாது இருந்ததோடு, மற்ற காரணங்களுக்காகச் சிறையில் அடைக்கப்பட வேண்டிய மகாத்மாவை வெளியே விட்டும் வைத்தீர்கள். இது தானே நடந்தது?

*சர் சாமுவேல் ஹோர்:* சர் நிரிபேத்திர சர்க்கார் நிச்சயமாக நம்ப வேண்டும், வேறு விதக் காரணங்களுக்காகவோ, அச்சுறுத் தல் அல்லது நெருக்கடி காரணமாகவோ எந்த நடவடிக்கையிலும் நாங்கள் ஈடுபடவில்லை. நாங்கள் இதில் எண்ணிப் பார்த்த ஒரே அம்சம் இப்போது ஏற்பட்டுள்ள உடன்பாடு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வின் கீழ் நாங்கள் உத்தேசித்திருந்த உடன் பாட்டுக்கு உகந்ததுதானா என்பதுதான். அப்போதும், அதற்குப் பின் பல வாரங்கள் கழித்தும் எங்களுக்கு முடிவாகத் தெரிந்த தெல்லாம், இந்த உடன்பாடு அத்தகையதுதான் என்பதே!

7500. *சர் என். என். சர்க்கார்:* நான் 1932, டிசம்பர் மாதம் வங்காளச் சட்டமன்ற உறுப்பினர்கள் நவம்பரில் அனுப்பிய தந்தி கள் சிலவற்றை இணைத்துப் பிரதம மந்திரிக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* சர் நிரிபேந்திர சர்க்கார் இந்த விஷயத்தில் ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதை நான் அறிவேன்.

*சர் என். என். சர்க்கார்:* நான் அந்தக் கடிதத்தைப் பிரதம மந்திரிக்கு வங்க மேலவை உறுப்பினர்கள் அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே அனுப்பினேன். இருபத்தைந்து பேர், வங்காளத்திற்கு இதில் பிரதிநிதித்துவம் தரப்படவில்லை என்ப தற்கு எதிர்ப்புத் தெரிவித்து அனுப்பிய தந்திகளைப் பிரதம மந்திரிக்கு அனுப்புவதற்கு முன்பாக இந்தத் தந்திகள் டாக்டர் அம்பேத்கருக்கும் காட்டப் பட்டன. அவர் பம்பாய்க்கு ஒரு தந்தி அனுப்பி, இந்த தந்திகளுக்கு அவர்களின் பதில் என்ன என்பதை விசாரித்தார். எனவே நான் இதை அவரிடம் காட்டி அவர் களுடைய கண்ணோட்டம் என்ன என்பதை அறிவது நல்லது என்று நினைத்தேன். பம்பாயில் இருந்து அவர் பெற்ற பதில் இதோ உள்ளது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படி எதுவும் நான் செய்ய வில்லை என்பதை உண்மையாகக் கூறுகிறேன். சர் நிரிபேந்திர சர்க்கார் என்னை மன்னிப்பாராக. சர் நிரிபேந்திர சர்க்கார் சில தந்திகளை என்னிடம் காட்டியதாகவும், அது குறித்த சில விவரங் களைப் பம்பாயில் இருந்து பெற்றுத் தரக் கேட்டுக் கொண்ட தாகவும் சொன்னார். அப்படி எதுவும் நான் செய்யவில்லை.

*சர் என்.என். சர்க்கார்:* டாக்டர் அம்பேத்கர் தந்த தந்தியின் நகல் என்னிடம் உள்ளது. அவருக்கு வந்த அந்த பதில் தந்தியை நான் உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன்.

*டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* அது ஒன்றும் பதில் தந்தி அல்ல. அது எனக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பிய தந்தி.

*சர் எம்.என். சர்க்கார்:* வங்காள இந்துக்கள் அனுப்பிய தந்தியின் சாரம் என்னவென்றால், பம்பாய்க்கு வந்து அவர்கள சாட்சியம் அளிக்காததற்குக் காரணங்கள் உள்ளன என்பதே பம்பாய்ப் பேச்சுவார்த்தைகளில் தாங்கள் பங்கேற்காதபோதும் புனா ஒப்பந்தம் தங்களைக் கட்டுப்படுத்துவது பற்றியே அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்ட தந்திகளில் இவைகள் எல்லாம் இருப்பதை நீங்களும் அறிந்திருக்கக் கூடும்.

*சர் சாமுவேல் ஹோரார்:* அந்தத் தந்திகள் டிசம்பர் மாதத்தில் அனுப்பப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்றே நான் நினைக் கிறேன். அவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண் டிருக்கும் போது அனுப்பப்படவில்லை.

7501— 2. *டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* தந்தி நவம்பரில் வந்தது. அது அனுப்பப்பட்டது டிசம்பரில். நான் அதற்கான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். வங்காள மேலவை முதல் முறையாகப் பேச்சுவார்த்தைக்குப் பின் நவம்பரில்தான் கூடியது. கூடியதும் இந்த இருபத்தைந்து உறுப்பினர்களும் தந்தியை அல்லது தங்களின் முறையீட்டை பிரதம மந்திரிக்கு அனுப்பினார் கள். எது எப்படி இருந்தாலும், நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது, வங்காளம் விடுபட்டுள்ளது என்பதே. வங்காளத்தின் நிலை என்ன என்பது அந்தத் தந்தியில் கூட விளக்கப்படவில்லை. அடுத்து நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புவது மற்றுமொரு விஷயம் பற்றியதாகும். அதாவது, புனா ஒப்பந்தமும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வும் வங்காளத்தில் மிகப் பெரிய பாதிப்பை, விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கருத்தைச் சர் சாமுவேல் ஹோரார் ஒத்துக் கொள்கிறாரா என்பதே?

*சர் சாமுவேல் ஹோரார்:* இல்லை! நான் அப்படி நினைக்கவில்லை.

*சர் என்.என். சர்க்கார்:* நான் அப்படி நினைக்கிறேன்.

7503. *டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* மிகப் பெரும்பான்மையாக முஸ்லீம் மக்களுக்கு இப்போதுள்ள 119 இடங்கள், 10 அல்லது 12 என்ற எண்ணிக்கைக்குக் குறைக்கப்பட்டால் வங்காளத்தில் பேரழிவை உருவாக்கும் என்பது உங்கள் நினைப்பா?

*சர் என்.என். சர்க்கார்:* அவர்கள் ''மிகப் பெரும்பான்மை யினர்'' என்ற வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது; அவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் மிகக் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்றும் நான் நினைக்கவில்லை.

★ ★ ★ ★ ★

*7509. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அவைத் தலைவர் அவர்களே!

இரண்டொரு வினாக்கள் தொடர்பாகச் சுருக்கமாக என் கருத்துக்களைக் கூறத் தங்கள் கவனத்தைச் சற்றே என்பால் திருப்பக் கேட்டுக் கொள்கிறேன். ஏன் என்றால் சர் நிரிபேந்திர சர்க்கார் விடுத்த வினாக்களுக்கு விடை தரும் வாய்ப்பு எனக்கு வந்து நான் பேசும்போது அவர் அவையில் இல்லாது போய் விடலாம். எனவே இரண்டொரு வினாடிகளில் நான் என் கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். மூன்றாவது வட்டமேசை மாநாடு, சென்ற ஆண்டு நடைபெற்ற பொழுது தமக்குச் சில தந்திகள் வந்ததாகவும், அவர் அவற்றை என்னிடம் காண்பித்ததாகவும், நான் அந்தத் தந்திகளைப்பற்றி விசாரித்ததாகவும், அதற்குப் பதிலாக எனக்குச் சில பதில் தந்திகள் வந்ததாகவும் சர் நிரிபேந்திர சர்க்கார் குறிப்பிட்டார். இந்த விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதன் மூலம் சர் நிரிபேந்திர சர்க்கார் நான் ஏதேனும் தவறான தகவல்கள் தருவதாக எண்ணினால் என்னைத் திருத்த அவருக்கும் வாய்ப்பு கிட்டும். எனக்கு வந்ததாகக் கூறப்படும் பதில் தந்தி நான் இது சம்பந்தமாக மேற்கொண்ட விசாரணைக்குக் கிடைத்த பதில் அல்ல.

*சர் என்.என். சர்க்கார்:* நான் குறுக்கிட விரும்புகிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

*தலைவர்:* தயவு செய்து டாக்டர் அம்பேத்கர் சொல்ல வந்ததைச் சொல்லி முடிக்கட்டும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சர் நிருபேந்திர சர்க்காருக்கு அனுப்பப்பட்ட தந்தி இந்தியப் பத்திரிகைகளில் வெளியானது. மகாத்மா காந்தி தன்னுடைய உண்ணா விரதத்தை முடித்துக் கொண்ட பின் அவர் தீண்டாமை எதிர்ப்புக்குழு ஒன்றை நிறுவினார். புனா ஒப்பந்தத்தைத் ஆட்சேபித்து சர் நிரிபேந்திர சர்க்காருக்கு தந்தி வந்திருப்பது குழு உறுப்பினர்களுக்குத் தெரிய வந்தது. இதன்பேரில் அவர்களாகவே சர் நிரிபேந்திர சர்க்கார் இங்குக் குறிப்பிட்டபடி அதன் நகல் ஒன்றை எனக்கு அனுப்பினார்களே தவிர, அது நான் மேற்கொண்ட எந்த விசாரணைக்கும் விடையாக அனுப்பப்பட்ட பதில் தந்தி அல்ல. நான் அடுத்ததாகக் கமிட்டியின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புவது; சர் நிரிபேந்திர சர்க்கார் புனா ஒப்பந்தத்தை ஆட்சேபித்து

அவரது வங்காளி நண்பர்கள் அனுப்பிய தந்தியை என்னிடம் காண்பித்த போது அவர் என்னிடம் சொன்னது, தான் அந்தத் தந்திகளை அப்படியே எந்தவிதமான குறிப்புரைகளும் இல்லாமல், பிரதம மந்திரியின் பார்வைக்கு அனுப்பிவைக்கப் போகிறேன் என்பதுதான். ஆனால் அவர் இங்கிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் பிரதம மந்திரிக்கு அனுப்பிய கடிதத்தின் நகல் ஒன்றை எனக்கும் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில் நான் கண்டது சர் நிரி பேந்திர சர்க்கார் பிரதம மந்திரிக்குக் கடிதம் மட்டும் அனுப்ப வில்லை, அந்தக் கடிதத்தில் புனா ஒப்பந்தம் கையெழுத்தானபோது வங்காளத்தின் சாதி இந்துக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டார் களா என்பதை விசாரித்து அறியவும் பிரதமரை வற்புறுத்தி இருந் தார். எனவே நான் உடனே பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதி னேன். நான் எனக்கு வந்த தந்தியையும் அந்தக் கடிதத்துடன் இணைத்து அனுப்பியதல்லாமல் வங்காளத்தின் சாதி இந்துக்களின் பிரதிநிதிகள் புனா ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட போது அதில் இடம் பெறவில்லை என்பது நானறிந்தவரை சரியல்ல, தவறு என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தேன். எப்படி என் றால், புனா ஒப்பந்தம் உருவான போது வங்காளத் தின் சாதி இந்துக்களின் அநேக பிரதிநிதிகள் அங்கே வந்திருந்தார்கள் என் பதும், அவர்கள் என்னோடு விவாதித்தார்கள் என்பதும், ஒப்பந்த ஷரத்துக்களை ஏற்றுக் கொண்டு என்னைப் பாராட்டினார்கள் என்பதுமே நானறிந்த உண்மைகள். நான் குறிப்பிட்ட என்னுடைய கடிதத்தின் நகலை வாய்ப்பு வரும் போது அவைக்கு வழங்கு கிறேன். இப்போதைக்கு நான் கூற விரும்புவது இவ்வளவே.

★ ★ ★ ★ ★

*7533. *சர் மிர்ஜா இஸ்மாயில்:* லோத்தியன் பிரபு என்ன சொன்னார் என்றால், ஆளுநரை நியமிக்கிற சட்டமன்றமே, மேல் சபைக்கு உறுப்பினர்களையும் நியமிக்கும் என்பதாகும். ஒருமுறை இப்படி உறுப்பினர்கள் சட்டமன்றத்தால் தேர்வு செய்யப்பட்டு விட்ட பிறகு அவர்களுக்கு கட்டுப்பாடுகள் ஏதும் கிடையாது. அவர்கள் தங்களின் சொந்தக் கருத்துக்களைச் சொல்லாம். கூட் டாட்சி அரசின் முன்வரும் எந்தப் பிரச்சினை பற்றியும் சட்டமன் றத்தை கலந்தாலோசிக்கத் தேவையில்லை. ஒரு முறை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் பிறகு அவர்கள் சுயமாகச் செயல் படலாம். ஆனால் பிரச்சினைகளில் கூட்டாட்சி அரசு என்ன செய்யும் என்றால் மாநில அரசுகளின் யோசனைகளை கருத்துக் களை கேட்கவே விரும்பும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்போதுள்ள மாநில அரசை?

*சர் மிர்ஜா இஸ்மாயில்:* ஆம், அன்றைய தினம் உள்ள அரசை!

* சாட்சியக் குறிப்புகள், தொகுப்பு II-B, 25 ஜூலை 1933, பக்கம் 899.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாநிலங்களில் அப்போது அரசுகள் மாறி இருந்தால் மத்தியில் மாநிலப் பிரதிநிதித்துவத்திலும் மாற்றம் இருக்கும் அல்லவா?

*சர் மிர்ஜா இஸ்மாயில்:* ஆமாம், மத்தியில் இருக்கும். இந்தியாவில் வளர்ந்துவரும் தீவிர மாநிலவாதத்தைத் தடுத்து நிறுத்த இதுவே சிறந்த வழியாக இருக்கும் என்று தோன்றுகிறது. கீழ்ச்சபையில் உங்களுக்கு முன்னமேயே மக்கள் செல்வாக்கு உள்ளது. ஜனநாயக நோக்கில் இது ஒரு வகையில் நியாயமானதே. காரணம் மாநிலங்களிலும் ஜனநாயக அரசுகள் இயங்குகின்றன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்கு ஆதரவாக வாக்களிக்க அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

*எம். ஆர். ஜெயகர்:* இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டால் மாநில சட்டமன்றங்களின் ஆயுள் ஐந்தாண்டுகளிலும் திரு. ஜாஃபருல்லா கான் குறிப்பிட்டதைப் போல மேல் சபையின் ஆயுட்காலம் ஏழு ஆண்டுகளிலும் முடியக்கூடிய ஒரு நிலை ஏற்படலாம். அப்போது ஆள்வோர் மாறுவதும் அவசியம் ஆகிறது.

★ ★ ★ ★ ★

7746. **டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இந்தியா மந்திரியை ஒன்று கேட்க விரும்புகிறேன். அதாவது கூட்டமைப்பில் சேருவது சம்பந்தமாக பல்வேறு சமஸ்தானங்களும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் அரசியல் சட்டத்தில் இடம் பெறுமா?

*சர் சாமுவேல் ஹோார்:* இல்லை, அவை அப்படி இடம் பெற மாட்டா.

7747. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியானால், கூட்டமைப்பு நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட விஷயம் தொடர்பாக எழும் தகராறில் தீர்ப்பளிக்க வேண்டியிருக்கும்போது அந்த விஷயம் கூட்டமைப்பின் அதிகார வரம்புக்கு உட்பட்டதுதானா என்பதை எப்படி முடிவு செய்வது?

*சர் சாமுவேல் ஹோார்:* ஒரு சாதாரண மனிதன் என்ற முறையில் நான் இவ்வாறு ஊகிக்கிறேன் — இப்போது ஒப்பந்தங்கள் எப்படி செயல்படுத்தப்படுகின்றனவோ அதுபோன்றே அவையும் செயல்படுத்தப்படும்.

*சர் தேஜ்பகதூர் சாப்ரூ:* ஆம், அப்படித்தான்.

7748. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் அது அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியாக இருக்காது அல்லவா?

---

* சாட்சியக் குறிப்புகள், தொகுப்பு II-B, 24 ஜூலை 1933, பக்கம் 901.

*சர் சாமுவேல் ஹோர்:* இல்லை. அரசியல் சட்டத்தில் அது இடம்பெறாது. பாராளுமன்றச் சட்டத்தில் உள்ள எந்த உடன் படிக்கைகளும் அரசியல் சட்டத்தில் இடம்பெற்றதில்லை. சர் தேஜ் பகதூர் சாப்ரூ, மற்றுமுள்ள இந்தியர்கள், நான் சொல்வது தவறு என்றால் என்னைத் திருத்தலாம். இந்த உடன்படிக்கைகள் தனி யாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

*சர் தேஜ் பகதூர் சாப்ரூ:* உண்மைதான். உடன்படிக்கைகள் ஆங்காங்குள்ள மாநில நிர்வாகச் சட்டத்தின் அங்கங்களே ஆகும்.

★ ★ ★ ★ ★

*8102. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* பின்வரும் விஷயத்தை இந்தியா அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கவர்னர்-ஜெனரல் சட்டப்பூர்வமாகப் பிறப்பிக்கும் ஆணைகளை நிறைவேற்றும் விசேடப் பொறுப்பு ஆளுநருக்கு இருக்கிறது என்று வெள்ளை அறிக்கையின் 70-ஆவது ஷரத்து கூறுகிறதல்லவா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம்.

*8103. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கவர்னர் ஜெனரல், நிதிநிலை சம்பந்தமாக மாநில அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய உத்திரவுகளை ஏதாவது பிறப்பித்தால் அவை நிறைவேற்றப்படும் படியாக ஆளுநர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

*சர் சாமுவேல் ஹோர்:* ஆமாம்! கூட்டாட்சி வரிவிதிப்புத் துறையில் அப்படித்தான் நடைபெறும்.

*8104. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாநில அரசுகள் நிறை வேற்ற வேண்டிய உத்திரவுகள் எவையேனும் கூட்டாட்சி அரசாங் கத்தால் பிறப்பிக்கப்பட்டால், அவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பு கவர்னரைச் சார்ந்தது அல்லவா?

*சர் சாமுவேல் ஹோர்:* ஆமாம். கவர்னர்-ஜெனரல் பிறப்பித்த உத்திரவுகள்.

*சர் ஹறி சிங் கௌர்:* சட்டப்படி பிறப்பித்த உத்திரவுகளை.

*8105. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆமாம், சட்டப்படி பிறப்பித்த உத்திரவுகளைத்தான். ஆனால் இன்னுமொரு கேள்வி: வெள்ளை அறிக்கையில் மத்திய-மாநில நிர்வாகத் தொடர்புகளைப் பற்றிப் பேசுகிற வாசகத்தில்—நான் உத்தேசமாகத்தான் சொல்லு கிறேன்—மத்திய அரசு நிர்வாகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை மாநில அரசு நிறைவேற்றித்தர வகை செய்யப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். இதற்கென தனது சொந்த அமைப்புகளையும் அது நியமித்துக் கொள்ளலாம் என்று உள்ளதாகவே தோன்றுகிறது.

*சர் சாமுவேல் ஹோரர்:* உண்மைதான். மற்ற கூட்டாட்சி முறைகளை ஆராய்ந்து பார்த்த அனுபவத்தைக் கொண்டு சொல்லுகிறேன். நிர்வாகத்தில் கூடிய மட்டும் செய்ததையே திரும்பச் செய்வது கூடாது. பொதுவாகப் பார்த்தால் மாநில அரசு கூட்டாட்சி விஷயங்களில், கூட்டாட்சி அரசின் உத்திரவுகளை நிறைவேற்றுவதுதான் நல்லது. இல்லை என்றால் ஒருவர் செய்த வேலையையே மற்றவர் செய்கிற நிலை இந்தியா முழுவதும் இருக்கும்.

**8106.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், மாநில அரசுகள் அடங்காப் பிடாரிகளாக மாறி, மத்திய அரசின் ஆளுகைக்கு ஒத்துப்போகாத நிலை உருவாகிற போது, மத்திய அரசு மாநில அரசின் நிர்வாக அமைப்புகளை தங்கள் பணிக்கு பயன்படுத்திக் கொள்ளாமல் தங்கள் நிர்வாகப் பணிகளை நிறைவேற்றிக் கொள்ள தமது சொந்த அமைப்புகளை நியமித்துக் கொள்ளலாம் என்பதே.

*சர் சாமுவேல் ஹோரர்:* ஆம், அவ்வாறு செய்யலாம்.

★ ★ ★ ★ ★

**8138.** * *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வங்காளத்தில் நிர்வாகம் சரியாக இல்லை என்பது எனது எண்ணம். காரணம் வங்காள ஒப்பந்தப்படி தனக்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் தேடிக் கொள்ள அதால் முடியவில்லை. இது நான் முன் சொன்னதையே வேறுவகையில் சொல்வதே ஆகும்!

*சர் சாமுவேல் ஹோரர்:* இது ஒரு காரணம் என்றாலும் வங்காள ஒப்பந்தம் நீண்ட காலமாக உள்ளது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உண்மைதான்.

★ ★ ★ ★ ★

** **8527.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* வெள்ளை அறிக்கையின்படி வருமான வரி வசூலிப்பதில் சில முரண்பாடுகள் இருப்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாகாண அரசின் தேவைகளுக்காக ஓர் அணா வசூலிக்க வேண்டியுள்ளது என்று வைத்துக் கொள்வோம். அப்போது கூட்டாட்சி அரசின் நோக்கங்களுக்காக ஓரணா வசூலிப்பது தேவையில்லை என்றாலும், அதற்கும் சேர்த்து ஓரண வசூலிக்காமல் மாகாண அரசு தனக்கு வேண்டிய ஓரணாவை வசூலிக்க முடியாது. இது ஒருபுறம். இன்னொருபுறவும், வருமான வரி வசூலிப்பது மாகாண அரசுக்குத் தேவையில்லாது இருக்கலாம்; ஆனால் கூட்டாட்சி அரசுக்குத் தேவையானதாக இருக்கலாம். அப்போது கூட்டாட்சி அரசு அதை

---

* மேற்படி தொகுதி II B 28 ஜூலை 1933, பக்கங்கள் 990.

** [illegible]

வசூலிக்கிறது. 50-க்கு 50, என்ற விகிதத்தில் அதாவது இரண்டணா வசூலித்து ஒரு அணாவைத் தான் எடுத்துக் கொண்டு, மீதியுள்ள ஒரு அணாவை மாநில அரசுகளுக்கு—அவைகள் விரும்பவில்லை என்றாலும்—வழங்குகிறது.

*சர் சாமுவேல் ஹோர்:* இங்கே கூறப்பட்ட கருத்துக்களை எல்லாம் நான் கவனத்தில் கொள்வேன்: எந்த ஏற்பாடாக இருந்தாலும் இவை போன்ற குறைபாடுகள் இருக்கவே செய்யும் என்பதை நினைவில் கொள்ளுமாறு குழு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வெள்ளை அறிக்கையில் இதுபற்றி என்ன கூறப்பட்டுள்ளது என்பதை என்னால் சரியாகச் சொல்ல இயலாது. ஆனால் ஏதாவது ஒரு வகையான முறைகேடுகள் மத்திய—மாநில அரசுகளுக்கு இடையே வருமான வரி வசூலிப்பதில் இருக்கத்தான் செய்கின்றன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இந்தியா மந்திரி மற்றும் சர் ஆஸ்டன் சேம்பர்லின் கவனத்தை இரண்டு விஷயங்கள்பால் ஈர்க்க விரும்புகிறேன். சர் ஆஸ்டன் சொன்னார் மாநிலங்கள் அவற்றின் தேவைக்காக வருமான வரி வசூலிக்க விரும்பினால் அதற்கு வழியில்லை என்று. 139-ஆவது ஷரத்தை அவரது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதில் அடைப்புக் குறிகளுக்குள்ளே பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:'' ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்துக்கு அதாவது 50 சதவிகிதத்துக்கு குறையாமலும், 75 சதவிகிதத்துக்கு மிகாமலும் மொத்த வருவாயிலிருந்து ஈட்டிக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

*சர் சாமுவேல் ஹோர்:* அது வருமானவரி—''(மாகாணங்கள் விதிக்கும் எத்தகைய கூடுதல் வரி நீங்கலாக.)'' அதன்படி மாநில அரசு தனது தேவைக்காக வருமான வரி மீது கூடுதல் வரி விதிக்க உரிமை உடையது.

*சர் ஏ. பி. பத்ரோ.* அத்துடன் கூட.

8528. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது 139 ஆவது யோசனை.

*சர் சாமுவேல் ஹோர்:* உண்மைதான். நாம் முகவுரையில் பக்கம் 30-ல் இதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறோம் என்பதைக் கமிட்டி கவனிக்கும்.

8529. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* கூட்டாட்சிக் காரியங்களுக்கு வருமானத்துக்காக, கூடுதல் வரி விதிப்பது பற்றி சற்று முன் இங்கே இந்தியா மந்திரி குறிப்பிட்டதன்பால் அவரின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இதில் முக்கியமான அம்சம் கவர்னர் ஜெனரலின் முன் அனுமதி பெறுவது என்று அவர் கூறினார். ஆனால் இங்கு 141-ஆவது யோசனையை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதன்படி, கூட்டமைப்புக் கரியங்களுக்காக வருமான வரி மீது கூடுதல் வரி (Surcharge) விதிப்பதற்கு கவர்னர் ஜெனரலின் முன் அனுமதி

பெறவேண்டுமென்று வரையறுக்கப்படவில்லை. 138, 139 ஆவது யோசனைகளின்படி, மாகாண வருவாய்கள் சம்பந்தமாகத் தான் கவர்னர்-ஜெனரலின் முன்னனுமதி பெற வேண்டும். 141 ஆவது பத்தியின்படி, இவ்விதம் கவனர்-ஜெனரலின் முன்னனுமதி எதுவும் பெற வேண்டியதில்லை.

*சர் சாமுவேல் ஹோர்:* டாக்டர் அம்பேத்கர் கூறுவது முற்றிலும் சரியே. நான் சுற்றுக்கு விட உள்ள குறிப்புகளில் இதை நன்கு கணக்கிலெடுத்துக் கொள்வேன்.

*சர் அக்பர் ஹைதரி:* அதோடு கூட 49-வது தலைப்பு கூட்டாட்சிக்காகத் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் உள்ளது. விவசாய வருமானம் அல்லது கார்ப்பரேஷன் வருமானம் தவிர மற்ற இனங்களிலான வரிவிதிப்பு நிர்வாகம் இரண்டும் கூடுதல் வரி (Surcharge) விதிப்பதற்கு மாகாணங்களுக்குள்ள அதிகாரத்திற்கு உட்பட்டதே ஆகும்.''

*லார்டு எஸ்டேஸ் பெர்சி:* இவ்விதம் கூறுவது போதுமானதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. ஏன் என்றால், நமக்கு வந்துள்ள சகல சாட்சியங்களும் இந்தியாவில் நான் இதுவரை கேட்டறிந்த எல்லாத் தகவல்களும் மாகாணங்களின் கூடுதல் வரி விதிப்புக்குப் பலத்த எதிர்ப்பு இருப்பதையே காட்டுகின்றன.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் உறுதியாகச் சொல்வேன், இது வணிகப் பெருமக்களின் கருத்தாகவே இருக்கும்.

*லார்டு. எஸ்டேஸ் பெர்சி:* இது ஒவ்வொரு இந்தியனின் கருத்து என்பதை, நான் அவர்களோடு விவாதிக்க வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் கேட்டறிந்துள்ளேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இல்லை. உண்மை நிச்சயமாக அது அல்ல.

★ ★ ★ ★ ★

8537. *லார்டு ராங்கிலர்:* டாக்டர் அம்பேத்கர் கூறிய கருத்தை ஒட்டி நான் ஒரு வினா எழுப்ப விரும்புகிறேன். இது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று எனவும் நான் கருதுகிறேன். கவர்னர் ஜெனரலின் ஒப்புதலைப் பொறுத்தவரையில், நிச்சயமாகக் கூட்டாட்சி வரிவிதிப்பு கவர்னர் ஜெனரலின் ஒப்புதலுக்கு உட்பட்டதுதான். நாம் இங்கே கடைப்பிடிப்பது போல கவர்னர் ஜெனரலின் முன்முயற்சியின் பேரில்தான், அவரது தீர்மானத்தின் பேரில்தான் எந்த வரிவிதிப்பு பற்றியும் பரிசீலிக்க இயலும்.

*சர் சாமுவேல் ஹோர்:* உண்மைதான். ஆனரல் லார்டு ராங்கிலர் உண்மையிலேயே இரண்டு விஷயங்களைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார். பொதுவான அரசியலமைப்புச் சட்டப்படி, பண சம்பந்தமான பரிந்துரைகளுக்கு மன்னரின் ஒப்புதல் வேண்டும். அது அப்படியே உள்ளது. நான் இப்போது

எடுத்துரைக்க விரும்புவது, இந்திய அரசியல் அமைப்புப்படி, கவர்னர் ஜெனரலின் தலையீடு சில விஷயங்களில் கட்டாயம் ஆகிறது; இது அவரது விசேடக் கடமைப் பொறுப்பாகும்.

*8538. லார்டு ராங்கிலர்:* அதுதான் யதார்த்தம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உண்மையில் டாக்டர் அம்பேத்கருக்குத் தந்த விளக்கம் பத்தி 141-ன் கீழ் கூட்டாட்சி சட்டமன்றம் கவர்னர் ஜெனரலின் முன்னனுமதி இல்லாமலேயே வரி விதிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது என்ற கருத்துப்படுவதாக உள்ளது.

*எம். ஆர். ஜெயகர்:* நான் லார்டு ராங்கிலரை பத்தி 45-ஐப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் அம்பேத்கரின் வினாவுக்கு அதில் விடை உள்ளது. கவர்னர் ஜெனரலின் பரிந்துரை கூட்டாட்சி சட்டமன்றத்தின் எந்தச் சபையிலும் வரிவிதிப்பு முன்மொழிவானாலும் அதற்குத் தேவைப்படும்.

*லார்டு ராங்கிலர்:* ஆமாம். உண்மை. இதைநான் ஏற்றுக் கொள்கிறேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது கவர்னர் ஜெனரலின் தனிப்பட்ட அதிகாரம் பற்றியது. அப்படி ஒரு ஷரத்து அதில் சேர்க்கப்பட்டிருப்பதற்குக் காரணம் பத்தி 138-ல் விவரித்துள்ள வரிகள் மத்திய கருவூலத்திற்குப் போவதில்லை; அவை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

★ ★ ★ ★ ★

*8575. *டாக்டர் பி. ஆர் அம்பேத்கர்:* அவைத்தலைவர் அவர்களே, நான் இந்த விஷயத்தில் குறுக்கிட்டு சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எந்த விதமான அபிப்பிராய பேதங்களையும் உருவாக்க வேண்டும் என்பது என் நோக்கம் அல்ல. ''இப்போது உள்ள, உரிமைகள், இனிமேல் பெற உள்ள உரிமைகள்'' என்னும் சொல்லாட்சி பற்றி சில கருத்து வேறுபாடுகள் உள்ளன என்பது குழுவுக்குத் தெரியும். சிவில் நிர்வாகம் ஒரு கருத்தைக் கூறுகிறது. மன்னரின் சட்ட வல்லுநர்கள் வேறு விதமான கண்ணோட்டத்தில் இருக்கின்றனர். எனவே இந்தக் கமிட்டி, விதி முறைகள் வடிவமைக்கும் பொழுது தனது கருத்தைத் தெளிவாக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ''இப்போதுள்ள உரிமைகள், இனிமேல் பெற உள்ள உரிமைகள்'' என்ற இதே சொல்லாட்சிதான் 1909 ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்க அரசியல் சட்டத்திலும் 1909-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேன்மை தங்கிய சபைத் தலைவர் அவர்களே, இந்தியா மந்திரி அவர்களே இந்த வாசகங்களும், சொல்லாட்சியும் தென் ஆப்பிரிக்க அரசால் எப்படி செயல்படுத்தப்படுகின்றன, அர்த்தப் படுத்தப்படுகின்றன என்பதை நீங்கள் இருவரும் நினைத்தால்

---

* சாட்சியக் குறிப்புகள் தொகுதி II B 28, ஜூலை 1933. பக். 1010.

குடியேற்ற நாட்டு அலுவலகத்திலிருந்து கேட்டுத் தெரிந்து கொள் வது என்ன உங்களுக்கு அவ்வளவு கடினமான காரியமா?

*சர் சாமுவேல் ஹோர்:* நிச்சயமாக நானிந்த யோசனையைப் பரிசீலிப்பேன். எப்படி இருந்தாலும் இது பற்றிய நேரம் வருகிற போது நிச்சயமாக நாம் இது பற்றிப் பரிசீலிக்க வேண்டியது அவசியம். ஆனால் சர் புருஷோத்தம தாஸ் எழுப்பியுள்ளதை போன்றது அல்ல இந்தக் கேள்வி.

**8576.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இல்லை. அதனால் தான் நான் பேசத்தொடங்கும்போதே சொன்னேன் நான் இதில் எந்தவித அபிப்பிராய பேதங்களையும் உருவாக்க விரும்பவில்லை என்று. ஒத்த கருத்துக்களை நாம் ஏன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது என்பதைத் தெரிந்து கொள்ளவே கேட்டேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* உண்மைதான்.

★ ★ ★ ★ ★

**8633.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சர் அக்பர் ஹைதரி பத்தி 141 அமுல்லாக்கம் பற்றிச் சொன்ன கருத்தின் மீது நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். நேற்று அவர் சொன்ன கருத்தின் மீது நீங்கள் சுருக்கமாகத் தந்த விளக்கத்தில் மத்திய கூட்டாட்சியின் சில சுமைகளை மாநிலங்கள் தாங்கிக்கொள்ள சம்மதம் தெரிவித் துள்ளதைப் பற்றி மகிழ்ச்சி அடைவதாக நீங்கள் சொன்னீர்கள்.

*சர் சாமுவேல் ஹோர்:* ஆமாம்.

**8634.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதில் நான் என்ன தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்றால், நீங்கள் விரும்பி னால், எனது இந்தக் கேள்விக்கு இப்போதே பதில் தரலாம். அல்லது பிறகு தர விரும்பினாலும் எனக்குச் சம்மதமே. நான் அறிய விரும்புவது, சர் அக்பர் ஹைதரி வருணித்த கூட்டாட்சி அமைப்பின் சுமைகளை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்த கட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? மாநிலங்களைத் தங்கள் சுமைகளைப் பகிர்ந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளும் கூட்டாட்சி நிதித்துறை கடந்து செல்லவேண்டியுள்ள கட்டங்களைப் பற்றி அவர் விவரித்தது உங்களுக்குத் தெரியும்.

*சர் சாமுவேல் ஹோர்:* ஆமாம்.

**8635.** *சர் அக்பர் ஹைதரி:* கூடுதல் சுமைகள் பற்றி?

*சர் சாமுவேல் ஹோர்:* மூன்று வகைச் சுமைகள் இருக்கின் றன. முதலாவது சுமை மறைமுக வரிவிதிப்பு. முதலில் இருந்தே இதை அவர்கள் செயல்படுத்தி வருகின்றனர். இரண்டாவது சுமை கார்ப்பரேஷன் வரிகள், அல்லது குறிப்பிட்ட காலங்களுக்குப் பிறகு வசூலித்து வரும் இவற்றுக்குச் சமமான வரிகள். மூன்றாவ தாக அவசர காலங்களில் அவர்கள் விதிக்கும் கூடுதல்வரி.

**8636.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கா:* அவர் சில நிபந்தனை களைச் சொன்னார் என்று நினைக்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* அவர் சில நிபந்தனைகளை அறிவித்தார். நான் சொன்ன மூன்றாவது சுமையான கூடுதல்வரி பற்றி நான் கூறியதில் ஏதாவது தவறு இருக்குமானால் சர் அக்பர் எனக்கு அதைச் சுட்டிக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**8637.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அப்படியானால் கூடுதல் வரிவிதிப்பில் கூட்டாட்சி நடைமுறைப்படுத்துகிற நிபந்தனைகள் பொருத்தமானவை என்று நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* அப்படித்தான் என்று நினைக்கிறேன். என்றாலும், துல்லியமாக எதையும் கூறி என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள நான் விரும்பவில்லை. பொதுவாக அது ஒரு நியாயமான நல்ல ஏற்பாடு என்றே எனக்குத் தோன்றுகிறது.

**8638.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் உங்கள் முன் வைக்க விரும்பும் அடுத்த கேள்வி இதுதான்: அந்த நிலைமை மேற்கொள்ளப்படுமானால், அல்லது 141 ஆவது யோசனையின் படியான நிலைமை கடைப்பிடிக்கப்படுமானால் கூட்டாட்சியின் நிதி நிர்வாகம் முற்றிலும் மறைமுக வரி விதிப்பின் மூலமாகவே அல்லவா நடைபெற வேண்டியிருக்கும்?

*சர் சாமுவேல் ஹோர்:* முற்றிலும் மறைமுக வரிவிதிப்பின் மூலமாக அல்ல.

**8639.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* முற்றிலுமாக இல்லை என்றால், பெரும் அளவுக்கு?

*சர் சாமுவேல் ஹோர்:* அநேகமாகப் பெருமளவுக்குத்தான். மறைமுகவரி விதிப்பு இப்போது இருப்பதைப் போல் இந்திய நாட்டின் வருமானத்தில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.

**8640.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சர் சாமுவேல் ஹோர்; நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் இப்போது இருப்பதைவிடக் கூட்டாட்சி முறையில் இது அதிகமாகவே இருக்கும். ஏன்என்றால் இந்திய சமஸ்தானங்கள் இதற்கு ஒப்புதல் அளிக்க மறுக்குமாதலால் பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்த இந்தியர்களும் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், இதனால் இருதரப்பாரும் நேரடி வரிவிதிப்புக்குப் பதிலாக மறைமுக வரி விதிப்புக்கே சம்மதம் தெரிவிப்பார்கள். அந்நிலையில் நேரடி வரிவிதிப்பை பிரிட்டிஷ் இந்தியா மட்டுமே ஏற்க வேண்டிவரும், இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, இப்போதிருப்பதைவிட மறைமுக வரிவிதிப்பு அவர்கள் மீது மேலும் மெலும் அதிகமாகத் திணிக்கப்படும்.

*சர் சாமுவேல் ஹோர்:* இன்னொரு வகையில் பார்த்தால், குறைந்த மறைமுக வரிவிதிப்புக்கே சமஸ்தானங்கள் ஆதரவாக உள்ளன என்று எண்ணுகிறேன்.

8641. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அதற்குக் காரணம் இப்போது அவர்கள் இதில் தலையிட முடியாது என்பதே. மறைமுக வரிவிதிப்புக்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்களானால், இந்த நிலைமை இனிமேலும் தொடர்ந்து வரிவிதிப்பின் பாதகங்களை அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்.

*சர் சாமுவேல் ஹோரார்:* டாக்டர் அம்பேத்கர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த முக்கோண நிர்வாக அமைப்பில், மாநிலங்கள் நேர்முக வரி விதிப்பிலேயே ஆர்வம் காட்டும். ஏன் என்றால் அதில் அவர்களுக்குப் பங்கு இருக்கிறது.

8642. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* அது உண்மையாகக் கூட இருக்கலாம். ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் வசூலிக்கப்படும் இந்திய வருமானத்திற்குக் கூட்டாட்சி அரசு முற்றிலும் ஒரு சுமையாக இருப்பதை மாநில அரசுகள் விரும்ப மாட்டா. இவைகள் யூகங்கள்தான். ஆனாலும் இது கூட்டாட்சியின் பொருளாதாரம் திசை மாறி விடுவதற்குக் காரணமாகி விடக்கூடும். இப்படி நான் சொல்வதனால், கூட்டாட்சி செயல்படுவதற்கு அது தன்னைச் சுற்றி ஒரு காப்பு வரி வேலியைப் போட்டுக் கொள்ள நேரிடலா மல்லவா?

*சர் சாமுவேல் ஹோரார்:* இவை எல்லாம் யூகங்கள்தான் என்று டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார். நான் இதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இவ்வாறு இவற்றை யூகங்கள் என்று ஒப்புக் கொண்டபிறகு, இப்படித்தான் நடக்கும் என்று ஆரூடம் கூற நான் தயாராக இல்லை.

8643. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இதை இத்துடன் விட்டு விடுகிறேன். நான் அடுத்ததாகச் சர் சாமுவேல் ஹோரிடம் கேட்க விரும்புகிற கேள்வி 141 ஆவது யோசனை பற்றியது. ஒரு நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் மதிப்பிடப்படும் ஒரு தொகைக்கு சமமான தொகையை சமஸ்தானங்கள் கூட்டாட்சியின் வருவாய்க்கு வழங்கும் என்று நீங்கள் கூறினீர்கள், ''நிர்ணயிக்கப்பட்ட'' என்னும் சொல் இங்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் இன்று காலை நீங்கள் விளக்கினீர்கள். எனவே இது குறித்து எத்தகைய கேள்விகளையும் தங்களிடம் கேட்கப்போவதில்லை, எனினும் பின்வரும் கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன்: இந்த நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சமஸ்தானம் அளிக்க வேண்டிய இந்தத் தொகை முடிவில் கூட்டாட்சிக்குச் செலுத்தப்படும்படிப் பார்த்துக் கொள்வதற்கு வெள்ளை அறிக்கையில் ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

*சர் சாமுவேல் ஹோரார்:* அப்படியானால் அது சமஸ்தானங்களைப் பொறுத்தவரை கடமை தவறியதாக இருக்கும் அல்லவா?

8644. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆமாம். ஒருக்கால் ஒரு சமஸ்தானம் தன் பங்கைச் செலுத்தவில்லை என்றால், நான் இதை ஒரு உதாரணத்துக்குத்தான் சொல்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோர்:* அந்த மாதிரியான சமயங்களில் வைசிராய் இதில் தலையிட முடியும் என்பது என் கருத்து.

*8645. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உங்களுக்கே தெரியும், வைசிராய் கூட்டாட்சி அமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்.

*சர் சாமுவேல் ஹோர்:* டாக்டர் அம்பேத்கர் பத்தி 129-ஐப் பார்க்க வேண்டும். அதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு சமஸ்தானமும் கூட்டமைக்கு அது ஆற்ற வேண்டிய கடமைப் பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவது தொடர்பாக அந்த சமஸ்தானத்தின் அரசுக்குப் பொதுவான ஆணைகளைத் தமது உசிதம்போல் பிறப்பிக்க கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு.''

*8646. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உண்மைதான். ஆனால், நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், பத்தி 129-ன்படி பொதுவான உத்திரவுகள் பிறப்பிக்க மட்டுமே கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது ஆனால் அந்த உத்தரவுகள் மதிக்கப்படாதபோது அதற்கெதிராக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்படவில்லை.

*சர் சாமுவேல் ஹோர்:* மாகாணங்கள் சம்பந்தமாகவும் சரி, சமஸ்தானங்கள் சம்பந்தமாகவும் சரி இத்தகைய தடுப்பு நடவடிக்கைகள் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

*8647. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* மாநிலங்களைப் பொறுத்தவரையில் இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. ஏன் என்றால், கவர்னர்-ஜெனரலின் ஆணைகள் முறையாக நிறைவேற்றப்படுவதைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு ஆளுநருக்கு இருக்கிறது. இதைப் பொறுத்த மட்டில் ஆளுநர், கவர்னர்-ஜெனரலின் நேரடியான நிர்வாக ஆளுகைக்கு உட்பட்டவராக இருப்பதால், மாநிலங்கள், மத்திய அரசு உறவு தொடர்பாகவுள்ள அவருடைய ஆணைகள் செயல்படுத்தப்படுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

*சர் சாமுவேல் ஹோர்:* இதே போன்ற ஏற்பாடு கவர்னர்-ஜெனரல், சமஸ்தானங்கள் விஷயத்திலும் உள்ளது அல்லவா?

*8648. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இல்லை, குறிப்பாணையில் நீங்கள் விளக்கிக் கூறியுள்ளபடி, ஆளுநர் தமக்கு இடப்படும் ஆணைகளை மீறினால் அவர் திரும்ப அழைக்கப்படலாம். சமஸ்தானங்களுக்கும் மத்திய அரசக்கும் இடையேயான உறவுகள் தொடர்பாக இத்தகைய ஏற்பாடு ஏதும் இல்லை.

*சர். சாமுவேல் ஹோர்:* இத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கவர்னர்-ஜெனரலின் பொறுப்பு என்பது அவரது உசிதப்படியான பொறுப்பையே குறிக்கும்; அதாவது அவரது பொறுப்பு இங்கிருந்து பிறப்பிக்கப்படும் அவரது உத்தரவுகளுக்கு உட்பட்டது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஆனால் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது இதுதான்: மாகாண நிர்வாகம் சம்பந்தப்பட்டவரை ஆளுநர் கவர்னர்-ஜெனரலின் அதிகார வரம்புக்கு உட்பட்டவர்;

''இப்போது உள்ள உரிமைகள், இனிமேல் பெற உள்ள உரிமைகள்'' — என்ற சொல்லாட்சிகள், தென் ஆப்பிரிக்க அரசியல் சட்டத்தில் காணப்படுகிற அதே சொல்லாட்சிகள்தான். இந்தச் சொல்லாட்சி தென் ஆப்பிரிக்காவில் எப்படி செயல்படுத்தப்படுகிறது என்பதை அங்குள்ள குடியேற்ற நாட்டு அலுவலகத்தில் கேட்டறிந்து ஒரு அறிக்கை பெற எப்படி அவரால் முடியாமல் போனது என்பது எனக்கு மிகுந்த வியப்பாக உள்ளது.

*சர் சாமுவேல் ஹோரார்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, இது பற்றி விசாரித்தோம். இரண்டு சொல்லாட்சிகளும் ஒரே சாயல் கொண்டவையாக உள்ளன. இந்தக் கோடைக்காலத்தில்தான் நாங்கள் டொமினியன் அலுவலகத்தில் இது பற்றிய விளக்கம் கேட்டோம். விவரங்கள் எனக்கு வந்து சேரவில்லை. என்றாலும் இரண்டும் வேறானவை; தனித் தனியானவை என்றே அறிந்தேன். தென் ஆப்பிரிக்காவைப் பொறுத்தவரை இழப்பீடு பற்றிய உத்திரவாதம் எதுவுமே இல்லை.

*சர் மனுபாய் என். மேத்தா:* ஆஸ்திரேலியாவில் இதே நிலை இருக்கிறது என்றேதான் நினைக்கிறேன்.

***11298.*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் அறிய விரும்புவது, 'இனிமேல் பெற உள்ள உரிமைகள்' என்ற வாசகம் தென் ஆப்பிரிக்காவில் தென் ஆப்பிரிக்க அரசால் எப்படி அர்த்தப் படுத்தப்படு கிறது, இரண்டும் ஒன்றுதானா என்பதே?

*சர் சாமுவேல் ஹோரார்:* நான் இது பற்றித் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா இரண்டிடமுமே விவரம் கேட்டிருக்கிறேன். வந்தவுடன் நான் இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

★ ★ ★ ★ ★

***11438.*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* ஒன்று அல்லது இரண்டு மாநிலங்களுக்கு ஒரே பொதுத் தேர்வு ஆணையம் அமைக்க ஒன்றும் தடை இருக்காது என்றே நினைக்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோரார்:* இருக்காது. இதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கிறோம்.

★ ★ ★ ★ ★

****11526.*** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இடையே சற்றுக் குறுக்கிட்டு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உள்ளூர்ப் பணிகளில் மேற்கொள்ளப்பட்ட களையெடுப்புப் பற்றி சர் மால்கம் ஹெய்லி சொன்னார், அவர்கள் அமைச்சக நிர்வாக அதிகாரத்துக்குள் அதிக அளவு மாற்றப்பட்டதே சம்பள விகிதங்கள் குறைப்பின் காரணமாகத்தான் என்று அறிகிறேன். அவர்கள் பணி மாநிலமயமாக்கப்பட்டவுடன், அவர்கள் ஊதியம் முன்பு அவர்கள்

---

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-B, 3 அக்டோபர் 1933, பக்கம் 1072.

பெற்றுக் கொண்டிருந்ததற்கும் குறைவாகப் போய் விட்டது. இதன் விளைவாக இந்தக் குறைந்த சம்பளம் ஐரோப்பிய விண்ணப்பதாரர்களைக் கவருவதாக இல்லை.

*சர் சாமுவேல் ஹோர்:* ஆம். அதற்கு மாற்று ஏற்பாடுகள் உள்ளன. வேறுவகையில் சொன்னால் அவர்கள் மாநிலப் பணித்துறைகளிலிருந்து 'இம்பீரியல்' பணித்துறைகளுக்கு மாற்றப்படுகின்றனர்.

★ ★ ★ ★ ★

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தருகிற சம்பளம்தான் வேறுபாட்டிற்கு காரணமே தவிரப் பதவி மாற்றம் அன்று.

★ ★ ★ ★ ★

**11669. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இந்த விஷயத்தில் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். புதிதாக வருபவர்களுக்கு ஒரேயடியாக உரிமை வழங்கி விடாமல், இந்தியா மந்திரி விருப்புரிமையைத் தன்வசம் வைத்திருப்பதும், புதிய நிலைமைகளால்தான் உண்மையிலேயே பாதிக்கப்படும் காரணத்தாலும், புதிய விதிகளைப் பயன்படுத்திக் கொள்ள தான் விரும்பாததாலும் பதவியிலிருந்து ஓய்வு பெற நினைப்பவருக்கு அவர் தமது விருப்புரிமையைப் பயன்படுத்துவதும் உசிதமாக இருக்குமல்லவா?

*சர் சாமுவேல் ஹோர்:* இந்த யோசனையை நாம் ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். டாக்டர் அம்பேத்கர் யோசனை புதிதாக வருபவர்கள் சம்பந்தமானதுதான் என்று கருதுகிறேன்.

*11670. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உண்மைதான். நான் புதிதாக வருபவர்களைத்தான் குறிப்பிடுகிறேன். ஓர் ஊழியர் பதவியிலிருந்து விலக விரும்புவதற்கு புதிய விதிகள் தனக்குப் பிடிக்காத்தே காரணம் என்பதை இந்தியா மந்திரிக்கும் அவருடைய ஆலோசகர்களுக்கும் உண்மையிலேயே நிரூபிக்கும்போது, அத்தகைய ஊழியருக்கு உதவவாவது இந்தியா மந்திரி தனக்கென்று சில விருப்ப அதிகாரங்களை வைத்துக் கொள்வது நல்லதல்லவா?

*சர் சாமுவேல் ஹோர்:* இது போன்ற யோசனையை நான் வரவேற்கிறேன் என்றாலும் எனக்குள்ள சந்தேகம் எல்லாம் இப்படிப்பட்ட விருப்ப அதிகாரம் இருக்கிறது என்பதே பெற்றோர்கள், பள்ளிகள், கல்லூரிகள் மேல் வைத்துள்ள நம்பிக்கையை அது போக்கி விடுமோ என்பதுதான். ஆயினும் இது பற்றி நான் யோசிப்பேன்.

★ ★ ★ ★ ★

* சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-B, 3 அக்டோபர் 1933, பக்கம் 1032.

*12025. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சர் சாமுவேல், பொதுவாக, இந்த விதிகள் பற்றி ஒன்று கேட்க விரும்புகிறேன். முன் அனுமதி பெறுவது சம்பந்தமான இந்த விதிகளின் நோக்கத்தை வைசிராயுக்கும், ஆளுநருக்கும் உள்ள ரத்து அதிகாரம் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். எனவே இந்த விதிகளால் பெறப்போகிற பயன் ஒன்றும் அதிகம் இல்லை. வைசிராய் முன் அனுமதி தந்து நிறைவேற்றப்பட்ட மசோதாவைச் செயல்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் வைசிராய்க்கு இல்லை. அவருக்கு ரத்து அதிகாரம் உள்ளது. இதே நோக்கில் பார்த்தால் முன் அனுமதி பெறுதல் என்கிற விதியால் பயன் இல்லை. இதை ரத்து அதிகாரம் மூலமே பெற்றுவிட இயலும். இல்லையா?

*சர் சாமுவேல் ஹோர்:* டாக்டர் அம்பேத்கர் கூறியவற்றை என்னால் ஏற்றுக் கொள்ள இயலும் என்று தோன்றவில்லை. ரத்து அதிகாரம் என்பது சற்று வித்தியாசமானது; மிக முக்கியமானது. சட்ட மன்றம் ஏதேனும் முடிவெடுத்த பிறகு இது பிரயோகிக்கப்படுகிறது. எனவே, இது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

12,026. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இவை எல்லாவற்றையும் விட வைசிராயின் தனி அதிகாரப் பொறுப்புகளைப் பாதிக்கிற எதையும் தடுப்பதுதான் இதன் முக்கிய நோக்கம். ரத்து அதிகாரம் பலமான ஆயுதம்.

*சர் சாமுவேல் ஹோர்:* நான் அதன் அடுத்த கட்டத்துக்கு வருகிறேன். ரத்து அதிகாரத்துக்குப் பின்னணியில் ஒரு நீண்ட வரலாறே உண்டு. பொதுவாக பிரிட்டிஷாரின் அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது, காலப்போக்கில் ஓர் அரசியல் சட்ட சம்பிரதாயமாக மேன்மேலும் மாறிவந்திருப்பதைக் காணலாம்.

12,027. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், எனக்குத் தெரிந்த வரையில், முன்அனுமதி பெறுவதற்கும், ரத்து அதிகாரத்துக்கும் இடையே தெளிவாகத் தெரிகின்ற வேறுபாடு முன் அனுமதி விதி விவாதத்தைத் தடுத்து விடுகிறது. ரத்து அதிகாரத்தில் அது இல்லை. அப்படித்தானே?

*சாமுவேல் ஹோர் :* அது ஒரு வேறுபாடு.

12,028. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஆம். அது ஒரு வேறுபாடு. சர் சாமுவேல் ஹோர், நான் சொல்ல விரும்புவது இதுதான்: வைசிராயின் தனிப்பொறுப்புகள் குறித்து விவாதிப்பதைத் தடுப்பது நோக்கம் என்றால், நிச்சயமாக முன் அனுமதி விதி பத்திரிகைகளிலோ சட்டமன்றத்துக்கு வெளியே பொது மேடைகளிலோ இது தொடர்பாக விவாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, முன் அனுமதி விதிப்படி சட்ட ரீதியாகக் கொண்டு வரப்படும் எந்த ஒரு பிரச்சினை பற்றியும் மக்கள் ஆர்ப்பாட்டம்

---

* *சாட்சியக் குறிப்புகள், தொகுதி II-B, 5 அக்டோபர் 1933, பக்கம் 1118-19.*

நடத்துவதையும் கூட இது தடுத்து நிறுத்த முடியாது. எனவே, இவ்வாறு முன் அனுமதி விதியின் கீழ் வரக்கூடிய ஒரு விஷயம் குறித்து கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் செய்ய பொது மக்களுக்கும் பத்திரிகைகளுக்கும் சுதந்திரம் இருக்கும்போது, எதுவும் பேச முடியாதபடி வாய்ப் பூட்டுப் போடப்படும் ஒரே அமைப்பு சட்ட மன்றமே ஆகும்.

*சர் சாமுவேல் ஹோர்:* இது ஒரு விஷயத்தை முன்வைக்கும் ஒரு விதமான வழிமுறை; இது டாக்டர் அம்பேத்கர் முன்வைக்கும் வழிமுறை.

**12029.** *டாக்டர் அம்பேத்கர்:* இந்த முறை சரியானதல்ல என்று கூறுகிறீர்களா? வைசிராயின் முன் அனுமதி அதிகார மானது முன் அனுமதி விதி தொடர்பான ஒரு விஷயம் குறித்து பத்திரிகைகளிலோ, பொதுக் கூட்டங்களிலோ அல்லது வேறு எங்குமோ எத்தகைய விவாதமும் நடைபெறுவதைத் தடுக்கும் அளவுக்கு விரிவுபடுத்தப்படுமா?

*சர் சாமுவேல் ஹோர்:* நிச்சயமாக இதுபோன்ற விவாதம் இருக்கும் என்றே நான் நினைக்கிறேன். அல்லாமலும், சட்ட மன்றத்தில் நடக்கிற விவாதத்துக்கும், அதைப் போலவே வெளியே பொறுப்பற்ற முறையில் நடத்தப்படுகிற விவாதத்துக்கும் வேறு பாடு உண்டு. இரண்டாவதாக, முன் அனுமதி ஒப்புதல் சில காலமாகவே செயல்பட்டு வருவதோடு, பொதுவாக அது புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே ஒவ்வொரு வட்டமேசை மாநாட்டிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக டாக்டர் அம்பேத்கர் பத்தி 119-ல் பட்டியலிடப் பட்டுள்ளவற்றைப் பார்த்தால் அதில் உள்ள ஒவ்வொன்றிற்கும், ஒருவிதத்தில் ஒரு முக்கிய தற்காப்பு உள்ளது. உதாரணத்துக்கு அவர், மத சம்பந்தமான உரிமைகள் மற்றும் நடைமுறைகளை எடுத்துக் கொண்டால் சில பகுதி வைதிக இந்துக்களுக்கு உள்ள பிடிப்பு அவருக்கு அவற்றில் இல்லாமல் இருக்கலாம். அவற்றை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். தவறு என்று கூடக் கூறுவார். அதே சமயம் அவர்கள் — வைதிக இந்துக்கள் — இதில் ஆழ்ந்த பிடிப் புள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்திய சட்டங்களிலிருந்து அவை அடியோடு நீக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார் கள். எனவே நாம் இந்த இரு கண்ணோட்டங்களுக்கும் இடையில் ஒரு சமநிலைக் கொள்கையைக் கையாண்டு வருகிறோம். இப்படி ஒவ்வொன்றைப்பற்றியும் நான் இதுபோல எனது கருத்துக்களைச் சொல்ல முடியும். எனவே இந்த வகையில் சிறப்புத் தற்காப்புத் தேவைப்படும் என்ற கருத்துடைய பல அமைப்புகள் இருக்கத்தான் செய்கின்றன.

**12,030.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் என்ன தெளிவு படுத்த விரும்புகிறேன் என்றால், ஒரு சட்டப்பேரவை உறுப் பினரோ, சட்டமேலவை உறுப்பினரோ, இந்த விஷயங்கள்

முழு உரிமை இருக்கிற போது, அவர்களே சட்டமன்றத்துக்கு உள்ளே வந்துவிட்டால் இதைப்பற்றி விரிவாகப் பேசி விவாதிக்கும் உரிமை அற்றவர்கள் ஆகிவிடுகிறார்கள். உங்களின் 'முன் அனுமதி விதி' மூலம் நீங்கள் உண்டாக்க விரும்பும் ஒரே வேறுபாடு இதுதான்.

*சர் சாமுவேல் ஹோர்:* அவர்கள் தீர்மானம் போடலாம். ஆனால் விவாதிக்க முடியாது. இதுதான் இப்போதுள்ள நிலை.

**12,031.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* திரு. ஜெயகர் எழுப்பிய, ''மதமும், மதப்பழக்க வழக்கங்களும்'' பற்றிய பிரச்சினை மீது நான் இங்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் நான் அதில் மிகுந்த அக்கறை உடையவன். ''மதமும் மதப் பழக்க வழக்கங்களும்'' என்பதற்குப் பதிலாக ''நம்பிக்கை உணர்வுகள்'' என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்காதா என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*சர் சாமுவேல் ஹோர் :* 'நம்பிக்கை உணர்வு' என்பதேகூட இதே போன்ற கருத்து மோதல்களை உருவாக்கும் என்பது எனது எண்ணம்.

**12,032.** *சர். ஹரிசிங் கவுர் :* ஆமாம். அப்படித்தான்.

*சர் சாமுவேல் ஹோர் :* இதுபோன்ற புது வாசகம், இப்போது உள்ள வாசகத்தைவிட இன்னும் பலவகையான தவறான கருத்துக்களைக் கூறும் சிக்கலை உண்டாக்கிவிடும் என்று நான் நினைக்கிறேன்.

**12,033.** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் சொல்வது, முடிந்தவரை பழக்க வழக்கங்கள் என்ற வாசகம் நீக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

*சர் சாமுவேல் ஹோர் :* டாக்டர் அம்பேத்கர் கூறியவற்றை நான் கவனத்தில் கொள்வேன்.

★ ★ ★ ★ ★

***12751.** *லார்டு ரான்கெல்லர் :* இந்தியா மந்திரி அவர்களே, இப்படிப்பட்ட நிலையில், கூட்டாட்சிச் சட்டங்கள் மூலம் எழும் உத்தரவுகளை மத்திய அரசு நிறைவேற்றுவதும், அதற்கான செலவை மாகாணங்களிடமிருந்து வசூலிப்பதும் இயலாதா?

*சர் சாமுவேல் ஹோர் :* பணம் வசூலிப்பதற்கான அமைப்பு ஏதும் இல்லை.

**12,752.** *லார்டு ரான்கெல்லர்:* மாகாணங்களுக்குப் பணம் மத்திய அரசின் கருவூலத்தில் இருந்துதான் வருகிறது. இல்லையா?

*சர் சாமுவேல் ஹோர்: :* வருமானவரி அப்படி வருகிறது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* சர் ஆஸ்டின் சேம்பர்லின் கேள்விக்குப் பதில் இந்த வகையில் இருக்கலாம். ஒருங்கிணைந்த

---

* *சாட்சியக் குறிப்புகள், தொகுப்பு II-B, 4 அக்டோபர் 1932, பக்கம் 1130*

சட்டங்களைப் பொறுத்தவரை, வெள்ளை அறிக்கையின் பத்தி களில் ஒன்றில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்: அதாவது ஒருங்கிணைந்த துறை குறித்து கூட் டாட்சிச் சட்டசபை நிறைவேற்றும் எந்த ஒரு சட்டமும் அதே போன்று மாநில அரசு நிறைவேற்றும் சட்டத்துக்கு மேலான அதிகாரம் உடையது. ஒருங்கிணைந்த துறையில் கூட்டாட்சி சட்ட மன்றம் இயற்றும் சட்டத்துக்கும் மாகாண சட்ட மன்றம் இயற்றும் சட்டத்துக்கும் இடையே சட்ட முரண்பாடு ஏற்படுமானால், மாகாண சட்டத்தை ஒதுக்கித் தள்ளக்கூடிய அதிகாரம் கூட்டாட்சி சட்டத்துக்கு இருக்கிறது என்று வெள்ளை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*சர் ஆஸ்டின் சேம்பர்லின்:* அதுதான் உண்மை. இதைத்தான் முன்னமேயே நான் இந்தியா மந்திரிக்குச் சொன்னேன்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சட்டம் சம்பந்தப்பட்டவரை அதுதான் நிலைமை.

*சர் ஆஸ்டின் சேம்பர்லின்:* எனக்கும் புரிகிறது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* ஒருங்கிணைந்த துறை குறித்து கூட்டாட்சி சட்டமன்றம் இயற்றும் ஒரு சட்டத்தைச் செயல்படுத்து வது சம்பந்தப்பட்டவரை, கூட்டாட்சி நிர்வாகிகள்; மாநில ஆளுநர்கள் மூலம், மாநில அரசுக்கு உத்திரவுகளும், அறிவுரை களும் வழங்கும் அதிகாரம் உடையவர்கள் என்றும், ஆளுநர்கள் அதற்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டவர்கள் என்றும் நினைக்கிறேன்.

*ரீடிங் பிரபு :* இதே சம்பந்தப்பட்ட பிரச்சினையீல்தான் இந்தியா மந்திரி நேர்மாறான பதிலைத் தந்துள்ளார்.

*சர் ஹரிசிங் கவுர் :* அனுமதி பெறாமல் செய்தித்தாள் நடத்து வது தண்டனைக்குரிய குற்றம் என்றொரு விதி இருக்க வேண்டும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* எனக்குத் தோன்றுகிற இன் னொரு உதாரணத்தை நான் சொல்கிறேன். எடுத்துக்காட்டாக அவசர நெருக்கடி நிலைமையை உத்தேசித்து, மத்திய அரசு ஒரு பத்திரிகைச் சட்டத்தை நிறைவேற்றி, அதன் விதிகளின்படி எந்தப் பத்திரிகையும், ஒரு குறிப்பிட்ட தொகையைக் காப்பீடாகச் செலுத் தாமல் தொடங்கக் கூடாது என்று உத்திரவிடுகிறது என்று வைத் துக் கொள்வோம். இந்தச் சட்டத்தால் குறிப்பிட்ட எந்த தனி நபரும் பாதிக்கப்படப் போவதில்லை. ஒரு குறிப்பிட்ட மாநிலத் தில் ஒரு பத்திரிகை அப்போதைய அரசை ஆதரிக்கின்ற கட்சிப் பத்திரிகையாக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பத்திரிகை மத்திய அரசு நிறைவேற்றிய பத்திரிகைச் சட்டத்தைப் புறக்கணிக்கும்போது, அந்தப் பத்திரிகைக்கும் அது வெளிவரும் மாநிலத்தின் அரசுக்கும் உள்ள நெருக்கத்தால், அந்த அரசு அந்தப் பத்திரிகையின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க மறுத்தால் அப்போதைய நிலை என்ன? உண்மையில் இதில் எந்தத் தனிப் பட்ட மனிதரும் பாதிப்புக்கு உள்ளாகவில்லை தானே?

*சர் ஹரிசிங் கவுர் :* அனுமதியின்றிப் பத்திரிகை நடத்துவதைத் தடுக்க அதில் ஒரு தண்டனைச் சட்டவிதி இருக்கலாம்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அதுதான் சரி.

*சர் ஆஸ்டின் சேம்பர்லின் :* அதற்கு அரசுக்கு எல்லா விவரங் களையும் செய்திகளையும் தர வேண்டும்.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இது சம்பந்தமாக வழக்குத் தொடரும் பொறுப்பு ஒரு குறிப்பிட்ட அதிகாரியிடம் ஒப்படைக் கப்படுகிறது என்றும், நடவடிக்கை எடுத்து வழக்குத் தொடரப் பட்டால் தொடர்புடைய அதற்கான செலவை மாகாண அரசு தர வேண்டும் என்றும் வைத்துக் கொள்வோம். ஆனால் இதற்கு வரவு செலவு திட்டத்தில் வழி செய்யப்படவில்லை என்றால் அப்போது என்ன நடக்கும்?

*சர் சாமுவேல் ஹோர் :* இதில் உள்ள எல்லாக் கஷ்டங்களை யும் நான் உணர்கிறேன். என்றாலும் அதே சமயத்தில் இதன் மறுபக்கம் உள்ள சிரமங்களையும் எண்ணிப் பார்க்க வேண்டிய வனாக இருக்கிறேன். டாக்டர் அம்பேத்கர் இங்கே குறிப்பிட்டது சட்டம்-ஒழுங்கு பற்றியது. சட்டம்-ஒழுங்கு என்பது, மாநிலங்கள் அக்கறைப்பட வேண்டிய விஷயம். கூட்டாட்சியின் அக்கறை ஒரே சீரான நிலைமையை நிலைநாட்டுவது பற்றியது என்றாலும் இது மாநிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்ற உண்மையை இது பாதிக்க முடியாது. டாக்டர் அம்பேத்கர், மற்றும் சர் ஆஸ்டின் சேம்பர்லின் இவர்கள் இருவரின் வாதங்களின் தருக்கரீதியான முடிவுப்படிப் பார்த்தால் மாநிலங்களில் சட்டம்-ஒழுங்கைப் பரா மரிக்கும் அதிகாரம் கூட்டாட்சிக்கு இருக்கிறது என்பதையே அது குறிக்கும். இது இப்போது வெள்ளை அறிக்கையில் குறிப்பிட் டுள்ளதற்கு நேர் மாறானது.

*டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* என்னை மன்னிக்க வேண்டும். நான் சுட்டிக்காட்ட விரும்புவது: நீங்கள் ஒன்று, சட்டம்-ஒழுங்கை முழுக்க முழுக்க மாநிலம் சம்பந்தப்பட்டதாக்க வேண்டும்; இதில் மத்திய அரசுக்கு எந்த சம்பந்தமும் இல்லாதபடி செய்ய வேண்டும். இதற்குப் பிறகு வேண்டுமானால் நீங்கள் இப்போது நடத்திய வாதங்களை வைக்கலாம். ஆனால் இதனை நீங்கள் ஒருங்கிணைந்த சட்டமியற்றும் விஷயமாக்கிவிட்டால் அப்போது சட்டம் ஒழுங்கு சரியானபடி நிலை நாட்டப்படும் படிப் பார்த்துக் கொள்ளும் அதிகாரம் கூட்டாட்சிக்கு இருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்.

★ ★ ★ ★ ★

***13,129 :** *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* இந்தியா மந்திரி அவர்களே, இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த துறையின் இன்றைய நிலவரம் குறித்துச் சொல்ல விரும்பு கிறேன். நான் இதைச் சொல்ல ஆசைப்படுவதற்குக் காரணம், தற்போதுள்ள

* சாட்சியக் குறிப்புகள் தொகுதி II B, 12 அக்டோபர் 1993, ப. 1178-81.

இந்திய அரசுச் சட்டத்தின் கீழ்ச் சில விஷயங்களோ அல்லது அந்த விஷயங்களின் சில பகுதிகளோதான் மத்திய சட்டத்தின் வரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளன. அதிகார மாற்ற விதிகள் அட்டவணை I, பாகம் II-ன் கீழ் சில மாகாண விஷயங்கள் ஒருங்கிணைந்த பட்டியலில் விசேடமாகச் சேர்க்கப்பட்டிருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*சர் சாமுவேல் ஹோரார்:* சொல்லுங்கள்.

*13,130. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* சில விஷயங்கள் மாநிலம் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் மத்தியச் சட்ட விதிகள் சிலவற்றின் படி அவை மத்திய அரசின் சட்ட வரம்புக்குட்பட்டவையாக உள்ளன.

*சர் சாமுவேல் ஹோரார்:* உண்மை.

*13,131. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* என் கணக்குப்படி, அதிகார மாற்ற விதிகள் அட்டவணைத் தொகுதி 2-ல் உள்ள 51 விஷயங்களில், 14 விஷயங்கள் மத்திய சட்ட வரம்பிற்கோ, மத்திய அரசு அல்லது இந்தியா மந்திரி பிறப்பிக்கும் விதிமுறைகளுக்கோ உட்பட்டவையாக இருக்கின்றன. இது ஒரு விஷயம். மற்றொரு விஷயம்: இந்திய அரசு சட்டத்தின் 67 ஆவது பிரிவு துணை விதி 2-ன்படி மத்திய அரசின் ஒருங்கிணைந்த சட்ட வரம்பின் கீழ் வரும் எல்லா விஷயங்களுக்கும் மத்திய அரசின் முன்னனுமதி தேவை. பாகம் II-ன் கீழ் வரும் எந்த ஒரு விஷயமும் மாகாண விஷயமாகக் கருதப்பட்டாலும், கவர்னர்-ஜெனரலின் முன்னனுமதி பெற்று, அந்த மத்திய விஷயம் முழுவதும் குறித்து சட்டம் இயற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. அப்படித்தானே?

*சர் சாமுவேல் ஹோரார்:* ஆமாம்.

*13,132. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* 80 (ஏ) பிரிவின்படி, ஒருங்கிணைந்த துறையில் மாகாண அரசின்மீது மத்திய அரசு அதிகாரம் செலுத்தலாம்; ஆனால் அதே சமயம் எந்த ஒரு மத்திய விஷயத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கோ, சட்டப்படி நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர்-ஜெனரலுக்கென்று பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள எந்த ஒரு மாகாண விஷயத்தையும் சீரமைப்பதற்கோ கவர்னர்-ஜெனரலின் முன் அனுமதியின்றி சட்டம் இயற்றவும் அல்லது சட்டம் இயற்றுவது பற்றி, பரிசீலிக்கவும் எந்த மாகாணத்தின் சட்டமன்றத்துக்கும் அதிகாரம் இல்லை. இதுதானே இப்போதுள்ள நிலைமை?

*சர் சாமுவேல் ஹோரார்:* ஆம். அப்படித்தான்.

*13,134. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* தற்போதைய முன்மொழிவால் எல்லாமே முற்றிலுமாக மாற்றப்பட்டுள்ளது. நான் சுட்டிக்காட்டுவது மத்திய அரசின் ஒருங்கிணைந்த அதிகாரம் அநேக இனங்களில் நீக்கப்பட்டுள்ளது என்பதுதான்.

*சர் சாமுவேல் ஹோரார்:* பட்டியல் மூன்றில் உள்ளது தவிர.

*13,135. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* அடுத்து நான் உங்கள் கவனத்தை பட்டியல் மூன்றின்பால் ஈர்க்க விரும்புகிறேன். நான் இது தொடர்பாக கொண்டிருந்த குறிப்புகளைக் கைதவற விட்டு விட்டேன். என்றாலும் நினைவில் உள்ளதைச் சொல்கிறேன். நான் சொல்வது சரி என்றும் நம்புகிறேன். பட்டியல் 3-ல் இடம்பெற்றுள்ள மிக அதிகமான இனங்கள் இன்று, முற்றிலும் மத்திய அரசு சம்பந்தப்பட்டதாகவோ அல்லது ஒருங்கிணைந்த துறை சம்பந்தப்பட்டதாகவோ இருக்கின்றன. இல்லையா?

*சர் சாமுவேல் ஹோரா் :* உண்மை. அவற்றில் பல அப்படித் தான் உள்ளன.

*13136. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* இப்போதைய இந்திய அரசுச் சட்டத்தின் கீழ்தான் இவ்வாறு உள்ளது என்று கூறுவதே நியாயமாக இருக்கும். தற்போதுள்ள இந்திய அரசாங்கச் சட்டத் தின்படி உங்களது ஒருங்கிணைந்த பட்டியல் என்பது எப் பொழுதுமே அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் பட்டு வந்துள்ளது; இந்தத் துறைகள் முற்றிலும் மத்தியப் பட்டிய லிலோ அல்லது ஒருங்கிணைந்த பட்டியலிலோ இடம் பெற்று வந்துள்ளன. இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் இப்போது ஒருங்கிணைந்த துறையாக இருப்பது அதே இந்திய அரசாங்கச் சட்டத்தில் அனைத்திந்திய முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப் படுகிறதல்லவா?

*சர் சாமுவேல் ஹோரார்:* ஆம், பொதுவாக அப்படித்தான் கருதப்படுகிறது. ஒற்றையாட்சி முறையில் இது தவிர்க்க் முடியாதது.

*13137. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* உண்மைதான். இந்தியா மந்திரி அவர்களே, என் கேள்வி இதுதான்: இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் அகில-இந்திய முக்கியத்துவம் ,வாய்ந்ததாகக் கருதப்பட்ட ஒரு சட்ட விஷயத்தை இனிமேல் நிர்வாக ரீதியில் முற்றிலும் மாகாணம் சம்பந்தப்பட்டதாகக் கருதுவது சரியாக இருக்காதா?

*சர் சாமுவேல் ஹோரார்:* அப்படியில்லை. ஒற்றையாட்சி முறை யின் கீழுள்ள நிலைமைகளுக்கும் தன்னாட்சி மாகாணங்களைக் கொண்ட ஒரு கூட்டாட்சி முறையின் கீழுள்ள நிலைமைகளுக்கும் இடையே மிகப் பெரும் வேறுபாடு உள்ளது. பெரிதும் மையத் துவப்படுத்தப்பட்டுள்ள இந்திய அரசாங்கத்தை ஒரு கூட்டாட்சி அரசாங்கமாக மாற்ற நாம் திட்டவட்டமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

*13,138. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் :* நான் விஷயத்தின் முக்கியத்துவம் பற்றி மட்டுமே பேசிக் கொண்டு இருக்கிறேன். 1901 வரை அகில இந்திய முக்கியத்துவம் உடையதாகக் கருதப் பட்ட ஒரு விஷயம் திடீரென்று ஒரு நாள் அதன் அகில இந்திய முக்கியத்துவத்தை இழந்து உள்ளூர் விஷயமாகிவிட முடியாது. புதிய மாநில அரசுக்குப் பல புதிய சலுகைகள் வழங்கப்படவிருப் பதை நான் அறிவேன். எனினும் இந்திய அரசு இதுவரை மாகாண

அரசுகளை விடப் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மதிக்கப் பட்டு வந்துள்ளது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும் அல்லவா?

சர் சாமுவேல் ஹோர் : இப்படி இரண்டுக்கும் ஒப்புமை பார்ப் பது மிகவும் கடினமானது. காரணம் புதிதாக அறிமுகமாக உள்ள அரசு அமைப்பு முற்றிலும் வேறுபாடானது. ஒற்றையாட்சி முறை யிலிருந்து கூட்டாட்சி முறைக்கு மாறும்போது புதிய சூழ்நிலை உருவாகக் கூடும். அதனால் தனித்தியங்கும் அதிகாரம் உடைய மாநில அரசுகள் அடங்கிய கூட்டமைப்புக்குள் நுழைகிற போது பல பிரச்சினைகள் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

13,139. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : நான் இதை மேலும் வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் இதுவரை இந்த துறைகள் மாகாணத் துறைகளைவிட மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை யாகக் கருதப்பட்டு வந்தன என்பதை மட்டும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சர் சாமுவேல் ஹோர் : மிக அதிகம் மையப்படுத்தப்பட்ட அரசில்கூட இவற்றில் பெரும்பாலானவற்றில் நிர்வாகம் மாநிலத் தன்மை கொண்டவையாகத்தான் உள்ளன என்று கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

13,140. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : ஆம். மத்திய அதிகா ரத்துக்கு அடங்கியதாக இல்லையா?

சர் சாமுவேல் ஹோர் : இப்போதுகூட டாக்டர் அம்பேத்கரின் பதில் முழுமையானதாக இருப்பதாக என்னால் கருத இயலாது. மாநிலங்களில் உள்ள மாற்றப்பட்ட துறை பற்றி அவை குறிப்பிட வில்லை.

13,141. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் : இல்லை. அது குறிப் பிடுகிறது. அடுத்து நான் உங்கள் கவனத்தை இந்திய அரசுச் சட்டப்பிரிவு 45 முன்மொழிவு 125-ன்பாலும் ஈர்க்க விரும்பு கிறேன். இந்திய அரசுச் சட்டம் பிரிவு 45 கீழ்ப்படியும் விதி என்று அழைக்கப்படுகிறது. அதில் கூறப்பட்டுள்ளதாவது: மாநில அரசு மற்றும் மாகாணம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களிலும் ஒரு மாகாண அரசாங்கம் மத்திய அரசின் மேற்பார்வையிலும், கண்கா ணிப்பிலும் இருக்கும், மத்திய அரசுக்குத் தரப்பட வேண்டியவை என்று கருதுகிற விஷயங்களில் தேவைப் படும் விவரங்களை இந்திய அரசுக்கு மாகாண அரசாங்கம் அவ்வப்போது தர வேண் டும். இப்போது இந்தியா மந்திரியிடமிருந்து நான் அறிய விரும்பு வது: பிரிவு 45-ல் இருந்து எதை நீக்க விரும்புகிறீர்கள் என்பதே? நீங்கள் மேற்பார்வையிடுதலை விரும்பவில்லை என்று நினைக் கிறேன். ஏனென்றால் மாநிலங்கள் தன்னாதிக்கம் பெற்றவையாகி விட்டன. ஒருங்கிணைந்த அல்லாத துறைகளில் நீங்கள் வழி காட்டுவதோடு நின்றுவிட விரும்புகிறீர்கள்.

சர் சாமுவேல் ஹோர் : ஆம்.

*13,142. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:* அதில் அதிகாரம் இருக்காது. நான் இப்போது கேட்க விரும்புவது: மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பதை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? மத்திய அரசுக்கு மாநில நிர்வா கத்தைப் பற்றி அறியும் அதிகாரம் இருக்க வேண்டும் என்றும், மாநிலம் சம்பந்தப் பட்ட விஷயங்களை மாநிலமே மத்திய அரசுக் குத் தெரிவிக்க வேண்டும் என்றும் நீங்கள் விரும்புகிறீர்களா?

*சர் சாமுவேல் ஹோரர்:* இல்லை. பொதுவாக எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. கூட்டமைப்பு அரசு நிறுவப் பட்டவுடன், கூட்டமைப்புக்கும் அதன் உறுப்பு அரசுகளுக்கும் இடையே அதிகாரப் பங்கீடு உறுதியாக இடம்பெறும் என்றும் நாங்கள் நம்புகிறோம். அநேகமாக, பங்கீடு தெளிவாக இருக்கிற வரை, பொறுப்புகளில் குழப்பம் குறைவாகவே இருக்கும். இரண்டு அரசுகளுக்கும் இடையே உள்ள இடைவெளியும் குறைவாக இருக் கும். இப்போது உள்ள திட்டப்படி நாங்கள் இப்படி கடமைகளை யும் பொறுப்புகளையும் அரசரின் பாராளுமன்றம், மாநில அரசு, கூட்டமைப்பு ஆகிய மூன்றிற்கும் இடையே பகிர்ந்தளிக்க வேண் டும் என்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

*13,143. திரு. எம். என். ஜோஷி:* நான் உங்களிடம் ஒரு துணைக்கேள்வி கேட்க விரும்புகிறேன். டாக்டர் அம்பேத்கர் எழுப்பிய கருத்தின் அடிப்படையில் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். சில சந்தர்ப்பங்களில் புள்ளி விவரங்கள் சேகரித்து அகில இந்திய அளவில் தொகுப்பது மதிப்பு மிக்க பணியாக இருக்கும். உதாரணத்துக்கு கல்வி சம்பந்தமான அகில இந்தியத் தொகுப்பைச் சொல்லலாம். இப்போது கல்வி மாற்றப்பட்ட துறையாக இருந்தாலும், அரசு கல்விக்காக அகில இந்திய அளவி லான அறிக்கை தயாரித்து வெளியிடுகிறது. இனிவரும் அரசும் மாற்றப்பட்ட துறைகள் சம்பந்தமாக விவரங்கள் சேகரிக்குமா, பணம் செலவு செய்து, அகில இந்திய அளவிலான அறிக்கையைத் தொகுத்து வெளியிடுமா?

*சர் சாமுவேல் ஹோரர்:* கூட்டமைப்புக்கு உட்பட்ட துறை களில் மட்டும்தான். கூட்டமைப்புக்கு அப்பாற்பட்ட துறைகளில் உடன்பாட்டுக்கு உட்பட்டே இது இருக்கும்.

*திரு. எம். என். ஜோஷி:* கல்வி, கூட்டமைப்புக்கு உட்பட்ட துறை இல்லையா?

*லார்டு எஸ்டேஸ் பெர்சி:* இந்தியா மந்திரி அவர்களே, ஒவ் வொரு கூட்டமைப்பிலும், உதாரணத்துக்கு அமெரிக்காவில், கூட்டமைப்பின் ஆராய்ச்சி மற்றும் புள்ளி விவரத்துறை கூட் டமைப்புத் துறையின் எல்லையைத் தாண்டியும் செயல்படுவதைக் கருத்தில் கொண்டு பேசுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

*13,144. திரு. எம். என். ஜோஷி:* உதாரணமாக, அமெரிக்கா

வில் கல்வி அறிக்கை ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் முழுமைக்கு மாகவே பதிப்பிக்கப்படுகின்றன.

*சர் சாமுவேல் ஹோரர்:* உண்மைதான். லார்டு எஸ்டேஸ் அட்டவணை 4 பட்டியல் ஒன்றைப் பார்க்க வேண்டும். அதில் நாங்கள் இதைக் குறித்திருப்பது தெரியும். மக்கள் தொகை கணக்கு போன்றவை கூட்டமைப்புத் துறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அகில இந்திய புள்ளிவிவரத் தயாரிப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதுவும் கூட்டமைப்புக்காகத் தயாரிக்கப்படும் புள்ளிவிவரக் கணக்கை முக்கியமாகக் கருத்திற் கொள்ள வேண்டும்.

13,145. *லார்டு எஸ்டேஸ் பெர்சி:* இதற்கு ஏன் இப்படிக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை. கூட்டமைப்பு ஏன் இதுபோன்ற விவரங்களைத் தொகுத்து வெளியிடக் கூடாது என்பதற்கான காரணம் எனக்கு விளங்கவில்லை. இந்த விவரங்கள் கூட்டமைப்புச் சம்பந்தப்பட்டவையாக மட்டுமே ஏன் குறுக்கப்பட வேண்டும் என்பதும் விளங்கவில்லை. மற்றைய கூட்டமைப்புகளில் இத்தகைய நிலை இருப்பதாக நான் ஒரு போதும் கேள்விப்பட்டதே இல்லை.

*சர் சாமுவேல் ஹோரர்:* கூட்டமைப்பு அரசு கூட்டமைப்புக் காகத் தான் செயல்பட முடியும். கூட்டமைப்புத் துறைக்கு வெளியே ஒரு கூட்டமைப்பு அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

13,146. *லார்டு எஸ்டேஸ் பெர்சி:* உண்மைதான். இந்தியாவின் அறிவாற்றல், தார்மிக முன்னேற்றம் பற்றி மாநில அரசு விவரங்கள் தரவில்லை என்றால் கூட்டமைப்பு அதுபற்றி அறிக்கை வெளியிட முடியாதுதான். ஆனால் இவை எதிர்பார்க்கக் கூடியவை அல்ல.

*சர் சாமுவேல் ஹோரர்:* இதில் எனக்கும் லார்டு எஸ்டேசுக்கும் இடையே எந்தக் கருத்து வேறுபாடும் இருக்கும் என்று தோன்றவில்லை. என்னுடைய எண்ணம், இத்தகைய செயல்பாடுகள் குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும் என்பதுதான். ஒரு கூட்டமைப்பு அரசாங்கம் தொடர்ந்து மாநில அரசுகளை தனக்கு எவ்வகையிலும் சம்பந்தப்படாத எல்லா விவரங்களும் பெறத் துன்பப்படுத்திக் கொண்டே இருக்குமானால், அது கூட்டமைப்பு அரசுக்கு எந்த வகையிலும் ஏற்புடையதாகாது. அப்போது இரண்டிற்கும் இடையே பிரச்சினைகள் வரும் என்பதைத்தான் என்னால் முன்கூட்டியே அறிய முடிகிறது.

13,147. *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:* நான் இப்போது என் நினைவுக்கு வருகிற ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும். உதாரணத்துக்கு ஒரு மாநிலத்தில் ஒரு வெளிநாட்டவர் மீது கிரிமினல் குற்றத்திற்கான நடவடிக்கை எடுத்து, அது சம்பந்தமான விவரங்களை அந்த வெளிநாட்டவரின் அரசாங்கம் இந்திய அரசிடம் கோருகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது இந்திய அரசு, மாநில அரசிடம் இது தொடர்பான விவரங்களைத் தருமாறு கேட்டுக் கொள்ளும் நிலையில் இருக்குமா?

*சர் சாமுவேல் ஹோரா்:* ஆம். மேல் நடவடிக்கையும் எடுக்கலாம். அது வெளியுறவு துறையில் அடங்கும்.

***13148. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:*** சட்டம்-ஒழுங்கு மாற்றப்பட்ட துறையைச் சேர்ந்ததல்லவா?

*சர் சாமுவேல் ஹோரா்:* இருக்கலாம். ஆனால் வெளிநாட்டு விவகாரங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. இப்போது நீங்கள் விவாதிக்கிற பகுதி 125 இது சம்பந்தப்பட்டதாகும் என்று நினைக்கிறேன். வெளியுறவு விவகாரம் கூட்டாட்சித் துறையைச் சார்ந்தது. பகுதி 125 இரண்டாவது பாராவின்படி கூட்டாட்சி அரசு மாநில அரசுக்கு ஆணைகள் பிறப்பிக்கலாம்.

***13149. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:*** தனது நோக்கத்துக்குத் தேவைப்படும் விவரங்களை மத்திய அரசு சேகரிப்பது அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

*சர் சாமுவேல் ஹோரா்:* நிச்சயமாக. அதன் அவசியத்தை நான் ஒத்துக் கொள்கிறேன்.

***13150. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:*** நான் உங்கள் கவனத்தை முன்மொழிவு 125-ன்பால் ஈர்த்ததற்குக் காரணம் அதில் இந்த விவரங்கள் இல்லை என்பதால்தான்.

*சர் சாமுவேல் ஹோரா்:* மாநில அரசிடம் இருந்து தேவைப்படும் விவரங்களைப் பெறுவது இதில் அடங்கும் என்றே நான் அனுமானிக்கிறேன். எப்படியும் அதன் நோக்கம் அதுதான்.

***13151. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்:*** முன்மொழிவு 114 பற்றி இப்போது பார்க்கலாம். அதோடு ஒரு துணைவிதி சேர்க்கப்பட்டுள்ளது. அதில் ஒத்திசைவு அதிகாரங்கள் பொருளாதாரச் சுமையை உண்டாக்குகிற அளவுக்குச் செயலாக்கப்படக் கூடாது என்று உள்ளது. இதில் நான் அறியவிரும்புவது இதுதான்; ஒரு குறிப்பிட்ட முன்மொழிவுப் பொருளாதாரப் பளுவைச் சுமத்துவதாக உள்ளது என்று ஒரு சர்ச்சை எழுவதாக வைத்துக் கொள்வோம். ஒரு கட்சி பொருளாதாரச் சுமை உள்ளது என்று வாதிடுகிறது. இன்னொரு கட்சி பொருளாதாரச் சுமை இல்லை என்று வாதிடுகிறது. இப்போது இந்த வழக்கை எப்படித் தீர்ப்பது? மத்திய அரசு விரிவாகவும், விளக்கமாகவும், புதிய மாநிலம் பல புதிய பணிகளைச் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக பொருளாதாரச் சுமை ஏற்படக்கூடும் என்ற முடிவுக்கு வரலாம். என்றாலும் இரண்டுக்கு இடைப்பட்ட நிலையில் சில பிரச்சினைகள் வரும்போது தகராறு எழவே செய்யும்.

*சர் சாமுவேல் ஹோரா்:* இப்போதுள்ள நிலையில் இதற்குப் புகலிடம் கூட்டமைப்பு நீதிமன்றம்தான். இதுவும் போதுமான அளவு பரந்த வழிமுறையல்ல. எனவே நான் முன்பு ஒருமுறை குறிப்பிட்டது போல, கூட்டமைப்பு நீதிமன்றங்களால் முடித்து வைக்க முடியாத வழக்குகளில் ஏதாவது மத்தியஸ்தத்துக்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டு இருக்கிறோம்.

**13152.** திரு. எம். ஆர். ஜெயகர்: இப்போது இது பத்தி 155(1)-ன் கீழ் வரும்.

சர் சாமுவேல் ஹோார்: ஆமாம். கூட்டமைப்பு நீதிமன்றம்.

**13153.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இன்னும் ஒரு கேள்வியை இந்தியா மந்திரி அவர்களே உங்களை கேட்க விரும்புகிறேன். ஏன் என்றால் எனக்கு அது இன்னும் தெளிவாகப் புரியவில்லை. இந்த நிர்வாக உறவுகள் சம்பந்தப்பட்ட வரையில் முதலாவதாக மத்திய அரசு மாநில அரசை அதன்நிர்வாகப் பிரதிநிதியாக நியமித்துள்ளதா?

சர் சாமுவேல் ஹோார்: ஆம். ஒருங்கிணைந்த துறையில்.

**13154.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அப்படிச் செய்ய அது கட்டுப்பட்டுள்ளதா?

சர் சாமுவேல் ஹோார்: ஆம்.

**13155.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அது தன்னுடைய பிரதிநிதிகளை நியமிக்க இயலாதா?

சர் சாமுவேல் ஹோார்: ஒருங்கிணைந்த துறையில் நிர்வாகம் மாநிலம் சம்பந்தப்பட்டதாக இருக்க வேண்டும்.

**13156.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இது தொடர்பாக உத்திரவுகள் பிறப்பிக்கப்படுமா, படாதா என்பது வேறு விஷயம்.

சர் சாமுவேல் ஹோார்: ஆம்.

**13157.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அப்படியானால், மாநில அரசு, மத்திய அரசு கேட்டுக் கொண்டால் அதன் பிரதிநிதியாக செயல்படும் பணியை மேற்கொள்ள வேண்டுமா?

சர் சாமுவேல் ஹோார்: ஆம். கூட்டாட்சி சட்டத்தின் கீழ்.

★ ★ ★ ★ ★

* **13411.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வில் பிற்பட்ட வகுப்பு மக்களும் சேர்க்கப்பட்டு அவர்களுக்கென்று சில இடங்களை ஒதுக்கி இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது அவர்களைச் ''சிறுபான்மையினர்'' பட்டியலில் சேர்க்கும் அல்லவா? நான் சொல்வது, நீங்கள் சற்று முன் குறிப்பிட்டது போல சிறுபான்மைச் சமூகம் என்பது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் தீர்வுக்குள் வருவதாகும். பிற்பட்ட வகுப்பினர்கூட இந்தத் தீர்வுக்குள் சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்று நான் எடுத்துக் கொள்ளலாமா?

சர் சாமுவேல் ஹோார்: விவாத முடிவில், நான் இதுபற்றி இன்னும் தெளிவாக சிந்திக்க விரும்புகிறேன். இது மிகவும் சிக்கலான கேள்வி. இது ஒதுக்கப்பட்ட பகுதிகளில் சிதறிக்

* சாட்சியக்குறிப்புகள் தொகுதி II B, 17, அக்டோபர் 1933. ப. 1206.

சர் சாமுவேல் ஹோர்: ஆமாம்.

**13536.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அப்படியானால் முற்றிலுமாக விலக்கப்பட்ட பகுதியின் நிர்வாகத்துக்காக ஆளுநர் மாநில நிதியைப் பயன்படுத்த முடியாது. அப்படித்தானே?

சர் சாமுவேல் ஹோர்: ஆமாம். டாக்டர் அம்பேத்கரின் கூர்த்த நுண்ணறிவு வெள்ளை அறிக்கையில் உள்ள ஓர் ஓட்டையைக் கண்டுபிடித்துவிட்டது.

**13538.** டாக்டர் பி. ஆர். ,அம்பேத்கர்: இது சம்பந்தமாக உங்கள் கவனத்துக்கு நான் கொண்டுவர விரும்பும் இன்னொரு பத்தி 49. அதன் துணை விதி V விலக்கப்பட்ட பகுதிகளின் செலவுக்குத் தேவைப்படும் பணம் கவர்னர்-ஜெனரலின் தனிப் பொறுப்பாகும் என்று கூறுகிறதல்லவா?

சர் சாமுவேல் ஹோர்: ஆமாம்.

**13539.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: முற்றிலும் விலக்கப்பட்ட பகுதியை நிர்வகிக்கும் விஷயத்தில் கவர்னர்-ஜெனரலின் பிரதிநிதியாக உள்ள ஆளுநர் கவர்னர்-ஜெனரல் தனது தனிப் பொறுப்பில் வழங்கிற பணத்தை நம்பியே இருப்பார் என்று நான் கூறலாம் அல்லவா?

சர் சாமுவேல் ஹோர்: இல்லை. ஆளுநர் தானாகவே மாகாண அரசிடம் இருந்து பணம் கேட்பார்.

**13540.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: அப்படியானால் நீங்கள், முழுதும் விலக்கப்பட்ட பகுதிகளுக்கும் கூடத் தேவைப் படும் பணத்தை மாநில நிதியில் இருந்து ஆளுநர் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆளுநரின் விசேடப் பொறுப்புகள் பற்றிய விதியைத் திருத்த எண்ணியுள்ளீர்களா?

சர் சாமுவேல் ஹோர்: ஆமாம்.

திரு. எம். ஆர். ஜெயகர்: இப்போது அது பத்தி 96, துணைப் பத்தி (6)ன் கீழ் பின்கண்டவாறு வரும்:

''மதிப்பீட்டு வருமானங்கள் பற்றிய ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்ய ஆளுநர் ஏற்பாடு செய்வார்''; பிறகு ஆளுநர் தனது ''விசேடப் பொறுப்புகளில்'' எதையேனும் நிறைவேற்றுவதற்கு அவசியமானதெனக் கருதும் கூடுதல் யோசனைகள் வாக்களிப்புக்குரிய இனத்திலோ அல்லது வாக்களிப்புக்கு உரியதல்லாத இனத்திலோ எவையேனும் இருக்குமானால் அவற்றைத் தனியாகக் குறிப்பிட்டுக் கூறும்படி நீங்கள் ஆணை பிறப்பிப்பீர்கள். ஓரளவு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்காக செலவிடப்படும் தொகையும் விசேடப் பொறுப்புகள் என்பதில் அடங்கும்.

**13541.** டாக்டர் பி. ஆகூ. அம்பேத்கர்: நான் முற்றிலும் விலக்கப்பட்ட பகுதி பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறேன்.

சர் சாமுவேல் ஹோர்: டாக்டர் அம்பேத்கர் சொல்லுகிற விவரம் முற்றிலும் விலக்கப்பட்டப் பகுதி பற்றியது. ஆனால்

இந்தக் குறிப்பை வரையும் போது ஏற்பட்ட தவற்றால் மாகாண ஆளுநர் ஓரளவு ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு மாகாண நிதிகளைச் செலவிடலாம். ஆனால் முற்றிலும் விலக்கப்பட்ட பகுதிகளுக்கு மாகாண நிதிகளை அவர் பயன்படுத்த முடியாது என்ற தவறான கருத்து ஏற்பட்டுவிட்டது. இது நகல் வரைவில் ஏற்பட்ட தவறு ஆகும்.

★ ★ ★ ★ ★

*13722.* *டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நான் இன்னும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இது திரு. ஜோஷியின் கேள்வியோடு தொடர்புடையது. இதில் எனக்குள்ள ஒரு சிக்கலை இந்தியா மந்திரி அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 109-ன் கீழ், முற்றிலுமாக விலக்கப்பட்ட பகுதி ஓரளவு விலக்கப்பட்ட பகுதி;— இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஓரளவு விலக்கப்பட்ட பகுதியில் விவாதத்துக்கு வழியுண்டு அல்லது ஆளுநர் அதற்கு அனுமதி தர மறுக்கலாம். ஆனால் விலக்கப்பட்ட பகுதியில் ஆளுநர் எந்த விவாதத்துக்கும் அனுமதி வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது. இதுதான் என் சிக்கல். இந்தியா மந்திரியாகிய நீங்கள் நேற்று மேஜர் அட்லியின் கேள்விக்குப் பதில் அளிக்கையில்; விலக்கப்பட்ட பகுதிகளுக்கு ஆகும் செலவின் காரணமாக ஏற்படக்கூடிய பற்றாக் குறையை ஈடுகட்டும் பொருட்டு மத்திய அரசு அசாமுக்கு வழங்கக் கடமைப்பட்டுள்ள பங்கு ஒரு குறிப்பிட்ட தொகையாக அல்லாமல், அசாம் மாகாணத்தின் பொது வருவாயின் ஒரு பகுதியாகவே இருக்கும் என்று நீங்கள் கூறினீர்கள். நீங்கள் சொன்னதை நான் சரியாகச் சொல்கிறேன் என்று நினைக்கிறேன்.

சர் சாமுவேல் ஹோர்: நான் இந்தப் பங்கை ஒரு குறிப்பிட்ட மானியத் தொகையாக வழங்குவதா அல்லது அதனை பொது மானியத்தில் இணைத்துவிடுவதா என்னும் பிரச்சினையை விவாதித்து முடிவு செய்து கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன்.

*13723.* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நீங்கள் சொன்னது அது ஒதுக்கீடு செய்யப்பட நிதி அல்ல என்று கூறியதாகத்தான் எனக்கு எண்ணம் ஏற்பட்டது.

சர் சாமுவேல் ஹோர்: இல்லை. நான் என்ன சொன்னேனோ அதைத்தான் மீண்டும் சொல்கிறேன். நாங்கள் விவாதித்த தொகை பொது நிதியின் ஒரு பங்காக இருக்க வேண்டும் என்றே தீர்மானித்தோம். ஆனால் அதுதான் அதற்குத் தீர்வுகாணச் சரியான வழியா என்பதைப்பற்றி விவாதிக்க நான் திறந்த மனத்துடனேயே இருக்கின்றேன்.

---

* சாட்சியக்குறிப்புகள் தொகுதி II B, 18 அக்டோபர் 1933. ப. 1223-24.

*13724.* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நல்லது. நான் இதன் இன்னொரு பகுதியைப் பற்றிச் சொல்லுகிறேன். என்னுடைய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது, விலக்கப்பட்ட பகுதிக்கு நிதி உதவி செய்வதைப் பொறுத்த மட்டில் வெள்ளை அறிக்கையில் விடுபட்டுப் போனதைச் சரிசெய்யப்போவதாகவும், அசாமுக்கு பொதுநிதியில் இருந்து பணம் எடுத்து விலக்கப்பட்ட பகுதிக்கு செலவு செய்ய அந்த மாகாண ஆளுநரை அனுமதிக்கப் போவதாகவும் நீங்கள் சொன்னீர்கள்.

சர் சாமுவேல் ஹோர்: ஆம்.

*13725.* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இதில் உள்ள சிரமம் என்னவென்றால், அசாம் மாநில நிதியில் இருந்து பணம் பெற்று, விலக்கப்பட்ட பகுதி நிர்வாகத்துக்குச் செலவு செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இருக்குமானால், விலக்கப்பட்ட பகுதிகள் பற்றிய விஷயங்களை சட்டமன்றம் விவாதிப்பது முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டும் என்று பத்தி 109-ல் உள்ள விதிமுறைகளுக்கு இது உகந்ததாக இருக்குமா என்பதே?

சர் சாமுவேல் ஹோர்: டாக்டர் அம்பேத்கர் சிக்கலான பிரச்சினை எதையும் எழுப்பிவிடவில்லை என்றே நினைக்கிறேன். இது ஒன்றும் பெருமளவிலான நிதித் தொடர்புடையதன்று. அசாமில் முற்றிலுமாக ஒதுக்கப்பட்ட பகுதிக்கு ஆகும் செலவில் மிகப் பெரும் பங்குக் கூட்டமைப்பு நிதியில் இருந்தே பெறப்படுகிறது. தேவைக்கு அதிகமாகவே நிதி கிடைக்கும் என்று நாம் நம்பலாம் என்றே நினைக்கிறேன்.

*13,726.* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நீங்கள் நேற்று சொன்னது போல ஓரளவு விலக்கப்பட்ட பகுதிகள் உள்ள இடங்களில் எல்லாம் வரவு செலவு திட்டம் பொதுவான வரவு செலவுத் திட்டமாகவே இருக்க வேண்டும். ஆனால் ஆளுநர் தன்னுடைய தனி அதிகாரத்தின் கீழ் சான்றளித்தால் அதிகப் பணம் பெறலாம். அந்த மாதிரியான சமயங்களில் வரவு செலவுத் திட்டம் முழுமையும் சட்டமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; வெளிப்படையாக விவாதிக்கப்பட வேண்டும். இந்தச் சங்கடம் எப்படிச் சரி செய்யப்படும் என்று எனக்குப் புரியவில்லை.

சர் சாமுவேல் ஹோர்: இத்தகைய விஷயங்களில் உள்ள நன்மைகளை கருத்தில் கொண்டு உள்ளோம். பல ஆண்டுக்கால ஒப்பந்த அடிப்படையில் இதை செய்ய முடியும் என்றும் நம்புகிறேன். ஆனாலும் தவிர்க்கவே விரும்புகிறேன்.

*13,727.* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஆளுநர் தமது உசிதப்படி எந்த ஒரு விவாதத்தைத் தடை செய்வதற்கும் அல்லது அதற்கு அனுமதி மறுப்பதற்கும் அவருக்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்யும் ஒரு பொதுவான விதியை வகுப்பதன் மூலம் நாம் நினைப்பதைச் சாதித்துவிட இயலும் என்றே நான் நினைக்கிறேன்.

சர் சாமுவேல் ஹோரார்: இது, இந்தத் துறையில் உள்ள பலரால் மிகவும் வன்மையாக வற்புறுத்தப்படுகிறது. முற்றிலும் விலக்கப் பட்ட பகுதிகள் பற்றி விவாதங்கள் நடப்பதைத் தவிர்ப்பதில் அநேக நன்மைகள் இருக்கின்றன என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் மாநில நிதியில் இருந்து அசாமில் செலவிடப்படுவதி லுள்ள சிரமத்தை நான் எப்போதுமே கவனித்து வந்திருக்கிறேன். குழு உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். குறிப்பிட ஆண்டுகளுக்கென்று ஒப்பந்த வரவு செலவுத் திட்டம் இருக்குமானால் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும் போது அதில் விவாதம் இடம்பெறும். ஆனால் அப்போதும் (நான் இதைச் சொல்வதன் மூலம் குழு இது பற்றி முழுவிவரம் அறிய இயலும்) பல வல்லுநர்கள் கருத்துக்கு இது முரணாகவே இருக்கும்.

13728. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: வல்லுநர்கள் நோக்க மும், நீங்கள் நினைவில் கொண்டுள்ள நோக்கமும் தீர்மானத்தை யும், விவாதத்தையும் அனுமதிக்கும் ஆளுநரின் அதிகாரத்தைச் செயல்படுத்துவதன் மூலம் மிக எளிதாக நிறைவேறிவிடும்.

சர் சாமுவேல் ஹோரார்: ஆளுநர் தொடர்ந்து இதுபோன்ற விவாதங்களைத் தடுக்க வேண்டி வருவதை நாங்கள் தவிர்க்கவே விரும்புகிறோம். இது அவரை இக்கட்டான சூழ்நிலையில் ஆழ்த்தி விடும். எனவே நாங்கள் முற்றிலும் விலக்கப்பட்ட பகுதிகள் விஷயத்தில் விவாதங்கள் நடைபெற வேண்டும் என்று நினைக்க வில்லை; விவாதத்தை அனுமதிப்பது போல் தோன்றும் எத்தகை செயலை மேற்கொள்ளவும் நாங்கள் விரும்பவில்லை. அது அந்தப் பகுதிக்கு இடையூறாக இருக்கும். அது தான் நடப்பது.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஆளுநர் அதிகாரம் போதுமான பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதுதான் எனது கருத்து. இதுதான் நான் கேட்பது.

★ ★ ★ ★ ★

13923. * டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இது பற்றி நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா? ஒருங்கிணைந்த துறையில் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மீது பிரிவி கவுன்சிலுக்கு மேல் முறை யீடு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

சர் சாமுவேல் ஹோரார்: ஆமாம்.

13924. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: எனக்கு இதில் புரியாத ஒன்று என்றவென்றால், ஒருங்கிணைந்த துறையில் ஒருங்கிணைந்த சட்டம் குறித்து எழுகிற விளக்கங்களுக்கு எதிராக மேல் முறையீடு செய்ய இயலும் என்றால், அந்த மேல் முறை யீட்டைக் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு அனுப்புவதில் என்ன சிரமம் இருக்க முடியும் என்பதே ஆகும்.

* சாட்சியக் குறிப்புகள் தொகுதி II B, 19 அக்டோபர் 1933, ப. 1847

சர் சாமுவேல் ஹோர்: இதற்கான காரணம் இதுதான்: கூட்டமைப்பு நீதிமன்றங்கள் மீது அதிகமான வேலைபளுவைச் சுமத்துவதையும், தொடக்கத்திலேயே அதிக எண்ணிக்கை அளவிலான நீதிபதிகள் தேவை என்ற நிலை உருவாவதையும் நாங்கள் விரும்பவில்லை.

★ ★ ★ ★ ★

*14373. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இந்தியா மந்திரி அவர்களே நான் பத்தி 155 பற்றி மட்டும் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். பத்தி 155 கூட்டமைப்பு நீதிமன்றத்தின் விசேட மூல விசாரணை அதிகாரம் பற்றியது. அதில் இடம் பெற்றுள்ள வேறுபாட்டுக்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. பத்தி 155 ஐப் படிக்கும்போது, தகராறில் சம்பந்தப்பட்ட தரப்பினர் துணைவிதிகள் 'ஏ' மற்றும் 'பி'யில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் விஷயத்தில் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு விசேட மூலவிசாரணை அதிகாரம் இருக்கிறது என்றும், தரப்பினர் தனி நபர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் விஷயத்தில் கூட்டாட்சி நீதிமன்றத்துக்கு விசேட மூல விசாரணை அதிகாரம் இல்லை என்றும் நீங்கள் பாகுபடுத்திக் கூறியிருப்பதைக் காண்கிறேன். இப்போது இது தொடர்பாக நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: இந்த இரு சந்தர்ப்பங்களிலும் பிரச்சினை ஒன்றாக இருக்கும்போது, அதாவது அரசியலமைப்புச் சட்டத்திற்குப் பொருள் விளக்கம் கூறுவது சம்பந்தமான பிரச்சினையாக இருக்கும்போது, என்னால் ஒன்றைப் புரிந்து கொள்ள முடியவில்லை; அதாவது பிரச்சினை ஒன்றாக இருக்கும்போது, தரப்பினர்களைப் பொறுத்து கூட்டாடட்சியின் விசேட மூல விசாரணை அதிகாரத்தில் எதற்காக இத்தகைய பாகுபாடு காட்ட வேண்டும்?

சர் சாமுவேல் ஹோர்: கூட்டாட்சி நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் சாதாரணமாக இவ்வாறுதான் நடைபெறுகிறது. இந்த நீதிமன்றங்களில் மூல விசாரணை அதிகாரம் என்பது கூட்டாட்சியின் உறுப்புகளிடையேயான தகராறு குறித்த விசாரணையையே குறிக்கிறது. மேல் முறையீடு விசாரணையில்தான் தனிநபர்கள் இடம்பெறுகிறார்கள்.

14374. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: நோக்கம் அதுவானால், அரசியல் சட்ட விளக்கம் குறித்த விஷயம் உடனே கூட்டமைப்பு நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும். இரு தரப்புகள் கூட்டாட்சியின் உறுப்பு அமைப்புகளாக இருந்தாலும் தனிப்பட்டவர்களாக இருந்தாலும் இரண்டிற்கும் இடையே பெரிய வித்தியாசம் ஏற்படாது என்று நான் நினைக்கிறேன்.

சர் சாமுவேல் ஹோர்: இது ஒரு கூட்டாட்சி நீதிமன்றத்தின் அவசிய வேலை நிலைமைகளில் ஒன்று என்று நான் நினைக்கிறேன்.

---

* சாட்சியக் குறிப்புகள் தொகுதி II B, 20, அக்டோபர் 1933 ப. 1292.

மூல விசாரணை அதிகாரம் தனிப்பட்டவர்கள் வழக்குகளிலும் நுழைக்கப்படுமானால் நீதிமன்றங்களில் வழக்குகள் குவிந்துவிடும் என்று நான் நினைக்கிறேன்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஆனால் இரண்டு வழக்குகளிலும் பிரச்சினை ஒன்றுதான்; அதாவது அரசியல் சட்டத்துக்கு விளக்கம் காணும் பிரச்சினைதான் அது. காரண காரிய விளக்கங்களின் அடிப்படையில் வேறுபாடுகள் இருக்குமானால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் காரியத்துக்கான காரணம் ஒன்றாக, அல்லது அதற்கான வாதம் ஒன்றாக இருக்குமானால், அப்போது, கூட்டாட்சியின் உறுப்புகள் மற்றும் தரப்புகள் அடிப்படையில் இந்த வேறுபாட்டை புகுத்துவதில் எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

★ ★ ★ ★ ★

* *14380.* டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இந்தியா மந்திரி அவர்களை நான் இன்னுமொரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அது இதுதான். இது பற்றி வெள்ளை அறிக்கையில் விதிகள் ஒன்றும் இல்லை. இந்தியா மந்திரி அவர்களே, ஒரு குறிப்பிட்ட செயலானது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்று பிரகடனம் செய்யக் கோரி ஒரு தனி நபர் வழக்கு தொடர்வதற்கு—இதில் அவர் எத்தகைய குறிப்பிட்ட நிவாரணத்தை நாடாவிட்டாலும்—அனுமதிக்க வகை செய்யும் ஏதாவது விதி இருப்பது விரும்பத்தக்கது என்று நீங்கள் கருதவில்லையா? நீங்கள் குறிப்பிட்டுள்ள தாவாக்களில் சிலவற்றில் திட்டவட்டமான நிவாரணம் கோரப்பட்டிருப்பதையும் காண்கிறேன். கூட்டாட்சியோ அல்லது ஏதேனும் ஒரு மாகாணமோ முன்வைக்கும் குறிப்பிட்ட திட்டங்கள் குறித்து ஒரு தனி நபருக்கு ஏதேனும் ஐயப்பாடுகள் இருக்குமானால், அவர் தனது எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, அந்த ஐயங்களை அவர் உடனடியாகப் போக்கிக் கொள்வது உசிதமாக இருக்குமல்லவா? அப்போதுதானே எதிர்காலத்தில் அவர் தனது நிலையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்? வழக்கு தொடரும் தருணத்தில் குறிப்பிட்ட நிவாரணம் ஏதும் நாட வேண்டிய முகாந்தரம் இல்லாதிருந்த போதிலும் அவர் இவ்வாறு செய்வதுதானே சிலாக்கியமாக இருக்கும்?

சர் சாமுவேல் ஹோர்: நான் ஒரு வழக்குரைஞர் இல்லை என்பதால் இவ்வகையான ஒரு கேள்விக்குப் பதில் சொல்ல எனக்குத் தயக்கமாக இருக்கிறது. ஒரு சாமானிய மனிதன் என்ற முறையில் எனக்குத் தோன்றும் ஒரு பதிலை நான் இதற்குச் சொல்ல வேண்டும் என்றால், தனி நபரைப் பாதிக்கும் எந்தக் குறிப்பிட்ட பிரச்சினையும் இல்லாதிருக்கும்போது ஒட்டுமொத்தமாக

* சாட்சியக்குறிப்புகள் தொகுதி II B, *20*, அக்டோபர் *1933*. ப. *1293*.

இப்படிப்பட்ட பொது உரிமை வழங்குவது மிகவும் கடின மான காரியம் என்றுதான் சொல்வேன்.

சர் ஹரி சிங் கௌர்: வழக்கு இல்லை என்றால் வழக்காடவும் தேவையில்லை.

திரு. ஜாஃபருல்லா கான்: அரசியல் சட்டத்தில் இது போன்ற ஷரத்துக்களை நுழைத்தால் பெரும் தீமைதான் நேரும். இச்சட்டம் நிறைவேற்றப்பட்டால் இந்தியாவில் பத்தாயிரக்கணக்கில் வழக்கு கள் பதிவு செய்யப்பட்டுவிடும்.

**14381.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: எல்லாருமே தங்கள் உரிமையைப் பயன்படுத்துவார்களா என்பது எனக்குத் தெரியாது.

சர் சாமுவேல் ஹோர்: இந்தியாவில் வழக்கறிஞர் தொழில் மிக லாபகரமானதாகிவிடும்.

★ ★ ★ ★ ★ ★

* **15741.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஒரே ஒரு கேள்வி இந்தியா மந்திரி அவர்களே, 'தனி அதிகாரங்கள்' (கவர்னர்-ஜெனரலின் தனி அதிகாரங்கள்) தலைப்பில் விதிவிலக்கு பற்றி உள்ள (e) துணை விதியை நான் புரிந்து கொண்ட வரை நிலைமை இதுதான்: பொதுவாகச் சொல்வதானால் சட்டமன்றம் பாரபட்சமான ஒரு சட்டத்தை நிறைவேற்ற முடியாது. நான் பொதுவாகவே இதைச் சொல்கிறேன்.

சர் சாமுவேல் ஹோர்: உண்மை.

**15742.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இப்போது உள்ள அரசு, நிர்வாக ரீதியில் பாரபட்சமாகச் செயல்பட முடியாது, அத்தகைய தன்னிச்சையான செயல்பாடு ஏதும் இல்லை என்று ஆளுநர் திருப்திகொள்வது அவசியம்.

சர் சாமுவேல் ஹோர்: இல்லை.

திரு. எம். ஆர். ஜெயகர்: கவர்னர்-ஜெனரல்.

**15743.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: கவர்னர்-ஜெனரல் அல்லது ஆளுநர் ஆகிய இருவரில் யாராகவும் இருக்கலாம். ஏனெனில் விதி இருவரையுமே குறிப்பிடுகிறது. பொதுவான நடைமுறை நிலைமை இதுதானே?

சர் சாமுவேல் ஹோர்: ஆம்.

**15744.** டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: துணைவிதி (e)-ன் கீழ் கவர்னர்-ஜெனரல் சட்டங்களைத் தன்னிச்சையாக இயற்றும் அதிகாரம் உடையவர் ஆவார். நீங்கள் இந்த அதிகாரத்தை

* சாட்சியக்குறிப்புகள் தொகுதி II B, 7, நவம்பர் 1933. ப. 1344.

ஆளுநருக்கு வழங்கியிருப்பது நிர்வாகக் காரணங்களுக்காக மட்டும் அல்ல, சட்டமன்ற நடவடிக்கைகளுக்காகவும் என்றே நான் நினைக்கிறேன்.

சர் சாமுவேல் ஹோரர்: அது வெள்ளை அறிக்கை முன் மொழிவு 18-ன் கீழ் உள்ள பொது அதிகாரம்.

15745. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இரண்டுந்தான். இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை ஆளுநர் கண்டாலும், அரசாங் கம் காணாது போகலாம்.

சர் சாமுவேல் ஹோரர்: அமைதிக்கும், சமாதானத்துக்கும் பங்கம் நேராமல் தடுக்க வேண்டி உள்ளது அல்லவா?

15746. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: ஆம். நான் இப்போது கேட்க விரும்புவது, இதன் தேவை என்ன என்பதே? நான் உங்களுக்கு ஒன்றிரண்டு விளக்கங்களை நீங்கள் புரிந்து கொள்வ தற்காக கூற விரும்புகிறேன். எந்த ஓர் அபாயத்தையும் தடுப்ப தற்கு உதாரணத்துக்குச் சொல்வதானால் சில குறிப்பிட்ட நபர் களை படையில் சேர்க்கக் கூடாது என்று கவர்னர்-ஜெனரல் கூறுவதற்கு இந்த விதி வகை செய்கிறது. இதே போல் ஆளுநரும் இந்த விதியின் கீழ் செய்ய முடியுமா?

சர் சாமுவேல் ஹோரர்: கொள்கை அளவில் செய்ய முடியும் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் அமைதிக்கும் சமாதானத் துக்கும் பேராபத்தை விளைவிக்கிற ஒரு செயலைப் பொறுத்த வரையில் இவ்வாறு நடைபெறுவது மிகவும் அபூர்வம். ஒருக்கால் டாக்டர் அம்பேத்கர் கருத்தில் கொண்டுள்ள ஒரு நிகழ்ச்சி, அது வாகத்தான் இருக்க வேண்டும். அதையும் என்னால் நினைக் காமல் இருக்க இயலவில்லை. இந்தியாவில் தொடங்கப்பட்ட ஒரு நிறுவனம் அமைதிக்கும் சமாதானத்துக்கும் பேராபத்தாகக் கூடும் என்று கவர்னர்-ஜெனரல் கூறியதையே அவர் இங்கு குறிப்பிடு கிறார் என்று நினைக்கிறேன்.

15747. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னைத் தொல்லைப்படுத்தியது அதுதான்.

சர் சாமுவேல் ஹோரர்: இராணுவ நோக்கில் அந்தத் திட்டம் நல்லதா கெட்டதா என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் பாதுகாப்பு நோக்கின் கீழ் இது வரும் என்று எனக்குத் தோன்ற வில்லை.

15748. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்: இதேபோல், தாழ்த்தப் பட்ட இனத்தவர் காவல் பணியில் அமர்த்தப்படக்கூடாது என்று கூறுவதும் ஆளுநரின் 'தனி அதிகாரம்' என்ற விதியின் கீழ் வராது.

சர் சாமுவேல் ஹோரர்: ஆமாம், வராது.

★ ★ ★

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 17 | மாறுமாடு | மாறுபாடு |
| 9 | 4 | அட்சியாளர் | ஆட்சியாளர் |
| 12 | 12 | காட்டுத்தகுதி | நாட்டுத்தகுதி |
| 12 | 28 | முரண்படான | முரண்பாடான |
| 48 | 10 | அளவுக்கும் | அளவுக்கு |
| 52 | 2 | நாள் | நான் |
| 58 | 34-36 | நீக்குக | |

61, 62, 64 ஆகிய பக்கங்களில் 'மூன்ஜி' என்பது 'மூஞ்சே' எனத் திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 62 | 1-8 | நீக்குக | |
| 64 | 27 | குழு | குழுவின் |
| 78 | 15 | தீர்குகள் | தீங்குகள் |

87 முதல் 121 வரை பக்கத்தலைப்பு—'ஆறாம் துணைக்குழுவில்' என்றிருக்க வேண்டும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 122 | 14 | இராணுவம் பணி | இராணுவப் பணி |
| 179 | 35 | மாளவியார் | மாளவியா |
| 194 | 29 | எனலாம். | என்றார். |
| 201 | 31 | தீக்க | தீர்க்க |
| 249 | 19 | மனதாற | மனதார |
| 336 | 1 | நோவிருந்த | நேரவிருந்த |
| 361 | 30 | புறமிருக்கு | புறமிருக்க |
| 361 | 38 | அண்மையை | அண்மைய |
| 369 | 2 | பிரிக்க முடியாதப் பகுதி | பிரிக்க முடியாத பகுதி |

# சிறப்புப் பெயரகராதி


## அ

அக்பர் ஹைதரி, சர்., 422
அன்னி பெசன்ட் அம்மையார், 175

## ஆ

ஆச்சாரியா, 357
ஆளுநரின் அதிகாரம், 28, 30, 31

## இ

இரவீந்திரநாத் தாகூர், 323, 327, 410
இடஒதுக்கீடு, 313
இந்தியமயமாக்குதல், 124
இர்வின் பிரபு, 294

## எ

எட்மண்ட் பர்க், 11

## ஒ

ஒடுக்கப்பட்டோர் பற்றிய ஆய்வுக்குழு, 44
ஒடுக்கப்பட்டோருக்கான உரிமைகள், 153
ஒடுக்கப்பட்ட வகுப்பினர், 178

## க

கவாய், 333, 354

## கா

காவின் ஜேம்ஸ், 296
காந்தி, மகாத்மா, 172, 175, 179, 245, 247, 253, 293, 329, 332, 336, 344, 351, 403, 411

## கி

கித்னே, கர்னல், 15, 16, 118, 139
கிரடாக், சர். ரெஜினால்டு, 271

## கு

குடியேற்ற நாட்டுத் தகுதி, 7, 52
குண்டப்பா, பி., 161

## ச

சமுதாயப் புறக்கணிப்பு, 46, 71
சர்க்கார், சர்., என். என்., 329, 330

## சா

சாதியும் தீண்டாமையும், 52
சாப்ரூ, சர். தேஷ் பகதூர், 151, 185

## சி

சிறுபான்மையோர், 10, 23, 66
சிறுபான்மையோரும் ஒடுக்கப்பட்டோரும், 43

## சீ

சீனிவாசன், இராவ் பகதூர், 3, 40, 69, 116

## சு

சுப்பராயன், திருமதி. 96, 236
'சுயராஜ்யா,' 8

## சை

சைமன், சர் ஜான், 273, 274

## டை

டையர், சர் ம்மக்கேல் ஓ, 293

## த

தனி வாக்காளர் தொகுதி, 84

## தி

திலகர், 291

## தீ

தீண்டாமை, 343, 414

## நி

நிருபேந்திர சர்க்கார், சர்., 351, 412

## நீ

நீதிக்கட்சி, 360, 361

**ப**

பணிக்கர், கே. எம்., 288
பன்னீர் செல்வம், ராவ் பகதூர், 263

**பா**

பாத்ரோ, சர். ஏ. பி., 38, 151, 322
பாய் பரமானந்த், 338, 339
பார்ஸி வகுப்பினர், 41

**பி**

பிரதிநிதித்துவ அரசு, 155
பிர்லா, 328, 329

**பு**

புனா உடன்படிக்கை, 322, 325, 327, 337, 345, 347, 349, 350, 364, 403, 409

**மா**

மாநிலங்களின் தன்னாட்சி, 129
மார்க்ஸ் பிரபு, 24
மாளவியா, பண்டித, 179, 180, 331, 335, 347, 364

**மு**

முகமது ஷாபி, சர்., 50, 185
முஸ்லீம்கள், 41

**வ**

வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தீர்வு, 401, 408
வயதுவந்தோர் வாக்குரிமை, 89

**ர**

ரஸிக் பீஸ்வாஸ், 349

**ரா**

ராஜா, எம்.சி., 333, 354

**ரீ**

ரீடிங் பிரபு, 57

**ஜா**

ஜாபருல்லா கான், 322
ஜான்ஸன் பெர்க்கிலி, 12

**ஜெ**

ஜெட்லண்டு பிரபு, 99
ஜெயகர், 151, 332, 347, 410

**ஜோ**

ஜோஷி, 13, 108, 119, 172

